
பிரவீணாவின்
அன்பே...
நீ இன்றி...!
பாகம் - 1

# அன்பே...
# நீ இன்றி...!

(பாகம் - 1)

பிரவீணா

அருண் பதிப்பகம்

எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Email : arun_pathippagam@yahoo.in
செல்: 9003145749

## நூல் குறிப்பு


- நூல் தலைப்பு — அன்பே... நீ இன்றி...! (பாகம் - 1)
- ஆசிரியர் — பிரவீணா
- மொழி — தமிழ்
- முதற் பதிப்பு — ஏப்ரல், 2015
- உரிமை — ஆசிரியருக்கு
- தாளின் தன்மை — 11.6 K.g. வெள்ளைத் தாள்
- நூலின் அளவு — 1 × 8 கிரவுன்
- அச்சு எழுத்து — 10 புள்ளிகள்
- மொத்தப் பக்கங்கள் — 604
- பைண்டிங் — சாதா அட்டை

**விலை: ரூ. 280.00**

வெளியிடுவோர் **அருண் பதிப்பகம்**
எண். 107/8, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

கணினி அச்சு மாதா பிரிண்டர்ஸ், சென்னை - 69.
செல் : 8939427929

அச்சிட்டோர்: மஞ்சு ஆப்செட், சென்னை - 5.




# அன்பே... நீ இன்றி...!

**(பாகம் - 1)**

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. என் உயிரே! என் உறவே!! (பாகம் - 1) - ரூ. 200.00

2. என் உயிரே! என் உறவே!! (பாகம் - 2) - ரூ. 200.00



# அன்பே... நீ இன்றி...!

## (பாகம் - 1)

## 1

“அம்மா, டிபன் ரெடியா? எனக்கு... லேட்டாகி விட்டது...” என்ற பார்வதியின் குரலில் அந்த இல்லம் அதிர்ந்தது.

தங்கையின் குரலில் மொபைலில் பேசிக் கொண்டிருந்த சாரகேஷ் அவசர அவசரமாகக் கட் செய் தவன், டைனிங் டேபிளின் அருகில் நின்றிருந்த அவனது அம்மா தேவகியின் அருகில் சென்றான்.

“எதுக்கும்மா இந்த ஆர்ப்பாட்டம் பண்றா இவள்... இன்னும் டைம் இருக்கும்மா... என்னோடதானே வருகிறாள். பின்ன என்ன இவளுக்கு?” என்றவனிடத்தில்,

அவனது அம்மா பதில் சொல்லும் முன் பார்வதி பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"எனதருமைச் சகோதரனே... இன்றுதான் முதல் நாள், என் புதிய அலுவலகத்திற்கு... அதனாலதான் இந்த ஆர்ப் பாட்டம். அது மட்டுமில்லாமல் நான் தனியாகப் போனால் கூட எனக்கு இந்தப் பதட்டம் இல்லை. நீ அட்வைஸ் பண்ணியே கொல்லுவ. அது வேற டென்ஷன் எனக்கு...." என்று சாப்பிட அமர்ந்தவளைக் கவலையோடு பார்த்தாள் தேவகி.

"பாரு... இந்த ஆபீஸிலாவது கொஞ்சம் பார்த்து நடந் துக்கம்மா. ஏற்கெனவே பார்த்த அலுவலகம் மாதிரி பிரச் சனையோடு வராதம்மா..." என்றவளின் குரலில் கவலை தெரிந்தது.

அவளின் கவலையை நோக்கியவன், "இதுக்குத்தான் பாரு-வுக்குத் திருமணம் செய்து கொடுக்கலாம் என்றால், அவ பேச்சைக் கேட்டுக்கிட்டு இன்னும் ஒரு வருடம் போகட்டும் என்கிறீர்கள்..." என்றவனிடத்தில்,

"அண்ணா, உனக்கு அவசரம்னா... நீ பண்ணிக் கொள். என்னை எதுக்கு இழுத்து விடுகிறாய்?" என்றவுடன்,

"கிளம்பு. டிராஃபிக் ஆகிவிடும். அதன் பிறகு என்னைத் தான் சொல்லுவ..." என்றபடி வேக வேகமாய்க் கை கழுவ எழுந்தான்.

அவன் நழுவுவதை உணர்ந்தவள், சாரகேஷைப் பார்த்தபடியே எழுந்து, கை கழுவும் இடத்தில் அவன் அருகே சென்று, "என்னண்ணா... இன்னும் ரெட்டைச் சடை. லவ் லெட்டர் ஞாபகமா?" என்று கண் அடித்தவளிடம்,

கொஞ்சம் முறைத்தவன், "அப்படில்லாம் இல்லை. அதெல்லாம் முடிந்துபோன கதை. இல்லன்னா அம்மாவின் பெண் பார்க்கும் படலத்திற்கு ஒத்துக் கொண்டிருப்பேனா...?" என்றபடி நகர்ந்தவனை யோசனையோடு பார்த்தாள். மீண்டும் யோசித்தவள், "அப்போ பிளாஸ்டிக் சர்ஜரி டாக்டரம்மா கூட இல்லையா?" என்று போலியான கவலை படிந்த முகத்தோடு ஓட்ட,



பார்வையால் அவளை அடக்கியவன், "ப்ச்.. என்னை விடு, பாரு! இந்த ஆபீசிலாவது கொஞ்சம் அடக்கி வாசி. ஏற்கெனவே பார்த்த இரண்டு இடங்களுமே உனக்கு நல்ல அனுபவம் கொடுக்கவில்லை..." என்றவனிடம், பதில் சொல்ல வாய் திறந்தவளிடம்,

"இரு. நான் பேசி முடித்து விடுகிறேன். அதன் பின் பேசு..." என்றவன், தொடர்ந்தான்.

"முதல் அலுவலகத்தில் உன் மேலதிகாரியால் பிரச்சனை. அவன் பண்ணிய தவறுகளை எல்லாம் நிர்வா கத்தில் முறையிட்டு அவனை வேலையில் இருந்து தூக்க வைத்தாய். ஆனால், அதன் பிறகு செல்ல மறுத்து விட்டாய்.

"அடுத்துப் போன அலுவலகத்தில் ஒரு படி மேலே போய் நிர்வாகத்தில் பல குளறுபடிகள் என்று அங்கும் பிரச்சனை. அது கோர்ட் வரை கொண்டு போய் விட்டது. கடைசியில் அந்த அலுவலகமே மூடக் காரணமாகி விட்டாய்.

"உனது தைரியம் எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் அண்ணன் என்ற முறையில் கொஞ்சம் கவலை, பயம்... மற்றப்படி எனக்குப் பெருமைதான்டா உன் மேல..." என்ற வனிடம்,

"ம்ம்... புரியுது... புரியுது..." என்றவள், "இந்தத் தடவை உனக்கு அந்தக் கஷ்டம் வராதுண்ணா!" என்றவளை நோக் கியவனிடம்,

"வா... வா. போய்க் கொண்டே பேசலாம்..." என்று மேஜையில் இருந்த தனது சான்றிதழ்களைச் சரி பார்த் தவள்...

"வீட்ல ஒரு பேரு... சர்டிஃபிகேட்ல ஒரு பேரு..." என்று அலுத்தபடி கிளம்பினாள்.

பூசை அறையில் சாரகேஷிடம், "சாரகேஷ், அந்த இடம் பொருத்தமா இருந்தா பார்க்கச் சொல்லவா? புரோக்கர் கிட்ட சொல்லிடவா...?" என்றபோது,

"ஏம்மா... நான்தான் உங்களுக்கு ஓ.கே. என்றால், எனக்கும் சரின்னு சொல்லிட்டேனே..." என்று சொல்ல,

பாரு என்கிற பார்வதியோ, "அடேங்கப்பா... என்ன ஒரு அடக்கம் என் அண்ணனுக்கு..." என்றவள், "தீ..." என்று ஆரம்பிக்க...

தாயும், தமையனும் முறைக்க... "இல்லம்மா... தீ பிடிக்கத் தீப் பிடிக்க...ன்னு சாங் பாட வந்தேன்..." என்று அவர்களின் முறைப்பில் சொல்ல... இல்லை இல்லை... உளற...

"சாமி ரூம்ல பாடுற பாட்டா பாரு இது... உன்னை..." என்று தேவகி அர்ச்சனையை ஆரம்பிக்க, சாரகேஷ், 'நல்லா வேணும் உனக்கு...' என்ற பார்வையில் வாய்க்குள்ளாகச் சிரிக்க... பார்வதி சாரகேஷைப் பார்த்து முறைக்க என்று அந்த நிமிடங்கள் கடந்தன.

அதன்பின் அன்னையிடம் ஆசிர்வாதம் வாங்கி விட்டு, நினைவாகிப் போன தந்தையை வணங்கி விட்டு சாரகேஷுடன் கிளம்பினாள்.

சிறிது தூரம் சென்றவுடன், தன் சகோதரனின் கவலை படிந்த முகத்தைப் பார்த்தவள், "அண்ணா, இந்த அலுவல கத்தில் எனக்கு ஒரு பிரச்சனையும் இருக்காது. ஏனென்றால் என் முந்தைய அலுவலக விவரங்கள் தான் இந்த வேலைக்குக் காரணம். அதாவது எனது தைரியம். அதைப் புரிந்து கொள். அது மட்டுமில்லாமல், அந்த ஆபீஸ் பற்றிய முழு விபரமும் சேகரித்து விட்டேன்..." என்றபடி தொடர்ந்தாள்.

"'வி.டி. புரொமோட்டர்ஸ்' தொடங்கி ஆறு மாதம் ஆகின்றது. அதன் நிர்வாகத் தலைவர்கள் விஜயேந்தர் மற்றும் அவரது தங்கை கணவர் தீபன். இது மட்டுமில்லாமல் விஜய் பில்டர்ஸ் அவரின் மற்றொரு கம்பெனி. இது அவரது மூலதனத்தில் உருவானது. மற்றத் தொழில்கள் அனைத்தும்



குடும்ப உறுப்பினர்களுடன் பங்கு. தென்..." என்றவள் சிறிது இடைவெளி விட்டு,

"வி.டி. புரொமோட்டர்ஸ் துவங்குவதற்கு முன் இவ ருக்குத் தொழிலில் மிகப் பெரிய அடியாம். அதாவது நஷ்டம் இல்லை. கிடைக்கவிருந்த மிகப் பெரிய ப்ராஜெக்ட் கடைசி நேரத்தில் கை நழுவி விட்டதாம். அது அவரின் கனவு ப்ராஜெக்ட்டாம். அதில் மூன்று மாதம் அப்செட் ஆனவர்... பின் தொடங்கிய தொழில் இதுவாம்.

"வைராக்கியம், லட்சியம், தொழில் நுணுக்கம், வியாபாரத் தந்திரம் என்று எல்லா விதத்திலும் பேசப் படுபவர்..." என்று விஜயேந்தரைப் பற்றி அடுக்கியவள், சாரகேஷின் முகத்தினைப் பார்த்தபடி, "என்னுடைய ரெஸ்யூம் பார்த்த வுடன் என்னைப் பற்றித் தெரிந்து கொண்டே எந்தவொரு இன்டர்வியூவும் வைக்காமல், என்னை மாதிரி ஒரு தைரியமான பெண்தான் இந்த வேலைக்கு வேண்டும் என்று சொல்லியவர்..." என்று இல்லாத சுடிதார் காலரைத் தூக்கியபடி பேசியவளைச் சிரித்தபடி பார்த்தவன், அவளை வம்பிழுக்கும் நோக்கத்தில்,

"உன்னை நம்பி வேலைக்கு எடுத்திருக்கார். அங்கே நீ என்ன திருவிளையாடல் பண்ணப் போகிறாயோ... பாவம், அந்த மனுசன். இந்த ஆபீஸ் எத்தனை நாளைக்கோ..." என்றவனிடம் முறைத்தவள், வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

ஆனால் விஜயேந்தர் வாழ்க்கையில் திருவிளையாடல் பண்ணப் போவது தான்தான் என்று தெரியாமல்... தன்னால் தான் இந்த முறை அவன் தங்கை அந்த அலுவலகத்தை விட்டு வெளியேறப் போகிறாள் என்ற விபரம் அறியாமல் சாரகேஷ் பேசினான்.

அதன் பிறகு அலுவலக விபரங்களைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தான்.

"எத்தனை மெம்பர்ஸ் இருக்காங்க...? ஆபீஸ் டைம் என்ன?" என்று கேட்க,

"ஆமாம். இப்போ கேளு. ரொம்ப சீக்கிரமா கேட்டுட்ட..." என்று சலித்தபடி,

"ஹாஸ்பிடலே கதின்னு போன வாரம் ஃபுல்லா டேரா போட்டுட்டு... பெருசா விசாரிக்க வந்துட்ட..." என்றவளிடம்,

"சொல்லும்மா... அண்ணா சாரி கேட்டுக்கிறேன்..." என்று கொஞ்சிக் கெஞ்ச...

"முப்பது மெம்பர்ஸ். வழக்கம் போல 9 டு 6 தான்... இந்த ஆபீஸுக்கு நான் இன்டர்வியூக்குப் போகல. விஜய் பில்டர்ஸுக்குத்தான் போனேன். அது பெரிய ஆபீஸ். ஆனால் அங்கே வேண்டாமென்று சுரேந்தர்... அதாவது விஜயேந்தர் தம்பிதான் எனக்கு இந்த ஆபீஸ்ல ஜாயின் பண்ண அப்பாயின்ட்மெண்ட் கொடுத்தார்."

இப்போது சாரகேஷ், "விஜயேந்தர் மேரேஜ் ஆனவரா, பாரு?" என்று கேட்க,

"ஹ்ம்ம்... திருமணம் ஆனவர்தான். அப்படித்தான் கேள்விப்பட்டேன்..." என்று சொல்ல, சாரகேஷ் முகம் தெளிய...

"ஆனால், மனைவி கூடச் சேர்ந்து வாழவில்லையாம். அப்படின்னும் சொன்னாங்க. நான் பெருசாக் கேட்டுக் கலை..." என்று சொல்ல,

"ஏன்?" என்று கேட்டான், கொஞ்சம் உள்ளே போன குரலில்.

"அதெல்லாம் விசாரிக்கல. தேவையில்லாத விசயம்னு விட்டுட்டேன்..." எனச் சொல்ல,

தங்கையே தேவையில்லாத விசயம் என்று சொல்லும் போது, சாரகேஷும் அதற்கு மேல் விசாரிக்கவில்லை.



அவர்களது கார் விடி புரோமோட்டர்ஸ் முன் நின்றது. சகோதரனின் வாழ்த்துக்களைப் பெற்றவள் இறங்கும் முன்,

"ஆனாலும்... ரிசல்ட் தெரியாமல் ரீஎக்ஸாம் எழுதப் பிடிக்கலைதானே, அண்ணா!" என்றவளைப் பார்த்து,

பார்வதி, அவள் தோழியைப் பற்றிச் சொல்கிறாள் என்பது புரிந்ததால்... அமைதியாய் அவளைப் பார்த்து மௌனப் புன்னகையுடன் காரைக் கிளப்பினான்.

அலுவலகத்தின் உள்ளே நுழைந்த பார்வதி, தனது சான்றிதழ்களைச் சமர்ப்பித்தவள், விஜயேந்தரைப் பார்த்த பின்னால்தான் அலுவலகப் பணியில் பொறுப்பேற்க முடியும் என்பதால் ரிசப்ஷனில் காத்திருந்தாள்.

பத்து நிமிடங்கள் போன நிலையில் ஆக்செஸ் கார்டின் சத்தம் கேட்ட நொடியில் ஹிண்டு பேப்பரில் இருந்து தலை நிமிர்த்தியவள், சந்தோசத்தில் கண் விரித்தவளின் உதடு தானாகவே "தீக்ஷா..." என்றது.

பார்வதியைப் பார்த்தபடியே வந்த தீக்ஷாவின் நிலைமையும் கிட்டத்தட்ட அதேதான். ஆனால் அவள் இவளைப் போல் மலைத்து நிற்காமல்... ஓடோடி வந்து சந்தோசத்துடன் கட்டிக் கொண்டாள்.

ஏறக்குறைய ஏழு வருடங்களில் இருவரும் இழந்த நாட்களை அந்த அணைப்பு நிறைவேற்ற முடியவில்லை. இருவருக்கும் நிறையப் பேச வேண்டியிருந்தது. முதலில் உணர்வுக்கு வந்தவள் பார்வதிதான்.

உடனே தீக்ஷாவை முறைக்க ஆரம்பித்தாள்.

அவளின் கோபத்தினை உணர்ந்த தீக்ஷா, சற்று மெல்லிய குரலில், "என் மேல நீ கோபமா இருப்பாய் என்று தெரியும்... சாரி. அன்னைக்குச் சூழ்நிலையில் எனக்கு என்ன..." என்றபோதே,

தீக்ஷாவை முறைத்த பாவனையை மாற்றாமல்... "அண்ணா செஞ்ச தப்புக்கு நான்..." என்று பேச ஆரம் பிக்க...

அந்த அலுவலகத்தின் எம்.டி., விஜய் என்று அழைக்கப்படும் விஜயேந்தர் உள்ளே நுழைந்தான். விஜய் தான் வருகிறான் என்று பின்னால் திரும்பாமலேயே உணர்ந்த தீக்ஷா... பார்வதியிடம்,

"உனக்கு வேற ஆபீசே கிடைக்கவில்லையாடி... போயும் போயும் இதுதான் கிடைத்ததா!" என்றாள், இகழ்ச்சியாக... சத்தமாகவே.

கண்டிப்பாக உள்ளே நுழைந்த விஜய்யின் காது களிலும் இது விழாமல் இருந்திருக்காது.

பார்வதி அதிர்ந்து விஜயை நோக்க... விஜய்யும் பார்வதியை ஒரு பார்வை பார்த்து விட்டு அவன் வழியில் போக... விழி பிதுங்க நின்றவள் பார்வதிதான்.

"தீக்ஷா..." என்றவளிடம்,

அலட்சியமாகப் பார்த்த தீக்ஷா, "நீ இப்போ நான் பார்த்துக் கொண்டிருக்கிற வேலைக்காகத்தான் எடுக்கப்பட் டிருக்கிறாய்..." என்று அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டாள்.

"என்னடி சொல்ற... நீ வேலையை ரிசைன் பண்ணிட் டியா?" என்று பார்வதி தோழியைப் பார்த்த நேரத்திலே, அவள் இனி வேலைக்கு வர மாட்டாளோ என்று ஆற்றாமையுடன் கேட்க,

"இல்ல... இது ஒரு வேலை. இதை நான் ரிசைன் வேற பண்ணணுமா...?" என்று கேலியாகச் சொன்னவள், தோழியே அந்த வேலைக்குத்தான் வந்திருக்கிறாள் என்று உணர்ந்து... நாக்கைக் கடித்தவள்,

"சாரி, சாரி. எந்த வேலையையும் தப்பா சொல்லக் கூடாதுல்ல. நான் சாஃப்ட்வேர்ல இருந்த ஆளு, பாரு... இந்த



வேலை செட் ஆகல. அதுதான் போர்ப்பா... நான் ஒழுங்கா வேலை பண்ணலை. எனக்குத் தெரியாத வேலையைப் பார்க்கச் சொன்னா... என்ன செய்வேன். சொதப்பத்தானே செய்வேன். ஆடிப் போயிட்டான். அதான் உடனடியா அந்தப் போஸ்ட்டுக்கு உன்னைப் போட்டுருக்காங்க..." என்றவளை வித்தியாசமாகப் பார்த்தபடி,

"யாருடி... ஆடிப் போயிட்டான்..." என்று பார்வதி கேட்க,

"இப்ப உள்ளே நுழைந்தான்ல அந்த விருமாண்டி தான். வேற யாரு?" என்று சொன்னவளின் விழிகளில் கோபம் வழிய... பார்வதியே பயந்து விட்டாள்.

"என்ன தீக்ஷா... என்னவோ மாதிரிப் பேசுற... எதுனாலும் பிரச்சனையா?" என்றவளிடம்,

"சொல்றேன், பாரு... உன்கிட்ட நிறையப் பேசணும்..." என்றவள், தன் நிலை மீண்டு, "அம்மா, அப்பா எப்படி இருக் காங்க? அப்புறம்..." என்று தயங்க, அவள் சாரகேஷைப் பற்றி விசாரிக்கத் தடுமாறுகிறாள் என்பதை உணர்ந்து,

"அண்ணா நல்லா இருக்கான். மேரேஜ் ஆகிடுச்சு..." என்று வேண்டுமென்றே சீண்டலாய்ச் சொல்லி... கவனமாய் தீக்ஷாவின் முகத்தைப் பார்க்க...

திகைத்துப் பின் சுதாரித்து... "ஓ!" என்றவளின் அதிர்வைப் பார்வதி கண்களில் நிரப்பியபடி,

"அப்படின்னு சொல்ல ஆசைதான். பையன் யாருக்கும் ஓ.கே. சொல்ல மாட்டேங்கிறான். என்ன விசயம்னு தெரியல, தீக்ஷா... காதல் கத்தரிக்காய் என்று இருக்குமோ...?" என்றாள், கிண்டல் கலந்த புன்னகையை உதட்டில் நிரப்பி,

தீக்ஷா சட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தாள். பார்வதிக்கும் சாரகேஷ் தன்னிடம் லெட்டர் கொடுத்த விபரம் தெரிந்திருந்தது. அதனால்தான் ஓட்டுகிறாள் என்பதைப் புரிந்தவளாய்... அவளை அவஸ்தையோடு பார்க்க...

தோழியின் அவஸ்தை புரிந்து... "தென் அப்பா இரண்டு வருசத்துக்கு முன்னால தவறிட்டாங்க, தீக்ஷா!" என்று கூற,

துக்கத்தைப் பகிர்வதைப் போல, "சாரி, பாரு... என்னாச்சு?" என்று சொல்லிக் கைகளைப் பிடித்தவளிடம்,

"ஹார்ட் அட்டாக். இப்போ ஓ.கே. தீக்ஷா!" என்ற போதே,

"நீங்க எப்போ சென்னை வந்தீர்கள்?" என்று கேட்க,

"நாலு வருசம் முன்னால்... அண்ணாவுக்கு வேலை கிடைத்த பின்னால் இங்கேயே செட்டில் ஆகிவிட்டோம்."

தீக்ஷா அடுத்து ஏதோ பேச வர.... பார்வதிக்கு விஜய்யிடமிருந்து அழைப்பு வந்திருக்க... அவனின் பிஏ வந்து அழைக்க... பார்வதி கிளம்பினாள்.

தீக்ஷா தன் இடத்தில் வந்து அமர்ந்தாள். அவளுக்குச் சாரகேஷ் ஞாபகம் வர... 'இன்னுமா நம்மை ஞாபகம் வைத்திருப்பான். அதெல்லாம் மறந்திருப்பான்..." என்று பார்வதியைப் பார்த்ததும், அவன் நினைவு வர... தலை வலிக்க ஆரம்பித்தது தீக்ஷாவிற்கு.

உடனே ஒரு மாத்திரையை எடுத்தவள்... போட்டுக் கொண்டு மெயிலைப் பார்க்க ஆரம்பித்தாள்.

எல்லாமே கஸ்டமருக்கு ரிப்ளை செய்ய வேண்டிய முக்கியமான மெயில்கள். அத்தனையையும் பார்த்தாள்தான். ஆனால் எதற்கும் ரிப்ளை செய்ய விரும்பாமல் டெலீட் செய்தாள்... சிரித்தபடி. அவளுக்கென்று இருக்கும் மெயில் ஐடி இல்லை அது... பதில் எல்லாம் விஜய்யின் ஐடியில்தான் அவள் அனுப்ப வேண்டும்.

"இந்த ஆபீஸை விட்டுப் போம்மா தாயி... வேற வேலைக்குப் போ. இல்ல என்னமோ பண்ணுனு... உன்



னையே உன் வாயால சொல்ல வைக்கல... நான் தீக்ஷா இல்லடா... விருமாண்டி!"

விஜய்யின் அறையில் பார்வதியிடம், சில கேள்வி களைக் கேட்டுக் கொண்டிருந்தவன், தனது மெயிலை ரீஃப்ரெஷ் செய்ய... அது புதிதாய் வந்த மெயில்கள் வரிசை யில் 0 என்று காண்பிக்க... வேகமாய் ட்ராஷ் ஃபோல்டரில் இருந்து ரீஸ்டோர் செய்ய ஆரம்பித்தான். இப்போது 10 என்று காண்பிக்க... இன்னும் வேக வேகமாய் அதைத் தனது இன்னொரு ஐ.டிக்கு மாற்றி விட்டு...

"ஓ.கே. சாருமதி. இன்னைக்கே ஜாயின் பண்றீங்க தானே..." என்றவன், அதோடு, "தென் ரிசப்ஷன்ல..." என்று நிறுத்தி அவளைப் பார்க்க,

அவன் தீக்ஷாவைத்தான் கேட்கிறான் என்று புரிந்தவள்... 'போச்சுடா... தீக்ஷா பேசினதைப் பற்றிக் கேட்கப் போகிறானோ...' என்று தயங்கியபடி,

"என் கூடப் படித்தவள். ரொம்ப நாளைக்கு அப்புறமாப் பார்க்கிறோம்..." என்று கூற,

"ஓஹோ!" என்று சொல்லி விட்டு,

'கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்களாக இருக் குமோ... ஆனால் இவ காலேஜ் நேம் வேற இருந்த மாதிரி இருந்துச்சே...' என்று யோசித்தவன்,

"சரி. மீண்டும் ரெஸ்யூமைப் பார்ப்போம்..." என்று அந்தச் சிந்தனையை விலக்கி,

"அப்படியா... நல்லது. அவளோட வேலையைத்தான் ஷேர் பண்ணிக்கப் போறீங்க. அவளுக்கு இந்த வேலை பழக்கமில்ல. அதனால சிரமப்படறா. உங்களுக்கு அனுபவம் இருக்கு. சோ கண்டிப்பா... இதுல ப்ராப்ளம் இருக்காது..." என்றபடி தீக்ஷாவுக்குப் போன் செய்ய...

"உள்ளே வந்துட்டு போ..." என்றபடி போனை வைத்து விட்டு, அவளுக்காகக் காத்திருக்க, பத்து நிமிடம் ஆகியும் வராமல் இருக்க... மீண்டும் போன் செய்ய... அவளும் எடுத் தாள்தான்.

"என்ன?" என்று குரலை உயர்த்திக் கேட்க,.

"நீ உள்ளே வர்றியா... இல்ல, நாங்க அங்க வரவா?" என்று அவள் திமிரை எல்லாம் கண்டு கொள்ளாமல் சாதா ரணமாகவும்... கொஞ்சம் கோபமாகவும் கேட்க...

'வந்து தொலைக்கிறேன்...' என்று மனதினுள் சொல்லியபடி, போனை ஙங்கென்று வைத்தாள் தீக்ஷா.

அதன் பின் உள்ளே வந்தவளிடம், "இவங்க மிஸ் சாருமதி. தென் இவங்க... உங்க ரெண்டு பேருக்குமே அறிமுகம் தேவையில்லைதான். ஆனால் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது..." என்றவனிடம் ஒன்றுமே சொல் லாமல், "பாரு, நாம போகலாமா?" என்று கேட்க...

அவளின் பாரு என்ற விளிப்பில், விஜய் சாருமதியை அதிர்ந்து நோக்க... அதைப் புரிந்து கொண்ட பார்வதி,

"என்னோட இன்னொரு பேர் அது..." என்று சொல்ல, விஜய் மனமெங்கும் ஏதேதோ ஞாபகங்கள். அவர்கள் போகும் வரை பார்த்திருந்தவன்... சாருமதியின் டீடெயில்சைப் பார்த்தவன், அவளின் பள்ளிப் படிப்பு திருச்சி என்று இருக்க... இவள் திருச்சியா... இவளது அண்ணன் சார கேஷா... என்று யோசிக்க ஆரம்பித்திருந்தான். இப்போது இவனுக்குத் தலை வலிக்க...

அவனுக்கென்று பிரத்யேகமான அறையில் ஆளுயரக் கண்ணாடி முன் நின்று... தன்னையே பார்த்தபடி, 'விஜய், இதெல்லாம் தேவையாடா உனக்கு... இன்னும் உன் வாழ்க் கையில என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ... இத்தனை வருடம் கழித்துச் சாருமதி ஏன் வர வேண்டும்? இது எங்கு போய் முடியப் போகிறதோ...? அவள் அண்ணனால குழப்பம் வருமோ?' என்று கலங்கி நின்றவனின் பார்வை... தன் மேலேயே தன் இதயத்தில் நிலைக்க... மனம் புத்துணர்வு பெற... மீண்டும் தனது அறைக்கு வந்து, தனது வேலைகளில் மூழ்க ஆரம்பித்தான்.



"**தீ**க்ஷா, என்னடி இப்படிப் பேசுற... நீ இப்படில்லாம் பேசுற ஆள் கிடையாதே. நான் கூடத் திமிராப் பேசுவேன். நீ மிகவும் அமைதியாச்சே..." என்றவளிடம்...

"சொல்றேன், பாரு..." என்றவள், கண் கலங்கிய வளாய்... "பாரு, என்னைச் சுத்தி என்ன நடக்குதுன்னே தெரியலை. நான் தனித் தீவுல நிற்கிற மாதிரி ஒரு ஃபீல். உன்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு தெரியலை. மூச்சு முட்டுது. சில நேரம் வெறுமை... என்னை விட்டு எல்லாமே போன மாதிரி ஒரு ஃபீல். எனக்குன்னு யாருமே இல்லையோன்னு தவிக்கிற மாதிரி இருக்கு.

"என் உணர்வுகளை எல்லாம் யார்கிட்ட கொட்டுற துன்னே தெரியல, பார்வதி. என்னை இநத இடத்தில... உன் நிலையில இருந்து காப்பாற்ற வந்த ரட்சகி மாதிரித் தெரியுற நீ..." என்றவள், தன்னைச் சுதாரித்து...

"என்னை 24 மணி நேரமும் யாரோ வாட்ச் பண்ற மாதிரி எண்ணம். என்னோட வெளி வட்டாரம்... என் ஃபிரெண்ட்ஸ்... ஏன், என் வீட்டில் கூட யாருமே எனக்குப் பிடிக்கவில்லை. என்னை எல்லோரும் பரிதாபப் பார்வை பார்க்கிறார்கள்..." என்றவளின் ஒரு பேச்சும் புரியாமல் விழித்தாள் பார்வதி.

அவளின் முக பாவனையைப் பார்த்தவள், சிரித்தபடி, "ஒண்ணும் புரியலையா... நிதானமாச் சொல்கிறேன். ரொம்பக் குழம்பாதே. அது மட்டுமில்ல. முன்னே அமைதி

யாகத்தான் இருந்தேன். சென்னை வந்த பின்னால் எனக்கும் கொஞ்சம் வாய் ஜாஸ்திதான் ஆகிவிட்டது. அம்மா கூடச் சொல்லித் திட்டுவாங்க..." என்றவள், பின் மீண்டும் சந்தோசமாக,

"நீ இன்னைக்கு எங்க வீட்டுக்கு வருகிறாயா...? போக லாமா? அம்மா, அப்பா எல்லாரும் சந்தோசப் படுவாங்க. அண்ணா, அண்ணி, ஸ்னோ பாப்பா எல்லாரையும் பார்க் கலாம். ப்ளீஸ், ப்ளீஸ் வர்றேன்னு சொல்லு!" என்று சற்று முன் பேசியவளா இவள்... நொடிக்கு நொடி மாறுகிறாளே... என்ற யோசனையுடன் பார்வதியும் சரி என்று தலையாட்ட...

இப்போது தீக்ஷா, "நாலு மணிக்குப் போகலாமா?" என்று கேட்க,

"என்ன தீக்ஷா... இன்னைக்குத்தான் ஜாயின் பண்ணி யிருக்கேன். இன்னைக்கேவா... ஆபீஸ் முடிந்த பின்னால் போகலாமே..." என்று தயங்க,

"ப்ச்... என்ன... வேலை போயிடும்னு நினைக்கிறியா...? இது ஒரு வேலை. அது போயிடும்னு வேற கவலையா உனக்கு... உனக்குத் திறமை இருக்குடி. உன் திறமைக்கு இங்க இல்லன்னா... எத்தனையோ இடத்தில்..." என்று சொல்லி, அவளைக் கெஞ்சலாய்ப் பார்க்க...

"அடிப் பாவி. அப்போ வேலை காலின்னு கன்ஃபார்மா சொல்றியா...?" என்று அவளை அடித்தபடி, கொஞ்சம் தயக்கம் இருந்தபோதும், "சரி..." என்று சொல்லிய பின், தோழியர் இருவரும் தங்கள் பள்ளி வாழ்க்கையின் நிகழ்வு களை மீண்டும் நினைவுபடுத்திப் பேசிக் கொண்டிருந்தனர்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் விஜய் அவர்கள் முன் வந்து நின்றான்.

வந்தவன், பார்வதியிடம்... "சாருமதி, நான் கிளம்புறேன். மாலை ஆறு மணிக்குத்தான் வருவேன். நான் உங்களிடம் உங்க வேலை விசயமாப் பேச வேண்டும் இப்போ டைம் இல்லை. அதனால் நான் வருகிறவரை காத்திருக்க வேண் டும்..." என்று சொல்ல,



தீக்ஷா... இதை எதிர்பார்த்தவள் போல் மானிட்டரில் பார்வையை வைத்திருந்தாள். ஆனால் மனதில், 'என்னைக் குமே போக மாட்டான். இன்னைக்கு என்ன இடையில போறான்...' என்று தோன்றியது.

"சரி சார்..." என்றாள், தோழியைப் பார்த்தபடியே.

விஜய் இப்போது தீக்ஷாவைப் பார்த்து, "டேப்லட் போட்டியா?" என்று கேட்க,

அவனுக்குப் பதில் சொல்லாமல், வேகமாய்த் தன் கைப்பையைத் திறந்தவள்... அதில் இருந்த மாத்திரை பிரித்திருந்த கவரை அவன் கண் முன் குப்பைத் தொட்டியில் போட...

அதைப் பார்த்தபடி, "சரி, வருகிறேன்..." என்றபடி கிளம்ப... அவன் அந்தப் பக்கம் நகர்ந்தவுடன், வேகமாய்த் தோழியிடம் திரும்பியவள்,

"அதானே பார்த்தேன். அவ்ளோ ஈசியா விட்டுருவானா என்ன?" என்று தோழியிடம் சொல்லும் போதே மீண்டும் வந்தான்.

"சாருமதி!" என்றவன்... "ஆறு மணிக்கு நான் கண்டிப்பா வந்துடுவேன். ஒருவேளை லேட் ஆனால் கூட நான் வருகிறவரை கண்டிப்பாக வெயிட் பண்ணுங்க..." என்று சொல்லியபடி,

"இது என்னோட பெர்சனல் நம்பர். இம்பார்டண்ட்னா கால் பண்ணுங்க. ஞாபகம் வச்சுக்கோங்க. நான் வர்றவரை போகக் கூடாது. மறக்காதீங்க..." என்று அதைச் சொல்லி யவன், தீக்ஷாவை அர்த்தப் பார்வை பார்த்து வைக்க...

'நாலு மணிக்கே நான் அவளைக் கூட்டிட்டுக் கிளம்பிடுவேனே... நீ ஆறு மணிக்கு வந்தா என்ன... அதுக்கு மேல வந்தா என்ன...' என்று இவளும் விஜய்யை நக்கலாகப் பார்த்து வைத்தாள்.

இப்போது பார்வதி, "சார்... அதிகபட்சமாக எத்தனை மணி வரை என்று சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் அண்ணாவை வரச் சொல்ல வேண்டும்..." என்று ஒரு பெண்ணுக்கான எச்சரிக்கை உணர்வோடு சொல்ல,

"என்னது அண்ணனா... தைரியமான பெண் என்றுதானே உங்களை எடுத்தேன். கூட்டிட்டு வரப் போகவே அண்ணன் உதவியா?" என்று எரிச்சலுடன் சொல்ல...

"இன்னைக்கு ஒரு நாள் மட்டும்தான்..." என்று பார்வதியும் சொல்லி முடிக்க...

"அண்ணா தங்கை பாசம்லாம் சாருக்குத் தெரியாது, பாரு..." என்றவள், தொடர்ந்து, "தங்கை விஷம் குடித்தால் கூட... சார்க்கு மனசு இரங்காது. அவ்ளோ ஒரு பாச மலர். இவர்கிட்ட போய் அண்ணன் தங்கைன்னு பேசுற..." என்று நக்கலாகச் சொல்லி, அவனை ஏளனமாகப் பார்க்க...

விஜய் பதிலே சொல்லாமல் கிளம்பி விட்டான்.

"உனக்கு என்னடி பிரச்சனை, இந்தக் கம்பெனியில... கொஞ்சம் கூட கம்பெனி முதலாளின்னு பார்க்காமல் இந்தப் பேச்சுப் பேசுற... அவரும் ஒண்ணுமே சொல்ல மாட்டேன் கிறார்..." என்று சொல்ல,

சிரித்தாள் தீக்ஷா. கண்களில் ஈரமும் இருக்க... அதைத் துடைத்தபடி, "பரிதாபம் பாரு... என்னை எதிரியா பார்த்தவன்லாம் நான் என்ன சொன்னாலும் பொறுமையாப் போறான். இவன் என் கூட மல்லுக் கட்டும்போது கூடப் பெருசாத் தெரியல. இவன் என்னைப் பார்க்கிற பரிதாபப் பார்வையைத்தான் தாங்க முடியலை..." என்று சொன்னவளிடம்,



"உன்னை ஏன்டி அவர் பரிதாபமா பார்க்க வேண்டும்...?" என்று கேட்க,

"இதனாலதான்..." என்று பாவனை காட்டினாள். வாயைக் கொஞ்சமாய்த் திறந்து, நாக்கை இதழின் இடது ஓரம் எடுத்துச் சென்றவள்... தலையைச் சரித்து, கண்களைப் பாதி மூடிப் பாவனை செய்ய... அதிர்ந்தாள் பார்வதி.

## 2

**பா**ர்வதி கண்ணில் அதிர்ச்சியுடன் அவளையே பார்க்க...

"ஹலோ, எதுக்கு இந்த லுக்! எல்லோரும் ஒரு நாள் போய்த்தானே ஆக வேண்டும். என்ன... நான் கொஞ்சம் சீக்கிரம் போகப் போகிறேன்..." என்றவளிடம்,

"தீக்ஷா, விளையாடாதே. சும்மா மனசெல்லாம் படபடன்னு வருது. இத்தனை நாள் கழித்துப் பார்க்கிறேன். சும்மாதானே சொல்ற..." என்று சொன்னவளின் மனம் அவளும் அதையே சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க...

தீக்ஷா விரக்தியாய்ச் சிரித்தாள்.

"எனக்கும் நீ சொல்றது போலச் சொல்லத்தான் ஆசை, பாரு. ஆனால் சொல்ல முடியவில்லையே... ஏதோ மயங்கி விழுந்தேனாம். கோமா ஸ்டேஜுக்குப் போனேனாம்... என்று சொன்னாங்க.வேற எதுவும் சொல்லலை. அதுக்கப்புறம் நான் நச்சரிச்சுக் கேட்ட பின்னால் ஏதோ ஒரு பேர் சொன்னாங்க. என் இதயம் ரொம்ப நாள் துடிக்காதாம். சீக்கிரம் ஸ்டாப் பண்ணிக்குமாம். அதிர்ச்சி தாங்க முடியாதாம். சந்தோசமோ, துக்கமோ அதிகமா இருக்கக் கூடாதாம்..." என்று சாதாரணமாகச் சொல்லியவளிடம்...

"தீக்ஷா, என்னடி?" என்று தழுதழுத்தவள், "இவ்ளோ ஈசியாச் சொல்ற... கேட்கிற எனக்கே முடியலை. உனக்கு... உன்னால எப்படிடி?" என்று சொன்னபோது,

"என்ன பண்ணச் சொல்ற? ஒரு வாரம் மனசு கிடந்து அடிச்சுக்கிருச்சு. அழுதேன். கதறினேன். இதுதான் வாழ்க்கையானு துடித்தேன். விரக்தியா இருந்தேன். அப்புறம் பழகிருச்சு. சரி, இருக்கிறவரை சந்தோசமா அனுபவிப்போம்னு பார்த்தா... என்னைச் சுற்றி இருக்கிறவங்க அன்புத் தொல்லை இருக்கே... தாங்க முடியல..." என்றவள்,

"நல்லவேளை. நடக்க இருந்த கல்யாணம் நின்னு போச்சு. இல்ல, பாவம் அந்தப் பையன்..." என்றபோது,

"என்னது... திருமணமா! நின்னு போச்சா...?" என்று வாய் திறந்தவளிடம்,

"நானே இந்த அளவுக்கு ரியாக்ஷன் கொடுத்திருக்க மாட்டேன் போல. ஆமாடி... ஆனா, நிச்சயதார்த்தம் வரை வந்து... நின்னுருச்சு. அவன் வேற எந்தப் பொண்ணையோ லவ் பண்ணினானாம். அவளோடயே போறேன்னு லெட்டர்..." என்று நிறுத்தியவள்,

"லெட்டரா..." என்று குழம்பி, "புடவைக்கு இடையில..." என்று யோசிக்க ஆரம்பித்தவள்... மனம் எதையும் எடுத்துக் கொடுக்காமல் நினைவுகளை நிறுத்த ஆரம்பித்து இருக்க... அவள் உடல் வேர்க்க ஆரம்பித்திருந்தது.

அவளின் நிலையைப் பார்த்துப் படபடப்பான பாரு, அவளை உலுக்க...

அவளின் உலுக்கலில்... மீண்டும் விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தாள். ஆனால் பேச்சுதான் மாறியது.

"லெட்டருக்கும் எனக்கும் ராசி இல்ல போல, பாரு..." என்று கண் சிமிட்ட,

பார்வதிக்கோ அவளின் குழப்பமெல்லாம் அவளுக்குக் கருத்தில் படாமல்... அவள் சாதாரண நிலைக்குத் திரும்பிய திருப்தியில்,



"அண்ணா இப்பவும் ஃபீல் பண்ணுவாங்க தீக்ஷா! அவராலதான் நீ என் தொடர்பையே விட்டுட்டேனு..." என்று சொல்ல,

"ம்... அப்படியும்தான். திடீர்னு +2 படிக்கிற பொண்ணு கிட்ட லெட்டரை நீட்டினால்... கை கால் எல்லாம் ஆடிருச்சு பாரு... இப்போ அதை நினைச்சா சிரிப்பு வருது..." என்று சொன்னவளிடம்,

"வரும் வரும்..." என்றபடி தன் அண்ணன் விசயத்தை ஒத்தி வைத்தவள்... விஜய்யிடம் வந்து நின்றாள்.

"விஜய்க்கும் உனக்கும் என்ன சம்பந்தம்...? ஏன் அவரை இன்சல்ட் பண்ற மாதிரியே பேசுற...?" என்றவளிடம்,

"ப்ச்... அவருக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. ஆனா சம்பந்தமிருக்கு..." என்றபடி, பார்வதி விழித்ததைப் பார்த்து...

"முழிக்காதே. அவர் எங்க அண்ணியோட அண்ணன். அந்தச் சம்பந்தம் மட்டும்தான்..." என்று சாதாரணமாகச் சொன்னவள்... சொன்ன நொடியிலேயே முகம் கடுத்துப் பேச ஆரம்பித்தாள்.

"பணத் திமிர் பிடித்தவன். ஸ்டேட்டஸ் வெறி பிடித்தவன். இன்னும் சொல்லலாம்..." என்றவள், "இன்னொருத்தனுக்குத் திருமணம் நிச்சயம் செய்த பொண்ணுன்னு கூடப் பார்க்காம என்கிட்ட மோசமாப் பேசியவன்..." என்று கொதித்தவள்...

"இப்போ இவனை நம்பித் தனியா இவனோட என்னை அனுப்பி வைக்கிறாங்க. பணம் படுத்துற பாடு, பாரு... என்னை இவர்தான் இப்போ காப்பாத்திட்டு இருக்காராம். பெரிய டாக்டர்கிட்ட காண்பித்து... இதனாலேயே சீக்கிரம் சாகலாம்னு இருக்கு. இவன் போடுற பிச்சையில வாழவே பிடிக்கவில்லை. எதையும் சாதாரணமா செய்ய மாட்டான் இவன்... இதுக்குப் பின்னால என்ன இருக்கோ?" என்று சொன்னவள்... பார்வதியைப் பார்த்து,

"இப்போ என்ன சம்பந்தம்னு புரியுதா... இது போதுமா?" என்றவளுக்கு,

"புரியல. இதுக்கு நீ சொல்லி இருக்கவே வேண்டாம். இப்போதான் கொஞ்சமாத் தெரிந்து ரொம்பக் குழப்பமா இருக்கு..." என்று பாரு மீண்டும் முறைக்க...

"சொல்றேன், சொல்றேன். இப்போ வேண்டாம்..." என்று விஜய்யின் பேச்சை நிறுத்தினாள்.

அதன் பிறகு அவளும் வேலை பார்க்கவில்லை. தோழியையும் வேலை பார்க்க விடவில்லை. தீக்ஷா பேசிக் கொண்டே இருந்தாள். ஆனால் கவனமாய்ச் சாரகேஷை மட்டும் தவிர்த்து.

அது மதிய உணவு இடைவேளை வரைதான். தானாகவே ஆரம்பித்தாள் தீக்ஷா.

"உங்க அண்ணன் என்ன பண்றாங்க? எந்த ஹாஸ்பிடல்? இல்ல, பிரைவேட்டா? எம்.பி.பி.எஸ். படிச்சுட்டு அடுத்து மேல படிச்சாங்களா...?" - தீக்ஷா வழக்கமான வாய் வழக்கில் பேச...

"என்னடி... இந்தப் படபட பட்டாசை நிறுத்தலையா?" என்றவள்... "அண்ணா ஹார்ட் சர்ஜனா இருக்காரு, தீக்ஷா. உன்னை அவர்கிட்ட காட்டலாம் தீக்ஷா..." என்று சொல்லிய படியே, "ஆனா, அண்ணாவால இதைத் தாங்கவே முடியாது, தீக்ஷா..." என்று சோகமானவளிடம்,

"பாரு... இதை உங்க அண்ணாகிட்ட சொல்ல வேண்டாமே, ப்ளீஸ்..." என்றவள், "உன்கிட்ட கூடச் சொல்லி யிருக்கக் கூடாதுதான். உன்கிட்ட சொல்லணும் போல இருந் துச்சுப்பா!" என்றபடி சாரகேஷுக்கும் அவளுக்குமான பிரச்சனையைச் சொன்னாள்.

"உன் அண்ணா சொல்லி யிருப்பார்னு நினைக் கிறேன். ரிசல்ட் பார்த்த வுடனே அவ்ளோ சந்தோசம். 1122 மார்க். அதுவும் மேத்ஸ்ல 200. சந்தோசத்தில் நீ ஊரில் இல்லைங்கிறதையும் மறந்து உன் வீட்டுக்கு வந்தேன். வீட்ல உங்க அம்மாவும் இல்லை. உங்க அண்ணா மட்டும்தான் இருந்தார். அவர் சொல்லிக் கொடுத்ததினாலதானேன்னு சந்தோசமா ஷேர் பண்ணிட்டு... அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் ஆன விசயத்தைச் சொன்னா... அடுத்த ஃபைவ் மினிட்ஸ்ல எதையோ எழுதி நீட்டுறாரு.



"சத்தியமா, பாரு... முன்ன பின்ன எனக்கு லவ் லெட்டர் யாரும் கொடுத்ததில்ல. என்னடான்னு உங்க அண்ணாவை நம்பி வாங்குனா... லவ் ப்ரொபொசல் லெட்டர். கை காலெல்லாம் நடுங்கிருச்சு. அவரைப் பார்க்கக் கூட முடியலை. சரி, போகலாம்னு வெளியில வரப் பார்த்தா... கையைப் புடிச்சுக்கிட்டாரு. எனக்கு அழுகையே வந்துருச்சு. என்ன நினைத்தாரோ தெரியவில்லை. விட்டுட்டாரு. அதுக் கப்புறம் பயம்... பாரு! இதைப் பற்றிக் கேட்பாரோன்னு. அதனாலதான் உன்கிட்ட கூடச் சொல்லாம வந்துட்டேன். மார்க் ஷீட் வாங்க வரும்போது கூட உன்னைப் பார்க் கலை..." எனறு சொன்னவளிடம்,

"ம்ம்... சரி. விடு. ஆனாலும் என்கிட்ட பேசாம வந்தது ஓவர்தான் தீக்ஷா..." என்றவளிடம்,

நூறாவது முறையாக சாரி கேட்டாள் தீக்ஷா.

இப்போது பார்வதி அவளிடமே, "சரி, சரி. விடு. உன் மேல கோபமெல்லாம் இல்லை. என் அண்ணன் பண்ணி னதும் தப்புதானே. ஆனால் இன்னொன்று கேட்பேன். தப்பா எடுத்துக்கக் கூடாது. அண்ணா அன்னைக்குக் கொடுத்த லெட்டருக்கு என்ன பதில் மேடம்..." என்று குறும்பாகக் கேட்க,

"ஆமாடி. இப்போ நான் இருக்கிற நிலைமையில அது ரொம்ப முக்கியம். அதை விடு. உனக்கு எப்போ மேரேஜ்?" என்றவளிடம்,

"நான் கேட்டதற்குப் பதில்..." என்று பார்வதி முறைக்க...

"ஹ்ம்ம்..." என்று பெருமூச்சை இழுத்து விட்டவள்... "தெரியல!" என்று சொல்ல...

"அடிப் பாவி!" என்றவளிடம்,

"காதலுக்கும் தீக்ஷாவுக்கும் ஆகவே ஆகாது, பாரு. ஒருத்தனை லவ் பண்ணிட்டு அவனுக்காக வீட்ல சண்டை போடுறதுன்னு... வீட்டை விட்டுப் போறதுன்னு... அவனுக்காக உயிரை விடுறது... அவன்தான் எல்லாம்... இதெல்லாம் போர்ப்பா... சும்மாவே எனக்கும் என் அம்மாவுக்கும், என்கிட்ட அது சரியில்ல... இது சரியில்லன்னு... இப்படி இருக்கக் கூடாது... அப்படி நடக்கக் கூடாதுன்னு... உலகப் போரே நடந்துட்டு இருக்கும். இது வேறயா?" என்று சொல்லியபடி...

"ஹை... சேம் பின்ச்..." என்று பார்வதி குதிக்க... "நண்பிடி!" என்று தோழியர் இருவரும் கட்டிக் கொண்டனர்.

மீண்டும் தீக்ஷா, "சரி, நமக்குத்தான் இந்தக் காதல், கத்தரிக்காய்லாம் வராதுன்னு வீட்ல பார்த்த பையனுக்குக் கழுத்தை நீட்டுவோம்னு பார்த்தா... அது அதுக்கும் மேல... என்னைப் பார்த்துட்டு ஓடி இருந்தாக் கூடப் பரவாயில்லை. பார்க்காமலே ஓடிப் போயிட்டான் அந்த ராகேஷ். எனக்கு எவ்ளோ பெரிய இன்சல்ட் இது... என்னைக்காவது அவன் என் கையில மாட்டட்டும்... அப்ப இருக்கு, அவனுக்கு..." - கலகலப்பாய்ப் பேச...

இருவரும் சந்தோசமாக இருந்தாலும் பார்வதிக்கு அவள் நிலை ஒருபுறம் கவலை அளிக்க... தோழியின் முன் அதைக் காட்டிக் கொள்ளாமல், கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

ஆனால், அடுத்த சில தினங்களிலேயே சாரகேசுக் காக... வீட்டை விட்டுக் கிளம்பும் நிலை ஏற்படப் போவது தெரியாமல்... ஆனால் அது கூட அதிர்ச்சி இல்லைதான். அதற்கும்



மேலே தன்னைப் பற்றி அறியப் போவதும்... அது கொடுக்கப் போகும் அதிர்ச்சி தெரியாமலும்... இருந்தாள் தீக்ஷா.

போன் செய்து சாரகேஷை நான்கு மணி அளவில் வரச் சொன்ன பார்வதி, அவனுக்குத் தீக்ஷாவைப் பார்த்த விசயத்தை மறைத்து விட்டிருந்தாள். சஸ்பென்ஸாகச் சொல்லலாம் என்றுதான்... சொல்லாமல் விட்டாள்.

அதே நேரத்தில், தன் அண்ணனுக்கு அவள் நிலை தெரிந்தால் என்ன நினைப்பான்... இன்னும் அதிகமாகத்தான் அவன் நேசிப்பான் என்று தோன்றியது. அது மட்டுமில்லாமல், கண்டிப்பாக இவள் நோயைத் தீர்க்கும் வழிமுறை கூட மருத்துவனாய் அவன் அறிந்திருக்கக் கூடும் என்று எண்ணினாள்.

இருவரும் 4 மணி அளவில் அலுவலகத்தை விட்டு வெளியேறி சாரகேஷுக்காகக் காத்திருந்தபோது விஜய்யின் கார் உள்ளே நுழைய,

அதிர்ந்த தோழியர் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துப் பார்வைப் பரிமாற்றம் செய்ய...

நின்றிருந்த இருவரையும் பார்த்தவன்... காரை நிறுத்திக் கோப முகத்துடன் பார்வதியின் அருகில் சென்றான்.

பார்வதியும் அவன் கோபம் பார்த்து அதிர்ந்துதான் நின்றாள். அது மட்டும் இல்லை. அவன் மீது சிகரெட் நெடியும் அடிக்க... முகம் கொஞ்சம் சுழிக்கப் பின்னால் தள்ளிப் போனாள்.

தீக்ஷாவோ, அவனின் கோப முகத்தையும், பார்வதியின் பார்வையையும் பார்த்தவள்... அவளை அவன் திட்டி விடுவானோ என்று அவனிடம் தானாக சரண்டர் ஆனாள்.

அவனின் கோபமறிந்தவள் அல்லவா அவள். "விஜய் அத்தான்... நான் சொல்லித்தான் அவ வந்தா..." என்று சொல்ல,

வந்த தன் கோபத்தைத் தனக்குள்ளே அடக்கிய விஜய்... தீக்ஷாவிடம் திரும்பினான். "வீட்டுக்குப் போக ணுமா?" என்று கேட்க,

"ஆமாம்..." என்ற ஒற்றை வார்த்தையை அவன் முகம் பார்க்காமல் சொல்ல...

"சரி, வா..." என்றபடி, விஜய் முன்னே போக...

"நாங்... நாங்க ரெண்டு பேரும் வீட்டுக்குப் போறோம். பாரு அண்ணா வர்றேன்னு சொல்லி இருக்காங்க, அத்தான். அவர் கூடப் போகிறோம். நீங்க உங்க வேலையைக் கண்டினியூ பண்ணுங்க..." என்றவளிடம், தீப்பார்வை பதிலாய்க் கிடைக்க,

"சாருமதி அவ அண்ணா கூட வரட்டும். நீ என் கூட வா..." என்றவன் பார்வதியிடம் திரும்பி,

"உன் ஃபிரெண்ட் வீட்டு அட்ரஸ் தெரியுமா?" என்று கேட்க,

பார்வதி அவனின் கடுமையான குரலிலே, தன்னை அறியாமல் இல்லை என்பது போல் தலையாட்ட... அவளின் வீட்டு முகவரியைச் சொல்லியபடி தீக்ஷாவைப் பார்க்க...

தீக்ஷா அந்த இடத்தை விட்டு நகராமல் நின்றாள். அவனோடு வர மாட்டேன் என்று அறிவிப்பது போல்...

விஜய் அவள் அருகில் வந்து நின்று... அவளைத் தன்னோடு கூட்டிச் செல்ல... தன் கையை அவளை நோக்கி நீட்ட... அவனிடமிருந்து சற்றுப் பின் வாங்கியவள்...

"கையைப் பிடிக்கிற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க. நானே வருகிறேன். ஆனா அவளும் என் கூட வருவா. வர ணும். அப்போதான் வருவேன். நான் ஏன் அவ அண்ணா கூட வர்றேன்னு சொன்னேன் தெரியுமா... நீங்க அவளுக் குல்லாம் டிரைவர் வேலை பார்க்க விரும்ப மாட்டீங்கல்ல...



உங்க ஸ்டேட்டஸை நான் காப்பாத்த வேணாமா, விஜய் அத்தான்... அதனாலதான்..." என்று கடுப்பில் பேச...

தானாகப் பின் வாங்கியவளைக் கண்டு கொள் ளாமல்.... கவனமாகத் தன் கை அவளைத் தீண்டாதபடி... அவள் தோளில் மாட்டியிருந்த தோள் பையினைத் தொட்டு அவளைத் தன் புறம் இழுத்தபடி, "கண்டிப்பா... நான் உனக்குன்னா ஓட்டுவேன். யார் யாருக்கெல்லாமோ ஓட்ட மாட்டேன்தான்..." என்று உறுமியபடி மொபைலை அழுத்த... அடுத்த இரண்டு நிமிடத்தில் அந்தக் காருக்கு டிரைவர் வந்து சேர....

"காத்தமுத்து, வண்டியை எடுங்க..." என்றவுடன்,

"இதோ..." என்று சொல்லி, "தங்கச்சி! ஏறும்மா..." என்று தீக்ஷாவைப் பாசப் பார்வை பார்த்து வைக்க... தீக்ஷா விஜய்க்கும் சேர்த்தும் அவனை முறைத்தபடி,

"ஏய், தங்கச்சின்னு கூப்பிடாதேனு எத்தனை தடவை சொல்லி யிருக்கேன். உன் விசுவாசத்தை எல்லாம் என்னைப் பற்றி உளவு சொல்றதுக்கு உன்னை வச்சுருக்காருல்ல, அவர்கிட்ட சொல்லு. இப்போ நீதானே சொன்ன அவர்கிட்ட..." என்று விஜய் முன்னாலே படபடத்தாள் தீக்ஷா.

காத்தமுத்து பரிதாபமாய் அவளைப் பார்த்து, பின் விஜய்யைப் பார்க்க...

காத்தமுத்துவிடம் காரை எடுக்கச் சொல்லி... தானும் ஏறி அமர்ந்தான்.

வேறு வழி இன்றி... எப்போதும் போல் காரில் ஏற முடிவெடுத்த தீக்ஷா... பார்வதியை அழைக்க...

இப்போது பாருவுக்குத் தன்மானம் விழித்துக் கொள்ள... அதனால் தீக்ஷாவிடம் மறுக்க... தீக்ஷாவோ விட வில்லை அவளை... அவளைக் கெஞ்ச ஆரம்பித்திருந்தாள்.

காரில் ஏறி அமர்ந்த விஜய்... கார் கதவை மூடாமல் அவர்களைப் பார்த்தபடி அமர்ந்து, தீக்ஷாவைப் பார்த்தபடி விரலைச் சுண்டி அழைக்க... பார்வதியைக் கெஞ்சிக் கொண் டிருந்தவள்... அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

சாவகாசமாய்க் காலை வெளியில் நீட்டி வசதியாகச் சாய்ந்தவன்... தன்னைப் பார்த்த தீக்ஷாவிடம், "கரெக்டா டென் மினிட்ஸ் டைம் தருவேன். அதுக்குள்ள உன் ஃப்ரெண்டோட வரணும். இல்லை, நீ வந்துடணும். உன் ஃப்ரெண்ட வர வைக்கிறது உன் சமத்து. உன்னை வர வைக்கிறது என் சாமர்த்தியம்..." என்றபடி வாட்சைப் பார்க்க ஆரம் பிக்க,

"பாரு, பாரு... ப்ளீஸ்டி. அவன் சொன்னா... சொன்ன மாதிரியே செய்வான்டி... எனக்காக, செல்லம்ல... பட்டுல்ல... நீயும் வாடி..." என்று அவளைக் கெஞ்சியவள்... விஜய்யைப் பார்த்து, ஒரு முறைப்பும் வைக்க... அவனோ, கர்மசிரத்தை யாக வாட்சைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"இன்னும் பத்து செகண்ட்ஸ்..." என்று கவுண்ட் டவுன் சொன்னவன்... அவன் அதைச் சொன்னபோது, தீக்ஷா பரிதாபமாகப் பார்வதியைப் பார்க்க...

இப்போது விஜய், 'என்கிட்டேயேவா...' என்ற பார்வை யைத் தீக்ஷாவை நோக்கி வீச, அவனை ஒன்றும் பண்ண முடியாமல் பார்வதியைப் பார்க்க... அவளோ அதற்கு மேல் வரமாட்டேன் என்ற நிலையில் அழுத்தமாய் நின்றாள்.

விஜய்யோ, "ஐந்து..." என்று தீக்ஷாவின் நிலை பார்த்துச் சிரிப்பை அடக்கிக் கொண்டே சொல்ல...

"வாடி... அந்தக் கடன்காரன்... என்னைப் படுத்து கிறான்... நீ அதைவிட..." என்று அடிக்குரலில் பார்வதியிடம் சொல்லியபடியே சட்டென்று அவள் கன்னத்தில் முத்தம் வைத்தவள்....



"என் பாரு செல்லம்ல... வாங்க..." என்று கையைப் பிடித்து இழுக்க... பார்வதி அவளின் எதிர்பாராத முத்தத்தில் திகைத்துக் கன்னத்தைத் துடைத்தபடி அவள் இழுவைக்கு வர....

கடைசியில் தீக்ஷா ஜெயித்தாள்.

பாரு மறுத்தும், அவளைக் கிளப்பிக் காரின் அருகே கூட்டிச் சென்றாள்.

வாயைத் திறக்காமல் புன்னகைத்த விஜய், கார் கதவை மூடிச் சாய்ந்து அமர்ந்து, பின் மனம் விட்டுச் சிரித்தான்.

"காத்தமுத்து, காரை எடுங்க. உங்க தங்கச்சி... அவ ஆயுதத்தால ஆளைக் கவுத்துட்டா. இனி அவ ஃப்ரெண்ட் காரில் ஏறாமல் இருப்பாளா...?" என்று சிரிக்க...

விஜய் அவனை மறைத்தபடி இருந்ததால்... காத்த முத்துவுக்கும் போன் வந்து அதில் கவனம் செலுத்தியதால், தீக்ஷாவை, அவள் செயலை எல்லாம் அவன் கவனிக்க வில்லை.

அதனால், "பேசிப் பேசியே அந்தப் பொண்ணைக் கவுத்துருச்சா தம்பி?" என்று கேட்க,

விஜய்யோ கண்களை மூடியபடி, "அதுக்கும் மேல... அவளுக்கு ரொம்பப் பிடிச்சவங்களுக்கு மட்டும்தான் இந்த ஆயுதத்தை யூஸ் பண்ணுவா..." என்று சொன்னவன், மேலே பேசவில்லை.

காரில் தோழியர் இருவரும் ஏற... காத்தமுத்து எதுவும் பேசாமல்... விஜய்யைப் பார்த்து, பின் தீக்ஷாவையும் ஒரு வினாடி பார்த்து...

"கடவுளே, இந்தத் தம்பியை இப்படிச் சோதிக்கிறியே... நீதான் நல்ல வழி காட்டணும்..." என்று கடவுளுக்கு மனுப் போட்டவனாய்க் காரைக் கிளப்பினான்.

காரில் தீக்ஷா பேசிக் கொண்டே வர, பாரு கேட்டுக் கொண்டே வர... விஜய் கண்களை மூடியபடி வர... பயணம் ஆரம்பித்தது.

## 3

சிறிது நேரம் கழித்து, தீக்ஷா தன் தோழியைப் பார்த்தவள்... "என்னடி... பேசிப் பேசிக் கொல்றேனா..." என்று சொல்லியவாறே, "பாட்டு கேட்கிறாயா?" என்று கேட்டவள்,

"ச்சே... இங்க பாட்டுக்குக் கூட வழியில்ல..." என்று அலுத்தபடி, "மொபைல்ல கேட்போம்.." என்றபடி, தனது மொபைலில் பாட்டைப் போட்டவள்... ஹெட் செட்டின் ஒரு முனையைத் தன் காதிலும், அடுத்த முனையைத் தோழி காதிலும் மாட்ட...

"ஏன்டி, இவ்ளோ காஸ்ட்லியான கார்ல பாட்டுப் போட வழியில்லையா?" என்று பார்வதி சந்தேகமாய்க் கேட்டாள்.

"கார்ல பிரச்சனை இல்லை. எங்க விருமாண்டிக்கு சாங்ஸ்லாம் பிடிக்காதுடி..." என்று மெதுவாய்ச் சொல்ல... அவளைப் பொறுத்தவரை அது மெதுவாய்... ஆனால் காதில் ஹெட்செட் போட்டுப் பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததால்... சத்தமாக வெளிவர... திரும்பிப் பார்த்தான் விஜய். அவளின் சத்தமான பேச்சில் பார்வதியும் கொஞ்சம் அதிர்ந்து விஜய்யைப் பார்த்தாள்... அவன் என்ன நினைப்பானோ என்று.

பார்த்தவன் உடனே திரும்பியும் விட்டான். அவ்வளவு தான். அதற்கு மேல் அவனிடமும் எந்த வித ரியாக்சனும் இல்லை.

பார்வதி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். ஏற்கெனவே அவள் அவன் அவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவனுக்காகக் காத்திருக்காமல் வந்த விதம் வேறு மனச்சாட்சி குத்தியது.



தவறுதானே! அலுவலக விதிகளை மீறி... யாரிடமும் சொல்லாமல் கிளம்பியது... அதனாலேயே அமைதி காத்தாள்.

தீக்ஷா வீட்டின் முன் கார் நிற்க... இறங்கிய பார்வதி மலைத்தாள். தீக்ஷாவின் பொருளாதார நிலையைப் பார்த்து. தங்களைப் போல மிடில் கிளாஸ் குடும்பம்தான் தீக்ஷாவினுடையதும்... எப்படி இந்த அளவு... அதிலும் ஏழு வருடத்தில் என்று யோசித்தபடி நிற்க...

வீட்டைப் பார்த்துதான் தோழியும் அதிர்ந்து நிற்கிறாள் என்று உணர்ந்த தீக்ஷா... "உள்ளே வா, பாரு..." என்று இழுத்துக் கொண்டு சென்றாள்.

காரை விட்டு இறங்கிய விஜய்... வாசல் கேட்டில் நின்ற முருகேசனிடம்... "உங்க தங்கச்சிக்குத் தெரிஞ்சவர் வருவார். பேர் சாரகேஷ்னு சொல்வாங்க... உள்ளே விடுங்க..." என்று உள்ளே போக,

முருகேசன், காத்தமுத்துவிடம், "யாருடா அது... நம்ம தங்கச்சிக்குத் தெரிஞ்சவங்க...?" என்று வினவ,

"தெரியல, காத்தா..." என்றவன்,

"இன்னைக்குத் தீக்ஷா தங்கச்சி என்னைத் திட்டிடுச்சு..." என்று வருந்த,

"விடுடா... அது நிலைமை அப்படி. நம்ம கண்ணு தான்டா அந்தப் பிள்ளைக்குப் பட்டுடுச்சு..." என்று புலம்பியவாறே அகன்றனர்.

"அம்மா..." என்று கத்தியபடியே உள்ளே நுழைந்தாள் தீக்ஷா. அது எந்தப் பிரதிபலிப்பையும் கொடுக்காமல் போக... "அண்ணி..." என்று அடுத்துக் கத்த...

தீக்ஷாவின் கத்தலில், என்னவோ ஏதோ என்று பதறியவளாய்ச் சுனந்தாவைத் தூக்கியபடி ராதா பரிதவித்து இறங்க, அங்கு சாதாரணமாய் நின்ற தீக்ஷாவைப் பார்த்து நிம்மதி யடைந்தாள்.

"சுனோ குட்டி..." என்று அவளைத் தூக்கிக் கொண்டவள்,

"அண்ணி, அம்மா இல்லையா?" என்று சுனந்தாவைக் கொஞ்சியபடியே கேட்டவளுக்கு,

"கோவிலுக்குப் போயிருக்காங்க..." என்று பதிலாய்ச் சொல்ல,

"இவங்களுக்கு வேற வேலையே கிடையாது. ஆ.. ஊன்னா கோவில்ல போய் உட்கார்ந்துடுவாங்க..." என்று சலித்தவள்... ராதாவிடம் திரும்பி, "அண்ணி, இது பார்வதி அலையஸ் சாருமதி. வீட்ல ரெண்டு சாரு வர்றதுனால மேட முக்குப் பார்வதினு பாட்டி பேர்..." என்றவள், "யாரு தேவ தாஸோ?" என்று தோழியைப் பார்த்துக் கண்ணடித்தவள்... ராதாவும் அருகில் இருந்ததால், அவள் என்ன நினைப் பாளோ என்று பார்வதி முறைக்க...

"அண்ணி ஒண்ணும் நினைச்சுக்க மாட்டாங்க. நம்மை விட ஒரு வயதுதான் பெரியவங்க. அது மட்டுமில்லாமல்... அவங்களே காதலுக்கு மரியாதை செஞ்சுதான் எங்க வீட்டுக்கே வந்தாங்க..." என்று தன் அண்ணியையும் கிண்டல் செய்தவளை... இப்போது ராதா முறைக்க...

"ஓ.கே. ஓ.கே. தீக்ஷாவை மொறச்சே கொல்லாதீங்க. அதுக்கெல்லாம் ரெடிமேட் பீஸ் ஒண்ணு அல்ரெடி இருக்கு..." என்றாள், உள்ளே நுழைந்த விஜய்யைப் பார்த்தபடியே.

பின் தன் அண்ணியிடம் திரும்பி, "சொல்லி இருக்கேன்ல. என்னோட க்ளோஸ் ஃபிரெண்ட். திருச்சி... ஏழு வருசத்துக்கு அப்புறம் இப்போதான் பார்க்கிறேன்..." என்று சொன்னபடி, பார்வதியிடம், "பாரு, இது எங்க அண்ணி. சோ ஸ்வீட் அண்ணி தெரியுமா! என் அண்ணாவுக்கு இவங்க கொஞ்சம் அதிகம்தான். இப்படி ஒரு நல்ல... அழகான அண்ணியை எனக்குக் கொடுத்ததுக்காகவே இப்போல்லாம்



அவன் கூடச் சண்டை போடுறது இல்லை தெரியுமா!" என்று சிரித்தபடியே சொல்ல...

ராதா மென்னகை புரிந்தாள், பார்வதியைப் பார்த்து. பார்வதியும் அவளைப் பார்த்து அறிமுகப் புன்னகை புரிந்தாள்.

"பாரு, உனக்கு என்ன வேண்டும்? டீ, காபி, பால்... தென் நைட் டின்னர் முடிச்சிட்டுத்தான் போகணும். உங்க அண்ணாவுக்கு என்ன பிடிக்கும்? இப்போதே லட்சுமிகிட்ட சொல்லி பிரிப்பேர் பண்ணச் சொல்றேன். இப்போ, உனக்கு என் கையால காபி. ஓ.கே.வா? உனக்குக் காபிதானே பிடிக்கும்..." என்று கேள்வியும் அவளே பதிலும் அவளேயாகிச் சுனந்தாவோடு கிச்சனில் நுழைய,

அந்த ஹாலில் மழை பெய்து ஓய்ந்தது போல் இருந்தது.

பார்வதி சோபாவில் அமர்ந்திருக்க... விஜய் அவளுக்கு எதிரில் அமர்ந்திருந்தான்.

ராதா, பார்வதியின் அருகில் அமர்ந்தபடி, அவளைப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

"தீக்ஷா உன்னைப் பற்றி அடிக்கடி சொல்வா, பாரு..." என்றபோது,

புன்னகைத்த பார்வதி, "வி.டி. புரோமோட்டர்ஸ்ல இன்றுதான் ஜாயிண்ட் பண்ணினேன். எதிர்பாராத விதமாச் சந்திப்பு. மறந்துருப்பாளோன்னு நினைச்சுட்டு இருந்தேன்..." என்று சொல்லியவள்... காலையில் தீக்ஷாவைப் பார்த்ததைச் சொல்லியபடி, இருவரும் பேச்சினைத் தொடர...

சற்று நேரம் கழித்து ராதா தன் அண்ணனை உணர்ந்து, "அண்ணா, நீங்க கிளம்பலையா...? உடனே கிளம்பிடுவீங்க. வேலை இல்லையா?" என்று கேட்க,

"இல்லம்மா... இன்னைக்கு இங்கேயே சாப்பிட்டு விட்டுக் கிளம்புகிறேன்..." என்று சொல்ல.. அவனின் தளர் வான பேச்சில், தன் சகோதரனையே ஒரு நொடி பார்த் தவள்... அதில் தெரிந்த கவலைக் கோடுகள் மனதை வருத்த...

"அண்ணா, சூடா காபி சாப்பிடறீங்களா...? களைப்பா இருக்கிற மாதிரி இருக்கு..." என்றவளிடம்,

"வேண்டாம்..." என்ற தலையாட்டலில் மட்டும் பதில் சொன்னவன்... சோபாவில் சாய்ந்து, அவனின் எதிரே உள்ள சுவரில் பார்வையைப் பதித்தான்.

ராதாவும் அதற்கு மேல் எதுவும் கேட்காமல் பார்வதி யிடம் பேச ஆரம்பிக்க... இப்போது பார்வதி விஜய்யிடம், "சாரி சார்... தீக்ஷா என்னைக் கம்பெல் பண்ணினா... அதனால தான்..." என்று தயங்கியவள்,

எதிரே இருந்த சுவரில் இருந்த பார்வையைத் திருப்பிப் பார்வதியைப் பார்த்த விஜய், "அவ இப்படிப் பண்ணு வானுதான்... நான் உன்னை இருக்கச் சொன்னேன். ஆனா லும் உன்னைக் கிளம்ப வச்சிட்டா. நோ ப்ராப்ளம். ஆனா, இது மாதிரி இன்னொரு தடவை நடக்காமப் பார்த்துக்கோ..." என்று சொல்லி முடிக்க...

அப்போது ஜெயந்தி, தீக்ஷாவின் தாய் உள்ளே வர... உள்ளே நுழைந்த போதே விஜய் கண்களில் பட,

விஜய்யைப் பார்த்த வினாடியே, "வாங்க தம்பி..." என்றபடியே,

"அம்மா ராதா... அண்ணாவுக்கு எதுவும் கொடுத் தியா?" என்று கேட்க ஆரம்பித்தவர்,

தீக்ஷா ஒரு கையில் காபிக் கப்பையும் மறு கையில் சுனந்தாவையும் வைத்துக் கர்ம சிரத்தையாய்ப் பார்த்துப்



பார்த்து நடந்து வர... விஜய்க்கா கொண்டு வருகிறாள் என்று வியந்து பார்க்க...

அவளோ, அதைப் பார்வதிக்குக் கொடுக்க... ஜெயந்தி யும் ராதாவை அடுத்து உட்கார்ந்திருந்த பார்வதியை அப்போதுதான் பார்த்தார்.

"அடடே... பாரு தானேம்மா நீ... நல்லா இருக்கி யாம்மா?" என்று அவளை விசாரித்தபடியே...

"ஏன்டி, தம்பிக்கு எதுவும் கொடுக்கலையா?" என்று தீக்ஷாவைக் கேட்க,

"நீங்களே போட்டுக் கொடுங்க. என் ஃப்ரெண்ட் நான் எப்படிக் கொடுத்தாலும் சாப்பிடுவா. உங்க தம்பி சாப்பிடு வாரா?" என்று சொல்லியபடியே,

"வா, பாரு! நாம மேல போகலாம்..." என்று சுனந்தாவைத் தூக்கியபடி பார்வதியுடன் மாடியேறியவளைக் கவலையோடு இரண்டு ஜோடி விழிகள் தொடர,

ஒரு ஜோடி விழியோ அவளைத் தொடராமல் கண்களை மூடிக் கொண்டன.

**தீ**க்ஷாவும் பாருவும், தீக்ஷா அறையில் இருக்க...

தீக்ஷா ஆரம்பித்தாள். "என்னடி! ஆச்சரியமா இருக்கா... இவ்ளோ பெரிய பங்களா... எங்க நிலை பார்த்து மிரண்டுட்டியா! இதெல்லாம் எனக்கு நிரந்தரமில்ல, பாரு... என் அண்ணி எங்க வீட்டுக்கு வந்ததால வந்தது. நான் எப்போதுமே அதே பழைய தீக்ஷாதான். என்ன... இந்தப் பிரச்சனை இல்லன்னா... நானும் நம்மை மாதிரி இருக்கிற ஒருத்தன் வீட்ல வாழப் போயிருந்திருப்பேன். இப்போ அதுக்கும் வழியில்ல..." என்று சொல்ல,

"ப்ளீஸ்டி... அதையே சொல்லாதே தீக்ஷா... உன்னை எல்லாரும் பரிதாபப் பார்வை பார்க்கிறாங்கன்னு சொல் லிட்டு... நீயே அதைச் சொல்லிட்டு இருக்க..."

"ஓ.கே. ஓ.கே. தீக்ஷாவுக்கு ஒண்ணும் இல்லை. இப்போ பாரு..." என்றவள் முகத்தை மாற்ற...

"ஹை..." அவளின் முக பாவனையில் சுனந்தா கை தட்ட,

"செல்லக் குட்டி..." என்று உச்சி முகர்ந்தவள்...

"உன் பேர் என்ன... குட்டிம்மா?" என்று கேட்க,

சுனந்தா என்று சொல்லாமல், "குட்டி தீக்ஷா!" என்று சொன்னாள்.

"அடிப் பாவி. உன் பேரையே அவளுக்கும் வச்சுட்டியா...?" என்று பார்வதி சிரிக்க...

"நீ வேற... இதை நான் சொல்லிக் கொடுக்கல. நான் சொல்லிக் கொடுத்ததே வேற..."

சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, "நாம வச்சுருக்கிற பேரெல்லாம் ஆன்ட்டிக்குச் சொல்வோமா!" என்றவள்... "எங்க அம்மாவுக்கு நான் வச்சிருக்கிற பேர் உனக்கு ஏற்கெனவே தெரியும், பாரு... இன்னும் ரொம்பப் பேருக்குப் பேர் வச்சிருக்கேன். எங்க ஸ்னோ சொல்வா பாரு..." என்றபடி சுனந்தாவிடம், "உங்க அப்பா பேர் என்ன?" என்று கேட்க,

"தீபன்!" என்று மழலை மொழியில் சொல்ல,

"ப்ச்... குட்டிம்மா... அது இல்ல. இன்னொண்ணு சொல்லுங்க."

"காதலுகு மர்ரதை விஜய்!"

"ம்ஹ்ஹம்... சூப்பர்டி செல்லம்..." என்றவளிடம், குழந்தை சொன்னது புரியாமல் பார்வதி விழிக்க...

"காதலுக்கு மரியாதை விஜய்..." என்று அவளுக்குப் புரியும்படி சொல்லியவள்... மீண்டும் சுனந்தாவிடம் திரும்பி, "உங்க மாமா பேர் என்ன... சொல்லு."



"எந்த மாமா..." என்று சுனந்தா கேள்வி கேட்க...

சிரித்த தீக்ஷா... "இவங்க வீட்ல இது வேற தொல்லை. மூன்று பேர் இருந்துகிட்டு..." என்று பார்வதியிடம் சலித்தவளாய்... "சுரேந்தர் மாமா பேர் என்ன?" என்று கேட்க,

"தலைவாசல் விஜய்..." குழந்தை மொழியில் சொன்னாலும் பார்வதிக்கு இப்போது புரிய... பட்டப் பேருக்குக் காரணம் புரியாவிட்டாலும்... சுரேந்தரை அவள் பார்த்திருந்ததால்... அவன் நல்லாத்தானே இருக்கிறான். ஏன் இந்தப் பேரைப் போய் அவனுக்கு வச்சிருக்கா... என்று மனதுக்குள் நினைத்தவள் மீண்டும் நடப்புக்கு வந்தாள்.

"தென் ஃபர்ஸ்ட் மாமா பேரு..."

"விருமாண்டி விஜய் மாமா..." என்று இதை மட்டும் அழுத்தமாய்ச் சொன்னவள், தானாகவே, "அப்புறம் பாட்டி பேரு வைஜெயந்தி ஐ.பி.எஸ்!" என்று சுனந்தா தன் அத்தை தனக்கு இட்ட பணியைச் செவ்வனே முடிக்க...

சிரித்து முடித்த பார்வதி... "உனக்கு அடுத்த ஆளா... நல்லாப் பழக்கி வச்சிருக்க தீக்ஷா... இல்ல இல்ல... கெடுத்து வச்சிருக்க..." என்றவளிடம்,

"இந்த ஆறு மந்த்ல வேற வேலை... ஸ்னோ குட்டிக்குத் தான் டிரெய்னிங்..." என்று சொல்லியவள்...

"அத்தையோட ஸ்லோகம் என்ன சொல்லுங்க... பாரு ஆன்ட்டிகிட்ட!"

அவள் கேட்ட அடுத்த நிமிடம் வார்த்தைகள் விழுந்தன.

"தீக்ஷா மூச்சு இல்லாம கூட இருப்பா. ஆனா பேச்சு இல்லாம இருக்க மாட்டா..." என்று கெத்தாகச் சுனந்தா சொன்னவுடன், குழந்தையைப் பார்க்காமல் தீக்ஷாவையே பார்த்த பாருவின் கண்கள் கலங்க...

"ஆனால், இப்போல்லாம் நான் இந்த டயலாக் சொல்றது இல்ல பாரு. தரித்தினியமா பேசித்தான் இந்த

நிலைமையில இருக்கேனாம். நாம சொன்னாத்தானா... பார்த்தியா... அதுதான் இப்படி ட்ரெய்னிங்..." என்று பெருமிதமாய்க் கூறியவளிடம் சோக முகம் காட்டாமல்...

"இன்னும் என்னென்ன பேரு தீக்ஷா... கண்டினியூ பண்ணு..." என்றபடி பார்வதி தொடர,

"பட்டப் பேர் எல்லாம் என்கிட்ட அட்ஜஸ்ட் பண்ணிப் போகாதவங்களுக்கு மட்டும்தான். அதுதான் இந்தப் பட்டப் பேர். எங்க அண்ணிக்குக் கூடப் பட்டப் பேர் வச்சிருந்தேன், கல்யாணத்துக்கு முன்னால. ஆனா, வாபஸ் வாங்கிட்டேன். எங்க அண்ணி ரொம்ப நல்லவங்க. என் மேல ரொம்பப் பாசம்..." என்றவள்,

"சுரேந்தர் அத்தானுக்குக் கூடப் பட்டப் பேரை வாபஸ் வாங்கலாம்தான். ஆனால் விருமாண்டி கூடச் சேர்ந்துகிட்டு அப்பப்போ சீன் காமிப்பார். அதுதான் இன்னும் அந்தப் பேரை விடல. ஆனா, நல்ல அத்தான்..." என்று சொன்னவள்...

"அப்ப எங்க அண்ணாவுக்குக் கூடப் பேர் வச்சுருப்பியே..." என்று பார்வதி தன் வேலையைக் காட்ட....

"ச்சே! இல்லடி... வைக்கல!" என்று சொல்ல... அவளின் விழிகளே அது பொய் என்று சொல்லாமல் சொல்லியது.

"உண்மையா?" என்று நம்பாமல் பார்வதி கேட்க...

அசடு வழிந்தவளாய்... "உங்க அண்ணா... சம் டைம்ஸ் நம்மள மேத்ஸ் ஒழுங்காப் போடலைன்னா திட்டு வாங்கள்ல... அப்போ மட்டும் வச்சிருக்கேன்..." என்றவள், தயக்கமாக, "வசூல் ராஜா எம்.பி.பி.எஸ். பாரு, தப்பா எடுத்துக்காதே. நீ போய்ச் சொல்லித் தொலையாதே. சொல்லக் கூடாது. ஓ.கே.வா?" என்று கெஞ்சிய குரலிலே மிரட்டவும் செய்ய..



"நான்தானே... சொல்லவே மாட்டேன் தீக்ஷா!" என்று பார்வதி சொன்ன தோரணையே சொல்லி விட்டுத்தான் மறு வேலை என்று இருக்க...

"அது மட்டும் இல்ல. எனக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்சவங்களுக்கும் பட்டப் பேர் வைப்பேன். என் சுனந்தா குட்டிக்கு ஸ்னோனு வச்சிருக்கேனே..." என்று சுனந்தாவை முத்தமிட்டுச் சுற்றியவள்,

"போன மாதம் நீ வந்திருக்கலாம். சுனந்தாவோட இரண்டாவது பிறந்த நாள். சூப்பரா நடந்தது..." என்றவளின் நினைவுகளில்... சுனந்தாவின் முதல் பிறந்த நாள் விழா ஞாபகம் வர, முகம் கன்றினாள். இருந்தும் பார்வதி பார்க்கும் முன் மறைத்தாள்.

இப்போது சுனந்தா தீக்ஷாவின் முகத்தைப் பார்த்த வாறே,

"யுகி மாமா..." என்று சொல்ல, அந்த நேரம் தீக்ஷாவை அவள் தாய் அழைக்க...

"ஒரு நிமிசம்..." என்றபடி வெளியேறினாள், தீக்ஷா.

இப்போது பார்வதி, "யாரு குட்டி, யுகி மாமா?" என்று சுனந்தாவிடம் பேச ஆரம்பிக்க,

"மாமா..." என்றபடி அவள் அத்தை போல சைகை பாஷையில் விமானம் பறப்பது போல் காட்டி... அதன் சத்தம் போல் செய்து காட்டியவள், "பிளைட்ல போயிருக்காங்க. எனக்கு வரும்போது சாக்கி, டாய் எல்லாம் வாங்கிட்டு வருவாங்க..." என்று ஆரம்பித்துக் குழந்தை மொழியில் சரளமாய் அவளிடம் பேச ஆரம்பிக்க... பார்வதியும் அவளைத் தூக்கி வைத்துக் கொண்டு கேட்க ஆரம்பித்தாள்.

மீண்டும் உள்ளே வந்த தீக்ஷாவிடம், "யுகி யாரு, தீக்ஷா?" என்று கேட்க...

"யுகேந்தர்... இப்போ யு.கே.ல இருக்கான்..." என்று சொன்னவள்,

"அண்ணி வீட்ல எனக்குக் கிடைத்த ஃப்ரெண்ட். ஆனா எனக்கும் அவனுக்கும் இடையில் ஒரு பிரச்சனை. அதுக்குக் கூட விருமாண்டிதான் காரணம். யு.கே.க்குப் போகும்போது கூடச் சொல்லாமல் கிளம்பினான். கோபம் இருந்தும் அவனை வழியனுப்ப ஏர்போர்ட் கூடப் போனேன். ஆனாலும் பேச மாட்டேன்கிறான். போன்ல பேசினாக் கூட... ஒரு வார்த்தை யில பதில் சொல்றான். இங்க வரட்டும், ஒரு பெரிய கச்சேரி இருக்கு அவனுக்கு..." என்றவள்,

"நம்ம கேரக்டர்டி அவன்... இப்போ மட்டும் அவன் இருந்தானு வச்சுக்கோ. செம ஜாலியா இருக்கும்..." என்று சொல்லியவள்,

"நான் யுகியை ரொம்ப மிஸ் பண்றேன்..." என்றவள், பார்வதியின் காதில் ரகசியமாய், "பையன் லவ் பண்றான். பொண்ணு அவங்க அண்ணாவோட எனிமி சிஸ்டர். எனக்கு மட்டும்தான் தெரியும். இப்போ உனக்கும்... யார்கிட்டயும் சொல்லிடாதே. விஜய் அத்தானுக்கும்... சுரேந்தர் அத்தா னுக்கும் தெரிஞ்சது, பையன் காலி..." என்று முடித்தாள்.

அதன் பிறகு அங்கு கலகலப்புக்குப் பஞ்சம் இல் லாமல் இருக்க...

ஹாலிலோ, விஜய், ராதாவிடம், "ராதா... இங்க எனக்குப் பக்கத்தில வேலை இருக்கு. போயிட்டு ஒன் ஹவர் கழிச்சு வருகிறேன்..." என்று வெளியேற,

அவனிடம் அவன் தங்கை, "அண்ணா, எதுவும் பிரச்சனையா அண்ணா...? ரொம்ப டல்லா இருக்கீங்க...!" என்றபோது,

"அதெல்லாம் இல்லம்மா..." என்றவன், "இனிமேல் தான் எனக்குப் பிரச்சனை வர வேண்டுமா.. ? ஒண்ணும் இல்லை. கொஞ்சம் குழப்பம். அவ்ளோதான். பெருசா இல்ல..." என்று வெளியேறினான்.



அப்போது சாரகேஷ் வெளியே வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

விஜய் அவனைப் பார்த்த வினாடியில், அவன் சாரகேஷ் என்று மனம் உணர, அவனைக் கண்களால் அளவெடுக்க ஆரம்பித்தான்.

மருத்துவனுக்கு உரிய சாந்தம் அவனது முகத்தில் தவழ்ந்தாலும், கண்களில் ஒரு தீர்க்கம் இருந்தது. கம்பீரமாய் அவனை நோக்கி வந்தவனை நோக்கி, விஜய்யும் தன் கம்பீரத்தை மீட்டெடுத்துப் போக...

சாரகேஷும் யோசனையில்தான் வந்தான். தன் முன் வந்து கொண்டிருப்பவனைப் பற்றி யெல்லாம் இல்லை. பார்வதி இங்கு எதற்கு வரச் சொன்னாள்... இது யார் வீடு என்ற யோசனையில்...!

வந்தவன்... தன் எதிரே வந்த விஜய்யிடம், "எக்ஸ்கியூஸ் மீ..." என்றபோதே, இவன் காரை நிறுத்தும் போதே பார்வ திக்கு மிஸ்ட் கால் கொடுத்திருந்தபடியால்... பார்வதியும் தீக்ஷாவும் வெளியே வந்திருந்தனர்.

விஜய்யிடம் பேச எத்தனித்த போதே, தீக்ஷாவைப் பார்த்த சாரகேஷின் விழிகள்... மகிழ்ச்சி, சுவாரஸ்யம், ஆச்சரியம்... என மாறி மாறி உணர்வுகளைப் பிரதிபலிக்க...

விஜய்யின் இதயம் நின்று துடித்தது. துடித்த தன் இதயத்தை அடக்கியபடி, தீக்ஷாவைப் பார்க்கத் திரும்பிய வனின் கண்கள்... அவள் கண்களைச் சந்திக்கத் தைரிய மின்றி, அதைச் செய்ய இயலாமல் பார்வதியைப் பார்க்க... அதில் தெரிந்த சந்தோசம் அவன் உயிரைக் குடித்தது...

'இவளை எதற்கு வேலைக்கு எடுத்தோம். இவளால் தான் சாரகேஷ் இங்கு வந்திருக்கிறான். இனி என்ன

ஆகுமோ...? இவள் மட்டும் பார்வதி என்று முன்னமே தெரிந்திருந்தால்... ரிஜெக்ட் செய்திருக்கலாம்...' என்று தன்னைத் தானே நொந்தவனின் மனச்சாட்சி...

'அதுக்காக தீக்ஷாவை விரும்பினவங்களை எல்லாம் அவ கண்ணில படாம மறைச்சு வைக்க முடியுமா...?' என்று கேள்வி கேட்டு அவனைப் பார்த்துச் சிரிக்க... 'ஆனா, இவன் கொஞ்சம் ஸ்பெஷல் ஆச்சே அவளுக்கு...' என்று மனச்சாட்சிக்குப் பதில் விடுக்க...

அவன் இவ்வாறு போராடிக் கொண்டிருக்க...

இவனின் மனநிலைக்கு எதிர்மாறாய்த் தீக்ஷாவின் கண்களோ, சாரகேஷின் மேல் அவஸ்தையாய் விழுந்து... அவன் தன் வீட்டுக்கு வந்த விருந்தாளி என்பதில் மீண்டு...

"வாங்க, பாரு அண்ணா!" என்றபடி உள்ளே அழைக்க,

பாருவிடம் சாரகேஷ், கண்களால் சைகை பேசினான்.

'எப்படி தீக்ஷாவைப் பார்த்த?' என்று விழியாலே கேட்க,

சிரித்தாள் பாரு. என்ன சொல்வது? அவள்... தீக்ஷாவைப் பார்த்தது சந்தோசம்தான். ஆனால் தீக்ஷாவின் நிலைமை... ஒன்றும் புரியவில்லை.

தீக்ஷா இருவரையும் அழைத்து உள்ளே சென்று விட... விஜய் அசோக்குக்கு கால் செய்தான்.

"அசோக், நான் சொன்ன பையனைப் பத்தி விசாரிச்சியா?" என்று கேட்க,

"நானே போன் பண்ணலாம்னு இருந்தேன், சார்... பையன் பேரு சாரகேஷ்..." என்று சொல்ல,

"அதை நானே சொல்லிட்டேன். அவன் தங்கை பேர் சாருமதி. இப்போ நம்ம புது ஆபீஸ்லதான் வேலை பார்க்கிறா... இதைத் தவிர மேல சொல்லு..."



"ஹார்ட் சர்ஜன். இங்கேதான் ஸ்ரீராம் ஹாஸ்பிடல்ல வொர்க் பண்றான். ஒரு தங்கை. நீங்களே சொல்லிட்டீங்க அதை... அம்மா மட்டும்தான். அப்பா இல்லை..." என்று சொன்னவன்,

"ம்... சரி. மேரேஜ் ஆகி விட்டதா? வேற எதுனாலும் அவனைப் பற்றி ராங் மேட்டர் சிக்கிச்சா?" என்று கேட்க,

"இல்ல சார்... மேரேஜ் ஆகவில்லை. ரொம்ப நல்லவன் போல. நோ தம். நோ தண்ணி. இதுக்கே வழி இல்லையா... பொண்ணும் கிடையாது...!" என்றவன், "பட், கூட வேலை பார்க்கிற டாக்டர் பொண்ணு தீவிரமா லவ் பண்ணுது போல... பையன் சிக்க மாட்டேன்கிறானாம்..." என்று சொல்ல...

கவனமாய்க் கேட்ட விஜய், "அந்தப் பொண்ணு யாருன்னு விசாரிச்சு சீக்கிரம் சொல்லு. நாம மேரேஜ் பண்ணி வச்சிடலாம்..." என்று சிரிக்க, அந்தச் சிரிப்பு கூட வலியுடன் தான் இருந்தது.

"ஏன் சார்... தீக்ஷா மேடம் கிட்ட வம்பு பண்றானா?" என்றவனிடம்,

"சொன்னதை மட்டும் செய். கேள்வில்லாம் கேட்காதே. அந்தப் பொண்ணோட டீடெயில்ஸ்லாம் சீக்கிரமா எனக்கு வரணும்..." என்று பேசியபடி வெளியேறினான்.

**சா**ரகேஷ்க்குத் தீக்ஷாவிடம் தனியாகப் பேசும் வாய்ப்பெல்லாம் கிடைக்கவில்லை. ஹாலில் அமர்ந்து மட்டும் பேசினர்.

அது எல்லாம் பொதுவான விசாரணையில் கழிய... அடுத்த அரை மணி நேரத்திலேயே சாரகேஷ், தனக்கு வேலை இருக்கிறது என்று கூறி... அடுத்த நாள் தீக்ஷாவையும் அவர்கள் வீட்டுக்கு வருமாறு அழைத்தவன்... தன் தங்கையோடு கிளம்பினான்.

காரில் சாரகேஷ், உற்சாகமாக வந்தவன், தங்கையைப் பார்க்க... அது அவனுக்கு எதிர்மாறாய் இருக்க...

"என்ன மேடம், டல்லா வர்ற? அனேகமா என்னை ஓட்டி எடுக்கப் போறேனு நினைச்சு வந்தேன். ஆனாலும் உனக்குத் திமிர்தான். தீக்ஷாவைப் பார்த்ததைச் சொல்லவே இல்லை. ஆள் சூப்பரா ஆகிட்டால்ல...!" என்றவன், தங்கையின் பார்வையில்,

"சாரி, சாரி. உன் ஃப்ரெண்ட கொஞ்சம் சைட் அடிச்சேன்தான். தப்பால்லாம் இல்லம்மா. போட்டுக் கொடுத்திடாதே. அப்புறம் இன்னும் ஒரு பத்து வருசத்துக்கு நம்ம பக்கமே தலை வச்சுப் படுக்க மாட்டா...!" என்றபோது, கண்ணில் வலியுடன் பார்த்தாள்.

"அண்ணா, நீ சந்தோசமா இருக்கியா... தீக்ஷாவைப் பார்த்ததுனால...?" என்று கேட்டு அவன் முகத்தையே பார்க்க,

"சந்தோசம் இருக்காதா, பாரு... நாம முதன் முதலா விரும்பின பொண்ணு. திரும்பப் பார்க்கும்போது சந்தோசமா இருக்காதா?"

"ஹ்ம்ம்... ஒரே சைட்தானா... தைரியம்தான் உனக்கு. அவகிட்ட உதை வாங்கப் போற!" என்றவளிடம்,

"ஏன் பார்க்கக் கூடாதா? நான் என்ன அடுத்தவன் பொண்டாட்டியையவா பார்த்தேன். ஒருவேளை... எனக்கு மறுபடியும் லக் இருக்கோ என்னவோ!" என்று அசால்ட்டாய்க் கூறிய தன் அண்ணனை விழி விரித்துப் பார்த்தாள் பார்வதி.

கண்டிப்பாகக் கேட்டாக வேண்டும் என்று நினைத்து, "நீ இன்னும் அவளை நினைச்சுட்டு இருக்கியாண்ணா?" என்றவளிடம்,

"தெரியல... அப்போ காதல் இருந்ததுதான். ஆனா, இப்போ இருக்கா இல்லையான்னு தெரியல. இத்தனை வருசத்தில் மறந்தும் விட்டேன்தான். அவ இல்லாம இருக்க முடியாது அப்படின்னுல்லாம் சொல்ல முடியாது. ஆனா, அவ என் வாழ்க்கையில வந்தா சந்தோசப்படுவேன். ஏன் கேட்கிற?" என்று கேள்வியாய்த் தொடர,



"அண்ணா, அவளுக்கு... அவளுக்கு..." என்று சொன்னவள், அழ ஆரம்பிக்க...

தன்னைத் தேற்றியபடி அவள் நிலையை விளக்க... அதிர்ச்சியில் காரை நிறுத்தி விட்டான் சாரகேஷ்.

"ஓ மை காட்..." என்று மனம் ஆட்டம் காண... தீக்ஷாவுக்கா... ஏன் எதனால என்று மருத்துவனாய் இல்லாமல்... சாதாரண மனிதன் நிலையில் இருக்க...

"அண்ணா... அண்ணா..." என்று உலுக்க...

"தீக்ஷாவுக்கு கியூர் பண்ணிடலாமா அண்ணா...?" என்று நம்பிக்கையோடு கேட்க,

தலையை இட வலமாக ஆட்டியவன்... "இது ரொம்ப ரேர் கேஸ் பாரு... லட்சத்துல ஒருத்தருக்கு வரும். இந்தியாவுல மட்டும் 1000 பேர்... அதில் தீக்ஷாவுமா...?" என்று தலையைச் சாய்த்து விட்டான்.

அவனின் நம்பிக்கை இல்லா வார்த்தையில் கலங்கிய பார்வதி...

"ஒண்ணும் பண்ண முடியாதா, அண்ணா?" என்று மீண்டும் கேட்க,

பதில் சொல்ல முடியாத வருத்தமுடன்... "இப்போ எந்த டாக்டர்கிட்ட பார்த்துட்டு இருக்கா?"

"விஜய் எங்க எம்டி... நீ உள்ளே வரும்போது பார்த்தேல்ல... அவர்தான். அது அவ அண்ணியோட அண்ணன்தானாம். அவங்க கொஞ்சம் பெரிய இடம்

போல.... அவர்தான் ஹெல்ப் பண்றாரு... ஆனா, தீக்ஷா வுக்கு அவரைப் பிடிக்கல..." என்று கூறியவளை...

"ஏன்?" என்ற ஆச்சரியக் குறியில் நோக்க...

"எனக்கும் தெரியல... பணக்காரத் திமிர் பிடித்த வனாம்... நம்ம தீக்ஷாகிட்ட கூட ஏதோ தப்பா நடந்துக் கிட்டாருன்னு சொன்னா... என்னனுலாம் சொல்லலை. எல்லாம் விளக்கமா இன்னொரு நாள் சொல்றேன்னு சொன்னா..." என்று சொல்ல,

திடுக்கிட்டவனாய், "என்னது, தப்பா நடந்துக்கப் பார்த் தானா... என்ன பாரு, சொல்ற? விளையாட்டா சொல்ற... தீக்ஷா அவனோட சொந்தம். அவகிட்டயே மிஸ் பிஹேவ் பண்ணினான் என்றால்... உன் நிலைமை... நீ அவன் ஆபீஸுக்கெல்லாம் போக வேண்டாம்..." என்று அண்ணனாய் ஆரம்பித்தவனிடம்,

"இல்லண்ணா... தீக்ஷாவோட நிலை சரியில்லை. அவங்க வீட்டை விஜய்தான் கண்ட்ரோல் பண்ணிட்டு இருக் கான் போல... தீக்ஷா ரொம்ப லோன்லியா ஃபீல் பண்றா... அவளைப் பார்த்தாலே தெரியுது. அவளுக்கு இப்போ நம்ம சப்போர்ட் தேவைண்ணா... அதுக்கு நான் இந்த ஆபீஸுக்குக் கண்டிப்பா போக வேண்டும். விஜய் கொஞ்சம் திமிர்தான். எனக்குக் கூட இன்னைக்கு அவன் காரில் போகப் பிடிக்க வில்லைதான். நான் உட்கார்ந்தா கார் ஓட்ட மாட்டானாம். தீக்ஷாவுக்காகத்தான் போனேன்.

"அவன் தீக்ஷாவை அடையணும்னு நினைக்கிறான் போல, அண்ணா. அவன் தீக்ஷா கிட்ட பேசும்போது சாதாரணமாப் பார்த்தாலும்... எனக்கு என்னமோ தப்பா படுது. அவங்க வீட்டு ஆளுங்க யாரும் அதைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறாங்கன்னு நினைக்கிறேன். பொறுக்கி... பொண்டாட்டியை வச்சு வாழத் தெரியாதவனுக்கு அடுத்த



பொண்ணு மேல என்ன கண்ணு..." என்றவளைச் சமாதான மாக்கும் முயற்சியில்....

"அடேங்கப்பா... அவன் பேர் என்ன சொன்ன... விஜய்தானே! டேய் விஜய்... என் தங்கச்சியோட ராசி தெரியாம விளையாடிட்ட.... நீ கைமாதான் போல..." என்று சென்னை பாஷையில் நக்கலாய்ச் சொன்னவன்... அதே வேகத்தில், "தீக்ஷாவுக்கு மட்டும் இனி அவன் எதுனாலும் பண்ணட்டும். இந்தச் சாரகேஷோட இன்னொரு முகம் அவனுக்குத் தெரியாது..." என்று கோப முகமாய் மாற...

பாருவே அவன் தீவிர பாவனையில் கொஞ்சம் அரண்டாள். அண்ணன், தங்கை இருவரும் அதன் பிறகு எதுவும் பேசாமல் அமைதியாகவே வந்தனர். தீக்ஷாவின் நிலை இருவரின் மனதிலும் ஓட.... அதுவே அவர்கள் இருவரின் மனதையும் ஆட்கொண்டது.

**வி**ஜய் மீண்டும் தீக்ஷா வீட்டுக்கு வந்தவன்... இரவுச் சாப்பாட்டை அங்கேயே முடித்து விட்டுத்தான் கிளம்பினான்.

கிட்டத்தட்ட பத்து மணி அளவில் தன் தாய் முன் மாத்திரை போட்ட தீக்ஷா... "ஒரு தடவை மாத்திரையைக் குப்பைத் தொட்டியில போட்டு ஏமாத்தினதுக்கு... அவன் ஆபீஸ்ல படுத்துறான். நீங்க வீட்டில படுத்துங்க..." என்றவள்,

தன் தந்தையிடமும், தன் அண்ணனிடமும், பாருவைப் பார்த்தது முதல் வீட்டிற்கு வந்தது வரை சொன்னவள், "அப்பா, நாளைக்குப் பார்வதி வீட்டுக்குப் போகட்டுமா...? என்னைக் கூட்டிட்டுப் போய் விட மட்டும் செய்யுங்கப்பா... வரும்போது அவ கூட வந்துடுவேன்..." என்று கெஞ்ச,

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். விஜய் தம்பி திட்டுவாரு..." என்ற தனது தாயின் வார்த்தையில் கொதிப் படைந்த தீக்ஷா... தன் அண்ணி அங்கு அருகில் இல்லை என்பதால்... பல்லைக் கடித்தபடி,

"நான் என் அப்பாகிட்ட சொல்லிட்டு இருக்கேன். கண்டவன் திட்டுவான்லாம் கவலைப்பட முடியாது. உங்களுக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன். நம்ம வீட்டு விசயத்தில் எதுக்கும்மா அவன் தலையிடுறான்...? வந்தானா... அண்ணியைப் பார்த்தானான்னு போயிட்டே இருக்கணும். எல்லை மீறிப் போயிட்டு இருக்கான்..." என்றவளின் பேச்சில்,

கடுமையான ஜெயந்தி, "அவன் இவன்லாம் பேசாத... பேசாதேன்னு பல தடவை சொல்லிட்டேன், தீக்ஷா!" என்றவரிடம்,

"அப்பா, இந்த அம்மாவை அவனுக்கு ஜால்ரா போடுறதை நிறுத்தச் சொல்லுங்க!" என்று அடிக்குரலில் இருந்து கத்த...

"ஜெயந்தி, உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா... உள்ளே போ!" என்றவரிடம் முறைத்தபடி அவர் மனைவி செல்ல...

"அப்பா, நாளைக்குப் போகட்டுமா... ப்ளீஸ்!" என்று கொஞ்சியபடி, "வேண்டாம்னு மட்டும் சொல்லிடாதீங்கப்பா... அப்புறம் அடுத்த ஜென்மமும் வைஜெயந்தி ஐ.பி.எஸ். தான் உங்களுக்குப் பொண்டாட்டியா வரணும்னு சாபம் விட்டுருவேன். எப்படி வசதி?" என்ற மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்த அவள் தந்தை...

"ஒரு பத்து நிமிசம் கழிச்சுச் சொல்லவாம்மா...?" என்றபோது ஏளனமாகப் பார்த்தவள், "இதுக்கு அம்மாவே பரவாயில்லை. நேராச் சொல்லிடுவாங்க. அவன்கிட்ட பெர்மிஷன் வாங்க இந்த டைம் வேணுமா அப்பா?" என்று சரியாகக் கண்டுபிடித்துக் கேட்டவள்...

"ப்ளீஸ்ப்பா... அவன்கிட்ட கேட்டு நான் போகணுமுன்னா வேண்டாம்..." என்று எழ...



"நாளைக்கு அப்பா ஆபீஸ் போற டைம்ல கூட்டிட்டுப் போகலாமா... இல்லை. எப்போ போகலாம்னு யோசிச்சேன்மா... ஆபீஸ்ல வேலை கொஞ்சம் அதிகம். அதுதான்..." என்று மாற்றியவரிடம்,

"கட்டிக் கொண்டவள்..." பின் நக்கலாக, "ஆமா. போஸ்ட் ஆபீஸ்ல பெரிய வேலை இருக்கப் போகுதா...? லெட்டர், கார்ட் இதுலாம் வாங்கத்தான் இப்போ எல்லாரும் கியூல நிற்கிறாங்க. ஏன்ப்பா நீங்க வேற சீன் போடுறீங்க. டி.என்.பி.எஸ்.சி. ஃபார்ம் கொடுக்கும் வேலைதான் இருந்துச்சு. இப்போ அதுவும் ஆன்லைன்ல வந்து அதுக்கும் வேலை இல்லை. சேவிங்ஸ் ஒண்ணு மட்டும்தான் ஏதோ ஓடிட்டு இருக்கு..." என்று சலிக்க,

"இப்போ சொல்லுங்க. எப்போ போகலாம்..." என்று முறைக்க,

"உனக்குத் தெரியாதும்மா. இப்பவும் போஸ்ட் ஆபீஸ்லாம் பிசிதான்ம்மா..." என்றபடி, "அதை விடு. பத்து மணி ஓ.கே.வா...?" என்று கூறியவுடன், சம்மதமாய்த் தலையாட்டியபடி, தந்தையிடம் சொல்லிக் கொண்டு தூங்கச் சென்றவள்... தன் தாய் தன் அருகில் வந்து படுக்கும்வரை எல்லாம் காத்திருக்கவில்லை. உடனேயே கண் உறங்கினாள்.

வைத்தீஸ்வரன் விஜய்க்குப் போன் செய்ய எண்களை அழுத்தப் போக... அவர் மனதின் நாயகனே போன் செய்தான்.

"விஜய், நானே உங்களுக்குப் பான் பண்ணலாம்னு நினைத்தேன்ப்பா..." என்று சொல்லி, தீக்ஷா பார்வதி வீட்டுக்குப் போக அனுமதி கேட்ட விசயத்தைச் சொல்ல... அவனும் ஒன்றும் சொல்லவில்லை. "சரி..." என்று சொன்னவன், ஒன்று மட்டும் கேட்டான்.

"பார்வதி வீடு ஏர்போர்ட் பக்கமெல்லாம் இல்லைல்ல மாமா... நீங்க யாராவது ஒருத்தங்க அவ கூடவே இருக்க

முடியாதா...? எனி வே பார்வதி ஓ.கே.தான்! இன்னைக்குக் கூட அவ இருக்கானுதான்... நான் கூட மெயின் பிராஞ்சுக்குப் போயிட்டு வந்தேன். பார்வதி பார்த்துப்பா... மறக்காம மாத்திரைல்லாம் அவ பேக்ல வச்சு அனுப்புங்க மாமா..." என்று சொல்ல,

"சரிங்க தம்பி... ஆனா நீங்க தீக்ஷா விசயத்தில தப்பா முடிவெடுக்கிறீங்களோன்னு..." எனும்போதே,

"மாமா, எனக்குத் தூக்கம் வருது. பை..." என்று சொல்லிப் போனை வைத்தவனை நினைத்து... ஆழ்ந்த பெருமூச்சை இழுத்தபடி தனது அறையை நோக்கிச் சென்றார், வைத்தீஸ்வரன்.

பேரனை வைத்த விஜய் என்கிற விஜயேந்தர்... தன் இடது மார்பில் கை வைத்தபடியே கட்டிலில் படுத்திருந்தவன்... தன் உயிரான மூன்றெழுத்து மந்திரத்தை வாயில் உச்சரிக்காமல்... மனதோடு உச்சரித்து மனம் அமைதி ஆனவன்... அந்த அறையின் சுவர்களில் இரண்டு மூன்று இடங்களில் அவன் உச்சரித்த அந்த மூன்றெழுத்து மநதிரம், அவன் பெயரோடு சேர்த்து ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்க... அதைப் பார்த்தவனின் மனது இப்போது ஆறெழுத்து மந்திரமாய் அதைச் சொல்லிப் பார்த்துப் பேரமைதி கொண்டது.

பின் எழுந்து... பீரோவைத் திறந்தவன், அவனது இளம் பிங்க் வண்ணச் சட்டையையும், அதோடு இணைந்திருந்த அடர் பிங்க் வண்ணப் புடவையையும் எடுத்தவன், தன் மார்பில் வைத்து வழக்கம் போல் கண் மூடிச் சிறிது நேரம் இருந்தவன்... மீண்டும் அவற்றைத் தனது பீரோவில் வைத்துப் பூட்டப் போனான்.

அன்று மட்டும் உள்ளே வைப்பதற்கு மனமே வராமல் சில நிமிடம் தன்னோடே வைத்திருந்தவன்... பிறகு மனமின்றி உள்ளே வைத்தான்.



உள்ளே வைப்பதற்கு முன் தன் சட்டையின் இடது மார்புப் பகுதியில் அழுத்தமாய்ப் பதித்திருந்த இளம் சிவப்பு நிற லிப்ஸ்டிக் இதழின் அச்சாரத்தினைத் தன் இதழால் அழுந்த மூடினான்.

கடவுள் விட்ட வழி என்னவோ என்று மனக் குழப்பத்திலேயே மூடியவனின் காதுகளில் ஹெட்செட் ஆட்சி செய்ய, வழக்கம் போல் கண் மூடி விழித்திருந்தான்.

## 4

**பா**ர்வதி வீட்டின் மொட்டை மாடியில்... சாரகேஷ் மற்றும் தீக்ஷா நின்று கொண்டிருந்தனர். காற்றில் பறந்த தன் கேசத்தைச் சரி செய்தவளாய் வெட்ட வெளியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இப்போதெல்லாம் தீக்ஷா இப்படித்தான் இருக்கிறாள். திடீரென்று தோன்றும் வெறுமை. மனதைச் சூறாவளியாய்ச் சுழற்றும் போது... ஒன்று மருந்துகளின் துணை வேண்டும். இல்லை, வேடிக்கை பார்க்கிறேன் என்ற பெயரில் வெளியில் மனதை அலைபாய விடுவாள். ஏன் இந்த வெறுமை? எதையோ அவள் இழந்த உணர்வு... அதைத் தேடும் அவள் மனம்... பெரும்பாலும் தான் இழந்தது என்ன என்பதுதான் அவள் யோசனையில் இருக்கும்.

இதனாலேயே அவர்கள் வீட்டில் அவளைத் தனியே விடுவதில்லை. அவளும் இருக்க விரும்பவில்லை. பெரும்பாலும் சுனந்தாதான் அவள் தனிமையைப் போக்குவாள்.

இந்தத் தனிமைக்குப் பயந்துதான் அவள் வேலைக்குச் செல்ல வீட்டில் அனுமதி கேட்டதே... அவளுக்கு விடையாக விஜய் அலுவலகம் அவளது வீட்டில் அவள் பெற்றோரால் வழங்கப்பட... ஆனால் விஜய்யுடன் போக விருப்பமில்லாமல்... தனக்குத் தெரிந்த தொழிலான சாஃப்ட்வேர் பக்கமே

செல்கிறேன் என்று இவள் போர்க் கொடி தூக்க... விஜய் பிடிவாதமாக மறுத்து விட்டான்.

அவன் யார் தன் விசயத்தில் முடிவெடுக்க... என்று இவள் போட்ட கத்தல்கள் எல்லாம் காற்றோடு மட்டுமே கலந்தன. தன் அலுவலகம் இல்லை வீடு என்று... அவள் முடிவெடுக்க இரண்டு வாய்ப்புகளை மட்டுமே அவளுக்கு அவன் கொடுக்க... இப்போது விஜய்யோடு அவன் புதிதாகத் தொடங்கிய அலுவலகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறாள். அதுவும் அவள் அண்ணன் பெயரில் தொடங்கியிருந்ததால் மட்டுமே...

வீட்டில் அடைந்து கிடப்பதற்குத் தினமும் வெளியில் போகலாமே என்று அவன் அலுவலகம் அவனோடே செல்கிறாள். ஆனாலும் விஜய்யுடன் போக விருப்பம் இல்லைதான்.

சுனந்தாவின் முதல் பிறந்த நாளில் அவனிடம் அவள் பெற்ற அனுபவம் கொஞ்சம் தயக்கம் வந்தது. சுனந்தாவின் முதல் பிறந்த நாளுக்குப் பிறகு அவன் வீட்டுக்கே அவள் செல்லவில்லை. அப்படி இருக்கும்போது அவனோடு தனியே அலுவலகம் செல்ல முதலில் யோசித்தாள்.

பின்... அவன் மேல் கோபம் இருந்த போதும்... அவனோடு செல்ல முடிவெடுத்தாள். அவனும் இவளிடம் பேசுவதில்லைதான். அவன் எப்போதும் போல் இப்போதும் இவளிடம் பேச்சை வளர்ப்பதில்லைதான். முதலில் எல்லாம் இவள்தான் தன் குறும்பில் அவனிடம் வலியப் போய் வம்பிழுப்பாள். இப்போது அவளும் தன் குறும்பை எல்லாம் அவனிடம் காட்டுவதில்லை என்பதால் பிரச்சனை எதுவும் இல்லைதான்.

ஆனாலும் அலுவலகத்தில் வேண்டுமென்றே அவனை ஏதாவது செய்து எரிச்சல் பட வைப்பாள். அப்போதாவது வேறு வேலைக்கு அனுப்புவான் என்று... அவன் தன் விசயங்களில் முடிவெடுப்பதே அவனின் மீதான தற்போதைய அவளின் கோபம். அதை அவள் வீட்டில் புரிந்து கொள்ளாமல் விஜய்... விஜய்... என்று தலை மேல் தூக்கி வைத்து ஆடிக் கொண்டிருக்கின்றனர்.



சாரகேஷ் அவளையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க...

தன் யோசனையில் உழன்ற தீக்ஷா, சாரகேஷ் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதனை உணர்ந்து, யோசனைகளை விட்டு நிமிர்ந்து அவனைப் பார்க்க... அவன் பார்வையைக் கண்ட அடுத்த நொடியே... அதில் தெரிந்த சோகம்... தன்னைப் பற்றிப் பார்வதி சொல்லி விட்டாள் என்பதை விளக்க...

"என்ன டாக்டர் சார்... உங்ககிட்ட வர்ற பேஷண்ட்ஸ் கிட்டல்லாம் இந்த லுக் தானா?" என்று சிரிக்க, உதடுகள் மென்மையாக விரிந்தன சாரகேஷிற்கு.

"ஹ்ம்ம்... தைரியமாப் பேசுகிறாய். குட்...!" என்றவனிடம்,

"ஏன்... என் தைரியத்திற்கு என்ன குறைச்சல்...? அப்போ கொஞ்சம் அமைதிதான். இப்போதான் வாய் ஜாஸ்தி ஆகி விட்டது 'பாரு' அண்ணா..." என்றவள், தன் தைரியத்தைக் காட்டும் முயற்சியில்... சகஜமானாள் தீக்ஷா, சற்று முன் இருந்த நிலை மாறி.

"இந்த வாயடிக்கிற தீக்ஷாகிட்ட மட்டும் அன்னைக்கு நீங்க லெட்டர் கொடுத்திருந்தீங்க... நொந்து போயிருப்பீங்க..." என்று சொன்னவள்தானே... "இந்தப் பேச்சு அப்போ பேசி இருந்தேன்னா ஒருவேளை என்னைப் பிடிக்காமப் போயிருந் திருக்குமோ?" என்று சிரித்தபடியே சொல்ல...

"அப்போ நீ அமைதிதானே தீக்ஷா?" என்றவனிடம்,

"அப்படியும் சொல்லலாம். காலேஜ் வந்த பின்னால்... அதுவும் சென்னை... பெரிய காலேஜ். கொஞ்சம் என்னை மாத்திக்க ட்ரை பண்ணினேன். அது அப்படியே பழகிடுச்சு. ஆனாலும் நான் எப்போதுமே அமைதி கிடையாது. என் அம்மாகிட்ட மட்டும் கொஞ்சம் அதிகமாகப் பேசுவேன். ஆனா பாருங்க, அவங்களே, திருச்சியில இருந்த வரைக்கும் நல்லாத்தான் இருந்தேன். இப்போதான் ரொம்பப் பேசு றேன்னு அலுத்துக்கிறாங்க..." என்றபோது பார்வதியும் மேலே வந்திருந்தாள்.

"என்னண்ணா... என் ஃப்ரெண்ட் என்ன சொல்றா...? வாயை மூடவே மாட்டேங்கிறாளா...? மேடம் ஸ்லோகம்லாம் வச்சிருக்காங்க..." என்று பார்வதி சொன்னவுடன் தீக்ஷாவை சாரகேஷ் நோக்க...

"நானே சொல்றேன், கேளுண்ணா...

"மேடத்தோட மூச்சு நின்னாக் கூட பேச்சு நிக்காதாம்..." என்று முறைத்தபடி சொல்ல, தீக்ஷா அந்தச் சுவரில் தன் நகத்தால் சுரண்டிக் கொண்டிருந்தாள். அதைப் பார்த்த பார்வதி சிறு சிரிப்புடன்,

"இன்னும் இந்தப் பழக்கத்தை நிறுத்தலையா, தீக்ஷா...?" என்றவள், அருகில் இருந்த சிறு குச்சியை எடுத்துக் கொடுக்க... தன் பெயரை அதன் உதவியுடன் எழுத ஆரம்பித்தாள் தீக்ஷா.

"எங்கே போனாலும் உன் பேரை அங்க பதிக்க ஆரம்பிச்சுடுவியே...!" என்று சொன்னவளிடம்,

"பின்ன... நாம அடையாளத்தை அங்கங்க பதிய வைக்கணும், பாரு... இது மட்டும் இல்லை. எனக்கு ஒரு பொருள் பிடிச்சாலும் அதுல என் முத்திரையை வச்சுரு வேன்ல...!" என்றபடி,

தீக்ஷா வி – என்று அவளது கை நிறுத்தாமல் இன்னும் தொடர ஆரம்பிக்க,



"என்னடி வைத்தீஸ்வரன்னு எழுதப் போறியா?" என்றபோது, வி –யை யோசனையோடு பார்த்தவள்... அப்பா பேரை எழுத மாட்டேனே... இன்னைக்கு ஏன் எழுதறேன்... என்று தனக்குள் யோசித்தவள், "நீண்ட நாளைக்குப் பிறகு எழுதுகிறேன் என்பதால் ஃபுல் நேம் எழுத ஆரம்பிச்சுட்டேன் போல..." என்று குச்சியைக் கீழே போட்டபடி, மீண்டும் அவர்களிடம் பேச ஆரம்பித்தாள்.

பார்வதி, தன் அண்ணனை ஒரு பார்வை பார்த்துச் சிரித்து விட்டு...

"ஆனா, தீக்ஷா... இதெல்லாம் ஓ.கே. உன் ஆள் நெஞ்சில உன் பேரைப் பதிக்காம இருந்தா சரி. ஒருவேளை உன்னைப் பொண்ணு பார்க்க வந்தவனுக்கு உன்னோட இந்தப் பழக்கம் தெரிஞ்சு போச்சோ... அதனால ஆள் அரண்டடிச்சுட்டு ஓடிப் போயிட்டானோ... யார் பெத்த புள்ள உன்கிட்ட மாட்டப் போகுதோ...?" என்றவள், இப்போது தீக்ஷா அறியாமல் தன் அண்ணனைப் பார்த்துப் பார்வதி கண் சிமிட்ட...

'உதை...' என்று சைகையால் தங்கையைப் பத்திரம் காட்டியவன், தீக்ஷா பார்க்கும் முன் மாற்றினான்.

"பொண்ணு பார்க்க வந்தவனா...? போடி, நல்லா வாயில் வந்துரும் எனக்கு. தாத்தாவோட ஃப்ரெண்ட்... வழி யில் வந்த சம்பந்தம். எல்லோருக்கும் ஓ.கே.ன்னு தோணுச்சு. பொண்ணெல்லாம் பார்க்க வரலை. போட்டோ மட்டும்தான் பார்த்தது. வேண்டாம்னு ரிஜெக்ட் பண்ணத் தோணலை. ஓ.கே.ன்னு சொன்னேன். அவனா என்கிட்ட பேசுவான்னு பார்த்தா.., பேசவே இல்லை. போடானு நானும் விட்டுட்டேன். ஒரே ஒரு நாள் மட்டும் கால் பண்ணினான். அதுவும் நான் அப்புறமாப் பேசுறேன். அவன் அம்மா கேட்டா நான் பேசி னேன்னு சொல்லிடுன்னு... அவ்வளவுதான்.

"என்கிட்ட ஏன் பேசலேன்னு அதுக்கப்புறம்தானே தெரிந்தது. பய புள்ள... வேற யாரையோ லவ் பண்ணி யிருக்கு போல. என்ன... முதலிலே சொல்லி இருக்கலாம். லூசுத் தனமாப் பண்ணிட்டான். நல்லவேளை... இந்த மாதிரி ஒரு பையன் என் வாழ்க்கையில வரலேன்னு சந்தோஷம் தான்...." என்றவள், "ஒருவேளை அவன் அப்படி இன்னொரு பொண்ணை லவ் பண்ணியிருந்திருக்காமல் இருந்தால்... என்னோட நிலை... கல்யாணத்துக்கு அப்புறம்தான் தெரிஞ் சிருக்கும், 'பாரு'... கஷ்டமாகியிருக்கும் அவனோட நிலை..." என்று சொல்ல,

"உனக்கு ஒண்ணும் ஆகாது தீக்ஷா...!" என்று பார்வதி சொல்ல,

"அதை உங்க அண்ணனைச் சொல்லச் சொல்லு, பார்க்கலாம். அவருக்குத் தெரியும் என்னோட நிலை..." என்றபோதே...

சாரகேஷ் மனம் அவளுக்காகப் பரிதவித்தது. ஹார்ட் ட்ரான்ஸ்ப்ளாண்ட்... என்று ஒரு வாய்ப்பு அவளுக்கு இருக் கிறது. ஆனால் அது எல்லோருக்குமே செட் ஆகாது என்ப தால் மனதோடு மட்டுமே வைத்துக் கொண்டான். அவளிடம் சொல்லி அவளைக் குழப்ப விருப்பமில்லை அவனுக்கு... அதனால் மௌனமாக இருந்தவன்... பின் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு,

"நீ நெக்ஸ்ட் டைம் வரும்போது உன்னோட ரிப்போர்ட்ஸ்லாம் எடுத்துட்டு வா, தீக்ஷா... நானும் பார்க் கிறேன்..." என்று தீக்ஷாவிடம் சொல்லி வைத்தான்.

"ம்ம்..." என்று சொன்னவள்...

"ஆனா, அது எங்ககிட்ட இல்லை. எல்லாமே விஜய் அத்தான் கிட்டதான் இருக்கும். கேட்டு வாங்கித் தருகிறேன்..." என்று சொன்னவளுக்கு விஜய் என்ன சொல்வானோ என்று இருக்க...



"என்னது... உங்ககிட்ட இல்லையா...? படிச்சவங்க தானே நீங்கள்ளாம்... சாதாரணமா அவன்கிட்ட இருக்குன்னு சொல்ற..." என்று திட்ட ஆரம்பித்தான் சாரகேஷ்.

மிரண்டு விழித்த தீக்ஷா, "நான் கேட்டேன்... ஆனா தரலை. ஏன்... என்ன பிரச்சனை...?" என்று முழிக்க,

"சரி, அதை விடு. எந்த டாக்டர் கிட்ட பார்க்கிற?" என்று கேட்க... இவளும் சொல்ல,

நெற்றியைத் தேய்த்தான் சாரகேஷ்... சொன்ன அந்தப் பெண் மருத்துவர் இவர்கள் துறையில் மிகவும் புகழ் பெற்றவர். இவனே அவரைப் பார்க்க நினைத்துக் கொண்டிருக்கிறான், ஒரு ரிசர்ச் ஆர்ட்டிக்கிளுக்காக. ஆனால் முடியவில்லை. சாதாரணமானவர் இல்லை. பெரிய இடம் அவர்... என்பதால் அவனும் சமாதானமானவன், "சரி, நெக்ஸ்ட் டைம் வரும்போது கேட்டு வாங்கிட்டு வா..." என்று சொன்னவனிடம்,

பார்வதி, "ஏன் அண்ணா, இவ்ளோ டென்சன் ஆகுற...?" என்று கேட்க...

"பின்ன என்ன பண்ணச் சொல்கிறாய்... இந்தக் காலத்தில் கூட முட்டாளா இருக்கா இவ... அவனே ஒரு பொறுக்கின்னு சொல்றா. அவன் பணக்காரன்னு வேற சொல்றா... என்ன ஏதுன்னு தெரியாம... அதைப் பார்க்காமல் கூட... அவன் சொன்னான்னு நம்பி இவ மெடிசின் எடுத்துட்டு இருப்பாளா... படிச்சவதானே!" என்றவனிடம்,

அதே வேகத்தில், "நான் என் அப்பா அம்மாவை நம்புகிறேன். வேற யாரையும் இல்ல..." என்றாள் பட்டென்று. பின் தன் நிலை மீண்டவள்... எங்கோ பார்த்தபடி... ஆனால் அழுத்தமாக,

"விஜய் அத்தானைப் பொறுக்கின்னுல்லாம் சொல்ல முடியாது. அவர் குணங்கள் எனக்குப் பிடிக்கலை. என்

குணங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. அவருக்கும் எனக்கும் ஒத்து வரவில்லை. ஒருமுறை... கொஞ்சம் வரம்பு மீறிப் பேசினார்தான். அதுக்கு நானும் காரணம்தான். அவரை எதிர்த்துப் பேசினேன். எனக்கெதுக்கு வம்புன்னு ஒதுங்கிப் போயிருக்கலாம்..." என்றவள், சற்றுத் தணிவாக...

"எங்க அண்ணியோட அண்ணன்... அவரை மரியாதை இல்லாமப் பேசாதீங்க... நான் கொஞ்சம் கோபம் வந்தா திட்டுவேன். அ்துக்குத் திட்டும் அவர்கிட்ட வாங்கிடு வேன்..." என்று சொன்ன தீக்ஷாவைப் பார்த்து,

"அடிப் பாவி. வில்லன் ரேஞ்சுக்குப் பேசுன... இப்போ இப்படிப் பேசுற!" என்று கேட்க,

"வில்லன் எனக்கு மட்டும்தான். அதனால நான் மட்டும் திட்டுவேன்..." என்று கொஞ்சம் எரிச்சலுடன் சொல்ல...

இப்போது சிரித்த சாரகேஷ்... "என்ன... அத்தான் மேல திடீர்ப் பாசம்...!" என்றபோது,

"ப்ச்... பாசம்லாம் இல்லை. நமக்குப் பிடிக்காதவங்க எல்லாரும் அடுத்தவங்களுக்கும் பிடிக்காமல் இருக்குமா...? அந்த மாதிரிதான். ஆரம்பத்தில இருந்து எனக்கும் அவ ருக்கும் ஒத்து வரலை. ஆனா, எங்க வீட்டுல எல்லாருக்கும் பிடிச்சுப் போச்சு. எனக்கும் முதலில் அவங்க குடும்பம் பிடிக்கவில்லை. பிறகு பழகிடுச்சு. ஆனா, விஜய் மட்டும்... கடைசிவரை எனக்கும் அவருக்கும் ஆகவே இல்லை.

"இப்போ அவர் கூட என் கிட்ட வம்பு வச்சுக்கிறதில்ல தான். பட், எங்க வீட்ல அவர் அதிக உரிமை எடுத்துக்கிறது பிடிக்கவில்லை. அந்தக் கடுப்புதான். அதில் பாருவிடம் கொஞ்சம் அவரைப் பற்றி அதிகமாய்ச் சொல்லி விட்டேன்..." என்றவள்,

"விஜய் அத்தான் கிட்ட கொஞ்சம் ஒதுங்கி இருந்தாலே போதும்... பிரச்சனை இல்லை..." என்று முடிக்க,



"ஏன் உங்க அத்தான் என்ன பூதமா?" என்று பயந்தவன் போலப் பேச...

"இல்ல. விருமாண்டி விஜய்..." என்று பதிலுக்கு நக்கலடித்துச் சொல்ல... சூழல் கலகலப்பாகியது.

அப்போது சாரகேஷின் போன் அடிக்க... "சொல்லு, அகல்யா. யெஸ்... நான் இன்னைக்கு நைட் ஷிஃப்ட்..." என்றபடி அவன் நகர,

"யாரு தெரியுமா போன்ல...? சாரை ரூட் விடற ஆள்... அண்ணா அவகிட்ட இருந்து எஸ்கேப் ஆகிட்டே இருக்கான்..." என்று பார்வதி சொல்ல,

"அப்படியா... கூட வேலை பார்க்கிறாங்களா...?" என்று சாதாரணமாய்க் கேட்க,

"உனக்குப் பொறாமை வரலை...?" என்று பார்வதி தோழியிடம் போட்டு வாங்க...

"எனக்கு எதுக்குப் பொறாமை வரணும்... எனக்கு லவ் லெட்டர் கொடுத்தவங்க எல்லோருக்கும் ஆள் இருந்து எனக்குப் பொறாமை வரணும்னா..." என்றவள், கை விரல்களை எண்ணிப் பார்த்து, "ஆறு தடவை பொறாமை வந்திருக்க வேண்டும்..." என்று கண்ணடிக்க,

"சத்தியமா தீக்ஷா... உனக்கு வாய் சென்னையில வந்து வளர்ந்துதான் போச்சு..." என்றவளிடம்,

தீக்ஷா, "ஆனா, உங்க அண்ணா ஸ்பெஷல்தான். பிள்ளையார் சுழி போட்டவர் அவர்தானே..." என்று கிண்டலாய்ப் பேசிய போதே, விஜய் அவளை அழைக்க...

"இவனுக்கு இருக்கிற அக்கறை இருக்கே... அதுல அப்படியே மண் அள்ளிப் போடணும்..." என்று தோழியின் முன் எதுவும் சொல்லாமல் முனகியவளாய்ப் போனை எடுத்துக் காதில் வைத்துப் பேசாமலே இருக்க...

"எதுக்குப் போன் பண்ணியிருக்கேனு தெரியும்ல... பேசாம இருந்தா என்ன அர்த்தம்...?" விஜய் எதிர்முனையில் பேச,

"போட்டுட்டேன்னு அர்த்தம்..." என்றபடி போனைக் கட் செய்யப் போக,

"இரு. வச்சுடாதே... எங்கே இருக்க நீ?" என்று கேட்டான் விஜய்.

"பார்வதி வீட்ல. உங்களுக்குத் தெரியாமலா இருக்கும்..." என்று கடுப்பானாள் தீக்ஷா.

"அது தெரியும். பார்வதி வீட்ல எங்க இருக்கே? சாருமதி பக்கத்தில் இருக்காளா?" என்று விஜய் கேட்டபோது,

"ஏன் விஜய் அத்தான், என்னைக் கொல்றீங்க... என் மேல பரிதாபப்பட்டுப் பேசாதீங்கன்னு சொன்னாக் கேட்க மாட்டீங்களா...? மொட்டை மாடியில் இருக்கேன். வைக்கட்டுமா?" என்று படபடப்பும் கோபமும் கலந்து பேச...

"கேட்டாப் பதில் சொல்லு... புரிஞ்சுதா? எதிர்த்துப் பேசாதே. எனக்குப் பிடிக்காதுன்னு தெரியும்ல உனக்கு...!" என்று தீக்ஷாவின் கோபத்திற்கு இணையான கோபத்தில் சொன்னவன்... "கைப்பிடிச் சுவர்ல உட்கார்ந்து இருப்பியே... இறங்கி உட்காரு..." என்று சொன்ன மறு நொடியே அவள் பதிலை எதிர்பார்க்காமல் போனையும் வைத்தான்.

பார்வதி அவளின் பேச்சைக் கேட்டதால், "தீக்ஷா, டேபலட்டை எடுத்துப் போடு..." என்றவளிடம்,

"விடு. ஒரு நாள் போடலேன்னா ஒண்ணும் ஆகாது..." என்றபடி,

விஜய் ஒன்று சொல்லி, அதைக் கேட்டால் தீக்ஷா ஆவாளா அவள்...!

அதனால் மறந்திருந்த கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி உட்காரும், தன் வழக்கமான பழக்கத்தைச் செவ்வனே நிறைவேற்றினாள்.



பார்வதியோடு பேசிக் கொண்டிருக்கும் சுவாரஸ்யத்தில் அவளே மறந்திருந்தாள். புண்ணியவான் ஞாபகப்படுத்தி விட்டான்.

சாரகேஷும் வந்து சேர்ந்தான்.

"அண்ணா, இவ டேப்லட் போட மாட்டேங்கிறா. நம்மை நம்பித்தானே அனுப்பி வச்சுருக்காங்க..." என்றபோதே,

"தண்ணி எடுத்துட்டு வா..." என்று சாரகேஷ் பார்வதியை அனுப்பி வைக்க...

வேறு வழியின்றி மாத்திரைகளை வெளியே எடுக்க ஆரம்பித்தாள் தீக்ஷா.

பார்வதி கீழே இறங்க... சாரகேஷ் அந்த மாத்திரைகளின் அட்டைகளை அவளிடமிருந்து வாங்கிக் கவனமாக ஆராய ஆரம்பித்தான். நெற்றி சுருங்க யோசித்துக் கொண்டே இருந்தவன்... மீண்டும் அவள் கையிலே கொடுத்தான்.

பார்வதியும் மேலே வர... மாத்திரைகளைப் போட்டவளிடம், சாரகேஷ் கேட்டான்.

அவள் மாத்திரைகளைப் போடும் வரை அமைதியாக இருந்தவன்... "உனக்கும் விஜய்க்கும் அப்படி என்ன பிரச்சனை... ஏன் ஒத்து வரலை? கொஞ்சம் விளக்கமா சொல்லு..." என்று கேட்க...

"சொல்லு, தீக்ஷா!" என்று தீவிர பாவத்துடன் கேட்க...

பார்வதியோ, "ப்ச்... அவரைப் பத்தி எதுக்குண்ணா...? பிடிக்காதுன்னு சொல்றா இல்ல... பிடிக்காதவங்களைப் பற்றிப் பேசிப் பேசி என்ன ஆகப் போகுது?"

"நீ சொல்லு தீக்ஷா..." என்று அவன் தன் நிலையிலேயே இருக்க...

"அண்ணா!" என்று சங்கடமாகத் தீக்ஷாவைப் பார்க்க...

தீக்ஷா தோழியிடம், "பரவாயில்லை பாரு... எனக்கும் யார்கிட்டயாவது கொட்டணும் போலத்தான் இருக்கு..." என்று சொன்னவள் சாரகேஷைப் பார்த்து,

"என் அண்ணன் தீபன் மூலம்தான்... எங்களுக்கு விஜய் குடும்பம் சம்பந்தம் ஆனது. அண்ணாவும் அண்ணியும் லவ் பண்ணினாங்க. அண்ணி வீடு மிகவும் வசதியானவங்க. அதனால இந்தக் காதலுக்கு அவங்க வீட்ல பிரச்சனை பண்ணிட்டு இருந்தாங்க. அண்ணியும் படிச்சிட்டு இருந்தாங்க. அண்ணாவுக்கும் திருமணம் அவசரமில்ல...

"அண்ணி படித்து முடிக்கும்வரை ஒண்ணும் பெருசா வரலை... அதனால அண்ணனும் வெளிநாட்டிற்கு வேலை விசயமாப் போயிட்டான். ஆனால் ஒரு நாள் அவனே போன் செய்து, அண்ணி வீட்டில் அவங்களைப் போய்ப் பெண் கேட்கச் சொன்னான்.

"ஏன்னா... அண்ணிக்கு வேற இடத்தில் தீவிரமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்று... அம்மா, அப்பா வேற வழியில்லாமல் அங்கு போக... விஜய் அத்தான் ரொம்ப அவமானப்படுத்தி அனுப்பிட்டாரு. அதன் பிறகு என்ன செய்வது என்று நாங்க யோசித்துக் கொண்டிருந்த வேளையில்..." என்று சொல்லியபடி அவளின் முந்தைய இரண்டு வருட வாழ்க்கையின் தன் ஞாபகங்களை அவர்களோடு பகிர்ந்தாள் தீக்ஷா.

**ப**ன்னிரண்டு அடுக்குகள் கொண்ட கண்ணாடி போர்த்திய பிரமாண்ட கட்டடத்தின் பத்தாவது மாடியில் காலை ஏழு மணி அளவில் தீக்ஷா காதில் ஹெட்செட்டுடன் ஐக்கியமாய் இருக்க...

அவள் மட்டும் இல்லாது அவளது டீம் மெம்பர் அனைவருமே ஆஜராகி இருக்க... ஆன்சைட் கான்ஃபரென்ஸ் கால் போய்க் கொண்டிருந்தது.



தீக்ஷா அதிகாலையிலேயே கிளம்பியிருந்தாள் இந்தக் காலுக்காக... வீட்டில் கரண்ட் கட் ஆகும் நேரம் அது என்பதால்... கண்டிப்பாக அலுவலகம் வர வேண்டியதாகி விட்டது.

தீக்ஷா... நம் நாயகி... அதிகம் குறும்பு. கொஞ்சம் பொறுப்பு. கொஞ்சம் கோபம். கொஞ்சம் சோம்பேறி... கொஞ்சம் இல்லையில்லை. நிறையவே அவசரப் புத்தி உள்ளவள்.

சந்தோசம், துக்கம், வெறுப்பு, விருப்பு எதையும் மனதில் வைக்காமல் கொட்டி விடும் சூறாவளி. பேச ஆரம்பித்தால் நிறுத்த மாட்டாள். இது அவள் சொல்லவில்லை. சுற்றி இருப்பவர்களின் கமெண்ட், அவளைப் பற்றி.

எவரிடமும் இயல்பாகப் பழகி விடுபவள். யார் மனதையும் நோகடிக்க விரும்ப மாட்டாள். தன்னை நோகடித்தால் விட மாட்டாள். அதற்குப் பதிலடி கொடுத்து விட்டு, அந்த வேகத்திலே அதை மறந்தும் விடுவாள். நோகடித்த நபரையும் மன்னித்து விடுவாள். மொத்தத்தில் அவளைப் பற்றி யாராலும் கணிக்க முடியாது.

தந்தை வைத்தீஸ்வரன்.... தபால் துறையில் கண்காணிப்பாளர் பொறுப்பில் இருப்பவர். பாசமுள்ள தந்தை...

தாய் ஜெயந்தி... தன் மகளால் அவள் கணவனின் முதல் எழுத்தும் சேர்ந்து வைஜெயந்தி என்ற பட்டப் பெயர் பெற்றவர். நாலு சுவர்களுக்குள் தன் குடும்பத்தைத் தன் கைப்பிடிக்குள் வைத்திருப்பவர். வெளி உலகம் பற்றி அவருக்கு அக்கறை இல்லை. தீக்ஷாவும் அவள் தாயும் டாம் அண்ட் ஜெர்ரி போல். அத்தனை பாசம் இருவருக்கும். ஆனால், அன்றைய தினத்தில் இருந்து அவள் தாய் ஜெயந்தியின் இடத்தை வேறொரு நபர் கைப்பற்றக் காத்திருந்தான்.

தீபன்... அவள் சகோதரன். அவனும் மென்பொருள் துறையில் இருப்பவன். நாயகன், நாயகி வாழ்க்கை இணைவுக்கு முக்கியக் காரணகர்த்தாவாக ஆனவன்.

வழக்கம் போல் தன் சிஸ்டமில் மியூட்டை ஆன் செய்தவள்... பேசிக் கொண்டிருந்த ரெக்குயர்மெண்ட்டில் கவனம் மட்டும் கொண்டிருந்தாள். மிகவும் தீவிரமாக என்று சொல்ல முடியாது. காலையிலேயே வரச் சொல்லி விட்டனர் என்ற கடுப்பில் இருந்ததால்... பெரிதாய்க் கவனம் வைக்க வில்லை அவள். டீம் லீடர் எப்படியும் மீண்டும் அவர்களிடம் இதைப் பற்றி விளக்குவார் என்பதால்... ப்ரெசண்ட் மட்டும் கொடுக்க வந்திருந்தாள்.

அது மட்டுமில்லாமல் 11 மணி அளவில் அலுவலகத் தோழி நிச்சயத்திற்குப் போக வேண்டி இருக்க... மிதமான அலங்காரத்தோடு வந்திருந்தாள். புடவை கட்டத்தான் நினைத்திருந்தாள். அலுவலகம் வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால்... சுடிதாரே அணிந்து வர... புடவை கட்ட முடிய வில்லை என்ற கோபம் வேறு.

அபபோது அவள் மொபைல் சைலண்ட் மோடில் போட்டிருந்தபடியால் அதிர்வலைகளை ஒலிபரப்ப... அது வைஜெயந்தி என்று காண்பிக்க... அலட்சியமாகப் பார்த்தபடி... முதலில் எடுக்கவில்லை.

அவள் ஏன் எடுக்கவில்லை என்றால், அவள் அலுவலகம் வந்தபின் ஜெயந்தி கால் செய்கிறார் என்றால்... அது பின்வரும் காரணமாகவெல்லாம் இருக்கும்...

'ஏன்டி, ரூமை அப்படியே விட்டுட்டு வந்துருக்க... பெட்ஷீட் கூட மடிச்சு வைக்கலை. கம்ப்யூட்டர் ஆன்லயே இருக்கு. நேற்றுக் குடித்த பால் டம்ளரை சிங்க்ல போட மாட்டியா...?' இப்படிப் பலப் பல அர்ச்சனைகளைத் தாங்கி வழக்மாக வரும் தன் அம்மாவின் போன்... இன்றும் அப்படித்தான் இருக்கும் என்று விட... அது மீண்டும் இரண்டு முறை அடிக்க...

"போச்சுடா. முக்கியமான விசயமா இருக்குமோ...? அப்பா வேற ஊர்ல இல்லை. தாத்தா வீட்டுக்குப் போயிருக்



கிறார். என்னவாக இருக்கும்...? ஏன் போனை உடனே எடுக்கலைன்னு மாரியாத்தா ஆடுவாங்களே, இந்த அம்மா..." என்று ஹெட்செட்டைக் கழற்றியபடி போனை எடுத்துப் பேச ஆரம்பித்தாள் மெதுவாய்... தன் தாயின் அர்ச்சனைகளை எதிர்பார்த்தபடி.

ஆனால் அதற்கு எதிர் மாறாய்,

"தீக்ஷா..." என்று படபடத்த தாயின் குரலில்...

"என்னம்மா... என்ன?" என்று இவளும் கலக்கமாக,

"வீட்டுக்கு வாடி சீக்கிரம். ராதா... அதான் நம்ம தீபன் லவ் பண்ற பொண்ணு... பாய்சன் சாப்பிட்டு விட்டாளாம்..." என்று அழ ஆரம்பிக்க,

அதிர்ந்த தீக்ஷா, "என்னம்மா சொல்றீங்க... இருங்க..." என்று வேக வேகமாய் கட் செய்து டீம் லீடருக்குப் பிரைவேட்டாக மெசேஜ் செய்து விட்டு எழுந்தாள். அவள் இதயம் படபடவென்று அடிக்க ஆரம்பித்தது. அது அவள் தன் கட்டை விரலை அலுவலகக் கதவைத் திறக்கும் பையோ மேட்ரிக்ஸ் ஃபிங்கர் பிரிண்ட் வைத்த இடத்தில் தெரிந்தது.

ஏனென்றால் இரண்டு முறை தன் விரலை வைத்தும் நடுக்கம் காரணமாக ஒழுங்காகப் பதியாமல் அது தவறென்று காண்பிக்க.... இது வேற என்று எரிச்சல் பட்டவள், தன் ஆக்செஸ் கார்டைக் காண்பிக்கப் போக... அப்போது மற்றொரு அலுவலக நபர் ஒருவரும் உள்ளே வர... அதைப் பயன்படுத்தி வெளியேறி இருந்தாள்.

வெளியேறியபடியே மீண்டும் கால் செய்தாள்.

"என்னம்மா சொல்றீங்க...? இப்போ எங்க இருக் காங்க...? பிரச்சனை இல்லல்ல... அண்ணா சொன் னானா...? உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று படபடத்தவ ளாய் லிஃப்ட்டிற்குள் நுழைந்தவள்... ஒரு உயிரல்லவா?

போனால் வருமா? - மனம் பயத்தில் பலவாறாய்ச் சிந்திக்க ஆரம்பித்திருக்க... அவள் ஜெயந்தியைப் பேசவே விட வில்லை.

"இருங்க. நான் லிஃப்ட்ல வந்துட்டு இருக்கேன். வெளியே வந்த பின்னால் பேசறேன்..." என்றவள்... பதட் டத்தில் போனை கட் செய்யாமல் ஆனிலேயே வைத்தபடி வர, இப்போது ஜெயந்தி பேசிக் கொண்டே இருந்தார், எதிர் முனையில்.

"கடவுளே, அவங்களுக்கு ஒண்ணும் ஆகியிருக்கக் கூடாது..." என்று மனமுருகி வேண்டியபடியே வெளியே வந்து, தன் பிங்கியின் அருகே நின்றாள்.

"ஹாஸ்பிடல் நேம் சொல்லுங்க... நான் அங்கே வந்துடுறேன்..." என்க,

"இங்க வீட்டுக்கு வந்து என்னைக் கூட்டிட்டுப் போ. அதுக்குத்தான் நான் உனக்குப் போன் பண்ணினேன். இந்த மனுசன் வேற ஊரில் இல்லை..." என்று சொன்ன தாயிடம்.

"ஏம்மா, உங்களுக்கு அறிவில்லை. நான் அங்க வந்து உங்களை அழைச்சுட்டு... விளையாடறீங்களா...? டைம் ஆகும். நீங்க ஆட்டோவுல வாங்க..." என்று சொன்னவளின், 'அறிவில்லை' என்ற வார்த்தை மீறலில்,

"நாக்கை இழுத்து வச்சு அறுக்கணும்டி... பெத்த அம்மாவையே அறிவில்லைன்னு பேசுற... நான் சொல் றதை... நீ கேளு. நீ எனக்கு உத்தரவு போடாதே...!" என்றவ ரிடம்,

"அம்மா, அங்க ஒரு உயிர் ஊசலாடிக்கிட்டு இருக்கு. இப்போ கூட என்னைத் திட்டணுமா...?" வழக்கமாக இருந்தால் இவளும் பதில் சொல்லி இன்னும் வெறுப்பேற்றி இருப்பாள். இன்று பதிலுக்குப் பதில் வாயாடாமல் நிறுத்த,

"என்னது... உயிர் ஊசலாடுதா! உன்னை... பேசுற எதையும் காதில வாங்க மாட்டியா... ராதாவுக்கு ஒரு பிரச் சனையும் இல்லை இப்போ... காப்பாத்திட்டாங்க. அதற்குப் பிறகுதான் சம்பந்தி அம்மா சொன்னாங்க. இப்போ என்னை அங்க வரச் சொல்லி இருக்காங்க. அவசரக் குடுக்கை. வயித்தில இருந்தப்பதான் எட்டு மாசத்திலேயே வந்து மூச்சுப் பேச்சு இல்லாம படுத்திருந்த. அப்போ வேண்டாத தெய்வம் இல்லை. இவளை மூச்சு விட வைன்னு. இப்போ பேசியே படுத்தி எடுக்கிற... ஆனா, இப்போ கடவுளே! இவளுக்கு நல்ல புத்தியைக் குடு... இந்த அவசர புத்தி எங்க கொண்டு போய் இவளை விடப் போகுதோ?" என்றபோதே,



தன் தவறு புரிந்தவளாய்... தன் தலையில் தட்டியவள், "அவசரம்லாம் படலம்மா. லிஃப்ட்ல போனைக் காதில வைக்கல..." என்றபடி, "சரி, வீட்டுக்கு வருகிறேன்..." என்று ஜெயந்தியைச் சமாளித்தவளாய்ப் போனை வைத்தாள்.

அவளுக்கு ராதாவின் நிலை கவலைக்கிடம் இல்லை என்று தெரிந்த பின்னர்... வழக்கமான தீக்ஷாவாக யோசிக்க ஆரம்பித்திருந்தாள். கலக்கமெல்லாம் போய் இருந்தது.

போன மாதம்தான் அவளுக்குப் புது ஸ்கூட்டி வாங்கித் தரப்பட்டிருந்தது. அதன் பெயர்தான் பிங்கி. அதற்கு முன் அவள் வைத்திருந்தது செகண்ட் ஹாண்ட் பழைய மாடல் ஸ்கூட்டி.

அதனால் தன் பிங்கியைச் சுற்றி ஒரு முறை நோட்டம் செய்தவள்... பின் சுற்றுப்புறத்தையும் நோட்டம் செய்தவள் யாருக்கும் தெரியாமல், தனது ஸ்கூட்டியில் அவள் பெயர் பொறித்த இடத்தில் அழுத்தமாய் முத்தம் வைத்தவள்... பின் அதைக் கிளப்பினாள்.

செல்லும் வழியிலேயே, இந்தக் காதலுக்கு மரியாதை ஷாலினிக்கு ஏன் இந்த லூசுத்தனமான வேலை... காதலிச் சாளா... கல்யாணம் பண்ணுவாளா! அதை விட்டுட்டு... இப்படிப் பண்ணி வச்சிருக்கா. வீட்ல பேசத் தைரியம்

இல்லாதவங்களாம் எதுக்கு லவ் பண்றாங்க... ப்ச்... அவங்க நிலைமை என்னவோ... அந்த ராதாரவிதான் ரொம்ப பண்றானு அம்மா சொன்னாங்கள்ல... என்றபடியே,

அடுத்த அரைமணி நேரத்தில் தங்கள் வீடு இருந்த குவார்ட்டர்ஸ் முன் நிறுத்த... அங்கு ஜெயந்தி நின்று கொண் டிருந்தார்.

அவரைப் பார்த்தபடியே, "என்னம்மா... இங்க நிக்கிறீங்க... வாங்க, வீட்டுக்குப் போகலாம்," என்றபடி உள்ளே போக,

"என்டி, வீட்டைப் பூட்டிட்டு நீ எப்போ வருவ... ஹாஸ்பிடலுக்குப் போகலாம்னு இங்கே பதட்டமா நின்னா... வீட்டுக்கா... கிளம்பு!" என்றவளிடம், .

"அம்மா... அதுதான் நல்லா இருக்காங்கள்ல... இன்னும் டிபன் சாப்பிடலம்மா... பசிக்குது. அட்லீஸ்ட் டீ குடிச்சுட்டுன்னாலும் போவோம்மா...!" என்று கெஞ்சலில் இறங்கிய மகளிடம்,

"அங்கே என் மருமக பச்சத் தண்ணி வாயில படாம நாராக் கிடக்கிறாளாம். உனக்கு டீ முக்கியம்... எடு வண்டிய!" என்று பொரிய...

"என்னது... மருமகளா!" என்று அதிர்ந்தவள், 'பணக் கார மருமகள்னு ஆடுற வைஜயந்தி. ஆடு, ஆடு... வந்து உனக்கு அவ ஆப்பு வைக்கல... என் பேரு தீக்ஷா இல்லை..." என்று வாய்க்குள் முனகியபடி வண்டியைக் கிளப்பினாள் தீக்ஷா.

போகிற வழியிலேயே... "ஏம்மா, அந்த ராதாரவி அன்னைக்கே டோஸ் விட்டான்னு சொன்னீங்க. இப்போ உங்களை லெஃப்ட் ரைட் விட மாட்டானா...? ஆனா, பாருங்க. அங்கே என்ன நடந்தாலும் நான் வாயைத் தொறக்க மாட் டேன். இந்த ஷாலினி என்ன லூசா..." என்று பேசியபடி



வந்தவள், தாயிடமிருந்து எந்தவொரு ரியாக்சனும் வராமல் போக...

"என்னம்மா... நான் பேசிட்டே வர்றேன்... நீங்க பதில் சொல்லாம வர்றீங்க..." என்று முறைக்க,

"நானே ராதாவை நினைத்துப் பரிதவிச்சுட்டு வர்றேன். நீ ஷாலினி, ராதாரவின்னு யார் யாரையோ பத்திப் பேசிட்டு வர... இதுக்கு நான் பதில் வேற சொல்லணுமா...?" என்று நொடிக்க,

ஒரு நிமிடம் அதிர்ந்து பின்... தன் தாயின் வார்த்தை களை நினைத்துச் சிரிக்க ஆரம்பித்தாள். அவள் சிரித்த சிரிப்பில் வண்டி கண்ட்ரோல் இல்லாமல் ஆட... புதியதாய் வாங்கிய தன் வண்டிக்குச் சேதாரம் ஆகி விடுமோ என்று பயந்து அதை நிறுத்தியவள், வண்டியில் இருந்து இறங்கிக் குனிந்து வயிறைப் பிடித்துக் கொண்டு சிரித்து வைக்க... தாயின் முறைப்பில் மனம் சிரிப்பதை நிறுத்தச் சொன் னாலும்... சிரிப்பு நிற்காமல் வந்து கொண்டே இருக்க...

ஜெயந்தி... வைஜெயந்தி ஐ.பி.எஸ். ஆக மாறி... தன் வாய் என்னும் துப்பாக்கியில்... தோட்டாக்களைப் போட ஆரம்பிக்க...

"அம்மா, ப்ளீஸ்மா... என்னால முடியலை..." என்றபடி, மீண்டும் சிரித்தவள்... ஒரு வழியாய்த் தன்னை அடக்கிக் கொண்டு வண்டியில் ஏறிக் கிளம்பினாள். இருந்தும் அவ்வப் போது அவள் உடம்பு குலுங்க...

"நான் அப்படி என்னடி சொன்னேன்... இப்படிச் சிரிக்கிற?" என்று பரிதாபமாய் அவள் தாய் கேட்க...

"ஏம்மா... வீட்ல உட்கார்ந்து சீரியல்தான் பார்ப்பீங் களா... இந்தப் படம்லாம் பார்க்க மாட்டீங்களா...? காதலுக்கு மரியாதைன்னு ஒரு விஜய் படம் வந்துச்சு. தெரியுமா, தெரியாதா?" என்று கேட்க,

"ஏன்... அதுல அந்தப் பொண்ணு விசம் குடிக்குமா?" என்று அப்பாவியாய்க் கேட்க,

"அம்மா... அம்மா..." என்று தலையிலடித்தவள்...

"அப்படி இல்லம்மா... அந்தப் படத்துல வர்ற ஹீரோயினுக்கு மூன்று அண்ணன்... இதுலயும் கொஞ்சம் அப்படித்தான். அதனால ஹீரோயின் பேரைச் சொல்லி... உன் மருமக பேரைச் சொன்னேன். நம்ம அண்ணா பேரு கூட விஜய் தெரியுமா!" என்றவளிடம்,

"ராதா அண்ணா பேரும் விஜய்தான்..." என்ற தாயிடம்,

"அதெல்லாம் தேவையில்லை. இந்த தீக்ஷா அவனுக்கு ராதாரவினு பேர் வச்சுட்டேன். மாற்ற முடியாது. அதுக்கடுத்து உள்ளவனுக்குத் தலைவாசல் விஜய்னு பேர் வச்சுட்டேன்..." என்று வழக்காடிய மகளிடம்,

"தயவு செய்து, தீக்ஷா! என்னைக் கொல்லாதே. உன் அப்பா மட்டும் ஊர்ல இருந்திருந்தா... நான் உன்னைக் கூப்பிட்டிருக்கவே மாட்டேன்மா... மனுசன் உன்கிட்ட போய் என்னைத் தனியா விட்டுட்டுப் போயிட்டாரு... நீ பேசியே கொல்வியே...!"

"அவ்ளோ ரோசம் உள்ளவங்க தனியாப் போயிருக்க வேண்டியதுதானே. வீட்டுக்குள்ள பேசச் சொல்லு... வாய் கிழியப் பேசுறது... வெளியே வந்தா பயந்து நடுங்குறது... உங்க சாமர்த்தியமெல்லாம் நாலு சுவத்துக்குள்ளதாம்மா...!" என்று தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பிடித்துக் கொள்ளாமல் இருப்பாளா... தன் அன்னைக்கு அட்வைஸ் மழையைச் சந்தோசமாக வழங்கிக் கொண்டே மருத்துவமனை வளாகத்தினுள் நுழைந்தாள்.

**வ**ண்டியை நிறுத்த இடத்தைப் பார்வையிட்டபடியே வேகத்தைக் குறைக்க... அவள் நிறுத்தி விட்டாளோ என்று ஜெயந்தி குதிக்க... தன்னை நிலைப்படுத்த வண்டியை நிறுத்த



முடியாமல் திணறி... அருகில் இருந்த காரின் மேல் மோதி நிறுத்தியவள்... காருக்கு என்ன ஆனது என்று பார்க்காமல்... தனது பிங்கியைப் பார்த்தவள்... ஒன்றும் சேதாரம் இல்லாமல் போக... நிம்மதியுடன் பெருமூச்சு விட்டவள்... அவசரக் குடுக்கையாக இறங்கிய தன் தாயைத் திரும்பிப் பார்க்க... அவள் அன்னையோ மருத்துவமனை நோக்கி வேக வேகமாகச் சென்று கொண்டிருக்க...

அப்போதுதான் ஞாபகம் வந்தவளாய்... டிரைவர் சீட்டில் இருந்த கார்க்காரனைப் பார்க்க... அவனோ இப்போது இறங்கி நின்றிருந்தான்.

அவனின் கோப முகத்தைப் பார்த்தவள்... காரைக் கவனித்திருக்கலாம். தன் பிங்கிக்கே ஒன்றும் ஆகவில்லை எனும்போது அவன் காருக்கு என்ன ஆகியிருக்கும் என்று சாதாரணமாய் விட்டவள்...

"சாரி..." என்ற ஒற்றை வார்த்தையை அவனின் முகம் பார்த்துச் சொல்லியபடி... பாதி தூரம் போனவள்... அவன் முறைத்தபடி நின்றிருந்தது ஞாபகம் வர, மீண்டும் அவனைத் திரும்பிப் பார்க்க... அவன் அவளைப் பார்த்தபடியே இன்னும் கோப முகத்துடன் நின்றிருக்க... வாயசைவில் "சாரி..." என்று மீண்டும் சொல்லியபடி, தன் வழியில் போனாள்.

**ரா**தா இருந்த அறையினுள்ளே தயக்கத்துடன்தான் நுழைந்தனர் தாய் மகள் இருவரும்.

ராதா அறுபட்ட கொடி போல் கிடந்தாள். உடன் அவளின் தாய் மட்டுமே இருக்க... கொஞ்சம் தைரியம் வந்து சகஜமாகினர்.

"ஏம்மா... இப்படிப் பண்ணின...?" என்று ஜெயந்தி கண் கலங்க...

'அடேங்கப்பா... நம்ம அம்மாவா... என்ன ஒரு உருக்கம்...!' என்று மனதுக்குள் நக்கலடித்துக் கொண்டிருந்தவள்...

பின் தன் பங்கிற்கு அவள் நலனை விசாரித்தவள்... அடுத்து வந்த நிமிடங்களில்... தன் தாய் மற்றும் ராதா நடத்திய பாசப் போராட்டம் தாங்க முடியாமல் வெளியே வந்தாள். வந்தவள்... தன் அண்ணனுக்கு விசயத்தைச் சொல்ல... போனை எடுத்தபடி அந்த வராண்டாவின் ஓரத்தில் நின்றபடி டயல் செய்ய ஆரம்பித்தாள்.

அருகே சற்று முன் இடித்த கார்க்காரனும் நிற்க... அவனைப் பார்த்தபடியே, அங்கிருந்த கைப்பிடிச் சுவரின் மேல் ஏறி அமர்ந்து போனைக் காதில் வைத்தாள்.

'இவன் ஏன் நம்மள இந்த முறை முறைக்கிறான்...? அதுதான் சாரி.. அதுவும் இரண்டு முறை சொல்லியாச்சே...!' என்று நினைத்தவளாய் இருக்கும்போதே, அடுத்த முனையில் ஹலோ... என்று சோம்பலாய்த் தன் அண்ணன் குரல் கேட்க,...

"டேய் விஜய்... கடன்காரா..." என்று சத்தமாய் ஆரம்பிக்க...

"யாரு தீக்ஷா அந்த விஜய்... தப்பாப் போன் பண்ணிட்டியா?" என்று பிரதீபன் அறியாப் பிள்ளையாய்க் கேட்டு வைக்க...

"லூசு... உன்னைத்தான்டா... நீயெல்லாம் ஒரு ஆளு. உன்னை நம்பி இன்னொரு ஆளாடா உனக்கு...!" என்றவளிடம், பிரதீபன் பேசும் முன்,

முன்னால் நின்றிருந்தவன் வேகமாய் வர, "உன்னால அந்தப் பொண்ணு இங்க விசம் குடிச்சுட்டுப் படுத்திருக்கு. நீ என்னடா அங்க கிழிக்கிற...?" என்று சொல்லல, வேகமாய் வந்தவன் பின்வாங்கினான்.

"ஏன்... என்ன சொல்ற... தீக்ஷா?" என்று படபடப்பாய்ப் பேசியவனிடம்,

"ரொம்ப டென்சன் ஆகாதே. இப்போ நல்லா இருக்காங்க...!" என்றவளிடம்,



"அவளுக்கு என்ன பிரச்சனையாம் இப்போ... அதுதான் நான் நெக்ஸ்ட் வீக் வர்றேன்னு சொல்லி இருந்தேன்ல... எதுனாலும் ஆகி இருந்தா... என் நிலைமையை யோசிச்சுப் பார்த்தாளா...?" என்று கோபக் குரலில் சொல்ல...

"ஆமா. இவரும் பெரிய தேவதாஸ் மாதிரி இருந்திருப்பாரு. மூணு மாசத்தில வேறொரு பொண்ணைப் பார்த்துட்டுப் போயிருப்பான். ஆம்பள புத்தி... சீன் போடுறான்.. இவங்களை நம்பி இப்படி மோசம் போறாளுங்களே...!" என்று மனதிற்குள் மட்டும் பேசிக் கொண்டவளாய்,

"பிரச்சனை இல்லையா... அவ அண்ணன் அந்த ராதாரவி இருக்கான்ல. அவன் அண்ணியைத் திட்டி இருப்பான் போல. அது மட்டுமில்லை. இன்னைக்கு யாரோ ஒருத்தனை வீட்டுக்குப் பொண்ணு பார்க்க வரச் சொல்லியிருக்கிறான் என்று உன் ஆளைக் கட்டாயப்படுத்தி இருப்பான் போல. பாவம்! அவங்களும் என்ன பண்ணுவாங்க..." என்று பேசியவளை முறைத்தும்... கொஞ்சம் அலட்சியமாகவும் பார்வை பார்த்த கார்க்காரனைத் தீக்ஷாவும் விடாமல் பார்த்தபடியே பேசிக் கொண்டிருந்தாள். தன் அண்ணனிடம்... கிட்டத்தட்ட ஒரு படத்தையே ஓட்டி இருந்தாள்.

போனை வைத்தவள்... அந்த கார்க்காரனைப் பார்த்தபடி கடந்தாள். கொஞ்சம் தூரம் கடந்தவள்... இப்போதும் முறைக்கிறானா... மீண்டும் அவனைத் திரும்பிப் பார்க்க... அவன் போன் பேசிக் கொண்டிருந்தான். ஆனாலும் இவளையும் பார்த்துக் கொண்டிருந்தான். இவள் பார்த்த போது, அவனும் பார்வையை விலக்கவில்லை.

தீக்ஷா இப்போது குறும்பாக, சைகையால்... 'பை...' என்று சொல்ல... அவனின் கண்கள் தீப்பிழம்பாக...

அதைப் பார்த்த தீக்ஷா, "எஸ்கேப் தீக்ஷா!" என்றபடி அவசரமாய்த் திரும்பித் தன் அம்மாவை அழைக்கப் போனாள்.

அதன் பின் அறைக்குள் நுழைந்தபோது... ராதாவின் தாய்... அடுத்த வாரம் ஒரு நல்ல நாளில் தன் குடும்பத்துடன் வந்து பேசுவதாகக் கூற... மகிழ்ச்சி அடைந்தனர் இருவரும்.

ராதாவிடம் விடைபெற்றுக் கிளம்ப ஆயத்தமாகித் தன் தாயின் முகத்தைப் பார்க்க...

ஜெயந்தியோ, ராதாவிடம் விடாமல் இன்னும் பேசிய படியே இருக்க... தீக்ஷா முதலில் வெளியேறி விட்டாள்.

"ச்சே... வர்றாங்களா இந்த அம்மா..." என்று எரிச் சலுடன் வராண்டாவில் கால் வைக்க...

"நான் என்னப்பா விஜய் பண்றது... அவ பிடிவாதம் பிடிக்கிறாளே...!"

"அப்பா... எனக்கு ஒண்ணும் பிடிச்சுக்கலை. அந்தக் குடும்பம் சரியில்லையோன்னு தோணுது. பொண்ணையே இப்படி வளர்த்திருந்தா... பையனை... கேட்கவே வேண்டாம். நம்ம ராதாவுக்கு ஏன்ப்பா இப்படி ஒரு நிலை... நம்ம ஸ்டேட்டஸுக்கும் அவங்களுக்கும் சுத்தமாப் பொருந்தாது. அவன் தங்கை பேச ஆரம்பித்தா... நாமெல்லாம் ஓடணும் போல... வாயை மூட மாட்டேங்கிறா. அதுவும் குரங்கு மாதிரி அந்தச் சுவரில் ஏறி உட்கார்ந்து... அவ பேசினதை நீங்க கேட்டிருக்கணும். சரி வராதுன்னு தோணுது... நம்ம ராதா போயும் போயும் அந்தக் குடும்பத்துல..." என்று பேசிய வனைத் தாண்டித் தைரியமாகக் கடந்தாள்தான்... ஆனால் மனதில் புயலுடன்.

யாராய் இருந்தாலும் பதிலடி கொடுத்து விடுவாள், தீக்ஷா. இன்று ஏனோ மனம் வராமல் கடக்க... ஆனாலும் அவனுக்குப் பதிலடி கொடுக்காமல் போகவும் மனம் விரும்பவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தபடி, முன்னே ஒரு பத்தடி தூரம் தாண்டிப் போனவளைக் கை விரலின் சொடக்குச் சத்தம் நிற்க வைக்க... திரும்பாமல் நின்றாள் தீக்ஷா.



இப்போது முன்னே வந்திருந்தான் அந்த கார்க்காரன். இல்லையில்லை... ராதாரவி. அதாவது விஜயேந்தர் என்கிற விஜய்.

வந்தவன் அவளிடம், "இந்த லொட லொடப் பேச் செல்லாம் உங்க வீட்டோட நிறுத்திக்க. இல்லை... அப்படிப் பேசுறதை நிறுத்த முடியாதுன்னா... இந்தப் பக்கம் அடிக்கடி வந்துடாதே. எங்களுக்குன்னு ஒரு மரியாதை இருக்கு. பெரிய ஆளுங்கள்ளாம் வருவாங்க. உன் சின்னப் பிள்ளைத் தனமான பேச்செல்லாம் கேட்கிற மாதிரி ஆகிடப் போகுது.

"ஏற்கெனவே உங்களோடல்லாம் சம்பந்தம் வச்சுக் கிறோம்னு கேவலமா இருக்கு. எல்லாம் நேரம்... எங்க ளுக்கும் உங்களுக்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது. நீங்களாம் எங்களுக்குச் சமமாய்..." என்று ஆரம்பித்தவன், ஏனோ அதற்கு மேல் பேசாமல்... "சொன்னது கேட்டுச்சா...? இப்போ போகலாம்..." என்று திரும்பி, மீண்டும் ராதாரவி அறை நோக்கிப் போக,

அவன் அவளை விட்டு அதே பத்தடி தூரம் போக... கை தட்டி அழைத்தாள். "மிஸ்டர் விஜய்! ஒரு நிமிசம்..." என்றபடி,

கண்களில் தீப்பறக்க அவன் திரும்ப... அதைச் சளைக்காமல் எதிர்கொண்டு அதே பார்வையைத் திருப்பித் தந்தவளாய்...

அவன் முன்னே நின்றாள். மனதிற்குள், "சாரி அண்ணி..." என்று சொல்லியவள் நக்கலாக ஆரம்பித்தாள்.

"உங்க ஸ்டேட்டஸ் நான் இங்க வந்து பேசுறதுனால போயிடுமா... ம்ஹூம். ஆமாம். இந்த ஹாஸ்பிடலுக்கு உங்க குடும்பம் எதுக்கு வந்திருக்கு விஜய் சார்... உங்க தங்கச்சி பாய்சன் சாப்பிட்டாள்னு... அவ எதுக்குப் பாய்சன் சாப்பிட் டாள்? ஒருத்தனை லவ் பண்ணி வீட்ல ஒத்துக் கொள்ள வில்லைன்னு...

"ஆக, உங்க தங்கச்சி லவ் பண்ணினதுனால போகாத உங்க ஸ்டேட்டஸ் பெருமை... அவ காதலனுக்காக பாய்சன் சாப்பிட்டதுனால போகாத உங்க மானம்... என்னோட பேச்சால போயிடும்னு ஃபீல் பண்றீங்க... அது சரி. நீங்க காப்பாத்தி வச்சிருக்கிற இந்த ஸ்டேட்டஸ் என்னால போகக் கூடாதுதான்..."

'இந்த' என்ற வார்த்தையில் நக்கலாக அழுத்தம் வைத்தவள்... இப்போது கோபம் கொண்ட காளி அவதார மாகி, "எப்படி எப்படி... என்னை எப்படி வளர்த்திருப்பாங்கனு உங்களுக்குச் சந்தேகமா...? என்ன கண்டீங்க நீங்க... உங்க வீட்டுப் பொண்ணை விட நல்லாத்தான் வளர்த்திருக்காங்க. காதலிச்சவனுக்காகக் குடும்பத்தையெல்லாம் தூக்கி எறியுற அளவுக்கு எங்க வீட்ல என்னை வளர்க்கல. ஒருவேளை அப்படி வளர்த்திருந்தா... உங்க ஸ்டேட்டஸுக்கு கரெக்ட்டா இருந்திருக்குமோ...?" என்று கொஞ்சம் கூடப் பயப்படாமல்... தைரியமாய்ப் பேசி அவன் முகத்தைப் பார்க்க...

"என்ன..." என்று ஆரம்பித்தவன், அவளின் பின்னே வந்த யாரையோ பார்த்து அடுத்த நொடியே முகத்தில் புன்னகையைப் பூசியபடி அவரை நோக்கிச் செல்ல...

தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி... தனக்குள் இருந்த எரிமலைக் குழம்பை அவன் முன் வெளியேற்றி, அதில் அவனைத் தகிக்க வைத்து வெளி யேறினாள்... நிம்மதியாய்.

## 5

மருத்துவ மனையின் படிகளில் கீழே இறங்கியபடி வந்த தீக்ஷாவின் உதடுகள், இன்னும் இறங்கி வராத தன் தாயினை நினைத்து வசை பாட, மனமோ அந்த ராதாரவியை நினைத்து எரிந்தது. அவனைத் திட்டி வந்தும், மனம் ஆற வில்லை அவளுக்கு.



'நல்லவேளை... திட்டறதுக்கு அவனே ஒரு வாய்ப்பைக் கொடுத்தான். இல்லை, இந்த தீக்ஷா இதயம் என்ன ஆகியிருக்கும்...? எந்தக் குப்பையையும் மனசுல வெச்சிருக்க மாட்டா இந்த தீக்ஷா...!' என்று தனக்குத் தானே மனதுக்குள் பேசியவள்,

ஆனாலும், 'அந்த ராதாரவியை நினைத்தாலே பத்திக்கிட்டு...' என்று நினைத்தபோதே,

'ராதாரவி பேர் சூட் ஆகலடா உனக்கு... வேற பேர் வெச்சுத் தொலையணும்...' என்று யோசித்தவள்,

'விருமாண்டி... இதுதான்டா உனக்கு நான் வைக்கிற பேர். என்னையேவா விரல் சுண்டிக் கூப்பிடுறே... இந்தத் தீக்ஷா யாருன்னு காட்டுறேன்டா. நீயும் உன் ஸ்டேட்டஸ் மண்ணாங்கட்டியும்... போடா...' என்றபடி, தான் பைக்கை நிறுத்திய இடத்திற்கு வர, அங்கு அவளுடைய ஸ்கூட்டி இல்லை. அவ்வளவுதான்...

விருமாண்டி விஜய்யைத் திட்டும் வேலையைச் செய்து கொண்டிருந்த மனது, தன் பிங்கியை நினைத்துப் பரிதவிக்க ஆரம்பித்தது.

இப்போது விஜய்யாவது... விருமாண்டியாவது... அவனை மறந்தவள், மனம் பதற,

'அய்யோ... காணாமல் போச்சே! இங்கேதானே நிறுத்தினேன்.'

கண்களைச் சுழற்றி ஆராயக்கூட இல்லாமல் படபடப் பானாள் தீக்ஷா. எதிலும் நிதானம் என்பது அவளிடம் இருக் காது.

கொஞ்சம் ஆழ்ந்து யோசிக்கும் பழக்கம் இல்லாத தீக்ஷா, சட்டென்று எதையும் தீர்மானித்து, அதைத் தொங்கிக் கொண்டே திரிவாள்.

எதையும் அவசரப்பட்டு முடிவு செய்யும் மனம் கொண்ட அவள், பின் வந்த ஒரு நாளில், தான் காதுகள் கேட்ட முடிவை உறுதி செய்யப் பயந்து, தனக்குள்ளே அடங்கியும் போனாள்.

இப்போதுகூட நிதானமாகத் தேடிப் பார்த்திருந்தால், அவள் நிறுத்திய இடத்தில் இல்லாமல் சற்றுத் தள்ளி நிறுத்தி இருந்த அவள் ஸ்கூட்டி கண்ணில் பட்டிருந்திருக்கும். பத்து நிமிடம் புலம்பிக் கொண்டிருந்தவள், தனது தாய் சற்றுத் தள்ளி நிற்பதை உணர்ந்து,

'அம்மா என்ன திட்டப் போறாங்களோ...?' என்றபடி அவர் அருகில் பயந்த விழிகளாய்ப் போக,

"பைக்கை எடுடி, போகலாம். இங்கே நிறுத்திட்டு அங்கே என்ன பண்ணிட்டு இருக்கே...?" என்ற போதுதான், கவனம் அன்னையின் அருகில் இருந்த தன் வண்டியின் மேல் போக,

"ஹப்பா..." என்று இடுப்பில் கை வைத்தபடி மூச்சை இழுத்து விட்டாள் தீக்ஷா.

"பார்த்துடி... அப்படியே மூச்சு நின்னுடப் போகுது. ஏன் இப்படிப் பெருமூச்சு விடுறே...?" என்ற தாயிடம்,

"அதெல்லாம் அவ்ளோ சீக்கிரத்துல நிற்காது," என்றபடியே,

'நான் அங்கேதானே நிறுத்தினேன்... இங்கே எப்படி வந்துச்சு...?' என்று யோசித்தபடியே பைக்கை ஆராய்ந்தவள்,

"அம்மா...!" என்று அலற,

"என்னாச்சு...? ஏன் இந்தக் கத்து கத்துறே...?" என்று முறைக்க,

"இங்கே பாருங்க அம்மா... வண்டியில கீறல் விழுந்திருக்கு..." என்றபோது, கண்களில் கண்ணீரே வந்து விட,



"எவன் இங்கே வாட்ச்மேன்...?" என்று வாட்ச்மேனோடு சண்டை போட நகர்ந்தவளை, ஜெயந்தி இழுத்துப் பிடித்துக் கிளம்பினார்.

"சரி, விடு. சர்வீஸ் பண்ணிக்கலாம். அதுக்கு எதுக்கு இப்படிக் கண்ணீரை வேஸ்ட் பண்றே...?" என்று மகளின் கண்ணீரை அப்போது நிறுத்திய ஜெயந்தியை மட்டும் அல்ல... தன் ஒட்டு மொத்தக் குடும்பத்தையும் ஒரு நாள் கண்ணீர்க் கடலில் மிதக்க வைத்தாள் தீக்ஷா.

தாயே ஒன்றும் சொல்லாமல் விட... ஓரளவு சமாதான மானவள்,

"அம்மா... நீங்க என்னைத் திட்டியே கொல்லப் போறீங்கன்னு நினைத்தால்... ஹ்ம்ம்... பணக்காரச் சம்பந்தம் கிடைத்த குஷி... இன்னைக்குக் குஷியா இருக் கீங்க. ஆனா... அந்த வீட்ல இருக்கிற விருமாண்டி நம்மளை நிம்மதியா விட மாட்டான்னுதான் நினைக்கிறேன். நம்ம கூடச் சம்பந்தம் வெச்சுக்கிறதுக்கு கேவலமா இருக்காம் அய்யாவுக்கு. அவனை நம்ம வீட்டுப் பக்கமெல்லாம் வந்திடச் சொல்லா தீங்க... எனக்கு வர்ற கடுப்புக்கு..." என்ற போதே,

"தீக்ஷா..., அந்தத் தம்பியை மரியாதை இல்லாம இப்படிப் பேசக்கூடாது. அப்புறம்... பொண்ணை எப்படி வளர்த்து வெச்சிருக்காங்கன்னு பேச்சு வரப் போகுது...!" என்று விஜய் சொன்ன வார்த்தைகளை அவள் தாயும் சொல்லி வைக்க,

அவள் பிங்கி ரோட்டில் செல்லவில்லை... தன் எஜமானி தீக்ஷாவின் கோபத்துக்கு ஏற்பப் பறந்தது.

**அ**டுத்த ஞாயிற்றுக் கிழமை... அதிகாலை...!

10 மணி. ஆம்... தூங்கிக் கொண்டிருந்த தீக்ஷாவுக்கு அது அதிகாலைதான்.

ஹாலில் பேச்சு அரவம் கேட்க, தூக்கம் கலைந்தாள்.

அது, அந்த குவார்ட்டர்ஸில் இருக்கும் தீக்ஷாவின் விளையாட்டுத் தோழர்களின் குரல்.

"அக்கா எழுந்துட்டாங்களா...?" என்று, அதில் கொஞ்சம் வளர்ந்த சிறுவன், கையில் கிரிக்கெட் பேட்டோடு கேட்க,

"வாங்கடா... உங்களை எல்லாம் திட்டக்கூடாது. எருமை மாடு மாதிரி வளர்ந்தும், இன்னும் உங்களோட விளை யாடிண்டு இருக்காளே... அவளைச் சொல்லணும். மகாராணி இன்னும் எழலை... எழுந்து வந்தா வரச் சொல்றேன்," என்றபடி கிச்சனுக்குள் நுழைந்தார் ஜெயந்தி.

அவர்களின் குரல் கேட்டபோதே விழித்து விட்டதால், அங்கிருந்தபடியே...

"டேய் சிவா... அக்கா இன்னைக்கு ஆபீஸ் போறேன்டா... விளையாட வர முடியாது," என்று தனது அறையில் இருந்து சொல்லிய தீக்ஷா, கட்டிலை விட்டு இறங்கியும் இருந்தாள்.

முடியை கிளிப் கொண்டு நிறுத்தியவள், கையில் பேஸ்ட் வைத்த பிரஷ்ஷோடு வெளியே வர,

அவள் தாய், "அம்மையார் பத்து மணிக்கு எழுந்து, எத்தனை மணிக்கு ஆபீஸ் போக..." என்று கையில் பிடித்த தோசைக் கரண்டியோடு கேட்க,

"எத்தனை தடவை சொல்றது... எப்போ வேண்டும் என்றாலும் போகலாம், வீட்டில் கூட வேலையை எடுத்து வந்து செய்யலாம்னு... ஒவ்வொரு முறையும் சொல்லிட்டே இருக் கணுமா?" என்று கேட்க,

"என்னவோ போ... உனக்கு ஏத்த வேலைதான். இங்கேதான் அடக்க முடியலை... வர்றதைப் போறதைக் வடக் கேட்க ஆளில்லாம அங்கேயும் ஆடுறே. எந்த மகராசன் வரப் போறானோ உன்னை அடக்க...!" என்று உள்ளே போக,



தாயின் சுப்ரபாதத்தில் எரிச்சல் ஆனவள்,

"ப்ச்ச்... எவனும் என்னை அடக்க முடியாது. அன்புக்கு மட்டும்தான் இந்த தீக்ஷா அடங்குவா!" என்று உதட்டைச் சுழித்தபடி தன் அன்னைக்குச் சொன்னவள்,

'நான்தான் அவனை அடக்கி வைப்பேன்...!' என்று வெளியே சொல்லாமல், தன் மனதுக்குள் மட்டும் சொல்லிக் கொண்டாள்.

இவர்களின் பேச்சையே கண்டு கொள்ளாமல், தோசையையே கவனமாக உண்டு கொண்டிருந்த தன் தந்தையிடம் அமர்ந்து,

"அப்பா... உங்களுக்கு வேற ஒரு பொண்ணைப் பார்த்து நானே மேரேஜ் பண்ணி வைக்கிறேன்பா. எனக்கு இந்த அம்மா போரடிச்சுப் போச்சு. அம்மா கொடுமை பண்றாங்கன்னு வெளியில கூடப் புலம்ப முடியலை. சித்தி கொடுமைன்னா, தைரியமா வெளியில சொல்லலாம்ல... அதுல ஒரு லாஜிக் இருக்கும்..." என்ற மகளிடம்,

"அப்படியாம்மா உன்னை உன் அம்மா டார்ச்சர் பண்றா...?" என்று அப்பாவியாகக் கேட்டார் வைத்தீஸ்வரன்.

"என்னை விடுங்கப்பா... நான் கூட இன்னொரு வீட்டுக்குப் போயிருவேன். ஆனா நீங்கதான் பாவம். ஆயுள் முழுக்கக் கஷ்டப்படுவீங்க. அதுதான் மகளா ஒரு நல்ல காரியம் பண்ணுவோமேன்னு..." பாவமாய் இழுத்தவளிடம்,

அவளின் பாவனையில் சிரித்த வைத்தீஸ்வரன், "நல்லாத்தான் இருக்கு... ஆனா உன் அப்பாவை உன் அம்மா விட்டுருவாளா என்ன...?" என்றபோதே,

"ஆமா... இவரு பெரிய மன்மதரு... இவரை விடாமப் பிடிச்சு வெச்சிருக்காங்க... இவருக்கெல்லாம் நானே அதிகம்..." என்று நொடித்த மனைவியிடம்,

"ஏன்... எனக்கென்னடி குறைச்சல்...?" என்று அவரும் ஆரம்பிக்க,

தன் மீதான தாயின் சுப்ரபாதத்தைத் தந்தையை நோக்கித் திருப்பி விட்ட நிம்மதியில் நம் நாயகி, அருகில் இருந்த வாஷ் பேசினில் பல் துலக்க ஆரம்பிக்கப் போக,

ஜெயந்தி, "தீக்ஷா... எத்தனை தடவை சொல்றது... அறிவே வராதா உனக்கு? அப்பா சாப்பிட்டுட்டு இருக்காரு... ஒழுங்கா உள்ளே போய்ப் பாத்ரூம்ல போய் பிரஷ் பண்ணு..." என்று சொல்ல,

"போங்கம்மா..." என்று அலட்சியமாகத் தன் வேலையைத் தொடர ஆரம்பிக்க,

"தோசைக் கரண்டிதான் வெச்சிருக்கேன்... கால்ல இழுத்து விட்டுருவேன்," என்று மிரட்ட,

தீக்ஷாவுக்குத் தன் தாய் தோசைக் கரண்டியைக் காண்பித்தாலே கொஞ்சம் அலர்ஜி. சிறு வயதில் இரண்டு முறை சூடு வாங்கி இருக்கிறாள்... பயம் வராமல் இருக்குமா? அதுவும், அந்த வடுவே இப்போதுதான் மறைந்திருக்கிறது. மீண்டும் சூடு வாங்கி அனுபவிப்பாளா என்ன...?

"செல்லம்... இப்படிச் சொல்ல வேண்டிய முறையில பாசமாச் சொன்னா போக மாட்டேனா...?" என்றபடி தன் அறைக்குச் செல்ல எத்னிக்க, அப்போது அழைப்பு மணி ஒலிக்க, வாயில் பிரஷ்ஷை வைத்தபடி கதவை நோக்கிச் சென்றாள்.

"தீக்ஷா... நைட்டியை இறக்கி விட்டுட்டுப் போடி..." என்று ஜெயந்தி சொன்னபோது, கைலி போல் ஏற்றிக் கட்டியிருந்த நைட்டியை இறக்கி விட்டபடி... கூடவே முன்னும் பின்னும் இழுத்துச் சரியாக ஆக்கியவள்,

"எங்க அம்மா, உங்க அம்மா உங்களை வளர்த்ததை விட என்னை நல்லாத்தான் வளர்த்திருக்காங்க..." என்று ஜெயந்தியையே மறைமுகமாகப் பெருமையாகச் சொல்ல,



அவள் சொன்ன பாவனையில் ஜெயந்தியின் முகம் பெருமிதத்தில் பூரித்தது.

தன் தாயைக் கவிழ்த்த புன்னகையோடு கதவைத் திறந்தாள் தீக்ஷா.

திறந்தவளின் விழிகள், அதிர்ச்சியில் இன்னும் பெரியதாய் விரிந்து, திகைத்து விழிக்க,

முன்னே நின்றிருந்தவன் விருமாண்டி விஜய்தான். அவன் மட்டும் அல்ல, அவன் குடும்பமே நின்றிருந்தது.

அவளின் தோற்றத்தில் முகத்தில் அதிருப்தியைப் பிரதிபலித்தவன், தன் பெற்றோரை ஒரு முறை முறைத்துத் திரும்பினான்.

அவளையும் தாண்டி, எதிரே சுவரில் உள்ள கடிகாரத்தைப் பார்த்தவன், பின் தன் கைக் கடிகாரத்தையும் பார்ப்பது போல் பாவனை செய்து வைக்க,

இதை எல்லாம் கவனித்த தீக்ஷாவோ, 'டேய்... ஓவரா சீன் போடாதேடா... மணி பத்துன்னு எங்களுக்கும் தெரியும். பெருசா பார்வையாலே என் கிட்டே சினிமா காட்டாதே... சொல்லாமல் வந்து முன்னால் நின்று... என்ன பார்வை வேண்டிக் கிடக்கு...? ஒரு வேளை அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரியுமோ...! தெரிஞ்சிருக்காதுதான்... இல்லைன்னா அம்மா இத்தனை மணி நேரம் தூங்க விட்டிருப்பாங்களா? என்னமோ போ... ஒழுங்கா நீ போய் ஆபீசுக்குக் கிளம்பு...' என்று மனதோடு சொல்லியபடி,

அவர்கள் உள்ளே வர வழி விட்டவள், விஜய்யை மட்டும் விட்டு விட்டு, மற்றவர்களை வரவேற்பது போல் தலையை மட்டும் ஆட்டியவளாய் நிற்க, அதில் அவனது இளைய தம்பி மட்டும் அவளின் செய்கைகளில் புன்னகை காட்டி அவளது வரவேற்பை ஏற்க, அவனைப் பார்த்துச் சினேகமாய்ப் புன்னகைத்து வைத்தாள் தீக்ஷா.

'அண்ணியோட மூணாவது அண்ணா பேர் என்ன...? தன் மூளையைத் தட்டி அதற்குக் கட்டளை பிறப்பிக்க, அதுவும் அதன் வேலையை மறக்காமல் செய்து, உடனே யுகேந்தர் என்று அவளுக்குச் செய்தி அனுப்ப, இப்போது தீக்ஷா, என்ன பட்டப் பேர் வெச்சோம்...' என்று யோசித்தவள், அடுத்த நொடி,

"ஸ்வீட் பாய் யுகி... நீ தீக்ஷாவைப் பார்த்துச் சிரிச்சிட்டே... சோ, தப்பிச்சே...!" என்று தன் அறைக்குள் போனவள், அடுத்த அரை மணி நேரத்தில் அலுவலகம் போகக் கிளம்பி ஆயத்தமாகி இருந்தாள்.

பேசிக் கொண்டிருந்த யாரையும் கவனிக்காமல், "அம்மா, பசிக்குது. தோசை போட்டு வெச்சிருக்கீங்களா?" என்றபடியே வெளியே வர,

ஏற்கெனவே விஜய் குடும்பம் சொல்லாமல் வீட்டிற்கு வந்த கலக்கத்தில் இருந்த ஜெயந்தி, இவளின் பேச்சில் கடுமையாக முறைக்க,

'ராங் டைம் ஆகிப் போச்சோ...!' என்று தாயின் கடுமையில் விழித்தவள், "சரி... நான் ஆபீஸ்லேயே பார்த்துக் கொள்கிறேன்..." என்றவள், அனைவரிடமும் விடைபெற்றபடி வெளியேறினாள்.

அப்போதுதான் ஜெயந்தி கவனித்தார்...

அது என்னவென்றால், அவள் துப்பட்டா போடாமல் போவதை. ஆனால், வந்திருந்த பிள்ளை வீட்டாரின் முன் கூப்பிட்டுச் சொல்ல முடியாமல் விட்டவர், 'இன்னைக்கு ஈவ்னிங் வரட்டும்... இருக்கு அவளுக்கு...' என்று மனதில் வசை பாடியபடி செல்வியோடு பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது தீக்ஷா மீண்டும் மேலே வந்தாள். மறந்த துப்பட்டாவை எடுக்கத்தான் வந்தாள். இல்லை என்றால், இன்று மாலை திரும்பி வரும்போது தன் அன்னை ஒரு



மண்டகப்படி வைத்து விடுவாள் என்று தெரியாதா அவளுக்கு...?

உள்ளே நுழைந்தபோதே, அவள் துப்பட்டா விஜய் உட்கார்ந்திருந்த சோபாவின் பக்கம் தொங்கியபடி இருந்தது கண்ணில் பட, விஜய் அதன் மீது சாய்ந்து அமர்ந்திருந்ததால் அதை எடுக்க முடியாமல்,

"எக்ஸ்க்யூஸ் மீ... என்னோட துப்பட்டா அங்கே இருக்கு... எழுந்திட்டீங்கன்னா நான் எடுக்க வசதியா இருக்கும்... இல்லை, நீங்க எடுத்துத் தந்தாலும் ஓ.கே.தான். சாரி..." என்று கேட்க,

அவள் சொன்ன வுடனே விஜய் சட்டென்று எழுந்து நிற்க,

'ஏன், துரை அதை எடுத்துத் தந்தா கொறைஞ்சு போயிடுவாரா? என் துப்பட்டாவைக் கையில் தொட மாட்டாராமா...! நான் சுற்றிப் போய் எடுக்க வேண்டும்.... நடக்க வைக்கிறானே...' என்று மனதுக்குள் திட்டியவள், அதை மறைத்து அவனிடம் புன்னகை பூசிய முகத்தைக் காண்பிக்க,

அந்தப் புன்னகை கூடத் தனக்குத் தேவை இல்லை என்பது போல் அவன் முகம் கல்லாய் இருப்பதை உணர்ந்த தீக்ஷா, தன் புன்னகையைச் சட்டென்று சுருக்கி, அவனின் மேல் படாமல் தன் துப்பட்டாவை எடுத்தவள், அதை அணிந்து கொண்டே கதவின் அருகே சென்றவள், மீண்டும் திரும்பிப் பார்க்க, மொத்தக் குடும்பமும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆனால், அவள் விஜய்யை மட்டும் பார்த்து அவனிடம், "தேங்க்ஸ்..." என்றவள், தன் துப்பட்டாவைத் தொட்டுக் காண் பித்து, "அட்லீஸ்ட் இதை எடுக்கவாவது வழி விட்டீங்களே... அதுக்குத்தான் இந்தத் தேங்க்ஸ்... பை...!" என்று சொல்லிய படி தன் ஹீல்ஸை மாட்டியபடி படிகளில் இறங்கினாள்.

**கி**ட்டத்தட்ட ஒரு மாதம் முடிந்திருந்தது. அதன் பிறகு அவளுக்கு விஜய்யைச் சந்திக்கும் வாய்ப்பே கிடைக்கவில்லை.

அதே நேரம்... ப்ரதீபனும் இந்தியா வர, ப்ரதீபன் - ராதா திருமண வேலைகள் ஜரூராய் நடக்க, இருபுறமும் திருமணம் களை கட்டத் தொடங்கியது.

விஜய்க்கு மட்டும் இந்தத் திருமணத்தில் கொஞ்சம் கூட இஷ்டமில்லாமல் இருக்க... எல்லா வேலைகளிலும் இருந்து ஒதுங்கியதால்,

சுரேந்தருக்குப் பிடிக்கவில்லை என்றாலும், அவன் தான் தீக்ஷா வீட்டிற்கு வந்து போய் எல்லா வேலையையும் பார்த்து வந்தான். ஆனால், அவனும் தீக்ஷாவிடம் தன் அண்ணனைப் போலவே பேச மாட்டான்.

யுகேந்தரும் அவ்வப்போது அவர்கள் வீட்டிற்கு வந்து போக இருந்து வந்தான். யுகேந்தர் எந்தவிதப் பந்தாவும் இல்லாமல் தீக்ஷாவோடு ஓரளவு பழகி வர, அவர்கள் குடும்பத்தில் ராதாவுக்கு அடுத்து யுகியைப் பிடித்துப் போனது தீக்ஷாவுக்கு.

**எ**க்ஸ்பிரஸ் அவென்யூவுக்கு தீக்ஷா, தன் அலுவலகத் தோழிகளோடு வந்திருந்தாள். அப்போது யுகேந்தர், தரைத் தளத்தில் ஒரு பெண்ணோடு பேசியபடி நிற்க, அவனைப் பார்த்தவள், ஆர்வக் கோளாறில் மூன்றாவது மாடியில் இருந்து அவனோடு பேசக் கீழே இறங்கி வந்து விட்டாள்.

ஆனால், கீழே வந்தவள், பேசிக் கொண்டிருந்த இருவருக்கு இடையில் போகாமல் சற்றுத் தயங்கி நின்று, 'போகலாமா, வேண்டாமா?' என்று யோசித்துக் கொண்டிருக்க, அவனோடு பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணும் அவனை விட்டு விடைபெற்றுக் கிளம்பினாள்.

உடனே யுகேந்தர் பின்னால் சத்தமில்லாமல் போய் நின்ற தீக்ஷா, "என்ன பாஸ்... எப்படி இருக்கீங்க?" என்ற போது, யுகேந்தர் பட்டென்று அதிர்ச்சியில் திரும்ப,



"ஏன்...? என்ன ஆச்சு? இப்படி ஒரு ரியாக்ஷன் ஏன்?" என்றவளிடம்,

"தீக்ஷா... நீங்க எங்கே இங்கே...?" என்று அவளைப் பார்த்த அதிர்ச்சியில் படபடப்பாய் வினவ,

"ஏன்... உங்க மாதிரி ஸ்டேட்டஸ் இருக்கிறவங்க மட்டும் தான் இந்த ப்ளேஸுக்கு வரணுமா என்ன...?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்க,

இப்போது யுகேந்தரும் நார்மல் ஆகி, "கம் ஆன் தீக்ஷா... அண்ணா அப்படிச் சொன்னதுனால என்னையும் அப்படி எடுத்துக்காதீங்க... நான் டோட்டலா வேற...!" என்ற போதே,

"டோட்டலா வேறன்னா...? புரியலை. என்னமோ போங்க... ஆனா உங்க வீட்ல ராதா அண்ணியும் நீங்களும் மட்டும் விதிவிலக்கு. உங்க ரெண்டு பேரையும் எனக்குப் பிடிச்சிருக்கு..." என்று பட்டென்று சொன்னவள்,

"யாரு அந்தப் பொண்ணு...?" என்று கண் சிமிட்டிக் கேட்க,

"ஹேய்... தீக்ஷா... நீ பார்த்துட்டியா?" என்றபோதே,

"ம்ம்... என்ன, லவ்வா...?" என்று கேட்க,

"அம்மா தாயே... என் அண்ணனுக்கு மட்டும் தெரிஞ்சுது... வெட்டிப் போட்டுருவாங்க..." என்று அலற,

"அப்போ ஃபிரெண்ட்டா...?" என்று விடாமல் கேட்க,

"ஒண்ணு அத்தான்னு கூப்பிடு... இல்ல, பேர் சொல்லிக் கூப்பிடு..." என்று தானாய் உரிமை எடுத்து, அவளுக்கும் தானாய் உரிமை வழங்கிய யுகேந்தர், அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்த காபி டேயில் அமர்ந்தான்.

"அத்தானா...! அது ஓல்ட் பேஷன்... யுகி. ஓ.கே.வா?" என்றபோதே,

"அதெல்லாம் ஓ.கே.தான். வாடா போடான்னு மட்டும் சொல்லி விடாதே! உன் அண்ணனை நீ அப்படிக் கூப்பிடறதுக்கே எங்க வீட்ல மொத்து வாங்கிறே..." என்றவனிடம்,

"யாரு... யாரு...?" என்று எகிறியவள், "உங்க விருமாண்டி சும்மா சும்மா என் லைன்ல க்ராஸ் பண்றாரு. அன்னைக்கு வீட்டுக்கு வந்து, எங்க வீட்டை ரொம்பக் கேவல மாப் பார்க்கிறாரு. எங்களுக்கும் எங்க நேட்டிவ்ல சொந்த வீடு இருக்கு... சொத்தெல்லாம் இருக்கு... சொல்லி வையுங்க யுகி அவர் கிட்டே..." என்றபோதே ஞாபகம் வந்தவளாய்,

"பேச்சை மாத்தாதீங்க... யாரு அந்தப் பொண்ணு? சொல்லுங்க... சொல்லுங்க..." என்று கொஞ்சலாயும், கெஞ்ச லாயும் கேட்க,

"சொல்றேன்... சொல்றேன்... நான் லவ் பண்ற பொண்ணுதான். பேரு ஆர்த்தி..." என்றவனிடம்,

"ஓ...!" என்று இழுத்தவள், அதே இழுவையில், "ஆனா உங்க அண்ணா சாமியாடுவாரே...!" என்று சொல்ல,

"சாமியாட்டமா...? உலகத்தில் என்னென்ன ஆட்டம் இருக்கோ, அத்தனை ஆட்டமும் ஆடுவாரு...!" என்று துக்கத்திற்குப் போக,

"கஷ்டம்தான்... ஆனாலும் உங்க அண்ணனை நினைச்சாலே காதல்னா காத தூரம் ஓடணும் நீங்க எல்லாம். எப்படித்தான் லவ் பண்ண ஆசை வந்ததோ? பாருங்க... எங்க அண்ணி வழியே இல்லாமக் கடைசியில விஷத்தைக் கையில் எடுத்துக் காரியம் சாதிச்சிட்டாங்க... அவங்க பொண்ணு. அந்த ஆயுதத்தைக் கையில் எடுத்தாங்க. ஆனா பாவம், நீங்க பையனாப் போயிட்டீங்க... அது கூட உங்களால பண்ணி விருமாண்டியை மிரட்ட முடியாது," என்று உதட்டைச் சுழித்த வளிடம்,



"பார்க்கலாம்... இன்னும் டைம் இருக்கு. அவ இப்போதான் காலேஜ் படிக்கிறா... எங்க வீட்ல எனக்கும் முன்னால ரெண்டு பேர் இருக்காங்க..." என்றபோதே,

"பேசாம விருமாண்டிக்கு ஒரு பொண்ணைப் பார்த்துச் சட்டுப் புட்டுன்னு முடிச்சி வெச்சிடுங்க. பொண்டாட்டி வந்தா நம்மளை எல்லாம் கண்ணுக்குத் தெரியாது. நாமளும் பி ஹேப்பி ஆகிடலாம்..." என்றவளிடம்,

விஜய்யை அவள் விருமாண்டி என்று அழைத்ததை இப்போதுதான் யுகியும் உணர்ந்தான்.

"அடிப்பாவி... எங்க அண்ணாதான் உனக்கு விருமாண்டியா?" என்று அலறியவன்,

"அவருக்கு மட்டும் தெரிஞ்சுது... செத்தே...!" என்றவனிடம், அலட்சியமாய்த் தோளைக் குலுக்க,

இப்போது விழி தெறித்த பார்வையுடன் எழுந்தான், யுகேந்திரன்.

தீக்ஷாவுக்குப் பின்னால் விஜயேந்தர் நிற்க,

"என்ன... விருமாண்டியைப் பார்த்த மாதிரியே முழிக் கிறீங்க...?" என்றபடியே திரும்ப,

'ஆஹா... தீக்ஷா, உனக்கு ஆப்பு வெளியில இல்லடி... வாயேதான்டி... கடவுளே! சும்மாவே நம்மளை இவன் மணப்பான்... எப்போ வந்தான் பய புள்ள...? அவ னுக்கு ஜோடி சேர்த்து வைக்கும்போதே வந்து விட்டானா...?' என்று மனதில் பயந்தாலும், வெளியில் இயல்பாக இருப்பது போல அவனைப் பார்த்துச் சிரித்து வைக்க,

ஆனால், அவனோ அவளையே கண்டு கொள்ளாமல், "என்னடா பண்றே இங்கே...? வெட்டியா ஊரைச் சுத்திட்டு இருந்தே... இப்போ இது வேறயா...?" என்று அலட்சியமாய்த் தீக்ஷாவைப் பார்த்துப் பின் யுகேந்தரையும் பார்த்து வைக்க,

யுகேந்தரின் மிரண்டு விழித்த பார்வையைப் பார்த்த தீக்ஷாவுக்குச் சிரிப்பு வந்தாலும், இதழை மூடிச் சிரிப்பை அடக்கிக் கொண்டவள்,

"யுகி... பை... என் ஃபிரெண்ட்ஸ் தேடுவாங்க..." என்றபடி நகர்ந்தபோதே விஜய்யின் அதிர்ந்த முகத்தைப் பார்த்தவள்,

தான் யுகேந்தரை 'யுகி' என்று சுருக்கிச் சொன்னதால் வந்த அதிர்ச்சி என்று யூகித்தவள்,

சற்றுத் தூரம் போனவள், மீண்டும் திரும்பி, "பை... விஜயத்தான்..." என்று கூறி, விஜய்யையும் ஆட்டம் காண வைத்தாள்.

"சாரி விஜய் அத்தான். யுகிதான் அத்தான்னு கூப்பிடச் சொன்னார். அவரைக் கூப்பிட இஷ்டம் இல்லை அத்தான்... அதனால உங்களைக் கூப்பிடறேன் அத்தான்..." என்று விஜய்யை ஆயிரம் முறை அத்தான் போட்டு, யுகியை அவனிடம் மாட்டி விட்டது மட்டுமில்லாமல், தன் அண்ணனிடம் மாட்டிப் பரிதாபமாய் விழித்துக் கொண்டிருந்த யுகேந்தரைப் பார்த்துக் கண் சிமிட்டவும் செய்து... விஜய்யின் கோபப் பார்வை அவளைத் தீண்டாமல் சிட்டாகப் பறந்தாள் தீக்ஷா.

## 6

பிரதீபன் – ராதா திருமணம் இன்னும் ஒரு வாரமே இருக்க... தீக்ஷா, விஜய் வீட்டிற்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் மட்டும் அல்ல, அவள் குடும்பமே... திருமணத்திற்குத் தேவையான நகை மற்றும் புடவை எடுக்க... தீக்ஷா இத்தனை நாட்களில் எப்படியோ விஜய் வீட்டிற்குச் செல்லாமல் தவிர்த்து வந்தாள். இந்த முறை அவளால் தவிர்க்க முடியவில்லை.

சுடிதாரோடு வெளியில் வந்தவளை, ஜெயந்தி முறைக்க ஆரம்பித்தார்.



"என்னடி டிரெஸ் இது? புடவை கட்டிட்டு வா. அங்கே ராதா கூடப் புடவைதான் கட்டுறா... நீ கழைக்கூத்தாடி மாதிரி டிரெஸ் போடாதே."

"அம்மா... ஓவரா பண்றீங்க. சுடிதார் போட்டா கழைக்கூத்தாடியா? டேய் அண்ணா... நீ பண்ணின லவ்வ எனக்குத்தான்டா இம்சை. ராதாவுக்கு என்ன அடக்கம்... என்ன குணம்... என்ன பொறுமைன்னு என்னை ரொம்பச் சோதிக்கிறாங்க..." என்று பொரும ஆரம்பிக்க,

"தீக்ஷா... புடவை கட்டிட்டு வான்னா வா...!" என்று பிரதீபனும் தாய் மொழியை வழி மொழிய, இப்பொழுது தீக்ஷா தன் தந்தையைப் பார்க்க,

அவரோ, "போம்மா தீக்ஷா... எதுக்கெடுத்தாலும் பிரச்சினை பண்ணிட்டு நிக்காதே!" என்று சொல்ல,

வேறு வழியின்றித் தன் பீரோவில் இருந்து, தனக்குப் பிடித்த அடர் பிங்க் நிற டிசைனர் சேலையை எடுத்துக் கட்டப் போனவளை, அவள் தாய் தடுத்தார்.

"இந்தப் புடவை வேண்டாம், தீக்ஷா. வேற கட்டு..." என்றவரிடம்,

"ஏன்மா... இது எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்லா இருக்கும்மா..." என்று பிடிவாதம் பிடித்து, அதைப் பிரிக்க ஆரம்பிக்க,

"இதைக் கட்டின அன்னைக்குத்தான் நீ பைக்ல இருந்து கீழே விழுந்துட்டே... வேணாம்டா... என்னமோ, இந்தப் புடவை ராசியில்லைன்னு படுது. முதன் முதலில் திருமணத்திற்குப் புடவை எடுக்கப் போறோம்..." என்று பதமாய்ச் சொல்ல,

அவள் அன்னை என்றைக்காவதுதான் இப்படிப் பதமாகப் பேசுவார் என்பதால், "ஓ.கே. அப்போ என்ன புடவை கட்ட...?" என்று தன் தாயிடம் கொஞ்சிய மகளுக்கு வேறு

ஒரு புடவையை எடுத்துக் கொடுக்க, மறுத்துப் பேசாமல் அதைக் கட்டியபடியே,

"அம்மா... நான் எதுக்கும்மா அங்கே? நீங்க மட்டும் போயிட்டு வாங்களேன்... இல்ல, எந்தக் கடைன்னு சொன்னா அங்கே வந்து நிக்கிறேன்... எனக்கு என்னமோ அந்த விருமாண்டியையே பிடிக்கலைம்மா... அவன் வீட்டுக்குப் போனா, நம்மைப் பிச்சைக்காரங்க அவன் வீட்டுக்கு வந்த மாதிரியே பார்ப்பான்..." என்று சொல்ல,

"உன் வாயை அடக்கு தீக்ஷா... இனிமேல் அவங்க நம்ம வீட்டுக்கு வருவதையும், நாம அவங்க வீட்டுக்குப் போவதையும் தவிர்க்க முடியாதும்மா..." என்று சொல்ல,

"அவன் மட்டும் நம்ம வீட்டுக்கு வருகிறானா...? அவங்க அப்பா, அம்மா..." என்றபோதே, தாயின் முறைப்பில்...

"சரி. அத்தை, மாமா, யுகி... அப்புறம் அந்தத் தலை வாசல் விஜய் கூட முறைத்தபடின்னாலும் நம்ம வீட்டுக்கு வருகிறார்கள். துரைக்கு மட்டும் வழி தெரியலையோ...?" என்று தன் ஆதங்கத்தைக் கொட்ட,

"அந்தத் தம்பி ஒரு தடவைன்னாலும் வந்துச்சு... நீ அது கூடப் பண்ணலை..." என்று மகளை வேகமாகக் கிளம்பி வரச் சொல்லி வெளியேறினார்.

தன்னை ஒரு முறை கண்ணாடியில் பார்த்தவள், தன்னையே சுற்றிப் போட்டவளாய்,

'அழகு தீக்ஷா நீ... செல்லக்குட்டி... பட்டுக்குட்டி... புடவைல சூப்பரா இருக்க அம்முக்குட்டி...' என்று தனக்குத் தானே கொஞ்சியவளாய்க் கண்ணாடியில் முத்தம் வைத்தவள், 'கொடுத்து வெச்சவன்டி உன்னைக் கட்டிக்கப் போறவன்...!' என்று கண்ணடித்தவளாய் வெளியேறினாள்.



காரை விட்டு இறங்கிய தீக்ஷா, அந்தப் பிரமாண்ட பங்களாவைப் பார்த்து அதிர்ந்தாள்தான். விஜய் குடும்பம் வசதி படைத்தவர்கள் என்று தெரியும்... ஆனாலும் ஏதோ கொஞ்சம் தங்களை விட வசதி ஆனவர்கள் என்ற நிலை மையில்தான் வைத்திருந்தாள். கொஞ்சம் சங்கடமாய் அவளுக்கே தோன்றியது போல இருந்தது. விஜய் தங்களைப் பார்க்கும் பார்வைக்கு அர்த்தம் இருப்பது போல் விளங்க, அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

கொஞ்சம் தடுமாறியவள், 'நாமளா அவன் தங்கச்சி மனசைக் கெடுத்தோம்...? அவளுக்கே அறிவு இருக்க வேண்டும்...' என்று யோசித்தவளுக்கு இன்னொன்றும் தோன்றியது.

தன் அண்ணனைத் தங்களிடமிருந்து பிரித்து விடுவார்களோ என்று... சற்றுக் கண் கூடக் கலங்கி விட்டது. இருந்தும் யாரும் அறியாமல் துடைத்தவள்... மீண்டும் சகஜமாகினாள்.

அவர்களின் செல்வ நிலை அவளுக்கு ஆச்சரி யத்தைக் கொடுத்த வகையில் சஞ்சலமும் தர... அமைதி யாகவே வந்தாள் தீக்ஷா. தன் தாயினை ஒட்டியே நடந்து வந்தவள்... தன்னை அறியாமல் மேலே பார்க்க... விஜய் அவர்களைப் பார்த்தபடியே மேலே நின்றிருந்தான். பார்வையில் வழக்கம் போல் அலட்சியமும்... கைகளில் சிகரெட்டும் இருக்க... அவனைப் பார்க்க முடியாமல் தடுமாறியவளாய்...

'சிகரெட்டை எடுக்கிறானா... அப்பா, அம்மா பார்த்தா என்ன நினைப்பாங்க... இந்தப் பழக்கமெல்லாம் இவனுக்கு இருக்கா?' என்று மனதினுள் நினைத்தபடியே... வேறு புறம் திரும்ப எத்தனித்தவள்... கால் தடுமாறிக் கீழே விழ, பிரதீபன் பிடிக்குமுன் மடங்கி உட்கார்ந்து விட்டாள்.

அழுகையே வந்து விட்டது அவளுக்கு. அதுவும் விஜய் முன்... வந்த கோபத்தில் தன் தாய் மீதே எரிந்து விழுந்தாள்.

"பெருசா அந்தப் புடவை கட்டுனா ராசி இல்லன்னு சொன்னீங்க. இது மட்டும் என்ன வாழுதாம்?" என்று கத்த ஆரம்பிக்க...

அவள் தாயோ, "புடவை எடுக்க வரும்போது அபசகுனமா இருக்கே...!" என்று வாய் விட்டுச் சொல்ல...

இப்போது தீக்ஷா எழாமல் தன் தாயைப் பார்த்து முறைக்க...

அவள் தாய் இன்னொரு விசயத்தை மறந்தாள். தன் மகள் இந்த வீட்டிற்குள் முதன் முதலாய்க் காலடி எடுத்து வைக்கும்போதே, அபசகுனமாய் விழுந்து விட்டாள் என்பதை...

ஆனால் அதை யாரும் நினைக்கவில்லை. ராதா - ப்ரதீபன் திருமணம்தான் அவர்கள் நினைவில் இருந்தது. அதில் ஏதாவது தடங்கல் வருமோ என்றுதான் நினைத்தனர்.

"தீக்ஷா, எழுந்திரு. இது நம்ம வீடு இல்லை..." என்று சொன்ன பிரதீபனிடம்,

"ஏன் அண்ணா... உன் புகுந்த வீடு முன்னால அசிங்கமாகிடக் கூடாதா...?" என்று சொல்லியபடி, மீண்டும் நிமிர்ந்து பார்க்க... விஜய் அப்போதும் அங்குதான் நின்றிருந்தான். முதலில் பார்த்த நிலையிலேயே தானிருந்தான்.

'நான் வர மாட்டேன்னு சொன்னாக் கேட்காம கூட்டிட்டு வந்து... இவன் முன்னால வேற விழ வச்சுட்டாங்க...' என்று மனதுள் நொந்தபடி எழுந்து உள்ளே வர.

அங்கு... திருமணத்திற்குத் தேவையான அத்தனை புடவையும்... நகையும் கடை விரிக்கப்பட்டிருக்க... அதைப் பார்த்த தீக்ஷா, இப்போது வாய் பிளக்கவில்லை. தலை வலிதான் மிச்சமாய் இருந்தது. எப்போதடா இங்கிருந்து போவோம் என்றிருந்தது.



ஒரு வழியாய்ப் புடவை மற்றும் நகைத் தேர்வுகள் முடிய... தனக்கென்று எதையும் தேர்ந்தெடுக்கப் பிடிக்காமல்... தனக்கும் சேர்த்துத் தன் தாயையே எடுக்கச் சொல்லியவள்... ராதாவை ஒரு நிமிடம் பார்த்தாள்.

ராதாவின் முகமெங்கும் சந்தோசம் மட்டுமே இருக்க... அவளின் இந்த வாழ்க்கையைத் தன் அண்ணனால் தர முடியுமா என்று நினைக்கும்போதே... அதுவும் அரசாங்கம் தந்த தங்கள் இல்லத்தில்... நினைக்க... அவளுக்கே மூச்சு முட்டியது போல் இருந்தது.

அப்படி என்ன காதல்... தன் அண்ணன் மேல் அவளுக்கு... இந்த வாழ்க்கை தராத எதைத் தன் அண்ணன் அவளுக்குத் தந்தான்? புரியவில்லை. அதுவும் விஷம் குடிக்கும் அளவுக்குப் போராடித் தன் காதலில் வென்ற அவளைப் பார்த்த தீக்ஷா மனதில்... ராதா முதன் முதலாக எங்கோ உயர்ந்தாள். அவள் தன் அண்ணன் மேல் கொண்ட காதலில்... தன் அண்ணன் ஒரு ஹீரோ போல் தெரிய... அவனைப் பெருமையாகப் பார்த்தாள் தீக்ஷா.

அவள் அண்ணியை ஏற்கெனவே அவளுக்குப் பிடிக்கும்தான். இப்போது மிகவும் பிடித்துப் போக...

மனதில் மட்டும்... 'காதல் வந்தால்... எல்லாமே பின்னால் போய் விடுமா...!' என்ற ஆச்சரியம்தான் தோன்றியது.

பின் தன் அண்ணாவிடம், "நீ கொடுத்து வச்சவன்டா... அண்ணி உனக்கு அதிகம்தான். எப்படிண்ணா... இப்படி ஆளைக் கவுத்த...?" என்றபடி கிண்டல் செய்ய, பிரதீபன் தன் மனம் கவர்ந்தவளைப் பெருமையாய் நோக்க... அவளோ அவனின் பார்வையை வாங்கி வெட்கத்தில் சிவக்க... அங்கு

ஒரு திரைப்படமே ஓட... தீக்ஷாவும் இப்போது ஃபார்முக்கு வந்திருந்தாள்.

யுகியும் அவள் பக்கத்தில் வந்து அமர...

"யுகி... தாங்க முடியலை, இந்தக் கொசுத் தொல்லையை!" என்று சொல்ல...

யுகியும் அவளுக்கு ஹைஃபை கொடுத்தான்... ஆமோதிப்பது போல்.

இப்போது ப்ரதீபன் வைத்த கண் வாங்காமல் ராதாவையே பார்க்க... அவர்களை விட்டு விட்டு...

இப்போது யுகியிடம் மட்டும் அவன் காதில்... "உன் ஆர்த்திகிட்ட நீ கூட இந்தப் படத்தைத்தானே ஓட்டுவ... நீயும் அந்தக் கூட்டம்தானே... பிறகு என் கூட ஜால்ரா அடிக்கிற..." என்று அவனைத் தாக்க... யுகி அசடு வழிய...

"ராதா அண்ணியும்... நீயும் கமுக்கமா இருந்துகிட்டே அத்தனை கோல்மால்... வேலையும் பார்க்கிறீங்க... உங்களுக்கு மூத்ததுங்க ரெண்டும் வேஸ்ட்..." என்று தலையில் அடித்தாள்.

அப்போது அங்கு விஜய் வர... யுகேந்தர் தீக்ஷாவை விட்டுத் தள்ளி அமர்ந்தான்.

தீக்ஷா, "என்ன யுகி, அங்கே போயிட்டீங்க...? எனக்கு போரடிக்கும்..." என்றபடி, அவளும் அருகே போய் அமர்ந்து விட்டாள்.

"தீக்ஷா, என்னை அடி வாங்காம விட மாட்ட போல... என் அண்ணா எனக்கு இன்னைக்கு அட்வைஸ் மழைதான் பொழியப் போறாரு... அன்னைக்கு இ.ஏ.-ல பார்த்துட்டே காதுல ரத்தம் வருகிறவரை பேசித் தள்ளிட்டாரு..." என்றவன், பேசியபடியே விஜய்யைப் பார்க்க... அங்கு என்ன விசயம் பார்வையால் பரிமாறப்பட்டதோ... எழுந்து அவனருகே வந்து அமர்ந்தான் யுகேந்தர்.



"பொறுக்காதே விருமாண்டிக்கு..." என்றபடி வேண்டுமென்றே, "விஜய் அத்தான்..." என்றழைக்க,

அவன் நிமிர்ந்தே பார்க்கவில்லை. அவனை வம்பிழுக்கவே அப்படி அழைத்தாள்.

யுகேந்தர் பார்வையாலே அவளைச் சும்மா இருக்கும்படி சொல்ல... அதை லட்சியம் செய்யாதவளாய், "விஜய் அத்தான்..." என்று மீண்டும் அழைக்க... அப்போது அருகில் பழரசம் கொண்டு வந்த வேலையாளின் கன்னங்களில் அறை விழுந்தது, விஜய்யின் கையால்... அவளுக்குக் கிடைப்பதற்குப் பதிலாக.

"பிடிக்கலைன்னு சொன்னா விடணும்... சும்மா என்னை டார்ச்சர் பண்ணின... காலி பண்ணிடுவேன்..." என்று சொன்னவன், அதோடு விடாமல் அவளிடமும் பாய்ந்தான்.

"ஏய்... இந்த அத்தான் பொத்தான்லாம் இவனோட நிறுத்திக்க..." என்று யுகேந்தரைக் காட்டியவன்...

"என்னை அத்தான்லாம் கூப்பிட ஒரு தராதரம் வேண்டும். அது உனக்குல்லாம் இல்லை..." என்றபடி, மீண்டும் மாடிப் படி ஏற...

இப்படி எல்லோர் முன்னிலையிலும் பேசி விடுவான் என்று நினைத்துப் பார்க்காத தீக்ஷா, தன் விளையாட்டுத் தனத்தால் அசிங்கப்பட்டுப் போனாள். கண் கலங்க, அதை மறைக்கத் தலையைக் குனிந்து விட்டாள்.

அங்கிருந்த அத்தனை பேரும் அதிர்ச்சியில் உறைந்திருக்க,

தீபனுக்கு, அவன் பேச்சு அவன் தன்மானத்தை அசைக்க, அவனுக்கும் கோபம் வர, விஜய்யிடம் கோபமாகப் பேசப் போக, கலைச்செல்வி பேச ஆரம்பித்தார் - அதுவும் தீக்ஷாவுக்கு ஆதரவாக.

"விஜய்... இங்கே வா! அந்தப் பொண்ணு என்ன சொன்னான்னு இப்படிப் பேசுறே? உன்னை அப்படித்தானே கூப்பிட வேண்டும். நம்ம பொண்ணையே அவங்க வீட்ல கொடுக்கிறோம் என்கிற போது, நம் தராதரம் என்னவோ, அதற்குக் கொஞ்சம் கூடக் குறையாதவங்கதான் அவங்களும். இனி, அவ அப்படித்தான் கூப்பிடுவா..." என்றபோது, ஓடி வந்து கலைச்செல்வியைக் கட்டிப் பிடித்த தீக்ஷா,

"தேங்க்ஸ் அத்தை..." என்றாள் கண்களைத் துடைத்தபடியே. கலைச்செல்வியே சப்போர்ட் பண்ணி விட்டார் எனும்போது விஜய்யைச் சும்மா விடுவாளா என்ன?

"விஜய் அத்தான்... எங்க அத்தை சப்போர்ட் எனக்கு இருக்கே...! நீங்க ஒண்ணும் பண்ண முடியாதே அத்தான். விஜயேந்தர் அத்தான்... விஜய் அத்தான்... எது ஓ.கே.?" என்று சந்தோஷமாய் அவனைக் கிண்டல் அடிக்க, அவனும் திரும்பியே பார்க்கவில்லை என்பதால், கடைசிப் படி ஏறும் வரை அழைத்து, அவனைக் கடுப்பேற்றித் தான் சற்று முன் பட்ட வேதனையைத் தீர்த்துக் கொண்டாள்.

விஜய் கோபமே அவளை ஒன்றும் செய்யவில்லை எனும்போது, ஜெயந்தி முறைப்பெல்லாம் தீக்ஷாவைத் தொடுமா என்ன...?

அடுத்து சுரேந்தர் தன் அண்ணன் பின்னே போக, 'இவரு பெரிய லட்சுமணர். அவரு ராமர்... பேய் விருமாண்டி, உனக்கு எத்தனை பேர்டா வைக்கிறது...?' என்றபடி,

சுரேந்தரையும் விட்டு வைக்காமல், "சுரேந்தர் அத்தான்..." என்று அழைக்க, கொஞ்சம் சுதாரித்தான் சுரேந்தர். நின்று பார்க்கவில்லை என்றால், என்னவென்று கேட்கவில்லை என்றால், தன் பெயரும் ஏலம் விட்ப்படும் என்று உணர்ந்தவன்,

நின்று, "என்ன தீக்ஷா...?" என்று வாய் திறக்க,



"சும்மா கூப்பிட்டுப் பார்த்தேன்..." என்றபடி அவனை விட்டு விட்டாள்.

அன்று தீபன் காதல் மயக்கத்தில் இருந்ததினாலோ என்னவோ, விஜய்யின் பேச்சு அந்த அளவு அவனைப் பாதிக்கவில்லை.

அதன்பிறகு ராதா, செல்வி, யுகேந்தர் என ஓரளவு ஐக்கியமாகி விட, அந்தக் குடும்பத்தில் கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்தாள் தீக்ஷா. விஜய், சுரேந்தர் மட்டுமே விலகி நின்றனர்.

வரும்போது அவள் கண்களுக்குப் பிரமாண்டமாய்த் தெரிந்த அந்தப் பங்களா, அதை விட்டுக் கிளம்பும்போது சாதாரணமாய் ஆனது. ஓரளவு தெளிந்து இருந்தாள் தீக்ஷா.

**தி**ருமண நாளும் வந்தது.

பிரமாண்டமாய் நடந்து கொண்டிருந்த ப்ரதீபன் – ராதா திருமணத்தைப் பார்த்த தீக்ஷா வீட்டு உறவினர்கள் மூக்கில் விரல் வைக்க,

தீக்ஷாதான் சமாளிக்க முடியாமல் திணறினாள். அவள் தாய், ராதாவின் அன்னையோடு நின்று கொள்ள, இவர்கள் கேட்ட கேள்விக்கெல்லாம் பதில் சொல்லிச் சமாளித்து வருவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

இதில் அவள் தாயும் அவளிடம், 'அதை எடுத்து வா, இதை எடுத்து வா...' என்று கட்டளை இட்டுக் கொண்டே இருக்க, யுகேந்தரைத் தனக்குத் துணையாக வைத்துக் கொண்டாள். அவனை அவள் விடவே இல்லை.

"தீக்ஷா... என் பிரெண்ட்ஸெல்லாம் வந்திருக்காங்க..." என்று கிளம்ப எத்தனிக்க,

"யுகி... ஆர்த்தி வரலையா...?" என்று தீக்ஷா ஞாபகம் வந்து கேட்க,

சட்டென்று அவள் வாயைப் பொத்தினான் யுகேந்தர். மேடை என்று கூடப் பார்க்காமல், அவளும் அவன் கையைப் பற்றி, அதை எடுத்தபடியே,

"அட்லீஸ்ட் என் பிரெண்டுன்னு சொல்லிக் கூட்டிட்டு வந்திருப்பேன்ல... உனக்கும் உன் ஆளை சைட் அடிக்கச் சான்ஸ் கிடைச்சிருக்கும். போடா லூசு...!"

தனிமையில் வாடா, போடா என்று சொல்லும் அளவிற்கு அவர்கள் நட்பு நெருங்கியிருந்தது.

"அம்மா, தாயே.:. அவளை இங்கே எல்லோருக்கும் தெரியும். என் அண்ணா... அதுதான் உன் எனிமி விருமாண்டியோட எனிமியோட தங்கைதான் அந்தப் பொண்ணு. தெரிஞ்சது... அவ்ளோதான்...!" என்றவுடன்,

"ஏன்...? விருமாண்டி கருப்பசாமியா மாறி அருவாளைத் தூக்கிடுவாரோ...?" என்று நக்கலடிக்க, அதே நேரம் அவன் மொபைலும் அடிக்க, பேசியவன், அடுத்த நிமிடம் மேடையை விட்டுக் கீழே இறங்கினான்.

சிறிது நேரத்தில் அய்யர் ஏதோ கேட்க, தீக்ஷா, யுகியைத் தேட, அவன் கண்ணில் சிக்காமல் போக, சுரேந்தரும் விஜய்யும் சற்றுத் தள்ளி நிற்க, அவர்களின் அருகில் போய், "அத்தான்..." என்று பொதுவாய் அழைத்தாள்.

விஜய் திரும்பாமல் நிற்க, சுரேந்தர் மட்டும் திரும்பி, "என்ன...?" என்று கேட்டான்.

"யுகி எங்கே போயிட்டாரு...?" என்று கேட்க,

"அவன் எதுக்கு?" என்று சுரேந்தர் கேட்டபோது, அவன் குரலில் எரிச்சல் இருப்பது புரிய,

'இவன் ஒருத்தன்... அவனை வெச்சு நான் என்ன பண்ணப் போறேன்... அவன் எதுக்காம்னு ஒரு கேள்வி. அண்ணனுக்குத் தப்பாத தம்பி...' என்று எரிச்சலோடு மனதுக்குள் சுரேந்தரை அர்ச்சித்தபடி,



"அய்யர் ஏதோ தேங்காய் வைக்கத் தட்டு வேணுமாம்... பிறகு நெய் வேண்டுமாம்... எடுத்து வரச் சொன்னார். அந்த ரூம் பூட்டிக் கிடக்கு... சாவி யார் கிட்டே இருக்குன்னு தெரியலை. யுகியிடம் கேட்கலாம் என்று தேடுகிறேன்..." என்று சுரேந்தரிடம் சொன்னவள்,

"இப்போ பதில் கிடைத்து விட்டதா... யுகியை நான் ஏன் தேடுகிறேன் என்று...!" எனச் சுரேந்தரிடம் சொல்லி, விஜய்யை ஒரு பார்வை பார்க்க, அவன், அவள் புறமே பார்க்கவில்லை.

'டேய்... நீ பார்க்கவில்லை என்றால், உனக்குக் காது கூடவா கேட்காமல் போகும்...?' என்று மனதுக்குள் நக்கலடித்தாள்.

அப்போது, "சரி, வா!" என்று சுரேந்தர் முன்னே போக, அவனைத் தடுத்து நிறுத்தினான் விஜய்.

அவன் வீட்டு வேலை ஆளை அழைத்தவன், "இவ கூடப் போய், அவ கேட்கிறதை எல்லாம் எடுத்துக் கொடு..." என்றபடி சுரேந்தரைத் தன்னோடு இருத்திக் கொண்டு, அவளை அங்கிருந்து அகற்றினான்.

அதன் பிறகு அவள் மட்டும் தனியாளாய்ச் சுற்ற, யுகேந்தர் அவள் அருகிலேயே வரவில்லை. ஏனென்றும் தெரியவில்லை.

ஆனால், நேரம் ஆக ஆக, அது விஜய்யின் கைங்கர்யம் என்று புரிய, அவனின் கேவலமான புத்தியை நினைத்து அவனை அற்புமாக நோக்க, அவனோ அதைக் கண்டு கொள்ளவே இல்லை.

அதன் பிறகு அனைவரின் அட்சதை ஆசிர்வாதங்களோடு ப்ரதீபன், ராதாவின் கழுத்தில் மங்கல நாணை அணிவிக்க, அது தாலிக் கயிறாக இல்லாமல் தங்கச்

சங்கிலியாகப் போனதால், நாத்தனார் முடிச்சுப் போடும் வேலை இல்லாமல் போனது அவளுக்கு.

தங்கள் வீட்டுச் சொந்தங்களைக் கவனித்தபடி இருந்த தீக்ஷாவை, அவளின் தாத்தா அழைத்து, ஒரு வீட்டினர் முன் அறிமுகப்படுத்தினார்.

"என் பேத்தி தீக்ஷா இவதான்...!" என்று சொல்ல,

"என்னம்மா பண்ற...?" என்று கேட்க,

"சாப்ட்வேர் என்ஜினியரா இருக்கேன், ஆன்ட்டி..." என்றவளிடம்,

"உட்காரும்மா..." என்று கூறி, "அழகா இருக்கேடா... உங்க அம்மா கிட்டே சொல்லிச் சுத்திப் போடச் சொல்லு!" என்று கூறி நெட்டி முறித்தவர், "என் பையனும் அதுலதான் இருக்கான்மா... யு.எஸ்.ல இருக்கான். நெக்ஸ்ட் இயர் வருவான்மா..." என்று சொல்லியவர்,

"உனக்கு யு.எஸ்.லாம் போக இஷ்டமாடா...? உங்க தாத்தா உன்னை என் பையனுக்கு எடுக்கலாம்னு ஆர்வம் காட்டுகிறார்..." என்று ஓவராய்ப் பாசமழை பொழிந்து, நேரடியாக விஷயத்துக்கு வர,

அவஸ்தையாய் நெளிந்தாள் தீக்ஷா.

'தாத்தா...' என்று மனதிற்குள் திட்டியவள், திரும்பித் தன் தாத்தாவை வேறு முறைத்து வைத்தாள்.

"அம்மா, அப்பா கிட்டே கேளுங்க ஆன்ட்டி. அவங்களுக்கு ஓ.கே.ன்னா எனக்கும் ஓ.கே.தான்!" என்றபோதே, விஜய் அவள் அருகில் வந்து நின்றான்.

"அவங்க கிட்டே கேட்காமலா? நீ சொல்லும்மா... உனக்குத்தான் என் பையனைப் பிடிக்கணும்..." என்றபோதே,

"தீக்ஷா... குரூப் போட்டோ எடுக்க வேண்டுமாம்... உங்க தாத்தாவையும் பாட்டியையும் அழைத்து வா...!" என்றபடி கடந்து போனான் விஜய்.



'இப்போ இவன் நம்ம பேரையா சொல்லிட்டுப் போனான்...?' என்று ஆவென்று வாய் திறந்தவள்,

"சரி ஆன்ட்டி... வருகிறேன்..." என்று அந்தப் பெண்மணியை விட்டுப் போக எத்தனிக்க,

"பதில் சொல்லும்மா... என் பையனைக் கட்டிக்க இஷ்டம்னு..." என்று அந்தப் பெண்மணி விடாமல் தொண தொணக்க,

கொஞ்சம் பொறுமையே நம் நாயகிக்கு உண்டு. அது போகப் போவது போல் இருக்க... இருந்தும் விடாமல் அதை இழுத்து வைத்துக் கொண்டு,

"ஆன்ட்டி... என் அப்பா அம்மாவுக்கு ஓ.கே.ன்னா எனக்கும் ஓ.கே.தான்..." என்று மீண்டும் சொன்னதையே... ஆனால், அழுத்தத்துடன் கூறியபோதே, தீக்ஷாவின் அருகில் மீண்டும் விஜய் வந்து, அந்தப் பெண்மணியைப் பார்த்துப் புன்னகைத்து வைத்தவன், தீக்ஷாவிடம் அதே புன்னகையுடன்,

"அங்கே எல்லோரும் வெயிட்டிங்... ராணி வர மாட்டீங்களோ... வருங்கால மாமியார் கிட்டே இப்போதே வாயடிக்க ஆரம்பிச்சுட்டியா?" என்று கேட்க,

'வருங்கால மாமியார்...' என்று விஜய் சொன்னதால், அந்தப் பெண்மணி விஜய்யைப் பார்த்துச் சிரித்து வைக்க, தீக்ஷாவுக்குக் கோபம் வந்து விட்டது.

முன்னால் போன விஜய்யிடம் வேகமாய் அடி எடுத்து வைத்து, அவன் அருகே சென்றவள்,

"அவங்களை என் வருங்கால மாமியார் ஆக்க, இந்த ராஜாவுக்கு என்ன அவசரம்...?" என்று பட்டென்று கேட்டவள்,

"யுகி, சுரேந்தர் அத்தான் மேலே நம்பிக்கை இல்லையா...? இல்லை, என்னைப் பார்த்தா அவ்வளவு சீப்பாத்

தெரியுதா?" என்று மனதில் வைத்துப் புழுங்காமல் அவனிடம் கொட்டி விட்டு, அவன் வெளுத்த முகத்தைப் பார்த்த சந்தோஷத்தில், அவனை வென்ற புன்னகை முகத்தில் வர, அதே முகத்தோடு புகைப்படத்திற்கு போஸ் கொடுத்து நின்றாள் தீக்ஷா.

அதன் பிறகு அவள் யுகி பக்கமே திரும்பவில்லை. அவனாக வந்து பேசிய போது கூட, அவனுடனான பேச்சைக் கத்தரித்துக் கொண்டாள் தீக்ஷா.

யுகேந்தர் அவளிடம் கெஞ்சியும் அவள் பேசவில்லை.

"தீக்ஷா... இத்தனை பேர் மத்தியில் உன் வாயைப் பொத்தி நின்னதைப் பார்த்து, அண்ணன் கொஞ்சம் டென்ஷன் ஆகிட்டாரு... ப்ளீஸ்... தப்பா எடுத்துக்காதே!" என்றவுடன்,

"சரி, விடு. அப்போ நான் இனிமே உன்னை வா, போன்னு எல்லோர் மத்தியிலேயும் கூப்பிடுவேன். அதுதான் உனக்கு ஃபனிஷ்மெண்ட். டீல் ஓ.கே.ன்னா நானும் பேசுறேன்..." என்று கெத்தைக் காட்ட,

"என் அண்ணா திட்டுவாரே...!" என்று பரிதாபமாக விழிக்க,

"சும்மா அண்ணா, நொண்ணான்னு... அவருக்குத் தான் கூஜா தூக்கத் தலைவாசல் விஜய் இருக்காருல்ல... ஃப்ரியா விடு மச்சி... உங்க அண்ணா இன்னைக்கு முழுதும் உங்க ரெண்டு பேருக்கும் காவல் வேலை பார்த்துக் களைத்துப் போயிருப்பாரு. நான் உங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தரைத் தூக்கிட்டுப் போயிடுவேனோன்னு..." என்றவளை,

"சத்தியமா தீக்ஷா... எங்க வீட்டுக்கு மட்டும் நீ வந்துட்டேன்னு வெச்சிக்கோ... எங்க வீடே தலை கீழா மாறிடும்...!" என்றவன்,



"சுரேந்தர் அண்ணாவைக் கவுத்திரலாமா? அவர், பெரிய அண்ணா மாதிரிக் கிடையாது. கொஞ்சம், லைட்டாத் தட்டுனோம்னு வை... ஆளு ப்ளாட்தான். நான் ஹெல்ப் பண்றேன்..." என்றவனிடம்,

கையெடுத்துக் கும்பிட்டவள், "உங்க சங்காத்தமே வேண்டாம் சாமி. ஆளை விடுங்க..." என்றவள், சுரேந்திரனைப் பார்க்க,

அவன் விஜய்யிடம் ஏதோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருக்க,

"பாவம்... பச்சைப் பிள்ளை... விட்டுடலாம் யுகி..." என்று சுரேந்திரைப் பார்த்துச் சிரித்தபடியே சொல்ல,

"யாரு... எங்க அண்ணாவா...? அதுக்கு விஜய் அண்ணனாவது பரவாயில்லை. நம்பாதே தீக்ஷா..." என்றவனிடம்,

"இப்போ பாரு... உங்க விஜய் அண்ணாவை டென்ஷன் ஏத்தறேன்..." என்றபடி, "சுரேந்தர் அத்தானை இங்கே கூட்டிட்டு வருவேன். நீ பேச்சுக் கொடுத்து இந்த இடத்திலேயே வெச்சிரு. நானும் உங்க கிட்டே நிற்கிறேன். அப்போ உங்க அண்ணன் முகம் போற போக்கைப் பார்க்கணுமே... அப்படியே போட்டோகிராபரையும் கூப்பிட்டு போட்டோ எடுக்க வெச்சோம்னு வை... அந்தப் போட்டோவை... சும்மா டிஸ்கவரி சேனல் லோகோவா கூட போட்டுடலாம்..." என்று சொல்ல,

யுகேந்தர், "அடிப்பாவி... என் அண்ணனை இந்த அளவு உன்னைத் தவிர வேற யாரும் டேமேஜ் பண்ண முடியாது..." என்ற வார்த்தைகளைக் கேட்க அவள் அங்கு இல்லை. ஏனென்றால், விஜய்யைத் தாண்டி நின்ற சுரேந்தர் அருகில் நின்றாள்.

இருவருக்கும் இடையில் சற்றுத் தள்ளி நின்றவளின் முந்தானை காற்றில் பறக்க, அதை வேகமாக இழுத்து ஒரு

முனையைக் கையில் பிடித்தபடி வைத்துக் கொண்டவள், மற்றொரு முனையை விட்டு விட்டாள்.

"சுரேந்தர் அத்தான்... உங்களை அத்தை கூப்பிடு றாங்க..." என்று சொல்ல, சுரேந்தரும் வேகமாய்ப் போக,

சுரேந்தர் பின்னாலே போக நாலு அடி எடுத்து வைத்தவள் இழுக்கப்பட, வேகமாய்த் திரும்பினாள்.

அந்த மஹாலின் மூலையில் ஃபேன் ஓடிக் கொண்டிருந் ததால், அவள் புடவை முந்தானையின் ஒரு முனையை இழுத்த வேகத்தில் மற்றொரு முனையின் நூல் விஜய்யின் கையில் போட்டிருந்த ப்ரேஸ்லெட்டில் மாட்டிக் கொண் டிருந்தது.

முதலில் திகைத்தவள், சற்று விழித்துத் திரும்பிப் பார்க்க, தன் புடவை முந்தானை விஜய் கையில் அணிந் திருந்த ப்ரேஸ்லெட்டில் மாட்டிக் கொண்டிருந்ததில் நிம்மதி ஆனாள்.

'கடவுளே! இவன் என்ன சொல்லப் போறானோ? அது, தெரியாமல் மாட்டினால்கூட நான்தான் அதுக்குக் காரணம்னு நினைக்கப் போறான்... தீக்ஷா... இவன் கிட்டேயே மாட் டுறியே...!' என்று விஜய்யைப் பார்க்க,

அவளைப் பார்த்தும், புடவை மாட்டியிருப்பதை உணர்ந்தும், கவனிக்காதது போல் அலட்சியப் பார்வையுடன் அவன் எதிர்ப்புறம் திரும்பியதைக் கண்டவள்,

"விஜய் அத்தான்... அதை எடுத்து விடுங்க..." என்று அவள் நின்ற இடத்தில் இருந்தே சொல்ல,

"வந்து எடு... உனக்கு நான் என்ன வேலையாளா, சேவகம் செய்ய...?" என்று, அவள் எடுக்க வசதியாக, கையைச் சற்றுத் தள்ளி வைத்து விட்டு, மீண்டும் திரும்பி விட்டான்.



அருகில் வந்தவள், 'இவனுக்கு இருக்கிற திமிர் இருக்கே...!' என்று புலம்பியவளாய், தன் புடவைத் தலைப்பின் நூலை விடுவித்தவள், கூடவே அவன் கை மேல் படாமலேயே, ப்ரேஸ்லெட்டின் கொக்கியையும் தன் கைகளாலே நெம்பிக் கழட்டினாள்.

"தேங்க்ஸ் அத்தான். இனி இது எனக்குத்தான்..." என்றவளிடம்,

"ஏய்... கொடுத்திரு... விளையாடாதே!" என்று அடிக் குரலில் சொல்ல,

"அவ்ளோதான்... மறந்துருங்க..." என்றபடி, "இனி இது தீக்ஷா ப்ராப்பர்ட்டி..." என்றபடி போனவளின் முன்னால் நின்றான்.

"அதைக் கொடு... இல்ல... நான் கொலை வெறி ஆகிடுவேன். என்ன... முணு பேர் கிட்டேயும் சிரிச்சு சிரிச்சுப் பேசி, யார் மயங்குறாங்களோ அவங்களை கரெக்ட் பண்ணி, எங்க வீட்ல நுழையலாம்னு பார்க்கிறியா...?" என்றவனிடம்,

"ஆமா... வேற வேலை இல்லை எங்களுக்கு..." என்று அலட்சியமாகச் சொன்னவள், அவன் ப்ரேஸ்லெட்டை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள்.

கொடுத்தவள், "அத்தான்... எனக்கு ஒரு சந்தேகம். உங்க வீட்டுக்குள்ளே வர்றதுக்கு இதுதான் என்ட்ரன்ஸ் எக் ஸாமா...?" என்றபோதே அவன் விழிப்பதை உணர்ந்தவள்,

"இல்லை... உங்க மூணு பேர்ல யாரையாவது ஒருத்தரை மயக்குறது... அதைத்தான் சொன்னேன்..." என்று சிரித்தபடி சொன்னவள், பின் தன் சிரிப்பை நிறுத்தி, அவன் கண்களைப் பார்த்து,

"அப்படி ஒரு கேவலமான எக்ஸாம் நீங்க வைக்க லாம்... ஆனால், அந்த எக்ஸாமைத் தீக்ஷா எழுத விரும்ப

மாட்டா...!" என்று சொன்னபோது, வழக்கமான அவள் விளையாட்டுத்தனம் எல்லாம் அவள் கண்களிலும் இல்லை, அவள் குரலிலும் இல்லை.

சொல்லி முடித்த வுடனே தன் முக பாவத்தைச் சாதாரணமாக மாற்றியவள், "சாரி விஜய் அத்தான்... நான் உங்க யார் கிட்டேயும் தப்பாப் பழகலை அத்தான். புரிஞ்சுக் கோங்க..." என்றவளிடம்,

"நீ போகலாம்... நீ பேசினாலே எரிச்சல் வருது... பதிலுக்குப் பதில் பேசிட்டு... அதை முதல்ல மாத்து..." என்று சொல்லும்போதே,

"அம்மா கூப்பிடலையாமே, தீக்ஷா...!" என்று அப்பாவியாய்ச் சொல்லியபடி சுரேந்தர் திரும்பி வர,

"சும்மாதான் அத்தான்... யுகி கிட்டே உங்களை வெச்சு விளையாடிட்டு இருந்தேன். டி.வி.யில வேஷ்டி விளம்பரத்துல வர்ற இரண்டு ஆக்டர் மாதிரி உங்களையும் யுகியையும் சேர்த்துப் பார்க்கணும்னு தோணிச்சு. ஒண்ணா வைத்துப் பார்ப்போம்னு நினைச்சேன். ப்ச்ச்... உங்க அண்ணா விடலை. இப்போ வர்றீங்களா?" என்று கண்ணில் குறும்புடன், உதட்டில் சிறு புன்னகையுடன் சொல்ல,

சுரேந்தருக்கே சிரிப்பு வந்து விட, இருந்தும் வெளியே காட்டாமல், தன் அண்ணனைப் பார்க்க, அவனின் பார்வையை உணர்ந்த தீக்ஷா,

"நீங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தான் நிற்கிறீங்க... ஆனா, அந்த விளம்பரத்துல வருகிற ஹீரோ ரெண்டு பேரும் சிரிச்சுட்டே இருப்பாங்க. உங்க அண்ணா கிட்டே அதைப் பார்க்க முடியுமா? அதுதான் யுகி பக்கத்துலே நிற்கச் சொல்றேன்..." என்று அப்பாவி போல முகம் வைத்தவளைப் பார்த்துப் பேச ஆரம்பித்த சுரேந்தர், தன் அண்ணனைப் பார்க்க,



தீக்ஷாவின் மீது... அவள் சிறுபிள்ளைத்தனமான பேச்சின் மீது வந்த கோபத்தால், அவனின் இதய ஓட்டமும், ரத்த ஓட்டமும் தாறுமாறாக ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை அவன் முகமே சொல்ல,

தன் அண்ணாவின் ஆயுளில் அக்கறை உள்ள தம்பி அவன் என்பதால், "அண்ணா, நீங்க போங்க..." என்று அவனைப் போகச் சொல்லி, விஜய்யை அங்கிருந்து அகற்றியவன், தீக்ஷாவிடம் திரும்பிப் பொறுமையாக,

"தீக்ஷா... நான் சொல்றது உனக்குப் புரியுமா புரியாதான்னே தெரியலை... நீ வயசுப் பொண்ணு... பார்த்து நடந்துக்கம்மா... நீ விளையாட்டுத்தனமாகத்தான் செய்கிறாய்... பார்க்கிறவங்க எல்லோருக்கும் அது விளையாட்டாத் தெரியாது..." என்று அறிவுரைகளை வழங்கிக் கொண்டிருக்க,

அதே நேரத்தில் ஜெயந்தியும் அங்கு வர, அவர் கண்ணிலும் சுரேந்தர் – தீக்ஷா பட...

விஜய்யை விடச் சுரேந்தரை ஜெயந்திக்குப் பிடிக்கும். கொஞ்சம் கோபப்பட்டாலும் தணிந்து போவான் என்பதால், அடுத்தவரின் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, பிடிக்கா விட்டாலும் நயந்து பழகுவான். யுகேந்தர் விளையாட்டுப் பிள்ளை என்பதாலும், விஜய் உச்சாணிக் கொம்பு என்ப தாலும், சுரேந்தர் அவருக்கும் மனதில் நிறைந்திருந்தான். அவர்கள் இருவரின் ஜோடிப் பொருத்தம் கண்களை நிறைத்தது.

"அத்தான்... அட்வைஸ் மழை போதும். அப்படியே ஒரு ஜூஸ் வாங்கிக் கொடுத்தா, அட்வைஸ் கொடுத்ததோட ஜூஸும் கொடுத்த சுரேந்தர் அத்தானுக்கு ஜேன்னு பாராட்டிட்டுப் போவா இந்த தீக்ஷா..." என்று அவன் இவ்வளவு நேரம் சொன்னதை எல்லாம் காற்றில் விட்டு மீண்டும் தன் வேலையைக் காட்ட,

அவள் தலையில் செல்லமாய் ஒரு தட்டுத் தட்டினான், சுரேந்திரன்.

"அடங்க மாட்டேன்றியே! உன்னையெல்லாம்... எனக்குத்தான் இப்போ ஜூஸ் வேணும்..." என்று சொல்ல,

"இங்கே வாப்பா..." என்று அருகில் நின்ற ஜூஸ் கொடுப்பவனை அழைத்தவள், அவனிடமிருந்து ஜூஸை வாங்கி நீட்ட, சுரேந்தரும் வாங்கிக் கொள்ள,

அவளோ, "உங்களுக்கு வாங்கிக் கொடுத்தேன்ல... எனக்கு யார் வாங்கிக் கொடுப்பாங்க...?" என்று கேட்க,

சுரேந்தர் சிரித்தபடி, அதே வேலையாளிடம் இருந்து இன்னொரு கிளாஸைக் கையில் வாங்கி அவளிடம் கொடுக்க,

சிரித்தபடி அதை வாங்கியவள், "சரி, போங்க... உங்க அண்ணா தேடுவாரு..." என்று தோரணையுடன் சொல்லி, அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

போகும்போதே, "ஹை... அடுத்த பாலும் அவுட்!" என்றபடி சென்றவள்,

'இன்னும் ஒண்ணே ஒண்ணு... விஜய் அத்தான். ஆனா அது அவுட் ஆகுமா?' என்று யோசித்தவள்,

'விடு... அதை கிரிக்கெட் பாலோட கம்பேர் பண்ண முடியாது. உனக்குப் பிடிச்ச கிரிக்கெட் பால் எல்லாம் என் கையில கேட்ச் ஆகிட்டாங்க. அது ஃபுட்பால். கையில் பிடிக்க நினைத்தாய் என்றால் சேதாரம் உனக்குத்தான். இது பிடிக்காத ஃபுட்பால்தானே... ரொம்பத் துள்ளுச்சு... காலால ஒரே உதைதான்...' என்று உதைத்துப் பார்த்தவள், அருகில் இருந்த தூணில் இடித்துக் கொள்ள, 'ஆ'வென வலியில் பிடித்துக் கொண்டே,

'இனி என்ன உனக்கு...? அதுதான் மெஜாரிட்டி கிடைச் சிடுச்சே தீக்ஷா... அவனெல்லாம் ஒரு ஆளுன்னு நீ ஃபீல் பண்ணாதேடா செல்லம்... அவனை விட்டுத் தள்ளு தீக்ஷா...' என்று சந்தோஷமாய்த் திருமண மண்டபத்தை வலம் வந்தாள்.



## 7

அதன் பிறகு விஜய் முறைப்பை எல்லாம் அவள் கண்டு கொள்ளவேயில்லை. யுகேந்தர், சுரேந்தர் என்று இருவரிடமும் பேசியபடியே அன்றைய பொழுதை அவள் ஜாலியாகவும்... விஜய்யை எரிச்சலாகவும் கழிக்க வைத்தாள்.

அன்றைய மாலை... பெண்ணை அழைத்துக் கொண்டு மணமகன் வீடு செல்ல வேண்டும் என்பதால் தீக்ஷா மணப்பெண்ணோடு தங்கி விட... அவள் பெற்றோர் முன்னரே சென்றிருந்தனர். சுரேந்தரும் முன்னே சென்று விட்டிருந்தான்.

மணமகனும் மணமகளும் வேறொரு காரில் வர...

வேறு வழியில்லாமல் தீக்ஷா கலைச்செல்வியோடு வந்தாள்.

ஓட்டுநர் இருக்கையில் விஜய் அமர்ந்திருக்க... பின்னால் கலைச்செல்வி, தீக்ஷாவோடு அமர... ப்ச் என்ற ஒலியோடு தன் வண்டியின் ஓட்டுநரை அழைத்துக் காரை ஓட்டச் சொன்னவன்... டிரைவர் அருகே அமர்ந்து விட்டான்.

தீக்ஷா, அவன் செயலில் சற்று அவமானம் அடைந்தாலும்... அது, அவள் முகத்தில் இரு புருவங்களின் முடிச்சில் விழுந்து, அந்த நொடியே மாற்றினாள்... மற்றவர் அறியாமல்.

ஆனால் அவள் அருகே இருந்த யுகேந்தர் கண்களில் தப்பவில்லை. யுகேந்தர் அவளை மாற்றும் வகையில், "தீக்ஷா, அண்ணாவுக்கு டிரைவ் பண்ணப் பிடிக்காது..." என்று சொல்ல,

சொன்ன யுகேந்தரைக் கேலியாகப் பார்த்தாள்.

"நம்பிட்டேன் யுகேந்தர்!" என்று அவள் அவனின் முழுப் பெயரோடு சொன்ன விதமே, அவள் கோபத்தைக் காட்ட...

"அண்ணா மேல ரொம்பப் பாசமோ... இப்போ நான் இந்தக் காரை விட்டு இறங்குன்னா... என்ன பண்ணுவாரு உங்க அண்ணா...?" என்றவள்,

"ஆனா, வருத்தப்பட மாட்டாருதான்... நம்ம மேல அக்கறை உள்ளவங்க கிட்ட கோபம் காட்டினாத்தான் அதுக்கு ஒரு அர்த்தம் இருக்கும். இல்ல, அதுக்கு வேல்யூவே இருக்காது. அதனால கோபம் உள்ளே இருக்கு... பட் வேஸ்ட் பண்ணல..." என்று பேசியவள், யுகேந்தர் முகம் மாற... அவனைப் பார்த்துக் கண் சிமிட்டித் தன் நிலை மீண்டவள்,

"ஏன்... நான் வந்தா துரை ஓட்ட மாட்டாராமா... எதுக்கு இந்த வெட்டிப் பந்தா இந்தக் கருவாயனுக்கு...!" என்று கிசுகிசுக்க...

இப்போது யுகேந்தர் முறைக்க... ஆரம்பித்தான். அவள் தன் அண்ணனைக் கருவாயன் என்று சொல்லிய தால், "சும்மா வா... எங்க அண்ணன் கருவாயனா உனக்கு...?" என்றவனிடம்,

"ஆமாம். என்னை விட கலர் கம்மினாலே எனக்குக் கறுப்புதான். போதுமா...? நீயும் உங்க அண்ணா கலர்தான். அது எப்படி ராதா அண்ணியும்... சுரேந்தர் அத்தானும் அத்தை மாதிரி கலரா இருக்காங்க...?" என்றவளிடம்,

"நாங்க ரெண்டு பேரும் அப்பா மாதிரி மாநிறம்..." என்று திருத்தியவன், "அவர் ஒரு பார்வை பார்க்க மாட்டாரானு எத்தனை பொண்ணுங்க ஏங்கியிருக்காங்க தெரியுமா...?" என்று சொல்ல,



நக்கலாய்த் தலையாட்டினாள். "இவர்கிட்ட..." என்று சொல்லி இடைவெளி விட்டவள், "ஒரு பார்வை..." என்று மீண்டும் இடைவெளி விட்டவள்...

அடுத்த நிமிடம், "யார் அந்தப் பொண்ணுங்கள்ளாம்... ஒருவேளை கண்ணு தெரியாதவங்களோ...!" என்று நக்கலடித்தபடி... "கஷ்டம்டி சாமி..." என்றவளிடம்,

"யாருக்கு?" என்று யுகேந்தர் வினவ,

"வேற யாரு? உனக்கு அண்ணியா வரப் போற வளுக்குத்தான்..." என்று முடிக்க...

"அப்படீன்ற..." என்று அவன் எதிர்க்கேள்வி கேட்க,

"ஹ்ம்ம்... கண்டிப்பா!" என்று அப்பாவியாய்... "எந்த மகராசி இந்த சிடுமூஞ்சி மகராசன்கிட்ட மாட்டப் போறாளோ...! கடவுளே! அவளைக் காப்பாத்து..." என்று சொல்லி விட்டுச் சிரிக்க... அவளுடைய பாவனையில் யுகியும் சத்தமாய்ச் சிரிக்க...

விஜயேந்தர் இருவரின் சிரிப்பின் ஒலியில் பின்னால் திரும்பி... "என்னடா சிரிப்பு... காலையிலதானே சொன் னேன். காதுல ஏறுச்சா, இல்லியா?" என்று யுகேந்தரைப் பார்த்து முறைக்க...

"விஜய் அத்தான்! கார்ல ஒரு பாட்டைப் போட்டா நாங்க பேசுற வெட்டிப் பேச்செல்லாம் கேட்காதுல்ல... உங்க பி.பி.யும் எகிறாதுல்ல..." என்று தோரணையாகச் சொல்லி இன்னும் அவனின் பி.பி.யை உண்மையிலேயே ஏற்றினாள்.

"அம்மா..." என்று கத்தியவன்... "நான் இறங்கிடவா...?" என்று கலைச்செல்வியிடம் முறுக்க...

"தீக்ஷா, அவனுக்குப் பாட்டெல்லாம் பிடிக்காதும்மா..." என்று செல்வி சொல்ல...

"கடவுளே..." என்று தலையில் கை வைத்தவள்... அதே வேகத்தில் யுகியிடம், அவன் காதில்... "கஷ்டம்னு சொன்

னேன்ல. அது இதுதான். பாட்டே பிடிக்காதாம். இதெல்லாம் குடும்பம் நடத்தி... என்னமோ போ... சூ -ல வைக்கிறதை யெல்லாம்... ஊர்ல சுத்த விட்டா இப்படித்தான் இருக்கும்..." என்றபோது யுகேந்தர் உண்மையிலேயே முறைத்தான் தான்.

"சரி, சரி. உண்மையைச் சொன்னா... முறைக்காதே. எனக்கெதுக்கு விருமாண்டி குடும்ப வம்பு... ஆனாலும் உங்க அண்ணாவுக்கு நீ கொஞ்சம் டியூசன் எடுக்கலாம் இல்ல. உனக்குப் பயமா இருந்தா என்கிட்ட வரச் சொல்லு. தேற்றிட லாம்..." என்று யுகேந்தரிடம் சொல்லியவள், அப்போது விஜய்யை விரோதியாகவெல்லாம் நினைக்கவில்லை.

"எப்போ பாரு... வள் வள்ளுன்னு குரைச்சுக்கிட்டு..." என்று மனதில் மட்டும் சொல்லிக் கொண்டாள். யுகேந்தரிடம் இதைச் சொல்லவில்லை.

தான் மனதில் சொல்லியதை யுகேந்தரிடம் சொல்லி இருந்தால்... தன் அண்ணனை நாய்க்கு ஒப்பிட்டுச் சொன்ன தீக்ஷாவுக்கு அன்றே யுகேந்தரின் கோப முகம் தெரிந்திருக்குமோ... விஜய்யின் மீதான யுகேந்தரின் பாசம் புரிந்திருக்குமோ... என்னமோ...?

யுகேந்தர் இவள் சொல்வதற்கெல்லாம் சிரித்து... ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்ததால்... அவனின் அண்ணன் மேல் உள்ள பாசம் அவளுக்குத் தெரியவில்லை. அவன் தன் அண்ணனை எப்போதும்... யாருக்காகவும் விட்டுக் கொடுக்காத தம்பி என்று.

தன் வீட்டில் எல்லாச் சடங்கும் முடிய... மாலை ஏழு மணி ஆக... தன் வீட்டின் மாடிப்படி வாசலில் அமர்ந்து போன் பேசிக் கொண்டிருந்தாள் தீக்ஷா.

உள்ளே ஏதோ விவாதம் போய்க் கொண்டிருந்தது.



"ரமா, இன்னைக்கு நைட் உங்க வீட்லதான் நான் வந்து படுக்கணும்ப்பா... அம்மா ஆர்டர்!"

"ஏனாம்..." என்று அதே குவார்ட்டர்ஸில் அவளின் தோழி எதிர் முனையில் கேட்க...

"அண்ணா அண்ணிக்கு ஃபர்ஸ்ட் நைட்டாம். நான் பச்சப் புள்ளையாம். இங்க இருக்கக் கூடாதாம். இந்த வைஜெயந்தி தொல்லை இருக்கே... தாங்க முடியலை!" என்றவள்... சற்று அடங்கிய குரலில்,

"இன்னும் நம்மள அறியாப் புள்ளைனு இந்த உலகம் நம்பிட்டு இருக்கு... ரமா, டூ பேட்..." எனும் போதே,

"வழி விடுறியா!" என்ற குரலில் திடுக்கிட்டுத் தீக்ஷா திரும்ப...

சாட்சாத் விஜய்யேதான்...

விஜய் கடந்த போது, அவள் காதில் அருகில், "வௌங்கிடும்... உருப்பட்டுருவ!" என்ற அவன் குரலும் கடந்து சென்றது.

பூனை மாதிரியே இவன் நடந்தால்... சத்தமே கேட்கவே மாட்டேங்குது. எப்போ வர்றான்... எப்போ போறானு தெரிய மாட்டேங்குது. எப்போ வந்தானோ... என்னத்த கேட்டானோ... ஓவரா எதுவும் பேசுனோமா... என்று ஓட்டிப் பார்க்க, 'தப்பா ஒண்ணும் சொல்லலை...' என்று தனக்குள் ஆறுதல் தேடிக் கொண்டவள்... அவன் சொல்லிப் போன வார்த்தைகளை நினைத்து,

"நாங்கள்லாம் உருப்பட்டுருவோம்டா... நீ முதல்ல உருப்படுவியான்னு யோசிடா... எப்போ பாரு வெரச்சுக்கிட்டே போறது... சிரிச்சா என்ன... உன் முத்தா விழுந்துடும்... வீட்லயே சிரிக்காதவன் வெளியிலயா சிரிக்கப் போற...!" என்று வசை பாடியவள்...

"அய்யோ தீக்ஷா! இந்த ட்ராஜெடி பீஸை ஸ்கிப் பண்டி. இவன்லாம் ஒரு ஆளுன்னு... அவன் சிரிச்சா எனக்கென்ன... சிரிக்கலைன்னா எனக்கென்ன... இவன் பற்றி யோசிக்கிறதையே நிறுத்தணும். எனக்கு வாழ்க்கையில ஒரு நாள் கம்மியாகப் போகுது..." என்று புலம்பியவளாய் உள்ளே போக,

அங்கு பிரதீபன் உம்மென்று அமர்ந்திருந்தான்.

"இவனுக்கு என்ன ஆச்சு... கல்யாணமான வுடனே அந்த வீட்டு உம்மணா மூஞ்சி குணம் இவனுக்கும் ஒட்டிருச்சா...!" என்று யோசித்தபடி,

"அம்மா, நான் ரமா வீட்டுக்குப் போறேன்..." என்று கிளம்ப...

"ஒண்ணும் வேண்டாம். நீ இங்கேயே இரு..." என்று தாய் சொல்ல,

"ஏன்ம்மா...?" என்றபடி கிச்சனுக்குள் நுழைந்தாள். ஆனால் தன் அன்னையின் முக மாற்றம் அவளைப் பாதிக்க... தனது விளையாட்டுத் தனத்தை மூட்டை கட்டிய தீக்ஷா... 22 வயதுப் பெண்ணின் பக்குவமாகத் தன்னை மாற்றிக் கொண்டவளாய்...

ஜெயந்தியின் முகம் பார்க்க... சிவந்த விழிகள் வேறு அவள் அன்னை அழுதிருக்கிறாள் என்பதைச் சொல்லாமல் விளக்க...

"அம்மா..." என்று நெகிழ்வாய்ப் பேச ஆரம்பித்தவள்... "அழுதீங்களா... எதுக்கும்மா... அண்ணா வேற உம்முன்னு இருக்கான்..." என்று கேட்க,

அப்போது அவள் தந்தையும் வந்து சேர... "ஜெயந்தி, என் முடிவு இதுதான். அவங்க பொண்ணுக்குக் கொடுத்த வீட்டுக்கு நம்ம பையன் போகட்டும். அப்பப்போ போய்ப் பார்த்துக்கலாம்.... ஒண்ணா இருந்தால்தான் பாசம். இல்லன்னா... பாசம் போயிடுமா என்ன?" என்று சொல்ல,



தீக்ஷா மனதில், "ஓஹோ... இதுதான் பிரச்சனையா...? பணக்காரப் புத்தியைக் காட்டிட்டாங்களா...?" என்று சொல் லியவள், தந்தையின் பதிலில் நிம்மதி அடைந்தாலும்,

'தன் அண்ணன் தனியே போய் விடுவானே...' என்று மனம் கனத்தது. 'இருந்தும்... எப்போதுமே அவன் கூடவா நாம இருக்கப் போகிறோம்...!' என்று மனம் ஒருபுறம் ஆறுதல் சொன்னாலும்,

தாய் தந்தைக்கு அது மிகவும் கஷ்டம் என்பதும் ஒரு புறம் வேதனை தர...

வழக்கமான தன் வாயை ஓரம் கட்டி... அடுப்பு மேடையில் அமைதியாக ஏறி அமர்ந்து... அங்கு நடப்பதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.

"இந்தா... ஒண்ணு பெத்து வச்சுருக்கேனே... எதைப் பண்ணினாலும் தரித்திரமாகவே பண்றது. இறங்குடி... அடுப்பு மேடையில ஏறாதே ஏறாதேன்னு சொன்னா... கேட்க மாட்டியா...?" என்று அந்தக் கவலையிலும் அவள் தாய் ரௌத்திரம் ஆக...

"ஆத்தா... யாரு? எந்தப் பக்கம் மலையேறினாலும் வேப்பிலை அடிப்பது என்னை மட்டும்தான்..." என்றபடி இறங்கினாள். இப்போது, "என்னப்பா பிரச்சனை?" என்று அவள் கேட்க,

"ஒண்ணும் இல்லை. பெரியவங்க பேசும்போது உனக்கென்ன வேலை இங்க... நீ போ!" என்றபடி... அவரும் அவளைக் கடிய,

அந்த நேரத்தில் பிரதீபன் உள்ளே வந்தான். வந்தவன், "அம்மா, நீங்க எல்லோரும் வந்தா... ராதாவோட

அங்கே போவேன். இல்ல... இங்கேதான். அவ என்னைக் காதலிக்கும்போது இதை யெல்லாம் தெரிஞ்சுதானே காதலித்தாள்..." என்று முடிவைச் சொல்லியபடி மீண்டும் வெளியேற,

"அண்ணா, நீ ஹீரோ தான்டா. அன்னைக்கு எதுவும் பேசாம இந்தத் தங்கையை டீல்ல விட்ட... இன்னைக்குச் சுதாரிச்சுட்ட போல...!" என்று சந்தோசத்தில் தீக்ஷாவும் வெளியே வந்தாள்.

"எப்படியோ... நாம இந்த வீட்டை விட்டுப் போகப் போவ தில்லை..." என்று நிம்மதி அடைந்தவளின் நிம்மதி, அடுத்த அரை மணி நேரத்தில் பறிக்கப்பட்டது.

கலைச்செல்வி அருகில் போய் அமர்ந்தபடி...

"அண்ணா, அண்ணிக்கு வீடா அத்தை... எங்கே அத்தை?" என்று மனதில் கோபம் இருந்தும்... நயமாய்க் கேட்டவளைப் பார்த்து...

"இந்தப் பெரியவன் பண்ணின வேலைம்மா... எங்களுக்கே காலையிலதான் தெரியும். அவனுக்குத் தங்கைன்னா கொஞ்சம் பாசம் அதிகம். இங்க அவ கஷ்டப்படக் கூடாதாம். அதுதான்..." என்று கலைச்செல்வியும் சாதாரணமாகப் பேசினார்.

தீக்ஷா மனம் எங்கும் எரிந்தது.

"கொஞ்சம் கூட வருத்தம் இல்லையா இவங்களுக்கு எல்லாம்... இவங்க பையனை இவங்ககிட்ட இருந்து பிரிச்சா... அதுவும் கல்யாணமான அன்னைக்கே பிரிச்சா... இப்படித்தான் சாதாரணமா இருப்பாங்களா...? இவங்களுக்கு ஒண்ணு போனால் கூட இன்னும் ரெண்டு இருக்கு. எங்க அம்மா, அப்பாவுக்கு அப்படியா...?" என்று நொந்தபடி எழுந்து விட்டாள். அதன் பிறகு அவளுக்குக் கலைச்செல்வியிடம் பேசவே பிடிக்கவில்லை.



உள்ளே அமர்ந்திருந்த ராதாவிடம் போய் உட்கார்ந்து விட்டாள். சிரித்தபடி அவள் அருகில் அமர்ந்தவள்... "என்ன அண்ணி, ஹேப்பியா இப்போ?" என்று மனதிற்குள் வருத்தத்தை வைத்தபடி மலர்ந்து பேச...

"சாரி தீக்ஷா... அண்ணா இப்படிப் பண்ணுவாங் கன்னு நினைக்கவே இல்லை. எனக்கே இப்போதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் தெரியும்மா... உனக்கு இதில் எத்தனை வருத்தம் இருக்கும்னு தெரியும். ஏனென்றால்... நானும் ஒண்ணு இல்ல... மூணு பேர்க்குத் தங்கை. கண்டிப்பா... உங்க யாரையும் பிரிக்க மாட்டேன். நம்புமா!" என்றபோதே ராதாவின் சொற்களில்... மனம் லேசானது.

அவளைப் போய்த் தப்பாக எண்ணிய மனதைக் குட்டியவள்... "அண்ணி, நீங்க கிரேட் அண்ணி... ஒரு நிமிசம் தப்பா நினைச்சுட்டேன்..." என்றவளின் கண் ஈரமாக...

ராதா அவளைப் பார்த்து, "தீக்ஷா... ஸ்ட்ராங் பேபின்னு சொன்னாங்க... எல்லோரையும் சிரிக்க மட்டும்தான் வைப்பாங்கனு சொன்னாங்க..." என்று கேலி பேச,

சட்டென்று கண்ணைத் துடைத்தவள், "ஆமாம். என்னைச் சுற்றி இருக்கிறவங்க சென்டிமென்ட் பேசுனா எனக்குப் பிடிக்காது, அண்ணி... தீக்ஷா இருந்தா... கலகலப்பு... ஜாலி. அதுதான் இருக்கணும்..." என்றபடி,

"ஆனா, உங்க அண்ணனை மட்டும் என்ன பண்ணினாலும் சிரிக்க வைக்கவே முடியல. ஏன் சிரிக்கவே மாட்டேங்கிறார்...?" என்றவளிடம்,

"அண்ணா அப்படித்தான், தீக்ஷா... சிரிப்பாங்க. ஆனா அளவா...!" என்று ராதா சொன்னபோதே...

"என்னால சிரிக்க வைக்க முடியல... அப்புறம் அழ வச்சுடுவேன்னு சொல்லி வைங்க. அந்த விரு..." என்றவள்,

யுகேந்தரிடம் மட்டுமே அவள் விருமாண்டி என்று சொல்லிக் கேலி செய்யும் காரணத்தால்... நாக்கைக் கடித்தபடி, "உங்க அண்ணன்கிட்ட..." என்று முடிக்க...

"விருமாண்டிதானே... அது நீ வச்ச ஆள்வரை போய்ச் சேர்ந்துடுச்சு..." என்று சொன்னபோது,

"ஓ.கே. நோ ப்ராப்ஸ்... அப்போ, இனி அவர்கிட்டயே டைரக்ட்டா சொல்லலாம்..." என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கியவள், வெளியே வர...

விஜய் மீண்டும் உள்ளே வந்திருந்தான்.

பிரதீபன், விஜய்யிடம், "இல்லை விஜய்... இது சரிப்படாது. என் வசதி இதுதான். இது தெரிஞ்சுதானே மேரேஜ் பண்ணி வச்சீங்க...!" என்றபோது,

"தெரியும்... ஆனா, எங்க வீட்டுப் பொண்ணுக்கு இதைச் சீராகத்தான் தருகிறோம். அது மட்டுமில்லை. உங்க குடும்பத்தோட அங்கே போய்த் தங்க என்ன பிரச்சனை, தீபன்...?" என்று கேட்க,

இப்போது, தீபன் அருகில் அமர்ந்தபடி.. தன் அண்ணனைப் பெருமையாகப் பார்த்தபடி இருந்தாள், தீக்ஷா.

"அவ உங்க தங்கை இல்ல... என் மனைவி. இதுதான் அவள் வாழ்க்கை. விட்டுருங்க விஜய்... இதுதான் எங்க தராதரம்..." என்று விஜய் அன்று தன் தங்கையைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளைச் சொல்லி... அவனைப் பார்க்க... தீக்ஷாவும் விஜய்யை எள்ளலாகப் பார்க்க...

ஜெயந்தி உள்ளிருந்து வந்தார். கூடவே வைத்தீஸ்வரனும் வர... "விஜய் தம்பி... நீங்க கவலைப் படாதீங்க. அவனை அங்க அனுப்பி வைக்கிறது எங்க பொறுப்பு!" என்றபோது...

தீபனும் தீக்ஷாவும் தீப்பார்வை பார்க்க...



தீபனின் வார்த்தைகளில்... தீபன் தன் அண்ணனைக் குத்தலாகப் பேசியதில்... பிரச்சனை பெரியதாக ஆகி விடுமோ என்ற பயத்தில்...

உள்ளிருந்த ராதா வெளியே வந்தாள். வந்தவள்... விஜய்யிடம், "அண்ணா, உங்க மனசு... உங்க பாசம் எல்லாம் புரியுது. ஆனா, அவர் மனசு கஷ்டப்பட்டுத்தான் நான் வசதியா வாழணும்னா... அது எதுவும் தேவை யில்லை..." என்று கண் கலங்கக் கூற...

வைத்தீஸ்வரனுக்கு அதற்கு மேல் தாங்க முடிய வில்லை.

"என்னம்மா... நல்ல நாள் அதுவுமா... கண் கலங்குற..." என்றவர்,

"ப்ரதீபா... நாங்களும் உன்னோட வருகிறோம். போதுமா... அந்தப் பொண்ணுகிட்ட என்ன சொல்லி வச்ச...?" என்று முடிக்க,

தீக்ஷா அதிர்ந்தாள். "அப்பா, என்னப்பா... நான் அங்கெல்லாம் வர மாட்டேன். என்கிட்ட ஒரு வார்த்தை கேட்க மாட்டீங்களா...?" என்று கத்த,

அவள் வார்த்தைக்கெல்லாம் அங்கு மரியாதை இருக்குமா என்ன...! அதை யாரும் காது கொடுத்தே கேட்கவில்லை.

சுரேந்தர் மட்டும் அவளிடம், "சின்னப் புள்ளைங்க கிட்ட எல்லாம் கேட்க மாட்டாங்களாம், தீக்ஷா...." என்று வார,

"அண்ணா, அது சின்னப் புள்ள கூட இல்ல... பாப்பா!" என்று யுகி இன்னும் ஓட்ட,

விஜய் முதன் முதலாய்ச் சிரித்தான், வாய் திறந்து...! அதுவும் தீக்ஷாவைப் பார்த்து...

அது அவளைப் பார்த்து, வெற்றிச் சிரிப்பாக... அற்பச் சிரிப்பாக... நீயெல்லாம் ஒரு ஆளா எனக்கு... என்கிட்ட யேவா... என்று எக்களிப்பாகத் தீக்ஷாவுக்குப் பட...

அவனது சிரிப்பில் உடம்பெல்லாம் எரிந்தது.

அன்று இரவு... ப்ரதீபன் - ராதா முதல் இரவு... விஜய் அவன் தங்கைக்காக வாங்கிய வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் அங்கு செல்ல... தீக்ஷா மனம் குமுறியபடி, தனது அறையைச் சுற்றி வந்தாள்.

சுவரெங்கும் தீக்ஷா என்ற பெயர் ஆங்காங்கு பொறிக்கப்பட்டிருக்க... அவற்றை எல்லாம் தடவிப் பார்த்த படியே... அவள் திருச்சியை விட்டு வந்த போதும் இப்படித்தான் கலங்கினாள்.

'இன்றும்... அதே வேதனை. நாளைக்குத் திருமண மாகி இன்னொரு வீட்டிற்குச் செல்லும் போதும்... இனியும்... ஆக, மொத்தம் பெண்களுக்கு எதுதான் நிரந்தரம்...?' என்று யோசித்தவளுக்கு அன்றைய இரவு உறங்கா இரவாக அமைய...

அதிகாலை சீக்கிரமே எழுந்து விட்டாள். அதாவது... எட்டு மணிக்கெல்லாம் கதவைத் திறக்க... அது முடியாமல் போக... யார் பூட்டி வைத்தார்கள்... என்றபடி அம்மா கத்த... இப்போது கதவு திறக்கப்பட... தன் தாய்தான் திறப்பாள் என்று அலட்சியமாக நினைத்து...

"ஏம்மா... பூட்..." என்று ஆரம்பித்தவள், திறந்த விஜய்யைப் பார்த்து அதிர்ந்து விழிக்க...

"டிரஸ்ஸை மாத்திட்டு வெளியில வா...!" என்று சொல்லித் திறந்த வேகத்திலேயே மீண்டும் கதவை மூடினான் விஜய்.

கண்ணாடியில் தன்னைப் பார்க்க... உடை லேசாகக் கொஞ்சம் இறங்கி இருக்க... 'கொஞ்சம் நல்ல பையன்தான்!'



என்றபடி... 'பார்த்திருப்பானோ... வேகமா டிரஸ்ஸை மாத்தச் சொல்றான்...' என்று யோசித்தபடியே... 'ச்சே... இருக்காது...' என்று தனக்குள் ஆறுதல் சொல்லிக் கொண்டாள்.

இரவு உடையிலிருந்து... சுடிதாருக்கு மாறியபடி... வெளியே வந்தாள்.

வீட்டைப் பார்த்து அதிர்ந்தாள். வீட்டில் ஒரு பொருள் கூட இல்லை. சோபா மற்றும் ஒரு நாற்காலி இருக்க... விஜய் மட்டுமே இருந்தான். அவனோடு இன்னும் சில பேர் இருக்க...

"அம்மா... அப்பால்லாம் எங்கே?" என்றபோது...

"அங்க போயிட்டாங்க. உன்னோட ரூம்தான் இன்னும் காலி பண்ணணும்..." என்றபடி நகர்ந்தான் விஜய்.

"அப்போ டீ கூடக் கிடையாதா?" என்று தலையில் கை வைத்தபடி அமர்ந்தபோதே,

சுரேந்தரும் வந்து சேர... "இந்தா..." என்றபடி ஒரு டிபன் பாக்ஸைக் கையில் வைக்க...

"தேங்க்ஸ் அத்தான்!" என்று சொல்லியபடி அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள் தீக்ஷா.

சுரேந்தர் வேலை ஆட்களோடு... மீண்டும் கீழே போக, விஜய் மீண்டும் அவள் எதிரில் வந்து அமர்ந்தான். ஆனால் எதுவும் பேசவில்லை.

இவளுக்கும் பசி இருக்க... வேக வேகமாய்ச் சாப்பிட்ட வளுக்குத் திடீரென்று விக்கல் வர... தண்ணியைத் தேட... அது கிடைக்காமல் போக... விஜய்யைப் பரிதாபமாகப் பார்க்க..

"சாப்பிட மட்டும் அவசரம் காட்டக் கூடாது. தண்ணி இருக்கானு முதலில் பார்க்க வேண்டும்..." என்றபடி, அந்த வீட்டுக் கிச்சனுக்குள் நுழைந்தான் விஜய்.

"அதேதான்டா உனக்கும்... அட்வைஸ் வேணாம்டா. முதலில் தண்ணியைக் குடுடா. செத்துக்கித்துப் போகப் போறேன்... அந்தப் பழி வேற உனக்கு வந்து சேரப் போகுது..." என்று திட்டியபடியே அவன் தண்ணீர் எடுத்து வருவான் என்று பார்த்துக் கொண்டே இருக்க...

அவனோ அந்த அறையை விட்டு வெளியே வரவே இல்லை. அதற்குப் பதில், யுகேந்தர் வாட்டர் பாட்டிலோடு மேலே ஏறி வந்தான்.

"இந்தா... சுரேந்தர் அண்ணா மறந்துட்டாங்க..." என்றபடியே கொடுத்தவன், விஜய் கிச்சனில் இருந்து வெளியே வருவதைப் பார்த்து, "நானும் சுரேந்தர் அண்ணாவும் அங்கே போகிறோம்... நீங்க எப்போ வர்றீங்க?" என்று கேட்க,

"நான் கடைசியா வருகிறேன்..." என்றபடி வெளியேறிக் கீழே போனான்.

"யுகி, நானும் வர்றேன்... உன் கூடவே!" என்று எழ,

"ஹலோ மேடம், அப்போ ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும். நீ மட்டும் வழக்கம் போல எழுந்திருச்சிருந்த... உன் விருமாண்டி உன்னையும் சேர்த்துப் பேக் பண்ணச் சொல்லி இருப்பார்..." என்று சொல்லியபடி, "உன்னோடதெல்லாம் பத்திரமா எடுத்து வச்சுட்டு அண்ணா கூட வா...!" என்று சொல்ல,

"உங்க அண்ணா... எனக்கெல்லாம் டிரைவர் வேலை பார்ப்பாரா?" என்று கேள்வி கேட்க...

"அது நேத்து... இது இன்னைக்கு. எங்க அண்ணா ரொம்ப ஹேப்பியா இருக்காரு. எங்க செல்லத் தங்கை இந்த வீட்டில் கஷ்டப்பட மாட்டாள்னு... சோ ஹேப்பி. அதுக்குச் சம்மதம் சொன்ன தீபன் குடும்பமும் இனி அவர் குடும்பம்தானாம். சார் வீட்டைக் காலி பண்ண ஆளோட ஐந்து மணிக்கெல்லாம் வந்துட்டாரு, தெரியுமா...? தங்கச்சி பாசம்மா... தங்கச்சி பாசம்...!" என்றவனைப் பார்த்து,



"என்னமோ போ... எதுனாலும் அட்வைஸ்னு சொல்லி என்னைக் கொன்னாரு... அப்புறம் பார்த்துக்கோ...!" என்று தீக்ஷா அலுக்க...

"நீ உன் திருவாயை மூடிட்டுப் பேசாம வந்தாலே போதும். என் அண்ணன் பேச மாட்டாரு..." என்றபடி வெளியேறினான்.

வீட்டை விட்டுப் போகிறோம் என்று மனம் சுணங்கியவளாய்த் தன் பொருட்களை அங்கு வந்த ஆட்களோடு பேக் செய்து, வீட்டை விட்டு வெளியேறிய அவளுக்கு, அங்கு நின்ற மற்றக் குடித்தனக்காரர்கள் பாசமுடன் விடை அனுப்ப... அவர்களிடம் தைரியமாகப் பேசியபடி வெளியே வந்தவள்... கீழே நின்றிருந்த அவளின் இளம் தோழர்களைப் பார்த்தவளுக்கு அழுகையே வந்து விட்டது.

"டேய் சிவா... அக்கா இனி வர மாட்டேன்டா..." என்றபோதே தொண்டை அடைக்க...

அந்தக் குழந்தைகளும் அழ...

"அக்கா, டைம் கிடைக்கும் போதெல்லாம் வாங்க," என்று பிரியா விடை கொடுத்து அனுப்ப,

அப்போது அங்கு வந்த விஜய், லேசாகச் சிரித்தபடி...

"அடேங்கப்பா... இந்த அக்கா போறாங்கன்னு... இத்தனை வருத்தமா...?" என்று கேட்க,

"இந்த மாதிரி நிலை உங்களுக்கு வந்தா தெரியும்... நமக்குப் பிடிச்சவங்க நம்மை விட்டுப் போகும் போது வருகிற வலிதான் இந்த உலகத்திலேயே பெரிய வலி," என்று சொல்லி அழுதபடியே அவனை முறைத்தவளை இவனும் முறைக்க... தன் முறைப்பை மாற்றியபடி,

"ஏன் அத்தான் இப்படிப் பண்ணுனீங்க... ஒரே நாளில் வீட்டை மாற்றி..." என்ற போதே, அவள் பேச்சைக் காதிலே வாங்காதவன் போல்,

"காரில் ஏறி உட்கார்... கொஞ்சம் விட்டா... நீ பேசியே கொன்னுடுவ..." என்றபடி காரில் அமர்ந்தவன்,

தீக்ஷா அவன் அருகில் அமராமல் பின்னால் போக,

"ஏய்... உனக்கு நான் என்ன ட்ரைவரா... முன்னால வா...." என்று சொன்னவனிடம்,

"முன்னால உட்கார்ந்தா மட்டும் நீங்க ட்ரைவர் இல்லையா... அப்பவும் ட்ரைவர்தான்," என்று போட்டுத் தாக்க,

"ரொம்பப் பேசுன... அந்தப் பேக்கேஜ் அனுப்புற வண்டியிலேயே அனுப்பிடுவேன்... பார்த்துக்க. அதுவே உனக்கு அதிகம்..." என்று சொன்னபடி காரை எடுக்க,

"உன் கூட பக்கத்தில உட்கார்ந்திட்டாலும்..... அப்படியே விளங்கிடும்...." என்று சன்னல் அருகே அமர்ந்தவள், பேசாமல் வந்தால் தீக்ஷா ஆவாளா?

"ஏன் அத்தான், எனக்கு ஒரு டவுட்... உங்க வைஃப் வந்தா நம்ம ரெண்டு பேருக்கும் நடுவிலயா உட்கார வைப்பீங்க..." என்றவளை,

'இவளுக்கு இப்போ எதுக்கு இந்தக் கேள்வி...' என்ற அர்த்தத்தில் பார்க்க... அது புரிந்தவள் போல,

"இல்ல, சும்மா கேட்டேன்.. ஏன்னா... என்னைப் பின்னாடி வெச்சு ட்ரைவ் பண்ண மாட்டீங்க... நான் முன்னாலேயும் வர முடியாது. ஒரு வேளை அப்படி ஒரு சிச்சுவேஷன் வந்தா, அப்போ என்ன பண்ணுவீங்க?"

"அப்படி ஒரு சிச்சுவேஷன் வந்தா பார்த்துக்கலாம்... இப்போ நீ பேசாம வருகிறாயா...?" என்று பேசாமல் காரை ஓட்ட,

"ஆன்சர் தெரியலையா...?" என்று சிரிக்க,



"யார் சொன்னது ஆன்சர் தெரியாதுன்னு... நீ சின்னப் பொண்ணு... அதுதான் சொல்லலை," என்றவனின் முகம் களையாகத் தெரிய,

'என்ன பண்ணியிருப்பான்...' என்று யோசித்தவளாய் அவன் முகத்தைப் பார்க்க, அதில் இருந்த பிரகாசம்...

'வைஃபுன்னு சொன்னவுடனே மூஞ்சில பல்பு எரியுது... லவ் பண்றானோ...' என்று நினைக்கும் போதே அவன் குரல் அவள் செவியை அடைந்தது.

"ரொம்ப யோசிக்காதே.... உன் மூளை கண்டதை எல்லாம் யோசிக்குமே. ட்ரைவரை வரச் சொல்லி இருப்பேன். போதுமா...?" என்று சொல்ல, இன்னும் அவள் தெளியாமல் அவனைப் பார்க்க,

"இல்ல... உன்னை விட்டுட்டுப் போயிருப்பேன்... எனக்கு என் வைஃப்தான் முக்கியம். நீயா முக்கியம்...?" என்று சொல்ல.. இப்போது திருப்தி அடையாமல்,

"இதைச் சொல்லத்தான் நான் சின்னப் பொண்ணுன்னு சொல்லலையா... இதுதான் யோசிச்சீங்களா...? வேற என்னவோ நினைச்சீங்க... பொய் சொல்றீங்க," என்று சொல்லியவளிடம்,

."தயவு செஞ்சு என்னையும்... உன்னை மாதிரியே லூசு மாதிரி பேச வெச்சுறாத," என்றவன், அதற்குப் பிறகு அவளிடம் பேச்சைக் குறைத்தான்.

"அப்போ நான் லூசா...?" என்றவளிடம், பேசாமலேயே ஓட்டி வர, பதில் எதுவும் வராமல் போக... தீக்ஷாவும் வெளியில் பார்வையைச் செலுத்த ஆரம்பித்தாள்.

புதிய வீட்டில் கார் நிற்க... கொஞ்சம் திகைத்தாள் தீக்ஷா. ராதாவின் பிறந்த வீடு அளவு இல்லை என்றாலும்... தீக்ஷா குடும்ப வாழ்க்கைத் தரத்திற்குச் சற்று அதிகமாய்ப் பட...

இறங்கி வெறித்தவளை.... விஜய்யின் "தீக்ஷா..." என்ற குரல் கலைக்க,

அவனைக் கீழே குனிந்து பார்க்க,

"உன் பேர் எங்க எல்லோருக்கும் தெரியும். இங்கேயும் உன் பேரைச் சுவரெல்லாம் எழுதி அசிங்கப் படுத்திராதே. இது நீ இருந்த கவர்ன்மெண்ட் குவார்ட்டர்ஸ் இல்லை," என்று சொல்ல,

திகைத்தாள் தீக்ஷா.

சத்தியமாக இதை அவள் எதிர்பார்க்கவில்லை.. தன் அறையைப் பார்த்திருப்பான் போல் என்று நினைத்தவள், அவனுக்குப் பதிலடியும் தந்தாள்.

"கண்டிப்பா விஜய், அத்தான்... எனக்குப் பிடிச்ச இடத்தை மட்டும்தான் என் பெயர் அலங்கரிக்கும்., சோ... இந்த வீட்டுக்கு அந்த அலங்காரம் கிடைக்காதுதான். சாரி, சாரி.... உங்க பாஷைல சொல்றேன்... நீங்க உங்க தங்கைக்காகக் கொடுத்த வீட்டை அசிங்கப்படுத்த மாட்டேன்,"

என்றபடி, அவன் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல், விடுவிடுவென்று உள்ளே நுழைந்தாள் தீக்ஷா.

அவன் இப்படிச் சொல்லிய பின்... அவன் கொடுத்த இந்த வீடு அவளுக்குப் பிடித்திருக்குமா என்ன...? அதற்காக இதை விட்டு வேறு எங்கு போக...? இவளும் இந்த வீட்டில் நிரந்தரமாக இருக்கப் போவதில்லைதானே! வேறு ஒரு வீட்டுக்கு வாழப் போகும் பெண்... அதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு இந்த வீட்டில் இருப்போம் என்று விட்டு விட்டாள்.

'இதை மட்டும் தன் அண்ணாவிடம் நாம் சொன்னோம்... இந்த விஜய் தங்கைதான் புறாக் கூண்டு போல் வாழ வேண்டும். பாவம் அண்ணி...! இவன் திமிருக்கு அவங்க பலிகடாவா...!' என்று நினைத்தவள், விஜய்யை அவள் மனதில் இருந்து சற்றுத் தள்ளி வைத்தாள் என்பதே உண்மை.



விஜய்யின் மேல் கோபம் ஒரு புறம் இருக்க... இன்னொரு புறம்,

ஏனோ சட்டென்று அவளால் அந்த வாழ்க்கை முறைக்குத் தன்னை நினைத்தும் பார்க்க முடியவில்லை. எல்லாவற்றிற்கும் வேலையாள் இருந்தது சவுகரியமாய் இருந்தாலும்... ஏனோ பிரைவசி போனது போல் இருந்தது தீக்ஷாவிற்கு. 2 பெட்ரூம் அறையில்... சிறு குருவிக்கூடு போல் தாங்கள் மட்டுமே வாழும் வாழ்க்கை முறைக்கு, இப்போதைய வாழ்க்கை, தங்கக் கூண்டில் கிளியை அடைத்து வைத்தது போல் இருந்தது என்பதுதான் உண்மை. இதை விட்டு வெளியே எப்போது பறக்கலாம் என்று அப்போதிருந்தே யோசிக்க ஆரம்பித்து இருந்தாள்.

உள்ளே வந்தவள், ஹாலைச் சுற்றிப் பார்க்க... அங்கு ராதாவின் புகைப்படம் நிறைந்திருந்தது.. நேற்று முடிந்த திருமணத்தின் போது எடுத்த போட்டோ கூட லேமினேட் செய்யப்பட்டு மாட்டப்பட்டிருந்தது.

'ஹ்ம்... பாசமலர்தான்!' என்று திரும்பும் போது, அவள் அண்ணன் பிரதீபன், அவளது புகைப்படத்தை மாட்டிக் கொண்டிருந்தான்.

மாட்டி முடித்து இறங்கியவுடன், தன் தங்கையைப் பார்த்துச் சிரிக்க,

பதிலுக்குச் சிரித்தபடியே அவனைப் பார்த்தவள், சற்று முன் விஜய் சொன்ன வார்த்தைகளை யோசித்துப் பார்க்க... தன் புகைப்படத்தைக் கழட்டி விடச் சொல்வோமா என்று கூட நினைத்தாள்.

ஏனோ விட்டு விட்டாள்.

அங்கிருந்த சோபாவில் அமர, அவள் புகைப்படம் நேராகத் தெரிந்தது.

"அண்ணா... இங்கே இருந்து பார்த்தா... தீக்ஷா சூப்பரா தெரியுறேன்..." என்றவள், அப்போது ராதாவும் அருகில் வந்து அமர...

"இந்தப் பிளேஸை என் வருங்காலக் கணவருக்கு ரிசர்வ் பண்ணி வைக்கணும், அண்ணி. இந்த இடம்தான் ரொம்ப வசதி... என்னை சைட் அடிக்கிறதுக்கு," என்றவளிடம்,

"நீ இருக்கும்போது... அவர் எதுக்கு நிழலைப் பார்த்து சைட் அடிக்கப் போறாரு...?" என்று ராதா கேட்க,

"ஹ்ம்... கரெக்ட்தான்...." என்றபடி தன் அண்ணனைப் பார்த்தவள், விஜய் உள்ளே நுழைவதைப் பார்த்துச் சத்தமாக,

"அண்ணா... நீ இவ்ளோ பெரிய வீட்டை எல்லாம் எனக்குத் தர முடியாது. ஆனா, இங்கே இருக்கிற ராதா அண்ணி போட்டோவை எல்லாம் விட பெரிய போட்டோவா எடுத்து எனக்குச் சீதனமாக் கொடு... என் புகுந்த வீட்ல மாட்ட," என்ற போது ஜெயந்தியும் அங்கு வந்தார்.

"உனக்கு வாய் ஏன்தான் இப்படி இருக்கோ...! நல்ல விதமாவே பேச மாட்டியா...?" என்று திட்ட,

"போட்டோ மாட்டணும்னு சொன்னது தப்பா அண்ணி...? இந்த அம்மா இருக்காங்களே..." என்று ராதாவிடம் சொன்னவள்,

ஜெயந்தியிடம், "அம்மா... உங்களுக்கும் அடுப்படியி லிருந்து கரண்டி பிடிக்கும் வேலைக்கு ஓய்வு கிடைத்து விட்டது போல... அப்பாடா! எனக்கும் தோசைக் கரண்டி பயம் விட்டது," என்று சிரிக்க,

ஜெயந்தி பார்வையாலே முறைக்க... அவரை விட்டு நகர்ந்தாள் தீக்ஷா. அதன் பின்,



அன்று தனியாய்ச் சிக்கிய யுகியிடம்....

"யுகி... உங்க அண்ணா லவ் பண்றாரா என்ன...?" என்று கேட்டு வைக்க,

"அவர்தானே... நல்லா பண்ணுவாரு. எனக்குத் தெரிஞ்சு இல்ல..."

"சோ... உனக்குத் தெரிஞ்சு இல்லை. நீ பண்றது கூடத்தான் உங்க வீட்டு மூத்த பேக்குங்க ரெண்டுக்கும் தெரியல... உனக்குத் தெரியாம கூட இருக்கலாம்..." என்றவளை,

"சந்தடி சாக்கில் நல்லா திட்டு அவங்க ரெண்டு பேரையும்..." என்றபடி,

"அண்ணாவுக்குப் பொண்ணு பார்த்துட்டு இருக் காங்க.... அப்படின்னு சொல்றதை விட, கொஞ்சம் கன்ஃபார்ம் பண்ணிட்டாங்க...."

"அப்படியா...?" என்று விழி விரித்தவள், "யாரு... யாரு...?" என்று ஆர்வமுடன் கேட்க,

"இளமாறன்... அண்ணாவோட ஃப்ரெண்ட்... அவங்க சிஸ்டர்... படிச்சுட்டு இருக்காங்க லண்டன்ல. இளாவுக்கு ராதாவையும், அண்ணாவுக்கு அந்தப் பொண்ணையும் எடுக்கலாம்னு ஒரு எண்ணம்... ராதா பிரச்சினை பண்ணிட்டா..." என்று புதுக்கதை சொல்ல,

"இன்ட்ரெஸ்ட்... ஸ்டேட்டஸ் = ஸ்டேட்டஸ்..." என்று சிரித்தபடி கேட்டவள்,

"அவங்க உன்னோட பெரியவங்களா... மரியாதையாப் பேசுற..." என்றபோது,

"சின்னப் பொண்ணுதான். அண்ணியா வரப் போறது அவங்கதானே! சோ, இப்போதிருந்தே மரியாதை. அப்புறம் வராது," என்று சொல்ல,

"ஓ..." என்று ராகம் இழுத்தவள்,

"இதுக்காகவே உங்க வீட்டுக்கு மூத்த மருமகளா வரலாம் போல இருக்கே! நீ கூட... உன்னை விடு, சுரேந்தர் அத்தான் கூட மரியாதையாத்தான் பேசுவாங்களா...?" என்று கேட்க,

"ஆமாம்... இதுல என்ன ஆச்சரியம்...?" என்றபடி கடந்து செல்ல, புருவம் உயர்த்தினாள் தீக்ஷா.

"டேய், மரியாதைக் குடும்பத்தோட சின்ன ராஜாவா நீ...?" என்று அவன் பின் சத்தமாகக் கேட்க,

"அடங்க மாட்டியா நீ... உன்னை..." அவன் ஒற்றை விரலால் மிரட்ட,

"ஆர்த்தி..." என்று கத்த, அவன் கையெடுத்துக் கும்பிட,

"அது.....அந்தப் பயம் இருக்கட்டும்..." என்றபடி மாடியின் மேல் கைப்பிடிச் சுவரில் வெளிப்புறமாய்த் திரும்பி உட்கார்ந்தாள். அப்போது...

கீழே விஜய் காரை எடுத்தபடி மேலே பார்க்க... சட்டென்று உள்புறம் திரும்பி இறங்கி விட்டாள்.

'மேல வந்து, 'பொண்ணா நீ?'ன்னு லெக்சர் எடுப்பான் இவன்...' என்றவள், மாடியை விட்டும் இறங்கியிருந்தாள்.

## 8

**தீ**க்ஷா குடும்பம்... புது வீட்டிற்கு வந்து மாதம் 2 ஆகி இருக்க, ஓரளவு அந்த வாழ்க்கைக்குத் தீக்ஷாவும் பழகிக் கொள்ள, ப்ரதீபன் வெளிநாடு சென்று விட்டான் பணி நிமித்தமாக. அது மட்டும் இல்லாமல், ராதாவும் கருவுற்றிருந்தாள். விஜய், அடிக்கடி எல்லாம் இங்கு வரவில்லை. இரண்டு மாதங்களில் இரண்டு முறை வந்திருந்தான். இவளுக்கும் பெரியதாக அவனோடு வாக்குவாதம் எல்லாம் இல்லை. அதே போல் தீக்ஷாவும்... அவன் வீட்டிற்குப் போனால் கூட, சந்திக்கும் சூழ்நிலைகள் ஏற்படவில்லை. ஓரளவு சுமுகமாய்ப் போய்க் கொண்டிருக்க,



அன்றைய தினம் தீக்ஷா வேலைக்குப் போகாத காரணத்தால் வீட்டில் இருக்க... அன்று மாலை 4 மணிக்கு டி.வி.யில் அலைபாயுதே படம் என்பதால், தன் அண்ணியின் அறையில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட படம் முடியும் தறுவாயில் இருக்க,

கீழே ஜெயந்தியின் குரல் கேட்க, எரிச்சலுடன் இறங்கிப் போனாள்.

"என்னம்மா... சீக்கிரம் சொல்லும்மா... ஃபைனல் சீன் வரப்போகுது," என்றவளிடம்,

"அண்ணிக்கு பழம்லாம் நறுக்கி வெச்சுருக்கேன், எடுத்துட்டுப் போ..." என்றவுடன்,

"சரி, வருகிறேன்..." என்றபடி, விளம்பரம் போய்க் கொண்டிருந்ததால்... "ஜூஸ் இல்லையாம்மா...?" என்று அதையும் போட்டு எடுத்துக் கொண்டு போனாள்.

உள்ளே போக, ராதா வாமிட் எடுத்துக் கொண்டிருக்க,

ஓடிச் சென்று தலையைப் பிடித்தவள்... அவளுக்கு உதவி செய்து விட்டு, அவளை ஜூஸ் குடிக்கச் செய்ய, அவள் ஓரளவுக்கு மேல் குடிக்க முடியாமல் வைத்துவிட....

"சரி. நான் குடிச்சுக்கிறேன்... ப்ரூட்ஸாவது சாப் பிடுங்க..." என்றபடி, வற்புறுத்தி உண்ண வைத்தவள்,

அங்கிருந்த கருப்புத் திராட்சையைப் பார்த்து, "ஐயோ அண்ணி... இந்த க்ரேப்ஸ் வேண்டாம்... குழந்தை கருப்பாப் பிறக்கும்..." என்று தன் அருகே வைத்துக் கொண்டாள்.

சிரித்தாள் ராதா.

"உங்க அண்ணாவும் கலர், நானும் கலர். அதெல்லாம் ஒண்ணும் ஆகாது," என்றவளிடம்,

"உங்க விஜய் அண்ணா கொஞ்சம் பிளாக்தானே...! அதனாலதான்... ஜீன் தானே காரணம்..." என்றவள், "என் ஃப்ரெண்டும் அவ ஹஸ்பெண்டும் நல்ல கலர்தான் அண்ணி. ஆனா... அவளுக்குப் பையன் மட்டும் கருப்பு... கேட்டா பாட்டி மாதிரின்னு சொல்றா... அதுதான்..." என்றபடி விழி விரித்து அப்பாவியாய்ச் சொல்ல,

"சரி, விடு. சாப்பிடலை..." என்று சொல்லியவளுக்கு மீண்டும் வாமிட் வருவது போல் இருக்க, மீண்டும் வாஷ் பேசின் அருகே செல்ல... "வரவா...?" என்றபடி எழுந்தவளை,

"வேண்டாம்... வர்ற மாதிரி இருக்கு. அவ்ளோதான்," என்று போக,

தீக்ஷா படத்தில் ஆழ்ந்து விட்டாள்.

"அண்ணி... சீக்கிரம் வாங்க. செம சீன்..." என்று கத்த, "இதோ வருகிறேன்..." என்றபடி முகத்தைத் துடைத்தபடி ஆயாசமாக நடந்து வர... தீக்ஷா, அவள் வைத்திருந்த திராட்சையைச் சாப்பிட்டபடியே டி.வி.யில் கவனம் வைத்தபடி... "அந்த ஜூசையும் எடுத்துட்டு வாங்க..." என்று அதையும் கையில் வைத்துக் கொண்டு....

"அண்ணி, சான்ஸே இல்லைல்ல... என்ன ஒரு லவ்.... சக்தி, சக்தி, சக்தின்னு எப்படி உருகுறான்!" என்று இவளும் உருக,

"அண்ணி... இப்படி ஒருத்தன் உருகுகிறான்னா... எத்தனை ஆக்ஸிடெண்ட்டையும் சந்தோசமா அனுபவிக்கலாம்," என்று சொல்ல,

"எனக்கு வேண்டாம்பா... என் தீபன் இப்படியெல்லாம் கஷ்டப்படக்கூடாது..." என்று சொன்னவளிடம்,

"அடப் போங்க அண்ணி... நீங்க வேற... விளையாட்டுக்குத்தானே.... சும்மா கூடச் சொல்ல மாட்டீங்களே...!" என்றபடி,



"அண்ணி, உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா...? சக்தின்ற பேர் எனக்கு ரொம்பப் பிடிக்கும். எதனால சொல்லுங்க...?" என்று சொல்ல,

"தெரியலையே... ஏன்?"

"கண்டு பிடிங்க, பார்ப்போம்..." என்று சொல்ல,

"தெரியலையே... உன் ஃப்ரெண்ட் யாரோட பேராவது... இல்லை, பாய் ஃப்ரெண்ட் பேரு..." என்று கண் சிமிட்ட,

"இல்லை... தீக்ஷாவைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்க..." என்று சொல்ல, அவளும் சொல்லிப் பார்க்க.... அது சக்தி என்று முடிய,

ராதா திகைத்தாள்.

"இப்போ சக்தி சக்தின்னு சொல்லிப் பாருங்க..." என்று சொல்ல, அவளும் சொல்லிப் பார்க்க, அது தீக்ஷா என்று முடிய... ஆச்சரியமாகப் பார்த்தாள்.

"எப்படி.... இந்த தீக்ஷாவோட பேர் ரகசியம்..." என்று சிரிக்க, "அடிப்பாவி..." எனும் போதே,

செருமல் சத்தம் கேட்க, இருவரும் திரும்ப, இறுகிய முகத்துடன் அவர்கள் பின்னால் விஜய் நின்றிருக்க...

"வாங்கண்ணா...!" என்று ராதா எழ,

"நீ உக்காரும்மா..." என்று தீக்ஷாவை ஒரு முறை முறைத்தபடி அமர்ந்தான்.

"சாரி... இன்னைக்குத்தான் டெல்லியிலேருந்து வந்தேன். வந்தவுடனே அம்மா சொன்னாங்க..." என்றபடி அவன் பேச ஆரம்பிக்க, கீழே இறங்கி அவனுக்கு ஜூஸைக் கலந்தபடி மேலே கொண்டு சென்றவள், ஒரு ஹால்ஸ் மிட்டாயையும் எடுத்துக் கொண்டாள்.

"இந்தாங்க விஜய் அத்தான்..." என்று ஜூசை நீட்ட... "எனக்கு வேண்டாம்..." என்று விரைப்புடன் சொல்ல,

"சரி, இது வேண்டுமா...?" என்று ஹால்ஸை நீட்ட, கடுப்பான விஜய்...

"இது எதுக்கு? நான் கேட்டேனா...?" என்று சொல்ல,

"வரும்போது செருமிக்கிட்டே வந்தீங்களே, அதுதான்... தொண்டையில ஏதாவது கிச் கிச் ப்ராப்ளமோன்னு நினைத்தேன்..." என்றவளிடம்,

"என்ன... நான் இருக்கட்டுமா, இல்லை போகட்டுமா...? அறுக்காதே... எதுன்னாலும் யூஸ்ஃபுல்லா பேசுறியா...? பேசுறது எல்லாம் வேஸ்ட். என் தங்கச்சி கிட்டப் பேசணும்... கொஞ்சம் வெளில போறியா...?" எரிச்சலாய்ச் சொன்னவன், அதன் பின் அவள் புறம் திரும்பவில்லை.

'இவன் கிட்ட யூஸ்ஃபுல்லா என்ன பேசுறது...?' என்று அவன் திட்டுவதை எல்லாம் வழக்கம் போல இந்தக் காதில் வாங்கி விட, அடுத்த அரை மணிநேரத்தில் அவனும் கிளம்பினான். ஆனால், அவன் வந்து போன அடையாளம் அடுத்த நாள் எதிரொலித்தது.

அது என்னவென்றால்...

கலைச்செல்வியும் ராகவேந்தரும் வந்திருந்தனர். விஷயம் என்னவென்றால், ராதாவைத் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் செல்ல.

எதனால் என்று தெரியவில்லை. மறுத்துப் பார்த்தும் விடவில்லை. தீக்ஷாவுக்குக் கோபம் கோபமாக வர... பொங்கி விட்டாள் அவர்களிடமே.

"ஏன் பிரச்சனை பண்றீங்க...? எங்களுக்கும் ஓரளவு வசதி இருக்கு. இது எங்க வீட்டு வாரிசு. அதைப் பார்த்துக்க எங்களுக்கும் தெரியும்... ஏழு மாசத்தில வளைகாப்புப் போட்டுக் கூட்டிட்டுப் போறதுன்னா கூடப் பரவாயில்லை... இப்போவேன்னா அதிகம்தான்... நாங்க உங்களை விட வசதி



குறைந்தவங்கதான். அதுக்காக எல்லா விஷயத்திலேயும் தலையிடாதீங்க..." என்று பத்ரகாளியாய் மாறி ஆட...

"இல்லம்மா..." என்று தயங்க...

'இது அந்த விருமாண்டி வேலைதான்...' என்று தீர்மானித்த தீக்ஷா, முதன் முதாலாக அவனை உண்மையாகவே எதிர்க்க ஆரம்பித்தாள்.

ஏனோ தாங்கள் அடிமையாக இருப்பது போல், பட படவென வெடித்து விட்டாள்.

ஜெயந்தி கூட அதிர்ந்து விட்டார். குறும்பு மட்டுமே உள்ள தன் பெண் வளர்ந்து விட்டாளோ என்று முதன் முறை நம்ப ஆரம்பித்தார்.

அதன் பிறகு ராதாவும் வர மறுத்து விட... கொஞ்சம் சாதாரணமாக இருந்த விஜய், தீக்ஷாவிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசவில்லை. தீக்ஷாவும் அதன் பிறகு முன்பு போல் வம்பு வளர்ப்பதில்லை. அவனை விட்டுத் தள்ளியே நின்றாள்.

அன்று வந்து விட்டுப் போய்... தன்னைப் பற்றி அவன் தவறாக நினைத்துவிட்டான் என்பது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. அதாவது ராதா, தனக்கு வேலை பார்ப்பதைப் பார்த்து விட்டான். அதனால் அவன் டென்சன் ஆகித் தன் பெற்றோரை அனுப்பியிருப்பதைப் புரிந்து கொண்டாள். எத்தனையோ முறை அவனிடம் அவமானம் அடைந்திருக்கிறாள்தான்... அப்போதெல்லாம் விழிக்காத அவள் தன்மானம் விழித்துக் கொள்ள, அவனிடம் முன்பு போலப் பேச விரும்பவில்லை. அவனும் அதற்காக வருத்தப்படவில்லை என்பது அவளுக்கும் புரியாமல் இல்லை.

ஏழு மாதங்கள் கடக்க... ஒரு நல்ல நாளில் வளைகாப்பு நடக்க... ராதா, தன் பிறந்தகத்திற்குச் சென்றாள்.

தீக்ஷாவும் அவளை அடிக்கடி போய்ப் பார்த்துத்தான் வந்தாள்.

இதற்கிடையே தீக்ஷாவிற்கு... ஒரு புறம் வரன் பார்க்க ஆரம்பிக்க ஏற்பாடாக, அதே நேரத்தில் அவள் அலுவலகத்திலிருந்து அவளை வெளிநாடு அனுப்பவும் முடிவு செய்யப்பட்டிருக்க, தற்காலிகமாக வரன் பார்ப்பது நிறுத்தப்பட்டது.

ஜெயந்திக்குத்தான் அதில் இஷ்டம் இல்லை. வைத்தீஸ் வரனிடம் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. சுரேந்தர் இருக்கும்போது மகளை வெளியில் கொடுக்க மனதில்லை.

ராதா வீட்டு நிலவரமும் அவளுக்குத் தெரியவில்லை. இப்படி வரன் வருவதைச் சொன்னாலாவது.. ராதாவின் அம்மா கலைச்செல்வி ஏதாவது சொல்வார்கள் என்று நினைத்துக் கலைச் செல்வியிடமும் சொல்ல,

"அப்படியா...?" என்று சொல்லி விட்டு, "நல்லா விசாரிச்சுப் பண்ணுங்க..." என்று அக்கறைப்பட்டதோடு சரி. இடையில் அவர்கள் வீட்டில் என்ன ஆனது என்று தெரியவில்லை.

ஜெயந்தி அன்று புலம்பிக் கொண்டே இருந்தார்.

எதற்கெடுத்தாலும் தீக்ஷாவைத் திட்டிக் கொண்டே இருக்க,

"என்னம்மா உங்க பிரச்சினை... நொய் நொய்னு....." என்று கேட்க,

"ஏன், சொன்னா அப்டியே நடத்திக் காட்டிருவியா?" என்றபோதே...

"அட போங்கம்மா... அவ அவளுக்கு ஆயிரம் வேலை இருக்கு... சும்மா சும்மா ஏதாவது பேசிட்டு..." என்றபடி,

"சுரேந்தர் அத்தான் கூட வெளியில போறேன்... பாஸ்போர்ட் எடுக்கிற விசயமா. அவரும் ரென்யூவல் பண்ணணுமாம்... ரெண்டு பேரும் ஒண்ணாப் போறோம்..." என்று சாவதானமாகச் சொல்ல,



விழி விரிய நின்ற தன் தாயிடம், "ரொம்ப கற்பனை பண்ணிக்காதே. கண்ணைக் கொஞ்சம் சுருக்குங்க..." என்றபடி... சுரேந்தருக்கு கால் செய்தபடி வெளியேறினாள் தீக்ஷா.

"அத்தான்... என் ஸ்கூட்டியில வரவா...?" என்றவாறே தன் ஸ்கூட்டியின் அருகே போக... சுரேந்தரே காரில் வந்து நிற்க,

"அய்யோ அத்தான்... சூப்பர் போங்க," என்றபடி அவனிடம் பேசியபடியே அமர்ந்தாள் தீக்ஷா.

"எல்லா ரிப்போர்ட்ஸும்.... சர்ட்டிஃபிகேட்ஸும் இருக்கா தீக்ஷா?" என்றவனிடம், தலை ஆட்டியபடி வெளியே பார்க்க, மழை வரும்போல இருக்க...

"மழை வரும் போல இருக்கு, அத்தான்..." என்றபடி பேசிக் கொண்டே வர, ஒரு வளைவில் அவர்களைத் தொடர்ந்தபடி ஒரு லாரியும் வந்து கொண்டிருந்தது.

தீக்ஷாவோடு பேசிக் கொண்டே சென்ற சுரேந்தர், முதலில் கவனிக்கவில்லை. சாதாரணமாக வருகிறது என்று விட்டு விட்டான்.

அதன் பிறகுதான் கொஞ்சம் கவனிக்க, தங்களை நோக்கி வருகிறது என்ற உண்மை புரிய... தீக்ஷாவிடம் சொல்லாமல் காரை வேகமாக ஓட்ட... அவனின் வேகமும்... விலை உயர்ந்த அந்தக் காரின் ஏசியைத் தாண்டி வியர்வை முத்துக்கள் அரும்புவதையும் பார்த்த தீக்ஷா,

"அத்தான்..." என்று அச்சம் காட்ட,

அவளைப் பயப்படாமல் இருக்கச் சொன்னவன், சற்று அந்த லாரியை உற்று நோக்க, 'இவங்கதானா...?' என்று நிம்மதி அடைய,

"நம்மைப் பயமுறுத்துறதுதான் அவங்க நோக்கம்... இடிக்க மாட்டாங்க," என்ற போதே, அவன் சொல்லியது

போலவே அந்த லாரி கடைசி வரை இடிக்காமல் பயம் மட்டும் காட்டிவிட்டுச் சென்றது.

நிறுத்தி... இறங்கி... அவர்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல வார்த்தைகளைச் சொல்லித் திட்டியவன்...

தன் அண்ணனுக்குப் போன் செய்தான்.

"அண்ணா... அந்தப் பொறுக்கி தீனா நாய் பார்க்கிற வேலைதான்.. என்னையவே பயமுறுத்திட்டான்..." என்று சொல்ல,

அவன் அடுத்த அரை மணி நேரத்தில் அங்கு வந்து சேர...

தீக்ஷாவைப் பார்த்து, "இவளும் உன்கூட வந்தாளா?" என்று கேட்க,

"உன்னை.... யுகேந்திரன்தான் புரியாம பண்றான்னா... நீயுமா... இவளைப் பார்த்து வெச்சு... இவளையும் நம்ம குடும்ப லிஸ்ட்ல சேர்த்து வைக்கப் போறாங்க. ஏற்கெனவே ராதாவை அந்த வீட்ல கொடுத்திட்டு அவளுக்கு என்ன ஆகுமோன்னு பயந்துட்டு இருக்கோம்...." என்றவன்,

"நீ என்ன விசயமா இவன் கூட வந்தே...?" என்று மிரட்ட, அவளுக்கு அழுகையே வரும் போல் இருக்க,

"பாஸ்போர்ட் எடுக்கிற விஷயமா..." என்று கூற,

"ஏன், உனக்குத் தனியாப் போகத் தெரியாதா...? வாய் நல்லாத்தானே பேசுற... பாஸ்போர்ட் எடுக்கவே இவன் துணை வேணும்னா... வெளிநாட்டில் எப்படிச் சமாளிப்பே...?" என்றபடி,

"சுரேந்தர், நீ போ..." என்றபடி அவனைக் கிளம்பச் சொல்ல,

"சாரிண்ணா... இனி இது போல் நடக்காமப் பார்த்துக்கிறேன்...." என்று சொல்லியவன்,



"தீக்ஷா, வா..." என்று அழைக்க,

"நீ போ," என்று அவன் குரல் தொனித்த கடுமையில்... சுரேந்தர் அவளிடம் மன்னிப்புக் கேட்டபடி காரை எடுத்துக் கிளப்ப,

"விஜய் அத்தான்..." என்று அவள் கூறும் போதே மழையும் பெய்ய ஆரம்பிக்க,

"இன்னொரு தடவை என்னை விஜய் அத்தான்.. நொத்தான்னு சொன்னேன்னு வெச்சுக்க... பிச்சுருவேன். எத்தனை தடவை சொன்னாலும் அடங்க மாட்டியா...? சுரேந்தருக்கு உன்னை மாதிரிப் பொண்ணெல்லாம் நினைச்சுக்கூடப் பார்க்க முடியவில்லை. என் அம்மா வரை மயக்கி வச்சுருக்க... அவங்க என் கிட்டேயே உன்னை அவனுக்கு எடுக்கவான்னு கேட்கிறாங்க... அந்த அளவு மயக்கி வச்சுருக்கே. எங்க அம்மாவைத் திட்டி மாற்றி வெச்சுருக்கேன்..." என்றவனைத் திகைத்துப் பார்க்க,

"இதுதான் உனக்குக் கடைசி வார்னிங்..." என்றவனிடம்,

"அத்தான்... திஸ் இஸ் டூ மச்..." என்றபடி மழையில் உதடுகள் வெடவெடக்கப் பேசிய தீக்ஷாவிடம்,

"என்ன... அப்படியெல்லாம் ஒரு எண்ணம் இல்லை.... அப்படின்னு சொல்லப் போறியா...?" என்று கேட்டபடியே,

"அப்படி இருந்தால் கூட மறந்துரு... புரிஞ்சதா...? இப்போ காரில் ஏறி உட்காரு... உங்க வீட்ல கொண்டு போய் விடுகிறேன்..." என்று சொல்ல,

அவளோ அவனைத் தாண்டி மழையில் நடந்து சென்றாள். அவன் கூப்பிடக் கூப்பிட... கண்ணில் நீர் வழிய... நடந்து போனவள், அருகில் வந்த ஆட்டோவை நிறுத்தி ஏறியபடி அவனைக் கடந்து சென்றாள்.

அதன் பிறகு தானாகவே விஜய் போலவே சுரேந்தரையும், யுகேந்திரனையும் விட்டு விலக ஆரம்பித்தாள்.

பாஸ்போர்ட் எடுத்து வெளிநாடு செல்லும் தினமும் அருகே வர... அதே நேரத்தில் ராதாவிற்கு எட்டாவது மாதமே வலி எடுக்க... அவள் நிலை கொஞ்சம் சரி இல்லாமல் போக... தீக்ஷாவின் வெளிநாட்டுப் பயணம் ரத்தானது.

சுனந்தா எட்டாவது மாததே அத்தையைப் போல் குறை மாதக் குழந்தையாகப் பிறந்து வைத்து, தீக்ஷா படுத்தி வைத்ததைப் போல் வைக்க... குடும்பமே தவித்துப் போய்... ஒரு வழியாய்த் தாயும் சேயும் நல்லபடியாக வீடு திரும்பினர்.

சுனந்தா பிறந்த சந்தோஷத்தில் நம் தன்மானச் சிங்கம் தீக்ஷா... தன் தன்மானத்தை எல்லாம் காற்றில் பறக்க விட்டவளாய்... யுகேந்திரனிடமும், சுரேந்தரிடமும் தன்னையும் அறியாமல் மீண்டும் பேச ஆரம்பிக்க... வழக்கம் போல விஜய் முறைக்க...

அவனிடம் நேரடியாகச் சென்றவள், "என்ன, பார்க்கிறீங்க... எத்தனை தடவை சொன்னாலும் இவ அடங்க மாட்டேங்குறேன்னா... நான் இப்படித்தான் இருப்பேன்... முடிஞ்சதைப் பார்த்துக்கோங்க..." என்று அலட்சியமாகச் சொல்லி,

"தென்.. எனக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை.... யுகி எனக்கு ஒரு ஃப்ரெண்ட்... சுரேந்தர் அத்தான் எனக்கு ப்ரதீபன் மாதிரிதான். உங்க வீட்ல வந்து கேட்டிருந்தால் கூட நான் வேண்டாம்னுதான் சொல்லி இருப்பேன்..." என்றவள்,

அவனை நிறுத்தி, "தடுமாறணும்னு நினைத்திருந்தால்.... பன்னிரண்டாவது படிக்கிறப்ப எனக்கு சாரகேஷ்னு ஒருத்தர் லவ் லெட்டர் கொடுத்தார். அவர் கிட்டேதான் தடுமாறி இருப்பேன். அவரை விடல்லாம் இவங்க யாரும் எனக்காக உருகல..." என்றபடி போனவள்,



"இதெல்லாம் எதுக்குச் சொல்றேன்னா... உங்க ஹார்ட் அப்பப்ப என்னை உங்க தம்பிங்க கூடப் பார்த்ததும் நின்னுடுதாமே.... என் ஹார்ட்டுக்கு அது டெலிபதி அனுப்பிச்சு... அதை நினைத்துத்தான் போனாப் போகுதுன்னு விடுறேன். ஸ்டேட்டஸ்... ஸ்டேட்டஸ்னு அதைக் கட்டிக்கிட்டு நீங்க அழுங்க... உங்க தம்பி ரெண்டு பேரோட வாழ்க்கையைப் பாழாக்கிடாதீங்க," என்றபோதே, ஒரு விரல் காட்டி அவளை எச்சரிக்க ஆரம்பித்தவனை,

"இருங்க... நான் பேசிக்கிறேன். சும்மா சும்மா மிரட்டுனீங்க... அதுக்கப்புறம் அதுக்கு மரியாதையே இருக்காது... உங்களுக்கும் மரியாதை இருக்காது. எங்க வீட்டுப் பக்கம் உங்க அம்மா வந்து... இதுக்கப்புறம் என்னைப் பொண்ணு கேட்கிற மாதிரி எதுவும் நடந்துச்சு... அசிங்கப்படுத்திருவேன்.

"அதனால... உங்க அம்மாவையும், உங்க ரெண்டு... இல்லையில்லை... யுகி லிஸ்ட்ல வர மாட்டார்... சுரேந்தர் தம்பிய... பத்திரமாப் பார்த்துக்கோங்க... உங்க கைக்குள்ள வச்சு! இனி என்கிட்ட ஏதாவது வச்சுக்கிட்டீங்க... அண்ணியோட அண்ணன்லாம் பார்க்க மாட்டேன்!" என்று முடித்து, அவனின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அவனை விட்டு விலகி வெளியே வந்தவளுக்கு... அன்று அந்த மழை நாளில் பேசிய அவனின் பேச்சுக்குப் பதிலடி கொடுத்த திருப்தியில் சுனந்தாவைக் கொஞ்ச ஆரம்பித்தாள்.

சுனந்தாவுக்கு அப்போது பேர் வைக்கவில்லை.

ப்ரதீபன் வீட்டில் சுனந்தா என்று வைக்க... ராதா வீட்டில் சுலேகா என்று வைக்க...

மீண்டும் அங்கு ஒரு யுத்தம் வர ஆரம்பிக்க... ராதாவும் பிரதீபனும் அரண்டு விட்டனர்.

"அண்ணா... நம்ம வீட்டு வாரிசுக்கு நாமதான் பேர் வைக்கனும்..." என்று சொல்ல,

விஜயோ, "அந்தப் பேரை விட.... சுலேகா என்ற பேருக்கு நியூமராலஜி நல்லா இருக்கு, தீக்ஷா!" என்று பதமாய்த்தான் சொன்னான்.

"நீங்க உங்க புள்ளைக்கு அதைப் பார்த்து வச்சுக் கோங்க. இல்லை, உங்க வீட்டு வாரிசுக்கு மூணு பேர் இருக் கீங்க... எங்க வீட்ல எங்க அண்ணா மட்டும்தான்..." என்று பிடிவாதமாக இருக்க்,

வேறு வழியின்றி ஃபைனலாகச் சீட்டுக் குலுக்கிப் போட்டதில் தீக்ஷாவே வெல்ல...

"சந்தோஷமா தீக்ஷா!" என்று அனைவரும் கேட்க... விஜய்யைத் தவிர.

"என்னமோ நான் சொன்னதால் வச்ச மாதிரி கேட் கிறீங்க... அதுல மாறி வந்திருந்தா... அந்தப் பேர்தானே வச்சுருப்பீங்க!" என்று விஜய்யை முறைக்க...

அவன் பதிலுக்கு முறைக்கவில்லை.. அதற்குப் பதில் யாருமில்லாத சமயம் அவளிடம் வந்து நின்றான்.

"என்ன ஓவராப் பண்ணிட்டு இருக்க... பொறுத்துப் போய்ட்டு இருக்கேன். அமைதியா இருக்கேன்னு பார்க் கிறியா... வாழ்நாள் பூராக் கதற வச்சுருவேன். என்னைப் பத்தித் தெரியாம விளையாண்டுட்டு இருக்க... வீட்டுக்கு வந் தோமா, போனோமான்னு இருக்கணும்..." என்று அவள் அருகில் நெருங்கிய விஜய், மிரண்டு விலகிய தீக்ஷாவிடம்,

"ச்சீ... உன்னையெல்லாம் தொட மாட்டேன்... அந்தப் புத்தில்லாம் கிடையாது...." என்றவன்,

"நான் அமைதியா இருக்கேன்னு நினைத்து ஆடாத. இது ரெண்டாவது தடவை, நீ என்னை ஜெயித்தது... மூணு மாசத்தில ராதாவை வீட்டுக்கு அனுப்பாம பிரச்சனை பண்ணி ஜெயிச்ச... இப்போ பேர் வைக்கிறதுல. இனி என்னோட லைன்ல க்ராஸ் பண்ணின... அதுக்கப்புறம் வாழ்நாள் முழுசும் என்னை உன் வாழ்க்கையில சந்திச்சது தப்புனு கதறுவ... புரிஞ்சுதா...?" என்று அவளைத் தள்ளி விட்டுப் போக,



"என்ன பண்ணுவீங்க?" என்று வீராப்பாய்க் கேட்க,

"ஸ்... எனக்கு முன்னால இப்படிப் பேசாதடி... யாருமே என்கிட்ட இப்படிப் பேசினதில்லை... அப்டியே பி.பி. ஏறுது!" என்று முறைக்க,

"நான்... என்ன பண்ணுவீங்கனு கேட்டேன், விஜய்..." என்று அழுத்திக் கேட்ட போது,

"ஏய்... என்னடி விஜய்னு பேர் சொல்ற... பேச வாய் இருக்காது..."

அவன் கை அவளை நோக்கி உயர, அதே நேரத்தில் அங்கு ராதாவும் வர.... இருவரும் விலகினர்.

அன்று எந்த ரசாபாசமும் அவர்களுக்கு இடையில் நடக்காமல் போக... தீக்ஷாவிற்கு அவன் கண்களில் இருந்த வெறி, சற்று வயிற்றில் புளியைக் கரைத்தாலும்... என்ன பண்ணிடுவான் என்று அலட்சியமாக விட்டு விட்டாள்.

ஆனால் இன்னொரு நாள் அது எந்தவொரு தங்கு தடையுமின்றி நிறைவேறி விஜய்யின் கைகளால் அவமானப் படுத்தப்பட்டாள் தீக்ஷா.

அதுவும் சுனந்தாவின் முதல் பிறந்த நாளில் நடந் தேறியது.

# 9

**ரா**தாவுக்கு மனசே சரியில்லை. கடந்த 10 நாட்களாய்... அதுவும் தீக்ஷாவை அவள் அண்ணன் அடிக்கக் கை நீட்டிய காட்சி இன்னும் இப்போது நடந்தது போல் இருக்க... தன் அண்ணனைப் பற்றிச் சரியாகத் தெரியாமல் தீக்ஷா ஆடுகிறாள் என்றே தோன்ற... கலங்கினாள்.

அதுமட்டும் இல்லை.... இது தன் கணவனுக்குத் தெரிந்தால்... அவன் வேறு ஆடுவான்... என்றெல்லாம் குழம் பியவள்...ஒரு முடிவுக்கு வந்தாள்.

'சீக்கிரம் தன் புகுந்த வீட்டிற்குப் போக வேண்டும்... அப்போதுதான் தீக்ஷா இங்கு அடிக்கடி வருவது நடக்காது. அது மட்டும் இல்லை... அவளுக்கு வரன் பார்த்துத் திருமணத் தையும் முடிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்... இங்கு அண்ணனுக்கும் ஏதாவது நல்லது நடக்க வேண்டும்.

இப்படியெல்லாம் முடிவு செய்தவள்... தன் தாயிடம் பேச ஆரம்பித்தாள். யுகேந்தரும் கூட இருந்தான்.

"ஏம்மா.... அண்ணாவுக்கு எப்போ மேரேஜ் பண்ண?" என்று கேட்க,

அவ்வளவுதான். கலைச்செல்வி தன் மன வருத்தத்தை எல்லாம் தன் மகளிடம் கொட்ட ஆரம்பித்தார்.

"ஆமா. அது ஒண்ணுதான் குறைச்சல்... ஏதோ துபாய்ல இருக்கிற கம்பெனியோட கொலாப்ரேசன்ல... ஒரு பெரிய... பார்ட்னர்ஷிப் கிடைக்கிற மாதிரி இருக்காம்... அது சைன் ஆச்சுன்னா.... பிசினஸ் இன்னும் வளருமாம்... இருக்கிறதை வச்சு பண்ணுவானா... அந்த தீனாவும் இதை டார்கெட் பண் றானாம்...

"தீனாவும் இவனும் எப்போதான் ஒருத்தருக்கொருத்தர் மோதிக்கிறதை நிறுத்துவாங்களோ...! அன்னைக்குக் கோவில்ல தீனா அம்மா வரலட்சுமியையும், ஆர்த்தியையும் பார்த்தேன். ரொம்ப நாளைக்கு அப்புறம் பார்த்தேனா... பேசிட்டு வந்தேன். ஆர்த்தி நல்லா வளர்ந்துட்டா... அத்தை அத்தைன்னு விடவே இல்லை.... முதலில் எல்லாம் நம்ம வீட்டுக்கு வருவா... அவ அண்ணனும், நம்ம விஜய்யும் எப்போ போட்டி போட ஆரம்பிச் சாங்களோ.... இப்போ அவ வருவதே கிடையாது...

"அவங்க அப்பாவும்... உன் அப்பாவும் சேர்ந்து இதே பிஸினஸ்தான் பண்ணினாங்க... இப்போ... இவனுங்க ஏன் தான் இப்படிப் போட்டி போடறாங்களோ... உங்க அப்பாவும் கண்டுக்க மாட்டேங்கிறார். இதுலாம் தொழில் திறமைடினு புள்ள மேல பெருமை வேற... எங்க போய் விடப் போகுதோ, என் புள்ளைய..." என்ற போது அருகில் இருந்த யுகி, தன் அன்னையைப் பார்த்துக் கொண்டே இருந்தான், கண்களில் கலக்கத்தோடு.



"விஜய்க்குப் பண்ணிட்டு... சுரேந்தருக்குப் பண்ணணும். அவனுக்குப் பொண்ணு வேற தேடணும்... புரிஞ்சிக்க மாட்டேங்கிறான் உங்க பெரிய அண்ணன்..." என்று புலம்பிச் சென்ற கலைச்செல்வியைப் பார்த்து... பின் யுகேந்தர் ராதாவைப் பார்க்க... ராதாவும் யுகேந்தரைப் பார்த்தாள்.

யுகியின் கவலை படிந்த முகத்தைப் பார்த்து, "என்ன?" என்று கேட்க... "ஒண்ணுமில்லை..." என்றபடி அவனும் வெளியேற... ராதாவிற்குச் சற்றுக் கலக்கம் அதிகமானது தான் உண்மை.

**அ**தன் பின் ராதா ஆறு மாதத்திலேயே புகுந்த வீடு வந்து சேர.... தீக்ஷாவுக்குச் சுனந்தாதான் எல்லாம் என்ப தாகிப் போனாள். வேலைக்குப் போகும் நேரம் போக... சுனந்தாவோடுதான் பொழுதைக் கழிக்க,

கலைச்செல்வியும்... ராகவேந்தரும் அன்று தன் பேத்தியைப் பார்க்க வந்திருந்தனர்.

அவர்களிடம் பேசியபடி இருந்த தீக்ஷா, சற்று நேரத்தில் உள்ளே போக... கலைச்செல்வி... தீக்ஷாவின் பெற்றோரிடம் அவர்கள் கையோடு கொண்டு வந்திருந்த சில வரன்களை அவர்களிடம் கொடுத்தார்.

"இந்த வரன்லாம் பாருங்க, ரெண்டு பேரும்... ஒத்து வந்தா... தீக்ஷாவுக்குப் பிடித்தால் நாம ப்ரொசீட் பண்ண லாம்... பணத்தைப் பற்றி எல்லாம் கவலைப்படாதீங்க. ஜாம் ஜாம்னு முடிச்சிடலாம்!" என்று கலைச்செல்வி சொல்ல,

ஜெயந்திக்கு வருத்தத்தோடு ஆத்திரமும் வந்தது.

'இவங்க வீட்ல மூணு பசங்க இருக்காங்க.... ஒருத்தருக்கு எடுக்க மனசு வரல... வந்துட்டாங்க, ஜாதகத்தை எடுத்துக்கிட்டு...' என்று மனதில் மட்டும் நினைத்தபடி தலை ஆட்டி வைத்தார்.

ஆனால் கலைச்செல்விக்குத் தீக்ஷாவைச் சுரேந்தருக்கு எடுக்க வேண்டுமென்ற ஆசை இருந்தும்... விஜய் கோபம் காரணமாக... அந்த ஆசையை விட்டு விட்டார் என்பது ஜெயந்திக்கு அப்போது தெரியவில்லை.

மேலே கேட்டுக் கொண்டிருந்த தீக்ஷாவுக்கு... அன்று விஜய் பேசியது ஞாபகம் வர,

'இவங்க எனக்கு மாப்பிள்ளை பார்க்கிறாங்களா...? இதைக் கேட்டால் கூட அவன் ஆடுவான்... நம்ம ஸ்டேட்டஸ்க்கு அந்தப் பொண்ணுக்கெல்லாம்... மாப்பிள்ளை பார்க்கிற வேலை பார்க்கிறீங்களானு.. சொன்னாலும் சொல்வான்...' என்று எண்ண ஓட்டத்தில் இருந்தாள்.

அவர்கள் போன அடுத்த நிமிடம் கீழே வந்த தீக்ஷா...

"அம்மா!" என்று பேய்க் கத்துக் கத்த... அது அந்த வீடு முழுவதும் எதிரொலித்தது.

ராதாவும் தன் பெற்றோரை அனுப்பிவிட்டு, அப்போது தான் உள்ளே வந்தாள்.

அவளின் சத்தத்தைக் கேட்ட ஜெயந்தி... ஏற்கெனவே ராதா பெற்றோர் மேல் வேறு கோபமாய் இருக்க... இன்னும் பத்ரகாளியானாள். அதில், "என்னடி.... இந்தக் கத்துக் கத்தற! இந்த வாய் ஆடுகாலித்தனம் எல்லாம் எங்க போய் நிறுத்தப் போகுது பாரு..." என்க,

தீக்ஷாவின் கண் கலங்கி விட்டது. அவ்வளவு வேகமாகக் கத்தித் தன் தாயை அழைத்தவள்... இப்போது தாயின் வார்த்தைகளில் காயம் அடைந்தாள்.



அவள் அம்மா அடிக்கடி இப்படிச் சொல்வதுதான்.... ஏனோ அன்று அவளுக்கு அந்த வார்த்தைகள்... அவளது மனதைக் கீற... வார்த்தைகளில் தடுமாற்றத்துடன்... நெகிழ்ச்சியாக...அதே நேரத்தில் அமைதியாகவும்... நிதானமாகவும், "ஏன்மா... நான் உங்களுக்குத்தானே பிறந்தேன். இல்ல, தத்தெடுத்தீங்களா...?

"என்னைக்காவது நான் நல்லா இருக்கணும்னு சொல்லி இருக்கீங்களா...? என்ன ஆகப் போற... எங்க கொண்டு வந்து நிறுத்தப் போகுது... போற இடத்துல நல்லாப் படப் போற... இதெல்லாம் உங்க வாயில இருந்து... பெத்த அம்மா வாயில இருந்து வந்தா... நான் நல்லா இருப்பேனாம்மா... சொல்லுங்க!" என்று அழ ஆரம்பிக்க,

தன் பெண்ணின் கண்ணீரில்... எப்போதும் படபடவென்று பேசுபவள்... அதற்கு மாறாகப் பேசியதில்... ஜெயந்தி உள்ளம் துடித்து விட்டார்.

"அம்மாடி, தீக்ஷா... நான் மனசுல வெச்சு எதையும் சொல்லலம்மா... அய்யோ, என் பொண்ணு இப்படியெல்லாம் பேச மாட்டாளே... என்னடாம்மா ஆச்சு?" என்று ஜெயந்தி கலங்க,

தீக்ஷா தன் அன்னையிடம், "எனக்கு அவங்க கொண்டு வந்த எந்த ஜாதகமும் வேண்டாம்மா... எனக்குப் பிடிக்கலைம்மா. ப்ளீஸ்... நம்ம மாதிரி ஒரு மிடில் கிளாஸ்ல பாருங்கம்மா.... நீங்க பார்த்து யாரைச் சொன்னாலும் எனக்கு ஓ.கே. தான்மா," என்று தன் அண்ணியின் முகத்தைப் பார்த்தும் பார்க்காமலும் சொல்ல,

ஜெயந்தி திடுக்கிட்டார். தீக்ஷா இந்த அளவுக்கு மனம் நொந்து பேசுகிறாள் என்றால்... அதுவும் நம்ம மாதிரி என்றெல்லாம் பேசுகிறாளே என்று திடுக்கிட்டவரின் மனம், எதை எதையோ யோசிக்க ஆரம்பித்தது.

"என்னம்மா... எதுனாச்சும் நடந்துச்சா...? அம்மா கிட்டே சொல்லு," என்று மகளைப் பார்த்துக் கேட்டவாறே, மருமகளின் முகத்தையும் பார்க்க, ராதாவும் வெளிறிய முகத்துடன் இருக்க...

தன் மருமகளின் முகம் சொன்ன செய்தி, ஜெயந்திக்கு இன்னும் அடிவயிற்றைக் கலக்க...

"என்னடி... கேக்குறேன்ல... சொல்லு..." என்று மகளை அதட்ட, தீக்ஷா அதற்கு மேல் எதையும் மறைக்க வில்லை.

"எனக்கு விஜய் அத்தானைப் பிடிக்கலைம்மா... அவரு என்னைத் தப்பா நினைக்கிறாரும்மா.. அவங்க தம்பிங்க கூடப் பழகுறதைப் பார்த்து என்னைத் தப்பாப் பேசிட் டாரும்மா. அடிக்கக் கூட வந்தாரும்மா..." என்ற போதே மாடிக்கு எழுந்து போனாள்.

அவள் போவதைப் பார்த்தபடியே... இப்போது ஒருமைக்கு மாறினாள் தீக்ஷா.

"அன்னைக்கு அண்ணி மட்டும் வரலை... என்னை அறைஞ்சிருப்பான்மா.. அண்ணி மாதிரி இல்லைம்மா அவன்...." என்றவள், விஜய்யைப் பற்றி எல்லாம் சொல்ல...

அவள் வார்த்தைகளில் அதிர்ச்சி அடைந்த ஜெயந்திக்கு, மனம் தாளவில்லை. மகன் காதல் தன் மகளைப் பாதித்து விடுமோ என்று கலங்கினாள்.

'தீக்ஷாவுக்கு விரைவில் திருமண ஏற்பாடு செய்ய வேண்டும்... இனி அவளை ராதா வீட்டிற்கு அடிக்கடி அனுப் பக் கூடாது...' என்று முடிவெடுத்தவருக்கு, மகளை அந்த வீட்டில் கொடுக்கும் ஆசை கூடச் சுத்தமாய் மறைந்து போய் விட்டிருந்தது.

தன் மகளின் கண்களை வேகமாகத் துடைத்தவர்...



"சரி, விடுடா... நீ அங்கே அடிக்கடியெல்லாம் போக வேண்டாம்... அவங்க கூடல்லாம் பேச்சு வெச்சுக்காதா... ஆனாலும் உனக்கும் வாய் ஜாஸ்திதான்டா... நம்ம அண்ணா மாதிரியே எல்லோரும் இருப்பாங்களா...? நீயும் பார்த்துப் பேசணும்..." என்று அவளின் மன நிலையை மாற்றியபடி கெஞ்ச...

"சரிம்மா...." என்று சொல்லியவள், செல்லமாய் அவள் வயிற்றைக் கட்டிக் கொண்டு படுக்க...

தீக்ஷா தன் அன்னையை எதற்கும் தேட மாட்டாள். இன்று தன்னோடு இழைவதைப் பார்த்தவளுக்கு... மனதோட வைத்து மறுகியிருப்பாள் போல என்று நினைத்த ஜெயந்தி...

"ரொம்பத் திட்டிட்டாராம்மா விஜய் தம்பி?" என்று மகளின் வேதனை பொறுக்க முடியாமல் கேட்க...

"இவ்ளோ சொல்றேன்... இன்னும் அந்த விருமாண் டிக்கு மரியாதை... அவனை..." என்று கழுத்தைப் பிடித்து நெரிப்பது போல் பாவனை செய்ய... அப்போது அவள் அண்ணியும் கீழே இறங்க,

"போச்சுடா... பாசமலர் வந்துருச்சு..." என்று தன் தாயிடம் மெதுவாய்ச் சொல்ல,

ராதா, தன் அத்தையின் அருகில் அமர்ந்து...

"சாரி அத்தை... என் அண்ணன் சார்பா... நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்."

"என் பொண்ணு லேசுல அழவே மாட்டா, தெரியு மாம்மா... அவளையே அழ வெச்சுட்டாரு உங்க அண்ணன். நாங்க என்ன பண்ணினோம் அவருக்கு... இதெல்லாம் சரி கிடையாது... அந்தத் தம்பி கிட்டே சொல்லி வைம்மா... அப்புறம் எங்க கண்ணீரெல்லாம் சும்மா விடாது அவரை..." என்றபடி அங்கிருக்கப் பிடிக்காமல் எழுந்து போக,

இதுவரை ஜெயந்தி அவளிடம் இப்படிப் பேசியதில்லை என்பதால், சங்கடமாய்த் தலை குனிந்த ராதாவிடம்,

"சாரி, அண்ணி... என்னாலதான் அம்மா திட்டிட்டாங்க... தப்பா எடுத்துக்காதீங்க," என்று, அழுத தன் முகத்தைத் துடைத்தபடி அவளைப் பார்த்தாள்.

ராதா இப்போது,

"தீக்ஷா, நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காத... என் அண்ணன் பண்ணினது எல்லாம் தப்புத்தான். ஆனா நாங்க வளர்ந்த விதம் வேறு... உங்க விதம் வேறு... அது தான் பிரச்சினைம்மா... நீயும் அவர் கிட்டே பதிலுக்குப் பதில் பேசாமல் போயிருக்கலாம்.... அதுதான் பிரச்சினையே..." என்று தன் அண்ணனுக்கு சப்போர்ட் செய்ய, சுர்ரென்று மண்டைக்கு ஏறியது தீக்ஷாவிற்கு.

"என்ன அண்ணி, பாசமா...?" என்று இகழ்ச்சியாகப் பேசியவள்,

"நான் ஒண்ணு சொல்லட்டுமா...? இத்தனை பிரச்சனைக்குக் காரணம் என்ன தெரியுமா...? உங்க லவ் தான்..." என்று கடுப்புடன் அவளைப் பார்த்துச் சொல்லியவளைப் பார்த்து, ராதாவுக்குக் கண்களில் கண்ணீர் வர...

எரிச்சலுடன்...

"இப்போ என்ன சொல்லிடேன்னு அழறீங்க, அண்ணி...? நீங்க இப்போ எனக்குச் சொன்னீங்கல்ல... நாங்க வளர்ந்த விதம் வேறு... நீங்க வளர்ந்த விதம் வேறுன்னு... இதை உங்க அண்ணா சொல்லி இருந்திருப்பார்தானே... சொல்லி இருந்திருப்பாரு என்ன... கண்டிப்பாச் சொல்லி இருப்பாரு உங்களுக்கு... அப்போ நீங்க கேட்டீங்களா அண்ணி... கேட்கலை... இப்போ எனக்கு மட்டும் அட்வைஸ் பண்ண வந்துட்டீங்க... அவர் சொன்னப்ப கேட்டு... அவர் சொன்ன பையனை மேரேஜ் பண்ணி இருந்திருந்



தீங்கன்னா... உங்க அண்ணா சந்தோசமா இருந்திருப்பாரு..." என்று சொல்லியபடி எழுந்து போய்விட்டாள்.

அவளின் வார்த்தைகளில், 'இவ இப்போ நம்ம அண்ணாக்கு சப்போர்ட் பண்ணிட்டுப் போறாளா... இல்லை திட்டிட்டுப் போறாளா...' என்று குழம்பித்தான் போனாள் ராதா.

மருமகள், மாமியார், நாத்தனார் என உறவு முறைகளில் ஏற்படும் தடுமாற்றம் போல அங்கும் ஏற்பட்டு... சில நாட்களிலே அது மறைந்து போய்... ஒருவருக்கொருவர் பேச ஆரம்பிக்க... நிலைமை ஓரளவு சகஜமாகியது. ஆனால், இரு வீடுகளுக்கும் எதிர்த்தரப்பு ஆட்களின் பிரசன்னம் சற்று மட்டுப்பட்டது என்பதே உண்மை.

கலைச் செல்வியிடம், ராதா விஷயத்தைச் சொல்லியிருப்பாள் போல... பேத்தியைப் பார்க்க மட்டும் எப்போதாவது வருவார். ராதா அதுகூடப் போவதில்லை.

அன்று அலுவலகத்தில் இருந்து வந்த தீக்ஷா, தன் அண்ணியின் அறைக்குப் போனாள்.

"அண்ணி... நாம இன்னைக்கு ஷாப்பிங் மால் போகலாமா?" என்று உற்சாகத்தோடு அழைக்க...

ராதாவும், அவள் சகஜமாகப் பேச ஆரம்பித்த மகிழ்ச்சியில்... அவளோடு போக,

எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. திடீரென்று போன் அலற, எடுத்துப் பார்த்தால் விஜய்தான்.

தான் இருக்கும் இடத்தைச் சொன்னாள்.

"தீக்ஷா கூட... பாப்பாவும்தான்!" என்று முடிக்க... போன் வைக்கப்பட்டிருந்தது.

"யாரு அண்ணி?" என்று கேட்க,

"விஜய் அண்ணாதான் தீக்ஷா," என்று சொன்னபடி ஷாப்பிங் செய்ய... அங்கு விஜய்யின் பி.ஏ. அசோக் வந்து நின்றான்.

அசோக்கைப் பார்த்த ராதா, கேள்விக் குறியாய் நோக்க,

"என்ன அசோக்...?" என்றவளிடம்,

"உங்களை... விஜய் சார் கூட்டிட்டுப் போய் வீட்டில் விடச் சொன்னார், வாங்க..." என்றபடி அழைக்க,

"தீக்ஷாவும் வந்திருக்கா... அவ கூடப் போறேனே..." என்று பிடிவாதம் பிடிக்க, விஜய் அடுத்த 10 நிமிடத்தில் அங்கு இருந்தான்.

தீக்ஷாவின் புறம் திரும்பக் கூட இல்லை.

அவள் ஒருத்தி அங்கு இல்லவே இல்லை என்ற தொனியில் இருந்தான்.

"வா, போகலாம்..." என்று ராதாவை மட்டும் அழைக்க,

"ஏண்ணா... ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்க,

"கேள்வியெல்லாம் கேட்காதே... இப்போ என் கூட வருகிறாயா இல்லையா?" என்ற அதட்டலில் அதிர்ந்து, ராதா, தீக்ஷாவைப் பார்க்க,

அவன் ஏற்கெனவே கோபத்தில் இருக்கிறான் என்று அவனைப் பார்த்தபோதே தீக்ஷாவுக்கும் புரிய...

"நீங்க போங்க அண்ணி..." என்றபடி தன் அண்ணியோடு தானும் கீழே இறங்கி, கார் வரை வந்து அனுப்பி வைத்தாள்.

அவர்கள் போனபின்... அசோக்கிடம் வந்து, என்ன வென்று விசாரிக்க...

"அந்த தீனா இருக்கான்ல... அவன் சார் தங்கச்சியை... இங்கே ஆளை வெச்சுக் கடத்த ப்ளான் பண்ணியிருப்பான் போல...." என்று சாதாரணமாய்ச் சொல்லியபடி அவன் சென்று விட்டான்.



உடல் நடுங்கி நின்றாள், தீக்ஷா.

"கடத்தலா...? என்ன இவன் சாதாரணமா சொல் றான்...." என்று சொல்லியபடி,

சுற்றும் முற்றும் பார்க்க... அவள் கண்ணுக்குக் கடத்தும் நோக்கில் யாராவது தெரிகிறார்களா என்று பார்க்க, அந்த மாதிரி அவளுக்கு யாரும் தெரியவில்லை.

"இவனுங்க என்ன பிஸினெஸ் பண்றானுங்க... மாஃபியா கேங் எஃபெக்ட்ல பில்டப் கொடுக்கிறானுங்க..." என்றபடி தன் பைக்கை ஸ்டார்ட் செய்தாள்.

"நீ போதும் செல்லம் எனக்கு..." என்று தன் பிங்கியைக் கொஞ்ச வேறு செய்தவளுக்கு... மனதில் ஒரு உறுத்தல் வர ஆரம்பித்தது.

"நானும்தானே இருந்தேன்... என்னைக் கடத்தி இருந்தாங்கன்னா..." என்று தோன்றும் போதே உடல் தூக்கிப் போட்டது.

"எனக்கு ஒரு பாதுகாப்புத் தரணும்னு நினைத்தானா, இந்த விருமாண்டி...? இவனெல்லாம் ஒரு ஆளு... தங்கை முக்கியம்....அவளோட நாத்தனார் முக்கியமில்லையா...? இவன் வீட்டுப் பொண்ணு மட்டும் துரைக்கு முக்கியம்..." என்று திட்டியபடி வந்தவள், பின்னால் திரும்பிப் பார்க்க, அவளைத் தொடர்ந்து ஒரு பைக் வந்து கொண்டிருப்பது தெரிய... தன்னைத்தான் தொடர்கிறார்களோ என்னவோ... என்ற பயம் வந்து விட்டது அவளுக்கு.

வேகத்தில் எகிறினாள் தீக்ஷா.

"இவங்க குடும்பத்தோட சம்பந்தம் வெச்சு... இது வேறேயா...!" என்று வசை மாரி வேறு பொழிந்தபடி... 40 நிமிடத்தில் அடைய வேண்டிய தன் வீட்டை, 25 நிமிடத்தில் அடைந்தாள்.

நாட்கள் கடக்க....

தீக்ஷாவை அவள் அண்ணன் திருமணத்தில் வைத்துப் பார்த்த தாத்தாவின் மூலம் வந்த வரன் மீண்டும் வர... ஜெயந்தியும் இப்போது மனப்பூர்வமாய்ச் சம்மதம் சொல்ல... தீக்ஷாவின் ஜாதகம் அந்த வரனோடு ஒத்துப் போக... தீக்ஷாவிடம் பையனின் போட்டோ காண்பிக்கப் பட்டது.

தீக்ஷாவும், குடும்பமும் தெரிந்த குடும்பம் என்பதாலும்... பையனும் அவள் துறை என்பதாலும்... மறுப்பதற்குப் பெரிதாய் இல்லை என்று சம்மதம் சொல்ல... ஒரு நல்ல நாளில் பெண் பார்க்க வந்தனர்.

ராதா வீட்டில் இருந்தும், குடும்ப உறுப்பினர் அனைவரும் வந்திருந்தனர்.

மாப்பிள்ளை ராகேஷ் வெளி நாட்டில் இருந்ததால், அவன் வீட்டினர் மட்டுமே வர... பெண் பார்க்கும் படலமும் சுபமாய் முடிந்தது. போகும் போது அவன் தாய்... அவனது போன் நம்பரும் ஃபேஸ் புக் ஐடியும் கொடுத்து விட்டுப் போனார்.

அன்று இரவு.... படுக்கையில் புரண்டவளுக்குத் தூக்கமே வரவில்லை. என்னடா இது... பொண்ணு பார்க்க வந்ததுக்கே இந்த எஃபெக்டா என்றபடி, "ராகேஷ்" என்ற பேரைச் சொல்லிப் பார்க்க... 'ஒரு ஃபீலும் வரமாட்டேங்குதே...' என்று சிரித்தவள்,

"தீக்ஷா - ராகேஷ்" என்று தன் பெயரோடு சேர்த்துச் சொல்லிப் பார்க்க... அது ஏதோ பரவாயில்லை, கொஞ்சம் மேட்ச் ஆகுது... என்று ஆறுதல் பட்டவளாய், 'சரி, போட்டோவைப் பார்ப்போம்...' என்று போட்டோவை எல்லாக் கோணத்திலும் வைத்துப் பார்க்க... அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.



'அவன் பொண்ணு பார்க்க வந்திருந்தா தோன்றி இருக்குமோ...' என்றபடி போட்டோவைக் கண்ணாடியின் முன் தனது அருகில் வைத்துப் பார்க்க... எதிலும் மனம் துள்ளவில்லை.

'இறக்கை கட்டியெல்லாம் மனம் பறக்குமாமே... ஏன் நமக்கு ஒரு ஃபீலும் வர மாட்டேங்குது...?" என்று யோசித்தவள்...

'ப்ச்... பார்க்கப் பார்க்கப் பிடிக்கும்... இல்லை, பழகப் பழகப் பிடிக்கும்... இல்லை, தாலி ஏறிச்சுன்னா, தானா மேஜிக் நடக்கும்..." என்றபடி படுத்தவளுக்கு,

சாரகேஷ் ஞாபகம் வந்தது. 'இப்போ என்ன பண்ணுவான்...?' என்று நினைத்தபடி,

அவன் தனக்கு அக்கறையாய்ச் சொல்லிக் கொடுத்தது ஞாபகம் வர... புன்னகை வந்தது. அவன் லெட்டர் கொடுத்ததும் ஞாபகம் வர... அவன் கொடுத்தப்ப கூட பயம் வந்ததே தவிர, மனதில் வேறு எந்த எண்ணமும் தோன்றவில்லைதான். அடுத்துக் கல்லூரியில் அவளோடு படித்த சீனியர் முதல்... தன் வாழ்க்கையில் சற்று அத்துமீறி வந்த ஆண்களை வரிசைப் படுத்தியவளுக்கு யாரையும் மிஸ் பண்ணியதாகவே தோன்றவில்லை. அதில் சாரகேஷ் மட்டும் கொஞ்சம் ஸ்பெஷலாகப் பட்டான்.

ஒரு வேளை, அவன், அவள் உயிர்த் தோழியின் அண்ணன் என்பதாலா...? அவனின் தன் மீதான அக்கறையா என்று தெரியவில்லை. பிடிக்கும்... ஆனால், தன் வாழ்க்கையில் அவனை மிஸ் பண்ணி விட்டோமா என்ற அளவுக்கெல்லாம் இல்லை. கடைசியாகச் சுரேந்தர் ஞாபகம் வந்தது. அதுவும் விஜய் அன்று சொன்னதாலே வந்தது.

அவனும் அவள் மனதில் பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. தானாக அவளுக்கு யார் மேலும் ஈடு பாடும் வரவில்லை. வந்து சொன்னவர்கள் மேலும் வர வில்லை. இவன்தான் உன் வருங்காலக் கணவன் என்று சொன்ன போதும், அந்த ராகேஷ் மேலும் எதுவும் தோன்ற வில்லை.

'அடக் கடவுளே...! தீக்ஷா... இந்தக் காதல் எப்போதான் வரும் உனக்கு...?' என்று படுத்தவளுக்குத் தூக்கமே போய் விட்டது.

2 வாரங்கள் கடக்க... ராகேஷ், தானாகவே போன் செய்து பேசுவான் என்று எதிர்பார்க்க... அவனோ போன் செய்யவே இல்லை. இவளும் முதலில் பெரிதாக எடுக்க வில்லை.

அவள் அலுவலகத்தில்... இவளின் திருமண விவரம் அறிந்து அனைவரும் ஓட்ட, ராகேஷோடு பேசாமல் இருந்த தாலோ என்னவோ... அவர்கள் கிண்டல் கேலி சந்தோஷம். அவளுக்கு வெட்கச் சிவப்பை ஏற்படுத்துவதற்குப் பதில் கோபத்தையும் தலைவலியையும் ஏற்படுத்தியது என்பதுதான் உண்மை.

"என்னைக் கேலி பண்ணாதீங்க...!" என்று அவர்கள் முன் கத்த வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.

ராகேஷுக்குத் தன்னைப் பிடிக்க வில்லையோ என்று நினைவு வேறு வந்து தொலைக்க... நிம்மதி இழந்தவள்... அவளுக்கு யாரிடமாவது இதைச் சொல்லித் தன் மன அழுத்தத்தினைக் குறைக்க வேண்டும் போல் இருக்க... யுகேந்தருக்குப் போன் செய்தாள்.

அவனும் அவளது அலுவலகத்திற்கு அருகில் உள்ள ரெஸ்டாரண்டிற்கு வந்திருந்தான். அவன்தான் முதலில் வந்திருந்தான்.



இவள் வந்து அமர்ந்ததுமே, "என்ன, புதுப் பொண்ணு. எப்படி இருக்கீங்க...? வீட்டுப் பக்கமெல்லாம் வருவதே கிடையாது," என்று தன் பங்குக்குக் கிண்டலை ஆரம்பிக்க,

ஏதோ சிரிக்க வேண்டும் என்று சிரித்து வைத்தாள்.

"பார்றா... இது எங்க வீட்டு வாயாடி தீக்ஷாவா...!" என்று சத்தம் போட்டுச் சிரித்தபடி தன் கிண்டலைத் தொடர்ந்தான்.

"அப்புறம்... சும்மாவே நீ ரொம்பச் சீக்கிரம் எழுந்துருவ... இப்போ எப்படி...?" என்ற போதே, ஏற்கெனவே கடுப்பில் இருந்தவள்...

"யுகி, அடங்குறியா...?" என்று சொல்லி நிறுத்தியவள், எதுவும் சொல்லாமல் ஐஸ்கிரீம் இருந்த கப்பை ஸ்பூனால் துழாவியபடி இருக்க...

அவள் பேசுவாள் என்று யுகி எதிர்பார்க்க... தீக்ஷா அமைதியாய் இருந்தாள்.

"மூச்சு நின்னாலும் பேச்சு நிக்காதுன்னு சொன்ன மங்கையர் குலத் திலகம், பேச்சை நிறுத்திட்டாடோய்...!" என்று சொல்லி அவளைப் பார்க்க, இப்போது அவள் கண் கலங்கி யிருந்தது.

"ஹேய்... என்ன தீக்ஷா...?" என்றவனிடம்... அவன் எப்போது கேட்பான் என்று காத்திருந்தவள் போல்,

ராகேஷைப் பற்றிச் சொல்ல... அவனும் யோசிக்க ஆரம்பித்து இருந்தான்.

"யோசிக்க வேண்டிய விஷயம்தான் தீக்ஷா... நீ உன் மனசில ஆசை எதுவும் வளர்த்துக்கலையே...!" என்று தன் வீட்டுப் பெண்ணின் அக்கறையில் கேட்க,

"ப்ச்... அப்படியெல்லாம் இல்லை. யார் கிட்டேயாவது சொல்லணும்னு தோணுச்சு... உன் கிட்டே கொட்டிட்டேன்... வீட்ல யாருக்கும் தெரியாது யுகி... கல்யாண வேலை வேற நடந்துட்டு இருக்கு," என்றவள்,

"கொஞ்சம் ரிசர்வ் டைப்பா இருப்பார் போல..." என்றபடி, தானே தன் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தவள் மனம், இப்போது லேசாகி இருக்க, யுகியிடம் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தாள்.

"யுகி சார்... இப்போல்லாம் ஆர்த்தியைப் பார்க்கிறது இல்லையா...?" என்றவளிடம்,

"அதை விடு..." என்று தன் பங்கு வருத்தத்தினை அவன் கொட்ட,

"ஏன்? பிரச்சனையா என்ன...?" என்றவளிடம்,

"அவங்க அண்ணாவும்... என் அண்ணாவும் பத்தாதா... இப்போ இன்னும் தீப்பொறி பறக்குது. அவ ஸ்கூல் படிக்கிறவரை ஒண்ணும் பிரச்சினை இல்லை... இப்போ பார்க்கவே முடியலை... போன்தான்... எப்போதாவதுதான் பார்க்க முடிகிறது," என்றவன்,

"உன் கண்ணுலதான் தெரியாத்தனமாப் பட்டுட்டோம் அன்னைக்கு... அண்ணனும் வேற வந்துட்டாரு... நல்ல வேளை, அவர் பார்க்கவில்லை," என்று சொல்ல,

"எப்படி... உங்க அண்ணா கண்ணுல மண்ணைத் தூவிட்டு லவ் பண்றீங்க...? எனக்கென்னமோ உங்க அண்ணாவுக்குத் தெரியும்னுதான் நினைக்கிறேன்..." என்று சொல்லி அவனுக்குப் பீதியைக் கூட்ட,

அவனின் முகத்தைப் பார்த்தவள்,

"எதுக்கு இந்த லுக்... கூல் மேன்... உனக்கு இந்த தீக்ஷா சப்போர்ட் இருக்கு... அவர் எதிர்த்தா நான் உனக்கு மேரேஜ் பண்ணி வைக்கிறேன்..." என்று சொல்ல,

"அண்ணனை எதிர்த்தா...?" என்று ஒரு மாதிரிக் குரலில் சொன்னவன்...

"நானும் ஆர்த்தியும் பார்க்கவே மாட்டோம். போன்ல மட்டும்தான். ரொம்ப நல்ல பொண்ணு... 6 மாதம் பின்னால் சுத்தி... அதன் பிறகுதான் ஓ.கே. சொன்னாள். ராதாவும் அவளும் ஒரே ஸ்கூல் என்பதால், நான் ஸ்கூல்ல போய் நிற்கிறதை அண்ணா தப்பா எடுத்துக்கலை," என்று தன் காதல் நினைவுகளில் பின்னோக்கிச் சென்றவனின் முகமே பிரகாசமாக,



"உனக்குள்ள இப்படி ஒரு காதல் மன்னனா... யுகி...!" என்று தீக்ஷா கிண்டல் பண்ணிச் சிரிக்க,

"நீ சிரிக்கிற... ஆனா... என் நிலைமையை நினைத்தாலே பயமா இருக்கு. காதல்னு ஒண்ணு வந்துச்சுனா உனக்கும் தெரியும்..." என்றபோதே,

"அதுதான் வர மாட்டேங்குதே...!" என்று சலித்தவள்,

"எப்படி இருக்கும் அந்த ஃபீலிங்...? கொஞ்சம் சொல்லித் தா," என்று கேட்க, முறைத்தான் யுகி.

"வரும்போது உனக்கே தெரியும்...!" என்றவனிடம் குறும்பாகப் புருவத்தை உயர்த்தியபடி...

"எந்த சைடுல இருந்து வரும்...?" என்று கேட்க,

சட்டென்று, "தீக்ஷா, உன் ரைட்ல பாரு..." என்றவனிடம்,

"அந்தப் பக்கத்தில இருந்து எனக்குக் காதல் வருமாடா...?" என்று இன்னும் விளையாட்டுத்தனத்தை விடாமல் கேட்டபடி திரும்ப...

விஜய் அமர்ந்திருந்தான், ஒரு பெண்ணோடு முதுகுப்புறம் காட்டியவனாய். அவனைப் பார்த்தவள்,

"இன்னைக்கு உனக்கு வீட்ல சிவ தாண்டவம்தான்...!" என்று சிரித்தவள்,

"யாரு அந்தப் பொண்ணு...?" என்று கேட்க...

"அதுதான் இளா சிஸ்டர் இளமதி..." என்று சொல்ல,

"பேரும் சூப்பர்... பொண்ணும் சூப்பர். எப்போ மேரேஜ்... விருமாண்டிக்கு...?" என்றபடி,

"நான் ராகேஷோட யு.எஸ். போறதுக்குள்ள வெச்சுருங் கப்பா!" என்று பேசிக் கொண்டிருக்கும்போதே மொபைல் ஒலிக்க.... அதைப் பார்த்த தீக்ஷா,

"ராகேஷ் கால் பண்றாரு யுகி...!" என்று சொன்ன வளுக்கு,

கொஞ்சம் படபடப்பாகவும் இருந்தது. ஏனென்று தெரிய வில்லை. அவளின் வழக்கமான குறும்பெல்லாம் எங்கோ போய் இருந்தது.

யுகி, "தைரியமாகப் பேசு!" என்று சொல்லிப் பாவனை செய்ய,

தீக்ஷா அட்டெண்ட் செய்தாள்.

"தீக்ஷா.... நான் ராகேஷ் பேசுறேன்... எனக்கு இப்போ டைம் இல்லை. கண்டிப்பா இன்னொரு நாள் பேசுகிறேன்... என் அம்மா உன்னிடம் கேட்டால்... நான் பேசினேன் என்று மட்டும் சொல்லு," என்றபடி அவள் பதிலைக் கூட எதிர்பார்க் காமல், அவசர அவசரமாகப் பேசிப் போனை வைக்க,

'இவன் நம்மளையே பேச விடலையே...' என்று யோசித்தபடி, யுகியைப் பார்க்க,

"என்ன...?" என்று யுகி கேட்க,

"அப்புறம் பேசுறேன்னு சொன்னாரு..." என்றவளிடம்,

"இதைச் சொல்ல போன் பண்ணினாரா? சரி, வா... விஜய் அண்ணா கிட்டே ஒரு அட்டெண்டன்ஸ் போட்டுட்டு வருவோம். கண்டிப்பா பார்த்திருப்பாரு... அது என்னவோ உன்கூட வரும்போதெல்லாம் மாட்டுகிறேன்... ஆர்த்தி கூட மாட்டாம இருந்தா சரி...!" என்று அழைத்துச் செல்ல...

தீக்ஷாவோ, "விருமாண்டி ஜாலி மூட்ல இருந்தாலும், நான் விடமாட்டேன் போல... வா, வா... வழக்கம் போல என்னால முடிஞ்ச அளவுக்கு டென்சன் ஏத்துவோம்...!" என்று சொல்லி,



"எத்தனை தடவை திட்டு வாங்கினாலும்... அதை யெல்லாம் தொடச்சுத் தூரப் போட்டுட்டு நானும் பேசிட்டே இருக்கேன்ல... இந்தத் தன்மானமெல்லாம் எனக்கு மட்டும் வரவே மாட்டேங்குது போ... அதெல்லாம் ஒரு வாரத்துக்கு மேல தாங்காது... ஒரு வேளை எங்க அம்மா திட்டித் திட்டி... யார் திட்டினாலும்.... மழுங்கிடுச்சோ..." என்று பேசியபடியே வந்தவளை,

"எப்படி தீக்ஷா... இப்படி வாயைத் திறந்தா மூடவே மாட்டேங்கிற...!" என்று ஆச்சரியப்பட்டவனிடம்,

"இப்ப வாயை மூடுன்னு சொல்ற... அப்படித்தானே...! அதை டைரக்ட்டா சொல்ல வேண்டியதுதானே... ஆனா நான் மூட மாட்டேன்... இந்த தீக்ஷா மூச்சை நிறுத்தினாலும் பேச்சை நிறுத்த மாட்டா..." என்றபடியே விஜய்யின் அருகில் வந்து அமர்ந்தனர்.

"ஹாய், மதி... எப்படி இருக்கீங்க?" என்று இள மதியைக் கேட்டபடி யுகேந்தர், விஜய் அருகில் அமர... தீக்ஷா இளமதியின் அருகில் அமர்ந்தாள்.

மதி என்று அழைக்கப்படும் இளமதி, அவள் யாரென்று புரியாமல் விழிக்க,

"இது ராதாவோட சிஸ்டர் இன் லா. நெக்ஸ்ட் மன்த் மேரேஜ் ஆகப்போகுது... பையன் யு.எஸ்.ல இருக்காரு.." என்று சிரித்த முகமாய்ச் சொன்னவன், வேற யாருமில்லை விஜயேந்தர்தான்.

"தீக்ஷா... இது இளமதி..." என்று மட்டும் சொன்னான்.

நால்வரும் பேசிக் கொண்டிருந்தபோதே,

இளமதிக்கு இடையிலேயே போன் வர... முக்கிய வேலை என்று கிளம்பினாள். அப்போது யுகிக்கும் போன் வர... அவனும் எழுந்து சற்றுத் தள்ளிச் செல்ல....

விஜய் – தீக்ஷா இருவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்தனர். தீக்ஷா எதுவும் பேசாமல் சுற்றி இருப்பவர்களை மும்முரமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜய்தான் இருவருக்குமான மௌனத்தை உடைத்து...

"தீக்ஷா..." என்று அழைக்க,

அவன் குரல் வழக்கமான கடுப்பு, அலட்சியம் எல்லாம் இல்லாமல் சாதாரணமாக இருக்க,

"என்ன...?" என்று கவனமாய், அத்தான் என்ற வார்த்தையைத் தவிர்த்துப் பேசினாள் தீக்ஷா. அன்று அவன் தன்னை அறைய வந்த பின்னால், அவனிடம் அவள் பேசவே இல்லை... இன்றுதான் பேசுகிறாள்.

"ராகேஷ் போனெல்லாம் பண்றாரா...?" என்று கேட்க,

"ஹ்ம்..." என்று ஒற்றை வார்த்தையில் அவனிடம் சொல்லியவள், ஆனால், மனதிற்குள் 'ஏன் பேசலைன்னு சொன்னா... நீ பேச வைக்கப் போறியா...? வந்துட்டான் கேள்வி கேட்க...' கவுண்டர் விட்டாள்.

"குட்... இனி யுகியோட சுத்திட்டு இருக்காதே.... முதலில் கூட அது தப்பில்லை. இப்போ இன்னொரு வீட்டுக்குப் போற பொண்ணு... பார்த்து நடந்துக்க... எங்க வீட்டுப் பொண்ணு நீ... யாரும் தப்பா பேசிடக் கூடாது," என்று அவளுக்கு அறிவுரை என்ற பெயரில், இதமாய்ப் பேச...

"சரி..." என்று தலையாட்டியவள்,

'உங்க வீட்டுப் பொண்ணா... அடப்பாவி... இன்னொரு வீட்டுக்குப் போறேன்னு சொன்ன வுடனே... உனக்குச் சந்தோஷம் போல...' என்றாள் மனதிற்குள்.

விஜய் இப்போது,

"யு.எஸ். போற பிளான்லாம் எப்போ...?"

"தெரியல..."



"அதெல்லாம் பேசுறது இல்லையா...? ராகேஷ் கிட்டேயும் வெட்டியா பேச்சுத்தானா...?" என்று விஜய் சிரித்தபடி சொன்ன போதே, யுகி வர,

ஆனால், தீக்ஷாவோ மனதிற்குள்,

'அவன் பேசவே மாட்டேங்கிறான்னு நான் இருக்கேன்... இதில் வெட்டியா பேசிட்டாலும்... இது உன் டைம்டா... ஆடு, ஆடு..." என்று மனதிற்குள் பதில் சொல்லிக் கொண்டாள்.

தன் அருகே அமர்ந்த யுகேந்தரிடம்,

"என்னடா... பதில் எல்லாம் ஓரெழுத்து ஒரு வார்த்தை யில வருது... நம்ம வீட்டுப் பேச்சரசிக்கு!" என்று விஜய் சிரிக்க,

'டேய் லூசு... உனக்குக் கவுண்டர்லாம் மனசுக்குள்ள சொல்லிட்டு இருக்கேன்டா... என் நேரம்... உன்கிட்ட ஒரு வார்த்தையில சொல்ல வேண்டிய நிலைமை... அந்த ராகேஷ் மட்டும் என் கிட்டே மாட்டட்டும்... இருக்கு அவனுக்கு...' என்று அர்ச்சித்தவளாய்,

"யுகி, நான் வருகிறேன்..." என்று எழப் போனவளை,

"இரு தீக்ஷா..." என்று விஜய் அமரச் சொல்ல,

"நான் இன்னொரு வீட்டுக்குப் போற பொண்ணு... இப்படி ரெண்டு பசங்களோட பேசிட்டு இருந்தா என்ன ஆகும்? நான் வருகிறேன்," என்று வெடுக்கென்று சொல்ல,

அதுவரை சிரித்துக் கொண்டிருந்த விஜய்யின் முகம் சின்னதாகியது.

"சரி, போ..." என்று விஜய் சொல்ல... தீக்ஷாவும் கிளம்பினாள்.,

சற்றுத் தூரம் சென்றவள், மீண்டும் விஜய்யைத் திரும்பிப் பார்க்க,

அவனும் அவள் சென்ற திசையையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான் போல்.

இவள் திரும்பியவுடனே, உடனே பார்வையை அவன் விலக்கவும் இல்லை.

"என்ன...?" என்று அவன் இருந்த இடத்தில் இருந்தே அவளை நோக்கித் தலையை ஆட்டிக் கேட்க...

மீண்டும் அருகில் வந்தவள்...

"பை விஜய் அத்தான்...!" என்று குறும்பாகச் சொல்ல,

"யுகி, அடங்க மாட்டாளாடா இவ...?" என்று விஜய் சிரிக்க,

"இதுங்க ரெண்டு பேரும்தான் டாம் அண்ட் ஜெரியா...? டேய் யுகி... நம்மளை வெச்சு காமெடி கீமெடி பண்ண லையே...!" என்று புரியாமல் யுகேந்தர் விழித்தான்.

தீக்ஷாவின் நிச்சயம் இரண்டு வாரத்தில் இருக்க... அதற்கடுத்த இரண்டாவது வாரத்தில் திருமணம் என்பதால், பத்திரிகை அடிக்கும் பணி ஆரம்பம் ஆகி இருக்க... இடை யில் சுனந்தா பிறந்த நாள் வந்தது, அந்த வாரத்தில்.

விஜய் தங்கள் வீட்டில் பிறந்த நாள் விழாக் கொண்டாட வேண்டும் என்று சொல்ல...

"ஆரம்பிச்சுட்டாங்கடா...!" என்று அனைவரும் விழித்துத் தீக்ஷாவைப் பார்க்க, அவள் ஒன்றும் சொல்லவில்லை.

அவளுக்கு ராகேஷ் அன்று போன் செய்ததுதான்... ராகேஷ் ஏன் போன் செய்யாமல் இருக்கிறான் என்றே புரியவில்லை. வீட்டில் இருப்பவர்களிடம் அவன் பேசுவதாக வேறு சொல்லி விட்டிருந்தாள். இவளாகப் போன் செய்யவும் விருப்பம் இல்லை. எதுவும் தப்பாக நடக்கப் போகிறதோ... என்ற யோசனையில் இருந்ததால்,. வேறு எதிலும் கவனம் போகவில்லை. இதில் சுனந்தா பிறந்த நாள் எங்கு நடந்தால் என்ன... என்று பெரிதாய் எடுத்துக் கொள்ளவில்லை.

சுனந்தாவின் முதல் பிறந்த நாளும் வந்தது.



ராதாவும்... பிரதீபனும் அன்று மதியமே கிளம்பிச் சென்று விட, தீக்ஷாவின் பெற்றோர், அவளின் தாத்தா பாட்டி, மற்றும் ஊரில் இருந்து வந்திருந்த உறவினர் எல்லாம், மாலை கிளம்ப முடிவெடுத்தனர்.

சுனந்தா பிறந்த நாள் என்பதால் உற்சாகமாகவே இருந்தாள் தீக்ஷா. புடவை என்ன அணியலாம் என்று தேடியவளின் கையில் அவளுக்குப் பிடித்த அடர் பிங்க் நிற டிசைனர் சாரி கண்ணில் பட... மாலைதான் விழா ஆரம்பம் என்பதால்... அது எடுப்பாக இருக்கும் என்று முடிவெடுத்துக் கட்ட ஆரம்பித்தாள். அதே சமயம் உள்ளே வந்த ஜெயந்தி,

"உன் கிட்டே எத்தனை தடவை சொல்றது... இந்தப் புடவையைக் கட்டக் கூடாதுன்னு..." என்று கறாராகச் சொன் னவர், உடனே முகத்தை மாற்றி,

"இன்னும் ஒல்லியா இருக்க இந்தப் புடவையில...! வேண்டாம்டா...." என்று தாஜா செய்யப் பார்க்க,

"பரவாயில்லை.. அம்மா, ப்ளீஸ்..." என்றபடி தன் அலங்காரத்தை ஆரம்பித்தவள், எல்லாம் முடித்தபின்... லிப்ஸ்டிக் போட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்ற... என்ன கலர் போடலாம் என்று தேட.... முதலில் சிவப்பு நிறத்தை எடுத்தவள்... சரிவராது என்றபடியே அதை மூடி வைத்தவள்... புடவைக்கு ஏற்றவாறு... இளம் பிங்க் வண்ண லிப்ஸ்டிக்கை இதழில் வரைந்தவள்.. வழக்கம் போல், முகம் பார்க்கும் கண்ணாடியின் பரப்பில் வைத்துவிட்டு மீண்டும் பார்க்க... சுத்தமாய் இல்லாமல் இருக்க, மீண்டும் ஒரு கோட்டிங் வைத்தாள்.

'சுனந்தா குட்டிக்கு என் முத்தத்தை மார்க்கோட வைக்கணும்!' என்று கிளம்பினாள்.

விஜய் வீட்டில் வந்து இறங்கிய தீக்ஷாவைப் பார்த்த யுகியும் சுரேந்தரும் சினேகமாய்ப் புன்னகைக்க... யுகி மட்டும்

அவள் காதில், "என்ன எனிமியும் எனிமியும் ஒரே ஷேட்ல ட்ரெஸ் போட்ருக்கீங்க...? என்று நக்கலடிக்க... தீக்ஷா விஜய்யைப் பார்க்க...

பேபி பிங்க் வண்ணச் சட்டை அணிந்து, யாருடனோ போன் பேசிக் கொண்டிருந்தான்.

விஜய்யும் போன் பேசியபடியே இவளைப் பார்த்துப் புன்னகைத்தான்,

ஆனால், அவன் கொஞ்சம் டென்சன் ஆகவும் இருந்தான் போல் தோன்றியது தீக்ஷாவிற்கு.

பின் யுகேந்தரிடம் திரும்பி, "நீ நினைச்ச மாதிரி விருமாண்டி யோசித்தார்னு வச்சுக்கோ... வேற சட்டை யோடதான் நிற்பாரு...!" என்று சிரிக்க,

சுரேந்தர் அப்போது அங்கு வந்து...

"யுகி... விஜய் அண்ணாவால இன்னைக்கு கெஸ்ட் யாரையும் கவனிக்க முடியாது. அவர் ஒரு முக்கியமான வேலையில இருக்காரு. இங்கே நின்னு சிரிக்கிறதை விட அங்கே போய்... வந்தவங்களைக் கவனி..." என்று அவனைக் கிளப்ப...

தீக்ஷா, சுரேந்தரிடம், "விஜய் அத்தானுக்குத் தம்பின்னு... ப்ரூவ் பண்ணிட்டே இருங்க..." என்று முறைக்க...

அவளுக்குப் பதில் சொல்லாமல் நகர்ந்த சுரேந்தரும் டென்சனாக இருந்தது போல் இருந்தது. சுரேந்தர் அந்தப் பக்கம் நகர்ந்தவுடன்,

இப்போது யுகி ஓடி வந்து... "தீக்ஷா.... ஆர்த்தி, காலையில இருந்தே போனை எடுக்கலை... உன் போன்ல இருந்து இந்த நம்பருக்கு ட்ரை பண்ணிப் பாரு..." என்று நம்பரைக் கொடுத்தவன்... "போனை எடுத்தா வந்து சொல்லு..." என்றவனின் முகத்தில், வெளியில் தெரிந்த கலகலப்பைத் தாண்டி... கலக்கம் தெரிந்தது காதலனாய்.



சட்டென்று அவனைப் பிடித்து நிறுத்திய தீக்ஷா,

"யுகி... என்ன யுகி... எதுவும் பிராப்ளமா?" என்று ஆறுதலாய்க் கேட்க,

அவளின் ஆறுதல் வார்த்தையில் யுகியின் கண்கள் சிவந்து விட்டன.

"ஒருநாள் கூடப் பேசாம இருக்க மாட்டா, தீக்ஷா... என்ன பிரச்சனையோ...? அண்ணா ரெண்டு பேரும் என்னைத் தனியாவே விட மாட்டேன்கிறாங்க... காலையில் இருந்து என்னை அவங்க பக்கத்திலேயே வெச்சுக்கிட்டாங்க. வெளியிலும் போக முடியவில்லை...." என்றபோது அவன் வேதனை கண்ணில் தெரிய,

"ஒண்ணும் இருக்காது யுகி... ஏன் உன்னையே கன்ஃப்யூஸ் பண்ணிக்கிற? நான் போன் பண்ணிப் பார்க்கிறேன். இல்ல... ஆர்த்தி ஃப்ரெண்டுன்னு சொல்லி... நான் அவங்க வீட்டுக்குப் போய்ப் பார்த்துட்டு வருகிறேன்..." என்று சொல்ல,

"ம்ம்..." என்று தலையாட்டியவனாய் அவன் நகர்ந்து போக...

தோட்டத்தில் விழா ஆரம்பமானது.

அப்போது தீக்ஷா எதார்த்தமாய் விஜய்யைப் பார்க்க... அவனோ போன் பேசியபடி வீட்டின் உள்ளே சென்று கொண டிருந்தான்.

## 10

**வி**ழா ஆரம்பமாக... கேக் வெட்ட இன்னும் 20 நிமிடங்களே இருக்க... விஜய் மட்டும் அந்த இடத்தில் இல்லை. சுரேந்தரும், யுகேந்தரும் சற்றுத் தள்ளி நிற்க... கலைச் செல்வி தீக்ஷாவிடம்...

"இந்த விஜய் எங்கே போனான்... போன் செய்தாலும் பிஸி ஆகவே இருக்கு... வந்திருக்கிறவங்க பாதிப் பேர் அவன் கெஸ்ட்!" என்றபோதே...

இளமதியும் இளமாறனும் அவர்கள் அருகில் வந்தனர். இளமாறனைத் தன் அண்ணன் திருமணத்தில் பார்த்திருக் கிறாள் தீக்ஷா. அவன் விஜய்க்கும் மேல்... அதனால் தீக்ஷா அவனைக் கண்டு கொள்ளவில்லை.

அன்று விஜய்யுடன் இளமதி வந்திருந்தபோது பார்த்த அறிமுகத்தில்... தீக்ஷா அவளிடம் ஒரு சினேகப் புன்ன கையை வைக்க... பதிலுக்கு அவள் தீக்ஷாவைப் பார்த்த பார்வையிலேயே தெரிந்து கொண்டாள்... அவளுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை என்று. அன்று கூடத் தன்னுடன் உட்காரப் பிடிக்காமல்தான் கிளம்பி விட்டாளோ என்று தோன்ற... தீக்ஷாவுக்கு அவள் தன்னைக் கண்டு கொள்ள வில்லை என்பதெல்லாம் பெரிய விஷயமாகத் தோன்ற வில்லை... அதை விட்டு விட்டாள்.

ஆனால், இன்னொன்றை யோசிக்க... அவளுக்கு இளநகை தோன்றியது.

'சிடுமூஞ்சி மகாராசனுக்கு... ஏற்ற சிடுமூஞ்சி மகாராணி...!' என்று அவர்களின் ஜோடிப் பொருத்தம் பற்றி நினைத்தவள்... விஜய் - இளமதியை ஜோடியாக மனக் கண்ணில் வைத்துப் பார்க்கவும் தவறவில்லை.

'ம்ம்... ஜோடி நம்பர் 1 தான்... சிடுமூஞ்சி ஜோடி நம்பர் 1...' என்றபடி தன் அண்ணியின் அருகில் போக... அவள் எப்போது வருவாள் என்று காத்திருந்தாள் போல, அவள் அண்ணி...

"தீக்ஷா... இந்த ட்ரெஸ்ஸை என் ரூம்ல வெச்சுரு... பாப்பாவுக்கு கிஃப்ட் கொண்டு வந்திருப்பாங்க போல... பாப்பா கவரைக் கிழிச்சுட்டா!" என்றபடி கொடுக்க... அதை வாங்கிக்



கொண்டு... காற்றில் பறந்த தன் முந்தானையை இழுத்து இடுப்பில் செருகியபடியே வீட்டுனுள்ளே சென்றாள்.

ராதாவின் அறை மாடிக்குப் போகும் படிக்கட்டுக்கு அருகில் இருக்க... உள்ளே சென்று கையில் கொண்டு வந்த கவரை வைத்தவள்... வெளியேறும் போது மேலே விஜய் குரல் கேட்க...

'விஜய் அத்தானும் இங்கேதான் இருக்கிறார் போல.... அவரை அத்தை தேடிக் கொண்டிருப்பதாகச் சொல்லி வரச் சொல்வோம்...' என்று மாடிப்படியில் ஏறினாள். அப்போது,

"என்னடா... அவன் இன்னைக்கு மட்டும் அந்த டெண்டர்ல மட்டும் ஸைன் போட்டான்னு வெச்சுக்க... அவன் தங்கச்சி இப்போ நம்ம கஸ்ட்டடிலா இருக்காள்னு சொல்லியும் வந்து நிற்கிறானா...?" என்று கேட்க,

அதிர்ந்து நின்றாள்.

"எப்படியோ... அதை அவன் கிட்டே சொல்லியாச்சு... இனி அவன் கையிலதான்... டெண்டர் முடிஞ்சதும் சொல்லு..." என்றபடி திரும்ப... தீக்ஷா அவனை அதிர்ந்த பார்வையும்... கோப முகமுமாய் நோக்க,

"தீக்ஷா! நீ எப்... எப்போ வந்தே...?" என்று விஜய் தடுமாற...

"ஆர்த்திதானே அது... இருங்க, இப்பவே போய்க் கீழே சொல்றேன்..." என்று இறங்க எத்தனிக்க... சட்டென்று எட்டி அவள் கைகளைப் பற்றிய விஜய்...

"ஏய்.... இரு... என்ன சொல்லப் போற... ஃபங்ஷன் நடந்துக்கிட்டு இருக்கு..." என்றவனின் வார்த்தைகளைக் காதில் வாங்காமல், விலகி ஓட எத்தனிக்க...

அவள் கைகளை இழுக்க... அவள் போராடியதால் கொஞ்சம் அழுத்தமாகப் பிடித்து மாடிப்படியில் இருந்து தன்னை நோக்கி மேலே இழுத்தான் விஜய். அவன் சற்று

வேகமாக இழுக்க... அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் விஜய்யின் நெஞ்சின் மேலேயே முகம் பதித்து, அவன் மேலேயே சரிந்து விழுந்து தடுமாறினாள் தீக்ஷா.

தடுமாறிய அவளை... விழாமல் பிடித்துத் தள்ளி நிறுத்தியவன், அவளைப் போக விடாமல் கைகளை மட்டும் இறுகப் பிடித்தபடி,

"தீக்ஷா... ஒண்ணும் பிரச்சசனை இல்லம்மா... சின்ன பிசினஸ்... அது கைவிட்டுப் போகாமல் இருக்க..." என்று தன்னைப் புரிய வைக்க... அவன் மெல்லிய குரலில் கிட்டத்தட்ட கெஞ்சலாகச் சொல்ல... அவன் கெஞ்சலில் நாயகி மிஞ்சினாள்.

"அதுக்குப் பொண்ணைக் கடத்துவீங்களா...? என்னை விடுங்க... நான் கீழே போகணும்.... கையை விடுங்க... வலிக்குது," என்று சொல்லும் போது அவள் குரல் என்றைக்கும் விட உயர்ந்துதான் இருந்தது.

"உன்னை யார் போக வேண்டாம்னு சொன்னது... நீ போகலாம்... ஆனால்.... கீழே எதுவும் சொல்லி உளறாதே, போ....." என்று அவன், அவள் கைகளை விடப் போக...

அவள் வாயில் சனி இருந்து ஆடியதா.... இருவரின் வாழ்க்கையிலும்... துன்பத்தின் தொடக்கமா... அல்லது இன்பத்தின் தொடக்கமா... விதியே குழப்பத்தில் இருக்க,

தீக்ஷாவோ அவனிடம்... "நான் சொல்வேன்... அத்தனை பேர் மத்தியிலேயும் உன்னை அசிங்கப் படுத்தல... என் பேரு தீக்ஷா இல்லடா.... ஒரு பொண்ணைக் கடத்தி வெச்சுட்டு ஒண்ணும் பிரச்சினை இல்லையா...? அவளைக் காணோம்னு எத்தனை பேர் தெரியுமா துடிப் பாங்க...? ஏன், உன்..." என்று ஆரம்பித்தவள், சுதாரித்து... யுகேந்தரை இழுக்காமல் மறைத்தவள்... "என்னை விடுங்க. நான் கீழே போகணும்..." என்று அவளின் அத்தான்



மரியாதை எல்லாம் சுத்தமாய்ப் போய்... சத்தமாகப் பேச ஆரம்பிக்க...

அவள் கைகள், அவனால் மீண்டும் இறுகப் பிடிக்கப் பட... தீக்ஷா அதிர்ந்து அவனைப் பார்த்தவள்... பேச வாயெடுப்பதற்குள்...

தன் கைகளால் அவள் வாயைப் பொத்தியபடி மாடியில் இருந்த அறையில் அவளைத் தள்ளிய விஜய்... வெளியே தாழ் போட்டு விட்டு வெளியேறினான்.

அவன் தள்ளிய வேகத்தில் அங்கிருந்த கட்டிலில் மோதி விழுந்த தீக்ஷாவின் நெற்றி விண்ணென்று வலிக்கத் தொடங்க... அழுகையே வந்து விட்டது. இருந்தும் சுதாரித்து எழுந்தவள்... விஜய்யை அர்ச்சித்தபடியே கதவைத் தட்ட ஆரம்பித்தாள்.

"கதவைத் திறங்க விஜயத்தான்.... விஜய்.... திறந்து விடுடா...!" என்று முடிக்கும் போது, கதவைத் திறந்து உள்ளே வந்தான்.

உள்ளே வந்தவனைப் பார்த்து அதிர்ந்து கண்கள் விரியப் பின் வாங்கினாள்.

காரணம்... அவன் உடலில் மேல் சட்டை இல்லை... வெறும் பனியனுடன் இருந்தான். அவன் அணிந்திருந்த சட்டை அவன் தோளில் தொங்க.... உள்ளே வந்தவன் கதவையும் பூட்டினான்.

மனதில் எங்கோ எச்சரிக்கை மணி அடிக்க... மனதின் எச்சரிக்கை அவள் கண்களில் அச்சமாக வெளி வந்தது.

"கதவைத் திறங்க... என்னை விடுங்க... நான் போக ணும்..." என்று வார்த்தைகளைச் சேகரிக்கவே தடுமாறினாள் அந்தப் பேச்சரசி.

"என்ன....... தடுமாறுற..." என்றவன்... சாவகாச மாய்... தோள்களில் போட்ட சட்டையை அந்த அறையில் இருந்த கட்டிலில் போட....

விதிர் விதித்தாள் தீக்ஷா.

"எ... எதுக்குச் சட்டையைக் கழட்டுனீங்க...? நான் போகணும்... நீங்க தப்பு மேலே தப்பு பண்றீங்க...!" என்று அழ ஆரம்பித்தவளுக்கு...

விஜய், அவளின் சொந்தம், தன் அண்ணியின் அண்ணன்... என்பதெல்லாம் போய்.... அவன் ஒரு அந்நிய ஆடவன் என்பதில் மனம் முன்னெச்சரிக்கை செய்ய... உடல் நடுங்க ஆரம்பித்தாள் தீக்ஷா. இதுவரை விஜய் முன் அவள் செய்த குறும்புத்தனமெல்லாம் எங்கோ பறக்க, 23 வயதுப் பெண்ணாக... சில நாட்களில் இன்னொருவனுக்கு மனைவி யாகப் போகும் பெண்ணாக மாறியிருந்தாள்.

"ஸ்ஸ்... எதுக்கு இப்போ அழ ஆரம்பிக்கிற... நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். ஆனா, நீ இங்கே இருந்து போய் எதுவும் சொல்ல மாட்டேன்னு சொல்லு... இப்பவே போகலாம்," என்றவனிடம்,

அவனிடமாவது சரி என்று தலை ஆட்டிவிட்டு.... வெளியே போனவுடன் சொல்லி இருந்திருக்கலாமோ...! அதைச் செய்யாமல், சொல்லாமல், அவன் பேச்சில் தெரிந்த சமாதானத்தில் தீக்ஷா மீண்டும் தைரியமானாள்.

'என்ன பண்ணி விடுவான் இவன்.... தன்னை என்ன செய்தாலும்.... அவன் கண்டிப்பாக எல்லோருக்கும் பதில் சொல்ல வேண்டும். அவனால் தப்பித்துப் போக முடியாது. அதனால், அடக்கி வாசிப்பான்...' என்று மனம் சொல்ல... அதன் விளைவு...

"சொல்வேன்... என்ன செய்வே நீ...?" என்று பிடிவாதம் பிடித்துச் சொல்லியபடி அவனை இளக்காரமாய் வேறு பார்க்க...



தீக்ஷா வாழ்க்கையைத் தொலைத்தாளா? இல்லை... வாழ்க்கையை வாழ்ந்தாளா...?'

அவளின் பதிலில் எரிச்சலான விஜய்... அங்கிருந்த சிகரெட்டை எடுத்தவன், பின் ஏதோ நினைத்தவனாய் மீண்டும் கீழே போட்டு விட்டு,. மீண்டும் அவள் அருகில் வர... மருண்ட விழிகளுடன் பின்னே நகர்ந்தாள் தீக்ஷா.

"அவளை விடச் சொல்லிட்டேன்டி... நீ என்னை டார்ச்சர் பண்ணாதே... இந்த விஷயத்தை இதோட விட்ரு... எல்லோருக்கும் தெரிஞ்சுரும்... எனக்கு அசிங்கம், தீக்ஷா..." என்று மிரட்டலில் ஆரம்பித்துக் கெஞ்ச,

"அசிங்கம்னு தெரியுதுல்லடா.... தெரிஞ்சே செய்யுற... அதுவும் பொட்டைப் புள்ளையைக் கடத்தி வெச்சுட்டு... என்னையும் இப்படி அடைச்சு வெச்சுட்டு மிரட்டுறே.... நீயெல்லாம் ஆம்பளைன்னு சொல்லிடாதே வெளியில...!" என்று வார்த்தைகளை விட,

விட்ட வேகத்திலேயே விஜய்யின் கைகளால்... அவள் கன்னத்தில் அறை கிடைக்க, ஒரு நொடி தீக்ஷாவுக்குப் பொறி கலங்கியது போல இருந்தது. அந்த அளவிற்கு வலிக்க... அது தந்த வலியோ... இல்லை, மூன்றாம் மனிதனிடம் அறை வாங்கிய அவமானமோ... அவள் கண்கள் அருவியைக் கொட்டின.

"என்னையே அடிக்கிறியேடா...!" என்ற போதே... அவனிடம் அறை வாங்கிய வேதனை, அவமானம் எல்லாம் சேர்ந்து... அவள் குரலில் பிசிறு தட்ட ஆரம்பித்தது.

"என்னடி.... இஷ்டத்துக்குப் பேசுற... கொன்னுடு வேன்...." என்று ஒரு விரல் காட்டி எச்சரிக்கும் போதே...

"அப்படித்தான் பேசுவேன்டா... உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா...?" என்ற போதே, அவனின் கை தன் அச்சாரத்தை, அவளது இன்னொரு கன்னத்திலும் வைக்க... அதே நேரம் கேக் வெட்டும் அறிவிப்புக் காதில் விழுந்தது.

"உனக்குப் பட்டாத்தான்டி அறிவு வரும்...!" என்றவன்,

சுற்றும் முற்றும் தேட... எதுவும் கைக்குச் சிக்காமல் போக... கழட்டிப் போட்டிருந்த சட்டையையே எடுத்தவன், அவளின் கைகளைப் பின்னால் திருப்பிக் கட்ட ஆரம் பித்தான். அவளோ அவனுக்கு ஒத்துழைக்காமல் திமிற...

"ஆடாதேடி... ஏடாகூடமா எங்கனாச்சும் பட்றப் போகுது. அதுக்கும் சேர்த்து நீதான் மூலைல உட்கார்ந்து அழணும்...!" என்று சொன்னவனை முதல் முதலாய் அருவருப்பாகப் பார்த்தாள் தீக்ஷா.

"ச்சீ... என் கிட்டே... அதுவும் கொஞ்ச நாளில் ஒருத் தனை மேரேஜ் பண்ணப்போற பொண்ணுகிட்டே இப்படிப் பேச அசிங்கமா இல்லை...!" என்று கண்ணீர் வழியச் சொன் னவளிடம்,

"எனக்கு மட்டும் ஆசை பாரு...!" என்று கட்டி முடித்தபடி, "கஷ்டம்டா...!" என்று வேறு சொல்லியபடி எழ,

"என்னடா கஷ்டம்...?" என்றவளைப் பார்த்து அவன் சிரித்து விட,

"இப்போ கூட வாயை மூட மாட்டியா...? ஏன்னு கட்டிக்கப் போறவன் சொல்வான்!" என்று சொன்னவனின் முகத்தில் இருந்த சிரிப்பு, தீக்ஷாவுக்கு உடலெங்கும் தீயைப் பற்றி எரிய வைக்க...

"சிரிக்கிறியாடா... இருக்குடா உனக்கு... அழிவு காலம் ஆரம்பம் ஆகிருச்சு உனக்கு..." என்றவளிடம்,

"ராட்சசன் பாரு நான்... இவ சாபம் விட வந்துட்டா... நான் உன் விருமாண்டி அத்தான்டி... இப்படியெல்லாம் பேச லாமா...? இது கூட நீயா தேடிக்கிட்டது தான்... விட்டா நீ பேசிக் கிட்டே இருப்பே... ஆனா எனக்கு உன் கிட்டே பேச நேர மில்லை. நான் போகணுமே... அதுக்கும் முன்னால் உன்



வாயை மூடணுமே...!" என்று அவளைப் பார்க்க... மூச்ச டைத்தது தீக்ஷாவிற்கு.

அதைப் பார்த்தவன்...

"பார்த்துடி... மூச்சு கீச்சு நின்றுறப் போகுது... அப்புறம் உன் ஸ்லோகம்... அது என்ன... மூச்சு நின்னாலும் பேச்சு நிக்காது... அது தப்பாகிடப் போகுது. மூச்சையே நிறுத்திரு வாளாம்... பேச்சை நிறுத்த மாட்டாளாம்... அபத்தமான டயலாக் பேசிட்டு... அத்தனை பேருக்கும் பட்டப் பேர் வெச்சுக்கிட்டு... நீ பண்ணுற அலம்பல் இருக்கே..." என்ற வாறே,

அவ இடுப்பில் செருகி இருந்த அவள் முந்தானையை இழுக்க.. புள்ளி மான் போல் அவனிடமிருந்து விலகியவளாய், கண்ணில் இருந்து கண்ணீர் வழியத் தள்ளி நின்றவளைப் பார்த்தவன்... பார்த்த நொடியிலேயே சட்டென்று பார்வையை விலக்கி... பக்கவாட்டில் திரும்பியவனாய்,

"பின்னால திரும்பு..." என்று சொல்ல,

அவள் அப்படியே நிற்க,

"திரும்புடி..." என்று மீண்டும் சொல்ல,

"நீ சொன்னா திரும்பணுமா...? மாட்டேன்டா... நீ சொல் றதெல்லாம் செய்ய... கீழே ஒருத்தி காத்துட்டு இருக்காடா... போ... அவகிட்டே போய்ச் சொல்லுடா!" என்று அவனைப் பார்த்து எகத்தாளமும் கோபமும் கலந்து பேசும் போதே... அவள் அருகில் வந்து தானாகவே அவளைத் தொட்டுத் திருப்பியவன்,

"ஆடாம இரு... தயவு செய்து..." என்றபோது, இப்போது அவன் குரலில் ஏதோ ஒரு வித்தியாசம் இருக்க... அவனைப் பார்க்க அவள் திரும்பும் போதே,

அவன் பின்னால் இருந்தே அவளது இடையிலிருந்த தலைப்பை எடுக்க முயற்சிக்க... தீக்ஷா அவனிடமிருந்து

பதறி நகர ஆரம்பிக்க... இப்போது அவளைத் தன் பிடியிலிருந்து அவன் விலக விடவில்லை. முந்தானையை இழுக்கும் முயற்சியில்... அவன் கை மொத்தமுமே அவள் இடையில் நன்றாகவே உரசியது.

தீக்ஷாவின் பெண்மை விழிக்க ஆரம்பித்தது. கூனிக் குறுகிப் போனாள். அவன் கை உரசிய இடமெல்லாம் அவளுக்கு எரிவது போல் இருக்க...

"விடுடா என்னை...!" என்று பெருங்குரலெடுத்துக் கத்த ஆரம்பிக்க... அதே நேரத்தில் அவள் வாய் அவள் முந்தானையாலே அடைக்கப்பட, விஜய் அவளைப் பார்க்காமலே... கதவைப் பூட்டியபடி வெளியேறி இருந்தான்.

அவன் போனபின் அழுதபடியே இருந்தவள்... பெண்ணுக்கான உணர்வில் தன்னைக் குனிந்து பார்க்க, அவள் வலது பக்க முந்தானை சரிந்து நடுவில் கிடக்க... இடையிலோ சேலை நிற்காமல் ஏனோ தானோவென்று கிடக்க...

அதிர்ந்தவள், இன்னும் குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள். அவள் வாயை மூடி இருந்ததால், வாய் விட்டுக் கூட அழ முடியவில்லை. அவனோடு போராடுவதிலேயே குறியாக இருந்தவள், தன்னைக் கவனிக்காமல் விட்டு விட்டாள்.

'அவன் முன் தான் இப்படியே நின்றிருந்தோமா...? ஐயோ...!' என்று மனம் புழுங்கியவளாய்க் கலைந்திருந்த தன் ஆடையை... அதைச் சரி செய்யக் கூட முடியாமல்... முழங்காலைத் தன் மார்போடு அணைவுக்குக் கொடுத்துச் சுவரோடு சுவராக ஒன்றினாள் தீக்ஷா.

அரைமணி நேரத்திற்கும் மேல் கடந்திருந்தது. தன்னை யாரும் தேடக்கூட இல்லையா...? மற்ற யாருக்கும்தான் தோன்றாது... பெற்ற தாய்க்குக் கூடவா தோன்றாது...? மனதுக்குள் புலம்பியவளாய் இருக்க... அடுத்த நிமிடமே,



'இந்த வில்லன் போய் என்ன சொல்லி வெச்சானோ...?' என்று நினைத்தவளுக்குக் கண்கள் அருவியைப் பொழிந்த வண்ணம் இருந்தன.

வாய் விட்டுக் கூட அழ முடியாமல், தன்னை இப்படிக் கட்டிப் போட்டவனுக்கு... தன் அண்ணியின் அண்ணன் என்ற போதும்...

'கடவுளே! இவன் கண்டிப்பாக இதற்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும்... பொண்ணைக் கடத்தி... அதைக் கொண்டு பிளாக்மெயில் செய்யும் கேவலமான புத்தி உள்ளவனா இவன்...? இப்படிப் பண்ணித்தான் இவங்கெல்லாம் இவ்வளவு பெரிய பணக்காரங்களா ஆனாங்களா...? இதெல்லாம் ஒரு ஸ்டேட்டஸாம்...! இன்றைக்கு நான் பட்ட வேதனையை விட இவன் பல மடங்கு அனுபவிக்க வேண்டும்... அதைப் பார்த்து நான் வாய்விட்டுச் சிரிக்க வேண்டும்...' என்று விஜய்க்குப் பல சாபங்களை அள்ளிவிட...

மேலிருந்த கடவுள், தீக்ஷா அவருக்குப் பிடித்த பெண் என்பதால், அவள் என்ன கேட்டாலும் கொடுப்பேன் என்று விஜய்க்கு அதைக் கொடுக்கும் நாளைத் தன் டைரியைப் புரட்டி மறக்காமல் எழுதி வைத்தார். தீக்ஷா கொடுத்த சாபங்கள் எல்லாம் அவன் பெற்றபோது... தீக்ஷா அதைப் பார்த்துச் சிரித்தாளா...? அவனோடு சேர்ந்து அழுதாளா...? அவன் துன்பம் தாங்காமல் துடித்தாளா...? இல்லை...?

அழுதழுது சோர்வே வந்து இருந்தது. ஏற்கெனவே மோதியதில் நெற்றி வேறு வீங்க ஆரம்பித்து இருக்க... கன்னங்களில் விஜய்யின் கைத்தடம் அதன் பங்கு வேலையைக் காட்ட, இப்போது கைவேறு வலி எடுக்க ஆரம்பித்து இருக்க, ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்தவள் எழ முயற்சி செய்தாள்.

'யாராவது உள்ளே வந்து விட்டால்... தன் நிலை... கடவுளே! கையைக் கட்டி வெச்சுட்டானே... என்னால புடவையைக் கூடச் சரி செய்ய முடியவில்லையே... அவன் மறுபடியும் வேறு வருவானே...' என்று நினைக்கும் போது கண்ணில் இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. அப்போது கதவும் திறக்கப்பட... முழங்காலைத் தன்னோடு சேர்த்து இன்னும் ஒன்றியவளின் கண்களில், பெண்ணின் அச்சமும், அந்நியர்கள் முன் தன் மானத்தைக் காக்கும் வேகமும் தெரிந்தது.

உள்ளே விஜய்தான் வந்தான். அவன் இப்போது வேறொரு சட்டை அணிந்திருந்தான். வந்தவன், மீண்டும் கதவினைப் பூட்ட, அவனைப் பார்த்தவள்... பார்த்த வேகத்திலேயே, அவன் முன் அவள் நின்ற கோலம்... அவள் ஞாபகம் உயிரை அறுக்க... முழங்காலோடு தலை கவிழ்ந்து... இன்னும் அதிகமாய் அழ ஆரம்பித்தாள்.

"எதுக்கு இப்போ அழற...? உன்னை நான் என்ன பண்ணினேன்...?" என்றபடி அவளருகே அமர... தன் முன் அவன் அமர்ந்ததை உணர்ந்த அவள், உடனே நிமிர்ந்து,

தன் விழிகளில் கோபமும், வெறியும், அச்சமும், விரோதமும் காட்டியவள்... மீண்டும் குனிந்தாள். அதன் பின் அவள் நிமிரவே இல்லை.

தன் மேல் சட்டையால் கட்டியிருந்த அவளது கைகளை அவன் விடுவித்த போதுதான் நிமிர்ந்தாள் தீக்ஷா.

அவிழ்த்த வேகத்திலேயே தன் கைகளில் இருந்த அந்தச் சட்டையை விஜய் தூக்கி எறிய, அது அந்த அறையில் உள்ள கட்டிலில் விழுந்தது. பின் சிகரெட்டை எடுத்தபடி வெளியேறினான் விஜய்.

அவன் வெளியேறியவுடன் எழுந்து... தன் புடவையைச் சரி செய்து விட்டுத் தன் கையைச் சரி செய்தவள்... வாயைக்



கட்டியிருந்த முந்தானையை அவிழ்க்க முயற்சி செய்ய, அவளால் முடியவில்லை.

வெளியே போகக் கதவைத் திறக்கப் போக... அவள் தன்னைச் சரி செய்து கொள்ள அவகாசம் கொடுத்தவன் போல்... மீண்டும் விஜய் உள்ளே வந்தான். வந்தவன், அவள் வாயைக் கட்டியிருந்த துணியை அவிழ்த்து விட்டபடியே...

"தீக்ஷா... கீழே உன்னைத் தேடிட்டு இருக்காங்க... நான் எதுவும் சொல்லலை... நீயும் சொல்ல மாட்டேன்னு தான் நினைக்கிறேன். இல்லை..." என்று மென்மையாகச் சொன்னாலும், அதிலும் தீக்ஷாவுக்கு மிரட்டல்தான் தெரிந்தது.

அவளால் பேச முடியவே இல்லை. அவளுக்குத் தெரிந்த மொழிகள் எல்லாம் அவளைக் கைவிட்டாற் போல் இருக்க, மௌனமாக இருந்தாள் குனிந்தபடியே. அவளுக்கு மூளையே மரத்தது போல் இருந்தது. அது, அதன் சமிக்ஞைகளை எல்லாம் நிறுத்தியது போல் இருக்க... அவள் உணர்வுடன் இருக்கிறாள் என்று அவள் கண்களில் வழிந்த கண்ணீர் மட்டுமே சொல்லியது.

"நீ கொஞ்சம் புத்தி உள்ள பொண்ணா இருந்தா... என் கிட்டே மல்லுக்கட்டாம வெளியே போய் என்னைப் போட்டுக் கொடுத்திருக்கலாம்... அந்தப் புத்தியெல்லாம் இல்லை உன் கிட்டே... டூ பேட்... பொண்ணுங்க கிட்டே இந்த அவசர புத்தி இருக்கக் கூடாது. சமயோஜித புத்தி வேண்டும். நானா இருக்க... உன்னை விட்டுட்டேன். ஆழம் பார்த்துக் காலை விடணும்னு பழமொழி உங்களுக்குத்தான்டி சொல்லி வெச்சுருக்காங்க... அதை ஞாபகம் வெச்சுக்கோ...!" என்ற போதே அவள் பேசாமல் அங்கிருந்து விருட்டென்று நகர... இழுத்துத் தன் முன் நிறுத்தினான் விஜய். அவளின் தாடையைப் பற்றி நிமிர்த்தியவன், நிதானமாகவும் அழுத்தமாகவும் பேச ஆரம்பித்தான்.

"என்ன இப்போ.... இங்கே நடந்ததை எல்லாம் சொல்லப் போறியா...? ஒண்ணுமே நடக்கலைதான்... எனக்கு ஒண்ணும் இல்லை. ஆனா நீ... உனக்கு இன்னும் 2 வாரத் துல நிச்சயம். யோசித்து நட. சொன்னால்... உனக்குத்தான் மேரேஜ் நின்னாலும் நிக்கும். இப்போ போய்ச் சொல்லுடி... எல்லோரும் இருக்காங்க... நான் கடத்துனதை நீ சொன்னா... இந்த ரூம்ல தனியா என் கூட இருந்ததையும் சொல்லணும்... சோ, நான் அசிங்கப்பட்டா... நீயும் அசிங்கப் படணும்..." என்று சொன்னவனின் மேல் சிகரெட் வாடையும் அடிக்க, குமட்டிக் கொண்டு வர... அவன் முகத்தைப் பார்க்காமல் குனிந்தபடியே நின்றாள். அவனுக்குப் பதிலடி கொடுக்க அவள் மனம் துடித்தது. ஆனால், முடியாமல் நின்றாள் தீக்ஷா.

"இதுக்கும் மேலேயும் நீ சொல்லி... இதுக்காக நான் உன்னை மேரேஜ் பண்ணணும்னு ஏதாவது... எவனாவது என் கிட்டே வந்து நின்னானுங்க... உன் வாழ்க்கையில.... அதுக்கப்புறம்தான் நீ அனுபவிப்படி..." எனச் சொல்ல, அவன் வார்த்தைகளில் தன்னுணர்வு வந்த தீக்ஷா, அவனிடம்...

"ச்சீ... போயும் போயும் உன்னை... அதுக்கு நான் உயிரை விட்டுறலாம்..." என்று மீண்டும் வாயைத் திறக்க,

"இந்த வாய்தான்டி உன்னை இந்த நிலையில கொண்டு வந்து நிறுத்தியிருக்கு... இங்கே பாரு தீக்ஷா, இப்பவும் சொல்றேன்... இந்தப் பிரச்சினையை விட்ரு... உன்னை அடிச்சதுக்காக மன்னிப்புக் கேட்கக் கூடத் தயாரா இருக் கிறேன்... நீ சொல்லி ராதா - தீபனுக்குத்தான் பிரச்சினை வரும்..." என்று சொல்லியபடி சற்று யோசித்தவன்,

"இன்னொரு விஷயம்... அது ஆர்த்தின்னு உனக்கு எப்படித் தெரியும்?" என்ற போதே அவன் கையை உதறியவள்...



அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. இறங்கி ஓடோடி வந்தவள்... ஹாலைத் தாண்டி வெளியே போகப் பார்க்க.... அங்கு இன்னும் பார்ட்டி நடந்து கொண்டிருந்தது.

'ஓடிப் போய் விஜய்யின் முகத்திரையைக் கிழிப் போமா...?' என்று மனம் நினைத்தாலும், கால்கள் பின்னிக் கொள்ள, உள்ளேயே வந்தாள். 'தனக்கு என்ன நடந்து விட்டது... அவனும் ஒண்ணும் பண்ணவில்லை... ஆனால், இதுவும் அசிங்கம்தானே! அய்யோ... யார் எப்படிப் போனா எனக்கு என்னன்னு விட்டிருக்கலாமோ...!' என்று மனதிற்குள் மன்றாடியவள்... அடுத்த நிமிடம், 'அது யாரோ இல்லையே... யுகியோட ஆர்த்தி...' என்று தனக்கே ஆறுதல் சொல்லிய வளுக்கு, ஆர்த்தியின் நினைவு வர...

தன்னையே இந்தப் பாடு படுத்தியவன்... அவனை நினைக்கும்போதே மனம் பதறியது. தான் அவமானப்பட்ட நிலையிலும், ஆர்த்திக்குப் போன் செய்து பார்ப்போம்... என்று தன் மொபைலைத் தேட...

அதை மேலேயே விட்டு வந்து விட்டோமோ... என்று நினைத்தபோதே... மேலிருந்து கீழே வந்த விஜய், அவள் கையைப் பிடித்து, அவள் தேடிய அவள் மொபைலை அவள் உள்ளங்கையில் வைத்தபடி வெளியேறினான். அவன் போன திசையை வெறித்தவளாய் நின்றிருந்தாள் தீக்ஷா.

சற்றுத் தூரம் கடந்த பின், என்ன நினைத்தானோ... விஜய் திரும்பி அவளைப் பார்த்து...

"உள்ள போ..." என்று சைகையால் சொல்லியவன், மீண்டும் தன் வழியில் போக....

அவனைப் பார்க்கப் பிடிக்காமல், வேகமாய் வேறு திசையில் திரும்பினாள் தீக்ஷா.

இப்போது ஆர்த்தி நம்பருக்குத் தீக்ஷா போன் செய்ய... அவளும் அதை எடுக்க, மனம் நிம்மதி ஆனது.

"நீங்க தீக்ஷாதானே...? இப்போதான் யுகி கிட்ட பேசினேன். நீங்களும் ட்ரை பண்ணிட்டு இருக்கீங்கன்னு சொன்னாங்க..." என்ற போது,

"நீங்க சேஃபா இருக்கீங்களா?" என்றபோது,

"ஹ்ம்ம்... நான் வீட்டுக்கு வந்து 20 மினிட்ஸ் ஆச்சு... என்ன நடந்துச்சுன்னா..." என்று அவள் ஆரம்பிக்க...

"நான் அப்புறம் பேசுறேன், ஆர்த்தி. சாரி, தப்பா எடுத்துக்காதீங்க... வைக்கிறேன் ஆர்த்தி..." என்று அவளின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் போனைக் கட் செய்தாள் தீக்ஷா.

அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்தவள்... அந்த வீட்டின் ஒவ்வொரு செங்கலும் விஜய் என்ற பெயரையே பிரதிபலிக்க... அங்கு இருந்து போகத் துடித்தாள். வெளியே போகவும் வழியின்றி...

நேராய்த் தன் அண்ணா - அண்ணியின் அறைக்குள் நுழைந்து... விளக்கைக் கூடப் போடாமல் அங்கிருந்த சோபாவில் குப்புறப் படுத்து மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

யுகேந்திரன், பிரதீபனிடம் வந்து...

"அத்தான்... தீக்ஷா இங்கேதான் இருக்கா... இப்போ ரிங் போகுது!" என்று சொல்ல...

"எப்படிச் சொல்றே...? நான் இவ்ளோ நேரம் ட்ரை பண்ணிப் பார்த்தேன்," என்றபடி மீண்டும் போட,

யுகேந்திந்திரனால்... ஆர்த்தியுடன் தீக்ஷா சற்று முன் தான் பேசினாள் என்றா சொல்ல முடியும்...? அதைச் சொல்லாமல்... ரிங் போகிறது என்று மட்டும் பிரதீபனிடம் சொன்னான்.

"வாங்க, பார்க்கலாம்..." என்று தீபனை அழைத்தபடி உள்ளே போக...



"நீ வேண்டாம் யுகி... இங்கே இருந்து கவனி. விஜய், சுரேந்தர் கிட்டேயும் சொல்லிடு... அவங்க வேறே தேடிட்டு இருக்கப் போறாங்க..." என்று போன் செய்தபடியே உள்ளே போனவன்...

ராதா அறையில் ரிங் போகும் சத்தம் கேட்க... வேக மாய் அறையினுள் நுழைந்து லைட்டை ஆன் செய்தவன்...

குலுங்கி அழுது கொண்டிருந்த தன் தங்கை கிடந்த கோலத்தில் பதறிப் போனான்.

"தீக்ஷா...!" என்ற போதே,

"அண்ணா...!" என்று அவன் மார்பில் விழுந்து கதறிய தங்கையை நிமிர்த்தியவன்... இரு கன்னங்களிலும் விரல் தடம் அச்சாய் இருக்க... திடுக்கிட்டான்.

"என்னம்மா... என்ன ஆச்சு...? அய்யோ! யாரும்மா...? வம்பு பண்ணினாங்களா யாராவது...?" என்று தங்கையை மேலும் கீழுமாகப் பார்த்தவன்...

"பார்ட்டிக்கு வந்த பசங்க யாராவது வம்பு பண்ணாங் களாடா...? வாயைத் தொற தீக்ஷா..." என்ற போதே அவன் குரல் நடுங்கியது.

'முக்கால் மணி நேரம்... அய்யோ... தன் தங்கை வேறு இப்படி அழுகிறாளே... எதுவும் தப்பா நடந்திருக்கக் கூடாது...' என்று உருகி வேண்டியவன்,

"சொல்லுடா... விஜய் கிட்டே சொல்லுவோம்!" என்று அவன் சொன்னதுதான் தாமதம்,

இன்னும் சத்தமாக அழ ஆரம்பித்தாள்.

"அவன்தான் அண்ணா... என்னை..." என்று மீண்டும் அழ ஆரம்பித்தவள், கோபத்தில் கண் சிவந்த அண்ணனைப் பார்த்து இன்னும் மிரண்டாள் தீக்ஷா.

"விஜய்யா...?" என்று அதிர்ந்தவன்,

"சொல்லு... என்ன பண்ணினான்.. வெளியில எங்களோட சேர்ந்து அவனும் தேடுகிற மாதிரி பாவ்லா பண்ணினான்... மாடியில போய்ப் பார்க்கிறேன்னு சொன்னானே தீக்ஷா... அங்கேதான் இருந்தியா...?" என்ற போதே அவன் மனம் எதை எதையோ நினைத்துக் கலங்க,

அவனுக்கு, "ஆமாம்..." என்று தலையாட்டியவள்.

நடந்ததைச் சொன்னாள். அவனின் நடத்தைகளையோ... சட்டையைக் கழட்டித் தன்னைக் கட்டிப் போட்டான் என்றெல்லாம் சொல்லாமல்... அவன் கடத்தல் விபரத்தைச் சொல்லி, அதைத் தட்டிக் கேட்கப் போக... அறைந்தான், கட்டிப் போட்டான், பூட்டி வைத்தான்... என்று மட்டும் சொன்னாள்.

அதற்கே அவள் அண்ணன் உக்கிர மூர்த்தியாக மாறி இருக்க...

"அவனை... இன்னைக்கு..." என்று கை முஷ்டியை இறுக்கியவனாய் வெளியேற, முதலில் அவனைத் தடுக்காமல்... அப்படியே இருந்தவள்,

பின் சுதாரித்து, தன் அண்ணன் பின்னாலே ஓடியவள்... அவன் கையைப் பிடித்துத் தடுத்து,

"அண்ணா.... ஃபங்ஷன் முடியட்டும்ணா... ப்ளீஸ்... அதுக்கப்புறம் கேளுண்ணா..." இதைத்தான் விஜய்யும் கூறினான் என்பதை உணராமலே அவனைத் தடுக்க,

கண்ணீர் மல்கக் கூறிய தங்கையைப் பார்த்து... அவள் இருந்த நிலை தாங்காமல் தன்னோடு அணைத்து ஆறுதல் படுத்தியவன்...

"சரி... நான் இப்போ கேட்கவில்லை. நீ வர வேண்டாம்... உள்ளே போடா. வேறே யாராவது உன்னை இப்படிப் பார்த்தா நல்லா இருக்காது..." என்று அவளை உள்ளே போகச் சொன்னவன்...



தளர்வாய்ப் போன தன் தங்கையையே சில நிமிடம் பார்த்தபடி நின்றவனுக்கு... அவன் ராதா மேல் கொண்ட காதல்... இதுவரை இனிப்பான சுவை நிறைந்த பக்கங்களைக் காட்டியது போய்... மெல்ல மெல்ல அதன் மறுபக்கக் கசப்பை உணர்த்த ஆரம்பித்து இருந்தது.

தீக்ஷா அருகில் மீண்டும் சென்ற தீபன்,

"தீக்ஷா... வேறே ஒண்ணும் இல்லைலம்மா... அண்ணா கிட்டே எதையும் மறைக்கலையே... எதுவா இருந்தாலும் மறைக்காதம்மா... அண்ணா கிட்டே சொல்லிருடா..." என்றவனிடம்,

"இல்லண்ணா..." என்றவளின் வார்த்தையில் இன்னும் தெளியாமல்,

"ரெண்டு வாரத்தில நிச்சயம் வெச்சுக்கிட்டு... கல்யாணப் பொண்ணை..." என்று முகம் இறுக ஆரம்பித்தவனிடம்... அவனின் கோபம் உணர்ந்தவள்,

"நம்ம வீட்டுக்கு எப்போ போகலாம், அண்ணா...? எனக்கு இங்கே இருக்கவே பிடிக்கலை..." என்று பேச்சை மாற்ற,

"போகலாம்... அதுக்கும் முன்னாலே அவனைச் சும்மா விட்டுட்டுப் போகலாமா...?" என்று கொதித்தவன், அவளிடம் தலை குனிந்தபடி,

"அது கூட நம்ம வீடு இல்லைடா... அண்ணா தப்பு பண்ணிட்டேன்டா... சுயநலமா இருந்துட்டேன், தீக்ஷா... எனக்கு ராதாவை மறக்க முடியலைடா... அவ மேலே வந்த என் காதலுக்கு... நீ பலிகடா ஆகிட்டியோன்னு தோணுது தீக்ஷா... உனக்கு ராகேஷோட மேரேஜ் முடியட்டும்... எல்லாத்துக்கும் முடிவு கட்டுகிறேன்..." என்றவன்,

அவள் நிலையை இன்னும் தெளிவு படுத்திக் கொள்ள -

"நாளைக்கு உனக்குப் பட்டுப்புடவை எடுக்க ராகேஷ் வீட்டில் இருந்து வர்றாங்க... நாளைக்கு வர வேண்டாம்னு சொல்லி விடவா...?" என்று கேட்க,

"சரி..." என்று தலை ஆட்ட,

"எப்போ வரச் சொல்லலாம்...?" என்று கேட்க,

"நாளை மறுநாள் வரச் சொல்லுங்கண்ணா!" என்று அவள் கூறிய பதிலில்,

'திருமணத்தை நிறுத்தும் அளவிற்கு எதுவும் பெரிதாக நடக்கவில்லை,' என்று நிம்மதி அடைந்தான் தீபன்.

விஜய் கோபத்தில்தான் தங்கையிடம் கை நீட்டி இருக்கிறான்... வேறு எந்த எண்ணத்திலும்... தவறான நோக்கில் நடக்கவில்லை என்று ஓரளவு திருப்தியில் மூச்சை இழுத்துவிட்டான் தீபன்.

வெளியில் வந்த தீபன், சுற்றிலும் பார்வையை ஓட்ட, விஜய்யோ இளமதியுடன் சிரித்தபடி பேசிக் கொண்டிருந்தான். அதில் இன்னும் கண் சிவந்தான் தீபன். ஒரு அண்ணனாக அவன் மனம் கொதிகலனாக மாறிக் கொதித்துக் கொண்டிருந்தது.

## 11

விழா முடிந்து, விருந்தினர் அனைவரும் கலைந்திருக்க... மீதமுள்ள உறவினர் கூட்டமும் தீக்ஷா வீட்டிற்கு அனுப்பப் பட்டிருந்தனர்.

விஜய் வீட்டில் இரண்டு குடும்பத்தினர் மட்டும் ஹாலில் இருக்க... விஜய் அப்போதுதான் உள்ளே வந்தான். அதுவரை எப்படித் தன்னைக் கட்டுப்படுத்தி இருந்தான் என்றே தெரியவில்லை பிரதீபனுக்கு. விஜய் உள்ளே நுழையும் போதே... பிரதீபன்,

"ராதா..." என்று காட்டுக் கத்தலில் கத்த... அவன் குரல் அந்தப் பிரமாண்ட ஹால் முழுவதும் பட்டு எதிரொலித்தது.



அவனின் கூச்சலில், ராதா தன் அறையில் இருந்து நடுங்கியபடி இறங்கினாள். அதுவும் தீக்ஷாவின் நிலையை அறிந்த பின்னர் தைரியமாக இருப்பாளா என்ன...?

மேலே தீக்ஷாவோ அன்னை மடியில் விழுந்து அழுது கொண்டிருந்தாள்.

முதன் முறை ஜெயந்தி, ராதாவை மருமகளாக எடுத்திருக்க வேண்டாமோ என்று அவரும் மகளோடு சேர்ந்து புலம்பிக் கொண்டிருந்தார். ராதாவுக்கு எந்தப் பக்கம் பேசுவது என்றே தெரியவில்லை. கணவன் என்ன சொல்வானோ என்றும் தெரியவில்லை. அவன் கோப முகத்தை... விழா நடக்கும் இடத்தில் அவள் உணர்ந்தாலும்... அப்போது காரணம் தெரியவில்லை.

அறையில் தீக்ஷா அவள் அன்னையிடம் சொல்லி அழுதபோதுதான் தீபனின் கோபத்திற்கான காரணம் தெரிய... உள்ளம் நடுங்கியது அவருக்கு.

யுகி, சுரேந்தர், ராகவேந்தர், வைத்தீஸ்வர், தீபன் ஏன் கத்துகிறான் எனப் புரியாமல் விழிக்க... கலைச்செல்வியோ அப்போதுதான் உள்ளே வந்தார்.

கணவனின் குரலில், ராதா இறங்கி வர... அவளது நடையே அவளின் பயந்த தோற்றத்தைப் பறைசாற்ற...

"சீக்கிரம் இறங்கி வாடி... அன்ன நடை போட்டுட்டு வர்ற...!" என்று அவளை விரட்டினான் தீபன்.

சுரேந்தரும், யுகேந்தரும் கொதித்து விட்டனர். தங்கள் தங்கையை அதட்டியது அவள் கணவன்தான் என்றபோதும்... அதைத் தாங்க முடியாமல்,

"அத்தான்..... எங்க முன்னாடியே... எங்க தங்கச்சியை..." என்று சொல்ல ஆரம்பிக்க,

"என்னது.... உங்க தங்கச்சியா...?" என்று சொன்னவனின் வார்த்தைகளில் நக்கல் தாண்டவமாட... அடுத்த நிமிடமே,

"அவ என் பொண்டாட்டி... என்ன வேணும்னாலும் சொல்வேன்... செய்வேன்..." என்றவன் கண்களில் அண்ணனின் ரவுத்திரம் இருக்க,

அப்போது விஜய்,

"தீபன்... நான்..." என்று ஆரம்பிக்க... விஜய்யினைத் திரும்பி ஒரு முறை முறைத்த தீபன்... ராதாவிடம்,

"என் தங்கை எங்கேடி...? உன்னைக் கூப்பிட்டது எதுக்குன்னு தெரிஞ்சுதானே பம்மிட்டு வர்ற... அவளைக் கூட்டிட்டு வராம தனியா வந்து நிக்கிறே... என்ன, உன் அண்ணனைக் காப்பாற்றப் போறியா...?" என்று அத்தனை பேர் முன்னிலையிலும் கேட்க... ராதா, வழக்கம் போல் தன் அண்ணன் பாசத்தில்,

"தீபன்... ப்ளீஸ்... கொஞ்சம் பொறுமையா இருங்க.... அண்ணா தப்பா எதுவும் பண்ணியிருக்க மாட்டார்..." எனும் போதே... பிரதீபனின் கை அவள் கன்னத்தில் பதிந்து மீள... அவள் பிறந்த வீட்டினர் துடித்துப் போயினர்.

ராதாவோ வாயடைத்து நின்றாள், தன் கணவனின் கோபத்தில்.

தன் தங்கையின் நிலை பொறுக்காத சுரேந்தர், ஒரே தாவலில் தீபன் சட்டையைப் பிடிக்கப் போக... அவனைத் தடுத்த விஜய்... தீபனின் முன் நின்றான். இருவரின் பார்வைகளும் கோப அக்கினியை வெளியிட....

தீபனால் தாங்க முடியவில்லை. மனைவி என்ற உரிமை இருக்கும் தான் அடித்ததற்கே இவனுக்குத் தாங்க முடியவில்லை... ஆனால், என் தங்கையை... அதுவும் அறையில் பூட்டி... கட்டி வைத்து... நினைக்கவே அவனுக்கு நெஞ்சமெல்லாம் தகித்தது.



"உன் தங்கச்சியைக் கூப்பிடு," என்று விஜய் சொல்லும் போதே அவன் கண்களும் சிவந்து நிற்க,

"அவ எதுக்குடா...? இன்னும் மிரட்டவா...?" என்று வார்த்தைகள் தடுமாற ஆரம்பித்து இருந்தன. விஜய் தனக்குப் பதில் சொல்வான் என்று தீபன் காத்திருக்க... அதற்குப் பதில்,

"தீக்ஷா, இறங்கி வாடி..." என்று விஜய் கத்த,

இப்போது தீபன், விஜய்யின் சட்டையைப் பிடித்திருந்தான்.

அத்தனை பேரும் மிரண்டனர்... இருவரின் கோபத்தில்.

இத்தனைக்கும் காரணமான நாயகியோ... சிவந்த விழிகளுடன் இறங்கி வர...

தன் அண்ணன் கை... விஜய்யின் சட்டை மேல் பதிந்திருக்க... பார்த்த தீக்ஷா கலவரம் ஆகவில்லை. அதற்குப் பதில், 'என் அண்ணன் எனக்காக இருக்கிறான்...' என்ற கர்வம் வர, அவள் கண்களில் கண்ணீர் நின்றது. தைரியமாக இறங்கினாள்... விஜய்யைப் பார்த்தபடியே...!

இறங்கி வந்தவளிடம்... தீபனின் கையைத் தட்டி விட்டபடி... மின்னல் வேகத்தில் விஜய்யும் அவள் முன் நிற்க,

தீக்ஷா அவன் கோபத்தைச் சிறிதும் கண்டு கொள்ளாமல் அலட்சியமாய்ப் பார்த்தவள், அவனைத் தாண்டிச் சென்று தன் அண்ணனின் அருகில் நின்றாள்.

"என்ன சொன்னே உன் அண்ணன் கிட்டே... என் முன்னாலேயே என் தங்கச்சியை அடிக்கிறான்..." என்ற போது,

"அண்ணியை எதற்கு அடித்தாய்...?" என்ற வண்ணம் தீக்ஷா, தன் அண்ணனைக் கோபமாய்ப் பார்க்க... தீபன் தலை குனிந்தான்.

ஜெயந்தி ஆரம்பித்து விட்டார்.

"நல்லா இருக்கு தம்பி... உங்க நியாயம்... என் பொண்ணைப் பாருங்க... அவளை அடிச்சுருக்கீங்க நீங்க.... இதுல என் பையன் அவ பொண்டாட்டிய அடிச்சதுல உங்களுக்கு... கோபம் வருதா...?" என்று ஆரம்பித்தவரிடம்,

வைத்தீஸ்வரன்... "ஜெயந்தி...." என்று தன் மனைவியின் வார்த்தைகளை நிறுத்தியவர்... தீக்ஷாவிடம்... என்ன நடந்ததென்று கேட்க... தீபன் அதை விளக்க...

அத்தனை பேரும் அதிர்ந்தனர். வைத்தீஸ்வரனுக்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. ஆனாலும் தன் மகளின் வரம்பு மீறிய, இடமறியாப் பேச்சும், இதற்கு முக்கியக் காரணம் என்று புரியாமல் இல்லை. அதனால் கொஞ்சம் பொறுமையாக...

ராகவேந்தரிடம், "என் பொண்ணு என்ன வேண்டும் என்றாலும் பண்ணியிருக்கலாம்... அதுக்காக உங்க பையன் என் பொண்ணு மேலே எப்படிக் கையை வைக்கலாம், சம்பந்தி...?" என்று ஆரம்பிக்க...

பதிலுக்கு ராகவேந்தர் ஆரம்பித்தார்.

"என் பையன் தொழில் விஷயத்தில் ஏன் உங்க பொண்ணு தலையிடுறா...? என்ன தெரியும்னு அவ என் பையனை எதிர்த்துப் பேசுவா...? நாங்க அப்படித்தான் பண்ணுவோம்... எங்களுக்கு எங்க பிசினஸ் முக்கியம்..." என்று விஜய்க்கு ஆதரவாகப் பேசியவரிடம் அலட்சியமும் - ஆத்திரமும் இருக்க... தீக்ஷா குடும்பத்திற்குத் தெரிந்து விட்டது. இங்கு இனி நியாயம் கிடைக்காது என்று... வீட்டின் மூத்தவர் ராகவேந்தர்... அவரே நியாயமின்றிப் பேசினால்... வேறு என்ன சொல்ல... வேறு எங்கு செல்ல...?

ஆளாளுக்குப் பேச்சை ஆரம்பிக்க, ராதாவுக்குத் தலையே சுற்ற ஆரம்பித்து விட்டது.



அப்போது... தீக்ஷாவிடம் மீண்டும் வந்தான் விஜய்.

"இதுக்குத்தான் சொன்னேன்... உன் வேலையை மட்டும் பாருன்னு...." என்று சொல்ல,

தீக்ஷா இன்னும் அடங்கவில்லை... தன் குடும்பத்தின் ஆதரவும் சேர... இன்னும் ஆக்ரோஷமாகவே பேசினாள்.

"நீ ஒரு பொண்ணக் கடத்தி வெச்சு மிரட்டுவே... அதை நான் பார்த்துட்டுச் சும்மா போகணுமா...? நல்லா இருக்கு நியாயம்...?" என்று அவனை மீண்டும் தாக்க,

யுகேந்தர், தீக்ஷாவிடம் வந்து,

"தீக்ஷா... இதுதான் பிரச்சனையா...? அதெல்லாம் அண்ணன் தப்பா எதுவும் பண்ணலை..." என்று ஆரம்பிக்க,

"நீ சும்மா இரு யுகி... இவன்..." என்று மீண்டும் மரியாதை இல்லாமல் பேச,

"மரியாதையா பேசு, தீக்ஷா..." என்று பல்லைக் கடித்தான் விஜய்.

"அப்டித்தான்டா பேசுவேன்... என்னடா பண்ணுவே...? பூட்டி வெச்சு பொம்பளைப் புள்ள மேல கையை வைக்கிற உனக்கு... மரியாதை ஒரு கேடா... பொறுக்கி!" என்று வார்த்தையை முடிக்கவில்லை...

விஜய்யின் கைகளால் அவள் பிடித்து இழுக்கப்பட்டு வெளியே தள்ளப்பட்டிருந்தாள்.

விஜய்யின் இந்தச் செயலில் ராகவேந்தரே சற்று நிலைகுலைய, யுகேந்தர், சுரேந்தர், கலைச் செல்வி என அனைவரும் விஜய்யை அமைதிப்படுத்த முயல... விஜய் அவர்கள் யாரையும் லட்சியம் செய்யாமல்,

"என் வீட்ல இருந்து என்னையே மரியாதை இல்லாம பேசுவியா... உங்களுக்கெல்லாம் இடம் கொடுத்தா... நீங்க...

இப்படித்தான் ஏறுவீங்க..." என்ற அவன் குரல் கூட, கீழே தள்ளப்பட்ட தீக்ஷாவுக்குத் தெளிவில்லாமல்தான் விழுந்தது.

உள்ளே பிரச்சினை என்பதால்... வேலையாட்கள் அனைவரும் வெளியே நின்று கொண்டிருந்தனர்.

அவர்கள் அனைவரின் முன்னிலையில், தீக்ஷா அவமானப்படுத்தப் பட்டாள். அவர்கள் அனைவரும் தீக்ஷாவைப் பார்த்த பார்வையில் பரிதாபம் இருக்க... அதில் குன்றிப் போன தீக்ஷாவால் எழக்கூட முடியாமல்... அதிர்ச்சியின் உச்சத்தில் இருந்தாள். மேலே தனி அறையில் பட்ட அவமானத்தை விட இது கொடுமையாக இருக்க... கை, கால்கள் எல்லாம் நடுங்கின.

இதயம் படபடப்பாக அடிக்கத் தொடங்க... அவள் உணர்வுகள் எல்லாம் அடங்கியது போல் இருக்க... ஜெயந்தியும் வைத்தீஸ்வரனும் தங்கள் மகளை ஓடி வந்து தூக்கினர். எழுந்தவளின் உடல் நடுங்கியதைப் பெற்றோர் உணர... துடித்துப் போனார்கள் இருவரும்.

தீக்ஷாவுக்கு விஜய்யின் செயல் எதையுமே யோசிக்க விடவில்லை. விஜய் இப்படிப்பட்டவனா என்ற எண்ணம் மட்டுமே இருக்க... கல்லாய் நின்றாள். கண்கள் கண்ணீரை அவள் அனுமதியின்றி வெளியிட... அதைத் துடைக்கக் கூட முடியாமல் இறுகி நின்றாள்.

பிரதீபன் அதிர்ந்து... ராதாவை நோக்கியவன், அதற்கு மேல் அங்கு நிற்காமல் வெளியேற ஆரம்பிக்க...

ராதாவுக்கு எல்லாமே கை மீறியது போல் இருக்க... சுனந்தாவைத் தூக்கியபடி தீபனின் பின்னால் வெளியேறினாள்.

அவளின் வருகையை உணர்ந்த தீபன்,

அதிர்ச்சியில் தன் தங்கையை ஆதரவாய்ப் பிடித்தபடி... அவமானம் ஒரு புறமும்.... அதிர்ச்சி ஒரு புறமும் எனச் சேர்ந்து... தன் கோப முகத்தையும் ராதாவிடம் காட்டினான்.



"நீ எங்க வர்றே...? போதும்மா, உன் உறவு... எல்லாம் என்னாலதான்... உன்னைக் கல்யாணம்னு ஒண்ணு பண்ணியதுதான் நான் வாழ்க்கையில பண்ணின தப்பு... உன் அண்ணன் பண்ணினதெல்லாம் தப்பே இல்லை...!" என்று போக...

அவன் திட்டியும் ராதா பின்னாலே போக... கோபத்தில் தீபன் அவளைத் தள்ளி விட...

விஜய் தன் தங்கை விழாமல், ஓடி வந்து தாங்கிப் பிடித்தான்.

நடந்த சண்டையில் சுனந்தா எதுவும் புரியாமல், அழ ஆரம்பிக்க,

சுனந்தாவின் அழுகையில்தான் தீக்ஷா தன் உணர்வுக்கு வந்தாள்.

வந்தவள், ப்ரதீபனிடம்,

"அண்ணா... அவன் பண்ணியதுக்கு அண்ணி என்ன பண்ணுவாங்க...?" என்றபடி,

"வாங்க அண்ணி..." என்று அழைக்க,

ராதா தயங்கி அண்ணனின் கையை விலக்கி... அவர்களை நோக்கிப் போனாள்.

விஜய்யைப் பார்த்து வெற்றிச் சிரிப்பு சிரித்த தீபன், தன் அருகில் வந்த ராதாவிடம்,

"நீ என் கூட வரலாம்... ஆனா என் தங்கச்சிகிட்ட உன் அண்ணனை மன்னிப்புக் கேட்கச் சொல்லு. அவன் மன்னிப்புக் கேட்டால் மட்டுமே நீ என் கூட வர முடியும்... இல்லை..." என்று தன் காதலை எல்லாம் தூரத் தூக்கிப் போட்டவனாய்ப் பேச... ராதா துடித்துப் போனாள். அது தீபனுக்கும் புரிய... தன்னவளின் நிலை உணர்ந்தவன்... அதைப் பார்க்க முடியாமலும்... அதுமட்டுமில்லாமல் பார்த்தால் எங்கு ராதாவின் மேல் உள்ள காதல்... தன் தங்கை

யின் பாசத்தை மாற்றிவிடுமோ என்று... பார்வையை வேறு திசையில் மாற்றினான்.

தீக்ஷாவோ, "அண்ணா... அவன் மன்னிப்பெல்லாம் வேண்டாம்... இனி அவனை நம்ம அண்ணியை மறந்துடச் சொல்லுங்க..." என்று ராதாவின் கையைப் பிடித்துத் தன்னோடு அழைத்துப் போக,

"அவளை விடுடி... என் தங்கச்சிக்கு.... நீ... வாழ்க்கைப் பிச்சை போடுறியா... நான் உன்கிட்ட மன்னிப்புக் கேட்க மாட்டேன்... நீ பேசுன... அதுக்கு வாங்கிக் கட்டிக்கிட்ட... ராதா என்ன தப்புப் பண்ணினா... உன் அண்ணனைக் காதலிச்சதைத் தவிர... அதுக்கு நல்ல பரிசு கொடுத்துட்டீங்க... பார்ப்போம்டி...

"என் தங்கச்சிய இப்படி நிறுத்தின... நீ எப்படி வாழப் போறேனு... உன் குடும்பம் எப்டி வாழப் போகுதுனு.... என் தங்கச்சிய எப்படி வாழ வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்..." என்றபோது அவன் கண்களில் கொலை வெறியைப் பார்த்தாள் தீக்ஷா.

ராதாவைப் பரிதாபமாகப் பார்த்த தீக்ஷா... அவனின் மிரட்டலுக்கெல்லாம் பயப்படாமல், "நீங்க வாங்க அண்ணி!"

அவன் கையை மீறி ராதாவை இழுக்க...

"ஒழுங்காப் போக மனசில்லையா...? இல்லை, உங்க எல்லோருக்கும் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்து அனுப்பவா!" என்று தன் உயரத்தைக் காண்பிக்க...

இரு குடும்பத்தாருமே விஜய்யின் உச்சகட்டத்தில் கோபத்தில் உறைந்தனர்.

அதன் பிறகு தீபன் ராதாவை ஒரு பார்வை பார்த்து வெறித்தவன்... தன் குடும்பத்தோடு அவமானத்தோடு வெளியேற...



ராதா அவனோடு போக விஜய்யிடமிருந்து திமிறினாள். விஜய்யின் கைகளை மீறி அவளால் போக முடியவில்லை... "தீபன்..." என்ற அவளின் கதறல் காற்றில்தான் கலந்தது... தன்னை விட்டுப் போய்க் கொண்டிருக்கும் அவர்களைப் பார்த்தபடி கதற...

தீக்ஷா பின்னால் திரும்பி தன் அண்ணியையும் சுனந்தாவையும் பார்த்தபடியே கடந்து சென்றாள்.

தான் பேசாமல் இருந்திருக்கலாமோ என்று தன்னைத் தானே நொந்தவளாய் வீடு வந்து சேர்ந்து, தன் அறையினுள் தன் கட்டிலில் விழுந்து குமுற ஆரம்பித்தவளுக்குத் தன் மேனியில் அவன் கை தீண்டிய இடமெல்லாம் எரிய... அருவருப்பாய் இருக்க... குளியலறைக்குச் சென்று... ஷவரைத் திறந்து விட்டவள்...அப்படியே எத்தனை மணி நேரம் நின்றிருப்பாளோ தெரியவில்லை...

அப்போதும் ஆறாமல்... உடல் தகித்தது... மனம் அவன் கொலை வெறியோடு தன்னை நோக்கியதையும் நினைக்க... தன் அண்ணியையும், தன் அண்ணாவின் வாழ்க்கையையும் நினைக்க... எல்லாமே தன்னால்தான்... தன் அவசரப்பட்ட வாய்ப் பேச்சில்தான் என்பது இப்போது புரிய... கொஞ்சம் கொஞ்சமாய் மாலை நடந்த நிகழ்வுகள் அவளை அலைக்கழிக்க... உச்சகட்ட அதிர்ச்சியில் தீக்ஷா குளியலறையிலே மயங்கி விழுந்தாள்.

மறுபுறம் வீட்டைக் காலி செய்ய வேண்டும் என்று தீபன் வேறு ஆடிக்கொண்டிருக்க... வைத்தீஸ்வரன் மட்டும்... எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடிவெடுக்காமல்... அவனைச் சமாதானப் படுத்திக் கொண்டிருக்க... மகள் அறையில் போய் வெகு நேரம் ஆகி விட்டதே என்று ஜெயந்தி எதேச்சையாக மகளைக் காண வர... மகளின் கோலத்தில் அலறி... தன் மகளை அன்று காப்பாற்றினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு.... தீக்ஷாவும், துக்கம் மனதோடு இருந்தும்... ஓரளவு தன் நிலை மீண்டவள்... புடவை எடுக்கப் போய் விட்டும் வந்தாள்.

ஏற்கெனவே அவள் பேப்பர் போட்டிருந்தபடியால்... கடைசி நாளாய் அலுவலகத்திற்கும் சென்று தன் நண்பர்களுக்கு ட்ரீட் வைத்தவள்... பத்திரிகை வைக்க ஒரு நாள் வருவதாகக் கூறிவிட்டு... தன் வேலைக்கும் முழுக்குப் போட்டாள்.

இதெல்லாம் நடந்து ஒரு வாரம் இருக்க...

ராதா தீபனிடம் பேச முயற்சி செய்து ஓய்ந்து போக... தீக்ஷாவிடம் கலங்க ஆரம்பித்து இருந்தாள் ராதா. இதனால் தீக்ஷா தன் அண்ணனிடம் கெஞ்ச ஆரம்பித்தாள்...

தீபன் தாய் தந்தையும் அவனைத் திட்ட ஆரம்பித்தனர். விஜய் செய்த தவறுக்கு ராதா என்ன செய்வாள் என்று.

இதற்கிடையில் கலைச்செல்வியும்... ராகவேந்தரும் தங்கள் தவறை உணர்ந்து.... மன்னிப்புக் கேட்டு... வீட்டிற்கு வந்து பேச... உறவுகளுக்குள் விரிசல்கள் இருந்த போதும்... கோபங்கள் இருந்த போதும்... ராதா மீண்டும் தன் கணவன் வீட்டிற்கு வர வைக்கப்பட்டாள்...

ஆனால் விஜய் மன்னிப்புக் கேட்கவேயில்லை... ராதா வந்தபோது விஜய் பிரச்சனை பண்ணவும் இல்லை. தீபனோ... ராதாவோடு பேசவே இல்லை.

ராதாவோ, வீட்டிற்காவது வர விட்டானே என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டவளாய்... தீக்ஷாவின் திருமண வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள். யுகி மட்டும் ஒரு நாள் தீக்ஷாவைப் பார்க்க வந்தான்.

அவனைப் பார்த்த தீக்ஷா... எதுவும் நடக்காதது போல் அவனை வரவேற்றுப் பேச... அவனும் சகஜமானான். அன்று யுகியிடம், அவள் அந்தச் சம்பவத்தைப் பற்றி எதுவும் கேட்காமல் விட்டு விட்டாள்.



அவள் அதைப் பற்றிப் பேசாமல் இருந்தால் கூட... யுகி ஆரம்பித்தான்.

"தீக்ஷா... அண்ணா பண்ணினதுக்கு நான் சாரி கேட்டுக்கிறேன்..." என்று சொன்னவன்,

"ஆர்த்திய கடத்துனாங்கதான்... ஆனா.... ஒண்ணும் மிரட்டல்லாம் இல்லையாம்... அசோக் அவ கூட இருந்து பத்திரமாப் பார்த்துக்கிட்டாராம்... நீதான் இங்க பிரச்சனை பண்ணிட்ட... ராதாவைக் கடத்த அவன் பிளான் பண்ணினான்ல... அண்ணா அதைச் செஞ்சு காமிச்சுட்டார்... வேற எந்த நோக்கமும் இல்லை, தீக்ஷா... அவ ஜாலியாத்தான் இருந்தாளாம்.... சொன்னா என் கிட்ட!" என்று சாதாரணமாகச் சொல்ல...

அதிர்ந்து பின் சிரித்தாள் தீக்ஷா

"நீ சந்தோசமா இருந்தியா யுகி... அவளோட குரலைக் கேட்க முடியலைன்னு... நீ தவிச்சியே... உன் பார்வையில ஒரு வலி இருந்துச்சே... இது மாதிரி அவங்க வீட்லயும் துடிச்சிருப்பாங்களே யுகி... சொல்லு, யுகி... உன் அண்ணா பண்ணினது தப்பு இல்லையா...? எப்படி இப்படி இதயம் இல்லாம இருக்கீங்க..." என்றவளை,

அவஸ்தையோடு பார்த்த யுகி.... தீக்ஷாவின் வார்த்தைகளில் இருந்த உண்மையில் தலை குனிந்தான்.

"இது மட்டும் இல்ல யுகி... இதை நான் கேட்கப் போய்... உன் அண்ணன் என்னை அடிக்க மட்டும் செய்யவில்லை..." என்று ஆரம்பித்தவளின் வார்த்தைகளில் அதிர்ச்சியாய் நிமிர்ந்தான் யுகி.

அவனிடம் அன்று தான் பட்ட அத்தனை வேதனைகளையும்.... அவன் அண்ணன் நடந்த விதத்தையும் மறைக்காமல் சொன்னவள்...

"அவர் என்கிட்ட தப்பா நடந்துக்கலை. அவ்வளவுதான்... ஆனா இது கூட அசிங்கம்தான் ஒரு பொண்ணுக்கு, யுகி... அவர் அதை உணரல... ஆனால் காலம் கண்டிப்பா உணர வைக்கும்... அதை நான் பக்கத்தில இருந்து பார்ப்பேனானு தெரியல... ஆனா நீ இருப்பேல யுகி... அன்னைக்கு நீ நினைப்ப... இந்த தீக்ஷாவோட வேதனைதான்.... அவ சாபம் தான்... உன் அண்ணனோட நிலைக்குக் காரணம்னு..." என்றவளின் கண்களில் இருந்த தீர்க்கம்... அது நடக்கும் என்பதைத் திண்ணமாகச் சொல்ல.... அவள் பார்வையின் உக்கிரத்தில் யுகேந்தர்... கலவரமாகி...

"ப்ளீஸ், தீக்ஷா... இப்படிச் சாபம்லாம் கொடுக்காத.... ஒரு வேளை உன் புடவை கலர்ல அவர் ஷர்ட் இருந்ததால கூட கழற்றி இருந்திருக்கலாம்... அவர் தப்பானவர்லாம் இல்லை, தீக்ஷா..." என்றபோதே, அவனுக்குத் தன் அண்ணன்... பெண்ணிடம் கேவலமாய் நடக்கும் தேர்ட் ரேட் இல்லை என்ற நம்பிக்கை இருந்தும்... ஏன் தன் சட்டையைக் கழற்றினான் என்ற சந்தேகம் வர, அவன் குரல் உள்ளே சென்றது.

"நீ அவரைத் திட்டிரு... பதிலுக்கு அடிக்கக் கூட செஞ்சுடு, தீக்ஷா... சாபம்லாம் விடாத தீக்ஷா..." என்று தன் அண்ணனுக்காகக் கெஞ்சியவனைப் பார்த்துக் கண்ணில் வலியோடு சிரித்த தீக்ஷா,

"உன் அண்ணன்... முதன் முதலில் பார்த்த நாளில் இருந்தே என்னை எவ்வளவோ அசிங்கப்படுத்தி இருக்கார். உங்களோட பேசுறதை எல்லாம் பிடிக்காமல் திட்டி இருக் கிறார். மனசுல கோபம் இருந்தாலும் மறுபடியும் மறுபடியும் அங்க வந்து நின்னேன்.... தன்மானம் எனக்கு இல்லைனு நீ நினைத்திருக்கலாம்.... எனக்கும் தன்மானம் இருக்கு யுகி...

"ஏன் நான் உன் அண்ணன்கிட்ட காட்டல தெரியுமா...? அவர் என் அண்ணியோட அண்ணன்... நம்ம சொந்தம்னு



நெனச்சு... அவர் கோபத்தை எல்லாம் மனசில வைக்காம சிரிச்சுட்டு இருந்தவ இந்த தீக்ஷா... இப்போ கூட நான் கொஞ்ச நாள்ல இதை மறந்துட்டு உங்க வீட்ல வந்து நின் னாலும் நிப்பேன்... ஏன்... உங்க அண்ணாகிட்ட பேசினால் கூட ஆச்சரியம் இல்லை.... ஏன்னா அது என் கேரக்டர்..

"என்னால யார்கிட்டயும் பேசாம இருக்க முடியாது... வந்து பேசுனா... பேசிருவேன்... ஆனா இது மட்டும் நிச் சயம்... தன்னோட தவறை உணராம இறுமாப்பா இருக்கிற உன் அண்ணன் அனுபவிப்பான். கண்டிப்பா நடக்கும்!" என்று ரண வேதனை மனதில் இருந்தும்... யுகியிடம் அதை மறந்து எங்கோ பார்த்தபடி பேசினாள் தீக்ஷா....

அவள் முகம் காட்டா விட்டாலும்... அதன் வேதனை யுகேந்தருக்குப் புரிய,

அவள் வேதனை தாங்காத யுகி, அந்தப் பேச்சினை மாற்றி ராகேஷைப் பற்றி விசாரிக்க... இன்னும் வேதனை யானாள் தீக்ஷா...

"அவர் அன்னைக்குப் பேசுனதுதான், யுகி... அவர் பேசின அன்னைக்கு நைட் அவங்க அம்மா பேசினாங்க... ராகேஷ் பேசினானான்னு கேட்டாங்க... ஒருவேளை அவங்க அம்மாவுக்குப் பயந்துட்டுப் பேசி இருப்பாரோ, யுகி?" என்றவளைக் கவலையோடு பார்த்தான் யுகி...

"சரி. விடு... எனக்கும் ஒரே குழப்பமாத்தான் இருக்கு... நாளைக்கு இந்தியா வருகிறாராம்... பார்க்கலாம்... அவன் எனக்கு என்ன பண்ணப் போறானோ...?"

யுகி... இன்னும் தெளிவில்லாமல் கவலையோடு இருக்க..." தன்னைக் கலகலப்பாக மாற்றியவள்... அவனுக் காக... "உங்க வீட்ல எப்போ கல்யாணச் சாப்பாடு போடப் போறீங்க... உங்க விருமாண்டி.... என்ன சொல்றாரு... அவர் இளமதி என்ன சொல்றாங்களாம்?" என்று ஆரம்பித்த வளிடம்....

அவளின் குறும்பான பேச்சில்... புன்னகைத்தபடி, “அம்மா வேற அண்ணனை நல்லாத் திட்டிட்டாங்க தீக்ஷா... உன் மேல அம்மாவுக்கு ரொம்ப பாசம் போல... அண்ணா கொஞ்சம் டல்லா இருக்கார்... யார்கிட்டயும் பேசவே இல்லை... நானும் அவ்வளவா பேசல... சோ, தெரியல... அண்ணா ஒண்ணும் சொல்ல மாட்டேன்கிறார்னு அம்மா புலம்பிட்டு இருக்காங்க....” என்று புலம்பியவனிடம்

“உன் ஆளைக் கடத்திட்டார்னு சார்கிட்ட... அவங்க அண்ணாகிட்ட கோபமாக்கும்...” என்று கண் சிமிட்ட....

“ப்ச்...” என்று சலித்தவன், பின்,

“சுரேந்தர் அண்ணாவும் இதுக்குக் கூட்டணி தெரியுமா...?” என்று சொன்னவனிடம்,

“பின்ன லட்சுமணன் ஆச்சே... ராமர் இவர் துணை இல்லாமல் இந்த வேலையெல்லாம் பண்ணுவாரா?” என்று நக்கலடிக்க,

“இப்போதான் ராவணன் ரேஞ்சுக்கு என் அண்ண னைப் பேசுன... அதுக்குள்ள ராமர் ஆகிட்டாரு!” என்று அவளைச் சமாதானமாக்கும் முயற்சியில் பேச,

கொஞ்சம் விரைத்த தீக்ஷா... பின் சாதாரணமாக,

“அண்ணன் தம்பி பாசத்துக்கு ராமர் - லட்சுமண் தான் சொல்லணும்.... ராவணன் - விபீஷணன்னா சொல்ல முடியும்...?” என்றவள்... “சரி. விடு. உன் முகத்துக்காக இப்படி வேணும்னா சொல்லலாம்.... விஜய் - சுரேந்தர்... ராமர் - லட்சுமணர். விஜய் - யுகி... ராவணன் - விபீஷணன். இது எப்படி இருக்கு!” என்று சிரிக்க,

“ரொம்பக் கேவலமா இருக்கு. ராமனும் - ராவணனும் ஒரே ஆள்னு சொன்ன ஒரே பொண்ணு நீ ஒருத்தியாத்தான் இருப்ப.” என்று ஓட்ட....



அதற்குத் தீக்ஷாவோ, “இப்படிக் கூடச் சொல்லலாம் யுகி... ஹீரோவும்... வில்லனும் ஒரே ஆள்னு.... ஆனா எனக்கு எப்போதும் வில்லன்தான்...” என்று சொல்ல....

யுகேந்தருக்கு அவளின் குணம் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

**“த**ன் மகளுக்கு நிச்சயதார்த்தம் என்பதால் வேறு வழி யின்றி... ஜெயந்தியும் வைத்தீஸ்வரனும் சம்பந்தி வீடாகி விட்டதே என்று ராதா வீட்டிற்குச் சென்று அனைவரையும் அழைத்தனர்.

தீபன் இன்னும் கோபத்தில்தான் இருந்தான் என்ப தால் அவன் போகவில்லை... ராதாவிடமும் இன்னும் கோப முகத்துடன் திரிந்து கொண்டிருந்தான்...

“நிச்சய தினம் அன்று காலையிலேயே... தீக்ஷா வீடு பரபரப்பாக இருக்க.... மாப்பிள்ளை வீட்டாரும் வந்திறங் கினர்... ஆனால் ராகேஷ் வரவில்லை...” என்ற இடத்தில் நிறுத்தினாள் தீக்ஷா...

சாரகேஷ்... அவளையே பார்த்தபடி இருக்க,

“ஏன்? என்னாச்சு?” என்று பார்வதி வினவ,

“ப்ச்.... அவன் இன்னொரு பொண்ணை வெளி நாட் டிலேயே லவ் பண்ணினானாம். அவங்க வீட்ல சொன்னாங் களாம்!” என்று முடிக்க,

இப்போது பார்வதி....“ராகேஷ் உனக்கும் லெட்டர் எழுதி யிருந்தார்ல தீக்ஷா!” என்றவளிடம்...

“என்ன லெட்டர்... யாரு எழுதினா?” என்று புரியாமல் கேட்க,

“நீதானே சொன்ன அந்த ராகேஷ்... புடவைக்கு இடையில லெட்டர்னு ஆரம்பிச்ச...” என்றவளை,

"லெட்டரா..". என்று ஆரம்பித்தவளின் விழிகள்... சந்தோசமாக... பரவசமாக ஆரம்பிக்க...

"என் இந்.... என் இந்த... அன்னைக்கு என் ரூம்ல..." என்று ஆரம்பித்து... "பட்டுப் புடவையைத் தூக்கி வீசினேனா... இடையில... லெட்டர்... நான்... அவர் இல்லாம... நான் எப்படி..." என்று வார்த்தைகள் இடம் மாறி ஆரம்பித்தவளின் விழிகள்... இப்போது நிராசையாய் மாறி ஒரு நிலையிலே இருக்க ஆரம்பிக்க... படபடப்பானாள்.

உடல் வேர்க்க ஆரம்பிக்க... மூக்கில் இருந்து ரத்தம் வர ஆரம்பிக்க... நிற்க முடியாமல்... தள்ளாட ஆரம்பித்தாள்.

அவளின் பேச்சு புரியாமல்... முதலில் விழித்தவர்கள்... அவள் தள்ளாடுவதை உணர்ந்து... இப்போது அதிர்ந்து, சாரகேஷ்... சட்டென்று அவளைப் பார்த்து, "தீக்ஷா..." என்று சத்தமாகக் கூப்பிட்டபடி... அருகே போக...

'பாரு' அவளின் மூக்கிலிருந்து வழிந்த ரத்தத்தைத் துடைத்துத் தண்ணீரை அருந்தக் கொடுக்க... அதைக் குடிக்கக் கூட முடியாமல்... அவள் மடியிலேயே படுத்து விட்டாள் தீக்ஷா....

பார்வதிக்குத் தாங்க முடியவில்லை. அழுதபடி... "தீக்ஷா, உனக்கு என்னடி பிரச்சனை....?" என்றபோதே, அவள் மூக்கில் இன்னும் ரத்தம் வடிய, பார்வதிக்குப் பயம் ஆகி விட்டது....

"அவங்க வீட்டுக்குப் போன் பண்ணுவோம்ண்ணா!" என்றவளைச் சமாதானப்படுத்திய சாரகேஷ்... அவளுடைய ஹேண்ட்பேகை ஆராய...

அதில் பல மாத்திரைகள் இருக்க... ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்தவன்... ஒரே ஒரு மாத்திரை மட்டும்.... கவரில் தனியே இருக்க, அதைப் பிரிக்க...



"மூக்கில் ரத்தம் வழிந்தால் கொடுக்க வேண்டிய மாத்திரை!" என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி வைக்கப்பட்டிருந்தது...

வேகமாய் அதை எடுத்து சாரகேஷ் அவளுக்குப் புகட்ட... அடுத்த அரை மணி நேரத்தில் சாதாரணமானாள் தீக்ஷா...

அப்போது சுரேந்தரும் போன் செய்தான்... பார்வதி தான் போனை அட்டெண்ட் செய்தாள்.

பார்வதிக்குத் தன் தோழியின் கடந்த காலம் தெரிந்த காரணத்தால் - கோபத்துடன் பேச ஆரம்பிக்க...

அவனோ, "கிளம்பி யிரு, தீக்ஷா... இன்னும் 10 நிமிசத்தில் அங்க இருப்பேன்!" என்று சொல்லி அவள் பதிலைக் கூட எதிர் பார்க்காமல் வைத்து விட்டான்.

"விஜய் தம்பி சுரேந்தர்..." என்று சொல்லிப் போனை வெறித்தவள்... அவன் சொன்ன விசயத்தைத் தன் அண்ணனிடம் சொன்னாள்.

இதற்கிடையே சற்றுத் தெளிவான தீக்ஷா... தன் முன் நின்ற இருவரின் திகிலடைந்த முகத்தைப் பார்த்து... தானே ஆரம்பித்தாள். "என்ன பயந்துட்டீங்களா...? இது அப்போ அப்போ வரும்... பழகிருச்சு!" என்று சிரித்தவள்...

"இதே போல ஒரு நாள் மயக்கப்பட்டு விழுந்தேனாம்... என்ன... இப்போ உடனே எழுந்துட்டேன்... அன்னைக்கு எழவே இல்லையாம்... அதுக்கப்புறம் த்ரீ மன்த்ஸ் கோமா ஸ்டேஜ்ல இருந்தேனாம்... கடைசியில...." என்று ஆரம்பித்தவளின் விழிகள் ஈரமாகி இருக்க,

பார்வதி அவளைத் தன்னோடு அணைக்க...

"கடவுளுக்கு என்னை ரொம்பப் பிடிச்சிருக்கு போல, பாரு... அதுதான் சீக்கிரம் கூப்பிடுறாரு..." என்று விரக்தியாய்ச் சிரிக்க....

பார்வதிக்கு ராகேஷ் முதல் விஜய் திருமணம் வரை... ஆயிரம் சந்தேகங்கள் இப்போது வந்திருந்தன. ஆனால் கேட்க முடியாமல் தவித்தாள். தன் அண்ணனைப் பார்க்க... அவன் ஏதோ ஒரு யோசனையில் இருக்க... அந்த இடம் அமைதியாய் மாறி இருக்க... தீக்ஷாவைக் கீழே கூட்டி வந்தனர்... சற்று நேரத்தில் சுரேந்தரும் வந்தான்.

அவனைப் பார்த்து, "இது எங்க சுரேந்தர் அத்தான்..." என்று மகிழ்ச்சியோடு அறிமுகப்படுத்திய தீக்ஷா... சாரகேசையும் அறிமுகப்படுத்த...

வந்தவனோ.... அதில் எல்லாம் ஆர்வம் காட்டாமல் கிளம்புவதிலேயே குறியாய் இருக்க... அதைக் கவனித்த பார்வதி... அவனிடம் தனியாகப் பேச வேண்டும் என்று கூறினாள்...

அவளோடு தனியாக வந்த சுரேந்தரிடம், தீக்ஷா மயங்கி விழுந்ததைக் கூற...

"எங்கயிருந்து வந்து தொலச்ச நீ...! ஏதோ நடமாடிட்டு இருக்கிறார் என் அண்ணன்... அவர் உயிரையும் எடுத்துடாதீங்க... நாங்க ஏற்கெனவே நொந்து நூலாகிப் போயிருக்கோம்..." என்ற அவனின் அதிரடியான வார்த்தையில் பார்வதி அதிர்ந்து அவனை முறைக்க...

அவள் முறைப்புக்குத் தன் அலட்சியத்தைப் பதிலாகத் தந்தான் சுரேந்தர்...

ஹாலிலோ.... தீக்ஷாவிடம் சாரகேஷ்...

"உன் ரிப்போர்ட்ஸ்லாம் எனக்கு வேணும், தீக்ஷா... விஜய் கிட்ட கேட்டு வாங்கித் தருகிறாயா?" என்று கேட்க...

அந்த நேரத்தில்.... அதைக் கேட்டபடியே வந்த சுரேந்தர்...

"என்ன, டாக்டர்னு காட்டுறியா...? உன் வேலையை மட்டும் பார்த்துட்டு இரு..." என்று சாரகேஷை மிரட்ட ஆரம்பிக்க...



இப்போது சாரகேஷும் முகம் இறுக ஆரம்பித்தான்.

"சுரேந்தர் அத்தான்!" என்று தீக்ஷா அதட்ட... அதற்கு மேல் எதுவும் பேசாமல் சுரேந்தர் நிற்க,

தீக்ஷா பார்வதியிடம் திரும்பி... "நான் விஜய் அத்தான்கிட்ட பேசிட்டுச் சொல்றேன், 'பாரு'! உங்க அண்ணன் கிட்ட தப்பா எடுத்துக்கச் சொல்லாத...!" என்று சொல்லியவள்...

"சுரேந்தர் அத்தான்.... இப்போ எதுக்கு இவ்ளோ டென்சன் ஆகறீங்க!" என்றபடி வெளியேற... தீக்ஷாவைப் பாருவின் தாய் தேவகி கேள்விக்குறியோடு நோக்க... சாரகேஷும் பார்வதியும் குழப்ப முகத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்தனர்...

சாரகேஷ் வீட்டில் நிலவரம் இப்படி இருக்க...

விஜய்யோ, தீக்ஷாவின் வரவை எதிர்பார்த்து... தீக்ஷாவின் வீட்டில் அமர்ந்திருந்தான்.

## 12

**கா**ரில் பேசாமல் வெளியே வேடிக்கை பார்த்தபடி வந்த தீக்ஷாவைப் பார்த்த சுரேந்தருக்கு... அவள் கோபமாக இருக்கிறாள் என்று அவள் முகத்தைப் பார்க்கும்போதே தெரிந்தது.

அது மட்டும் இல்லாமல்.... அவ்வப்போது வரும் மயக்கமும்... அன்று வந்திருந்ததால் அவளின் கோப முகத்தில் களைப்பும் தெரிய... சுரேந்தர்... அவளிடம் பேச்சுக் கொடுத்தான்.

சுரேந்தர் தன் அண்ணனிடம் அவள் மயங்கிய விசயத்தைச் சொல்லவில்லை... இது அடிக்கடி நடக்கும் என்பதால்... சொன்னால் அவன் மனம் கஷ்டப்படும் என்பதாலும் சொல்லாமல் விட்டு விட்டான்.

"மேடம், என்ன இவ்ளோ கோபம்...." என்றபோது, அவன் எப்போது பேசுவான் என்று காத்திருந்தவள் போல... பேச ஆரம்பித்தாள் தீக்ஷா.

"உங்க அண்ணனை இனி மாற்ற முடியாது... ஆனா நீங்களும் கொஞ்சம் கொஞ்சமா அவர் மாதிரியே மாறிட்டு வர்றீங்க... என் மேல அக்கறையாத்தானே பார்வதி அண்ணா ரிப்போர்ட்ஸ்லாம் கேட்டாரு.... திட்டிட்டு வந்துட்டீங்க... பார்வதியையும் திட்டுனீங்களா...? ஆமா, அவங்க வீட்டுக்கு வந்து அவங்களையே திட்டுற ரைட்ஸை உங்களுக்கெல்லாம் யார் கொடுத்தாங்களோ?" என்று படபடக்க...

"ரொம்ப நாளைக்கப்புறம் நான் இன்னைக்குத்தான் சந்தோசமா இருந்தேன்.... மூட் அவுட் பண்ணீட்டிங்க, அத்தான்!" என்று முடிக்க,

"சாரி...." என்று மட்டும் சொல்லி அவளைப் பார்த்தவன்... தொடர்ந்து... "அந்தப் பொண்ணு பேரு சாருமதி தானே. பார்வதினு சொல்ற..." என்று தன் சந்தேகத்தைக் கேட்க...

'ரொம்ப முக்கியம்!' என்று மனதிற்குள் நினைத்த தீக்ஷா.... "ப்ச்ச்... அவளுக்கு வீட்ல ஒரு பேரு.... வெளில ஒரு பேரு... இது ஒரு சந்தேகமா...?" என்று கேட்க... சுரேந்தர் அசடு வழிந்தான்.

"சரி, விடு... ஒரு டவுட் கேட்கக் கூடாதே..."

"என்ன விடு... தீக்ஷா கோபமா இருக்கால்ல. ஐஸ்கிரீம் பார்லர் போய் எனக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்து கூல் பண்ணினால்தான்... இந்த தீக்ஷா கூல் ஆவா!" என்று சாதாரணமாக வம்பிழுக்கவே சொன்னாள்... போகும் எண்ணமெல்லாம் அவளுக்கு இல்லைதான்...

ஆனால் சுரேந்தர், "அதெல்லாம் முடியாது... அண்ணன் திட்டுவாரு..." என்றவுடன்,



"அப்போ நான் கண்டிப்பா போகணுமே... வாங்கத் தான்!" என்று இப்போது பிடிவாதம் பிடிக்க...

அவள் விட மாட்டாள் என்பதை உணர்ந்த சுரேந்தர், "சரி. அண்ணாகிட்ட ஒரு போன் பண்ணிச் சொல்லிடலாம், தீக்ஷா!" என்றபோது,

அவனது போனைப் பறித்து ஸ்விட்ச் ஆஃப் செய்து தன் பையில் போட்டவள்... தன் போனையும் ஆஃப் செய்து இரு வருமாய்... ஐஸ்க்ரீம் சாப்பிட்டு முடித்து... அதன் பிறகு கோவிலுக்கு அவனை இழுத்துச் சென்று அங்கேயும் பக்திப் பழமாகி 2 மணிநேரத்தைக் கடத்தியவள், மீண்டும் காரில் ஏறி அமர்ந்தபோது, அவன் போனை நல்ல பிள்ளையாக ஆன் செய்து தந்தாள் தீக்ஷா.

"எதுக்கு.... அவர்கிட்ட திட்டு வாங்கவா?" என்று நொந்து போய்க் கேட்டவனை,

"ராமர் திட்டி... லட்சுமணன் ஃபீல் பண்ணுவாரா என்ன?" என்று சிரித்தபோது அவன் சிரிக்க வில்லை...

"யுகி போன் பண்ணினானா...? யுகி என்கிட்ட பேசறதே இல்லை!" என்று வருத்தமாய்ச் சொல்ல...

"பண்ணினான்... உன்னைக் கேட்டான்... நெக்ஸ்ட் வீக் வருகிறான்..." என்றபோது,

"ஹை ஜாலி... ஆனா வந்தா அவன்கிட்ட நான் பேசவே மாட்டேன்!" என்றவள்... பின் தானே, "ஆனால் இந்த தீக்ஷா யுகி கூட எப்போதும் சண்டை கிடையாது... யுகி சமத்து... நானே சமாதானம் பண்றேன்!" என்று பேசியபடி வந்தவள், தன் வீட்டில் இறங்கிய போது...

"பார்வதி என்னை விடக் கோபக்காரி... நீங்க தாங்க மாட்டீங்க சுரேந்தர், அத்தான்..." என்று கண் சிமிட்டிப் போனவளை ஆயாசமாய்ப் பார்த்தபடி... தன் போனை

எடுக்க... அதில் பல அழைப்புகள் தன் அண்ணனிடமிருந்து வந்திருக்க... அது சைலண்ட் மோடில் போடப்பட்டிருந்தது தெரிய... அது தீக்ஷாவின் வேலை என்று புரியாமல் இல்லை.

சுரேந்தரே விஜய்க்குப் போன் செய்தான்.

“அண்ணா...!” என்ற போதே,

“அங்கேயே இரு.... நானும் வருகிறேன்...” என்று விஜய்யின் குரலிலே கோபம் புரிய... அவனை எவ்வாறு சமாதானப்படுத்துவது என்று சுரேந்தர் யோசிக்க ஆரம்பித்து இருந்தான்.

தீக்ஷா வீட்டிற்குள் சந்தோஷமாய் நுழைய... விஜய் ஹாலில் வழக்கம் போல், தான் அமர்ந்திருக்கும் இடத்தில் அமர்ந்தபடி வெறித்து உட்கார்ந்திருந்தான்...

அவளின் அரவம் அவன் உணர்ந்தும் அவன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை... ஆனால் தீக்ஷாவோ அவனைப் பார்த்தபடியே மேலே ஏறினாள்...

அவள் மேலே ஏறும்போதே, “ராதா.... நான் கிளம்பு றேன்மா!” என்றவனின் குரலில்... பாதிப் படி ஏறிய தீக்ஷா,

“ஒரு நிமிடம்!” என்று அழைக்க...

அவளைப் பார்த்தவன்... அவள் ஏதோ அவனிடம் சொல்ல வருகிறாள் என்பதை உணர்ந்த விஜய்... என்ன என்பது போல் கேள்விப் பார்வை மட்டும் வீச... ஆனாலும் கிளம்பும் வேகத்தில் இருக்க...

“நான் உங்க கிட்ட பேசணும்... உங்க பொன்னான அரை மணி நேரத்தை ஒதுக்க முடியுமா?” என்றவளிடம்,

அவன் எதுவும் பேசவில்லை. அவளிடம் பேசத் தயார் என்பது போல் திரும்ப அமரப் போனான்.

அவனுக்குப் பதில் ஜெயந்தி பேச ஆரம்பித்தார்.



“இரண்டு மணி நேரமா... நீ பத்திரமா வீட்டுக்கு வந்து சேரணும்னு... அந்தத் தம்பி உட்கார்ந்திருக்கு... உனக்கு என்ன நக்கலா?” என்றபோது,

“எனக்காக அவர் எதுக்குக் காத்திருக்கணும்?” என்றவள்...

“என்னிடம் ஏதாவது பேசணுமா உங்களுக்கு...?” என்று விஜய்யைப் பார்த்துக் கேட்க,

“இல்லை!” என்பது போல் விஜய் தலையை மட்டும் ஆட்ட,

“பின்ன எனக்காக எதுக்குக் காத்திருக்கீங்க?” என்று விஜய்யை முறைத்துப் பின்...

“அம்மா, யாருக்கும் சப்போர்ட் பண்ணி என்கிட்ட பேசா தீங்கனு எத்தனை தடவை சொன்னாலும் கேட்க மாட்டீங்களா?” ஜெயந்தியிடம் கத்த ஆரம்பிக்க,

“ப்ச்... அவங்களை விடு... வா... என்ன விசயம் சொல்லு!” என்று அவளைப் பார்க்க...

“வெயிட் பண்ணுங்க...” என்று அலட்சியமாகக் கூறி மேலே ஏறியவளைப் பார்த்து, ஜெயந்தி புலம்பியபடி போக...

விஜய் அமைதியாக அவள் வரவுக்காகக் காத்திருக்க... சுரேந்தர் தன் அண்ணனைத் தேடி உள்ளே வந்தான்.

வந்தவனிடம், “ஏன் சுரேந்தர் இவ்ளோ லேட்? ஒரு போன் பண்ணி இருக்கலாம்ல... இங்க ஒருத்தனோட மனசை யாருமே புரிஞ்சுக்க மாட்டீங்களா?” என்று அவன் சொன்ன போது....

அவன் கோபத்தை எதிர்பார்த்து வந்தவன்... அதைக் கூடத் தாங்கியிருப்பான். நெகிழ்வாய்... ஆற்றாமையாய்... அவன் பேசிய வார்த்தைகளில் சுரேந்தர் உடைந்து போக... அதைக் கவனித்த விஜய்,

"கோபமாகத்தான் இருந்தேன் சுரேந்தர்... அதுலாம் எனக்கு இருந்து என்ன பிரயோஜனம்?" என்றவன் பார்வை எதிரே இருந்த தீக்ஷாவின் புகைப்படத்தில் நிலைக்க.... இப்போது, கீழே இறங்கி வந்தாள் தீக்ஷா.

அவள் வந்த வுடன்... புகைப்படத்தில் இருந்த தன் பார் வையை விலக்கி... தன் எதிரே அமர்ந்தவளைப் பார்த்தான்.

"சொல்லும்மா!" என்றபோதே...

அவள் எரிச்சலுடன், "தயவுசெய்து... என்னை நீங்க பரிதாபமாப் பார்த்து... பாவம் போல பேசாதீங்க... உங்களைப் பார்க்கும் போதுதான்... எனக்கு நான் ஒரு நோயாளின்னே தெரியுது..." என்றபோது,

விஜய் தன் முகத்தை இறுக்கமாக மாற்றி.... "சொல்லு!" என்றவனின் குரல் கடுமையைக் கொண்டு வந்து... "இப்போ ஓ.கே. வா?" என்று தீக்ஷாவைப் பார்த்துக் கேட்க,

அதைக் கண்டுகொள்ளாமல்... அவள் ஆரம்பித்தாள். அவளுக்கு இரண்டு காரியம் ஆக வேண்டும்...

யாரிடம் போய்க் கேட்டாலும் அனைவரும் விஜய்யிடம் கேட்க வேண்டும் என்று சொல்வார்கள்... அதனால் தானே களத்தில் இறங்கினாள்... பெரும்பாலும் அவள் விஜய்யுடன் நேரிடையாகப் பேச்சு வைத்துக் கொள்வதில்லை.... அலு வலகம் போகும்போது கூட மௌனம்தான் இருவரின் இடையே ஆட்சி செய்யும், அவனே பேசினால் கூட... இவளுக்குப் பேசப் பிடிக்காது. அவனின் கோப முகம் கூடத் தாங்கிக் கொண்டாள்..

அவனின் அக்கறை கலந்த பரிதாப முகத்தை ஏனோ இவளுக்குத் தாங்க முடியவில்லை. இன்று தீக்ஷாவிற்கு அவனிடம் காரியம் ஆக வேண்டுமே... அதனால் அவள் நேரிடையாக விஜய்யிடம் பேச ஆரம்பித்தாள்... அதுவும் அமைதியாக...



"என்னோட ரிப்போர்ட்ஸ்லாம் வேண்டும். சாரகேஷ் பார்க்க வேண்டுமென்று சொன்னார்!" என்றபோது,

"ஹ்ம்ம் தருகிறேன்..." என்று அவன் முடிக்க,

சுரேந்தர் அதிர்ந்து அவனைப் பார்க்க... பார்வையாலே அடக்கிய விஜய்,

"அப்போ நான் கிளம்பவா?" என்று எழப் போன வனிடம்,

"இன்னொண்ணும் இருக்கு..." என்றபோது,

"இனி ஆஃபீஸுக்குப் 'பாரு' கூட... அவளோட பைக்கில் வருகிறேன்!" என்றவளிடம்...

முதலில் சொன்னது போல உடனே சம்மதம் சொல்ல வில்லை அவன்.

அதற்குப் பதில், "அதை நான் யோசித்துச் சொல் லணும்... 'பாரு' கிட்ட பேசிட்டு சொல்கிறேன்!" என்றபோது,

"ஹலோ, என்ன நினைச்சுட்டு இருக்கீங்க? ஒரு மரியா தைக்கு நான் சொன்னேன்... உங்க கிட்ட பெர்மிஷன் வாங்கலை... என்னமோ யோசிக்கிறேன்னு சொல்றீங்க. அவ கூடத்தான் நான் இனி வருவேன். போதுமா?" என்று சத்தமாகச் சொல்லி வேகமாய் எழ...

"ஏய்... எதுக்கு இப்போ கத்துற... வேண்டாம்னா சொன் னேன்? பாருகிட்ட பேசிட்டு சொல்றேன்னுதான் சொன்னேன்... புரிஞ்சதா இல்லையா?" என்ற அதட்டலில்,

தீக்ஷா அவனைப் பார்க்காமல்... அருகில் இருந்த சுரேந்தரை முறைக்க..

"அவனை எதுக்கு முறைக்கிற?" என்றபடி, ராதாவை அழைத்தவன்... அவளின் அருகில் சென்று, "வரேம்மா, ராதா!" என்றபடி,

"அவ கொஞ்சம் டல்லா இருக்கா... ஏன்னு தெரியல... பார்த்துக்கோ... தனியா விடாத!" என்று சொல்லியவன்... தீக்ஷாவிடம் திரும்பி...

"திங்கட்கிழமை நீ என் கூடத்தான் வரணும். அடுத்த நாளில் இருந்து சாருமதியுடன் வரலாம்... போதுமா?" என்று மறைமுகமாகச் சம்மதத்தையும் சொல்லி முடித்தவன், சுரேந்தரோடு வெளியேறியும் இருந்தான்.

சாரகேஷ் தன் அறையில் குழப்பமாக இருக்க, பார்வதி அவன் முன் அவனுடைய முகத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"என்னண்ணா! ஏன் இவ்ளோ யோசனை? தீக்ஷாவுக்கு ஒண்ணும் ஆகாதுண்ணா!" என்று மருத்துவன் ஆகிய அவனுக்கே இவள் ஆறுதல் சொல்ல,

"அவளுக்கு ஹார்ட்லலாம் ப்ராப்ளம் இல்ல, பாரு..." என்று சொல்லிப் பார்வதியைப் பார்க்க,

"அண்ணா! என்னண்ணா சொல்ற... நார்மலாத்தான் இருக்காளா? அப்போ மூக்கில் இருந்து... ஏன்னா ரத்தமெல்லாம் வருது?" என்று கவலையாகக் கேட்க,

"ஹார்ட்லதான் பிரச்சனை இல்லைன்னு சொன்னேன்... பிரச்சனை இல்லேனு சொன்னேனா? அவளுக்குப் பிரச்சனை இருக்கு... அது அவள் சொன்ன நோய் கிடையாது. அது எதற்காகச் சொல்லி வச்சுருக்காங்கன்னு தெரியல... அவளை டெஸ்ட் பண்ணிப் பார்த்தாதான் தெரியும்..." என்றவனிடம்,

"தீக்ஷா ரிப்போர்ட்ஸ்ல தெரியாதாண்ணா?" என்று சொல்ல,

"இவ்வளவு பெரிய நோய் இருக்குதுன்னு சொல்லி அவளை ஏமாத்தினவனுக்கு... அவளோட ரிப்போர்ட்ஸை



மட்டும் மாற்றித் தரத் தெரியாதா என்ன? அவ கொண்டு வருவது வேஸ்டாத்தான் இருக்கும்..." என்றவனிடம்,

"அண்ணா... விஜய்க்கு மேரேஜ் ஆகிருச்சுனுதான் நான் கேள்விப்பட்டேன்... தீக்ஷாகிட்ட அதைக் கேட்கிறதுக் குள்ள.... அவ மயங்கி நான் பயந்துட்டேன்..." என்றபோது,

"ஆகி இருக்கலாம். தென் தீக்ஷாவுக்கு அம்னீஷி யாவும் இருக்கும்னு நினைக்கிறேன், சில விசயங்கள் சொன்னபோது... அவள் உணர்ந்து சொல்லவில்லை... தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள்... அதாவது ராகேஷ் வராத விஷயம் உட்பட!" என்ற போது...

பார்வதியும் கவலையாக நோக்கினாள்.

"ராகேஷ் வேற யாரையோ லவ் பண்ணினான் என்று அவளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது... அவளாக அதைச் சொல்ல வில்லை!" என்றபோதே,

"அண்ணா!" என்று சந்தேகமாய்ச் சொல்ல...

"அவளோட நிச்சயதார்த்தம்... ராகேஷ் நிலை... இதெல்லாம் அவள் நினைவில் இல்லை என்பதுதான் நிஜம். ஒருவேளை ராகேஷோட மேரேஜ் ஆகி இருக்கலாம்... அவனுக்கு ஏதாவது ஆகி இருக்கலாம்..."

"அண்ணா..." என்று தன் அண்ணனை வலியோடு பார்க்க... அவள் கையை ஆறுதலாகப் பிடித்து அழுத்தியவன்...

"ஏதோ ஒரு பலமான அதிர்ச்சி அவளோட வாழ்க்கை யில நடந்திருக்கு... சுனந்தா பிறந்த நாளில் நடந்ததை விட! அதற்கு அந்த விஜய் கூடக் காரணமாக இருந்திருக்கலாம்... அவளோட மறந்திருக்கும் இன்றைய நிலை கூட அவனுக்குச் சாதகமாக இருக்கலாம்..." என்று அவளைப் பார்த்தவன்... "நீ நாளையில் இருந்து அவன் ஆஃபீஸுக்குப் போக வேண் டாம்மா!" என்று முடிக்க,

"இல்லண்ணா, நான் போவேன்... நான் போக வில்லை என்றால்தான் விஜய்க்குச் சந்தேகம் வரும்... அது மட்டும் இல்லாமல்... நான் அந்த ஆஃபீஸ்ல இருந்தால்தான் தீக்ஷா பக்கத்தில நெருங்க முடியும்... இல்லைன்னா... அவளை நெருங்க முடியாது..." என்றபோது,

அவள் சொல்லிய விசயமும் சாரகேஷுக்குச் சரியாகப் பட, "சரி..." என்று சொன்னவன்...

"பாரு, நீ... உன் பாதுகாப்பும் எனக்கு முக்கியம்," என்று அண்ணனாய்ச் சொன்னவன், "ஒரு நாள் தீக்ஷாவை நானே டெஸ்ட் செய்து அவளோட நிலைமையை அவளுக்குச் சொல்வோம். அதுவரை நீ அவகிட்ட எதுவும் சொல்லாத!" என்று சொல்ல, பாரு தலை ஆட்டினாள்...

**தி**ங்கட்கிழமை. வி.டி. புரோமோட்டர்ஸ் அலுவலகம் வழக்கமான தன் பணியில் இருக்க, பார்வதி... தீக்ஷா இருக்கையில் அமர்ந்திருந்தாள். தீக்ஷா அன்று அலுவலகம் வரவில்லை. பார்வதி போன் செய்து கேட்க... வழக்கமான பெண்களின் உபாதை காரணமாகத் தான் வரவில்லை என்று சொல்லி, மறுநாள் வந்து தன்னை அழைத்துப் போகுமாறு சொல்லி வைத்தாள் தீக்ஷா. விஜய், பார்வதியைத் தன் அறைக்கு அழைக்க...

தன்னை அவன் அறைக்குத் தனியே அழைக்கிறான் என்ற போதே தீக்ஷாவை அவன் வீட்டு மாடியில் அவன் அடைத்து வைத்த ஞாபகம் வந்து... அவளுக்குப் பதட்டத்தில் வியர்வை அரும்ப, இருந்தும்... இத்தனை பேர் இருக்கும் அலுவலகம்... என்ன ஆகப்போகிறது... என்று தைரியமாக உள்ளே நுழைந்தாள். உள்ளே வந்தவளைப் பார்த்த விஜய்க்கு... அவள் அசாதாரணமாக இருப்பது புரிய... தீக்ஷா தன்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள் என்பது அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிய... உட்காரக் கூடச் சொல்லாமல்... அவளையே பார்த்தபடி இருந்தான்.



மென்று முழுங்கினாள் பார்வதி.

"சார், வரச் சொன்னீங்க..." என்று அவள் எச்சில் முழுங்கி... சொல்லச் சொல்ல... விஜய்க்குச் சிரிப்பு வருவது போல் இருக்க... இருந்தும் அவள் அறியாதபடி அடக்கி யவன்... அவள் பார்வை மாற்றங்களைப் பார்த்தபடியே,

"ராட்சசி.... வில்லன் ரேஞ்சுக்கு பில்டப் கொடுத்துச் சொல்லி இருப்பா போல... இவ இந்த முழி முழிக்கிறா...!" என்று நினைத்தவன்,

பார்வதி இன்னும் டென்சனாக இருப்பதை உணர்ந்து,

விஜய், அவளிடம் அமைதியாகப் பேச ஆரம்பித்தான்.

"இது எல்லாம் உன் ஃப்ரெண்டோட ரிப்போர்ட்ஸ்... எடுத்துக் கொண்டு போய் உன் அண்ணனிடம் கொடு," என்று ஒரு ஃபைலைக் கொடுத்தவன்,

"நீ எந்த வழியில் வருகிறாய்?" என்று அவளைக் கேட்க, ஏற்கெனவே மிரண்டிருந்த அவளுக்கு... இப்போது காதை அடைத்தது போல் இருக்க,

"என்... என்ன...?" என்று மீண்டும் கேட்க,

"எந்த வழியில் வருவாய்ன்னு கேட்டேன்...?" என்ற போது அவன் பார்வை அவளிடமிருந்து மானிட்டரில் பதிய, அவளும் தான் வரும் வழியைச் சொல்ல...

அவள் வழிகளை ஆராய்ந்தவன்... "இனி அந்த வழி எல்லாம் வேண்டாம்..." என்று அவளைத் தன்னருகே வரச் சொன்னவன்... தன் மானிட்டரில் உள்ள கூகுள் மேப்பில் அவள் வரும் வழியைக் கூற...

அவள் அருகில் போய் நின்று... ஜாக்கிரதையாகச் சற்றுத் தள்ளியே நின்று அதைப் பார்த்தவள், 'இவன் என்ன லூசா? 25 கிலோமீட்டர்ல வர வேண்டிய வழியை விட்டு, 40 கிலோ மீட்டர் சுற்றி வரச் சொல்கிறான்!' என்று மனதில்

நினைத்தபடி, “சார், இது ரொம்பச் சுற்று... நான் வருவது ஷார்ட்கட்,” என்று சொல்ல, இப்போது தைரியமாகவே பேச ஆரம்பித்து இருந்தாள்.

‘நான் ஏன் இவனுக்குப் பயப்பட வேண்டும்? என்னை என்ன தீக்ஷா என்று நினைத்தானா? என்கிட்ட மட்டும் வம்பு வளர்த்தால் அதுக்கப்புறம் இருக்குடா உனக்கு... நீ சொல்றதைச் சொல்லு... நான் வழக்கம் போல வருகிற வழியில தான் வருவேன்...’ என்று தன் வழக்கமான தைரியத்தினை அவளுக்குள் கொண்டு வந்திருந்தாள்.

“நீ மட்டும் வந்தா, நீ சொன்ன வழியில் வா... இது, அவ கூட வந்தா மட்டும்...” என்று சொல்ல, அதில் இருந்த அதிகாரத்தில் சற்று அதிர்ந்து...

அவளையுமறியாமல், “யார் கூட...?” என்று கேட்க,

“உன் ஃப்ரெண்ட்தான்... வேற யார்?”

“தீக்ஷா கூடவா?” என்று கேட்க... அவன் தலையாட்ட...

அப்போதுதான் பார்வதி ஒன்று உணர்ந்தாள், அவன் இதுவரை தன் முன் தீக்ஷா என்ற அவள் பெயரையே உச்சரிக்கவில்லையே என்பதை.

அப்போது, “சார், உங்களைப் பார்க்க... ரெண்டு பேர் வந்திருக்காங்க. சக்தி பேரண்ட்ஸுன்னு சொன்னாத் தெரியும்னு சொன்னாங்க...” என்று சொல்லியபடி அவன் பி.ஏ. வர....

“ஓ...!” என்ற விஜய், “சரி, அவங்களை வரச் சொல்லு,” என்று சொல்லியபடி எழுந்தவன்... பார்வதியிடம் திரும்பி,

“பாரு... நீ நாளையில இருந்து உன் ஃப்ரெண்ட்டை உன் பைக்ல கூட்டிட்டு வரலாம், இதை அவ கிட்டே சொல்லிரு,” என்று வெளியேற, பார்வதி அங்கிருந்தபடியே தீக்ஷாவுக்குப் போன் செய்து... விஜய் அவள் தன்னோடு வர



அனுமதி அளித்த விஷயத்தைச் சொல்ல... சந்தோஷமானாள் தீக்ஷா.

அப்போது விஜய்யோடு உள்ளே வந்தவர்கள் இருவரும் மிகவும் சாதாரணத் தோற்றத்தில் இருக்க... விஜய் அவர்களை அலுவலக வாயிலில் போய் அழைத்து வந்த விதம் பார்வதியை வியக்க வைக்க, ஆவென்று பார்த்தபடி நின்று கொண்டிருந்தவளின் கண்களில், எதிரில் இருந்த விஜய்யின் புகைப் படம் எதேச்சையாகத் தெரிய, அதிர்ந்து அதை நோக்கியபடி இருந்தாள். இப்போது தன் முன் இருக்கும் விஜய்யைப் பார்க்க, ஏகப்பட்ட வித்தியாசங்களை அவள் உணர்ந்தாள்.

விஜய் அவர்களிடம், “இன்னைக்கு... சக்தி பிறந்த நாளா? நான் மறந்தே போய் விட்டேன். நீங்க போன் செய்து ஞாபகப் படுத்தி இருக்கலாம், அங்கிள்...”

“கோயிலுக்குப் போனோம்... அந்தப் பிரசாதம் தந்துவிட்டு... தீக்ஷாவையும் பார்த்துட்டுப் போகலாம்னு...” என்று சொல்ல, அப்போதுதான் அங்கு நின்ற பார்வதியைப் பார்த்தவன்,

“நீ போகலாம்...” என்று கூற, பார்வதி அறை வாசல் கடக்கும்வரை காத்திருந்தவன், அவர்களோடு பேச ஆரம்பித்தான்.

“ஒரு நாள்தான் மரியாதை.... தீக்ஷா ஃப்ரெண்ட்னு சொன்னவுடனே மரியாதையும் போச்சா?” என்று புலம்பியபடியே வெளியே வந்தவள் மனதில்... அவன் தோற்றமாற்றம் ஏனோ மனதைப் பிசைந்தது.

அந்தப் புகைப்படத்தில்... அவன் மிகவும் கம்பீரமாக இருந்தான். அவன் அணிந்திருந்த உடையில் இருந்து... எல்லாமே அவனை ஒரு பணக்காரத் தோற்றத்துடன் காட்ட, இப்போது இருக்கும் விஜய்... சட்டையைக் கூட டக் இன்

செய்யாமல், ஏனோ தானோவென்று உடை அணிந்து... ஒழுங்காகச் சவரம் செய்யப்படாத முகம்... முகத்தில் கம்பீரம் இருந்ததுதான்... ஆனால், அவன் கண்களில் ஏதோ ஒரு சோகம். அந்தப் புகைப்படத்தில் உள்ள அவன் கண்களில் ஒரு ஆளுமை இருந்தது. ஆனால், அது இப்போது இல்லாதது போல்தான் தோன்றியது பார்வதிக்கு.

மனம் ஆராய்ச்சியில் இறங்க ஆரம்பித்து இருக்க, தன் இருக்கைக்கு வந்து அமர்ந்தவளுக்கு... விஜய்க்கு என்ன பிரச்சினை என்று யோசிக்க ஆரம்பித்து இருந்தாள். தான் இண்டர்வியூக்குச் சென்ற விஜய் பில்டர்ஸில் இருந்த பரபரப்பு, இந்த அலுவலகத்தில் இல்லை என்பதை வந்த அன்றே உணர்ந்திருந்தாள்தான். ஆனால், இப்போது ஏனோ அது கூட வித்தியாசமாகப் பட்டது. சும்மா பேருக்கு இந்த அலுவலகம் இருப்பது போல்தான் தோன்றியது.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கடக்க... ஃபீல்டில் பிரச்சினை என்று அவளுக்குப் போன் கால் வர... அதைச் சொல்ல விஜய் அறைக்குப் போனாள். அவனின் அனுமதி பெற்று உள்ளே போனவள்,

"ஓ.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் ஃபீல்ட்ல பிராப்ளம்னு போன் வந்திருக்கு சார்," என்று அதைப் பற்றிய தகவல்களைச் சொல்ல,

"சுரேந்தர்தானே அதை ஹேண்டில் பண்றான்..." என்றபடி, "ஏதும் பெரிய பிரச்சினையோ...?" என்று யோசித்தவன்... தன் தம்பி தனியாக மாட்டிக் கொண்டு விட்டானோ என்ற அச்சம் வர... அதில் கொஞ்சம் வேகமாக எழுந்தவன்... மறக்காமல் சக்தி பெற்றோரிடமிருந்து பிரசாதத்தை வாங்கியபடி...

"நான் உங்க ரெண்டு பேரையும் இன்னொரு நாள் பார்க்கிறேன். சாரி, இன்னைக்கு என்னால... அதிலும் உங்க பொண்ணோட பிறந்த நாள் அதுவுமா உங்க எந்த ஆசையையும் நிறைவேற்ற முடியவில்லை. உங்க கூட டைம் ஸ்பெண்ட் பண்ண முடியல..." என்றவன்.. "எதில் வந்தீங்க...? நான் ட்ராப் பண்ணவா?" என்றபோது,



"பரவாயில்லை தம்பி... போய்ட்டு வாங்க," என்று அவன் அவசரம் உணர்ந்தவர்கள், அவனை வழி அனுப்பி வைத்தனர்.

ஆனால், அவன் நினைத்ததுபோல் பெரிதாக இல்லை. சுரேந்தர் ஏற்கெனவே அந்த இடத்திற்குப் போயிருந்தபடியால், அங்கு நிலைமை ஓரளவு சரியாக, தீக்ஷாவின் வீட்டுக்குக் கிளம்பினான் விஜய்.

அவன், அவள் வீட்டை அடைந்த போது, மணி நான்கைத் தொட்டிருந்தது. அவன் நுழைந்தபோதே சுனந்தாவோடு தீக்ஷா விளையாடிக் கொண்டிருந்தாள். கண்ணாமூச்சி ஆட்டம். அவள் கண்களைக் கட்டியிருந்தபடியால், அவளைப் பார்த்தபடியே உள்ளே வந்தான் விஜய். சுனந்தாவைக் கைகளால் தேடியபடி வந்தவள்... விஜய் அருகில் அவனைத் தொடும் தூரத்தில் வர, விஜய் அவள் தன்னைத் தொடாத வாறு விலகி... சற்றுத் தள்ளி நின்றான்.

"மாமா..." என்று சுனந்தா சிரித்தபடி அவனிடம் ஓடி வர,

படக்கென்று துணியை அவிழ்த்தவள், அவனைப் பார்க்க...

"டேய் ஸ்னோ குட்டி..." என்று அவளைத் தூக்கியபடி, "உங்க அத்தை ஆஃபீஸ்க்கு டிமிக்கு கொடுத்துட்டாளா என்ன... உடம்பு சரி இல்லேன்னு மாமா கிட்டே சொல்லிட்டு... இங்க விளையாண்டுட்டு இருக்கா..." என்று அவளைப் பார்க்காமல் சுனந்தாவைப் பார்த்தபடி சொல்ல,

"என்ன, இன்னைக்குச் சீக்கிரம் வந்துட்டீங்க?" என்று கேட்டாள் தீக்ஷா, ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காக. "சைட்ல ஒரு ப்ராப்ளம்... அதுதான் அங்கே போய்ட்டு வருகிறேன். ராதா, அத்தையெல்லாம் எங்கே?"

"மேலே இருக்காங்க... ஸ்னோ குட்டி! வா. நாம வெளியில போய் விளையாடலாம்..." என்று சுனந்தாவை அவனிடமிருந்து வாங்கியவள், வெளியேறப் போக...

"இரு..." என்றவன், அவன் கொண்டு வந்த திருநீறை அவளுக்கு நீட்ட,

தயங்கியபடி, "வேண்டாமே..." என்று தயங்க, "கோயில் பிரசாதம் வேண்டாம்னு சொல்லக் கூடாது..." என்று அவன் மீண்டும் நீட்ட, "வேண்டாம்னு சொன்னாக் கேட்க மாட்டீங்களா?" என்று குரலில் அனலடிக்கச் சொன்னவளிடம்,

"கோயில் பிரசாதம்... அதுதான்..." என்று விஜய் இப்போது தயங்க,

"அதனாலதான் வேண்டாம்னு சொன்னேன்..." என்று விருட்டென்று வெளியேற எத்தனிக்க, விஜய் சட்டென்று அவள் நிலை புரிந்தபடி...

"சரி, நீ இன்னொரு நாள் வைத்துக் கொள்... ஆனா மறந்துறாதே..." என்று அங்கிருந்த மேஜை மேல் அவற்றை வைத்தவன்... "பாப்பாவுக்கு வைக்கிறேன்..." என்று தீக்ஷா அருகே நெருங்கியவன், அவள் மீது படாமல் சுனந்தாவிற்கு வைக்க முடியாது என்பதால், "பாப்பாவை இறக்கி விடு!" என்று சொல்லி... அவள் இறக்கி விட்டபின் சுனந்தாவின் நெற்றியில் வைக்க,

விஜய்யையே பார்த்தபடி நின்றிருந்தாள் தீக்ஷா.

அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தும், அவளைப் பார்க்காமல்...



"நான் வரட்டுமா...?" என்று கேட்ட அவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளைத் தாக்க... பதிலே சொல்லாமல், மனம் ஏதோ சொல்ல... அதைத் தேடிச் சென்றவளைப் பார்த்த விஜய்...

தன் தவறு புரிந்தவனாய்... சுனந்தாவை அவள் பக்கத்தில் விட... அவள், "அத்தை... அத்தை..." என்று பிடித்து இழுக்க, தீக்ஷா தன் நிலைக்கு வர... நிம்மதி அடைந்த விஜய், அவளிடம் சொல்லாமலே விடைபெற்றுக் கிளம்பினான். ராதாவைக் கூடப் பார்க்கவில்லை அவன்... அவன் அந்தப் பக்கம் செல்ல,

சுனந்தா தன் அத்தையின் நெற்றியில் வழக்கம் போல் விளையாட்டாய் முட்ட... அவள் செயலில்.. விஜய், சுனந்தாவுக்கு வைத்த குங்குமமும் விபூதியும் தீக்ஷா நெற்றி அடைய... சுனந்தா அவளைப் பார்த்துச் சிரித்தாள். தீக்ஷாவுக்குத் தன் நெற்றியை அடைந்த குங்குமம் கூடத் தெரியாமல், சுனந்தாவோடு விளையாட்டில் மும்முரமாக இருந்தாள். இது போல் அவள் அறியாப் பக்கங்கள் என்று அவள் அறியும் காலம் வருமோ?

**அ**ன்று சாரகேஷின் வீட்டில்... பார்வதி, விஜய் கொடுத்த ரிப்போர்ட்ஸை எல்லாம் அவனிடம் கொடுக்க... அதை வாங்கியவன், பார்க்காமலே,

"இது வேண்டாம் பாரு... அவன் இவ்வளவு தைரியமா கொடுக்கிறான் என்றால், இதில் கோல்மால் தான் இருக்கும்..." என்றபடி அதை ஃபைல்கள் இருந்த வரிசையில் ஓரமாய் வைத்துவிட்டான்.

விஜய்யைப் பற்றித் தன் அண்ணனிடம் எதுவும் சொல்லவில்லை அவள். தன் அண்ணனிடம் சொல்லவும் தோன்றவில்லை அவளுக்கு.

வேறு ஏதும் பேசாமல் தன் அறைக்கு வந்தவள், தன் தோழி தீக்ஷாவுக்கு எதுவும் இல்லாமல் இருக்க வேண்டும்...

அவள் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டுமென்று கடவுளிடம் மனமுருகி வேண்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி எதுவும் அவளுக்குத் தெரியவும் இல்லை.

தீக்ஷாவைப் பார்த்ததில் இருந்து, மனமெங்கும் அவள் எண்ணங்கள் தான் பார்வதியை ஆட்சி செய்து கொண்டிருந்தன. இன்று, விஜய்யும்.

அந்தப் புகைப்படத்தில் இருந்த விஜய்யின் கம்பீரம் இன்று ஏன் இல்லாமல் போய்விட்டது... என்று நினைக்க, அடுத்த நிமிடம், 'ஒருவேளை அவர் தொழிலில் தோல்வி அடைந்ததாலோ என்னவோ...' என்று மனமே அவளுக்குப் பதில் வைக்க... 'அதுவாகக் கூட இருக்கலாம்...' என்று அவளே சொல்லிக் கொண்டவள் நித்திரையிலும் ஆழ்ந்தாள்.

## 13

அடுத்த நாள்... தோழிகள் இருவரும் சந்தோஷமாய்ப் பேசியபடி அலுவலகம் சென்று கொண்டிருந்தனர். தீக்ஷாவின் தோழிதானே பார்வதியும்... அடங்குவாளா என்ன... விஜய் யிடம் அவன் சொன்ன வழியில் வருவதாகத் தலை ஆட்டிவிட்டு... அவன் சொன்ன வழியில் செல்லாமல், வழக்கமாய்த் தான் செல்லும் வழியிலே சென்றாள்.

பார்வதி வண்டியை ஓட்ட... தீக்ஷா வழக்கம் போல் பேசியபடி வந்தாள்.

"பாரு... உன்னைப் பார்த்ததில் இருந்து எனக்கு ஏதோ பழைய தீக்ஷாவா ஆன மாதிரி இருக்கு... விஜய் அத்தான் கிட்டக் கூட எனக்குக் கோபம் வரலை, தெரியுமா...?" என்று சொன்னவளிடம்...

"நீ பாட்டுக்கு நேத்து வராம இருந்துட்டே... எனக்குத் தான் பயமாகிருச்சு," என்றவளிடம்,



"ஏன் பயம்...? எதுக்குப் பயம்...?" என்று கேட்டவளின் கூந்தல் காற்றில் பறந்து பாருவின் மேல் மோத... பார்வதி அலுவலகப் பேச்சை மறந்து... அவளிடம்,

"உனக்கு நீளமான முடிதானே தீக்ஷா... அதை ஏன் வெட்டிக்கிட்டே...." என்று கேட்க

"அதுவா... சும்மாதான்..." என்றவள், தொடர்ந்து,

"அண்ணி வந்த பின்னால்.... வீட்டில் வேலைக்கும் ஆள் வர... அம்மாவுக்கு அண்ணியும் உதவியா இருக்க... என்னைக் கண்டுக்கவே இல்லை... திட்டக் கூட இல்லை... அதுதான் நேரா பார்லர் போய் முடியை வெட்டிட்டு வந்துட்டேன். அன்னைக்கு எனக்குக் கெடச்ச திட்டு இருக்கே... சும்மா.. வானத்துக்கு எகிறுச்சு... சூடுதான் போலன்னு கொஞ்சம் பயம் வேற வந்துருச்சு, தெரியுமா...? இந்த வைஜெயந்தியோட அராஜகத்துக்கு அளவே இல்லைதான்... ஆனா... எங்க அம்மா திட்டாம இருந்தாலும் நல்லா இருக்காது... அப்பப்போ பூஸ்ட் ஏத்திக்கிருவேன்," என்று அவள் சொன்னதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்த பார்வதி,

"நல்ல பொண்ணுடீ நீ... இதுக்காக நீ போய் முடி வெட்டுவியா என்ன...! ஒரு ஆளு... ரொம்ப ஃபீல் பண்ணாரு. யாரோ போட்ட ரெட்டைச் சடையில மயங்கித்தானே லவ் லெட்டரே கொடுத்தேன்னு..." என்று சொல்ல,

"ஏய்... உதை படுவே...!" என்றவள், "உங்க அண்ணாவை டாவடிக்கிற டாக்டரம்மா பேர் என்ன சொன்ன?" என்று கேட்க,

"அகல்யா..." என்று பார்வதி சொல்ல,

"அகல்யா - சாரகேஷ், நல்லாத்தான் இருக்கு... நாம சேர்த்து வைப்போமா...?" என்று உற்சாகத்துடன் சொன்ன தீக்ஷாவைப் பார்த்த பார்வதி,

"எங்க அண்ணனை உனக்குப் பிடிக்கலையா, தீக்ஷா?" என்று கொஞ்சம் வருத்தமாய்க் கேட்க,

அவளைப் பின்னால் இருந்து கட்டியபடி...

"உங்க அண்ணா ரொம்ப நல்லவர், பார்வதி... அவர் மனசுக்கு அவர் கூட ஆயுள் முழுக்க வாழக் கூடிய பொண்ணு கிடைப்பா...!" என்று சொல்லியவளிடம்,

"பிடிச்சிருக்கா...? அதை மட்டும் சொல்லு!" என்று பார்வதி பிடிவாதம் பிடிக்க,

"பிடிச்சிருக்குன்னு சொல்லி என்ன ஆகப் போகுது...? பிடிக்கலைன்னு சொல்லி என்ன ஆகப் போகுது? சொல்லு... நான் சில உணர்வுகளுக்கெல்லாம் தடா சொல்லி ரொம்ப நாள் ஆச்சு!" என்று சொல்லும்போதே, அவள் குரலில் இருந்த விரக்தி பார்வதியை வாட்ட... தன் அண்ணன் சொன்ன மாதிரி அவளுக்கு ஒன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று மனம் அடித்துக் கொண்டது.

தன் விரக்தியான பேச்சை உணர்ந்த தீக்ஷா, தன்னைச் சமாளித்து... தானே பேச்சை மாற்றினாள்.

"என்னை விடு... நீ சொல்லு, உனக்கு இதுவரை யாரும் பிடிக்கவில்லையா...? தனியா சுத்திட்டு இருக்கே...?" என்று தோழியின் புறம் பேச்சை மாற்ற... பார்வதியும் அவள் நிலை புரிந்து.... பேச ஆரம்பித்தாள்.

"எனக்கு மாப்பிள்ளைதானே... நீ வேற... ஒருத்தனும் செட் ஆக மாட்டேங்கிறான்... நமக்குத்தான் காதல் வரல... அம்மா, அண்ணா பார்த்துச் சொன்ன பையனைப் பார்த்தாவது வருமான்னு பார்த்தா... அதுவும் வர மாட்டேங்குது. உனக்கு ராகேஷைப் பார்த்து வராத மாதிரி..." என்று சிரித்தவளின் முதுகில் ஒரு போடு போட்ட தீக்ஷா,

"அவுட் ஆஃப் ஃபோகஸ் ஆன ராகேஷை எல்லாம் ஏன்டி சீனுக்கு இழுக்கிறே...?" என்று கேட்ட போதே, சிக்னல் வர... வண்டியை நிறுத்தினாள், பார்வதி.



அப்போது அருகில் யாரோ சக்தி என்று அழைக்க... சட்டென்று தீக்ஷா திரும்பிப் பார்க்க... பார்வதியும் பார்க்க... அந்தப் பெண்ணின் குழந்தையின் பேர் சக்தி போல... அவள் குழந்தையை அதன் பேரை அழைத்து ஏதோ பேசிக் கொண்டிருக்க... இப்போது பார்வதி,

"உனக்குப் பிடித்த போர்டி... ஸ்கூல் டேஸ்ல எங்க எல்லாரையும் தீக்ஷா தீக்ஷான்னு தொடர்ந்து சொல்லச் சொல்லி... அது சக்தின்னு மாறுகிறவரை விட மாட்டேல்ல..." என்று அன்றைய ஞாபகங்களை ஆரம்பித்தவளுக்கு... நேற்றைய அலுவலக ஞாபகம் வர....

"உனக்குச் சக்தின்னு யாராவது தெரியுமா... உங்க விஜய் அத்தானைப் பார்க்க வந்தாங்க நேத்து... விஜய் ஸ்டேட்ட்ஸ் பார்க்கிறவர்னு சொன்ன... ஆனா, வந்தவங்க சாதாரணமானவங்க... அவங்களை வாசல்வரை போய் அவரே கூட்டிட்டு வந்தார், தெரியுமா?" என்றவளிடம் -

"தெரியலையே...." என்று உதட்டைப் பிதுக்கிய தீக்ஷா,

"நேத்து எந்த சைட்ல பிரச்சனை...?" என்று கேட்க, அவளுக்குப் பதில் சொல்லியபடி போக... இப்படியே அவர்களின் பயணம் தொடர்ந்தது.

இப்போது பாரு, "12 மணி போல விஜய் அவர் ரூமுக்குக் கூப்பிட்டாரு தீக்ஷா... நீ உன் ஃப்ளாஷ்பேக் சொல்லி... அவரைத் தனியாப் போய்ப் பார்க்கவே பயம் ஆகி... அடி வயிறெல்லாம் கலங்க ஆரம்பிச்சுருச்சு... வாயை எல்லாம் விடாம... அடக்கி நல்ல பிள்ளையா வெளியில வந்தேன், தெரியுமா?" என்று சொல்ல,

"ஓ.... என்னை அடைச்சு வெச்ச மாதிரி உன்னையும் பண்ணிடுவான்னு நினைத்தாயா...? பண்ணினாலும் பண்ணுவான்... பி கேர் ஃபுல்..." என்று சொன்னவளைப் பார்த்து,

"என்னடி... அப்படி யெல்லாம் விஜய் அத்தான் இல்லேன்னு சொல்வேன்னு பார்த்தா இப்படிச் சொல்ற...?" என்ற போது,

"உண்மையைத்தான் சொல்வா இந்த தீக்ஷா. நீ ஓவர் ரியாக்ஷன் கொடுத்ததில் இருந்தே கண்டுபிடிச்சிருப்பான், நான் சொல்லி இருப்பேன்னு...!" என்று தோழியை அனுமானித்துக் கேட்க,

"ஆமாடி... ஆனா ஆள் நீ சொன்ன மாதிரி இல்ல... பக்கா ஜெண்டிலாத்தான் பிகேவ் பண்ணினார்... அப்புறம்..." என்று தயங்கி, "உங்க அத்தான்... ஆபீஸ்ல இருக்கிற போட்டோவுல செம ஸ்மார்ட்டா இருக்காரு... இப்போ டல்லா இருக்கிற மாதிரி இருக்காரே... ஏன்?" என்று கேட்க,

பார்வதிக்குத் தோன்றிய கேள்வி தீக்ஷாவுக்கும் தோன்றாமல் இல்லை. வீட்டில் ராதாவிடம் கேட்ட போது... அண்ணா பிஸினஸ்ல லாஸ் ஆகிடுச்சுல்ல, அதனாலதான்... என்ற பதில் கிடைத்திருந்தது. அதைப் பார்வதிக்கும் சொன்னவள்...

"அவ்வளவுதான் எனக்குத் தெரியும்ப்பா... எனக்கே கொஞ்சம் கஷ்டம் ஆகிருச்சு... ட்ரீம் ப்ராஜெக்ட்னு ரொம்ப கஷ்டப்பட்டாரு... ஆளைக் கடத்திக் கூட ப்ராஜெக்ட் கிடைக்கலை போல..." என்றவள், பார்வதி சொன்ன ஸ்மார்ட் என்ற வார்த்தையில்...

"என்னடி... ஒரே நாள்ல சப்போர்ட் அந்த சைடு போகுது... இப்போ ஒரு மாதிரி... அப்போ ஒரு மாதிரின்னு... என்ன... அந்தக் கருவாயனை சைட் அடிக்கிறியா...?" என்று மிரட்டும் தோரணையில் கேட்டவளுக்கு... பதிலாகப் பார்வதி,

"ஏன்டி கருவாயன்னு சொல்றே... ஆளு சூப்பராத்தான் இருக்காரு... அவருக்கு மட்டும் கல்யாணம் ஆகாம இருந் திருந்தாக் கூட யோசித்திருக்கலாம்... கல்யாணம் ஆனவரை சைட் அடிச்சு என்ன பண்றது, சொல்லு...?" என்று சொல்ல,



அதைக் கேட்ட தீக்ஷா, விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பிக்க... பார்வதி பயந்தே விட்டாள். 'அப்படி என்ன நாம் சிரிப்பாக இவளிடம் சொல்லி விட்டோம்... இந்தச் சிரிப்பு சிரிக்கிறா...!' என்று பார்வதி விழிக்க....

அவளோ சிரிப்பை விடாமல், "என்ன சொன்ன... என்ன சொன்ன... சொல்லு... சொல்லு... விஜய் அத்தானுக்கு மேரேஜ் ஆகிருச்சா... யாருடி பொண்ணு, எனக்குத் தெரியாம...? உன் கனவுலேயே அவருக்குத் திருமணம் ஆகி விட்டதா... பாவப்பட்ட அந்தப் பொண்ணு யாரு.. மொறைச்சே மனுசன் கொன்னுடுவாரே...!" என்று தோழியைப் பார்த்து இன்னும் பெரிதாய்ச் சிரிக்க...

பார்வதிக்கே, தான் கேள்விப்பட்ட விஷயம் தவறோ என்று குழம்பிவிட்டாள். அதனால் கொஞ்சம் குழப்பமான தோரணையிலே,

"அவருக்கு மேரேஜ் ஆகிருச்சுல்ல, தீக்ஷா... நான் விசாரிச்சப்ப சொன்னாங்க..." என்றவளிடம்,

"அடிப்போடி... அவருக்குப் பொண்ணு பார்த்துட்டு இருக்காங்க... இளமதியை வேண்டாம்னு சொல்லி விட் டாராம்.... அம்மா சொன்னாங்க," என்றவளிடம்,

"இல்லடி..... நான் கேள்விப்பட்டேனே..." என்று பாரு குழம்ப,

"விஜய் அத்தானுக்குக் கல்யாணம் ஆகிருச்சுன்னு யார் உனக்குச் சொன்னது...?" என்று சிரித்தவள், "சரி, அவருக்கு மேரேஜ் ஆகலைன்னு நான் சொல்றேன்ல... அவர் என் அண்ணியோட அண்ணன்... அவரோட சொந்தம் நான்... நான் சொல்றதை நம்ப மாட்டியா...?" என்று சொல்ல,

பார்வதி தெளிவில்லாமல் அவளைத் திரும்பிப் பார்க்க... தீக்ஷா அவளைப் பார்த்து,

"ஏன்டி இந்தப் பார்வை பார்க்கிறே... நம்புடி... எனக்குத் தெரியாதாடி... அவருக்கு இன்னும் மேரேஜ் ஆகவில்லை. ஆனால், கல்யாணம் ஆகலேன்னு... அவரை சைட் அடிக்கிற வேலை எல்லாம் வெச்சுக்காதே... அதெல்லாம் உனக்கு செட் ஆகாது... வேணும்னா ஒண்ணு பண்ணு... அப்படியே ஜம்ப் பண்ணி அடுத்த ஆளுக்குத் தாவிடு... யாரைச் சொல் றேன்னு தெரியுதா... சுரேந்தர் அத்தானை ட்ரை பண்ணு... சூப்பர் ஆளு... நான் வேணும்னா ஹெல்ப் பண்றேன். ஆனா விஜய் அத்தானுக்கு ஹெல்ப் கேட்ராதேம்மா.. தெரிஞ்சே உன்னைத் தீராத துன்பத்துல தள்ள உன் தோழிக்கு ஆசை இல்லைம்மா...!" என்று சொன்னவள், மீண்டும் சிரிக்க ஆரம்பிக்க, அது ஒரு கட்டத்தில் அதிகமாக ஆரம்பிக்க,

பாரு சற்றுப் பயந்து, நிறுத்தி விட்டாள் வண்டியை.

"இப்படிச் சிரிக்காதே, தீக்ஷா... எனக்குப் பயமா இருக்கு... ப்ளீஸ்... ஸ்டாப் பண்ணுடி," என்று கெஞ்ச,

"சரி, சரி... நிறுத்துறேன். அப்போ நீ இந்த மாதிரி காமெடியெல்லாம் அடிக்கக் கூடாது..." என்றபடி சிரிப்பை நிறுத்தியவள்...

விஜய்யை மணக் கோலத்தில் நினைத்துப் பார்க்க... அவன் அப்போதும் உம்மென்று, முறைத்தபடி இருப்பது போல் காட்சி தோன்ற... மீண்டும் சிரிக்க ஆரம்பித்தாள். இம்முறை தோழிக்குப் பயந்து வாய் விட்டுச் சிரிக்காமல்... உடல் மட்டும் குலுங்க.

அவள் மீண்டும் சிரிக்கிறாள் என்று உணர்ந்த பார்வதி... அவள் இருக்கும் நிலையில் இப்படிச் சிரித்தாள் என்றால், ஏதாவது ஏடாகூடம் ஆகும் என்று நினைத்தவள்... பேச்சை மாற்றினால் தான் அவள் சிரிப்பை நிறுத்துவாள் என்று தீக்ஷாவைத் திசை திருப்ப,

"உன்னோட ஸ்கூட்டி எங்கே தீக்ஷா?" என்று கேட்க...



தீக்ஷாவும் சிரிப்பை நிறுத்திவிட்டுச் சற்றுச் சோகமாக,

"அதை வித்துட்டாங்க... இருந்தா நான் ஓட்டு வேன்னு..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே... தலைக்கு மேலே விமானம் பறக்கும் சத்தம் கேட்க,

அது விமான நிலையம் அருகில் என்பதால், அவர்களுக்கு வெகு அருகில் கேட்க...

தீக்ஷா... அந்தச் சத்தம் கேட்டுத் தன் காதுகளைக் கையால் மூடிக் கொண்டாள். கண்களை இறுக மூடியவளால் விமானத்தின் இரைச்சலைத் தவிர்க்க முடியாமல் துடிக்க ஆரம்பித்தாள். அதன் சத்தம் அவள் உயிரையே எடுக்கும் உணர்வைக் கொடுக்க...

"பாரு... பாரு... என்னால முடியலடி... அந்தச் சத்தம்..." என்றபடி, பாருவின் தோள் மேல் சாய...

"தீக்ஷா... தீக்ஷா..." என்ற அழைப்புக்குப் பதில் வராமல் போக...

தன் மேல் சாய்ந்திருந்தபடியே விழப் போன தீக்ஷாவைப் பார்த்த பார்வதிக்கு, அதிர்ச்சியில் கைகால் எல்லாம் ஆட ஆரம்பித்து விட... இருந்தும்... அவளைப் பிடித்தபடியே வண்டியை நிறுத்தியவள், தீக்ஷாவைத் தாங்கி அவளைப் பார்க்க... அவள் மூக்கில் இருந்து ரத்தம் கண்ணீர் போல் வழிய... கூட்டமும் கூட.... அதிர்ச்சியைக் கைவிட்ட பார்வதி, கொஞ்சம் தன்னைச் சமாளிக்க ஆரம்பித்து... ஆசுவாசப் படுத்தியவள்... வேகமாய்,

தீக்ஷாவின் ஹேண்ட் பேக்கை ஆராய... அன்று சாரகேஷின் கையில் கிடைத்த மாத்திரை இருந்த கவரில் இன்று ஒன்றுமில்லாமல் இருக்க.. இப்போது பார்வதிக்குப் பதட்டத்தில் அழுகை வர ஆரம்பித்து இருந்தது.

எப்போதும் அந்தக் கவரில் இருக்கும் 2 செட்களில்... ஒரு செட் சாரகேஷால் எடுக்கப்பட்டிருக்க.... விஜய் வராததால்

அந்த மாத்திரை இருக்கிறதா என்று ராதாவும் சரிபார்க்க மறந்து விட்டிருக்க... பார்வதிக்கு மாத்திரை கிடைக்கவில்லை.

பார்வதிக்கு என்ன செய்வது என்று புரியாமல்... உடனே தன் அண்ணாவிற்கு கால் செய்ய... அவன் தியேட்டரில் சர்ஜரியில் இருப்பதாகக் கூற, வேறு வழியின்றி விஜய் திட்டினாலும் பரவாயில்லை... தீக்ஷா இப்படிக் கிடக்கும் நிலைக்கு அவன் என்ன திட்டினாலும் பரவாயில்லை... வாங்கிக் கொள்ளலாம்... என்று விஜய்க்கு கால் செய்யப் போக.. அப்போது காத்தமுத்து, பார்வதி அருகே வந்தான்.

பதட்டத்துடன் அவளின் அருகே வந்தவன், அவன் போனைப் பார்வதி கையில் கொடுக்க, அது விஜய்தான்... கை நடுங்கியபடி போனைக் காதில் வைத்தாள்.

கோபமாய் இருக்கிறான் என்பது அவன் சொன்ன ஹலோவே உணர்த்த,

"விஜய் சார்..." என்று நடுங்கிய குரலால் பேச ஆரம் பிக்க,

"முதல்ல.. அவ ஹேண்ட் பேக்கை எடு... அதுல மாத்திரை இருக்கு... அதை எடுத்துக் கொடு..." என்று விஜய் தன் கோபத்தை மறைத்து, தீக்ஷாவின் ஹேண்ட் பேக்கில் மாத்திரை இருக்குமிடம் சொல்ல...

"அங்கே இல்லை சார்... நான் இப்போதான் பார்த்தேன்... எனக்குப் பதட்டத்தில கையும் ஓடலை... காலும் ஓடலை. விஜய் சார்... நீங்க வர்றீங்களா...?" என்றபோது, விஜய் அவளின் பதட்டமான குரலில், தன் குரலில் அமைதி யைக் கொண்டு வந்து,

"பதட்டப்படாதே பார்வதி... நான் வந்துட்டே இருக்கேன்... உன் ஹேண்ட் பேக்கை ஓபன் பண்ணு..." என்றவன், அதில் தேடச் சொல்ல... அவன் சொன்னபடியே அதில் ஒரு கவர் இருக்க... ஒரு கணம் அதிர்ந்த பார்வதி... அவனிடம் உடனே அதைப் பற்றி எதுவும் கேட்காமல்,



"இருக்கு சார்...." என்று மட்டும் சொல்ல,

"அதை எடுத்து அவளுக்குக் கொடு..." என்றவன், சற்றுத் தயங்கி,

"அவளைத் தரையிலே விடாதே பார்வதி..." என்று தளுதளுத்த குரலில் சொல்ல... அவன் குரல் பார்வதிக்கே ஏதோ செய்ய... தீக்ஷாவை உடனே தன் மடியில் தாங்கியவள்... அவளுக்கு மாத்திரையைக் கொடுக்க... அன்று போல் தீக்ஷா நிலைமை உடனே சீராகவில்லை. இன்னும் மோசமாகிக் கொண்டிருக்க... பார்வதி மனதில் பய அலை அடிக்க ஆரம்பித்து இருந்தது.

சற்று நேரத்தில் விஜய்யும் அங்கு வந்திருந்தான்.

வேகமாய்க் காரைவிட்டு இறங்கித் தீக்ஷாவைப் பார்க்க... சாலை ஓரத்தில் அவள் பாருவின் மடியில் தலை வைத்திருக்க... அவள் மூக்கில் ரத்தம் நிற்காமல் வந்து கொண்டிருக்க... இப்போது இன்னொரு விமானம் மேலே சத்தத்துடன் பறக்க.... அவள் கிடந்த கோலம் அவனைக் கொல்லாமல் கொன்றது...

வேறு வழியின்றி அவளைத் தூக்குவதற்காக அவளைத் தொட்டுத் தூக்க முயற்சிக்க... அவன் தொட்ட அடுத்த நொடியே தீக்ஷாவின் உடல் அதிர்ந்து தூக்கிப் போட... அவளை வெறித்தபடி... சட்டென்று கையை எடுத்தவன்... பின் தன்னைச் சமாளித்து... அவளைத் தூக்கியவனுக்கு... அவளின் இதயத் துடிப்பின் சத்தம் அவன் காதுகளை எட்டியது.

அவன் தூக்கிய அடுத்த நொடி... அவனை மயக்க நிலையிலே உணர்ந்த தீக்ஷா, அவன் சட்டையை இறுகப் பற்றிக் கொண்டு... அவனிடம் இன்னும் நெருங்கி ஒன்றிய வளை உணர்ந்த விஜய்யும் தன்னோடு தீக்ஷாவை இன்னும் இறுக்கமாக அணைத்தவன்... அவளைத் தாங்கியபடி... பார்வதியிடம் திரும்பி,

"டேப்லெட் கொடுத்தியா...?" என்று கேட்டவனுக்குப் பதிலாய்ப் பார்வதியும் ஆமாம் என்று தலை ஆட்ட,

"சரி, நீ கிளம்பு..." என்றபடி அவளைப் பார்த்தவன்... அவள் பதட்டத்தில் நிற்பதை உணர்ந்த விஜய்...

"அசோக்... இந்தப் பொண்ணைக் கூட்டிட்டுப் போய் நம்ம ஆபீஸ்ல விட்ரு..." என்று சொன்னவன், அதற்கு மேல் பார்வதியின் பதிலைக் கூடக் கேட்க அங்கு நிற்கவில்லை.

வேகமாய்... தீக்ஷாவைக் காரில் படுக்க வைக்க... தன்னை விட்டு விலகியவனை விடாமல் இறுகப் பிடித்தாள், அவனை விட மாட்டாதவள் போல. அவள் நிலை உணர்ந்ததும்... விஜய்... அவளைக் கீழே படுக்க வைக்க முயற்சிக்க... அவளின் கரங்கள் இப்போது இன்னும் அவனை அழுத்தமாகப் பற்ற ஆரம்பிக்க.. அதே நேரத்தில் மூச்சுத் திணறவும் ஆரம்பித்தாள் தீக்ஷா... விஜய்யால் அதற்கு மேல் தாங்க முடியாமல்...

"நீ இப்படித் துடிக்கிறதைத் தாங்க முடியாமத்தானே தள்ளி நிற்கிறேன்... ஏன்டி படுத்துறே...?" என்று வாய் விட்டுச் சொன்னவன்... தன்னை முயன்று... அவளை வலுக்கட்டாயமாகப் பிரித்து... அவளைக் கார் சீட்டில் படுக்கவைத்து, அருகே அமர... காத்தமுத்து காரைக் கிளப்பினான்.

பார்வதி, தன் பையில் மாத்திரை வந்தது எப்படி என்று யோசித்தபடி சிறிது நேரம் இருந்தவள், காத்தமுத்து எப்படி உடனே வந்தான்... தங்கள் இருவரையும் தொடர்ந்து வந்தானா அவன்... விஜய்யும் உடனே வந்தானே... தீக்ஷா சொன்ன, என்னைச் சுற்றி என்ன நடக்குதுன்னே புரிய வில்லை என்பது இப்போது அவளுக்கே தோன்றியது போல் இருக்க... பயம் இருந்த போதும் வி.டி. ப்ரமோட்டர்ஸ்க்கே செல்ல முடிவெடுத்தவள்... அசோக்கை வேண்டாம் என்று சொல்லி விட்டுத் தன் வண்டியை எடுத்தபடி அலுவலகம் சென்றாள். இருந்தும் அவள் பின் அசோக் வர... கொஞ்சம் எரிச்சலுடன், "வேண்டாம் என்று சொன்னேன்ல..." என்று அசோக்கைக் கடிய...



"சார் திட்டுவார் மேடம்... நீங்க பத்திரமா ஆபீஸ் போய்ச் சேர்ந்துட்டீங்கன்னு ரிப்போர்ட் பண்ணணும் நான்..." என்று தயங்கிச் சொல்ல... பார்வதியும் ஒன்றும் சொல்லாமல் அலுவலகத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தாள்.

மருத்துவமனை நோக்கிச் சென்று கொண்டிருந்தான் விஜய். போகும்போதே தீபனுக்கு விஷயத்தைச் சொல்லி மருத்துவ மனைக்கு வரச் சொன்னவன்... அடுத்து... சுரேந்தருக்கு கால் செய்து எல்லாம் சொல்லியவன்... அவனை வி.டி. ப்ரோமோட்டர்ஸ்க்குப் போகச் சொல்லி போனை வைத்து விட்டு... தீக்ஷாவைப் பார்த்தபடியே வந்தான்.

அவளையே பார்த்தபடி வந்தவனின் முகத்தில் உணர்ச்சிகள் துடைத்து வைக்கப்பட்டு, வெறுமை மட்டுமே இருந்தது. அடுத்த சில மணி நேரத்தில் எப்போதும் அளிக்கப் படும் சிகிச்சைகள் உடனே நடக்க... தீக்ஷா கண் விழிக்க... தீக்ஷா மீண்டும் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டாள்.

விஜய் மருத்துவ மனைக்குச் சென்று விட, அவன் சொன்னதால், சுரேந்தர் வி.டி. ப்ரொமோட்டர்ஸ் அலுவலகத் திற்குச் சென்றான். உள்ளே நுழைந்தவன்... நுழையும்போதே தீக்ஷாவின் இருக்கையில் அமர்ந்திருந்த பார்வதியைப் பார்த்துவிட... அவன் உள்ளம் கொதித்தது.

"எல்லாத்தையும் பண்ணிட்டு... இங்கே வந்து ஒண்ணுமே நடக்காதது மாதிரி சீன் போடுறியா நீ... தைரியம் தான் உனக்கு..." என்று மனதினுள் நினைத்தபடி,

தன் அண்ணனின் அறையில் நுழைந்தவன், அதே வேகத்தில் அவளையும் உள்ளே அழைக்க... பார்வதி பயம் மனதில் இருந்தாலும்... உள்ளே வந்தாள்.

உள்ளே வந்தவளைத் திட்டுவதற்கு வாயெடுத்த சுரேந்தர், பார்வதியின் முகத்தைப் பார்க்க.. வார்த்தைகள் அவன் வாயிலே நின்று விட்டன.

அழுதழுது முகம் சிவந்திருந்தாள் போல... பார்க்கவே பாவமாய் இருக்க, கோபத்தை அடக்கி ஒன்றும் சொல் லாமல்...

"உட்காரு..." என்று முன்னால் இருந்த இருக்கையைக் காட்டினான். அவள் உட்காராமல் நின்று கொண்டே இருக்க... இப்போது அவள் கண்ணில் அவளை அறியாமல் நீர் வடிய,

"இப்போது அழுது என்ன பிரயோசனம்...? தீக்ஷா வுக்கு ஏதாவது ஆச்சு... என் அண்ணா உன்னைச் சும்மா விடமாட்டாரு... அவருதான் உன் கிட்டே சொன்னாராம்ல.... அந்த வழியில வரக்கூடாது என்று...! ஏன் நீ கேட்கலை...? தீக்ஷா ஃப்ரெண்ட்தானே நீ... பின்னே அவளை மாதிரி இருக்காம வேறே எப்படி இருப்ப...? சொல்றவன் எல்லாம் கேணப் பயலுங்க உங்களுக்கு..." என்று சொல்லும்போதே,

அவள் சத்தமாக அழ ஆரம்பிக்க...

சுரேந்தர் அரண்டு விட்டான். ஏனென்றால் சுற்றிலும் கண்ணாடித் தடுப்பு மட்டுமே இருந்தது. அங்கிருந்து பார்த்தாலே வெளியே அனைவரும் தெரிவர். உள்ளே இருப்பவர்களும் தெரிவர். விஜய், தீக்ஷாவிற்காகச் செய்த ஏற்பாடு என்பதால்... அதில் சுரேந்தர் பயந்து விட்டான்.

"ஏய், ஏய்... எதுக்கு இப்போ அழ ஆரம்பிக்கிற...? வெளியில இருந்து பார்த்து யாராவது தப்பா நினைக்கப் போறாங்க," என்றவனிடம்,

"தீக்ஷா எப்படி இருக்கா இப்போ...? என்னால தான் அவளுக்கு... ரெண்டு முறை..." என்று அழுகையை அடக்கியவள், இப்போது தேம்ப ஆரம்பிக்க,



எரிச்சலாக, "முதல்ல அழறதை நிறுத்து..." என்று சொல்ல... அவள் நிறுத்தாமலே இருக்க, சற்றுக் குரலை உயர்த்தினான்.

"இப்போ நிறுத்தப் போறியா இல்லையா...?" என்ற அவனின் குரலில்... அவனைப் பார்த்தபடியே கண்களைத் துடைக்க...

தண்ணீர் பாட்டிலை நீட்டி, "இதைக் குடி... இப்போ நல்லா இருக்கா...? இது அடிக்கடி வருகிற பிரச்சினைதான்... நீ அழாதே... போய் வேலையைப் பாரு சாருமதி," என்ற வனிடம்,

"விஜய் சார் திட்ட.. திட்ட மாட்டார்ல..." என்று தேம்பல் நிற்காமலே கேட்டவளைப் பார்த்தவன், அவளின் பயந்த விழிகளைப் பார்த்துச் சிரித்தபடி,

"சாருமதி... போல்ட்.... செம ப்ரேவ் கேர்ள்னுதானே இந்தப் போஸ்ட்டுக்கு எடுத்தேன்... அது தப்பு போல் இருக்கே!" என்று சொல்ல...

இப்போது அழுகையை நிறுத்திய பார்வதி, உள்ளே போன குரலில்,

"நான் தப்பு செய்யலேன்னா... இப்போ நான் தப்பு பண்ணிட்டேனே, அதுதான்," என்று வேக வேகமாய்ச் சொல்லியவளின் பாவனையில் சுரேந்தர் புன்னகை பூக்க,

பார்வதி, அவன் மலர்ந்த முகத்தைப் பார்த்தபடி... அவன் முன்னே அமர்ந்தாள். அவளுக்கே அது புதிதுதான். காலையில் தீக்ஷாவின் நிலையைப் பார்த்தபிறகு.... அவள் அவளாகவே இல்லை. தன்னால்தான் அவள் இன்று மயக்க மாகி விட்டாள் என்று அவள் குற்ற உணர்வில் தத்தளிக்க ஆரம்பிக்க... சாரகேசிடமும் பேச முடியாமல் போக... சுரேந்தரிடம் அவளையுமறியாமல் அழுது விட்டாள்.

சுரேந்தர் அவளைப் பார்த்தபடியே,

"அண்ணா ஒண்ணும் சொல்ல மாட்டாரு... தீக்ஷா ஃப்ரெண்ட்டைப் போய்த் திட்டுவாரா என்ன...?" என்று சமாதானப் படுத்தி அனுப்பி வைக்க... அவளும் ஓரளவு தெளிந்து, தன் இருப்பிடத்திற்குச் சென்றாள்.

அவள் போவதையே பார்த்திருந்தவன், "நான் எதுக்கு அவளைக் கூப்பிட்டேன்... இப்போ நானே அவளைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைக்கிறேன். டேய் சுரேந்தர்... என்னடா ஆச்சு உனக்கு...?" என்று இருக்கையில் சாய்ந்தவனின் எதிரில் அவனது அண்ணன் புகைப்படம் கம்பீரமாய் அவனைப் பார்த்துச் சிரிக்க... இன்று தன் கம்பீரம் எல்லாம் தொலைந்தவனாய் நடைபிணமாய்த் திரியும் தன் அண்ணன் ஞாபகம் வர... தன்னைச் சுதாரித்து நிமிர்ந்தவனின் கண்களில் நீர் கசிய ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 4 மணி அளவில் பார்வதியை மீண்டும் அழைத்தான் சுரேந்தர்.

இப்போதும் அவள் முகம் தெளியாமல்தான் இருந்தாள்... தன் முகத்தில் புன்னகையைப் படர விட்டவன்...

"தீக்ஷா வீட்டுக்கு வந்துட்டாளாம்... உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னாளாம்... உன்னைக் கூட்டிட்டு வரச் சொன்னாரு, அண்ணா... வா, போகலாம்," என்றபடி கிளம்ப...

"நீங்க என்னைக் கூட்டிட்டுப் போறீங்களா...?" என்றவளிடம்,

"ஏன்? அதில் என்ன பிரச்சினை உனக்கு...?" என்று கேட்டவனிடம்,

"உங்க வீட்டில ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா...? முக்கியமா உங்க அண்ணா..." என்று வினவியவளிடம்,



"என்ன... தீக்ஷா சொல்லிட்டாளா, எங்களைப் பற்றி எல்லாம்... பில்டப் கொடுக்காம வர்றீயா...?" என்று போனவனைப் பார்த்தபடி நின்றவள்,

விஜய்தான் பிரச்சினை என்று தீக்ஷா சொன்னது ஞாபகம் வர... தைரியமாகச் சென்றாள்.

காரைச் சுரேந்தர் அமைதியாக ஓட்டி வந்தான்.

"உங்களுக்கு இன்னொரு தம்பி இருக்காருல்ல... அவர் இப்போ எங்கே இருக்காரு...?" என்று ஆரம்பித்தாள்.

"யு.கே.ல இருக்கான்... இந்த வாரம் வருவான்... ஏன் கேட்கிற...?"

"தீக்ஷா அவரைப் பத்திச் சொல்லியிருக்கா..." என்றவளிடம்,

"என்னைப் பற்றி என்ன சொல்லி இருக்கா...?" என்று ஆவலாய்க் கேட்டான்தான் சுரேந்தர்.

"பெருசா சொல்லலை... ஆனா நல்லவிதமாத்தான் சொன்னா... விஜய் சார் மட்டும்தான் அவளுக்குப் பிடிக்கலை!" என்று முடித்த அவளிடம்,

"எங்க அண்ணாவை அவளுக்குப் பிடிக்காதாமா...!" என்று சொல்லி அமைதியாய் ஆனவனிடம்,

"எனக்கு இன்னைக்கு உயிரே போயிருச்சு... தீக்ஷாவைப் பார்த்து... எப்படி என்னோட ஹேண்ட் பேக்ல மாத்திரை வந்துச்சு... காத்தமுத்து எங்க பின்னாலதான் வந்தாரா...?" என்று கேட்க,

"நீ ஃபர்ஸ்ட் நாள் வந்தப்பவே உனக்கும் தீக்ஷாவுக்கும் உள்ள நெருக்கம் பார்த்து... அண்ணா ராதா கிட்டே சொல்லி வைக்கச் சொன்னாரு. இந்த மாதிரி தீக்ஷா பண்ணுவான்னு தெரியும் அவருக்கு. உங்களை அனுப்பிட்டு உங்க பின்னால் காத்தமுத்துவை அனுப்பினார். அவர்தான்

அண்ணாவுக்கு நீங்க ஏர்போர்ட் இருக்கிற வழியில போயிட்டு இருக்கீங்கன்னு சொல்லி அண்ணாவையும் வரச் சொன்னாரு..." என்றவனைப் பார்த்து, விழி விரிய ஆச்சரிய மாகப் பார்க்க, மனதிற்குள்... 'விமானத்துக்கும் தீக்ஷாவுக்கும் என்ன சம்பந்தம்...?' என்று யோசித்தவள்... அவனிடம் மீண்டும் கேள்வி கேட்க ஆரம்பிக்க,

அப்போது அவனுக்கு ஏதோ அழைப்பு வர... ஹேண்ட்ஸ் ஃப்ரீயில் போட ஆரம்பித்தவன், பேச ஆரம்பிக்க, அது யுகேந்தர் என்பது அவன் பேசியதிலேயே தெரிந்தது.

"சனிக்கிழமைதானே எல்லோரும் கோயிலுக்குப் போக முடிவு பண்ணியிருக்கோம்... நீயும் வந்துருவதானே...?" என்றவன், பார்வதியைப் பார்த்தபடியே பேசிவிட்டுப் போனை வைக்க,

'சனிக்கிழமை என்ன விசேஷம்...? அதற்கு எதற்கு யுகி வருகிறான்...?' என்று மீண்டும்.... கேள்விகள் ஆட்சி செய்ய... இவளும் சுரேந்தரைப் பார்த்தபடியே இருக்க... பார்வதிக்கும் கேள்வி கேட்கும் மனநிலை இல்லாமல் போக... அவனிடம் எதுவும் பேசாமல் வெளியே வெறித்தபடி வர... சுரேந்தர் இப்போது பார்வையைச் சாலையில் மாற்றினான். அங்கு ஏனோ மௌனமே ஆட்சி செய்ய... அடுத்த சில நிமிடங்களில் தீக்ஷாவின் வீட்டையும் அடைய... இறங்கிய பார்வதி,

"யாரும் திட்ட மாட்டாங்கள்ல...?" என்று முகத்தில் வலியோடு கேட்க,

"அதெல்லாம் காலையிலே யோசித்திருக்க வேண்டும்," என்று பட்டென்று சுரேந்தர் சொல்ல,

கலங்கிய முகமாய் உள்ளே சென்றாள் பார்வதி.

ஹாலில் விஜய் மற்றும் தீக்ஷா குடும்ப உறுப்பினர்கள் மொத்தமும் அமர்ந்திருக்க... தீக்ஷா டல்லாக இருந்தாலும் தெளிவாக இருக்க... நிம்மதி வந்தது பார்வதிக்கு. இருந்தும்



தான் காலையில் செய்து வைத்த வேலையில்... உள்ளே போகாமல் தயங்கி நிற்க, அவள் பின்னே வந்த சுரேந்தர், அவள் தயக்கத்தை உணர்ந்தவனாய்...

"வா... யாரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க," என்று அவளுக்குத் தைரியம் சொல்லியபடி உள்ளே அழைத்து வர, மொத்தக் குடும்பமும் இருவரும் சேர்ந்து வருவதைப் பார்த்தது. தீக்ஷாவோ மனதினுள்,

'ச்ச்சேய்... யுகி இல்ல நம்ம பக்கத்தில இல்லை... சூப்பர் சீன்.. கம்பெனிக்கு ஆள் இல்லாமப் போச்சே, சுரேந்தர் அத்தானை ஓட்டுறதுக்கு...' என்று யோசித்தபடியே... 'நம்ம விருமாண்டி ரியாக்ஷன் என்னன்னு பார்ப்போம்...' என்று பார்க்க, அதில் பெரிதாய் எதுவும் இல்லை... ஆனால், அவனும் யோசித்தபடியே அவர்களைப் பார்த்தபடி இருந் தவன்... தீக்ஷா தன்னைப் பார்ப்பதை உணர்ந்து... உடனே அவளைப் பார்க்க... தீக்ஷா வேகமாய்த் தன் பார்வையை மாற்ற... விஜய் மனதினுள்,

'உன் கிட்டே யுகியும் மாட்டினான்... இப்போ இவனுமா?" என்றபடி இருக்க... அருகில் இருந்த தீபன், விஜய்யிடம்,

"விஜய், உங்களைத் தவிர... உங்க கூடப் பிறந்த 3 பேரும் இந்த விசயத்தில் ரொம்ப தைரியசாலிதான்..." என்று சொல்ல, விஜய், தீபனை முறைக்க ஆரம்பித்து... பின் அசடு வழிந்தவன், அதை மறைக்க... சுரேந்தரைக் கவனிப்பது போல் பாவனையை மாற்றினான்.

அப்போது தீக்ஷா... பார்வதி, சுரேந்தரோடு நடந்து வந்த தோரணையைப் பார்த்து, "வாராயோ தோழி வாராயோ...: தோழி வாராயோ..." என்று கிண்டலாக ஆரம் பிக்க,

ஜெயந்தி அவளை முறைக்க... தானாக வாயை மூடினாள் தீக்ஷா. அவள் உடனே பாடலை நிறுத்த,

சுரேந்தரோடு அன்ன நடை போட்டபடி வந்த பார்வதி... தீக்ஷாவின் பாடலில் நிமிர... சுரேந்தரோ அதற்கு மேல்... அவள் அன்ன நடைக்கு இணையாகத் தன் நடையின் வேகமும் குறைந்து நடந்து வந்து கொண்டிருந்தவன், தீக்ஷாவின் பாடலில் சுதாரித்து... வேகமாய் அடி எடுத்து வைத்துத் தீபனின் அருகில் போய் அமர... பார்வதி, தீக்ஷாவின் அருகில் போய் அமர்ந்தாள்.

சுரேந்தர் அருகில் இருந்தபோது இருந்த தைரியம், தோழியின் அருகில் சற்றுப் போனது போல் இருக்க... தோழியின் அருகில் நெருங்கி அமர்ந்தவள்,

"சாரி, தீக்ஷா... என்னை மன்னிச்சுடு," என்ற போது... தீக்ஷாவுக்குப் பதில்,

"அதை விடு... இனி அந்த வழியில வராதே... புரிஞ்சுதா?" என்று விஜய் சாதாரணமாகப் பேச, நிம்மதி ஆனவள், சுரேந்தரையும் பார்க்கத் தவறவில்லை. சுரேந்தரும் அவள் பார்வையினை உள்வாங்க... விஜய்யும் தீபனும் அதைக் கண்டும் காணாமலும் இருந்தனர்.

அப்போது தீக்ஷா அவளிடம் மட்டும் மெதுவாய்,

"ஏய், பாரு... விஜய் அத்தானுக்கு மேரேஜ் ஆகிடுச் சுன்னு சொன்னேல்ல... அந்த டவுட்டை - எல்லோரும் இருக்காங்க... இப்போ கேட்கலாமா?" என்று சீண்ட,

"ஆளை விடுடி... ரொம்ப முக்கியம்..." என்றவள்,

"வேணும்னா உன் சுரேந்தர் அத்தானுக்கு மேரேஜ் ஆகிடுச்சான்னு கேளு..." என்று தீக்ஷாவையே போட்டுத் தாக்க,

"அடிப்பாவி...இப்படிப் போகுதா கதை... அங்கே நிலவரமும் லைட்டா தடம் புரண்ட மாதிரி இருக்கு. ஆனா என்ன... பக்கத்தில இருக்கிற வில்லன் லட்சுமணன் கிட்டப் பேசியே நிமிர்த்திடுவான்... ஆனா எங்க ஆளு யுகி இருக்



கானே... இந்த ரெண்டு பேருக்குமே டிமிக்கி கொடுத்துடு வான். பையன் செம விபரம் தெரியுமா...? இது தெரியாம இந்த ரெண்டும் அவனுக்கு அண்ணன்னு சொல்லிட்டுத் திரியுதுங்க... அவன்தான் முதலில் கல்யாணம் பண்ணிட்டு வந்து நிக்கப் போகிறான். அப்போ இதுக ரெண்டும் முழிச்சுட்டு நிக்கப் போகுதுங்க..." என்று பேச ஆரம்பித்தவள்... அதன் பின் பார்வதியை அழைத்துக் கொண்டு அவளோடு தனியே செல்ல,

தீக்ஷாவிடம் எதைப் பற்றியும் துருவி விசாரணையை மேற்கொள்ளாமல், பார்வதியும் பேசிக் கொண்டிருந்தாள். அவள் மனதில் ஏனோ சுரேந்தர் பற்றி அவ்வப்போது ஞாபகம் எழ, இது என்னடா புதுப் பிரச்சினை என்று அவன் நினைவு களைத் தள்ளியவள், தோழி பேசிக் கொண்டிருக்க, அதில் கவனம் வைத்தாள்.

2 மணி நேரம் கழிய, பார்வதி வீட்டுக்குக் கிளம்பத் தயாராகிக் கீழே வர... விஜய், சுரேந்தர், தீபன் மட்டுமே ஹாலில் இருக்க... மற்றவர்கள் யாரும் இல்லை.

தீக்ஷாவும் தன் அண்ணனிடம், "அண்ணா... பாருவை அவ வீட்ல விட்டுட்டு வருகிறாயா...?" என்று கேட்க,

சுரேந்தர், வேகமாகத் தீக்ஷாவிடம், "நான் போறேன் தீக்ஷா..... நான்தானே கூட்டிட்டு வந்தேன்..." என்று கூற,

வழக்கம் போல் விஜய்... தீக்ஷாவோடு முட்டிக் கொண் டான்.

"நீ வேண்டாம் சுரேந்தர்... காத்தமுத்துவோட போகட்டும்," என்று கூறியபடி தீபனோடு பேச ஆரம்பிக்க,

சுரேந்தரும் விஜய் சொல்லி விட்டதால் வேறு வழியின்றி அவர்கள் பேச்சில் கலக்க...

இப்போது தீக்ஷா, தீபனின் முன்னால் கோப அவதாரத்தில் நின்றாள்.

"டேய் அண்ணா... நீ கூட்டிட்டுப் போவியா இல்லையா? சொல்லு... அவ என்னோட கெஸ்ட்..." என்றாள் சத்தமாக.

"அண்ணா எதுக்கு தீக்ஷா... நான் போய்க் கொள்வேன்!" என்று தீக்ஷாவின் கோபத்தில் பார்வதி பேச ஆரம்பிக்க,

தீக்ஷாவின் கோபம் உணர்ந்த விஜய், எதுவோ சொல்ல வர,

கை உயர்த்தித் தடுத்தவள்... அவனை ஏளனமாகப் பார்த்தபடி,

"நான் என் அண்ணா கிட்டே பேசிட்டு இருக்கேன்... நீங்க இதில் தலையிட வேண்டாம்... உங்க தம்பியை யாரும் இங்கே கொத்திட்டுப் போயிட மாட்டாங்க... அந்தப் புத்தி என் ஃப்ரெண்டுக்குக் கிடையாது..." என்று பேச ஆரம்பிக்க,

விஜய், சுரேந்தரிடம் திரும்பி, "சுரேந்தர்... நீயே போய் அவளை விட்டுட்டு வா..." என்று பேச்சை முடித்தான்.

ஆனால் தீக்ஷாவோ... அதில் எல்லாம் சமாதானம் ஆகவில்லை.

"அண்ணா, நீதான் அவளைக் கொண்டு போய் விடணும்... நம்ம வீட்டுக்கு வந்த கெஸ்ட்டை அடுத்தவங்க யாரும் கொண்டு போய் விட வேண்டாம்... காத்தமுத்துவும் ஒண்ணுதான்... மத்தவங்களும் ஒண்ணுதான்..." என்று தன் பிடிவாதத்தில் நிற்க...

விஜய் அவளை முறைக்க... அவளும் அவனை முறைத்தபடிதான் இருந்தாள். விஜய் கோபத்தை அடக்கு வதைப் புரிந்தவள், அலட்சியமாய் உதட்டைச் சுழித்தவள்... தீபனைக் கிளப்ப, அவனும் பார்வதியை விடச் செல்ல... சகோதரர்களும் கிளம்பினர்.

தீபன், பார்வதியை வழி அனுப்பி வைத்தவள்,



பார்வதி சென்ற காரையே பார்த்தபடி இருந்த சுரேந் தரைப் பார்த்தவள், அவன் காரின் அருகே சென்று அவனருகே குனிந்து...

"சாரி.... கோபத்திலே ஏதோ பேசிட்டேன்... நாம் ஒரு முடிவெடுத்தா மாறக்கூடாது அத்தான்... நானே பார்வதியைக் கூட்டிட்டுப் போறேன்னு உங்க அண்ணா கிட்டே நீங்க சொல்லி இருந்திருக்கணும்... அதைத்தான் நான் எதிர் பார்த்தேன் உங்க கிட்டே.... நீங்க சொல்லலை... உங்க அண்ணா சொன்னவுடனே அவளை விட்டுட்டீங்க..." என்று இரட்டை அர்த்தத்தில் பேசியவளிடம்...

"என் அண்ணா என்ன சொன்னாலும் கேட்பேன், தீக்ஷா... அது என்னைக்கும் மாறாது... மாற மாட்டான் இந்த சுரேந்தர்... ஏன்னா, என் நல்லதுக்குத்தான் சொல்வாரு அவர்..." என்று அவனும் அவளுக்கு இரட்டை அர்த்தத் திலேயே கூற,

சிரித்த தீக்ஷா, "அப்பா... இந்த 'வானத்தைப் போல' குடும்பத்தோட பாசம் தாங்கலடா சாமி!" என்று அவனைப் பார்த்து வம்பளக்க,

"ஆளுங்களுக்கெல்லாம் பட்டப் பேர் வைக்கிறது போய்... இப்போ குடும்பத்துக்கே பட்டப் பேர் வைக்க ஆரம் பிச்சுட்டியா...? உன்னை..." என்று சிரித்தபடி சுரேந்தர் வண்டியைக் கிளப்ப,

தீக்ஷாவும் சந்தோஷமாய் ஆனவள், விஜய்யைக் கடந்து செல்ல, அவனும் ஏதும் சொல்லாமல் அவள் கடந்து செல்லும்வரை காத்திருந்தவன்.... அவளைப் போக விட்டுக் காரின் கண்ணாடி வழியே பார்த்தபடி இருந்தான்.

தீக்ஷாவுக்கு அவனைப் பார்த்து... காலையில் பார்வதி சொன்ன விஷயத்தினை வைத்து அவனை ஓட்ட வேண்டும் போல் தான் இருந்தது. பழைய தீக்ஷாவாக இருந்திருந் தால்....

'விஜய் அத்தான்... உங்களுக்கு மேரேஜ் ஆகிருச்சாமே.... பார்வதி சொன்னா...' என்று அவனை ஒரு வழி பண்ணியிருப்பாள்.

ஆனால், இன்றைய தீக்ஷா, விஜய்யிடம் பேச்சைக் குறைத்து வெகு நாட்கள் ஆகிவிட்டது. சுனந்தாவின் பிறந்த நாள் விழாவில் நடந்த சம்பவத்தின் பின்... அவள், அவனிடம் தன் குறும்பை எல்லாம் காட்டுவதில்லை.

அவள் இப்போதெல்லாம் தனிமையைத்தான் நாடுகிறாள். ஆனால், அது கூட அவளுக்கு இப்போது கிடைக்க மாட்டேன் என்கின்றது. அவளை யாருமே தனியே விடுவதே இல்லை. யாராவது ஒருவர் அவளோடே இருப்பர்... குறைந்த பட்சம் சுனந்தாவாவது அவளின் அருகில் இருப்பாள். சில சமயம் அவளுக்கு... 'என்னைத் தனியே விடுங்கள்...' என்று கத்த வேண்டும் போல் இருக்கும்... அவள் மனதில் ஏதோ ஒரு தேடல்... ஏதோ ஒரு ஏக்கம்... அதைத் தேடி ஓடும் மனதிற்கு ஏமாற்றம்தான் விடையாகக் கிடைக்கிறது... அவள் இழந்தது என்ன....? எதைத் தேடுகிறாள்...? அவளின் ஏக்கம் எதனால்...?

இதை யோசிக்க யோசிக்க... அவள் இதயத்துடிப்பு அதிகமாகி, மயக்கம்தான் அவளின் அடுத்த நிலையாக இருக்கும். இப்படித் தன் நிலையை நினைத்தபடி அவள் வீட்டை நோக்கிச் செல்ல...

விஜய்யோ, அவள் தன்னைத் திரும்பிப் பார்க்க மாட்டாளா என்று அவளையே பார்த்துக் கொண்டிருக்க... அவள் அவனைத் திரும்பிப் பார்க்காமலே சென்று கொண்டிருந்தாள். ஆனாலும் அவள் கண்டிப்பாகத் திரும்பிப் பார்ப்பாள் என்று அவனுக்குத் தெரியும்... இருந்தும் அவள் பார்வை வேண்டி, அவளை ஏக்கமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்.

வாசற்படி அருகே போன தீக்ஷா, என்ன நினைத்தாளோ தெரியவில்லை... ஏதோ ஒரு உணர்வு



அவளைத் திரும்பிப் பார்க்கச் சொல்ல... திரும்பியவள், விஜய்யின் கார் இன்னும் நிற்பதை உணர்ந்து... அதையே பார்த்தபடி இருக்க... இப்போது கார் கிளம்பியது.

'இவ்ளோ நேரம் என்ன பண்ணினான் விருமாண்டி...?' என்றபடி தீக்ஷா உள்ளே போக,

காரைக் கிளப்பிய விஜய், அவள் பார்வை தன்னைத் தீண்டிய சந்தோஷத்தில்... தனது காரில் பாடலை ஒலிக்க விட்டபடி... உல்லாசமாய் விசிலடித்தபடி, அதிவேகமாய்ச் சென்று கொண்டிருந்தான்.

## 14

அடுத்த நாள் காலை சாரகேஷ் வழக்கம் போல் கிளம்பிக் கொண்டிருக்க... "அண்ணா, எனக்குப் பெட்ரோலுக்கு இந்த மாசத்தில் இருந்து பட்ஜெட் அதிமாகும்..." என்றபடி, தன் முன் வந்து நின்றவளைப் பார்த்து,

சிரித்த சாரகேஷ்... "சுற்றி வரச் சொன்ன உங்க பாஸ் கிட்டேயே எக்ஸ்ட்ரா சார்ஜ் வாங்கு... என்கிட்ட கேட்கிற...?" என்று கிண்டல் செய்ய,

"அண்ணா..." என்று கொஞ்சியவளாய், இருவரும் சாப்பிட அமர... பார்வதி யோசனையுடனே சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

சாரகேசிடம் நேற்று வந்தவுடனே நடந்ததெல்லாம் சொல்லி இருந்தாள் பார்வதி.

அதனால் சாரகேஷ்... "பாரு... என்னடா யோசனையிலே இருக்க! தீக்ஷா பற்றி யோசிக்கிறாயா...?" என்று வினவ,

"ஹ்ம்ம்ம்... ஆமாம் அண்ணா... எனக்கு அவ நினைப்புதான்... எனக்குக் கொஞ்சம் பயமாயிருக்குண்ணா. நேத்து அவ மயங்கி விழுந்து; அவ துடிச்சதைப் பார்க்கும்போது

அவளுக்கு ஏதோ பயங்கரமா நடந்திருக்குன்னா... அதுவும் ஃப்ளைட் சத்தம் தாங்க முடியாம அவ துடிச்சதை நீ பார்த் திருக்கணும்... சத்தியமா என்னால தாங்க முடியலண்ணா...!" என்றபடி...

"ஃப்ளைட்டுக்கும் அவளுக்கு என்ன சம்பந்தமா இருக்கும்...? ராகேஷ் ஃபாரின்ல இருந்தார்னுதானே சொன்னா... அவளுக்கு ராகேஷ் கூட மேரேஜ் ஆகியிருக்கு மோண்ணா...?" என்று கேள்விக் குறியாய் நிறுத்தியவள்,

"அவருக்கு ஃப்ளைட் ஆக்ஸிடெண்ட் ஆகி இருக் குமோ... இவ அதுனால இப்படி ஆகிட்டாளா...? அப்படி இருக் குமோ.... இப்படி ஆகி இருக்குமோனு எனக்கு மண்டையே வெடிக்குதுண்ணா... நைட் வீட்டுக்கு வந்தவுடனே லாஸ்ட் இயர் ஏதாவது ஃப்ளைட் ஆக்ஸிடெண்ட் ஆகி இருக்கானுல்லாம் பார்த்தேன். அந்த அளவுக்கு நான் டிஸ்டர்ப் ஆகிட்டேன்..." என்று சொல்ல...

சாரகேஷ் அவளின் தீவிரத்தை உணர்ந்து, "ஹேய், பாரு... ஏன் இப்படிக் குழப்பிக்கிற நீ...?" என்று கேட்க,

"இல்லண்ணா... நேத்து அவ துடிச்சதைப் பார்த்துருக் கணும், நீ.... அந்த விஜய் கூடப் பதறிப் போய்ட்டாரு..." என்றபடி சாப்பாட்டைக் கைகளால் அளைந்தவள்,

"அண்ணா... இண்டர்னேஷனல் ஃப்ளைட் ஆக்ஸி டெண்ட் எதுவும் லாஸ்ட் இயர் நடக்கலை அண்ணா... ஆனா, ஒரு ஃப்ளைட் ஆக்ஸிடெண்ட் நடந்திருக்கு... அதுவும் இந்தியாக்குள்ள... உனக்குத் தெரிஞ்சுருக்கும்னு நினைக் கிறேன்..." என்று சொல்ல,

"ஆமாம்... டெல்லி போன விமானம்... எல்லோருமே இறந்துட்டாங்க..." என்று வருத்தமாய்ச் சொல்ல...

"எனக்கென்னமோ டவுட்டா இருக்குண்ணா... அது தான் என் ஃப்ரெண்ட்கிட்ட.... அதுல இறந்தவங்க லிஸ்ட்



எல்லாம் கேட்டுருக்கேன்... டு டேஸ்ல தரேன்னு சொல்லி இருக்கா... ஏண்ணா... தீக்ஷாவுக்கு மேரேஜ் ஆகிருக்குமோ?" என்று கவலையோடு கேட்க,

சாரகேஷ் நிமிர்ந்து பார்த்து... "ஆகி இருக்கலாம்... ஏன் பாரு, நீ உன்னை இவ்ளோ குழப்பிக்கிற...?"

"ப்ச்! இல்லண்ணா... தீக்ஷா ரொம்ப ஜாலியான பொண்ணுண்ணா... இப்போ அவ சந்தோசமா இல்ல... அவ மனசுக்குள்ளே ஏதேதோ போராட்டம் அண்ணா... அவ கூடப் பேசுறதுலயே தெரியுது... பேசிட்டே இருக்கா... திடீர்னு அமைதி ஆகிடுறா... அவளுக்குள்ள என்னமோ இருக்கு... என் கூட ஸ்கூல்ல படிச்ச தீக்ஷாவானு கூடச் சந்தேகமா இருக்கு...

"அந்த அளவு அவ கேரக்டர் கொஞ்சம் டிஃபரெண்ட் ஆகி இருக்கிற மாதிரி இருக்கு... முதலில் எல்லாம் அவ பேச்சில் ஒரு துள்ளல் இருக்கும்... எதையும் நினைக்காம சட்டுச் சட்டுனு பேசுவா. ஆனா இப்போ அவ பேச்சுல அது மிஸ்ஸிங்... யோசிச்சு யோசிச்சுப் பேசுறா... ஆனா முன்ன இருந்த தீக்ஷாவா இருக்க ட்ரை பண்றா... அது அவளோட நடவடிக்கையிலயே தெரியுது... உனக்கு டிஃபரெண்ட் தெரியுதாண்ணா?" என்று சாரகேஷைக் கேள்வியாய் நோக்க,

"அவளைப் பார்த்து ஏழு வருஷம் ஆகி இருக்கும்போது கண்டிப்பா சேஞ்ச் ஆகி இருப்பாதான். இதில் என்ன ஆச்சரியம் இருக்கு... அவளும் உன்கிட்ட கூட டிஃபரெண்ட் உணர்ந்திருப்பா பாரு... நீண்ட நாளைக்குப் பிறகு நாம யாரைப் பார்த்தாலும் இந்த ஃபீல் வரும்மா... பேசுவதில் கொஞ்சம் தயக்கம் கூட வரும்... அது மட்டும் இல்லை... அவளோட உடல்நலக் குறைவும் அவளோட அமைதிக்குக் காரணம்னு சொல்லலாம்..." என்று சொல்ல,

"புரியுதுண்ணா..." என்று சொன்னவள்... அடுத்து ஏதோ பேச ஆரம்பிக்க.... அவர்களின் அன்னை அருகில் வர... இருவரும் பேச்சை மாற்றினர்.

நேற்று சுரேந்தருடன் வந்திருந்ததால்... அவள் ஸ்கூட்டி அலுவலகத்திலேயே இருக்க... இருவருமாய்க் காரில் கிளம்ப... காரை ஓட்டி வந்த சாரகேஷைப் பார்த்த பார்வதி... தன் அண்ணனையே பார்த்தபடியே வந்தாள்.

"அண்ணா... தீக்ஷா இப்போவும் உன் மனசுல இருக்காளாண்ணா...? ஒருவேளை அவளுக்கு மேரேஜ் ஆகி இருந்தது என்றால்... வருத்தப்படுவியா?" என்று கேட்க,

சற்று நேரம் அமைதியாய் வந்த சாரகேஷ்... அவளைப் பார்க்காமல் பேச ஆரம்பித்தான்.

"முதல் காதல் என்னைக்குமே அடி மனசுல இருக்கும்மா... எல்லோருக்கும் அதில் ஜெயிக்கிற பாக்கியம் கிடைக்காது..." என்று சொன்னவன் முகத்தில் பெரிதாய் வருத்தம் இல்லைதான்.

தங்கையின் முகத்தைப் பார்க்க... அவள் யோசனையில் இருக்க...

"அதுவும் ஒருதலைக் காதல்... கொஞ்ச நாள் வருத்தமா இருந்துச்சு... அதுக்கப்புறம் மறந்துட்டேன். மறந்துட்டேனு சொல்றதை விட... விட்டுட்டேன். ஏனென்றால்... அப்பாவோட மரணம்... அதிலும் படிப்பின் இடையிலே நம்ம அப்பா இறந்துட்டாரு... மகனா, அண்ணனா பொறுப்புகள் வந்தபோது... காதல் எல்லாம் பின்னால் போய் விட்டது... அதன் பிறகு... வேற யார்கிட்டயும் அந்த எண்ணங்கள் தோன்றவில்லை!" என்று சொல்லும்போதே, அவனுக்கு அகல்யா ஞாபகமும் வராமல் இல்லை.

"இப்போ மறுபடியும் அதே பொண்ணைப் பார்த்தாலும்... முதலில் அவளிடம் இருந்த அந்தக் காதல் இல்லை. ஆனா அவ நல்லா இருக்க வேண்டும்... அவ வாழ்க்கையில எந்தப் பிரச்சனையும் நடந்திருக்கக் கூடாதுன்னு மனசு துடிக்குது... அதை விடப் பெருசா ஒண்ணும் தோணலை..." என்றவனிடம்,



"அந்த விஜய்... தீக்ஷா மேல ரொம்ப அக்கறையா இருக்கார், அண்ணா... விஜய் அவளை ரொம்ப ப்ரொடெக்ட் பண்றார், அண்ணா.... ஆனால்..." என்று மென்று முழுங்கியவள்,

"அவ அந்த நிலைமையில இருக்கா... அவளைத் தூக்க ரொம்ப யோசித்தார் தெரியுமா...?" என்று கூற,

"ஒருவேளை அவளைத் தூக்கறதுக்கும் ஸ்டேட்டஸ் பார்த்திருப்பானோ என்னவோ...!" என்று சாரகேஷ் எரிச்சலாய்ச் சொன்னவன்.... தங்கையின் பார்வையில்,

"சரி சரி. முறைக்காத... தீக்ஷா சொல்றத வச்சுப் பார்க்கும் போது அவன் மேல பெருசா அவளுக்கும் விரோதம் இல்லை... தன் குடும்பத்தில அவன் மூக்கை நுழைக்கிறான். அதுதான் அவளுக்குப் பிடிக்கவில்லை... மற்றப்படி அவ அத்தானை அவளும் விட்டுக் கொடுக்கலை... அதனால... இப்போதைக்கு நீ இதைப் பத்தி எல்லாம் யோசிக்கிறத விட்டுட்டு..." என நிறுத்தியவன்,

"சீக்கிரம் வேற கம்பெனிக்கு ட்ரை பண்ணலாம்னு நினைக்கிறேன்.... நீ விஜய்கிட்ட வேலை பார்க்கிறது பிடிக்கவில்லை... அவனை எனக்குச் சுத்தமாப் பிடிக்கவில்லை... அவனை மட்டும் இல்லை. அவன் தம்பின்னு ஒருத்தன் வந்தானே.... அவனையும்தான். பணத் திமிர் அவனுங்க ரத்தத்திலேயே ஓடுது போல... ஒரு முறைதான் ரெண்டு பேரையும் பார்த்திருக்கேன்... எனக்கே இப்படி இருக்குனா... தீக்ஷாவை நினைத்துப் பார்..." என்று கசப்பாய்ச் சொல்ல,

அதிர்ந்தாள் பார்வதி... 'சுரேந்தர் கோபப்பட்டான்தான். ஆனால் அதன் பிறகு தன்னோடு பேசிய முறையில் அவனைப் பணத் திமிர் பிடித்தவன் என்றெல்லாம் சொல்ல முடியவில்லை. ஏன், விஜய் மேல் கூட அவளுக்கு அந்த அளவு பயம் இல்லை எனலாம். நேற்றுக் கூட கோபம்

இருந்தும்... அவளை அவன் திட்டவில்லையே!' என்றெல்லாம் சிந்தனையில் உழன்றவள்,

சாரகேஷிடம் எதுவும் சொல்லாமல் சிறிது நேரம் வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். பின் தன் அண்ணனை நோக்கி...

"விஜய்க்கு மேரேஜ் ஆகலைன்னு தீக்ஷா சொல் றாண்ணா... எதை யோசிக்கிறதுனே தெரியலை. தீக்ஷாவைப் பார்த்து ஒரு வாரம் கூட ஆகவில்லை... இவ்ளோ குழப்பம் எனக்கு..." என்று சொன்னவள்...

வெளியில் சொல்லாமல், 'இதுல நேற்றிலிருந்து சுரேந்தர் ஞாபகம் வேறு...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"அண்ணா, உனக்குத் தீக்ஷாவைப் பார்த்ததும், அது காதல்னு எப்படி கன்ஃபார்ம் பண்ணின...?" என்று மெதுவாய்த் தயங்கிக் கேட்க,

தங்கையைக் கொஞ்சம் கலக்கமாகப் பார்த்தான், சாரகேஷ்.

"ஏன் கேட்கிற...?" என்று கேட்டபோதே, அவன் கவலை தோய்ந்த முகம் பார்வதிக்கும் புரிய.. தன் முகத்தில் சிரிப்பைக் கொண்டு வந்தவள்,

"சும்மாதான். ஒரு ஜெனரல் நாலெட்ஜுக்குதான்!" என்று கண் சிமிட்ட, சாரகேஷ் இப்போது காரை நிறுத்தினான்.

"பாரு, நீ தீக்ஷா விசயத்தில் ரொம்பக் குழம்பி இருக்கேனு நினைக்கிறேன்... தீக்ஷா பற்றி நீ குழம்பி... அவளையும் குழப்பி விட்டுறாத... அந்த விஜய்யைப் பற்றி நானும் விசாரிக்க வேண்டும். ஆனால் அடுத்த வாரம் எனக்கு ஒரு கேம்ப் இருக்கு... அது முடிந்த பின்னால்தான் தீக்ஷாவைப் பற்றி யோசிக்க வேண்டும்...



"இப்போதைக்கு அவளுக்கு உடல் நலத்தில் பெரிதாகப் பிரச்சனை இல்லை... அந்த வகையில் நிம்மதி எனக்கு. ஆனால் ஏன் விஜய் அவளை அப்படிச் சொல்லி ஏமாற்றி வைத்திருக்கிறான்... அது தீக்ஷா குடும்பத்திற்குத் தெரி யுமா...? இதெல்லாம் கேள்விக்குறியா இருக்கு... கொஞ்சம் பொறுமையா அவ விசயத்தில் எல்லாவற்றையும் கண்டு பிடிக்க வேண்டும்," என்று கூறிய சாரகேஷிடம்... 'சரி...' என்று தலை ஆட்டினாள் பார்வதி.

ஆனாலும் அவள் குழப்பம் தீக்ஷா மட்டும் இல்லை என்பதை உணர்ந்த சாரகேஷ்... சற்றுக் கிண்டலுடன்,

"பாரு... காதலை எப்படி கன்ஃபார்ம் பண்ணே னுல்லாம் கேட்கிற... என்னவோ சரி இல்ல நீ..." என்று ஆரம்பித்து... "என்ன, உனக்கு ஏதாவது கன்ஃபார்ம் பண்ண வேண்டுமா?" என்று முடிக்க,

பார்வதி சுதாரித்தபடி.. "டவுட் கேட்கக் கூடாதே. உடனே திருப்பி விட்டுருவிங்களே...!" என்று சிரிக்க...

அதன் பிறகு அண்ணனும் தங்கையும் வேறு விசயங் களைப் பேச ஆரம்பித்தனர்.

பார்வதி தன் அலுவலகத்தில் இறங்கிக் கொள்ள... சாரகேஷ் மருத்துவமனை நோக்கிச் சென்றான்... அவனுக் குள்ளும் பல குழப்பம்தான்... ஆனால் பெரியதாக இல்லை.

அடுத்த நாள் சுரேந்தரைப் பார்க்கும்வரை தீக்ஷா விஷ யத்தில் தடுமாறாமல் தெளிவாகத்தான் இருந்தான் அவன்.

சாரகேஷ் மருத்துவமனையை அடைந்த போது தன் குழப்பங்களை எல்லாம் ஒத்தி வைத்துவிட்டு... மருத்துவ னாய் மாறி இருந்தான்.

அவனின் இன்றைய பணிகளை யோசித்தபடியே... தன் அறைக்குள் நுழைய... அங்கு அகல்யா அமர்ந்திருந்தாள்.

அகல்யா... அவனைக் கடந்த இரண்டு வருடங்களாகக் காதலிப்பவள்... அதற்கு முன் ஒரு வருடம் தோழியாகப் பழகியவள்...

அவளைப் பார்த்துப் புருவம் உயர்த்தியவன்... "ஹாய் அகல்யா!" என்று சொல்லியபடி,

"என்ன மேடம், காலையிலேயே இந்தப் பக்கம்..." என்று சிரிக்க... அவன் சிரிப்பைத் தனக்குள் உள் வாங்கிய அகல்யா... அவனைப் பார்த்துச் சிரிக்கவில்லை. அவன் வரவேற்பையும் கண்டு கொள்ளவில்லை...

அதிரடியாக ஆரம்பித்தாள்...

"சாரகேஷ்... நீங்களும் நானும் டீன் ஏஜ் பசங்க இல்ல... கண்ணாமூச்சி ஆட்டம் ஆட... நான் ஏற்கெனவே உங்களைப் பிடிக்கிறது என்று சொல்லி விட்டேன்... எனக்குப் பதில் என்ன?" என்று படபடவென்று கேட்டவளை அமைதி யாகப் பார்த்தான் சாரகேஷ்.

"டீன் ஏஜ் பையன் இல்லை நானும்... எனக்குப் பிடிக் கலைன்னு சொல்லலை. இது ஒத்து வராதுன்னு விலகிட்டேன்..."

"அதுதான் ஏன்னு கேட்கிறேன்...?" என்று சொல்லும் போதே குரல் கம்ம ஆரம்பித்தது.

"ப்ச்! எல்லாத்துக்கும் விளக்கம் சொல்ல முடியாது... உனக்கு ஏன் என்னைப் பிடிச்சிருக்குனு உன்னால சொல்ல முடியாதது மாதிரி...

"ஏன், இன்னைக்கு என்ன ஆச்சு உனக்கு... இப்படி வந்தவுடனே என்கிட்ட குதிக்கிற... இவ்ளோ டென்சன் ஆக மாட்டியே!" என்றவனின் அருகில் நெருங்கி நின்று அவன் கண்களைப் பார்த்தபடி பேச ஆரம்பித்தாள்.

இதுவரை அவள் இவ்வளவு அடாவடியாகவெல்லாம் நடந்ததில்லை. அவள் கோபம் புரிந்து சாரகேஷ் விலக முயல...



அவளை விட்டு அவன் விலக எத்தனித்த போதும் விடாமல் அவன் கைகளைப் பிடித்தவளின் கண்களில்... கோபம் போய் இயலாமை வந்திருந்தது.

"அப்பா மேரேஜுக்கு அவசரப்படுத்துகிறார் சாரகேஷ்... எனக்கும் அவர் ஒன் இயர் டைம் கொடுத்துட்டார்... உங்க கிட்ட கூடப் பேசினாரு... ஏன் என்னைப் பிடிக்கலை...? சொல்லுங்க...!" என்று தளுதளுத்தவள்,

"நாளைக்கு எனக்கு டெல்லியில ஒரு கான்ஃபரென்ஸ் இருக்கு... அது முடிச்சுட்டு வந்த பின்னால் எனக்கு உங்ககிட்ட இருந்து பாஸிட்டிவ் பதில் வேண்டும். நான் என் அப்பாகிட்ட சொல்லணும். உங்க தங்கச்சி மேரேஜ் முடிந்த பின்னால் கூட நம் திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்..." என்று தன் போக்கில் சொல்லிக் கொண்டே போனவளை ஆழமாய்ப் பார்த்தவன்,

"என்ன மிரட்டுறியா?" என்று கேட்க,

"எப்படி வேண்டுமென்றாலும் வச்சுக்கோங்க... இங்க ஒருத்தியோட மனசைப் புரிஞ்சுக்கவே முடியல... நீங்களாம் ஹார்ட் சர்ஜன்னு வெளியில சொல்லிடாதீங்க...!" என்று சொன்னவள்,

"ஒருவேளை உங்க வைஃபும் ஹார்ட் சர்ஜனா இருக் கணும்னு எக்ஸ்பெக்ட் பண்றீங்களா சாரகேஷ்?" என்று கேட்க,

"அகல்யா... ப்ளீஸ்... ஏன் இப்படிப் பேசுற...?" என்றபடி... "மேகசின்ல ஆர்டிகிள் எழுதப் போறேனு சொல்லிட்டு இருந்த. எப்போ ஸ்டார்ட் பண்ணப் போற... ஃபோட்டோஸ்லாம் கலெக்ட் பண்ணிட்டியா...?" என்று பேச்சை மாற்ற...

"பேச்சை மாத்தறீங்களா, சாரகேஷ்...? அதுவும் என்கிட்டேயேவா...!" என்று கேட்டவள்...

"கொஞ்சம் இதயத்தை மாத்தறதைப் பற்றியும் யோசிங்க..." என்று சொன்னவள்... அதே வேகத்தில்...

“ஹலோ... டாக்டரா... இதயத்தை மாத்துறதைப் பற்றி யோசிக்க ஆரம்பிச்சிடாதீங்க... இந்த அகல்யாவோட காதலனா இதயத்தை மாற்றுவதைப் பற்றி யோசிங்க...” என்று கண்ணடிக்க...

சாரகேஷ் அழுத்தமாய் முறைக்க, அதைக் கண்டு கொள்ளாமல்...

“மண்டே நல்ல பதில் எனக்கு வேண்டும்... இல்லை, ஸ்ட்ரெய்ட் அட்டாக்தான்... உங்களை இல்ல... என் வருங்கால மாமியாரை...” என்று சொல்லிப் போனவளை,

சற்று எரிச்சலோடு பார்த்த சாரகேஷ்...

“ஒரு தடவை சொன்னால் புரியாதா இவளுக்கு...?” என்றபடி நோயாளிகளைப் பரிசோதிக்கத் தன் அறையை விட்டு வெளியேறினான்.

**அ**ன்றையப் பொழுது யாருக்கும் எந்த ஒரு பிரச்சனையும் தராமல் அமைதியாகவே கழிய...

அடுத்த நாள் தீக்ஷாவும் பார்வதியும் அலுவலகத்தில் வெட்டி அரட்டையுடன் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

தீக்ஷா வழக்கம் போல் க்ளைண்ட் மெயிலை எல்லாம் டெலீட் செய்ய... பார்வதி முறைத்தாள்.

“எதுக்குடி உனக்கு இந்த வேலை...? எல்லாம் முக்கியமான மெயில் தீக்ஷா...” என்றவளிடம்,

சிரித்தவள்... “அதையெல்லாம் பெர்மெனென்ட் டெலீட் பண்ணல... விருமாண்டி ரீஸ்டோர் பண்ணிருவான்... ஏதோ நம்மளால் கொடுக்க முடிந்த சின்னச் சந்தோஷம்!” என்று குறும்பும்... கடுப்பும் கலந்து சொன்னவள்....

“வேலைக்குப் போகலாம்னு பார்த்தா இந்த ஆஃபீஸ்ல கொண்டு வந்து அடைச்சுட்டான்... அதான். போடி... எனக்குப் பிடிக்கவே இல்லை...” என்று புலம்ப ஆரம்பித்தவளிடம்,



“உன் ஃப்ரெண்ட்ஸ் யார்கிட்டயும் பேச மாட்டியா...?” என்று பார்வதி கேட்க....

“காலேஜ் ஃப்ரெண்ட்ஸ்கிட்ட அப்பப்போ பேசுவேன்... ஆஃபீஸ் ஃப்ரெண்ட்ஸ்லாம் பேசுவாங்க... இப்போ எப்படி இருக்கேன்னு கேட்டுக் கேட்டுக் கொன்னுட்டாங்க.... நானே கொறச்சுகிட்டேன்... யுகி செம கம்பெனி எனக்கு.... ஆனால் எனக்கும் அவனுக்கும் இந்த விஜய் அத்தான் விசயத்தில் சண்டை வந்துருச்சு.... சொல்லாமக் கூட யு.கே.க்குப் போய்ட்டான்...” என்றவள்..

“இப்போ உன்னைப் பார்த்த பின்னால ஏதோ மனசு லேசானது மாதிரி இருக்கு... ஆர்த்தி கூட யு.கே.லதான் இருக்கானு நினைக்கிறேன். தலைவர் அவ பின்னாடியே கிளம்பிட்டார். இந்த தொல்லைங்களாம் இல்லாம நிம்மதியா லவ் பண்ணுவான் பையன்...” என்று யுகியின் ஞாபகங்களில் திளைத்தவள்...

“ரொம்ப நல்ல பையன், பாரு... அவன்! எல்லார் கிட்டயும் ஈஸியா பழகிருவான்...” என்று அவன் பெருமை பாட,

பார்வதிக்கோ.... சுரேந்தர் பற்றி எதுனாலும் சொல்றாளா இவ... ஒண்ணு விஜய்யை வசை மாரி பொழியுறா... இல்ல, அந்த யுகிக்குப் புகழ் மாலை சூட்டுறா... இடையில இருக்கிற நம்ம ஆளைப் பற்றி ஒண்ணும் சொல்ல மாட்டேன்கிறாளே...” யோசிக்க,

திடுக்கிட்டாள் பார்வதி. ‘நம்ம ஆளா... சுரேந்தரா...!’ மனம் செல்லும் திசை அறியாமல் குழம்ப ஆரம்பித்தாள்.

கிட்டத்தட்ட 3 மணி அளவில்....

தீக்ஷா பார்வதியிடம்.... “ஷாப்பிங் போகலாமா?” என்று கேட்க... மிரண்டாள் பார்வதி.

"ஆளை விடுடி... நீ என் கூட வர்றதையே ஃபாலோ பண்ணிட்டு வர்றாங்க. வேண்டாம்மா... நீ புலம்புனியே பிரைவசி கூட இல்லை... யாரோ என்னை வாட்ச் பண்ணிட்டே இருக்காங்கன்னு... அந்த நிலைமைலதான் நானும் இருக் கேன். அது மட்டும் இல்லை... அன்னைக்கு நீ மயக்கம் போட்டு விழுந்தாயே... அது வேற பயமா இருக்கு!" என்று சொல்ல...

"சரி சரி, விடு. அரசியல்ல அதெல்லாம் சகஜம்..." என்று சொல்லியபடியே.... "போகலாமா?" என்று கெஞ்சலாய்க் கேட்ட தீக்ஷாவிடம்,

"வேண்டாம் தீக்ஷா..." என்று பார்வதி அடம் பிடிக்க... தீக்ஷா அவளருகே வந்தாள்.

அவள் அருகே வருவதைப் பார்த்த பார்வதி... அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை உணர்ந்து... சட்டென்று தன் கன்னங்களை இரு கைகளால் மறைத்தபடி...

வேகமாய், "வர்றேன்டி..... முத்தம் கித்தம் கொடுத்துத் தொலைச்சுராத... இது என்னடி இப்படி ஒரு பழக்கம்..." என்று கேட்க,

சிரித்தபடி விலகினாள் தீக்ஷா...

"அது... அந்தப் பயம் இருக்கட்டும்.... இதை ஏற்கெனவே சொல்லி இருக்கலாம்ல..." என்றபடி,

"சுனந்தா கூடப் பழகிப் பழகி இந்தப் பழக்கம் வந்துருச்சு!" என்று சொல்லிச் சிரித்தவளிடம்....

பார்வதி சிரிப்போடு.... "சுனந்தாக்குக் கொடுத்துப் பழகின மாதிரியே எனக்குத் தெரியலயேடி...!" என்று கிண்டல் அடித்தவள்...

"ஆனா ஆஃபீஸ் முடிந்த பின்னால்தான் வருவேன்!" என்று கொஞ்சம் பொறுப்பாகவும் சொல்ல...



"உன் கடமை உணர்ச்சி இருக்கே பார்வதி... அப்படியே புல்லரிக்க வைக்குது எனக்கு..." என்று தீக்ஷா ஓட்டிக் கொண்டிருக்கும்போதே...

போனும் அடித்தது.

இருவரையும் விஜய் தனது அறைக்கு அழைத்திருந் தான்.

அவன் முன்னே நின்ற இருவரிடமும்...

"வீட்டுக்குக் கிளம்புங்க. எனக்கு முக்கியமான வேலை இருக்கு... நான் இன்னும் அரை மணி நேரத்தில் கிளம் பிடுவேன்!" என்று பார்வதியைப் பார்த்துச் சொல்ல...

தன்னைப் பார்க்காமல் பேசிக் கொண்டிருந்த விஜய் யிடம்... வேறு வழி இன்றி...

"விஜய் அத்தான்!" என்று அழைத்தாள் தீக்ஷா...

முடிந்தவரை அவனிடம் அத்தான் என்ற வார்த் தையைத் தவிர்க்கத்தான் நினைப்பாள் தீக்ஷா... அவள் தன்னை அழைப்பதைக் கேட்டவுடன், பார்வதியிடம் இருந்த பார்வையை அவளிடம் மாற்றியவன்... கேள்வியாய் அவளை நோக்க...

"நான் 'பாரு' கூட ஷாப்பிங் போகவா?" என்று கெஞ்ச லாய்க் கேட்க...

அவளின் கெஞ்சலில் விஜய் கொஞ்சம் அதிர்ந்து பார்க்க...

தீக்ஷா அதை உணர்ந்தவளாய், "உன்கிட்டலாம் கெஞ்ச வேண்டிய நிலைமைடா எனக்கு...!" என்று உள்ளுக்குள் எரிந்து கொண்டிருக்க...

விஜய்யோ.... தன் முன் நின்று கெஞ்சலாய்ப் பேசிய வளின் பேச்சில்... மிஞ்ச ஆரம்பித்த மனதையும்... அவளின்

கோரிக்கையை மறுக்கத் துடித்த உதடுகளையும்... மறுத்தால் கிடைக்கும் பரிசுக்காக ஏங்க ஆரம்பித்த கன்னங்களையும்... அடக்கும் வழி தெரியாமல் மன்றாட ஆரம்பித்து இருந்தான். உடலும்... மனதும்... சேர்ந்து... அவனைப் பந்தாட ஆரம் பிக்க...

தன் முன் நிற்கும் இருவரும் தன் பதிலுக்காகக் காத் திருக்கும் நிலைமை உணர்ந்து... தன்னை... தன் உணர்ச் சிகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து... தன் பார்வையை மாற்றி... மானிட்டரில் வைத்தபடி,

"போ... புதுசா என்கிட்ட பெர்மிஷன்லாம் கேட்கிற. அது வும் பவ்யமா... நான் வேண்டாம்னா... கேட்கவா போற!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே...

அதே நேரத்தில்.... விஜய் அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஸ்டாஃப் உள்ளே வந்தான். வந்தவன் கொஞ்சம் படபடப்பாகவும்... அதே நேரத்தில் சந்தோஷமாகவும் இருந் தான்.

"சார்... எனக்கு உடனே பெர்மிஷன் வேண்டும். இரண்டு நாள் லீவும் வேண்டும்," என்று வந்தவன் கேட்க...

"எடுத்துக்குங்க... என்ன, எதுவும் சீரியஸா... மூர்த்தி! இவ்ளோ படபடப்பா இருக்கீங்க...?"

"சீரியஸ்லாம் இல்லை சார்.... வைஃபுக்கு டெலிவரி ஆகி விட்டது... சொன்ன டேட்டுக்கு முன்னால குழந்தை பிறந் திடுச்சு... வரச் சொன்னாங்க..." என்று அவனிடம் சொல்ல....

விஜய்..... அவனிடம் வாழ்த்துக்களைத் தெரிவிக்க... தீக்ஷாவும், பார்வதியும் விஜய்யைத் தொடர்ந்து தங்கள் வாழ்த்துக்களைச் சொல்ல... மூர்த்தி விடை பெறப் போகும் போது விஜய் கேட்டான்.

"இது உங்க முதல் குழந்தையா?" என்று கேட்க,



"ஆமா சார்!" என்றவனிடம்,

"சும்மா கேட்டேன்... நீங்க போயட்டு வாங்க... நெக்ஸ்ட் வீக் முழுவதும் லீவ் எடுத்துக்கங்க..." என்று சொன்ன வனின்... மனமும் ஒரு கணக்குப் போட அது, '9'க்கும் மேல் தாண்ட... விஜய் மனம் கனத்தது...

அப்படியே அமைதியாகிப் பின்னால் சாய்ந்தவனை.. தீக்ஷாவின் குரல் கலைக்க... நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"அத்தான், ப்ளீஸ்... எனக்குப் பதில் சொல்லுங்க. அம்மா போகச் சொன்னாங்க... இந்த சாட்டர்டே கோவி லுக்குப் போக வேண்டுமாம். அதனாலதான் இந்த ஷாப்பிங்... ப்ளீஸ்!"

அவளின் கெஞ்சலான பேச்சு... கனமாகிப் போன அவன் மனதுக்கு மீண்டும் உற்சாகத்தைக் கொடுக்க... அவன் மனம் மீண்டும் சந்தோசமாகியது.

தன் முன் கெஞ்சி நின்ற அவளைச் சீண்ட வேண்டும் போல் துடித்த மனதை அடக்கியவன்... அவளைச் சீண் டாமல்...

"போகலாம். ஆனால்..." என்று இழுத்தவன்,

பார்வதியிடம் திரும்பி... "உன் ஃப்ரெண்ட் இன்னைக்கு எத்தனை மெயிலை டெலீட் பண்ணினாளோ அத்தனைக்கும் ரிப்ளை பண்ணி விட்டு அவளைக் கூட்டிட்டுப் போ... அதுதான் அவளுக்கு இனி பனிஷ்மெண்ட்... 30 மெயில் வந்திருக்கு... நான் ரீஸ்டோர் பண்ணலை... அநேகமா ஏழு மணி ஆகும்னு நினைக்கிறேன்... ஷாப்பிங் போகணும்ல, சீக்கிரம் போய் எல்லா மெயிலுக்கும் ரிப்ளை பண்ணிட்டு... அந்த அம்மையாரை ஊர்கோலம் கூட்டிட்டுப் போ!" என்று சொல்ல... பார்வதி விழிக்க,

விஜய் சிரித்தான், பார்வதி விழிப்பதைப் பார்த்து.

தீக்ஷாவிடம் திரும்பி... "நீயும் போ... உன் ஃப்ரெண்டுக்கு ஹெல்ப் பண்ணு... இனிமேல் டெலீட் பண்ணுவ..." என்று கேட்டவனைப் பார்த்து முறைக்க...

இப்போது தீக்ஷாவைப் பார்த்துப் பார்வதி முறைக்க,

விஜய் சிரிப்பை அடக்கியபடி....

"போங்க... எவ்ளோ சீக்கிரமா பண்ண முடியுமோ அவ்வளவு சீக்கிரமா பண்ணுனா... ஷாப்பிங். இல்லை... யோசிச்சுக்கங்க!" என்றவனிடம்,

பார்வதி... தயங்கி, "நாளைக்குப் பண்ணவா?" என்று கேட்க,

"நோ வே..." என்று முடித்தவன், அதற்கு மேல் அவர்கள் இருவரிடமும் பேச எதுவும் இல்லை என்றபடி ஏதோ ஒரு ஃபைலில் மூழ்க,

வெளியே வந்த தீக்ஷா... "பார்த்தியா... பார்த்தியா... இதுதான்டி விருமாண்டி... எப்படிப் பழி வாங்கிட்டான் பார்த்தியா!" என்று கொதிக்க ஆரம்பிக்க,

பார்வதி முறைத்தபடி... "ஏன்டி... அவன் உன்னைப் பழி வாங்கலை... நீ டெலீட் பண்ணினால் எனக்கு பனிஷ்மெண்ட்டா!"

"சாரிடி... அவன் இப்படிப் பண்ணுவான்னு நினைத்தே பார்க்கலை... இப்போ என்ன பண்றது...?" என்றவள் தோழியின் கோபப் பார்வையில், "சரி வா. ரெண்டு சிஸ்டம் எடுத்துக்குவோம். நீ 15... நான் 15... இனி நான் டெலீட் பண்ண மாட்டேன்டி..." என்று பாவமாய்ச் சொன்னவளைப் பார்த்து,

"அவர் வீட்டுக்குக் கிளம்பலையானுதான் கேட்கக் கூப்பிட்டாரு... அவர்கிட்ட ஷாப்பிங் போறதைச் சொல்லலன்னு யார் அழுதது... நாம போற வழியில் சொல்லி இருக்கலாம்..." என்று பார்வதி புலம்ப,



அவள் புலம்பலில் மனம் முழுக்கக் கோபத்துடன் தீக்ஷா அவனைத் திரும்பிப் பார்க்க... அவனும் அவளையே பார்த்துக் கொண்டிருக்க... பார்வையை மாற்றாமல், 'என்ன?' என்று புருவத்தை உயர்த்தியவனிடம்...

"போடா!" என்று முறைப்புடன் வாயசைத்தவளைப் பார்த்த விஜய்... மனதினுள் அதை ரசித்தாலும்... சிரிக்காமல்,

"போடி!" என்று வாயசைவிலேயே அதே முறைப்புடன் சொன்னவன்... 'கொன்னுடுவேன்...' என்று ஆட்காட்டி விரலை உயர்த்தி... அதே விரலால், 'போ...' என்கின்ற மாதிரி விரலை அசைத்தவன்... அதன் பிறகு தன் பணியில் மூழ்க... தீக்ஷாவோ அவனையே பார்த்தபடி அசையாமல் நின்றாள்.

பார்வதியும் இவர்களைப் பார்க்க...

"என்னடி நடக்குது இங்க..." என்று தீக்ஷாவைக் குலுக்க...

தீக்ஷா தன் நிலை மாறி... "வா வா. சீக்கிரம் போகணும்," என்றபடி சிஸ்டமை ஆன் செய்ய... அதிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்தனர்.

வேறொன்றுமில்லை. அனைத்து மெயில்களும் ரிப்ளை பண்ணப்பட்டு இருக்க... பார்வதி அவளைப் பார்த்து...

"ஹேய், நாம இப்போ கிளம்பலாம்!" என்று சிரித்தபடி தன் தோழியைக் கட்டிக் கொள்ள...

அவளோ முதலில் இருந்த உற்சாகமெல்லாம்... போய் வெற்றுப் புன்னகை பூத்தாள்.

விஜய் தங்களிடம் விளையாடியிருக்கிறான் என்று தீக்ஷாவுக்குப் புரிய... கொஞ்சம் யோசிக்க ஆரம்பித்து இருந்தாள்.

ஆனால் தவறாக, "விருமாண்டி இப்படில்லாம் விளையாட மாட்டானே... தானே அவன் முன் எத்தனை குறும்புத்தனம் பண்ணி அவனைச் சீண்டி இருக்கிறோம்...

அப்போதெல்லாம் கூட விரைப்பாகப் போனவன்... பார்வதியிடம் விளையாடுகிறான் என்றால்..."

இந்த நினைப்பு வந்த போதே... பார்வதி மேல் பொறாமையாகக் கூட வந்தது. 'ஏனோ சுரேந்தரோடு அவளை ஓட்டியவளுக்கு விஜய்யோடு வைத்து ஓட்ட முடியவில்லை. சற்று முன் பார்வதியுடன் பேசிய போது இருந்த விஜய்யின் சிரித்த முகம் மனதில் தோன்ற... ஏன் தன்னிடம் மட்டும் சிடு மூஞ்சியாகவே இருக்கிறான்...' என்றவளுக்கு, 'விஜய்யைத் திரும்பிப் பார்...' என்று அவள் இதயம் சொல்ல... சட்டென்று திரும்பிப் பார்க்க,

அவன் இப்போது வேகமாய்த் தலையைக் குனிவது தெரிய,

'இவ்ளோ நேரம் இங்கதான் பார்த்துட்டு இருந்தானா...?' என்று யோசித்தபடி... பார்வதியைப் பார்க்க...

அவளோ மானிட்டரில் பார்வையை வைத்துக் கொண்டிருக்க... அதற்கு மேல் தீக்ஷாவும் தன்னைக் குழப்பாமல் பார்வதியுடன் பேச ஆரம்பித்தாள்.

"போகலாமா? ஆனாலும் விருமாண்டி டெரர் இம்ப்ரெஸனை மெயின்டெயின் பண்ணிட்டே இருப்பானே..." என்றபடி இருவரும் கிளம்பத் தயாராக...

பார்வதி மட்டும், "விஜய் சார்கிட்ட சொல்லிட்டுக் கிளம்புவோம்," என்று கேட்க,

"நீ போய்ச் சொல்லிட்டு வா... நான் வரலை!" என்று சொன்ன தோழியின் முகம் ஏதோ மாதிரி இருக்க...

"தீக்ஷா, ஆர் யூ ஓ.கே... ஏன் ஒரு மாதிரி இருக்க...?" என்று பதட்டமாய்க் கேட்டவளிடம்...

அவளும் மறைக்கவில்லை.

"என்னமோ எதையோ மிஸ் பண்ற மாதிரி ஃபீல் பார்வதி... தலை வலிக்கிற மாதிரி இருக்கு... என்னை விட்டு எல்லாமே போன மாதிரி ஃபீல்... அது என்னன்னு எனக்கே தெரியலை... இந்த மாதிரி அடிக்கடி தோணும் பார்வதி!" என்று கலங்கிய தோழியைப் பார்த்தவளுக்கு... அடிவயிறு கலங்காமல் இல்லை.



"அப்போ நாளைக்கு ஷாப்பிங் போகலாமா?" என்று கேட்க... சட்டென்று முகத்தை மாற்றியவள்...

"இப்போ ஓ.கேவா... நீ போய் அவர்கிட்ட சொல்லிட்டு வா... நான் வெயிட் பண்றேன்," என்று சொன்னவள்...

பார்வதி விஜய்யிடம் சொல்ல, அவனது அறைக்குப் போக...

வெளியே வந்த தீக்ஷா, கைகளைக் கட்டியபடி... சுவரில் சாய்ந்து வெறித்தபடி நின்றிருந்தாள்.

மனம் எங்கும் வெறுமை சூழ்ந்திருக்க... பார்வை ஒரே இடத்தில் நிலைக்க, மனம் எங்கும் எதற்கோ ஏங்கித் தவிக்க ஆரம்பித்து இருக்க... தண்ணீரில் இருந்து தரையில் விழுந்த மீன் போல் துடிக்க ஆரம்பித்தாள்.

சட்டென்று தனது கைப்பையைத் திறந்த தீக்ஷா... அதில் இருந்த மாத்திரையை வேக வேகமாய் விழுங்க ஆரம்பித்தவள்... கண் மூடி அப்படியே நின்றாள்.

விஜய்யைப் பார்க்க உள்ளே சென்ற பார்வதி அவனைக் காணாமல் திகைக்க... அவனது பிரத்யேக அறையில் இருந்து வெளியே வந்த விஜய்யின் முகத்தைப் பார்த்து வியந்தாள்... வந்த நாளில் இருந்து இன்றுதான் விஜய்யின் முகம் இந்த அளவு தெளிவாய் இருந்தது.....

இவளைப் பார்த்தவன் சட்டென்று முகத்தை மாற்றி... சிரித்தபடி... எதிர்பார்த்தவன் போல், "இனி உன் ஃப்ரெண்ட் டெலீட் பண்ணுவா... மாட்டாள்ள!" என்று கேட்க,

"ஷாக் ட்ரீட்மெண்ட்டா சார்..." என்று கேட்டுப் பார்வதி சிரித்தாள்.

அதற்குப் பதில் சொல்லாமல்... விரக்தியாய்ச் சிரித்து...

"அதெல்லாம் எனக்கு வாங்கித்தான் பழக்கம்..." என்று சொல்லி விட்டு... சொன்ன வேகத்திலேயே, "சீக்கிரம் போய்ட்டு வாங்க... லேட் பண்ணிடாதீங்க...!" என்று நிறுத்தியவன்... பார்வதியிடம் நெகிழ்வாக,

"பார்வதி... இந்த ஒரு வாரமா அவகிட்ட ஒரு மலர்ச்சி... அதுக்கு நீதான் காரணம்னு தெரியும்... தேங்க்ஸ்!" என்று சொல்ல....

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் பார்வதி அவனைப் பார்க்க...

"அவளைப் பத்திரமாக் கூட்டிட்டுப் போய்ட்டு வா.... உன்னை நம்பி அனுப்பி வைக்கிறேன்... என் நம்பிக்கையைக் காப்பாற்றுவேனு நினைக்கிறேன்..." என்றவன், ஞாபகம் வந்தவனாய்...

"ரிப்போர்ட்ஸ்லாம் பார்த்தாரா உங்க அண்ணா...?" என்று கேட்க,

தன் அண்ணன்தான் பார்க்கவே இல்லையே... என்ன சொல்வது... என்று சிந்தித்த பார்வதி....

"அண்ணா கொஞ்சம் பிஸி. இன்னும் பார்க்கவில்லை போல்..." என்று தடுமாற...

"ஓ... மறக்காமல் பார்க்கச் சொல்லு... உன் அண்ணாவை நான் நெக்ஸ்ட் வீக் மீட் பண்ணலாமா?" என்று விஜய் கேட்டான்.

"நெக்ஸ்ட் வீக் அண்ணாக்கு கேம்ப்... முடியாதே சார்... அதுக்கடுத்த வாரம் நீங்க ஃப்ரீயா சார்?" என்று கேட்க,

"ஓ.. ஓகே... சாரகேஷ் கேம்ப் முடிச்சுட்டு வந்த பின்னால் சொல்லு... நான் மீட் பண்றேன்... நான் எப்போதுமே ஃப்ரீதான்..." என்று சிரித்தவன்,



"சரி சரி... போ... தனியா இருக்கா அவ... எதுவா இருந்தாலும் எனக்கு கால் பண்ணு... இன்னைக்கு யாரும் உங்கள ஃபாலோ பண்ணல. கேர்ஃபுல்... சந்தோசமா ஷாப்பிங் பண்ணுங்க!" என்று அவளை அனுப்பி வைத்தவன்... அவள் வெளியேறியவுடன்... எதிரே இருந்த தனது புகைப்படத்தைப் பார்த்தபடி சில நிமிடம் இருந்தவன்...

தனது மொபைலை எடுத்து... அந்த மெஸேஜைப் படிக்க ஆரம்பித்தான்....

'....... ..... நான் உங்களுக்காகப் படைக்கப்பட்ட புயல்... அது வேறொரு இடத்திற்குப் போகுமா...? உங்களை இந்தப் புயல் தாக்க வந்துட்டே இருக்கா... என்னை நீங்க சமாளிச்சுருவீங்களா...' என்றபடி தொடர்ந்த அந்த மெஸேஜைப் படிக்க ஆரம்பித்தவன்... தனக்குள்...

"நீ... புயல்தான்டி... நீ எவ்ளோ என்னைத் தாக்கினாலும்... இந்த விஜய்ன்ற கடலோட கரையைக் கடக்க விடமாட்டேன்டி... நீயும் போக மாட்டடி...." என்றபடி தன் இருக்கையில் கண்மூடிச் சாய்ந்தவன் மனதில் ஆயிரம் உணர்ச்சிப் போராட்டங்கள்... ஆனால் அதை எல்லாம் அடக்கும் வித்தையையும்... அவனைச் சுழன்றடித்த மூன்று மாதங்களில் அவனுக்குக் கற்றுக் கொடுத்திருந்தாள் அவனது புயல்.

**தீ**க்ஷா அமைதியாகவே இன்னும் வருவதை உணர்ந்த பார்வதி... "நீதானே ஷாப்பிங் போகலாம்னு கேட்ட... இப்போ அமைதியா வருகிறாய்..." என்று செல்லமாய்க் கோபிக்க,

"ஒண்ணும் இல்லை, பாரு... என்னமோ முதலிலே வந்திருக்கலாம். இடையில மெயிலுக்கு ரிப்ளை பண்ணச் சொல்லி... ச்சே! டோட்டலா மூட் அப்செட். என்னை நிம்மதியாகவே இருக்க விட மாட்டானா, இந்த விருமாண்டி...?" என்று தளர்ந்த குரலில் பேச,

"அவர் என்னடி பண்ணினார்... சும்மா விளை யாண்டார் நம்மகிட்ட... எனக்கு ஒண்ணும் தப்பாத் தெரி யலை..." என்று பாரு சொல்வதைக் கேட்டபடியே வந்தவள்... கொஞ்சம் நார்மலாகி,

"ஹேய்! நீ சரி இல்ல... நேற்று என்னடாவென்றால்... சுரேந்தர் அத்தானுக்கு மேரேஜ் ஆகிருச்சானு கேட்கச் சொல்ற... தைரியம்தான்... பார்த்துடி. விருமாண்டிக்குத் தெரி யாம சைட் அடி... இல்ல, என் தம்பியைப் பார்வதி பார்த் துட்டானு சொல்லி பூட்டி வச்சுறப் போறாரு..." என்று சிரிக்க,

பார்வதி இப்போது கேட்டாள்.

"எனக்கு ஒரு சந்தேகம், தீக்ஷா!" என்று கேட்ட பார்வதியிடம்,

"தயவு செய்து இந்த லவ், பசங்க... விருமாண்டி குடும்பம்... சாரகேஷ், என்னோட உடல் நிலை... இது தவிர எது வேண்டும் என்றாலும் கேளு. போரடிக்குது... உலகத்தில பேசுறதுக்கு எவ்ளோ டாபிக் இருக்கு..." என்று திருப்பி விட...

அமைதியாய் ஆனாள் பார்வதி.

"என்னடி கம்முனு ஆகிட்ட?" என்று சிரிக்க....

"நீ அமைதியா வான்னு டைரக்டா சொல்லி இருக்க லாம்!" என்றவளைப் பார்த்த தீக்ஷா...

"சோ ஸ்வீட் ஃப்ரெண்ட்... கரெக்டா புரிஞ்சிக்கிட்ட..." என்று சிரித்தபடி சொல்ல...

அந்த நேரம் பார்த்து, சாரகேஷ் பார்வதிக்கு மொபைலில் அழைக்க... போனை எடுத்துத் தீக்ஷாவிடம் கொடுக்க... தீக்ஷா அட்டெண்ட் செய்தாள்.

"சொல்லுங்க, பாரு அண்ணா! நான் தீக்ஷா பேசுறேன். அவ ட்ரைவ் பண்றா..." என்று ஆரம்பித்து, கடைசியில் தாங்கள் போகும் இடத்தைச் சொல்லி முடித்துப் போனை வைத்தாள்.



"பாரு, உங்க அண்ணாவும் வருகிறாராம்..." என்றபடி தி.நகரின் உள்ளே நுழைய... அதே நேரம் சுரேந்தரும், தீனாவோடு அங்கு ஒரு வேலையாய் வந்திருக்க... சாரகேஷும் அங்கு வந்து சேர்ந்தான்.

## 15

தீக்ஷா, பார்வதி வந்து அரை மணி நேரம் ஆகி இருக்க... சாரகேசும் வந்து சேர்ந்தான்.

அவனைப் பார்த்துப் புன்னகைத்த தீக்ஷாவைப் பார்த்தவன்... அவள் முகம் சோர்ந்திருப்பதை உணர்ந்து... தன் தங்கையைப் பார்த்துத் தனியாக விசாரித்தான்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கா...?"

"நல்லாத்தான் இருந்தா... நாங்க வரும்போது விஜய் கொஞ்சம் மிரட்டுனாரா... அதில் மேடம் அப்செட்!" என்று சிரித்தபடி சொல்ல,

"என்ன மிரட்டுனான்னு சிரிச்சுட்டே சொல்ற..." என்று தீக்ஷாவுக்குப் பரிந்து பேச...

"அய்யோ அண்ணா.... மிரட்டுனார்னா நீ நினைக்கிற மாதிரி இல்லை..." என்று மாலையில் நடந்ததைச் சொல்ல...

"ஓ..." என்று சொல்லியவனிடம்,

"விஜய் சந்தோஷமா அவகிட்ட வம்பிழுத்தார்ண்ணா... ஆனா இந்த லூசுதான் புரிஞ்சுக்கல... உம்முனு இருக்கு!" என்று சொல்லியவள்,

"அவர் தீக்ஷாவை லவ் பண்றாரோ...?" என்று பார்வதி தன் அண்ணனிடம் சந்தேகமாய் வினவினாள்.

பைக்கில் வரும்போது பார்வதி தீக்ஷாவிடம் இதைத் தான் தன் சந்தேகமாய்க் கேட்க நினைத்தாள்.

"லவ் பண்றவன் கல்யாணம் பண்ணி அவளைச் சீண்டி விளையாட வேண்டியதுதானே... அவன் கல்யாணம் பண்ண ணும்னு நெனச்சா எப்பவோ கல்யாணம் பண்ணியிருக்க லாம், பார்வதி... வேற என்னவோ அவன் ப்ளான் பண் றான்..." என்று சாரகேஷ் பார்வதியின் சந்தேகத்துக்குப் பதிலளித்த போதே, தீக்ஷா அருகில் வர, பேச்சை மாற்றி னார்கள்.

"அண்ணா, விஜய்யைப் பற்றி அவகிட்ட பேசிராத... இல்லை, கேட்ராத... ஏதாவது திட்டிடப் போறா...!" என்று எச்சரிக்கை செய்யவும் மறக்கவில்லை.

தீக்ஷாவும் பார்வதியும் தனியே சென்றுவிட... சாரகேஷ் ஆண்களுக்கான ஆடைப் பிரிவில் நின்றபடியே அடுத்த வாரம் கேம்புக்குப் போக இருப்பதால், அந்த யோசனையும் ஓட... மருத்துவமனை ஞாபகம் வர, அகல்யா வின் ஞாபகமும் வந்தது.

ஒரு டாக்டர் மாதிரியா பேசுறா... ரவுடி மாதிரி பேசுறா... என்று நினைத்தபோதே மெலிதான புன்முறுவலை அவன் முகம் படர விட.. அவள் அடுத்த வாரம் பிரச்சனை பண்ணுவாளோ என்று நினைக்கும்போதே கலக்கமும் வந்தது.

ஆடைகளைப் பார்த்துக் கொண்டிருந்த தீக்ஷாவிடம்... பார்வதி கேட்டாள்....

"உங்க அண்ணா தீபன்... விஜய்கிட்ட இப்போ பேசுறாரே... உன்னை வெளியே தள்ளி விட்டுப் பிரச்சனை ஆச்சே... எப்படிப் பேசுனாரு?" என்று கேட்க... தீபனைப் பற்றித்தானே கேட்கிறோம் என்று கேட்டாள் அவள்.

"எதுக்குடி விருமாண்டியைப் பற்றியே பேசிட்டு இருக்க... எனக்குத் தலை வலிக்குது..." என்று மூஞ்சியில் அடித்தாற் போல் சொன்னவள்... பார்வதியின் முகம் சுருங்க... அதைத் தாங்க முடியாமல்,



"இப்போ என்ன, பதில்தானே வேண்டும்...

"நானே பேசிகிட்டு இருக்கேனே... எங்க அண்ணன் பேசுறதுல என்ன ஆச்சரியம் உனக்கு..." என்று புருவம் உயர்த்திக் கேட்டவள்,

"எனக்கு மட்டும் வைராக்கியம்னு ஒண்ணு இல்ல, பார்வதி.. வேற ஒருத்தினா பேசக் கூட மாட்டாள்ல..." என்றவள்... "அவன் என் அண்ணியோட அண்ணனாப் போய்ட்டான். இல்லை பேசியிருக்க மாட்டேனோ என்னவோ... இந்த உறவு முறை இது ஒரு சிக்கல்டி.... புடிச்சுருக்கோ, இல்லையோ பேசி ஆக வேண்டிய நிலை... அடிக்கடி முட்டி மோதி மறுபடியும் விஜய் அத்தான்னு நான் போய் நிற்க வேண்டிய நிலை...

"ஆனா அவன் தெளிவாகத்தான் இருக்கான். எப்போதுமே என்கிட்ட வந்து பேசினதில்லை... நான்தான் ஒரு லூசு... ஒரு வார்த்தையையும் காப்பாத்துறது இல்லை... போதுமா... இப்போ உன் ஃபேஸ் ரியாக்ஷனை மாத் துறியா...?" என்று முறைக்க...

பார்வதி சிரிக்க.... தீக்ஷாவும் அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ள... அதன் பின் இருவருமாய் உடை எடுப்பதில் பெண் களாய்த் தீவிரம் ஆகினர்.

**அ**தே நேரம்... அவர்கள் அருகில் இருந்த ஏரியாவின் உயர்தர ஹோட்டலில்... சுரேந்தர் தீனாவோடு அமர்ந்திருந் தான். தீனா அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க... சுரேந்தரோ அமைதியாக அமர்ந்திருந்தான்.

"என்னடா ஆச்சு, உங்களுக்கு... விஜய் என்ன சொல் றான்... என்னால் தனியாகப் பண்ண முடியலைனுதானே அவன் ஹெல்ப் கேட்கிறேன்... அவன்கிட்ட சொல்லி என்னோட ஜாயின் பண்ணச் சொல்லுடா... இந்த ப்ராஜெக்ட்டுக்காகத் தானே அவ்ளோ பாடுபட்டான்..." என்று கேட்க,

சுரேந்தர் பதில் சொல்லாமல் அப்போதும் அமைதியாக இருக்க, தீனா பொறுமை இழந்தான்...

"விஜய் சோகமா இருக்கிறதுக்குக் கூட ரீசன் இருக்கு... உங்க ரெண்டு பேருக்கும் என்னடா ஆச்சு?" என்றவன், "உன்னைச் சொல்லச் சொன்னேன்ல... விஜய்கிட்ட பேசுனியா?" என்று தீனா அழுத்திக் கேட்க...

"இல்ல தீனா... அண்ணா இப்போலாம் நான் சொல்வது எதையுமே கேட்பதில்லை... அதிலும் 'சக்தி' விசயத்தில் நாம ரெண்டு பேரும் பண்ணிய அதிகப்பிரசங்கித் தனமான வேலையில் கோபமாய் ஆனவர்... இப்போதுதான் கொஞ்சம் சகஜமாகப் பேச ஆரம்பித்திருக்கிறார்... மீண்டும் நான் ஏதாவது அவருக்குப் பிடிக்காத விசயத்தைப் பற்றிப் பேசி... அண்ணா கோபப்பட்டுப் பேசாமல் இருந்து விடு வாரோனு பயமா இருக்கு... அதனால் இதைப் பற்றிப் பேசவில்லை..." என்று முடிக்க,

"அவன் நல்லா இருக்க வேண்டுமென்றுதானே பண்ணினோம்...." என்று சொல்லும்போதே தீனாவின் குரலும் உள்ளே போயிருக்க...

"ப்ளீஸ் தீனா... அந்தப் பேச்சை விடு... இப்போ நினைத்தாலும் தீக்ஷாவையும்... அவளால என் அண்ணா பட்ட வேதனையும்... மறக்கவே முடியவில்லை.. இன்னும் எங்க குடும்பம் அதிலிருந்து மீளவில்லை தெரியுமா...?" என்று கலங்க,

"சாரி சுரேந்தர்... எதையும் ஞாபகப்படுத்துவதற்காக நான் பேசவில்லை..." என்றவனிடம்...

"இப்போதான் அண்ணா கொஞ்சம் கொஞ்சமா சரி ஆகிட்டு வருகிறார்... வி.டி. ப்ரமோட்டர்ஸ் ஆரம்பித்ததில் இருந்து அவர் கிட்டயும் மாற்றம் தெரியுது. சீக்கிரம் அவர் பழைய விஜய்யா மாறுவார்... கண்டிப்பா நடக்கும்... அதுவரை



நான் தொந்தரவு பண்ண முடியாது..." என்றவன், நினைவு வந்தவனாக,

"யுகி இந்த வீக் வருகிறான்...." என்ற போதே,

"ஆர்த்தியும்தான் வருகிறாள்..." என்ற தீனா...

"நான் விஜய்கிட்ட பேசவா... அந்த ப்ராஜெக்ட் விசயமா...?" தீனா இன்னும் தன் பிடிவாதத்திலேயே இருக்க...

"கண்டிப்பா ஒத்துக்கமாட்டார் தீனா... அவர் பிடிவாதம் உனக்குத் தெரியாதா...?" என்று சொல்லியபடி... "பார்க்கலாம்... இன்னும் ஸ்டார்ட் ஆகலைல... நீயும் அவரும் சேர்ந்து பண்ண வேண்டும் என்று இருந்தால் அது கண்டிப்பா நடக்கும்... சரி தீனா... எனக்குக் கொஞ்சம் பர்சேஸ் பண்ண வேண்டும்... நான் கிளம்புறேன்..." என்று அவனிடமிருந்து விடை பெற...

தீனா அவனை வழி அனுப்பியவன்...

விஜய்க்கு எப்படிப் புரிய வைப்பது... அவன் இல்லை யென்றால் இந்த வேலையை முடிப்பது மிகப் பெரிய கஷ்டம்... விஜய் தனியாக எடுத்திருந்தால் கூட அவனுக்கும் கொஞ்சம் கஷ்டம்தான்... ஆனால் அந்த ப்ராஜெக்டிற்காக விஜய் பல திட்டங்கள் தீட்டியிருந்தான்... தான் பார்த்துக் கொண்டிருந்த மற்ற வேலைகளை எல்லாம் சுரேந்தர் பெயருக்கு மாற்றி இருந்தான்...

அதே போல் தீனா செய்யாததால்... இன்று எந்த வேலைக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்று திணறிக் கொண் டிருக்கிறான்... நல்ல வேளை, அந்த ப்ராஜெக்ட் சில காரணங்களினால் ஆரம்பிக்கப் படாமல் இருக்க, தீனாவுக்கு இன்னும் நெருக்கடி வரவில்லை... விஜய் மட்டும் அவனோடு சேர்ந்தால் கண்டிப்பாக இருவருக்குமே பெரிய அளவில் பெயர் கிடைக்கும்... ஆனால் அவனோ இன்றிருக்கும் சூழ்நிலையில் இவன் பேசுவதை எல்லாம் காது கொடுத்துக்

கேட்கும் நிலையிலா இருக்கிறான்... என்று பெருமூச்சை விட்டபடி... தீனாவும் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான்.

சுரேந்தர்... பார்வதி மற்றும் தீக்ஷா இருந்த கடைக்கே செல்ல.... அப்போது பார்வதியும் தவறாமல் அவனுக்குத் தரிசனம் தந்தாள்...

தீக்ஷா பார்வதியின் புறம் திரும்பி இருக்க.. ஏதோ ஒரு மன உந்தலில் அவனை அறியாமல் கால்கள் பார்வதியின் புறம் அவனைக் கொண்டு சென்றன.

"ஹாய் சாருமதி...!" என்றபடி அவள் முன்னால் போக... பார்வதியும், அதே நேரத்தில் தீக்ஷாவும் திரும்பிப் பார்க்க... தீக்ஷாவைப் பார்த்த சுரேந்தர் விழித்தான்.. இருந்தும் தன்னைச் சுதாரித்து....

"ஹேய் தீக்ஷா, நீ எங்க இங்கே... அண்ணா இருக்காரா என்ன... இல்லை, ராதா கூட வந்தியா?" என்று விழிகளால் தேடியவனைப் பார்த்து நமுட்டுச் சிரிப்புச் சிரித்தபடி...

தீக்ஷா கேட்டாள்... "விஜய் அத்தான் இருந்தால் அப்படியே ஹாயோட ஜகா வாங்கிடலாமானு திட்டமா சுரேந்தர் அத்தான்?" என்று கிண்டல் செய்து சிரிக்க... சுரேந்தர் அசடு வழிந்தான்.

பார்வதிக்கும் சுரேந்தரைப் பார்த்ததும் அவள் முகமும் பிரகாசமாக... தீக்ஷா அறியாமல் மறைத்தவள்... சுரேந்தரிடம் கொஞ்சம் உரிமையாக...

"நாங்க மட்டும்தான் தனியா வந்தோம்!" என்றபடி... "உங்க அண்ணனுக்குப் பதிலா எங்க அண்ணா வந்திருக் கார்!" என்றபடி ஆடை தேடலைத் தொடர....

"உன் அண்ணா... எங்க இருக்காரு...?" என்று கேட்ட படி, பார்வதியுடன் பேசியபடி சுரேந்தர் செல்ல, தீக்ஷா தனி யானாள்...



இருவரும் போவதைப் பார்த்தபடி நின்ற தீக்ஷா... சுரேந்தரைப் பார்த்தபடியே... அவன் காதுகளில் விழும்படி சத்தமாக,

"விஜய் அத்தான், நீங்க எப்போ வந்தீங்க?" என்று வராத விஜய்யை வைத்துச் சுரேந்தரைப் பயமுறுத்தும் நோக்கில் சொல்ல,

படக்கென்று திரும்பினான் சுரேந்தர்...

அவன் திரும்பிய விதத்தினைப் பார்த்த தீக்ஷாவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"சுரேந்தர் அத்தான்... இவ்ளோ பயமா உங்க அண்ணா மேல..." என்றபடி... இன்னும் சிரிக்க...

பார்வதி அவளை முறைக்க..... தீக்ஷா அவளின் முறைப்பில்... அங்கிருந்து நழுவ ஆரம்பித்தாள்.

போகும்போது, "என்னமோ நடக்குது மர்மமா இருக்குது!" என்று தோழியின் காதுகளில் மட்டும் விழும்படி பாடியபடி அவளைக் கடந்தும் சென்றாள்.

பார்வதியோ... "ஆமாடி, உனக்கு என்ன நடந்ததுன்னு நான் தலையைப் பிச்சுக்கிட்டு இருக்கேன்... நீ என்னைப் பார்த்துப் பாடுற!" என்று யோசித்தபடி... சுரேந்தரிடம் பேச ஆரம்பிக்கப் போக... சாரகேஷ் அங்கு மீண்டும் வர...

சுரேந்தர் பார்வதியை விட்டுச் சற்றுத் தள்ளி நின்றான்.

சாரகேஷும்... சுரேந்தரைப் பார்த்து விட்டு... எதுவும் பேசாமல் இருக்கக் கூடாது என்று... நட்பாய்ப் புன்னகைக்க.. பதிலுக்குச் சுரேந்தரும் சிரித்தான். அதற்கு மேல் சாரகேஷ் எதுவும் பேசவில்லை. சுரேந்தருக்கு அவன் கோபம் புரிந்தது.

அன்று, தான் அவனிடம் கோபமாய்ப் பேசியதுதான் காரணம் என்று உணர்ந்தவன்... அவனிடம் பேச அவனை நோக்கிப் போக... சாரகேஷோ... தான் வாங்கிய பொருட்

களை எல்லாம் பில் போடச் சொல்ல... சரி, பிறகு பேசிக் கொள்ளலாம் என்று மீண்டும் பார்வதியுடன் பேச ஆரம்பித் தான்.

தீக்ஷாவும் புடவை எடுத்து விட்டதால், அவளும் சாரகேஷ் பின்னாலே செல்ல... சுரேந்தர் அப்போதெல்லாம் ஒன்றும் கவனிக்கவில்லை.

பார்வதியுடன் பேசிக் கொண்டிருந்தவன்... அவளிடம், "நீ எதுவும் வாங்கலையா...?" என்று கேட்க,

"இல்லை... இன்னும் எடுக்கணும். அதுக்கப்புறம்தான் அண்ணா கார்ட்ல கையை வைக்கணும்..." என்று சொல்லும் போதுதான் தீக்ஷா பில் கட்டச் சென்றிருப்பதை உணர்ந் தவன்...

"இரு, வருகிறேன்!" என்று தீக்ஷாவின் அருகில் சென்று, தன் கார்டை எடுத்து நீட்ட, ஆனால் அவனுக்கு முன்னாலேயே சாரகேஷ் தீக்ஷாவுக்கும் சேர்த்துப் பணம் செலுத்தி இருக்க... முகம் சுருக்கினான் சுரேந்தர்...

இருந்தும், "சரி. அப்போ பார்வதிக்குப் பில் பே பண்ணும் போது நான் பண்ணிடறேன்!" என்று போக,

"பரவாயில்ல.... நான் எடுத்துக் கொடுத்ததா இருக்கட்டும்," என்று சாரகேஷ் சொல்ல... சுரேந்தர் முகத்தில் அனல் பரவியது.

"எவ்ளோ தீக்ஷா அமௌண்ட்?" என்றான், முகம் கடுக்க,

"5000. அம்மா சாட்டர்டே கோவிலுக்குப் போகணும்னு சொல்லிப் புடவை எடுக்கணும்னு சொன்னாங்க.... அதனால தான் ஷாப்பிங் வந்தேன்... கிராண்டாத்தான் எடுக்கச் சொன்னாங்க. எனக்கு இது போதும்னு தோணுச்சு..." என்று சொல்லியவளிடம்,



"சரி, நீ போய்... கொஞ்சம் கிராண்டா எடு... இந்தப் புடவையை அவர்கிட்ட கொடுத்துரு...." என்றபடி தீக்ஷாவின் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அந்தப் பையை அவளிட மிருந்து வாங்கி சாரகேஷிடம் நீட்ட... சாரகேசுக்குக் கோபம் வந்து விட்டது.

"என்ன சுரேந்தர்... பிரச்சனை பண்றீங்களா...? இந்தப் புடவை அவ ஆசைப்பட்டு எடுத்தது... அதை அவகிட்டயே கொடுங்க...." என்றபோது, பார்வதியும் அருகில் வந்தாள்.

அங்கு நிலைமை சரி இல்லாமல் இருப்பது போல் தோன்ற, "என்னாச்சு தீக்ஷா!" என்றபடி சாரகேசையும் சுரேந் தரையும் மாறி மாறிப் பார்க்க...

சுரேந்தர் பார்வதியிடம் திரும்பியவன்... "உன்னோட பில் எவ்வளவு..... வா. நான் பே பண்றேன்!" என்று அவளை அழைத்தபடி முன்னே போக,

சாரகேஷ் பார்வதியிடம், "பாரு! இந்தா..." என கார்டை நீட்ட...

அதை வாங்கச் சென்றவளைச் சுரேந்தர் குரல் தடுத்தது....

"உனக்கு நான் பே பண்றேனு சொல்றேன்ல..." என்று அவளைத் தடுக்க... தன் அண்ணனுக்கும் சுரேந்தருக்கும் இடையில் நின்றவள் சாரகேசுக்கு அடுத்து நின்ற தீக்ஷாவிடம் திரும்பி....

"என்ன நடந்துச்சு?" என்று பார்வையாலே வினவ,

தன் இரு கைகளின் விரல்களாலும் இண்ட்டு மார்க் போட்டுக் காட்டி... ரெண்டு பேருக்கும் இடையில் சண்டை என்று சைகை செய்து காட்டியவள்.... இதனால்... என்று தன் ஆடை இருந்த பையைத் தூக்கிக் காட்ட...

பார்வதிக்கு இப்போது என்ன செய்வது என்று தெரிய வில்லை... விழித்தபடி நிற்க... சுரேந்தர் வேகமாய் தீக்ஷாவின்

அருகில் வந்து, அவள் பையை வாங்கிப் பார்வதியிடம் கொடுத்தவன்... "வா தீக்ஷா, போகலாம்!" என்று அவளை அழைக்க,

தீக்ஷா உட்பட மற்ற இருவரும் அவன் செய்கையில் அதிர... தீக்ஷா முகம் சுழித்தவளாய்,

சட்டென்று அவன் கையை உதறியவள்... முகம் மாறியவளாய், "சுரேந்தர் அத்தான்... உங்க லிமிட்டைத் தாண்டி வர்றீங்க..." என்று கூற...

சாரகேஷ் முகம் பிரகாசமாக... சுரேந்தர் முகம் கருத்தது.

"நான் என் லிமிட்டைத் தாண்டுறேனா...? அவன் யாரு... உனக்குப் புடவை எடுத்துக் கொடுக்க.... போயும் போயும் இந்தப் புடவையைப் போய்ச் சனிக்கிழமை கட்டப் போகிறாயா...?" என்று கோபமாய்க் கத்த ஆரம்பிக்க...

பொது இடத்தில் அவன் இப்படிக் கத்தியது அநாகரிகமாய்ப் பட்டது மற்ற மூவருக்கும்...

சாரகேஷ் அவனைச் சமாதானப்படுத்தும் விதமாக, "இங்க பாருங்க சுரேந்தர்... நான் எந்தத் தப்பான எண்ணத்திலேயும் இதைப் பண்ணலை... நீங்க பிரச்சனை பண்ணும்போதுதான் பெருசா ஆகுது..." என்று சொல்ல...

அவன் முடிக்கும் முன்னே, "அப்போ உன் தங்கச்சிக்கு நான் புடவை எடுத்துக் கொடுக்கவா...? எடுத்துக் கொடுத்துட்டு, நானும் நீ சொன்ன வார்த்தையையே சொல்லவா?" என்று பார்வதியைப் பார்க்க...

பார்வதி அவனின் அடாவடியான பேச்சில் அதிர... சாரகேஷுக்குக் கோபத்தில் கண்கள் சிவக்க... தீக்ஷாவுக்கு மனதில் நடுக்கம் வந்து விட்டது.

"மிஸ்டர் சுரேந்தர்.... அதிகம் பேசுறீங்க... நான் சாதாரணமா செய்ததை.... ப்ச்!" என்று நிறுத்தியவன்,



"எனக்கு இதுக்கு மேல் பேசப் பிடிக்கவில்லை," என்றபடி... பார்வதியிடம் இருந்த புடவையைப் பறித்துத் தீக்ஷாவிடம் நீட்ட, முதலில் சுரேந்தரைப் பார்த்துத் தயங்கியவள், பின் அதை வாங்க,

"தீக்ஷா!" என்று பல்லைக் கடித்தான் சுரேந்தர்.

"சுரேந்தர் அத்தான்! உங்களுக்கு என்ன பிரச்சனை...? வாங்க, போகலாம்," என்று நிலைமையைச் சரி செய்ய... அவனோடு கிளம்ப எத்தனிக்க,

"யாரோ முன்னால் என்னை அசிங்கப்படுத்துறியா தீக்ஷா! ப்ளீஸ், அந்தப் புடவையைக் கொடு... நாம போய் வேற புடவை எடுப்போம்," என்று கெஞ்ச ஆரம்பிக்க...

தீக்ஷா எரிச்சலோடு, "அவர் எனக்குப் புடவை எடுத்துக் கொடுக்க யாரோ ஒருத்தர்னா... நீங்க மட்டும் எனக்கு யாரு? ப்ளீஸ் இதை விட்ருங்க...!" என்று சாரகேஷிடம் திரும்பி,

"என் அத்தானுக்காக நான் சாரி கேட்டுக்கிறேன், பாரு அண்ணா! பார்வதி, பாய்டி..." என்றபடி சுரேந்தரோடு சென்றவளுக்கு.... அழுகையே வரும் போல இருக்க.... வேகமாய் முன்னே நடந்தாள்.

இப்போது சாரகேஷ் விடவில்லை... சுரேந்தரோடு போட்டி போட ஆரம்பித்தான்....

"எங்கே போற... இரு, தீக்ஷா. நான் கொண்டு போய் விடறேன்!" என்று சாரகேஷ் தீக்ஷாவிடம் சொல்லி அவளை நிறுத்த,

சுரேந்தர் எரிமலை ஆனான்

"என்ன டாக்டர் சார், வம்பு பண்றீங்களா...? தாங்க மாட்டீங்க... எங்க பவர் என்னன்னு தெரியாம... எங்க லைன்ல அடிக்கடி கிராஸ் ஆகிறது நல்லா இல்லை... காலி பண்ணிடுவோம்... ஞாபகம் வச்சுக்கோங்க..... என்கிட்ட இப்படிப் பேசற

மாதிரி என் அண்ணன்கிட்ட பேசிடாதீங்க... அப்புறம் உங்களுக்கு நல்ல காலம் இல்லை," என்றவனிடம்,

"ஏன்... என்ன பண்ணுவான்...? அவன் இலட்சணம் எல்லாம் எனக்கும் தெரியும்.... கேவலம் இவளை அடைச்சு வச்சு வீரத்தைக் காமிச்சவன்தானே உன் அண்ணன்... வரச் சொல்லு... அவன் கிட்டயும் நான் பேசறேன்..." என்று சாரகேசும் சூடாக,

சுரேந்தருக்கு இன்னும் ஆத்திரம் வர... தீக்ஷாவைப் பார்த்து முறைத்தவன்,

"எல்லார் கிட்டயும் எல்லாத்தையும் சொல்லிடுவியா...? உன் மனசுல எதுவுமே இருக்காதா...? ஆனா, இருக்க வேண்டியதெல்லாம் தொலச்சுட்டு நில்லு..." என்று மீண்டும் அவள் கையைப் பிடித்து அவளை இழுத்தபடி செல்ல,

சாரகேஷ் அவன் முன்னால் வந்து நின்றான்.

"அவ கையை விடு... அதுதான் உனக்கு மரியாதை...." என்றபோது தீக்ஷா,

"நான் போறேன், சாரகேஷ்.... சுரேந்தர் அத்தான்! வாங்க... ப்ளீஸ்.... எல்லோரும் ஒரு மாதிரிப் பார்க்கிறார்கள்!" என்று கண்களில் நீர் கோத்தபடி பேச ஆரம்பிக்க,

சாரகேஷுக்கோ தீக்ஷாவின் அழுகையைத் தாங்க முடிய வில்லை.

"தீக்ஷா, நீ எதுக்கு அழற...? இவனுங்களுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டுறேன்..." என்று சொல்லிச் சுரேந்தரை முறைக்க...

அவனைப் பார்த்து இகழ்ச்சியாகச் சிரித்த சுரேந்தர்...

"என்னடா பண்ணுவ? நான் இப்போ நினைத்தாலும் உனக்கு முடிவு கட்டிருவேன்... போனா போகுதுன்னு பார்க் கிறேன்," என்று பார்வதி முகத்தைப் பார்க்க....



அவளோ அப்படியே உறைந்து நின்றிருந்தாள்....

பார்வதிக்குச் சுரேந்தர் பேசிய விதம்... அதுவும் தன் அண்ணனை அவன் பேசிய விதம்... அவளால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை... பணத் திமிர் அவனுக்குள்ளும் இருக்கிறது என்று அப்போதுதான் உணர்ந்தாள்... அந்த அதிர்ச்சியில் அவள் சிலையாய் நிற்க...

சுரேந்தர் இன்னும் தீக்ஷாவின் கையைப் பிடித்தி ருப்பதை உணர்ந்த சாரகேஷ், "அவ கையை விடுடா!" என்று மரியாதை இல்லாமல் பேச ஆரம்பிக்க,

"நான் என்ன உன் தங்கை கையையா பிடிச்சிருக்கேன், உனக்கு இந்தக் கோபம் வருது... இவ எங்க வீட்டுப் பொண்ணு... உன் வேலை எதுவோ அதை மட்டும் பாருடா... வந்துட்டானுங்க!" என்று சொல்லி... அங்கு நிற்காமல் வேகமாய்த் தீக்ஷாவோடு நகர்ந்தான் சுரேந்தர்...

சாரகேஷும் அதற்கு மேல் தடுக்கவில்லை.

பார்வதி... சுரேந்தரையும், தீக்ஷாவையும் பார்த்தபடி நிற்க... தீக்ஷா பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றவள்... "கையை விடுங்க, சுரேந்தர் அத்தான்...." என்று கைகளை விடுவித்தவளாக அவனோடு செல்ல ஆரம்பித்தாள்.

வளைவில் சென்று திரும்பும் போது சுரேந்தர் அனிச்சையாய்ப் பார்வதியைத் திரும்பிப் பார்க்க....

அவளோ, 'நீ இவ்வளவுதானா!' என்ற விதத்தில் பார்த்துக் கொண்டிருந்தவள்... அவனின் பார்வையில் இன்னும் சுரேந்தரை அலட்சியமாகப் பார்த்து வேறு புறம் திரும்பினாள்.

அவளின் அலட்சியம் சுரேந்தருக்கும் புரிய.... சுரேந் தருக்கு மனமெங்கும் வலி... இருந்தும் தன் பார்வையைக் கஷ்டப்பட்டுத் திருப்பித் தன் வழியில் தொடர்ந்தான்.

தீக்ஷா போவதையே பார்த்துக் கொண்டிருந்த சாரகேஷ் மனம் உலைக் களமாய்க் கொதிக்க ஆரம்பித்தி ருந்தது....

விஜய்..... சுரேந்தர் என்று தீக்ஷாவினைச் சுற்றிய வலைகளை மீட்டு அவளை எப்படி வெளியே கொண்டு வருவது என்ற சிந்தனையில் இருந்தவன்... தான் எடுத்துக் கொடுத்த புடவையை அவள் விட்டுப் போகாமல் எடுத்துச் சென்றது, அவனுக்கு மனதில் பட... அவளையும் விடாமல் தான் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க..... அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கையில் அவன் மனம் இறங்க ஆரம்பித்தது.

சுரேந்தர் மனம் துடித்துக் கொண்டிருந்தது... தன் அண்ணனுக்கு மட்டும் தெரிந்தால் மனம் தாங்க மாட்டார் என்று...

அது ஒரு புறம் இருக்க.... பார்வதி முகம் வேறு வந்து தொலைக்க... 'வேண்டாம்டா சாமி.... இந்தப் பொண்ணுங்க சகவாசமே...' என்று மனம் எங்கும் குழப்பமாய்த் தீக்ஷாவை அவள் வீட்டில் இறக்கி விட....

தீக்ஷா வேகமாய்க் காரில் இருந்து கோபமாய் இறங்கிப் போனாள்....

அவள் வாங்கி வந்த புடவை கவர் காரிலேயே இருக்க... அதை எடுத்துச் சென்று அவளிடம் நீட்டினான்... கோபமாய்த்தான் அவனும் நீட்டினான்.

தீக்ஷா இப்போது பொரும ஆரம்பித்தாள்.

"அதைக் கொண்டு போய் எந்தக் குப்பைத் தொட்டி யிலாவது போடுங்க...." என்றபடி போக,

"இதை அவன் முன்னால் சொல்லி இருந்தா நான் எவ்ளோ சந்தோசப்பட்டிருப்பேன்..." என்றவனை எள்ளலாகப் பார்த்தவள்.....



"நீங்க என்னைப் புரிஞ்சுக்குவீங்கன்னு நினைச்சேன்... ப்ச்ச்..." என்று எங்கோ வெறித்தவள்,

"சாரகேஷும் தப்பான எண்ணத்தில் இதைச் செய்ய வில்லை... எதேச்சையாய் நடந்து விட்டது... அவர் பின்னாலே நான் பில் போடப் போனதுதான் தப்பு... அது மட்டும் இல்லாமல் அவர் எடுத்துக் கொடுத்ததை லூசு மாதிரி வாங்கிட்டேன்னு தானே நினைக்கிறீங்க... அவர் பார்வதியோட அண்ணன்.... அவர் மனசைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை நான்... அதுனால அவர் முன்னால் எதுவும் சொல்லாமல் வாங்கிக் கொண்டேன்... ஆனால் இதைக் கட்டி இருக்க மாட்டேன் அத்தான்..." என்றவள்... கலங்கிய விழிகளாய்க் கூறி,

"உங்களை அவர் முன்னாடி அவமானப்படுத்திட் டேன்னு நினைக்கிறீங்களா, அத்தான்...? சாரகேஷை என்னால திட்ட முடியாது... ஆனால் உங்களைத் திட்ட எனக்கு எல்லா உரிமையும் இருக்கு.... அதுனாலதான் உங்ககிட்ட கடுமையா நடந்தேன்..." என்றபடி,

"இதே போல்தான் விஜய் அத்தானிடமும் உரிமையாய் வாய் விட்டு...." என்று சொல்லும்போதே அவளின் கண்களில் கண்ணீர்க் கரை புரள...

"அன்னைக்கு அவரும் புரிஞ்சுக்கலை..... நீங்களும் இன்னைக்கு..." என்றவள், அதற்கு மேல் அங்கு நிற்க வில்லை...

சுரேந்தர் அவள் அழுகையை உணர்ந்த போதும்... இன்னும் கோபமாகவே இருந்தான். குழம்பிய மனதினனாய் இருந்த அவனுக்கு அவள் வார்த்தைகள் எல்லாம் உறைக் கவே இல்லை.... குழப்பத்தோடே தன் வீட்டிற்கும் வந்து சேர்ந்தான். அவன் குழம்பி.... சாரகேஷையும் தூண்டி விட்டு... நாளை வரப் போகும் பெரிய குழப்பத்திற்குத் தானே காரணமானான்..

விஜய்... தீக்ஷா வீட்டிற்குச் சென்ற போது மணி ஒன்பது ஆகி இருக்க...

சுரேந்தர் அவனுக்கு எதுவும் சொல்லாததால் அவன் நடந்த விசயங்கள் எதுவும் அறிந்திருக்கவில்லை.

வீட்டை அடைந்தவன்... அவன் கையில் இருந்த புடவை அடங்கிய கவரை ஜெயந்தியிடம் கொடுத்து....

"இதை அவகிட்ட கொடுத்துருங்க!" என்றபடி, "கட்ட மாட்டேன்னு சொன்னா கம்பெல் பண்ணாதீங்க!" என்று சொல்லியபடி ஹாலில் வழக்கமாக உட்காரும் இடத்தில் வந்து அமர்ந்தான்.

ஹாலில் அமர்ந்திருந்த விஜய்.... தீபன் மற்றும் வைத்தீஸ்வரனோடு பேசியபடி... மாடியையே பார்த்தபடி இருக்க...

அதைக் கவனித்த தீபன்.... ராதாவை அழைத்து....

"தீக்ஷாவை வரச் சொல்லு!" என்று கூற....

"அவ கோபத்தில் இருக்கா...!" என்று ராதா கூற,

கேள்வியாய் நிமிர்ந்த விஜய்... "நல்லாத்தானே இருந்தா... பார்வதியோட ஷாப்பிங்னு சந்தோசமாத்தானே கிளம்பினாள்... ஏன், என்னாச்சு?" என்று ராதாவிடம் கேட்க,

தயங்கிய ராதா.... பின், "சுரேந்தர் அண்ணா..." என்று ஆரம்பித்து, தீக்ஷா தன்னிடம் சொல்லியவற்றை எல்லாம் சொல்ல....

"ஓ..." என்றவன், "அவனுக்கு இப்போல்லாம் ரொம்பக் கோபம் வருது... நான் ஆடின ஆட்டமெல்லாம் ஆடி அடங்கிப் போய் இருக்கேன்... இவனுங்க ரெண்டு பேரும் ஆடுறானுங்க..." என்று எழுந்தவன்,

"சரி, நான் வருகிறேன்.... இனி அவ இறங்கி வர மாட்டா!" என்று கிளம்பினான் ஏமாற்றமாய்....



அதே நேரம் அறையில் தன் படுக்கையில் படுத்திருந்த தீக்ஷாவுக்குக் கோபம்..... சாரகேஷ் மேலும்.... சுரேந்தர் மேலும் வர ஆரம்பித்து இருந்தது...

தான் எடுத்த புடவைக்கு பே பண்ண வேண்டாம் என்று சொல்லிப் பிடிவாதம் பிடித்ததால் இந்த நிலை... எரிச்சலாக இருந்தது. இந்தச் சுரேந்தர் அத்தான் அதுக்கும் மேல... மொத்தத்தில் ஷாப்பிங் போனதால் தலைவலிதான் மிச்சம்... என்றபடி அந்தப் புடவையைப் பற்றி நினைத்தவளுக்கு....

அம்மா சொல்லும் அந்த பிங்க் புடவையைப் போல இதுவும் ராசி இல்லை போல... எடுத்தும் வீட்டிற்குக் கொண்டு வர முடியவில்லை என்று தோன்றியது.

அந்தப் புடவை கூட இவள் ஆசையாக எடுத்தது தான்... அதைப் பார்த்தே வெகு நாளாகி விட்டதே என்று நினைத்தவள்... பீரோவைத் திறந்து... அந்த பிங்க் புடவையைத் தேடிப் பார்க்க... அவள் பார்வையில் படவே இல்லை... அம்மா எங்கேயாச்சும் எடுத்து வச்சுட்டாங்களா... என்று யோசனையில் மீண்டும் தேடியவளுக்குச சிக்காமல் ஆட்டம் காட்ட....

அதைத் தேடும் முயற்சியைக் கைவிட்டவள்.... வெகு நேரம் அறையில் இருந்தது போல் இருக்க... கீழே போகவும் பிடிக்க வில்லை.... ஸ்னோ பாப்பாவும் தூங்கி இருப்பாள்... என்று சலித்தபடி பால்கனிக்குச் சென்று அமர்ந்தவளுக்கு... மனதில் சாரகேஷோடு சுரேந்தர் கோப முகத்துடன் சண்டை போட்டதே கண் முன் தோன்றி அவள் நிம்மதியைக் குலைத் தது...

சுரேந்தர் சாரகேஷோடு சண்டை போட்ட விசயத்தை அவன் அண்ணனிடம் சொல்வானோ...? சுரேந்தருக்கே இவ்வளவு கோபம் வந்தால் விஜய்க்கு எவ்வளவு தூரம்

வரும்... என்று யோசித்தபடி... தன்னால் சாரகேஷுக்கு ஏதாவது பிரச்சனை ஆகிவிடக் கூடாது... எனக் கழுத்தில் கிடந்த சங்கிலியின் டாலரைப் பற்களில் கடித்தபடி யோசித்துக் கொண்டிருந்தவள்...

இப்போது அந்தச் செயினைப் பார்க்க... அது கூட அவளுக்குப் பிடிக்காத செயின்தான்... ஆண்கள் போடும் மாடலில் இருக்கும் அந்த செயின்.... கோவிலில் ஏதோ ஒரு அம்மனிடம் வைத்து வாங்கி வந்ததாகக் கூறி... அதைக் கழற்றக் கூடாது என்று சொல்லி இருந்தார் ஜெயந்தி... கோமா ஸ்டேஜில் இருக்கும் போதே அவள் கழுத்தில் அணிவித் தனராம்... தன்னையே நொந்து போய் அமர்ந்திருந்தாள் தீக்ஷா.

தனக்கென்று..... எதுவுமே இல்லை என்றிருப்பது போலத் தோன்றியது, அவளுக்கு.... பிடிக்காத வீடு... பிடிக்காத வேலை... கழுத்தில் இருந்த செயின் கூட, அவள் விருப்பம் இல்லாமல்.... நினைக்கவே.... தான் தனக்காகவே வாழவில்லையோ... தன்னைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோரும்... அவர்கள் விருப்பத்தை எல்லாம் தனக்குள் திணிப்பதாகவே பட...

இன்று கூட சாரகேஷ் அவள் மறுக்க மறுக்க பில் பே பண்ணியது... சுரேந்தரும் அவன் மறுப்பை இவளுக்குள் திணித்தது.... என எல்லாம் சேர்ந்து அவளைச் சுழற்ற .... வான் வெளியை வெறித்தபடி இருந்தவள்... விஜய் கார் வந்திருப்பதைப் பார்த்து...

சுரேந்தர் – சாரகேஷ் விசயத்தை விஜய்யிடம் சொல்லி வைத்து... சாரகேஷுக்குப் பிரச்சனை இல்லாமல் பண்ண வேண்டும். விஜய்யிடம் பேசி விசயத்தைச் சுமுகமாக முடிக்க வேண்டும் என்று முடிவு செய்து, கீழே இறங்கிப் போக.... அப்போது விஜய்யும் வெளியே வந்தான்.



"அய்யோ! இவன் கிளம்பப் போகிறானே!" என்று வேக வேகமாய்க் கீழே இறங்கினாள் தீக்ஷா....

காரின் அருகில் சென்ற விஜய்யோ... உடனே காரில் ஏறாமல்... காரில் சாய்ந்தபடி தீக்ஷாவின் பால்கனியைப் பார்க்க... அது வெறுமையாய் இருக்க... கண் மூடி அதை நோக்கியபடி, காரில் சாய்ந்தபடி சற்று நேரம் நின்று... பின் காரின் கதவைத் திறக்கப் போக...

அப்போது தீக்ஷா வேகமாய் வாசற்படிகளில் இறங்கி வந்து கொண்டிருக்க... விஜய் புருவங்களின் மத்தியில் விழுந்த சுருக்கத்தோடு, 'இவ ஏன் இவ்ளோ வேகமாக வருகிறாள்...?' என்று அவளை நோக்க...

"வெயிட் பண்ணுங்க!" என்று சொல்வது போல் கையை மட்டும் அவனிடம் காட்டியபடி படிகளில் வேகமாய் இறங்க... அவளது அவசரத்தில் படிகளில் சற்றுத் தடுமாறிக் கீழே விழப் போக... விஜய் வேகமாய் அவளை நோக்கித் தன் அடிகளை வைத்தான்.

ஆனால் அவன் வருவதற்கு முன் தன்னைச் சுதாரித்து... விழாமல் அருகில் இருந்த முல்லைப் பந்தலைப் பிடித்தவள்... விஜய் தன்னை நோக்கி வந்ததால், அங்கேயே நின்று விட... விஜய்யும் அவள் அருகில் வந்தான்.

"பார்த்து வர மாட்டியா... அப்டி என்ன அவசரம்?" என்று அவன் பல்லைக் கடிக்க,

அதை எல்லாம் கவனிக்காமல், "நான் உங்ககிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசணும்," என்றபடி அவனைப் பார்த்தாள், மூச்சிரைக்க.

விஜய்யும் அவளைப் பார்க்க... அவள் மூச்சு வாங்குவதைப் பார்த்தவன்... ஜாக்கிரதையாக அவளை விட்டுப் பத்தடி தள்ளி நின்று... மீண்டும் அவளைப் பார்க்க... அவள் கீழே தடுமாறும் போது அவளின் செயின் வெளியே

வந்து விட்டிருக்க... அதைப் பார்த்த விஜய், அதில் இருந்த டாலரை ஒரு கணம் பார்த்து... தன்னைச் சமாளித்தவனாய், அவள் சொல்லிக் கொண்டிருந்த விசயத்தைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இருந்தும் அவன் பார்வை அந்த டாலரை விட்டு நகராமல் சண்டித்தனம் செய்ய... பிரயத்தனப்பட்டுத் தன் பார்வையை அடக்கி அவளை நோக்கினான்.

"இன்னைக்கு நான் பார்வதியோடு ஷாப்பிங்..." என்று தீக்ஷா ஆரம்பிக்கும் போதே -

"ராதா சொல்லிட்டாள்..." என்று அவளை நிறுத்த,

"பார்வதி அண்ணன் மேல தப்பு இல்லை..." என்று சொல்லித் தயங்கி அவனைப் பார்க்க

"அப்போ என் தம்பி மேலதான் தவறுன்னு சொல்றியா?" என்று விஜய்யும் கேட்க...

"இல்ல இல்ல... அப்படிச் சொல்ல வரலை...." என்று வேக வேகமாய் மறுத்தவள்,

"ரெண்டு பேருமே நடந்து கொண்டது சரி இல்லை... சுரேந்தர் அத்தான் சாரகேஷ் மேல கோபமா வந்தார்.... உங்க கிட்ட ஏதாவது சொல்லி... நீங்க அதைத் தவறா எடுத்து... பாரு அண்ணாவை ஏதாவது சொல்லிடாதீங்க..." என்று சொல்லிச் சற்று நிறுத்தி,

"அதற்காகத்தான் உங்க கிட்ட சொல்ல வந்தேன்..." என்றவளின் கண்களில் அவன் சாரகேஷை ஏதாவது செய்து விடுவானோ என்ற பயம் இருக்க...

"சரி சரி. நான் பார்த்துக்கிறேன்... இதுக்கெல்லாம் போய்க் குழம்பாதே!" என்று அவளிடம் சொன்னவன்,

பின் அவளைப் பார்த்து... "அவங்க ரெண்டு பேரும் பண்ணியதெல்லாம் தப்பு இல்லை... சாரகேஷ் பில் பே



பண்ணப் போகும்போது அவன் பக்கத்தில் போய் நின்னேல்ல.... அதுதான் தப்பு...!" என்று சொல்ல,

தீக்ஷா சட்டென்று அவனைக் கூர்மையுடன் பார்க்க... அவளுக்கும் தன் தவறு புரியாமல் இல்லையே... கொஞ்ச நேரம் கழித்து பில் கட்டப் போய் இருந்திருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காதோ என்று நொந்தவள்... ஆனாலும் விருமாண்டியும் நம்ம அம்மா மாதிரியே.... யார் என்ன செய்தாலும்... அவங்களை எல்லாம் விட்டு விடுவான்... நம்மகிட்ட மட்டும்தான் குறை கண்டு பிடிப்பான் என்று நினைத்தபோதே அவளுக்குள் சிரிப்பு வர...

அதே முகத்தோடு விஜய்யைப் பார்க்க... அவளின் மலர்ந்த முகத்தைப் பார்த்த விஜய்யோ இதற்கு மேல் இங்கிருந்தால் தன்னைச் சமாளிக்க முடியாது என்பதை உணர்ந்து.... அவளிடம்,

"பாய்!" என்று சொல்லியபடி... இல்லையில்லை... வாய்க்குள்ளேயே முனகியவனாய்க் கார் இருக்கும் திசையை நோக்கிச் சென்று காரை எடுக்கப் போக...

தீக்ஷா வேகமாய், "விஜய் அத்தான்!" என்று கத்த,

"கடவுளே! இவ இன்னைக்கு விட மாட்டா போல நம்மள...!" என்று மனதுக்குள் சொல்லியபடி திரும்பிப் பார்க்க..

"தேங்க்ஸ்!"

"எதுக்கு?" புரியாமல் அவன் வாய் கேட்டாலும்... இந்த நன்றிக்கான காரணம்... சாரகேஷ் விசயத்தில் கோபம் எல்லாம் பட மாட்டேன் என்று அவன் சொல்லியதால் என்பதை... அவன் மனம் உணர்ந்தது.

தீக்ஷாவோ அவன் மனதை அறிந்தவள் போல், "இந்த தேங்க்ஸ்... பார்வதி அண்ணனுக்காக இல்லை...

இவ்ளோ நேரம் நான் சொன்னதெல்லாம்... பொறுமையாக் கேட்டதுக்கு... பொறுமையாப் பேசுனதுக்கு..." என்று சிரித்த முகத்தோடு சொல்ல,

"விஜய் எஸ்கேப்டா..." என்று தீக்ஷா சொல்வது போல் விஜய்யும் மனதுக்குள் சொன்னவன்...

"சரி, நீ உள்ள போ!" என்று வேகமாய்க் காரினுள் ஏறி அமர.... தீக்ஷா மீண்டும்.... "விஜய் அத்தான், பாய்!" என்று கத்திச் சொல்ல....

காரின் கண்ணாடியின் வழியே அவளைப் பார்த்தபடி கைகளை மட்டும் ஆட்டிய விஜய்.... மனதில் சந்தோசமாகச் சென்றான். அதே நேரத்தில் அவன் சந்தோசமாய் இருந்தால் அதை அவனிடமிருந்து பறிப்பது போல் ஏதாவது நடக்குமே என்று மனம் சஞ்சலப்பட...

மனதில் சாரகேஷ் வேறு வந்து அலைக்கழித்தான்... சாரகேஷும் ரிப்போர்ட்டைப் பார்க்கவில்லை.... பார்த்திருந் தால் அவன் கண்டிப்பாகத் தன்னிடம் வந்து பேசியிருப் பான்... என்று யோசனையில் போனவன் மனதில் பெரிதாய்த் துக்கம் எல்லாம் இல்லை...

கொடுமையான அந்த 3 மாதங்களுக்குப் பிறகு... துக்கம் இல்லாவிட்டாலும் சந்தோஷம் என்பது இல்லைதான். ஆனால் இன்று மிகவும் சந்தோஷமாய் இருந்தான்... துக்கம் என்பதை எல்லாம் அவன் கடந்து... இப்போது நடப்பதை எல்லாம் அவன் ஒரு பார்வையாளனாய்ப் பார்க்க ஆரம்பித்து வெகு நாளாகிறது... இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறது என்றுதான் அவன் மனம் எதிர்நோக்கியபடி காத் திருக்க ஆரம்பித்தது.

அதே நேரம் விஜய்யையும் தீக்ஷாவையும் ஒருசேரப் பார்த்த முருகேசன்... காத்தமுத்துவிடம், "டேய், காத்தா! விஜய் தம்பிக்கிட்ட தீக்ஷா தங்கச்சி... இன்னைக்குச் சிரிச்சுப் பேசிச்



சுடா... முதன் முதலில் இன்னைக்குத்தான் பார்க்கிறேன்... மனசெல்லாம் சந்தோசமா இருக்குடா...!" என்று போனிலேயே சொல்ல....

காத்தமுத்துவோ, "அப்படியா!" என்று சந்தோசப் பட்டவன், அடுத்த நொடி... "கண்ணு வச்சுராதடா...!" என்று சொல்ல...

"ஆமாடா. அம்மாகிட்ட சொல்லி சுத்திப் போடச் சொல்லப் போறேன்... நம்ம கண்ணு கொள்ளிக் கண்ணுடா..." என்று சந்தோசமாய்ப் பேசியபடி வீட்டிற்குள் போக...

விஜய்யை வழி அனுப்பிவிட்டு அங்கேயே நின்ற தீக்ஷாவுக்குச் சற்று முன் இருந்த வெறுமை மறைய... சந்தோசமாய் வீட்டின் உள்ளே போக... தன் பின் வந்த முருகேசனைப் பார்த்த தீக்ஷா....

"இன்னைக்கு என்னைப் பற்றி உளவு சொல்ல உங்க ளுக்கு வேலையே வைக்கவில்லை நான்... நானே சொல் லிட்டேன்... உங்க பாஸ்கிட்ட..." என்று இழுத்தவள்... அவன் முழிப்பதைப் பார்த்து... அவனைப் பார்த்துச் சிரித்தபடியே சென்றாள்...

இங்கு தீக்ஷா சாரகேசுக்காக விஜய்யிடம் பேசி வைத் திருக்க... சாரகேஷோ கோபத்தில் வேறொரு முடிவை எடுத் திருந்தான் தன் வீட்டில்...

**சா**ரகேஷ், தேவகியின் முகத்தைப் பார்த்தபடி இருக்க... பார்வதி, தாய் மற்றும் சகோதரனையே பார்த்தபடி இருந்தாள்...

தேவகி சற்று நேரம் அமைதியாக இருந்தவர்...

"இது சரிவருமாப்பா...? அந்தப் பொண்ணு முதலில் மாதிரி நம்ம அளவுக்கு இருந்தால் கூடப் பரவாயில்லை... பணக்காரங்க சகவாசம் வேண்டாம்பா... அது மட்டும்

இல்லாமல் உடம்பும் சரி இல்லைனு சொல்ற... நீதான்பா இந்த வீட்டோட வம்ச விருத்தி..." என்று தயங்க...

"அம்மா, அவளுக்கு ஒரு பிரச்சனையும் இல்லம்மா... என்னை நம்புங்க... ப்ளீஸ்!" என்று தாயைத் தேற்றியவன்... "பார்வதி, நீ என்ன சொல்ற... உன் ஃப்ரெண்ட் உனக்கு அண்ணியா வர விருப்பம்தானே...?" என்று கேட்க,

"அண்ணா, கொஞ்சம் யோசிண்ணா... எனக்கு எங்கேயோ தப்பா நடக்கிற மாதிரி இருக்கு... விஜய் பற்றி தீக்ஷா சொன்னாதான்.... ஆனா அவர் நல்லவர் மாதிரி தான் இருக்கு... தீக்ஷாவுக்குக் கூட அவர் மேல் பெருசா வன்மம்லாம் இல்லை.... அவ விசயத்தில்... அவங்க வீட்டு விசயத்தில் அவர் தலையிடும் போது மட்டும்தான் அவ டென்சன் ஆகுறா..." என்று பேச,

"அப்போ ஏன் பாரு... அவளுக்கு இல்லாத ஒரு நோயை அவளுக்கு இருக்குன்னு சொல்லி வச்சுருக்கான்...? அது மட்டும் இல்லை... அவளுக்குச் சில விசயங்கள் ஞாபகங்களில் இல்லைன்னு தெரியுது... அதுனாலதான் நான் தயங்கினேன்.... இப்போ என்ன ஆனாலும் சரி.... என்ன நடந்திருந்தாலும் சரி.... அவளை என்னோடவளா மாத்திட்டு அவனுங்ககிட்ட போராடறேன்.... அவங்க வீட்டுப் பொண்ணாமே... என்ன திமிராப் பேசுறான் அந்தச் சுரேந்தர்.... இவனே இப்படிப் பேசுனா... அவன் அண்ணன்...

"நாளைக்கு இருக்குடா, உங்களுக்குக் கச்சேரி... ஒரு அப்பாவிப் பொண்ணை ஆளாளுக்குப் பந்தாடிட்டு இருக்கீங் களா...? இல்லாத ஒரு நோயை அவளுக்கு இருக்குனு சொல்லி வச்சுருக்கானே... அவன் எவ்ளோ கேடு கெட்டவனா இருக்க முடியும்... சப்போஸ் அந்த மன உளைச்சலில் அந்தப் பொண்ணு ஏதாவது பண்ணி இருந்திருந்தா... இவனுங்க என்ன பண்ணி இருப்பானுங்க... நாளைக்கு நான்



பொண்ணு கேட்டுப் போகும் போது அங்க எவனாவது அவளுக்கு ப்ராப்ளம் அது இதுனு கதை ஓட்டட்டும்... அதுக்குப் பிறகு நான் யாருன்னு காட்டுறேன்!" என்று ஆவேசமாய்ப் பேசிக் கொண்டிருந்தவனைக் கண்டு பார்வதி சமாதானப்படுத்துவது போல் பேச ஆரம்பித்தாள்.

"அண்ணா, நாளைக்கு நல்ல நாள்தானே.... போகலாமா?" என்று சம்மதத்தைக் கூற... அதற்கு மேல் தேவகியும் எதுவும் சொல்லவில்லை.

சாரகேஷுக்குத் தான் செய்வது சரியா, தவறா என்றெல்லாம் தெரியவில்லை... அவள் ஒத்துக் கொள்வாளா என்றெல்லாம் யோசித்து, ஒரு புறம் பயம் வந்தாலும்... இன்று... தான் வாங்கிக் கொடுத்த புடவையை வாங்கிக் கொண்டாள் என்ற விசயம் ஓரளவு நம்பிக்கையைக் கொடுக்க... அதே நேரம் அகல்யா ஞாபகமும் வர... கொஞ்சம் குழப்பத்துடன்தான் தூங்கப் போனான்.

தூக்கமா வந்திருக்கும் அவனுக்கு... படுக்கையில் படுத்தான் அவன். அவ்வளவுதான்.... கண்கள் மூடிய நிலையிலே சிந்தனையில் உழன்றான்.

அவன் அப்படி இருக்க... அவன் தங்கையோ தூக்கம் வராமல் புரண்டாள். சுரேந்தர் தன்னைத் திரும்பிப் பார்த்துச் சென்றது வேறு அவள் தூக்கத்தைக் கலைக்க... கொஞ்சம் யோசித்தவள்... அதெல்லாம் பெரிய இடத்துச் சம்பந்தம்.... தீக்ஷா அவர்கள் சொந்தம்... அவளையே எடுக்கத் தயக்கம் காட்டியவர்கள்... நம்மையெல்லாம்.... நினைக்கவே கலக்கம் வர.... அது மட்டுமில்லாமல்... தீக்ஷா அவள் அண்ணனை ஒருவேளை திருமணம் செய்தால்.... அவனோடான அவள் உறவு முறையே தலைகீழாக ஆக்கிவிடும்....

அப்போதுதான் முளை விட ஆரம்பித்த தன் எண்ணங் களை அது தோன்றிய கணமே அழிக்க... அவ்வளவாய்

வலிக்கவில்லைதான் அவளுக்கு. நாளைக்கு என்ன நடக்குமோ..... தீக்ஷா என்ன சொல்வாளோ என்று வேறு இருக்க... ஆக மொத்தம் அவளும் தூங்கவில்லை.

**வி**ஜய் வீடு வந்து சேர்ந்தபோது, வீட்டில் அனைவரும் உறங்கியிருக்க... தன் அறைக்குள் கூட நுழையாமல்... சுரேந்தரிடம் பேச வேண்டும்... சாரகேஷ் விசயத்தில் அவனைத் தலையிட வேண்டாம் என்று சொல்லி வைக்க வேண்டும் என்று அவனது அறைக்குச் செல்ல... அங்கு அவன் இல்லை.

அவனது போன் அடிக்க... அது அவனது அறையிலேயே இருக்க... மாடிக்குச் சென்றவன்... அங்கு சுரேந்தர் சிகரெட்டின் துணையுடன் நின்றான்...

இவனுக்கு என்ன ஆச்சு... டென்சன் ஆக வேண்டியது நான்... நானே கூலா இருக்கேன்... இவனுக்கு என்ன பிரச்சனை... என்று அவன் அருகே போனவன்... சுரேந்தர் என்று அழைக்க...

விஜய்யைப் பார்த்தவன்... ஒன்றும் சொல்லாமல் திரும்பினான்.

"என்னடா உனக்குப் பிரச்சனை... சாரகேஷ் கிட்ட ஏன் வம்பு பண்ணுன...." என்று அவன் தோளைத் திருப்பிக் கேட்க,

"ஒண்ணுமில்லைண்ணா... விடுங்க!" என்றவனிடம்,

"அவன் புடவை எடுத்துக் கொடுத்ததுனால துரைக்குத் தாங்க முடியலையாக்கும்..." என்று சிரித்தவன்... "அவன் அவ +2 படிக்கும் போதே லவ் லெட்டர் கொடுத்திருக்கான்டா... இப்போ அவன் வந்து நிக்கிறானே, அது எப்படி இருக்கும் எனக்கு...! ஆனாலும் நான் சிரிச்சுட்டு இருக்கேன் சுரேந்தர்...

"ஏன்னா ஒண்ணும் ஆகாதுன்னு என் மனசு சொல்லுது..." என்றவன், "இது மட்டும்தான் உன் பிரச்சனை



என்றால்... அதைப் பற்றிக் கவலைப்படாதே... இதுக்கும் மேல நான் அனுபவிச்சுட்டே வந்துட்டேன்... இதைச் சமாளிக்கிறது பெரிய பிரச்சனை இல்லை... சாரகேஷ் புரிஞ்சுப்பான்... சாருமதி வந்த அன்று நானும் குழம்பித்தான் போய் இருந்தேன்...

"சாரகேஷ் மறுபடியும் இவ முன்னால் காதல்னு ஏதாவது சொல்லித் தொலைக்கப் போறானோனு... ஆனா அவன் ரொம்ப டீசன்ட்டான பையன்டா... அசோக்கை வச்சு அவனை விசாரிக்கக் கூடச் சொன்னேன்... அதுக்கப்புறம் வேண்டாம் என்று சொல்லி விட்டேன்.. எல்லா விதத்திலும் யோசிப்பான் சாரகேஷும்..." என்று சொன்னவன்... நிறுத்தி,

"பார்வதியும் நல்ல பொண்ணுடா..." என்று சொன்னவன்... அவனைக் கண்களோடு நோக்கி....

"காதல்ங்கறது உன்னைக் கேக்காம உள்ள புகுந்திரும்.... அதை யார் தடுத்தாலும் உனக்கு வரணும்னா வந்துரும்... காதலால வாழ்ந்தவனும் நான்... செத்துட்டு இருக்கிறவனும் நான்... நல்லா யோசிச்சு... முடிவுக்கு வா!" என்று சென்ற அண்ணனிடம்,

"அண்ணா!" என்று அழைக்க...

திரும்பிய விஜய் அவன் கையில் இருந்த சிகரெட்டைப் பார்த்தபடி...

"இந்த தம் அடிக்கிறதெல்லாம் இன்னும் கொஞ்ச நாள்ல நிறுத்திக்கோ... பார்வதிக்குப் பிடிக்காதுன்னு நினைக்கிறேன்..." என்று கேலியாய்ச் சொல்லிச் சகோதரனைப் பார்க்க...

சுரேந்தர் சட்டென்று கீழே போட்டான், கையில் வைத்திருந்த சிகரெட்டை...

"ஹ்ம்ம்ம்... கன்ஃபார்ம்தான்டா.... என்ஜாய்..." என்று அவனருகே மீண்டும் சென்றவன்... அவனிடமிருந்த சிகரெட் பாக்கெட்டை வாங்கியவன்...

"இதைக் கூட நம்ம சொந்தமில்லாம பண்ணிரு வாளுங்கடா...." என்று அதைத் தூக்கி எறிந்தவன்... "நானும் என் வேதனையைக் குறைக்க... தம்மை எடுப்பேன்டா... முடியலடா. தம் அடிச்சதுனால அவ பைக்கைக் கூடத் தொட விடலைடா... அப்ப விட்டது நான்... பார்வதி ஜாயின் பண்ணின அன்று டென்சனில் மூணு பாக்கெட் எடுத்து எல்லாத்தையும் வேஸ்ட் பண்ணினதுதான் மிச்சம்..." என்று கலங்கிய கண்களாய் எங்கோ பார்த்துச் சொன்னவனை,

"அண்ணா, சாரி அண்ணா..." என்று அவனைப் பிடித்துத் தளுதளுத்தவனிடம்....

"அவ ஃப்ரெண்ட் அவ மாதிரிதானே இருப்பா... சோ குறைச்சுக்கோ... அதை விட்ரு!" என்றபோதே அவன் மொபைல் ஒலிக்க... யுகிதான்... என்று போனை அட்டெண்ட் செய்ய...

"சொல்லுடா...!"

"சரி..." என்று சொல்லியபடி... "சுரேந்தர் இங்கதான் இருக்கான்... போனை ரூம்ல விட்டுட்டு வந்துட்டான்..." என்று சுரேந்தரிடம் நீட்டினான்.

சுரேந்தர் பேச ஆரம்பித்தவன்... மாடி அறையினுள் நுழையும்வரை சாதாரணமாகப் பேசியவன்... அவன் உள்ளே நுழைந்ததும்... கடந்த ஒரு வாரக் கதையை யுகியிடம் ஒன்று விடாமல் சொல்லி முடிக்க...

யுகேந்தர் அங்கு யோசிக்க ஆரம்பித்து இருந்தான்.

தீக்ஷா சாரகேஷைப் பற்றி அவனிடம் சொல்லி இருக்கிறாள்... என்ன செய்வது என்று யோசித்தவன்... தன் பயணத்தைச் சில மணி நேரம் முன்னதாகவே மாற்றியிருந்தான்.

சுரேந்தர், தன் அண்ணன் இனிக் கீழே வர மாட்டான் என்பதை உணர்ந்து... கீழே இறங்கிப் போக... அவன்



உள்ளத்திலோ... பார்வதியின் நினைவுகள் வர... 'எத்தனை தடவை அவளைப் பார்த்திருப்போம்... அதுக்குள்ள இப்படி ஆயிட்டேன், நான்... பார்வதி என்னைத் தேவதாஸா மாத்தாம இருந்தா சரி... ஒரு வீட்டுக்கு ஒரு தேவதாஸே தாங்க முடியல... கொஞ்சம் யோசிடா, சுரேந்தர்!' என்று யோசனையில் உழல...

மாடியில் இருந்த அறையில் உள்ள கட்டிலில் படுத்திருந்த விஜய்யோ தனக்குள்ளே.... "இங்கதான வச்சு என்னைக் கவுத்தடி... வாயாடி..." என்றபடி அன்றைய ஞாபகத்தில் மூழ்க... அங்கேயே படுத்தும் விட்டான்.

தீக்ஷாவோ அவள் அன்னையின் அருகில் எப்போதோ உறங்கியிருந்தாள், அவள் போட்ட மாத்திரைகளின் விளைவால்....

நாயகி மட்டும் கண்ணுறங்க... அவளைச் சுற்றி இருந்த அனைவருக்கும் உறங்கா இரவாக அமைந்தது, அந்த இரவு.

## 16

அதிகாலை 5 மணி. வழக்கம் போல் ஒலித்த அலாரம் சத்தத்தில் விழித்த விஜய் நெஞ்சோடு அணைத்திருந்த தலையணையை விடாமல் அதைக் கட்டியபடியே கட்டிலின் முனைக்கு உருண்டு அதை ஆஃப் செய்தவன்... தூக்கம் கலைந்த போதும் எழாமல் அப்படியே படுத்திருந்தான்.

எப்போது மாடியில் இருந்து கீழே வந்தான்.... என்று அவனுக்கே தெரியவில்லை.... அர்த்த ராத்திரியில் இறங்கி வந்தவன் அப்படியே உறங்கியும் இருந்தான்... இப்போது அடித்த அலாரம் சத்தத்தில் விழித்தவன்... தலையணையைக் கட்டியபடி... சற்று நேரம் விட்டத்தைப் பார்த்துப் படுத்திருந்தவனுக்கு மனமும் கொஞ்சம் உற்சாகமாய்த்தான் இருந்தது...

அந்த அகன்ற கட்டிலின் மறுமுனையைப் பார்த்தபடி இருந்தவனுக்கு இன்று ஏதேதோ நினைவுகளில் மனம் தறிகெட்டு அலைய ஆரம்பித்தது... அந்த எண்ணங்கள் அவனை ஆள ஆரம்பித்தன.

அவன் உணர்வுகளைத் தூண்டி விட ஆரம்பிக்க... தாங்காமல்... தலையணையை இறுகப் பற்ற ஆரம்பித் தவன்...

இனிமேல் படுத்திருந்தால்... அது வேலைக்கு ஆகாது என்று முடிவு செய்து குளியலறைக்குள் நுழைந்து... ஷவரில் குளித்து முடித்து... தலையைத் துவட்டியபடி வெளியே வந்தபோது அவனோடு உணர்ச்சிகளும்... அவன் குளித்த நீரோடு அடித்துச் செல்லப்பட்டிருந்தன.

கண்ணாடியில் தன்னைப் பார்த்தவன்... தன் பின்னால் இருந்த புகைப்படத்தைப் பார்த்தபடியே இருக்க... அந்தப் பிம்பம் அவனைப் பார்த்துச் சிரிக்க... அதில் உற்சாக மானவன்... அதைப் பார்த்தபடி தன் இதழை அந்தப் புகைப் படத்தின் பிம்பத்தில் பதித்து அன்றைய தன் காலையைத் தொடங்க ஆரம்பித்து இருந்தான்.

கிட்டத்தட்ட 9 மணி அளவில்... வேலையாள் உள்ளே வந்து, "தம்பி... அம்மா சாப்பிட வரச் சொன்னாங்க!" என்க,

"இதோ..." என்றபடி கீழே இறங்கியவனின் நடையில் கொஞ்சம் துள்ளல் இருக்க... அவன் இறங்கி வரும் போதே அவன் தாய் கண்ணில் பட... அவனையே பார்த்தபடி நின்றார் கலைச்செல்வி...

விஜய் அதைப் பார்வையால் உள்வாங்கியபடியே... டைனிங் டேபிளின் முன் அமர்ந்தவன்... தன் தந்தை மற்றும் சுரேந்தரைப் பார்த்துச் சிரித்தபடி....

"என்னப்பா இன்னைக்கு இவ்ளோ ஸ்பெஷல்... சின்ன மகன் வரப் போகிறான் என்று அம்மாவுக்குச் சந்தோஷம் போல... இன்னைக்கே தடபுடலா இருக்கு..." என்றபடி... கேலியாகக் கூறிய மகனைப் பார்த்தபடி அவன் தாய் நிற்க...

"அம்மா... எவ்ளோ நேரம் என்னையே பார்த்துட்டு இருப்பீங்க... பசிக்குதும்மா... எடுத்து வைங்க!" என்று கேட்ட போதுதான்... கலைச்செல்வி தன்னிலைக்கு வந்தார்.

விஜய்... பசிக்கிறது என்று சொன்னவுடன் அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வீட்டுச் சாப்பாடு கூடச் சாப்பிடாமல் காத்தமுத்து, இல்லை முருகேசன் கொண்டு வரும் சாப்பாட்டை மட்டும் உண்டு கொண்டிருந் தவன்... அதன் பின் ஓரளவு சரியாகி ஏதோ பேருக்கு... பசிக்கென்று சாப்பிட்டுக் கொண்டிருந்தவன்... இதுவரை அவளிடம் பசி என்று கேட்டதில்லை...

சாப்பாட்டை ருசியோடும் உண்டதில்லை. இன்று அவனே பசிக்கிறது என்று சொன்னவுடன்... வேகமாய்ப் பரிமாற ஆரம் பித்தவர் கண்களில் கண்ணீர் வந்து பார்வைய்யை மறைக்க... விஜய் அதை உணர்ந்தும்.... அதைப் பார்க்காதவன் போல் சாப்பாட்டில் கை வைக்க.... அப்போது விஜய்யின் மொபைல் அடிக்க... அது ஜெயந்தி என்று காட்டியது.

'இப்போ இவங்க எதுக்குக் கால் பண்ணியிருக்காங்க!' என்று யோசனையுடன்... எடுத்த சாப்பாட்டை அப்படியே வைத் தவன்.... என்னவோ ஏதோ என்று வேகமாய்ப் போனை எடுக்க...

மறுமுனையில் ஜெயந்தி பதற்றத்துடன் பேச ஆரம்பித் தார். "இந்தப் பார்வதி அண்ணன் சாரகேஷ் நம்ம தீக்ஷாவைப் பொண்ணு கேட்டு வந்திருக்கான்..." என்றபோது... அவன் கைகள் போனை இறுகப் பற்றின.

"உங்க பொண்ணு எங்க?" என்று கேட்க,

"இங்கதான் இருக்கா... அவளுக்கே தெரியாது போல, தம்பி... அழுதுட்டு இருக்கா!" என்று சொல்ல... சற்று நிம்மதியான விஜய்... பதறாமல்....

"பார்வதி அண்ணன் கிட்ட ஏதாவது பேசி அனுப்பி வைங்க..." என்று சாதாரணமாய்ச் சொல்ல,

அவனைச் சுரேந்தர் புரியாமல் பார்க்க...

எதிர்ப்புறம் போன் தீபனின் கைகளில் மாறியிருந்தது இப்போது.

"என்ன விஜய் விளையாடறீங்களா...? உடனே கிளம்பி வாங்க இங்க... இல்லை, நான் என்ன பேசுவேன்னு எனக்கே தெரியாது!" என்ற போதே, அவன் குரலின் கோபம் விஜய்யின் காதில் சூடாக விழ....

"விளையாடுகிறேனா... நான் வந்தால்தான் அங்கு பிரச்சனை ஆகும்னுதான் சொல்றேன்...." என்று விஜய்யும் சூடாகப் பதில் கொடுத்தவன், "சாரகேஷ் சொன்னா புரிஞ்சுக்குவான் தீபன்!" என்றபோது குரல் மீண்டும் இறங்கி யிருக்க...

தீபனும் தன்மையாக... "தயவு செய்து விஜய்... ஏன் விஜய் இப்படிப் பண்றீங்க... இப்படி எங்க வாயை எல்லாம் கட்டிப் போட்டு விட்டு... இதற்கு மேல் என்னால் சமாளிக்க முடியாது... நீங்க வந்தால் ஒரு பிரச்சனையும் வராது. உங்க காதல் மேல நம்பிக்கை இருந்தா.... வாங்க. இல்லை, உங்களுக்குக் கொடுத்த என் சத்தியத்திற்கும் ஆயுள் கிடையாது..." என்று முடிக்க,

விஜய்யும் அதற்கு மேல் மறுக்காமல்... "சரி. நான் வருகிறேன்... அவசரப்பட்டு எதையும் சொல்லிடாதீங்க..." என்று போனை வைத்தான்.

"என்ன விஜய்... என்னாச்சு தீக்ஷாக்கு? ஏதாவது..." என்று கலைச்செல்வி ஆரம்பிக்க....

"அவளுக்கு ஒண்ணும் இல்லம்மா... பார்வதியோட அண்ணன்..." என்றபோது சுரேந்தர் நிமிர... அவனைப் பார்வையாலே ஆறுதல் படுத்தியபடி,



விசயத்தைச் சொன்னவன்... சுரேந்தரிடம், "நீ அம்மா, அப்பாவைக் கூட்டிட்டு வா. நான் முன்னால் போகிறேன்..." என்ற போது அவன் குரலில் வருத்தமும் இல்லை... பதட்டமும் இல்லை.... மிகவும் சாதாரணமாக இருந்தான்.

ஆனால் கலைச்செல்வி அழ ஆரம்பித்திருந்தார்.

"நாங்க சொல்றதை எல்லாம் கேட்க மாட்டிங்கிறி யேடா... இதுக்குத்தான் நானும் சம்பந்தி அம்மாவும் தலைப்பாடா அடிச்சுக்கிட்டோம்..." என்று கலைச்செல்வி புலம்ப ஆரம்பிக்க,

விஜய்யின் தந்தை... "செல்வி, அவனைப் போக விடு..." என்று அதட்ட, அதற்கு மேல் அவன் தாயும் பேசாமல் அழுதபடி மட்டும் நிற்க...

சுரேந்தரோ அதற்கும் மேல்... அவனுக்குப் படபடப்பாய் வர, "அண்ணா! சாரிண்ணா... என்னாலதான் இது எல்லாம்... சும்மா இருந்தவனை உசுப்பேத்தி விடற மாதிரிப் பேசி..." என்று தன் தவறில் சோகமாய்ப் பேச....

அவனை ஆறுதலாய் அணைத்தவன்.... சிரித்தான். அவனது சிரிப்பினில் வலியும்... சோகமும்... விரக்தியும்.... ஆற்றாமையும்.... அதையும் மீறி ஒரு நம்பிக்கையும் என்று எல்லாவித உணர்வுகளையும் பார்த்தான் சுரேந்தர். சுரேந் தருக்கு மனமெங்கும் துடித்தது. ஒரு சிரிப்பினில் வேதனை யைப் பார்க்க முடியுமா!

இன்று தன் அண்ணனின் சிரிப்பினில் அதைக் கண்டான் அவன்... அவன் இன்னும் என்னவெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்று அந்தக் கடவுள் நினைக் கிறான்... போதாதா, அவன் பட்ட வேதனை எல்லாம்...? அவனால் தாங்க முடியாமல் தவிக்க ஆரம்பித்தான்.

சுரேந்தர் முகத்தைப் பார்த்தவன்... அதில் உள்ள கலக்கம் உணர்ந்த விஜய்.... "எதுக்குடா... இப்படி ஃபீல்

பண்ற... அவ போக மாட்டாடா.. அவகிட்ட இருக்கிற என் மனசு அவளைப் போக விடாது... அந்த நம்பிக்கையிலதான் நான் வாழ்ந்துட்டு இருக்கேன்..." என்றவனின் வார்த்தைகளில் விரக்தியோடு காதலும் வழிய,

கலைச்செல்வி ஏதோ பேச ஆரம்பிக்க... அதற்கு மேல் அவற்றையெல்லாம் காது கொடுத்துக் கேட்கும் பொறுமை அற்றவனாய்.... வேகமாய் வெளியேறினான் விஜய்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் விஜய்... தீக்ஷா வீட்டை அடைந்தபோது.... அங்கு ஜெயந்தியின் சத்தம் வெகுவாய்க் கேட்க... முருகேசன் வேகமாய் ஓடி வந்து அவன் அருகே நின்றான்.

"தம்பி! அன்னைக்கு வந்த பையன்..." என்று ஆரம்பிக்க...

"நான் பார்த்துக்கறேன்!" என்று உள்ளே போனவன்... தான் வழக்கமாய் உட்காரும் இடத்தில் சாரகேஷ் உட்கார்ந்திருக்க... வேறெங்கும் உட்காராமல் தீக்ஷாவின் புகைப்படம் அருகே போய் நின்றான்.

புன்னகைத்துக் கொண்டிருந்த அந்த தீக்ஷாவின் புகைப் படத்தின் ஒரு புறம் விஜய்யும்... மறுபுறம் தீக்ஷாவும் நிற்க...

அவளின் அருகே போய் நின்ற விஜய்யைப் பார்த்து சாரகேஷ் முறைத்தான்.

நிழற்படத்தில் சிரித்துக் கொண்டிருந்தவள்... நிஜத்திலோ கண்களில் கண்ணீரை வடித்துக் கொண்டிருந்தாள்.

"நீ எதுக்கு இப்போ அழற...?" என்று அருகில் அழுது கொண்டிருந்தவளைப் பார்த்துக் கேட்ட விஜய்யைப் பார்த்தவள், அவனைப் பார்த்து முறைத்தபடி... மீண்டும் அழ ஆரம்பிக்க...



"இப்போ அழறதை நிறுத்தப் போறியா இல்லையா...?" என்று முகம் கடுக்க விஜய் திட்ட ஆரம்பிக்க...

சாரகேஷ் அவனையே பார்த்துக் கொண்டிருந்ததால் அவன் திட்டுவதை உணர்ந்தவன்...

"விஜய்... எதுவா இருந்தாலும் என்கிட்ட பேசுங்க... அவளைத் திட்டுகிற வேலை எல்லாம் வேண்டாம்..." என்று ஆரம்பிக்க...

அவளின் மீதான சாரகேஷின் அக்கறையில் விஜய் மனம் சற்றுத் துணுக்குற்றாலும்,

"இருங்க பாஸ்... பேசலாம்....!" என்று சொன்னவன், தீக்ஷாவிடம் திரும்பி, "நீ மேல போ..." என்று கூற...

"ஏன்... எதுக்கு... நான் இங்கதான் இருப்பேன்..." என்று அவனிடம் படபடப்பாகக் கூறியவள்.... சாரகேசைப் பார்த்து,

"பாரு அண்ணா... உங்களோட நான் அந்த மாதிரி எண்ணத்தில் எல்லாம் பழகலை... ப்ளீஸ், இந்தப் பேச்சை விட்ருங்க..." என்று கூறியவளைப் பார்த்து, விஜய்... நிம்மதியில் பெருமூச்சு விட்டவனாய்...

"சொல்லிட்டாள்ல.... அப்புறம் என்ன..." என்று சாரகேஷிடம் சாவகாசமாய்ச் சொல்ல...

அவனிடம் பதில் சொல்ல விரும்பாத சாரகேஷ்... விஜய்யை அலட்சியமாகச் சில நொடிகள் பார்த்தவன்... தீக்ஷாவின் புறம் திரும்பி... அழுத்தமாய்ப் பேச ஆரம்பித்தான்.

"நீ என்னை விரும்பறேனு நான் சொல்லவே இல்லையே தீக்ஷா... எனக்கு உன்னைப் பிடிச்சிருக்குன்னு உங்க வீட்ல இருக்கிறவங்ககிட்ட பொண்ணு கேட்கிறேன். உங்க வீட்ல ஓ.கே.ன்னா உனக்கு ஓ.கே. தானே?" என்று கேட்க,

இப்போது விஜய் தவிர, மற்ற அனைவரின் பொறுமையும் பறக்க ஆரம்பித்து இருந்தது. அப்போது சுரேந்தர் தன் தாய் தந்தையோடு உள்ளே நுழைந்தான்...

ஹாலில் உட்கார்ந்திருந்த பார்வதி அவனைப் பார்க்கவே இல்லை. அவன் வந்தது உணர்ந்தும் அவன் புறமே திரும்பாமல் உட்கார்ந்து இருக்க...

சுரேந்தரோ... 'இருக்குடி உனக்கு... இங்க ஒருத்தனை நேத்து நைட் ஃபுல்லாத் தூங்க விடாம பண்ணிட்டு.... பார்க்கவே மாட்டீங்களா!' என்று மனதினுள் புலம்பியபடி உள்ளே வர,

சுரேந்தரைப் பார்த்து ஆவேசமானாள் தீக்ஷா... விஜய் வந்தபோது கூட ஆவேசம் ஆகவில்லை அவள்...

'எல்லாம் இவனால வந்தது...' என்று சுரேந்தர் மேல் ஆத்திரம் வர, அதே வேகத்தோடு....

"நேத்து... எங்க வீட்டுப் பொண்ணுன்னு சொன்னீங் கல்ல... பொண்ணு கேட்டு வந்து நிற்கிறாரு... அவருக்குப் பதில் சொல்லுங்கத்தான்..." என்று அவனைப் பார்த்துக் கோபத்தில் பொரிந்தாள் தீக்ஷா.

சுரேந்தருக்கு ஒரு நிமிடம் தூக்கி வாரிப் போட்டது. நேற்று தான் அவசரப்பட்டுக் கோபப்பட்டது எங்கு கொண்டு வந்து நிறுத்தி இருக்கிறது என்று...

இருந்தும் பதட்டப்படாமல்.... "நான் சொன்னா, இவரு தட்டைத் தூக்கிட்டு வந்துருவாரா தீக்ஷா...? என்ன நியாயம் இது...!" என்று கேட்டவன்...

"விடு... நானும் போய் இவர் வீட்ல நிற்கிறேன். அப்போ என்ன பண்ணுவார்னு பார்க்கிறேன்..." என்று கிடைத்த வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள....

பார்வதி பட்டென்று நிமிர்ந்து பார்க்க, சுரேந்தரும் அவளைப் பார்க்க... மீண்டும் வேறு புறம் திரும்பினாள்.



சாரகேசுக்கு... அந்தச் சூழ்நிலையிலும் சுரேந்தர் வார்த்தை அவன் மனதில் பட... நேற்று கூடச் சுரேந்தர் தன் தங்கையை அவன் வார்த்தைகளில் இழுத்ததை உணர்ந் தான் இப்போது...

விஜய் சுரேந்தரைப் பார்த்து அர்த்தப் புன்னகை ஒன்றை வீச... சுரேந்தர் அவன் பார்வை புரிந்து பேசாமல் திரும்பினான்...

"இங்க பாருங்க, எனக்குத் தீக்ஷாவைப் பிடிச்சிருக்கு... எனக்கு அவளைத் திருணம் செய்து கொடுக்கிறதுல என்ன பிரச்சனை.... அதை மட்டும் சொல்லுங்க!" என்று சாரகேஷ் கேட்க,

சுரேந்தர், தீபனிடம், "தீபன் அத்தான்... டாக்டர் சார் கேட்கிறார்ல... சொல்லுங்க..." என்று இகழ்ச்சியாய்ச் சொல்லிச் சிரிக்க...

பார்வதிக்கு... சுரேந்தர் தன் அண்ணனைக் கேலி செய்யும் விதத்தில் பேசுவதைப் பார்த்து... அவளால் தாங்கவே முடிய வில்லை...

உண்மையைச் சொல்ல விடாத விஜய்யின் பிடிவா தத்தில் ஏற்கெனவே பொறுமை இழந்து கொண்டிருந்த தீபன்... சாரகேஷிடம்

"சாரகேஷ்... தீக்ஷாவுக்கு இப்போ மேரேஜ் பண் ணலை... அது ஏன்னு சொல்ல விருப்பமும் இல்லை... போதுமா...?" என்று சொல்ல... அவனைத் தொடர்ந்து

"ஆமா தம்பி... உங்ககிட்ட சொல்ல வேண்டியதைச் சொல்லியாச்சு. இதுக்கும் மேல வற்புறுத்தாதீங்க. நீங்க போகலாம்... எங்களுக்கு இஷ்டம் இல்லை!" என்று தீபன் ஆரம்பித்து வைத்த விசயத்தை வைத்தீஸ்வரன் முடிக்க...

சாரகேஷோ... வேறு யாரிடமும் பேசாமல் தீக்ஷா வையே பார்த்தபடி எழுந்து வந்து... தீக்ஷாவின் அருகில் நெருங்க...

அதைப் பார்த்த விஜய், அதே வேகத்தில் அவளுக்கும் சாரகேஷுக்கும் இடையில் போனான்.

"சாரகேஷ், பிரச்சனை பண்ணாமப் போங்க.... நான் உங்ககிட்ட நேரில் வந்து பேசுறேன்.. இப்போ எல்லாவற்றையும் சொல்ல முடியாது...." என்று பொறுமையாக விளக்க....

"நான் உங்ககிட்ட எதுவும் பேச விரும்பவில்லை... தள்ளுங்க... இது எனக்கும் தீக்ஷாவுக்குமான பிரச்சனை. நீங்க இடையில வராதீங்க!" என்று கோப முகத்துடன் கூற...

விஜய்க்குப் பொறுமை போய்க் கொண்டிருந்ததுதான்... இருந்தும் நிதானம் தவறாமல் பேசினான்.

அவன் கொஞ்சம் கோபமாகப் பேசினாலும்... தீக்ஷா அவனுக்கு எதிராக ஏதாவது பேச வேண்டுமென்று... பேச ஆரம்பித்து விடுவாள் என்று தெரியும், அவனுக்கு... அந்தக் காரணத்திற்காகவும் பொறுமை காத்தான்...

இப்போது தீக்ஷா விஜய்யிடம்... "விஜய் அத்தான், நீங்க தள்ளுங்க!" என்று சொல்ல...

விஜய் எதுவும் பேசாமல் விலகினான்தான்... ஆனால்... அவன் மனம் எங்கும் கொஞ்சம் பய அலை அடிக்க ஆரம்பித்து இருந்தது. அதில் அவன் முகமும் வெளிறத் தொடங்கியது.

விஜய்யை விலகச் சொன்ன தீக்ஷா, சாரகேஷிடம் பேசாமல்.... தேவகியிடம் திரும்பினாள்.

"அம்மா.... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக் காதீங்க. உங்க மாதிரி ஒரு குடும்பத்துக்கு மருமகளா வரக் கொடுத்து வச்சுருக்கணும்தான்... ஆனால் அந்தக் கொடுப்பினை எனக்கு இல்லை.. இதுக்கு மேல என்னை வற்புறுத்தாதீங்க... பார்வதி! சாரிடி...!" என்று மாடி ஏறப் போக,



சாரகேஷ் அவளின் முன் கை மறித்து நிறுத்த... அவளும் நின்றாள்.

விஜய்யின் இதய ஓட்டம் தாறுமாறாக ஓடத் துவங்க... தீக்ஷாவின் தாய் பதட்டத்துடன், "நீங்க நினைக்கிற மாதிரி.... தீக்ஷா..." என்று ஆரம்பிக்க

விஜய்... "அத்தை!" என்று ஜெயந்தியைப் பார்த்துக் குரல் உயர்த்த... வாயை அடக்கினார் ஜெயந்தி.

"தீக்ஷா, உனக்கு என்ன கொடுப்பினை இல்லை...? அதை நான் சொல்லணும்... நீ மற்றது எல்லாம் மறந்துரு. உனக்கு ஹார்ட் பிராப்ளம்!" என்று சொல்லி விஜய்யை முறைக்க...

விஜய் சாரகேஷைப் பார்த்தான்.

"உனக்கு ஹார்ட் பிராப்ளம் தவிர..... வேற ஏதாவது பிரச்சனையா...? அதைச் சொல்லு...." என்று அமைதியாகச் சொல்லி அவள் முகத்தைப் பார்க்க,

"அய்யோ... அது ஒண்ணு போதாதா...? என்னை விடுங்க. நீங்களும் என்னைப் படுத்தாதீங்க, பாரு அண்ணா!" என்று உட்கார்ந்து அழ ஆரம்பிக்க...

வைத்தீஸ்வரன் விஜய்யைப் பார்த்துக் கண்களாலே கெஞ்ச ஆரம்பித்தார்.

விஜய் எதுவும் சொல்லாமல் இருக்க... ஜெயந்தி உட்பட... அத்தனை பேரும் ஏதாவது செய்து சாரகேஷை இங்கிருந்து அனுப்பி வை... என்ற விதத்தில் விஜய்யைப் பார்க்க,

விஜய்... அவர்களின் நிலைமையை உணர்ந்தான் தான்... அதற்காகத் தன் பிடிவாதத்தை மாற்றவில்லை.

"சாரகேஷ்... இதுக்கும் மேல அவளைக் கட்டாயப்படுத்துனீங்க... அப்புறம் நல்லா இருக்காது... பொறுமையாப்

பேசிட்டு இருக்கேன் நான்.... அவளை அழ விட்டீங்க... நான் சும்மா இருக்க மாட்டேன்!" என்று கோப முகம் காட்ட,

சாரகேஷ் பதிலுக்குக் கோபத்துடன், "யாரு... அவளை அழ விடுறது? நீயா... இல்லை நானா...: அவ அன்னைக்கு உன்னைப் பற்றிச் சொல்லி அழுதா... அது உனக்குத் தெரியுமா? பெருசாப் பேச வந்துட்டான்.. நீ பண்ணினதெல்லாம் சொல்லிட்டா...

"இங்க பாருங்க விஜய்... இது எனக்கும் அவளுக்கும் உள்ள பிரச்சனை... அவளை எப்படிச் சம்மதிக்க வைக்கிறதுனு எனக்குத் தெரியும்... நீங்க தலையிடாதீங்க..." என்ற போது....

விஜய் கண்கள் கோபத்தில் சிவக்க... கை முஷ்டி இறுக ஆரம்பித்தது... அவனின் கோபத்தை உணர்ந்த சுரேந்தர்.....

"அண்ணா!" என்றபடி அவனருகே போனான்...

அவனைத் தடுத்த விஜய் பேச ஆரம்பித்தான்.

"இங்க யாரும்.... எதுவும்.... எதையும்... பேசக் கூடாது..." என்று அத்தனை பேரிடமும் சொல்லித் திரும்பியவனுக்கு... உள்ளம் கொதித்தது...

அன்று மொட்டை மாடியில் நடந்த விசயத்தை எதுவும் மறைக்காமல்.... தீக்ஷா அவனிடம் சொல்லி இருக்கிறாள் என்பதை சாரகேஷ் சொன்ன விதமே சொல்ல... விஜய் கோபம் எல்லை மீற ஆரம்பித்தது.

சாரகேஷிடம், "என்ன சொன்னா இவ..... என்னைப் பற்றி சொல்லி அழுதாளா...?" என்று கேட்டவன்,

"ஏய் என்னடி சொன்ன...?" என்று அதே கோபத்தோடு கேட்டபடி... தீக்ஷாவின் அருகில் போக....

பார்வதி இப்போது இடையில் வந்தாள்.



"என்ன சார், ரொம்ப மிரட்டறீங்க...! ஆமா. சொன்னா... நீங்கதான் அவளோட பிரச்சனைக்கு எல்லாம் காரணம்..." என்று சொன்னவள்...

"ப்ச்... அதெல்லாம் தேவையில்லை எங்களுக்கு.... எங்க அண்ணாவுக்கு அவளை மேரேஜ் பண்ணிக் கொடுங்க. இல்லையா, ஏன் கொடுக்க மாட்டேங்கிறீங்கன்னு ரீசன் சொல்லுங்க... காரணம் சரின்னா... நாங்களும் பிரச்சனை பண்ணல..." என்று விஜய்யை நேருக்கு நேராய்ப் பார்த்துப் பேச...

விஜய் பார்வதியின் அதிரடியான பேச்சில் அதிர்ந்தாலும்... சுரேந்தருக்காகப் பார்த்தவன்...

"பார்வதி... உன்கிட்ட இப்போ எதுவும் சொல்ற நிலைமையில இல்ல நான்... உங்க அண்ணா கிட்ட நான் வந்து சொல்றேன்... முதலில் நான் கொடுத்த ரிப்போர்ட்ஸ் லாம் உங்க அண்ணனைப் பார்க்கச் சொல்லு... அவரே என்னை வந்து பார்ப்பாரு..." என்று மீண்டும் பொறுமையாகப் பேச,

"அதை விடுங்க சார்... ரிப்போர்ட்டாம் ரிப்போர்ட். எங்க அண்ணாவுக்குத் தீக்ஷாவோட பிராப்ளம் பெருசு இல்லை... எங்களுக்கு எங்க அண்ணா மனசு முக்கியம். நாங்க உங்களை விட வசதி குறைந்தவங்களா இருக்கலாம்... ஆனா... எங்க அண்ணனும் நல்ல நிலைமையில இருக்காரு... நல்ல பையன். இந்தத் தகுதி போதாதா...? ஏன் தர மாட்டேன்னு சொல்றீங்க...? அதுக்குப் பதில் சொல்லுங்க!" என்று பொரிய ஆரம்பித்தாள்.

அவளுக்குத் தீக்ஷாவைத் தன் அண்ணனுக்கு எடுக்கும் எண்ணத்தை விட... அவளுக்கு என்ன பிரச்சனை என்று இப்போதாவது சொல்வார்களா என்ற எண்ணமே தலைதூக்கி இருக்க... அட்லீஸ்ட் காரணமாவது வேண்டி நின்றாள்.

சுரேந்தர் அவளை முறைத்துக் கொண்டு இருந்தான்... ஆனால் ஒன்றும் பேசவில்லை.

பார்வதி விஜய்யுடன் பேசுவதைப் பார்த்த சாரகேஷ் பதற்றத்துடன், "பாரு, அவன்கிட்ட நீ ஏன்மா பேசுற...? நான் பேசிக்கிறேன்."

"நீ சும்மா இருண்ணா... என்கிட்ட இவன் பூச்சாண் டிலாம் செல்லாது..." என்று விஜய்யை நேருக்கு நேராகப் பார்த்து ஒருமையில் பேச ஆரம்பித்தாள்.

"ஏய்... என்ன பேச்செல்லாம் ஒரு மாதிரிப் போகுது... அமைதியா இருக்கேன்னு பார்க்கிறியா...?" என்று பேச ஆரம் பித்தவன், சுரேந்தரைப் பார்க்க.... அவன் முகம் வெளிறி யிருக்க... தன்னை ஓரளவு தணித்தபடி,

"எனக்கும் உங்க அண்ணாவுக்கும்தான் இங்க பிரச் சனை. நீ இடையில வராத... வந்து உன்னை அசிங்கப் படுத்திக்காத... அங்க போய் உட்காரு!" என்றபோது இதைக் கேட்டுக் கொண்டிருந்த தீக்ஷா விஜய்யிடம் வந்தாள்.

தன் தோழியைப் பார்த்து அவன் சொன்ன வார்த்தைகளில் தீக்ஷா அடி வாங்க... தங்கள் பிள்ளைகள் தலையிட்டதால்... பேசாமல் இருந்த பெரியவர்களை எல்லாம்... ஒரு பார்வை பார்த்தவள்....

"இரு, பார்வதி...." என அவள் கைப் பிடித்து நிறுத்தி னாள்.

"என்ன விஜய் அத்தான், அவளை அசிங்கப்படுத்து வீங்க. என்னைப் பண்ணின மாதிரியா?" என்று தீக்ஷா விஜய் முன்னால் வர...

விஜய் அதிர்ந்தான்.

"உங்களுக்கும் சாரகேசுக்கும் இடையில என்ன பிரச் சனை...? இது எங்க குடும்பத்துக்கும் சாரகேசுக்கும் உள்ள



பிரச்சனை... நீங்க எதுக்கு இடையில வருகிறீர்கள்...?" என்று கேட்டபோது,

மொத்தக் குடும்பமே கொஞ்சம் கலவரமாய்ப் பார்க்க ஆரம்பிக்க, தீக்ஷா ஆரம்பித்தாள்.

விஜய் ஒன்றும் சொல்லாமல்... சாரகேஷைப் பார்த்து, "சாரகேஷ், நீங்க போகலாம்.... பேசப் பேச... சண்டைதான் வரும்."

தேவகியிடம் திரும்பி.... "உங்க பொண்ணையும் பைய னையும் கூட்டிட்டு நீங்க போகலாம் ஆன்ட்டி... இல்ல, இங்க வேற மாதிரி எதுவும் ஆகிவிடும்..." என்று கைகூப்ப...

தேவகி எழ ஆரம்பித்தார். ஏற்கெனவே இஷ்டம் இல்லாமல் வந்தவர்... இங்கே நடக்கும் கூத்தைப் பார்த்தவருக்கு... இன்னும் வேதனைதான் அதிகமாகியது.

தேவகியின் வேதனை முகம் பார்த்த தீக்ஷா... அதைத் தாங்க முடியாமல், "ஒரு நிமிசம் பாரு அம்மா!" என்று அமர்த் தியவள்... தன் அம்மாவிடமும் அப்பாவிடமும் சென்றாள்.

"நீங்கதானே எனக்கு அப்பா அம்மா.... தீபன் எனக்கு அண்ணன்தானே... நீங்க எதுவுமே பேச மாட்டீங்களா...? விஜய் அத்தான் எதுக்குப் பேசறாரு...? அவரைப் பேச வேண்டாம் என்று சொல்லுங்க... அவர் யாரு... இவங்களைப் போகச் சொல்வதற்கு!

"பார்வதி என்னோட ஃப்ரெண்ட்.... அவளையும் அவங்க குடும்பத்தையும் அசிங்கப்படுத்த நெனச்சா... அப்புறம் நான் சும்மா இருக்க மாட்டேன்..." என்று முடிக்கும் போது, விஜய்யைப் பார்த்துப் பேச...

விஜய் அதற்கு மேல் பேசுவானா...! எதுவும் பேசாமல்... தான் உட்காரும் இடம் இப்போது காலியாகி இருக்க... அங்கு வந்து அமர...

தீபன் அவனிடம், "விஜய்! இதுக்கு மேல தீக்ஷாகிட்ட மறைக்க வேண்டாமே... அவ உங்களை எதிர்க்கிறேன்னு... ஏதாவது..." என்று சொல்லும்போதே,

"என்ன பண்ணினாலும் பண்ணட்டும்... நான் சொல்ல மாட்டேன். நீங்க யாரும் சொல்லக் கூடாது..." என்று தளர்வாகப் பின்னால் சாய்ந்தவன்... எதிரில் இருக்கும் தீக்ஷாவின் புகைப் படத்தில் வழக்கம் போல் தன் பார்வையை வைத்தவன்... அதில் கலந்தான்.

யாரையும் கண்டு கொள்ளாமல்... நிஜம் கொடுக்காத நிம்மதியை... நிழல் அவனுக்குத் தந்தது.

தீபன் இப்போது எழுந்து... "தீக்ஷா... என்ன பேச்சு பேசுற... பார்வதியை யாரும் இங்க அசிங்கப்படுத்தல... நம்ம நிலையைச் சொல்றோம்... அவங்க கேக்க மாட்டேங்கிறாங் கம்மா..."

சாரகேஷோ... "என்ன நிலைமை, தீபன்...? அதைச் சொல்லுங்க..." என்று தீபனின் முன்னால் நிற்க,

வைத்தீஸ்வரன் சொன்னார். "எங்க பொண்ணுக்கு உடம்பு சரி இல்லை... அவளுக்குத் திருமணம் எல்லாம் பண்ண முடியாது. போதுமா...? இதுக்கு மேல என்ன வேணும்?"

விஜய் வெறித்தபடி அமர்ந்திருக்க... சுரேந்தருக்கும்... அவனைப் பெற்றவர்களுக்கும் தாங்கவே முடியவில்லை... யாரையுமே பேசவிட மாட்டான் அவன்... முடிவுகள் எல்லாமே அவன் கையில்தான் இருக்கும். இன்று... தாளவில்லை அவர்களுக்கு...!

சாரகேஷ்... அவர்களைப் பார்த்தபடி, "நானும் டாக்டர் தான், அங்கிள்... உங்க பொண்ணை நான் பார்த்துக் கிறேன்... இதைத் தவிர... வேறு ஏதாவது... காரணம் சொல்லுங்க!" என்றபோது ஆவேசமானவன் தீபன்தான்...



"என்னடா, எத்தனை தடவ சொன்னாலும் ஏறாது உனக்கு...! தர மாட்டோம்னு சொன்னா போவியா...? வந்துட் டான்..." என்று அவன் கொண்டு வந்த தட்டுத் தாம்பாளம் எல்லாவற்றையும் வெளியில் வீச....

விஜய்யும் அதிர்ந்து... "தீபன்... என்ன இது... வீட்டுக்கு வந்தவங்ககிட்ட...." என்று பதறி எழ,

தீக்ஷா உக்கிரமானாள். "பிள்ளையையும் கிள்ளி விட்டுட்டுத் தொட்டிலையும் ஆட்டுறீங்களா நீங்க...! என்னமா நடிக்கிறீங்க...!" என்று விஜய்யைக் கேள்வி கேட்டவள்...

பார்வதியிடம்... "இது உங்களுக்குத் தேவையா, பாரு...? இவங்க யாரும் மனசை மதிக்க மாட்டாங்கன்னு.... என்னை மன்னிச்சிடு, பாரு... நீங்க போங்க... இதுக்கு மேல இங்க இருந்தா...உங்களுக்கு அவமானம்தான்!" என்று சொன்ன வள்... தேவகியைப் பார்த்துக் கை கூப்பினாள்.

சாரகேஷ்... "தீக்ஷா, நான் போறேன்... போறதுக்கு முன்னால் ஒரே ஒரு கேள்வி.... என்னை உனக்குப் பிடிச்சுருக்கா இல்லையா...? அதுக்கு மட்டும் பதில் சொல்லு. உனக்கு உடம்பு சரி இல்லைன்ற காரணத்தைத் தவிர... இங்க யாரைப் பார்த்தும் நீ பயப்பட வேண்டாம்..." என்று விஜய்யைப் பார்த்துச் சொல்லி மீண்டும் தீக்ஷாவைப் பார்க்க....

தீக்ஷாவுக்கு அவன் கேள்வியில் எரிச்சல் வந்தாலும்... வெளியில் காட்டவில்லை.

விஜய் தீக்ஷாவை... தீக்ஷாவை மட்டுமே பார்த்தான்... அவளோ அங்கிருந்த எல்லோரையும் பார்த்தாள்... விஜயையும் பார்த்தாள்தான்...

பின்... 'பிடிக்கவில்லை!' என்று அவன் முகத்தில் அடித்தாற் போல் சொல்லப் பிடிக்கவில்லை அவளுக்கு... சாரகேஷை நோகடிக்க மனம் வரவில்லை அவளுக்கு.

அதனால், "தெரியல... ஆனா எனக்குப் பிடிக் கலைன்னும் சொல்ல முடியலை... பிடிச்சிருக்குன்னும் சொல்ல முடியல...." என்று பெற்றவர்களைப் பார்த்துத் தயங்கியபடி சொல்ல....

"இது போதும் எனக்கு..." என்று சாரகேஷ் சொன்ன போது,

விஜய்க்கு அதற்கு மேல் அங்கு இருக்க முடியவில்லை. ஆனாலும் அவன் பிடிவாதமாய் இருந்தான்... அவனுக்குத் தெரியும்... அவன் பயப்படுவது போல் எதுவும் நடக்காது என்பதை அவன் இதயம் சொன்னது. இருந்தும், அவன் தனிமை நாடி வெளியேறத் துடித்தான்.

விஜய் எழுந்து வெளியே செல்ல ஆரம்பிக்க...

தீபன், "எங்க போறீங்க விஜய்...? இடையில் எழுந்து போனா என்ன அர்த்தம்...?" என்றவனிடம்,

"நான் போறேன் தீபன்..." என்றபோதே அவன் குரலா என்று யோசிக்கும் அளவு உள்ளே போயிருக்க...

"நீங்க எதுக்குப் போகணும்.... போக வேண்டியவங்க இவங்கதான்..." என்று சாரகேசைப் பார்க்க,

அவன் ஏதோ சொல்ல வர...

தீபன் கை காட்டினான்.... வெளியே செல்லும்படி.

"நீங்களா போனீங்கன்னா நல்லது... இல்லை, கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளுற சூழ்நிலை வரும்... எது வசதி...?" என்று எள்ளலாகப் பார்க்க

பாரு மட்டும் தீக்ஷாவிடம் வந்தாள்.

"நல்ல மரியாதை கிடைச்சுருச்சு, தீக்ஷா.... உன்னை என் அண்ணன் லவ் பண்ணதுக்கு... என் ஃப்ரெண்ட் ஷிப்புக்கு... நாங்க என்ன செஞ்சோம்... உன்னை எங்க



வீட்டுப் பொண்ணா கூட்டிட்டுப் போகத்தான் வந்தோம்... ஆனா... தேவைதான் எங்களுக்கு...

"நீ ஒரு வார்த்தை என் அண்ணனைப் பிடிச்சிருக் குன்னு சொல்லி இருந்தா... அவருக்கு இந்த நிலை வந்திருக் காது... அவர் தலை குனிந்து நிற்கிறார்டி..." என்று கண்ணீர் மல்கக் கூற...

சுரேந்தர் தன் அண்ணனைப் பார்த்தபடி.....

"என் அண்ணா அங்க உயிரே போய் நிக்கிறாரு.... இவளுக்கு இவ அண்ணன் தலை குனிஞ்சு நிக்கிறது... பெருசாப் போச்சு... கடவுளே...!" என்று அவன் ஒரு புறம் புலம்பிக் கொண்டிருக்க...

"அவகிட்ட என்ன பேச்சு... கிளம்பச் சொல்லி வெகு நேர மாச்சு... வாசல் இந்தப் பக்கம்...." என்று தீபன் கை காட்ட...

பார்வதி வெளியேறப் போனாள், தன் அண்ணனோடு... அன்று தீக்ஷா தன் குடும்பத்தோடு விஜய் வீட்டிலிருந்து வெளியேறியது போல...

தீக்ஷாவுக்கு மனம் தாங்கவில்லை... சில நிமிடம் யோசித்தவள்... "ஒரு நிமிசம் பார்வதி!" என்று நிறுத்தியவள்... தன் தந்தையை நோக்கி வந்தாள்.

"அப்பா.... எனக்கு இந்த நிமிசம் வரை சாரகேஷ் மேல காதல் இல்லை... அது ஏன் வரலைன்னும் தெரியல..." என்று அவள் ஆரம்பித்தபோது,

விஜய் உதட்டைக் கடித்து... அடுத்து அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று மனம் படபடவென்று அடிக்கத் தொடங்க... உண்மையைச் சொல்லி விடலாமா என்று கூட யோசிக்கத் தொடங்கி இருந்தான்.

சொல்லி மட்டும் என்ன ஆகப் போகிறது என்று அவளின் தற்போதைய நிலை உணர்ந்து தளர்வானவன்...

உன்னை விட்டு அவளால போக முடியாதுடா... வந்து சேர்வாடா உன்கிட்ட... தைரியமா இரு... எவ்வளவோ முடிஞ்சுருச்சு.... இது ஒரு பிரச்சனையாடா... என்று அவள் இருக்கும் அவனின் இதயம் அவனுக்கு ஆறுதல் சொல்ல...

தான் இருக்கும் அவள் இதயம் தன்னிடம் அவளைக் கொண்டு வந்து சேர்க்கும் என அவன் நம்பினான். அது கொடுத்த நம்பிக்கை தைரியத்தை வரவழைக்க.... வாசற் படியில் சாய்ந்து நின்றான்... பார்வையாளனாக மாறினான்.

அவனை நினைத்தே அவனுக்குச் சிரிப்பாக வந்தது. தன் நிலை யாருக்குமே கிடைக்கக் கூடாத நிலை... விரக்தியில் உதடுகளை அழுந்த மூட... அவனது நடுக்கத்தில் அவன் மீசை துடிக்க ஆரம்பித்தது... மனம் வேண்டாம் என்று சொன்னபோதும்... தீக்ஷா பேச்சில் கவனம் வைத்தான்.

தீக்ஷா பேசிக் கொண்டிருந்தாள்... அவளுக்கா பேசச் சொல்லிக் கொடுக்க வேண்டும்...

“ஆனா, எனக்கு ஒரு விசயம் மட்டும் புரியல... உங்க பொண்ணுக்குத்தான் பிரச்சனை... அதைக் கூடப் பெரிதாக நினைக்காமல்... அவர் பொண்ணு கேட்டு வந்து நிற்கிறார் என்றால்... நீங்கதான் அவர் காலில் விழுந்து கும்பிடணும்... மூலையில் உட்காரப் போற பொண்ணுக்கு வாழ்க்கை கொடுக்க முன் வந்திருக்கிறார் என்று.... நியாயமாப் பார்த்தால், பாரு அம்மாவுக்குத்தான் இது பெரிய கவலை... அவங்களே பையனோட விருப்பம்னு இங்க வந்துருக் காங்க... ஆனா... நீங்க எல்லாம்.... என்ன மரியாதை செஞ் சீங்க...” என்றவள்,

“இவன் என்னவோ என்னைப் பெரிய டாக்டர் கிட்ட காட்டி.... என் உயிரைக் காப்பாத்துனான்னு தலையில தூக்கி வச்சு ஆடறீங்க... போன வருசம் இவன் நம்ம ஸ்னோ பாப்பா பிறந்த நாள் விழால பண்ணினதெல்லாம் தெரியாமல்...”



என்றபோது அவள் குற்றம் சாட்டியவன்... அவளின் வார்த் தைகளை மட்டுமே கேட்டான். அவன் கண்கள் மூடி இருந் தன.

“இவன் பணம் மட்டும்தான் கொடுத்தான்....” என்று ஏளனமாக இதழ்களை வளைத்தவள்,

“இவர் எனக்கு வாழ்க்கையே கொடுக்கிறேன் என் கிறார். யாருப்பா உங்களுக்குப் பெருசு...?” என்று கேட்ட போது...

அதற்கு மேல் அங்கு நிற்கும் சக்தி இன்றி விஜய் வெளியேறத் தொடங்க...

“விஜய் அத்தான்... நில்லுங்க!” என்று அவன் முன் வந்தாள். “நீங்க எதுக்குப் போறீங்க... நீங்கதானே இங்க நாட்டாமை....” என்று போன அவனையும் நிறுத்தியபடி...

தீபனை வெறித்துப் பார்த்தாள்...

தன் அண்ணனா இவன்... இல்லையில்லை... தன் முன் நிற்கும் விஜயேந்தரின் தங்கையின் கணவன்... பணக்கார வீட்டு மாப்பிள்ளை... அதுதான் இந்த ஆணவம்... என்று நினைக்கும் போதே ராதா தங்கள் வீட்டுக்கு வருவதற்கு முன் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கை ஞாபகம் வர...

இன்றைய நிலைமையை நினைத்தவளுக்குக் கண்களில் கண்ணீர் அவளை மீறி வழிய...

தன் அண்ணனை நோக்கி, “என் அண்ணன், தீபன் எங்கடா போயிட்டான்... நீ இவனோட பணத்துக்கு விலை போயிட்டியாடா...? நீ பணக்கார வீட்டு மாப்பிள்ளையா ஆகிட்டடா. இவனுங்க உன்னை மாத்திட்டானுங்க. உன்னை மட்டும் இல்ல, நம்ம அம்மா, அப்பா...” என்றபோது விசும்ப ஆரம்பிக்க...

ராதா அவளிடம், "என்ன தீக்ஷா... இப்படிலாம் பேசு கிறாய்?" என்று அவளை அணைத்துப் பேச ஆரம்பிக்க...

"ச்சே.... என்னைத் தொடாத... எல்லாம் உன்னால தான். எங்க வீட்டுக்குள்ள நீ என்னைக்குக் காலடி எடுத்து வச்சியோ அன்னைக்கே எங்க குடும்ப நிம்மதி எல்லாம் போச்சு... என் அண்ணா... எங்க வீடு... என் அம்மா, அப்பா... எல்லாத்தையும் உன் வசதிக்கு ஏற்றாற் போல மாத்திக்கிட்ட... என்னைய தனியா தவிக்க விட்டுட்ட... எல்லாமே உன்னாலதான்... உன் ஒருத்தியாலதான்... உன் காதலாலதான்..." என்று ஒருமையில் பேச ஆரம்பிக்க,

"தீக்ஷா!" என்று தீபன் அதட்ட,

விஜய் எதுவும் பேசவில்லை... அப்போதும் மௌன மாகவே இருந்தான்.

தன் அண்ணனின் நிலையைப் பார்த்த ராதா... இப்போது, "ஏய் யாரு... யாரை மாத்துனா...? உன்னாலதான் என் அண்ணா..." என்று ஆரம்பிக்க...

ராதாவைப் பார்த்து விஜய், "ராதா!" என்று மட்டும் சொல்லி நிறுத்த...

ராதாவோ, "என்னால முடியலண்ணா..." என்று கேவியபடி அவனிடம் ஓடி வந்து அவனிடம் சாய்ந்து அழ ஆரம்பிக்க...

"ஏய், நீ எதுக்குடா அழற... அவ தெரிஞ்சா செய் கிறாள்..." என்றபடி தன் தங்கையைத் தேற்ற ஆரம்பிக்க,

தீக்ஷா அவர்கள் இருவரையும் பொறாமையுடன் பார்த் தாள்... அவர்களைப் பார்த்தபடியே... தீபனிடம், "பார்த்தி யாண்ணா... உனக்கு மட்டும் ஏன் அண்ணா, என் மேல பாசம் இல்லாமப் போச்சு. என்னைக்காவது ராதா அண்ணிய அவங்க அண்ணா மூணு பேரும் விட்டுக் கொடுத்திருக் காங்களா...?" என்ற போதே...



"உனக்குக் கூட ராதா அண்ணின்னா உயிர்தானே... அன்னைக்கு நம்ம குடும்பத்தையே அவமானப்படுத்தி அனுப் பியும்... அண்ணிய விட்டுப் பிரிந்திருக்க முடியாம தவிச்சேல... நல்லா இருங்க எல்லாரும்...." என்றபடி...

"இது இரண்டு வருசத்துக்கு முன்னால் பிருந்தாவனமா இருந்த நம்ம குடும்பம் இல்லை. இந்த வீடே... இதோ இங்க நிற்கிறானே இவனோட கோட்டை... இன்னைக்கு என் குடும்பமே இவன் கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிற்குது. இதுவரை நான் மட்டும் தனியாளா தவிச்சேன்... இன்னைக்கு என்னை நம்பி வந்த என் ஃப்ரெண்ட் குடும்பத்துக்கு என்னால் அவமானம்...

"எப்படிண்ணா மறந்த...? இவன் அன்னைக்கு என்னைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளினானே மறந்து போச்சா... அப்போ நாம என்ன வலி, வேதனை அனுபவிச் சோம்... இன்னைக்கு அதே காரியத்தை நீ சாரகேசுக்குப் பண்ணப் பார்த்தாயே அண்ணா...! இப்போ சொல்றேன், கேட்டுக்கோ. நான் இந்த வீட்டில் இத்தனை நாள் உங்க எல்லாருக்காகவும்தான் இருந்தேன்... இதை விட்டு எப்போதுடா போவோம்... என்று இருந்தேன்.... அதற்குக் கூட கொடுத்து வைக்கவில்லை எனக்கு...

"சரி. சாகும்வரை இங்கேயே ஒரு மூலையில் இருந்து விட்டு நிம்மதியாய்ப் போவோம் என்று நினைத்தேன்... அது கூட எனக்கு இந்த வீட்டில் இனி கிடைக்காது போல... இனி இங்க இருக்க மாட்டேன் நான்..." என்றபடி யார் பதிலையும் எதிர் பார்க்காமல் பார்வதியின் கையைப் பற்றியவள் கிளம்ப...

தீபன் அவள் பேச்சில் உறைந்து நிற்க...

விஜய்... வாய் திறந்து அவளிடம் கேட்டான். "நீ நிம்மதியா இருக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும், சொல். நான் செய்கிறேன்!" என்றபோது, அவன் முகம் கல்லாய் இறுகி இருக்க...

அவனைப் பார்த்து ஏளனமாய் இதழ்களைச் சுழித்தவள்... "என் விருப்பப்படி வாழ வேண்டும்... நிம்மதியா வாழ வேண்டும். எனக்கு அது இங்க கிடைக்கவில்லை, போதுமா...? என்னை இங்கிருந்து போக விடுங்க..." என்றவள், யாரையும் எதிர் பார்க்காமல் முன்னே நடக்க...

சாரகேஷ் அவள் அருகில் வர... அவனிடமிருந்து விலகிப் பார்வதியின் கையைப் பிடித்தபடி முன்னே போக...

சாரகேஷ் தன் அன்னையோடு சென்றபடி தன் காரில் ஏறினான்.

"தீக்ஷா, எங்கடி போற...? நான் சொல்றதைக் கேளுடி..." என்று ஜெயந்தி முன்னே வர... விஜய் அவரைத் தடுத்தபடி...

"அவ போகட்டும் அத்தை.... நிம்மதி வேண்டுமாம் அவளுக்கு... அவளோட நிம்மதி எதுன்னு அவளுக்குப் புரியாதா? அது புரியும்போது அவளே வருவா...!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

வெளியில் விளையாடிக் கொண்டிருந்த சுனந்தா, "அத்தை..." என்று ஓடி வர... சுனந்தாவைத் தீக்ஷாவிடம் விடாமல், விஜய் அவளைத் தூக்கிக் கொள்ள... இப்போது சுனந்தா...

"அத்தைகிட்ட போறேன்!" என்று அழ...

"அத்தை வந்துருவாடா..." என்ற போது விஜய்யே சுனந்தாவின் நிலையில்தான் இருந்தான் என்று சொல்ல வேண்டும்.

இப்போது.... தீக்ஷா சுனந்தாவைப் பார்க்க... சுனந்தாவின் மீதிருந்த பார்வை விஜய்யிடம் மாற... ஒரு நிமிடம் தயங்கியவள்...

அங்கிருந்து போக மறுத்த தன் மனதை அடக்கியபடி காரின் அருகே சென்று ஏறினாள் தீக்ஷா.



அவள் போகும்வரை வாசலிலே நின்ற விஜய்... சாரகேஷ் கார் அவன் கண்ணை விட்டு அகல.... விஜய் தன் மனதோடு மன்றாடத் தொடங்கியவன்... அங்கிருந்து நகர்ந்து உள்ளே வந்தவன்... தீக்ஷாவின் புகைப்படத்தின் அருகில் போய் நின்று வெறிக்க ஆரம்பித்தான்.

தீபனோ, "எல்லாமே விஜய்யினால்தான். அவன் பிடிவாதத்தால்தான் இன்று... தீக்ஷா வீட்டை விட்டு வெளியேறும் நிலைக்கு வந்திருக்கறாள்..." என்று கோப முகத்தோடு... விஜய்யை நெருங்கினான்.

## 17

**தீ**க்ஷாவின் புகைப்படத்தின் முன் நின்ற விஜய்யின் அருகில் கோபத்தோடு வந்தான் தீபன்.

ஆனால் அவன் முகத்தைப் பார்த்தவனுக்கு... வந்த கோபம் எல்லாம் போய் விட... இப்போது தீபனுக்கும் கண்கள் கலங்கின.

விஜய் தன் கண்ணீரை... அவமானத்தைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருந்தது, அவன் கண்களிலேயே தெரிந்தது. யாரையும் அவன் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை... பார்க்கவும் விரும்பவில்லை... அவன் அடக்கிய கோபமும்... துக்கமும்... வருத்தமும்... அவமானமும் அவன் கண்களில் சிவப்பைக் கொண்டு வர... அதை எல்லாம்... அந்தப் புகைப்படத்தினுள் சிரித்துக் கொண்டிருந்த தீக்ஷாவின் புன்னகையில் கரைத்து விடும் ஒரே எண்ணத்தில் இருந்தான். ஆனால் அவனைச் சுற்றி இருந்த மற்றவர்கள் யாரும்தான் விடவில்லை...

தீபன் அவன் நிலையைத் தாங்க முடியாமல்.... கோபத்தைக் காட்டுவதற்குப் பதில்... அவனிடம் மன்றாட ஆரம்பித்தான்...

"இந்த போட்டோவைப் பார்த்துட்டே வாழ்க்கையை ஓட்டிடலாம்னு முடிவெடுத்துட்டீங்களா, விஜய்...? இதுக்கு மேல நான் அமைதியா இருந்தேன் என்றால்... என் தங்கை..." என்றபோதே, தீபனைப் போலவே, மற்ற அனைவரும் ஆளாளுக்குப் பேச ஆரம்பிக்க...

விஜய் தீபனிடம் கைகாட்டி நிறுத்தினான்... ஆனால் யார் முகத்தையும் பார்க்காமல்... புகைப்படத்தில் இருந்த தீக்ஷாவைப் பார்த்தபடியே, "யாரும் எதுவும் பேச வேண்டாம்.. இப்போ நடந்த விசயத்தில் என்னை விட அதிகமா வேற யாருக்கும் துக்கம் இல்லை... அவமானமும் இல்லை... அதனால... அவங்கவங்க வேலையைப் பாருங்க... இது எனக்கும் அவளுக்கும் இடையிலான வாழ்க்கைப் போராட்டம்... அதன் அடுத்த கட்டச் சோதனை... இதிலும் நாங்க ரெண்டு பேரும் ஜெயிப்போம்... அவ போகட்டும்..." என்றவன் சுரேந்தரை மட்டும் பார்த்துச் சொன்னான்.

"அந்தச் சாரகேஷ் பாவம்டா... ஏற்கெனவே இவகிட்ட லவ் லெட்டர் கொடுத்து ஏமாந்திருக்கான்... இப்போ மறுபடியும் ஏமாறப் போகிறான். அந்த வருத்தம்தான் எனக்கு... அவ தனியா இருந்தாலே அவ மனசு என்னை நினைத்து ஏங்க ஆரம்பிச்சுரும்... அது அவனுக்கே கொஞ்ச நேரத்தில் தெரிஞ்சுரும்... அவனே கொண்டு வந்து விடுவான்.... அவன் டாக்டர்ங்கிறதினால் அவளோட நிலை அவனுக்குப் புரியும்... ஏதாவது ஆனால் கூட அவன் பார்த்துக் கொள்வான்..."

சற்று நிறுத்திய விஜய்... "அவன்கிட்ட நானே பேசணும்னு இருந்தேன்... அதுக்குள்ள இப்படி நடந்துருச்சு!" என்று அவன் சொன்னபோது அவனை வருத்தமாக, அதே நேரத்தில் அவன் சொல்வதும் உண்மைதான் என்பது போல்...

அவனை ஒட்டு மொத்தக் குடும்பமும்... அவனையே கலக்கத்துடன் பார்க்க...



அவர்கள் அனைவரும் பார்ப்பதை உணர்ந்தவன், "இன்னைக்குச் சாயங்காலமே திரும்பி வருவா..." என்றபடி, "நான் கிளம்புறேன்!" என்றபோது,

சுரேந்தர் அவன் கைகளைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்... அவன் கைகளைப் பிடித்த சுரேந்தர்... விஜய்யின் கைகளின் நடுக்கம் உணர...

"அண்ணா... ப்ளீஸ்! இப்போ வெளியே போக வேண்டாம்... நீங்க ரொம்ப டிஸ்டர்பா இருக்கீங்க..." என்ற போது...

"நான் ஏன்டா டென்சனா இருக்கணும்...? என்னை விடுடா. நான் டென்சனாலாம் இல்லைடா... என்னைப் புரிஞ்சுக்கோ!" என்றவனை...

"தீக்ஷா கிட்ட உண்மையைச் சொல்லிடலாம், அண்ணா... சத்தியமா தீக்ஷா புரிஞ்சுப்பா...."

"என்னது, புரிஞ்சுப்பாளா...?" என்றவன்..."இவன்தான் உன் புருசன்னு நீங்க எல்லாரும் அடையாளம் காட்டி... என்னோட வாழ வைக்கப் போறீங்களா...?

"அது சரி... இவன் உன் புருசன்னு அடையாளம் காட்டுவீங்க... அவளும் புரிஞ்சுப்பாதான்... ஆனா அவளோட 'இந்தர்'னு உங்க யாராலாவது உணர வைக்க முடியுமா...? சொல்லுங்க... என்னை அவளோட 'இந்தர்'னு இங்க நிற்கிறவங்க ஒருத்தங்களால உணர வைக்க முடியுமா...? அது முடியும்னா... தாராளமாச் சொல்லுங்க..." என்று அத்தனை பேரையும் நோக்கி ஆக்ரோசமாய்க் கேள்வி கேட்டவன்... சற்று அமைதியாகி,

"முடியாதுல... அது என்னால மட்டும்தானே முடியும். அப்போ யாரும் பேசக்கூடாது..." என்றபடி ஹாலில் இருந்த அனைவரின் மேலும் பார்வையைச் சுழல விட்டவன்...

"என்ன இங்க நடந்துருச்சுனு... இப்படி இருக்கீங்க... அவ வருவா... வரும்போது அவகிட்ட இங்க யாராவது ஏதாவது சொன்னீங்க..." என்று எச்சரித்தபடி,

"போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க...." என்று அவர்களைத் தாண்டிப் போனவன் நேற்று இரவும் சாப்பிட வில்லை... காலையிலும் சாப்பிடவில்லை என்பதால் சற்றுத் தள்ளாட.... அதைப் பார்த்த சுரேந்தர்... ராதாவுக்குச் சமிக்ஞை செய்ய... அவளும் அதைப் புரிந்து கொண்டு உள்ளே சென்றாள்.

"அண்ணா ப்ளீஸ் ... இங்கேயே இருங்கண்ணா!" என்று சுரேந்தர் அவன் முன் கெஞ்சினான்.

"நான் என் ரூமுக்குப் போகணும்டா.... இங்க எல்லாரும் என்னைப் பரிதாபமாப் பார்த்தே கொல்றீங்கடா...." என்றபோதே அவன் குரலில் பிசிறடிக்க ஆரம்பித்து இருந்தது.

ஒரு புறம் ஜெயந்தி தீக்ஷாவின் புகைப்படம் முன் அழுது கொண்டிருக்க... அவர் முன் வந்தான் விஜய்.

"ஒரு விசயம் நடக்கணும்னு இருந்தால் அது கண்டிப்பா நடக்கும் அத்தை.., அவளுக்கு உடம்பு சரியில்லைன்னு கூசாம... அவ மனசு என்ன பாடுபடும்னு உணராம சொன்னீங்களே அத்தை... நீங்க சொல்லியும் இப்போ நடந்ததைத் தடுத்து நிறுத்த முடிஞ்சுதா...?" என்று கேள்வி களாலும்.... பார்வைகளாலும் ஜெயந்தியைக் குதறியவன்....

"ஆனால் என்னோட மனசு அவளை... என்கிட்ட கொண்டு வந்து சேர்க்கும், அத்தை...!" என்றபோதே கலைச்செல்வி....

"நல்ல காதல்டா... உன்னை இப்படிப் பைத்தியக் காரனா சுத்த வைக்கப் போகுதுன்னு முன்னாடியே தெரிஞ்சிருந்தா.... தீக்ஷாவை நம்ம வீட்டு மருமகளா எடுக்க



லாம்னு கேட்டு உன் முன்னாடியே நின்னுருக்க மாட்டேன்டா!" என்று அழ ஆரம்பிக்க...

"ச்சே... ஆளாளுக்கு அழுது என்னைக் கொல்றீங்க... என்னை விட்டுத் தொலைங்க..." என்று வேகமாய் வெளியேற,

அப்போது.... ராதா கையில் பால் டம்ளருடன் வந்தாள்.

"அண்ணா! இதைக் குடிங்க... அதுக்கப்புறம் போக லாம்..." என்றபோதே....

அவள் கை நடுங்க... அதைப் பார்த்தவன், அவளின் செயலைப் புரிந்தவன் போல்...

நக்கலாய் ஒரு பார்வை பார்த்தவன்... பின் அவள் கொண்டு வந்த அந்தக் குவளையைத் தட்டி விட்டான்.

"அதுல மாத்திரையைப் போட்டுருக்கதானே... இதுக்குப் பயந்துட்டுத்தானே உங்க கையால சாப்பிடாமல்... ரொம்ப நாளா காத்தமுத்து, முருகேசன் கொண்டு வருகிற சாப்பாட்டைச் சாப்பிட்டு வந்தேன்... மறுபடியும் அந்த வேலையை ஆரம்பிக்க வேண்டுமா?" என்று உறுமிய வனை... அத்தனை பேரும் பரிதாபமாய்ப் பார்க்க...

"ஏன் இப்படிப் பார்க்கிறீங்க.. நான் பைத்தியம்லாம் இல்லை... எனக்கு என் தீக்..." என்று ஆரம்பித்தவன் நிறுத்தி விட்டு... புகைப்படத்தைக் காட்டியவன்,

"இதோ சிரிச்சுட்டே இருக்காள்ல... அவ நினைப்புதான் எனக்கு இன்னைக்கு ஆறுதல்... மறக்க வச்சு தூங்க வச்சுடாதீங்க," என்றபடி கதவின் அருகில் சென்று....

"யாராவது பார்வதி வீட்டுக்குப் போய் அவளைப் பார்க்கணும்னுலாம் நினைக்காதீங்க... இன்னைக்கே வருவா அவ... எனக்கு அது தெரியும்... என் காதல் மேல அத்தனை நம்பிக்கை எனக்கு... அவளுக்கும்தான்... என்னை ஏமாத்த

மாட்டா. அது உங்க எல்லாருக்கும் தெரியும்... பார்த்தவங்க தானே நீங்கள்லாம்... அப்புறம் ஏன் ஃபீல் பண்றீங்க...?

"இந்த சாரகேஷ்லாம் அவளுக்குத் தூசு... நானே கொஞ்சம் தடுமாறினேன்தான், சாரகேஷைப் பார்த்து. இன்னிக்கு அவ என்னைத் திரும்பிப் பார்த்தாள்ல... அதுவே அவ மனசு என்னை விட்டு எங்கேயும் போகாதுன்னு சொல்லிருச்சு... வருவா..." என்று வழக்கமாய்ப் பேசும் ஒற்றை வரி வார்த்தைகளை எல்லாம் விட்டு விட்டு... அவன் மனைவி தீக்ஷா போல் பக்கம் பக்கமாய்ப் பேசி விட்டு... வெளியே கிளம்ப... குடும்பத்தில் உள்ள மற்ற அனைவரும் வழக்கம் போல் வாயடைத்து நின்றனர்.

சுரேந்தர் மட்டும் தன் காரை எடுத்துக் கொண்டு.... அவனைத் தொடர்ந்தபடி போக ஆரம்பித்தான்.

**தீ**க்ஷா காரில் அமைதியாக வர... பார்வதி அவளுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே வந்தாள். அவளுடன் பேசிக் கொண்டிருந்தாலும் அவளின் எண்ணம் தாய், தந்தை... தன் அண்ணா, அண்ணி, சுனந்தா என அவர்களைச் சுற்றியே இருக்க.... ஒரு வேகத்தில் அவர்களை எல்லாம் விட்டு வந்து விட்டோமே... அண்ணியை வேறு மரியாதை இல்லாமல் பேசி... 'ச்சே!' என்று தன்னைத் தானே நொந்து கொண்டும்... மனம் முழுக்கத் துக்கப்பட்டும் வந்து கொண்டிருந்தவளுக்கு... தன் அண்ணி ராதாவைப் பாசத்துடன் அணைத்திருந்த விஜய்யும் ஞாபகம் வர... ராதா மேல் மிகவும் பாசம் கொண்டவன்தான் விஜய்.... ஆனால் சற்று விலகியே நிற்பான்...

இன்று அவனின் மார்பில் சாய்ந்து அழுத ராதாவை நினைத்துப் பார்த்தவளுக்கு... அதுவே கண்களில் நிற்க... இப்போது விஜய்யின் முகம் மனக் கண்ணில் தோன்ற... பார்வதியுடன் பேசுவதை நிறுத்தியபடி... தனக்குள் சுழலத் தொடங்க ஆரம்பித்தாள்.



அவளின் முக மாற்றத்தை உணர்ந்த பார்வதி அவள் முகத்தைத் தன்புறம் திருப்பிப் பேச ஆரம்பிக்க... தீக்ஷாவும் ஏதோ பேசுகிறேன் என்ற பேருக்கு... அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டு வந்தாள்.

சாரகேஷ் மனமோ... கொஞ்சம் அவசரப்பட்டு விட்டோமோ என்று தோன்ற... இன்னொன்றும் தோன்றியது.... தீக்ஷா அவனை விரும்பி வீட்டை விட்டு வெளியில் வரவில்லை... தன்னை... அவள் தோழியின் அண்ணனை அவமானப்படுத்தி விட்டார்கள்... என்ற கோபத்தில் வீட்டை விட்டு வெளியேறி வந்திருக்கிறாள் என்பதும் புரியாமல் இல்லை.

தேவகியோ தன் பிள்ளைகள் இருவர் மீதும் கடுங் கோபத்தில் வந்து கொண்டிருந்தார்... கார் வீட்டு வாசலில் நின்ற போது... யாரிடமும் எதுவும் பேசாமல் உள்ளே நுழையும் போதே.... அவர் பெற்ற பிள்ளைகள் இருவரும் அன்னையின் கோபம் உணராமல் இல்லை... பார்வதி தன் அன்னையின் கோபத்தில் தயக்கமாய்த் தன் அண்ணனைப் பார்க்க...

அதைப் பார்த்த சாரகேஷ், பார்வதியிடம்... "நான் அம்மாவைப் பார்த்துக் கொள்கிறேன்... நீ தீக்ஷாவை உள்ளே கூட்டிட்டுப் போ!" என்று வேகமாய் உள்ளே நுழைந்தான்.

தீக்ஷா இதை எல்லாம் கவனிக்கும் எண்ணத்திலே இல்லை. உள்ளே அழைத்த தன் தோழியிடம் எதுவும் பேசாமலே உள்ளே சென்றாள்... அவள் நினைவுகள் எல்லாம் இங்கேயே இல்லை. தன் வீட்டிலேயே இருக்க... தன்னை யாருமே ஏன் தடுக்கவில்லை... தடுக்க வந்த தன் அம்மாவையும் ஏதோ சொல்லி நிறுத்தி விட்டானே என்ற இடத்தில் இருக்க.... தீக்ஷாவுக்கு விஜய்யோடு முதன் முதலில் பேசிய விதம் ஞாபகத்துக்கு வர... அந்த எண்ணத்திலேயே

உள்ளே சென்றவளைப் பார்வதி, அவளது அறையினுள் அமர வைத்துவிட்டுத் தன் அண்ணனையும் அம்மாவையும் பார்க்கச் சென்றாள்.

அங்கு சாரகேஷ், தேவகியிடம், "அம்மா! உங்க கோபம் புரியுதும்மா... நான் அவசரப்பட்டு விட்டேன்தான்... என்னைச் சுத்திச் சுத்தி வந்து ஒரு பொண்ணு விரும்பறேன்னு சொன்னப்ப கூட.... நான் தடுமாறாமல்... தங்கைக்காக... நம் குடும்பத்துக்காக... நீங்க சொல்ற பொண்ணைத் திருமணம் செய்து... பார்வதிக்கு அண்ணா ஸ்தானத்தில் மட்டும் இல்லாமல் அப்பா ஸ்தானத்திலயும் இருந்து... அவளை ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க வேண்டு மென்று... நினச்சுருந்தேன்மா....

"ஆனால் இன்னைக்கு அவசரப்பட்டுத் தீக்ஷா வீட்ல பிரச்சனை பண்ணி... நான் எதையுமே யோசிக்காமல்... ச்சே... ஒரு தங்கைக்கு அண்ணனா இருந்தும் தப்பு பண்ணிட்டேன்மா...!" என்று கலங்க....

அப்போது பார்வதியும் உள்ளே வந்தாள்.

"அய்யோ சாரகேஷ்.... அம்மாவுக்கு அந்தப் பொண்ணு வந்ததுலாம் கோபம் இல்லைடா... நீ அந்தப் பொண்ணுக்காக இவ்ளோ பேசியும் அந்தப் பொண்ணு உன்னை விரும்பி வரலையேங்கிற ஆத்திரம்தான்டா எனக்கு... உன்னை விரும்பறேன்னு ஒரு வார்த்தை சொல்லலைடா, அந்தப் பொண்ணு... அதுதான்டா எனக்குக் கவலை..." என்றபோது...

பார்வதி, "அம்மா... இந்தப் பிரச்சனையைப் பற்றி அப்புறம் பேசலாமே..."

"அண்ணா... அம்மா உன்கிட்ட பிரச்சனை பண்றாங் களானு பார்க்க வந்தேன்.... அம்மாகிட்ட பேசிட்டு சீக்கிரம் வா... தீக்ஷா தனியா இருக்கா... அவளைத் தனியா விட



மாட்டாங்க அவங்க வீட்ல...." என்று மீண்டும் தன் அறைக் குள் நுழைய.... அங்கு முழங்காலில் முகத்தைப் புதைத்த படி.... குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள் தீக்ஷா.

பதறிப் போன பார்வதி.... "தீக்ஷா தீக்ஷா..." என்று அவள் அருகில் அமர.....

"நான் தப்புப் பண்ணிட்டேன், பாரு... தப்பு பண்ணிட்டேன்... யாரைப் பற்றியும் யோசிக்காமல் வீட்டை விட்டு வந்துட்டேனே... என்னை யாருமே ஏன்டி தடுத்து நிறுத்தலை...? நான் தேவை இல்லைன்னு நினைச்சுட் டாங்களா...? நீ இப்படிப் பண்ணியிருந்தா உங்க அம்மா உன்னை இந்த மாதிரி விட்டுருப்பாங்களா, பார்வதி...?" என்றவள் விசும்பலுடன்,

"என் அம்மா தடுத்து நிறுத்த வந்தாங்கடி... அவன் ஏதோ சொல்லி நிறுத்தி வச்சுட்டான், பாரு... என்னைப் பழி வாங்கிட்டான்... நான் அவன் தங்கச்சியை ஒரு நாள் கேவலப் படுத்திப் பேசினேன்... ரொம்பத் திமிராச் சொன்னேன்... காதலிச்சவனுக்காகக் குடும்பத்தையெல்லாம் தூக்கி எறியுற அளவுக்கு எங்க வீட்ல என்னை வளர்க்கலேனு சொன்னேன்டி... இன்னைக்கு நானே..." என்றவள்... இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தவள்...

"என்னைப் பழி வாங்கிட்டான்டி...." என்று தோழியின் மடியில் முகம் புதைத்து அழுதவள்... பின் தானாகவே... சமா தானப்படுத்தியவளாய்த் தன் கண்களைத் துடைத்தபடி...

"வீட்டுக்குப் போகணும் பார்வதி... ஏதோ ஒரு வேகத்தில் வந்துட்டேன்... உன் அண்ணனை அவமானப் படுத்திட்டாங் கன்னு.... ஆனா அவர் மேல எனக்கு வேற எந்த எண்ணமும் இல்லை, பாரு... ஆனாலும் எங்க வீட்டை விட்டு என்னால இருக்க முடியலை. அண்ணாகிட்ட ரொம்ப பேசிட்டேன்... அண்ணியையும்.... அவங்க எவ்வளவு நல்லவங்க

தெரியுமா...?" என்று சொல்ல, பார்வதி அதிர்ந்து அவளைப் பார்க்க...

அப்போது சாரகேஷும், தேவகியும் உள்ளே வர... அவள் தன் அண்ணனைப் பார்க்க....

அவன் தீக்ஷாவிடம்... அவளைப் புரிந்தவனாய்... "தீக்ஷா... எனக்குத் தெரியும்... உனக்கு என் மேல எந்த ஈடுபாடும் இல்லைன்னும் புரியுது... நீ எதை நினைத்தும் குழம்பாதே..." என்றவனிடம் கை கூப்பினாள் தீக்ஷா.

"ரொம்ப நன்றி... என்னைப் புரிஞ்சுக்கிட்டதுக்கு... பாரு அண்ணா... நீங்க எப்போதுமே என் மேல அக்கறையாத் தான் இருக்கீங்க... இருந்துருக்கீங்க... ஆனா.... ஏன்னு தெரியலை... அன்னைக்கும் நீங்க சொன்னப்ப என்னால ஏத்துக்க முடியலை... இன்னைக்கு என் வீட்டுக்கே வந்து பொண்ணு கேட்கும்போது அதை ஏற்க முடியவில்லை... அன்று முடிவெடுக்கத் தைரியம் இல்லை... இன்று முடிவெடுக்கத் தகுதியில்லை..." என்று சொன்னவள்...

"வீட்ல எல்லாரும் உங்களை அவமானப்படுத்தின துக்கு... சாரி, பாரு அண்ணா..." என்று சொல்லிச் சற்றுத் தடுமாறியவளாய்... தேவகியைப் பார்த்தவள்...

"உங்க பையன் என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்லியும்... நான் மறுத்ததுக்கு சாரிம்மா!" என்றபடி தேவகியிடமும் சாரி கேட்க,

தேவகி எதுவும் பேசாமல் சென்று விட்டார். தன் மகனை வேண்டாம் என்று சொன்னதாலோ என்னவோ... அவளுக்குத் தீக்ஷா மேல் கொஞ்சம் கோபம் வேறு வர.... அங்கு நிற்காமல் போய் விட்டார்.

பார்வதிக்குத்தான் இப்போது தீக்ஷா மேல் கோபம் கோபமாய் வந்தது...



"அந்த ராகேஷ்க்குத்தான் உன்னைப் பிடிக்கலை... அதனால் உனக்கும் அவனைப் பிடிக்கவில்லை... என் அண்ணன் மேலயும் உனக்கு ஏன்டி காதல் வரலை...? தைரியம் இல்லை, தகுதி இல்லைன்னு டயலாக் மட்டும் பேசுற... உனக்கு என்ன தகுதி இல்லை... அது எல்லாம் இருக்கு...!" என்று எரிந்து விழ...

தீக்ஷா அவளுக்குப் புரிய வைக்கும் விதமாய்,

"ராகேசுக்கு.... என்னை ஏன் பிடிக்கலைன்னா.. அவங்க வீட்டுக்குத் தெரியாமல்... அவன் வேறொரு பொண்ணை மேரேஜ் பண்ணிட்டான்டி... இந்தியாவுக்கு மீண்டும் வந்ததே அந்தப் பொண்ணைக் கூட்டிக்கிட்டுப் போகத் தான்... அது கூட அவன் லெட்டர்ல எழுதி இருந்ததனால் எனக்குத் தெரிஞ்சது..." என்றவள்... நிமிர்ந்து உட்கார்ந்து... முகம் மலர்ந்தவளாய்த் தன்னை மீறிப் பேச ஆரம்பித்தாள்.

"நான் கதவைத் திறக்காமல் இந்த நிச்சயத்தை... அவனோட நடக்க இருந்த திருமணத்தை எப்படி நிறுத்தலாம்னு யோசனையில் இருக்கும்போது... ராகேஷோட லெட்டர் பார்த்து, எவ்ளோ சந்தோசப்பட்டேன் தெரியுமா...? சந்தோசத்தில் குத்தாட்டம் போடாத குறையா உட்கார்ந் திருக்கேன்... ராகேஷ் போய்ட்டான்னு நான் ஏதாவது செய்து கிட்டேனானு எங்க வீட்ல அத்தனை பேரும் பயந்துட்டாங்க, தெரியுமா!" என்று கலகலப்பாகச் சிரிக்க ஆரம்பித்தவளை...

சற்று முன் கவலையோடு இருந்தவளா இவள்.... என்று பார்வதி வித்தியாசமாய்ப் பார்க்க... சாரகேஷ் அவ ளுடைய முக மாறுதல்களைக் கவனித்துக் கொண்டே இருந்தான்.

ராகேஷுடனான நிச்சயம் அன்றுதான் அவள் வாழ்க்கையின் முக்கியத் திருப்பம் நடந்திருக்கிறது... அதை அவள் மறந்து விட்டாள்... என்பது இருவருக்கும் புரிய, அவள் பேச்சில் இன்னும் கூர்மையாகக் கவனம் வைத்தனர்.

தீக்ஷாவோ அவர்களை எல்லாம் பார்க்காமல் பேசிக் கொண்டே போனாள்...

"எல்லாருக்கும் மேல என் இந்தர்... நானே அவனை நினைச்சுக்கிட்டு... அவனை எப்படிச் சம்மதிக்க வைக்கிற துன்னு... யோசிச்சுகிட்டு இருக்கேன்... நான் செத்துக் கித்துப் போயிடுவேனோனு தலைவர் பயந்து... பால்கனி வழியா ஏறி என்னைக் காப்பாத்த வந்தாரு...." என்று நிறுத்தியவள்...

உதடுகள் துடிக்க, சற்று முன் இருந்த சந்தோசம் மாறி.... எங்கோ பார்த்தவளாய்,

"ஆனால் என் இந்தரை ஏன் யாரும் காப்பாற்ற வில்லை...? அவர் ஏன் எனக்காக வாழணும்னு நினைக்கலை? என்னை விட்டு ஏன் போனாரு...? அவர் இல்லாமல் நான் இருக்க மாட்டேனு அவருக்குத் தெரியும்... நான் ராகேஷ் கூட சந்தோசமா வாழ்ந்தா போதும்னு... என் மனசு கஷ்டப் படக் கூடாதுன்னு... அவர் என்னைக் காதலித்ததையே மறைச்சு வச்சுருந்தவர்..." என்று சொல்லும் போதே... அவள் வார்த்தைகள் நின்று... விழிகள் செருகி... பார்வதி மேலேயே மீண்டும் சரியத் தொடங்கினாள்.

"அண்ணா, ஏதாவது பண்ணுண்ணா...!" என்ற பார்வதி படபடப்பும், கலவரமும் ஆக...

சாரகேஷ் மருத்துவனாய் மாறி அவளுக்கான மருத்துவ முறையை மேற்கொண்டவன்... அவளை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வோமா... இல்லை... ஒரு அரை மணி நேரம் பார்ப்போமா... என்று யோசித்தபடி இருக்க...

பார்வதி அழுது கொண்டிருந்தாள்...

"அண்ணா.... இவ இப்படிப் பேசுறாண்ணா... விஜய்யை இவ லவ் பண்ணினாளா...? ஏதேதோ சொல்கிறாளே...!" என்று துடித்தவள்...



தன் தோழியின் மன நிலை இந்த அளவு மோசமாய்ப் பாதிக்கப்பட்டதன் காரணம் என்னவாக இருக்கும் என்று மறுக ஆரம்பித்துக் கொண்டிருந்தாள்....

'விஜய் மேல் இந்த அளவு காதலா இவளுக்கு...! அவருக்கும்தான்... இன்று இவள் பின்னால் நிழலாகத் தொடரும் விஜய்யை நினைத்துப் பார்த்த பார்வதிக்குப் பாவமாக இருந்தது... இருவருக்கும் திருமணம் கூட ஆகி விட்டது போல.... தீக்ஷாதான் எல்லாவற்றையும் மறந்து விட்டாள் போல... தோழியைப் பார்த்த பார்வதிக்கு அழுகை இன்னும் வர...

'எப்படி இருந்தவள்... தான் யார்.... தனக்கு நடந்தது என்ன என்று கூட அறியாமல் வாழும் வாழ்க்கையை நினைத்து மனம் தாங்கவில்லை... இவளிடம் ஏன் மறைக் கிறார்கள்... ஏதாவது காரணம் இருக்குமோ... இன்று தாங்கள் வேறு குட்டையைக் குழப்பி வந்து விட்டோமே என்றெல்லாம் யோசித்தவள்... விஜய்க்கு உடனே போன் செய்ய வேண்டும்... இதற்கு மேல் தாமதிக்கக் கூடாது என்று முடிவெடுத்தவளாய்... வேகமாய்ப் போனை எடுத்து விஜய்க்குப் போன் செய்ய ஆரம்பிக்கவும்... அவர்கள் வீட்டு அழைப்பு மணி அடிக்கவும் சரியாக இருக்க...

போன் செய்வதை நிறுத்திவிட்டு... கதவைத் திறக்கப் போனாள் பார்வதி.

**அ**தே நேரம் வேகமாய்க் காரை ஓட்டி வந்த விஜய்... தன் வீட்டின் கார் ஷெட்டில் நிறுத்தியவன்... அதே வேகத்தில் இறங்கியவன்... அருகில் இருந்த ஸ்கூட்டியைப் பார்க்க... வேகம் தானாகவே மட்டுப்பட்டது. அதன் அருகே வந்தவன்... அதைப் பார்த்தபடியே இருந்தான் சில நிமிடங்கள்....

அதில் இருந்த 'தீக்ஷா – விஜய்' என்ற வார்த்தைகள் அவனைப் பார்த்து அழகாய்ப் புன்னகைக்கக் குனிந்து... தன்

மனைவியின் பெயர் இருந்த இடத்தில் தன் இதழ்களைப் பதித் தான்... தன் மனைவியைப் போல...

அதற்கு மேல் அவனால் அங்கு நிற்க முடியவில்லை... வேக வேகமாய் அடியெடுத்து வைத்து... தன் அறைக்குள் நுழைந்தவன்... அங்கு தன்னோடு புன்முறுவலாய் இணைந்து சிரித்துக் கொண்டிருந்த தீக்ஷாவைப் பார்த்த வனுக்கு.... அதற்கு மேல் தன் வேதனையை மறைத்து வைக்க முடியவில்லை... அவள் நிழலை நோக்கி....

"ஏன்டி, என்னை விட்டுட்டுப் போன...? எல்லாத்தையும் விளையாட்டா நினைப்பியேடி... என் காதலை மட்டும் ஏன்டி உன் உயிரா நினைச்ச... அப்படி என்னடி என் மேல உனக்குக் காதல்..." என்றபடி குலுங்கி அழ ஆரம்பித்தவனை அவன் மனைவியின் நிழலால் நிறுத்த முடியுமா என்ன!

அவன் அழுவதைச் சிரித்தபடி பார்த்துக் கொண்டி ருந்தாள் தீக்ஷா விஜயேந்தர்.

தானும் அவளும் சந்தோசமாய்க் கழித்திருந்த அந்த அறையில்... தன்னை மட்டும் தனியே..... கண்ணீரில் தவிக்க விட்டுப் போனவளை நினைத்து.... கண்ணீர் விட ஆரம்பித் தவன்... சற்று நேரத்தில்,

"நான் அழ மாட்டேன்டி.... நீ அழாம என்னைத் தவிக்க விட்டேல... உன் இந்தர் அழ மாட்டேன்டி..." என்று தனக்குத் தானே புலம்பியவனாய்....

தனது அறையில் தீக்ஷாவும்... அவனுமாய் இருந்த புகைப்படத்தில்... தன் நிழலின் மேல் சாய்ந்து... தன் நிஜத்தை அவள் நிழலோடு இணைத்துச் சில நிமிடங்கள் நின்றவன்...

தன் எதிரே அவள் மட்டும் இருந்த புகைப்படத்தில் கண் ந்தான்... அவள் கண்ணோடு கலந்த அவன்... அவ கும் அவளுக்குமான கடந்த காலத்தில் தன்னைத் லத்து.... அதனோடும் கலக்க... அவன் நினைவுகள்...



அவனை அவனின் முந்தைய இரண்டு வருடத்திற்கு இழுத்துச் சென்றன.

பணம் படைத்தவர்கள் மட்டுமே கூடும் அந்த உயர்தர ஹோட்டலின்... பார் பகுதியில் விஜயேந்தர், சுரேந்தர் மற்றும் இளமாறன் மூவரும் ஒரு மேசையில் அமர்ந்திருந்தனர்.

இளமாறன்.... நாலாவது ரவுண்டின் ஆரம்பத்தில் இருக்க... அந்த மது இருந்த கண்ணாடி க்ளாசைத் தனது வாய் அருகே கொண்டு சென்றவன்.... விஜய்யைப் பார்த்து, "விஜய், ப்ளீஸ்... நீ ஏன் இன்னைக்கு.... வேண்டாம் என்கிறாய்!"

சுரேந்தர் தன் அண்ணனோடே அவன் தொழிலிலேயே அவனுக்குத் துணையாகத் தோள் கொடுக்க ஆரம்பிக்க... தன் தம்பியோடு அடிக்கடி வெளியே வருவதால்... ஓரளவு இந்தப் பழக்கங்களை எல்லாம் குறைக்க ஆரம்பித் திருந்தான்.

விஜய் எதுவும் தொடாவிட்டால்... சுரேந்தரும் தொட மாட்டான் என்பதால்... தன் தம்பியோடு வரும்போது மட்டும் தவிர்த்து விடுவான்... ஆனால் இன்று மறுத்ததற்கு வேறொரு காரணம் இருந்தது...

"இல்ல இளா.... அம்மா என்கிட்ட பேசணும்னு சொன் னாங்க... அதனால்தான்... எல்லாம் ராதா விசயமாத்தான் இருக்கும்... சோ, அவங்க முன்னால் போதையில போய் நின்னு பேசுனா நல்லா இருக்குமா...? அதுதான்... நீ கண்டினியூ பண்ணு. இன்னொரு நாள் நான் கம்பெனி தருகிறேன்..." என்று சொல்ல...

இளா இப்போது சுரேந்தரைப் பார்க்க...

அவனும் வேண்டாம்... என்று மறுக்க... இளமாறன் குடிமகனாய்த் தன் வேலையில் கவனம் வைத்து அதை முடித்தவன்...

"ராதா எப்டிடா போயும் போயும் அந்தப் பையன் கிட்ட கவுந்தா...?" என்று சொல்லியவன்... "கம்ப்யூட்டர் க்ளாசுக்கு அனுப்புனா... சொல்லிக் கொடுத்த ஆளையே..." என்று போதை பாதி, எரிச்சல் பாதி எனப் பேச...

விஜய் உள்ளுக்குள் எரிந்தான், தன் தங்கை பண்ணிய காரியத்தை நினைத்து....

"அவள் மட்டும் வெளியில் எங்காவது அவனோடு சுற்றி யிருந்திருந்தால் ... விஜய்யிடம் மாட்டாமல் இருந்திருக்க மாட்டா... கம்ப்யூட்டர் கிளாஸ் போகிறேன் என்று... ச்சே..." என்று தனக்குள் மறுக ஆரம்பிக்க,

அப்போது வீட்டிலிருந்து போன் வர...

"இளா... அம்மாதான். நாங்க கிளம்புறோம்... நாளைக்கு எங்க வீட்டு மாப்பிள்ளையா உன்னைச் சந்திக் கிறேன்...." என்று சிரித்தபடி அவனிடம் சொல்லி விட்டு.... சுரேந்தரை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

மீண்டும் கால் வர... பார்த்தான்... அது அசோக்.

"சொல்லு... அந்தப் பொண்ணை உன் கண் பார்வையில வச்சுருக்கியா...!"

"நாளைக்கு ராதா பிடிவாதம் பிடித்தால்.... அந்தப் பையனின் குடும்பத்தினை வைத்துத்தான்.... அவனின் தங்கையை வைத்துத்தான் ராதாவை வழிக்குக் கொண்டு வர வேண்டும்..." என்ற போது, அவன் குரலின் வித்தியாசத்தை உணர்ந்த சுரேந்தர்... அவன் கோபம் இன்னும் அதிகம் ஆனாலும் ஆகி விடுமோ என்பதால்,

"அண்ணா... இங்க கொடுங்க... நீங்க டென்சன் ஆகாதீங்க!" என்றபடி அவனின் போனை வாங்கிய சுரேந்தர்... அதற்கு மேல் அசோக்கிற்குக் கட்டளைகளை விட ஆரம்பிக்க...



தங்கள் காரை எடுக்க... அவனைக் கடந்து சென்றான்... விஜய் என்கிற விஜயேந்தர்... நம் நாயகன்...

நம் நாயகன் என்று சொல்வதை விட... நாயகியின் நாயகன். பரம்பரை பரம்பரையாகப் பணம் கொழிக்கும் குடும் பத்தின் இன்றைய தலைமுறையின் மூத்த வாரிசு... அதிக அழுத்தம்... அதிகக் கோபம்... தன் குடும்பப் பெருமையில் பெருமிதம் அடைபவன்... தன் கீழ் உள்ளவர்களுக்குச் சிம்ம சொப்பனம்.... அதிகமாய்ப் பேச மாட்டான்... அநாவசிய வார்த்தைகள் அவன் அகராதியிலே கிடையாது... பேசும் நபர் கூடத் தனக்குச் சமமாய் இருக்க வேண்டும் என்று நினைப்பவன்...

பார்வையாலே அனைவரையும் அடக்கும் வித்தை தெரிந்தவன்... அந்தப் பார்வைதான் அவன் நாயகியை ஒரே நொடியில் தன் பக்கம் இழுத்து அவளை முழுவதுமாய் ஆக்கிரமிக்க வைத்தது... அவ்வளவு சக்தியுள்ள பார்வை... அதே பார்வை இன்று அவளின் பிணியாகவும் மாறி இருந்தது.

இப்படிப் பல குணங்கள் அவனுக்குக் குறையாக இருந் தாலும்.. தன் குடும்பத்தின் மீது அளப்பரிய பாசம் உள்ளவன்....

தந்தை ராகவேந்தர்..... தாய் கலைச்செல்வி. இரு தம்பிகள்... ஒரு தங்கை...

சுரேந்தர் இவனை விட ஒரு வயது சிறியவன்... இரண்டாமவன் 3 வயது சிறியவன்... ராதா கடைக்குட்டி... தன் தம்பி இருவரின் மேலும்... தன் தங்கையின் மீதும் தன் உயிரையே வைத்திருப்பவன்... அவர்களுக்கு ஒன்று என்றால் அவன் உள்ளம் தாங்காதவன்....

ராதா... ஒரே பெண் என்பதால் அனைவருக்கும் அவள் மேல் பாசம்... விஜய்க்கு அவள் தங்கை உயிராய் இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டான்.

அவன் குணம் ராதாவைச் சற்றுத் தள்ளி வைத் திருந்தது... ஆனால் அவளுக்கு ஒன்று என்றால் விஜய் துடித்துப் போவான்.

அதே போல் விஜய்தான் அந்தக் குடும்பத்தின் அடுத்த தலைமுறைக்கான வேர் என்பதால்... அவன் வார்த்தைகள் தான் அங்கு வேதம். அவனின் முகச் சுழிப்பை.... வேத னையைத் தாங்காதவர்கள், அவனின் குடும்பத்தினரும்.

சுரேந்தருக்குத் தன் அண்ணன்தான் எல்லாமே..... விஜய்தான் அவனின் ரோல் மாடல்...

இருவருக்கும் ஒரு வயதுதான் வித்தியாசம் என்பதால்... இருவரும் ஓரளவு ஒத்துப் போயினர்...

ஆனால் யுகேந்தர், ராதா இருவரும் தனிக் கூட்டணி... அண்ணன் அதுவும் பெரிய அண்ணன் இல்லையென்றால்... இருவரின் அலம்பலுக்குக் குறைவே இருக்காது... சுரேந்தர் சில நேரம் அவர்களோடு சேர்ந்து கொள்வான்.... ஆனால் விஜய் அந்த அளவிற்கு இறங்க மாட்டான்....

நாயகியினுடனான அவனது வாழ்க்கையின் ஒவ்வொரு திருப்பத்திற்கும்... அவனின் உடன் பிறந்தவர்களே காரண மாக இருந்தனர்.

**கா**ரைத் தன் தம்பியின் அருகில் நிறுத்திய விஜய்... அவனை அழைக்க... சுரேந்தர் காரில் அமர... இப்போது சுரேந்தர்.... "அண்ணா.... எனக்கு என்னமோ இளாவைப் பிடிக்கவில்லை..." என்று சொல்லும்போதே, விஜய் தன் காரின் வேகத்தைக் கூட்டியவன்,

"ஏன்டா... தண்ணி அடிக்கிறான்னு பிடிக்க வில்லையா...? நீயும் நானும் பண்ணாததையா அவன் பண்ணிட்டான்..."

"இல்லண்ணா.... அது காரணம் இல்லை... ராதா இன் னொரு பையனை விரும்பியும், நீங்க கேட்டவுடன் சரி என்று



சொல்லி..." என்று ஆரம்பித்தவனிடம், விஜய் பார்வையை வீச... சுரேந்தர் அமைதி ஆனான்...

"நல்ல பையன்தான்... ராதாவுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது. அவன் தங்கையை நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். ஒண்ணும் பிரச்சனை வராது... பிசினஸ் பார்ட்னர் வேறு ஆகப் போகிறான்... தீனாவை எதிர்க்க நமக்கு ஒரு சப்போர்ட்..." என்று சொல்லியபடி,

"ஒரே கல்லில் 4 மாங்காய்!" என்று சிரித்தான்...

அவன் கணக்குகள் எல்லாம் தவறாக ஆகப் போவதை உணராமல் வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் விஜய்...

விஜய்... 'தீனா' என்றவுடன் சுரேந்தர்... ஞாபகம் வந்த வனாய்...

"ஆனா இந்த யுகி... தீனா தங்கையைப் போய் லவ் பண்றானே, அண்ணா!" என்று வெறுப்புடன் கூறியவன்...

"அதை மட்டும் ஏன் தடுக்கவில்லை நீங்க...? நான் யுகியிடம் சொல்லி அவனுக்கு இதெல்லாம் ஒத்து வராது என்று சொல்கிறேன் என்றால், அதுவும் வேண்டாம் என் கிறீர்கள்..." என்று கேட்க,

எதுவும் சொல்லாமலே ஓட்டி வந்த விஜய்... சிறிது நேரம் கழித்துத் தானாக வாய் திறந்தான்.

"ஸ்கூல் வாசல்ல அந்தப் பொண்ணுக்காகக் காத்துக் கிட்டு நிற்கிறான்... போயும் போயும் ஒரு பொண்ணுக்காக... அவ பின்னால..." என்று கடுமையாக ஆரம்பித்தவன்,

"கேட்டால் ராதாவுக்காக நிற்கிறானாம்.... எனக்கு வந்த ஆத்திரத்திற்கு... ஒண்ணும் சொல்ல முடியலை... அதன் பிறகு யோசித்துப் பார்த்தால் ஆர்த்தியும் நல்ல பொண்ணு தான்... நமக்குத் தெரிஞ்ச பொண்ணு... நம்ம குடும்பத்துக்கு

ஏற்ற பொண்ணுதான்... அவன் அண்ணன் நமக்கு பிசினஸில் இறங்கிய பின்னால்தான் பகை... அதுக்கும் முன்னால் ஒண்ணாத்தானே சுற்றித் திரிஞ்சோம்னு விட்டுட் டேன்... யுகேந்தர் இந்த வேலையையாவது ஒழுங்கா பண்ணட்டும்னு...

"உனக்கொரு விசயம் தெரியுமா...? இது தீனாவுக்கும் தெரியும்.... அவனும் கண்டுக்கல.... ஆனா நம்ம வீட்டு ஆள் நமக்கெல்லாம் தெரியாம லவ் பண்றாராம்..." என்று சிரித்த போது சுரேந்தரும் அவனுடைய சிரிப்பில் கலந்து கொண் டான்...

வீட்டின் அருகே வரும்போது ராதாவின் ஞாபகமும் வர...

"அண்ணா.... ராதா சம்மதிப்பாளா...? அம்மா இன்னைக்குத் தான் ராதாகிட்ட பேசறேன்னு சொன்னாங்க... அம்மா வேற நம்மகிட்ட பேசணும்னு சொல்றாங்க..." என்ற வனிடம்,

"அதெல்லாம் சம்மதிப்பா.... இல்லை, அந்தப் பையன் குடும்பத்துக்குத்தான் ஆபத்துன்னு மிரட்டுவோம்... தானா வழிக்கு வருவா..." என்றபடி முகம் மாறினான் விஜய்.

"என்ன ஒரு தைரியம் இருந்தால் விஜயேந்தர் தங்கச்சிய பொண்ணு கேட்டு தட்டைத் தூக்கிட்டு வருவாங்க... நம்ம முன்னால் நிற்கக் கூடத் தகுதி இல்லாதவங்க... இவனுங்க வந்தா என் தங்கச்சி அவங்க பின்னால போயிடுவாளா...? அவ விஜயேந்தர் தங்கை... எனக்கு ஒரு அவமானத்தைக் கண்டிப்பா தேடித் தர மாட்டா.. என் பேச்சைக் கேட்பா.. அப்படி ராதா கேட்கலை..." என்றபடி, "அவன் தங்கச்சி பேரு என்ன...?" என்று விஜய் யோசிக்க...

சுரேந்தர்... "தீக்ஷா-ண்ணா..." என்று எடுத்துக் கொடுக்க,



"ஹ்ம்ம்... தீக்ஷாவா... அந்த தீக்ஷாவைக் கடத்தி திக் திக் ஷாக் கொடுப்போம்..." என்று அவள் பெயரை வைத்தே நக்கலடிக்க,

"அண்ணா... தீக்ஷா திக் திக் ஷா... எப்படின்னா... இப்படி!" சுரேந்தரும் கலகலப்பாக...

"பாவம்டா, அந்தப் பொண்ணு... அண்ணன் லவ் பண்ணினதுக்கு... அவ மாட்டி இருக்கா..." என்ற விஜய்க்கு... 'பாவம் யார்!' என்று அப்போது தெரியாமல் போனதுதான் காலத்தின் கோலம்.

## 18

அந்தப் பிரம்மாண்ட மாளிகையில் விஜயேந்தர் குடும்பத்தினர் குழுமியிருந்தனர். அவர்கள் அனைவர் பார்வையும் ராதாவைச் சுற்றி இருக்க... விஜய் உச்சகட்ட ஆத்திரத்தில் இருந்தான்.

சுரேந்தரும் தன் அண்ணனின் மனநிலையில் இருக்க... யுகேந்தர் மட்டுமே தங்கையை நினைத்துக் கவலை யாய் இருந்தும்... அதை வெளிக்காட்டாமல் நின்று கொண் டிருந்தான்.

இவர்களின் பெற்றோரும் ராதாவை நினைத்துக் கவலையோடு நின்று கொண்டிருக்க...

மகளின் பிடிவாதம் ஒருபுறம் இருக்க... அந்த வீட்டின் மூத்தவனின் பிடிவாதம் மறுபுறம் இருக்க... ராதாவின் மேல் கவலை கொண்ட போதும், மகனின் பிடிவாதம் நியாயமாகவே பட்டது இருவருக்கும்...

விஜயேந்தரின் கோபத்திற்குக் காரணம்... ராதா கலைச் செல்வியிடம் இளமாறனைத் திருமணம் செய்ய மறுத்துப் பேசியிருந்ததே காரணம்...

விஜய் குரலை உயர்த்திப் பேச ஆரம்பித்தான் ராதாவிடம்...

"ரீதா, எனக்கு அவங்களைப் பிடிக்கலை... நம்ம குடும்பத்துக்கும் அவங்க சரி வரமட்டாங்க... புரிஞ்சுக்கோ... பிடிக்கலைன்னு தெரிஞ்சும் நம்ம வீட்டுப் படி ஏறிப் பொண்ணு கேட்க வந்தாங்க... அதுதான் அன்னைக்கு அவமானப்படுத்தி அனுப்பினேன்..." என்றவன், தன் தங்கையின் முகம் இன்னும் தெளியாததை உணர்ந்து,

"இன்னைக்கு உனக்கு நான் சொல்வது தப்பாத் தெரியலாம்... இந்த வயசு இன்னைக்கு இதுதான் முக்கியம்னு சொல்லும்... நாளை நீ நல்லா வாழும்போது கண்டிப்பா இந்தக் காதலை எல்லாம் நினைச்சுச் சிரிப்பம்மா... புரிஞ்சுக்கோ... என்ன புரியுறது... இதுதான் என் முடிவு.

"உன்கிட்ட இங்க யாரும் சம்மதம் கேட்கவில்லை.... நாளைக்கு உன்னைப் பெண் பார்க்க வர்றாங்க... என் ஃப்ரெண்ட் இளாதான். அவன்தான் மாப்பிள்ளை... அவன் தான் உன் வருங்காலக் கணவன்... நீ அண்ணன் பேச்சை மீற மாட்டேன்னு நினைக்கிறேன். நம்ம குடும்பத்துக்குனு ஒரு கௌரவம் இருக்கு.... அதை இந்த வீட்டில் பிறந்த பெண்ணா கட்டிக் காப்பதும்... காற்றில் விடுவதும் உன் கையிலதான் இருக்கு..." என்றபடி இதற்கு மேல் பேசுவதற்கு எதுவுமில்லை என்பது போல் படி ஏறிப் போக,

ராதா விசும்பினாள்...

இதுநாள்வரை தன் அண்ணனை எதிர்த்துப் பேசியதில்லை... எதிர்த்து என்ன... அவ்வளவாகப் பேச மாட்டாள்.. என்னவென்றால் என்ன... அந்த அளவில்தான் பேசுவாள்... யுகேந்தரோடு மட்டும் நன்றாகப் பேசுவாள்... ஆனால் அவனிடம் கூட மரியாதையாகவே பழகுவாள்... மற்ற இருவரிடமும் அண்ணன் என்ற பாசத்தை விட மரியாதைதான் அதிகமாய் இருக்கும்... அவர்கள் குடும்ப வழக்கம் அப்படி.



மாடி ஏறியவனிடம், "அண்ணா... ஒரு நிமிசம்..." என்ற போது நிமிர்ந்த விஜய்யின் உக்கிரப் பார்வையிலேயே தலை குனிந்தாள் ராதா.

"என்ன, சொல்லு... சொல்ல வந்துட்டு ஏன் நிறுத்திட்ட?" என்று அதட்ட,

"உங்க பிசினஸ் பார்ட்னர்ஷிப்புக்கு என் வாழ்க்கைதான் பலியாண்ணா...?" என்றவள், அதற்கு மேல் தன் அண்ணனை எதிர்த்துப் பேச வாய் வராமல் நோக்கினாள். இதற்கே அவள் தடுமாறி விட்டாள்தான்....

விஜய் மீண்டும் இறங்கி வந்தவன்... அவளின் கண்களைப் பார்த்து, "சரி... இதுதான் உன் மனசை உறுத்துதுன்னா... நான் அவனோட என் பார்ட்னர்ஷிப்பை கட் பண்ணிக்கிறேன்... ஆனா அவன்தான் இந்த வீட்டு மாப்பிள்ளை... அதை மாற்ற முடியாது..." என்று விடுவிடுவென்று படியேறிப் போனான்....

அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் அங்கிருந்து கிளம்ப,

ராதாவின் கண்ணீர்தான் அவளின் துணையாய் இருந்தது அவளுக்கு... மனம் எங்கும் பிரதீபன் நினைவுகள் அவளைத் தாக்க... கோபம் வேறு அவன் மீது வந்து தொலைத்தது.

இந்த நேரத்தில் வெளிநாட்டில் இருக்கிறானே என்று... அவன் வீட்டில் இருந்து வந்து பெண் கேட்ட போது தன் அண்ணன் அவர்களை அவமானப்படுத்திய விதமும் அவளின் நினைவைத் தாக்க.... தன் அண்ணனின் பிடிவாதம் தெரிந்த அவள் கலங்கி நின்றாள்...

தனது அறைக்கு வந்த விஜய்க்கும் மனம் நிம்மதி இல்லை... தங்கையின் கவலை தோய்ந்த முகமே மனதில் ஊசலாட... கண்களில் உறக்கம் வரவே இல்லை... ப்ரதீபனை

நினைத்துக் கடுங்கோபத்தில் மனம் கொதித்தது... இப்படித் தன் தங்கையின் மனதில் காதல் என்ற பெயரில் நஞ்சினை வளர்த்து வைத்திருக்கிறானே என்று... மாதச் சம்பளம் வாங்கும் அவனுக்குப் போய் இளவரசியாய் வாழும் தன் தங்கையா...?

எப்படி... தன்னை மீறி நடந்தது என்று அவனுக்கே தெரியவில்லை... என்று மனதுக்குள் புலம்பியபடி படுக்கையில் படுத்திருந்தான்.

காதல் என்பது காதலிப்பவரையே மீறி நடக்கும்போது தன்னை மீறித் தன் தங்கை எப்படிக் காதலில் விழுந்தாள் என்று யோசித்துக் கொண்டிருந்த விஜய்... அன்று காதலின் நிழல் கூடப் படாமல் தான் இருந்தான்... அதனால் அவனுக்குக் காதலின் வலிமை தெரியவில்லை... அதன் வலியும் தெரியவில்லை...

அவனுக்கும் காதல் வரவேண்டும்... அதன் வலிகளை எப்படியெல்லாம் அவனுக்கு உணர வைக்கலாம் என்று அவனை நினைத்து யோசித்துக் கொண்டிருந்த விதி... அதற்கான முதல் அடியை அவன் தங்கை மூலமே எடுத்தும் வைத்திருந்தது...

உணர வைக்க என்பதை விட... நரக வேதனையில் துடிக்க வைக்க.. வாய் விட்டு அழக் கூட முடியாமல் அவனைக் கதற வைக்க... காலம் தன் கரங்களில் விஷத்தைத் தோய்த்துக் காத்துக் கொண்டிருப்பதை உணராமல்... தன் தங்கையின் திருமண வாழ்க்கையை... அவள் நினைத்த பிரதீபனுடன் கொண்டு செல்லாமல்... தன் நண்பன் இளமாறனுடன் இணைக்க என்ன செய்யலாம் என்று புரண்டு கொண்டிருந்தான்.

ஒரு பெண்ணிற்கு அண்ணனாகப் போய் விட்டானே... மனமே சரி இல்லாதது போல் இருக்க... உறக்கமும் வர வில்லை.



அப்போது தன் அறைக் கதவு தட்டப்படும் ஓசை கேட்க எழுந்து போய்க் கதவைத் திறந்தால்.... அவன் தங்கை ராதா தான்.

உள்ளே வந்தவள்..,. எதுவும் பேசாமல்... வந்த வேகத்திலேயே சட்டென்று அவன் காலில் விழப் போக,

அதிர்ச்சியில் திகைத்தாலும் உடனே சுதாரித்தவன், பின்.. அவள் விழும் முன் தன் கைகளில் தாங்கினான் விஜய்.

"என்னம்மா இது...?" என்று தளுதளுத்தவனிடம்,

"எனக்கு வேற வழி தெரியலை, அண்ணா... எனக்குத் தீபனைத் தவிர வேற யாரையும் மேரேஜ் பண்ணிக்கப் பிடிக்கவில்லை, அண்ணா... அதுக்கு நான் உங்க தங்கையாவே இந்த வீட்டில் ஒரு மூலையில் இருந்துடுறேன் அண்ணா..." என்று குலுங்கி அழுதவளை ஆதரவாய்ப் பிடித்து சோபாவில் அமர்த்தினான் விஜய்.

"ராதா, அண்ணனைப் பாரு... அண்ணா உனக்குத் தப்பான வாழ்க்கையை ஏற்படுத்தித் தருவேனாம்மா...? இளமாறன் உனக்கு எல்லா விதத்திலும்... நம் குடும்பத்திற்கும் ஏற்றவன்மா... புரிஞ்சுக்கோ..." என்றவன்... சற்று முன் பாசத்தில் குழைவாய்ப் பேசிய தோரணையை மாற்றி... சற்றுக் கடுமையாக,

"என் தங்கையாவே இருந்து விடுவியா...? நீ அப்படி இருந்தால் கூட அதுவும் நம் குடும்பத்துக்கு அவமானம்தான். ப்ரதீபனை மறந்துரு. அதுதான் உனக்கும் நல்லது... நம் குடும்பத்துக்கும் நல்லது... அந்தப் பையன் குடும்பத்துக்கும் நல்லது... இதுக்கு மேல எனக்கு எதிரா... எனக்கு எதிராக் கூட இல்லை... நம் குடும்பத்துக்கு ஒரு களங்கம் வருகிற மாதிரி ஏதாவது பண்ண நினைத்தாய்... உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன்... அவனுக்கு ஒரு தங்கை இருக்காள்ல... அவ இப்போ என் ஆளுங்க கண்காணிப்புலதான் இருக்கா...

"இந்த ஒரு வாரத்தில் அவங்க குடும்ப விபரம் எல்லாம் என் கையில... நான் பிசினஸ்மேனா எந்தத் தூரத்திற்கும் இறங்குவேன் என்று தெரியும் உனக்கு... இதுவரை... தொழில் ரீதியா.. இல்லீகல் வேலை யெல்லாம் பண்ணி இருக்கேன்... முதல் தடவை குடும்பத்துக்காகப் பண்ற மாதிரி சூழ்நிலையில் என்னைத் தள்ளி விட்டுறாத!" என்று மிரட்டலில் தொடங்கிக் கெஞ்சலில் முடிக்க...

"அண்ணா!" என்று அதிர்ந்த தங்கையிடம்,

"புரிஞ்சுக்கோ, ராதா... உனக்குப் பாதுகாப்பு முதலில் அவசியம்... உனக்குத் தெரியாதும்மா... நம்ம குடும்ப வாழ்க்கை முறை அவங்க குடும்பத்தோட ஒத்துப் போகாதும்மா...

"நீ நினைச்சுட்டு இருக்க... சுதந்திரமா வெளியில் சுற்றி வருகிறாய் என்று... உன்னை ரெண்டு முறை கடத்த ட்ரை பண்ணி இருக்காங்க ராதா... அதெல்லாம் உனக்குத் தெரியாமலே உன்னைக் காப்பாற்றி இருக்கோம்... இளாவைத் திருமணம் செய்தால் எனக்கு உன் பாதுகாப்பைப் பற்றி எல்லாம் கவலை இல்லை. ஆனால் நீ சொல்ற வாழ்க்கைல... அந்தப் பையன் உன்னை அப்டியெல்லாம் வைத்திருக்க மாட்டான்.. எனக்கு எதிரிகள் என்னைச் சுற்றி இருக்காங்க... அவங்க எல்லோருக்கும் நீ என்னோட வீக்னெஸ்னு தெரியும்மா... உன்னைத்தான் டார்கெட் பண்ணுவாங்க... நீயே சொல்லு, அந்தப் பையனோட நீ வாழுகிற வாழ்க்கையில எனக்குத்தான் பயம் அதிகம்... வேண்டாம் ராதா... அவங்களாலும் சமாளிக்க முடியாதும்மா..." என்று சொன்னவன்,

"அவங்க எவ்வளவுதான் படித்திருந்தாலும்... ஓரளவு வசதியில் இருந்தாலும் நம்ம அளவுக்கு ஏற முடியாது... நாம தப்பானவங்களாவேதான் தெரிவோம்... அதே போல் நாம எந்த அளவுக்கு இறங்கிப் போனாலும்... அவங்களோட



ஒத்துப் போக முடியாது... அவங்களும் நல்லவங்கதான், அவங்க லெவலுக்கு... நாமளும் நல்லவங்கதான், நம்ம லெவலுக்கு... ஆனா அதை நிர்ணயிக்கிற அளவுகோலின் அளவுதான் வேறு வேறாய் இருக்கும். ஒரே ஸ்டேட்டஸ் எனும்போது அளவீடு சமமாய்ப் போய் விடும், ராதா... வித்தியாசம் பெரிதாக இருக்காது. பிரச்சனையும் இருக்காது... புரிஞ்சுக்கோடா!" என்று சொல்ல,

"என்ன பிரச்சனை வந்தாலும் சமாளிப்பேன், அண்ணா!" என்று வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந் தவள்... அவன் சொன்ன பிரச்சனை என்ற வார்த்தையைப் பிடித்துத் தட்டுத் தடுமாறிச் சொன்னாள்.

அவன் முன் பேசுவதற்கு அவளுக்கு வாய் வர வில்லை... வார்த்தையும் வரவில்லை என்பதுதான் உண்மை.

நிதானமாய்ப் பார்த்தான். "சோ பிரச்சனை வராதுனு சொல்ல முடியவில்லை தானே உன்னால!" என்று இவன் கொக்கி போட...

அவள் ஏதோ பேச வாய் திறக்க, அவள் வார்த்தை களைப் பார்வையாலே தடுத்தவன்... எழுந்தபடி...

"ராதா – இளமாறன்... இதில் மாற்றமில்லை. நீ கிளம்ப லாம்!" என்றவனிடம், ஒன்றும் சொல்லாமல் தீர்க்கமாய்ப் பார்த்தாள் ராதா கண்ணீரோடு. 'இதுதான் உன் முடிவா!' என்பது போல.

அவள் சகோதரனும், 'அது முடிவல்ல. அதுதான் நடக்க வேண்டும்!' தன் பார்வையாலே பிடிவாதத்தைக் காட்டினான்.

அதற்கு மேல் அவனிடம் பேசிப் பிரயோசனமில்லை என்பதை உணர்ந்து... தளர்வாய் எழுந்தாள்தான்... ... அதே சமயம் தனக்குள் ஏதோ முடிவெடுத்தவளாய்... கண்ணீரைத் துடைத்தவள் தன் அறைக்குள் வேகமாய் நுழைந்தாள் ராதா.

சிட்டத்தட்ட இரண்டு மணி அளவில் விஜய்க்குத் திடீரென்று பயங்கரக் கனவு வர.... மருத்துவ மனை... அதில் ஏதோ தெளிவில்லாக் காட்சிகள்...

உடல் அதிரத் தூக்கிப் போட... அதில் விழிப்பு வர... முகமெங்கும் வியர்வை முத்துக்கள் அரும்ப... எழுந்து உட்கார்ந்தான் விஜய். இதுபோல் இதற்கு முன் இரண்டு முறை வந்துள்ளது. ஆனால் கனவு என்ன என்பது விழித்தவுடன் ஞாபகத்திற்கு வருவதில்லை....

அவன் உள்ளுணர்வு ஏதோ சொல்ல... தன்னை அறியாமல் தன் தங்கையின் அறைக்குச் சென்று கதவைத் தட்ட ஆரம்பித்தான்... அது திறக்காமலே போக... மீண்டும் பலமாய்த் தட்ட, அதற்குப் பயனே இல்லாமல் போக... பதட்டம் அதிகமாகித் தட்ட ஆரம்பித்தவன்... ஓசை கேட்டு வேலை ஆட்கள் வர...

அடுத்த கொஞ்ச நேரத்தில் அவன் குடும்ப உறுப்பினர் களும் வர... ஒரு வழியாய்க் கதவை உடைத்து உள்ளே போக... ராதா படுக்கையில் வாயில் நுரை தள்ளியபடி அலங்கோலமாய்க் கிடந்தாள்...

அவள் கிடந்த கோலத்தில்... வேலை ஆட்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திய விஜய்... தங்கையை அள்ளிக் கொண்டு விரைந்தான் மருத்துவ மனைக்கு.... ஓட்டிச் செல்லும் போதே அவன் கண்ட கனவு வேறு அவனை இம்சிக்க... தன் தங்கைக்கு ஒன்றும் ஆகக் கூடாது என்று மனம் எங்கும் குற்ற உணர்ச்சியும்... வலியும் சூழப் பரிதவித்தவன்... மருத்துவ மனையில் அவளைச் சேர்த்து ... 5 மணி நேர ரண வேதனைக்குப் பிறகு... அவளை அபாய கட்டத்தில் இருந்து மீட்டெடுத்தான்.

மகளின் துயரம் தாங்க முடியாத அவர்களின் தாய் கலைச்செல்வி... அவள் கணவன் ராகவேந்தரிடம் முறையிட,



அதன் பிறகு... அவனது தந்தை ராகவேந்தரும்... தாய் கலைச்செல்வியும் அவனிடம் வந்து பேசி... அவள் விரும்பிய பிரதீபனுடனேயே அவளைத் திருமணம் செய்ய வைக்கக் கெஞ்ச... வேறு வழி இன்றி விஜய் சம்மதித்தான், பிடிக்காமல் இருந்த போதும்.

அவன் சம்மதித்து ஒப்புதல் அளித்த பின்... ராதாவின் அன்னை... பிரதீபன் தந்தைக்குப் போன் செய்ய... அவர் வெளியூரில் இருந்ததால்... தகவல் சென்னையில் இருந்த ஜெயந்திக்குச் சொல்லப்பட்டது...

அடுத்த ஒரு மணி நேரத்தில் ராதாவின் உடல்நிலை சீராக ஆரம்பித்து இருக்க... கண் விழித்தாள் ராதா...

இரண்டு மணியில் இருந்து தவித்த வேதனை முடிவுக்கு வர, வீட்டிற்குப் போகத் தீர்மானித்தான் விஜய்...

தன் சக்தியெல்லாம் வடிந்து கிடந்த ராதாவின் நிலை இன்னும் அவனைக் கொல்ல... அதைப் பார்க்க முடியாமலே... வீட்டிற்குக் கிளம்பினான் விஜய்.

தங்கை எடுத்த முடிவில்... அவள் கொடுத்த அதிர்ச்சி யிலிருந்து... மீள முடியாமல்... விஜய் மனதை அறுக்க.... தன் தங்கையை நினைத்தபடியே... தன் காரில் ஏறி.... அதைக் கிளப்ப எத்தனித்தவன்... தன் கார் மேல் வந்து மோதிய ஸ்கூட்டியினால் கார் குலுங்க... காரை நிறுத்தினான்.

முதலில் யார் என்ற விதத்தில் பார்க்க... முகத்தில் கண்கள் மட்டும் தெரிய... துப்பட்டாவினால் முகத்தை மறைத்திருந்தாள் அந்தப் பெண்... இடித்தவள் ஏதாவது பேசுவாள் என்று அவன் பார்த்திருக்க...

இடித்தவளோ... தான் இடித்த வண்டியையும் பார்க்காமல்... அவள் டப்பா ஸ்கூட்டரை மட்டும் ஆராய்ந்தாள். சரி... அவள் வண்டியைப் பார்த்தவள்... அதன் பிறகாவது

தன் காரைக் கவனிப்பாளா என்று பார்க்க... இப்போதும் அவள் இடித்த காரினைப் பார்க்காமல்... பின்னால் திரும்பிப் பார்க்க.... ஆவேசமான விஜய்.... அதே வேகத்தில்... அந்தப் பெண்ணை நோக்கி இறங்கி வந்தான், கோப முகத்துடன்.

ஆனால், அவன் பேசும் முன் அவளே "சாரி!" என்று சொல்லியபடி, அவன் மேல் கொஞ்சம் கவனம் வைத்தவள்... அப்போதும் காரைக் கவனிக்காமலே அவனைத் தாண்டியபடி அவள் ஸ்கூட்டியில் பறந்தாள்...

அதை நிறுத்த...

அவனை விட்டுப் பறந்து போவதையே குறிக்கோளாய் வைத்திருப்பவள்... இப்போது மட்டும் நிற்பாளா என்ன...

தன் காரின் சேதாரத்தைக் கூடக் கண் கொண்டு பார்க்காமல் போனவளை என்ன செய்யலாம் என்று கோபத்தில் நின்றிருந்தவனின் இதயத்தைக் கூடச் சேதாரம் ஆக்கப் போகிறாள், அந்த மங்கை என்று உணராமல் நின்றிருந்தான் மங்கையின் மன்னன்.

விஜய், முன்பகுதி நெளிந்த அந்தக் காரை எடுக்க விருப்ப மில்லாமல்.... தன் வீட்டு டிரைவருக்கு கால் செய்து அவனை வரச் சொல்லியவன்... அடுத்து வேறு யாருக்கோ போன் செய்தான்.

"அசோக்... எங்க இருக்க...?" என்று அழைத்த அடுத்த பத்து நிமிடத்தில் அவனின் வலது கரமாய் இருக்கும் அசோக் அவனின் ஆட்களோடு வந்து சேர....

"அதோ அந்த ஸ்கூட்டி இருக்குதுல.... அதைத் தூக்கி காயலான் கடைக்குப் போட ரெடி பண்ணுங்க... வந்து தேடட்டும்... ஸ்கூட்டி இருந்த அடையாளம் கூடத் தெரியாமல் தேடி அலையட்டும்... என் காரை இடிச்சிட்டு என்ன ஆச்சுனு கூடப் பார்க்காமல் தெனாவட்டா சாரி சொல்லிட்டுப் போறா... வருவாள்ல.... ஸ்கூட்டி என்ன ஆச்சுனு.... அப்போ இருக்கு



அவளுக்கு..." என்றபடி போனவனிடம், அசோக் ஏதோ சொல்ல முனைய...

அவனின் கோபப் பார்வையில் அவன் காரைப் பார்த்தவன்... இப்போது பேசினால் அது தனக்கே ஆப்பாகும் என்று உணர்ந்தபடி ஸ்கூட்டியை நோக்கிப் போனான்.

'அவள் கணவனாகிய அவனைக் கூட அடையாளம் தெரியாத நிலைக்குப் போகப் போகிறாள்...' என்று அவனுக்கு அப்போது யாரும் சொல்லவில்லை.

'என்ன ஒரு வித்தியாசம் என்றால் தன் ஸ்கூட்டியைத் தேடி அவள் அலைய வேண்டும் என்று சொன்னான். அவனோ தன்னை அவளில் தேடி அலையப் போகிறான் என்பதுதான் வித்தியாசம்... அதன் பிறகு..... விஜய் மீண்டும் தங்கை இருந்த அறைக்கு விரைந்தான்.

அசோக் தன்னோடு அழைத்து வந்திருந்தவர்களிடம் அந்த ஸ்கூட்டியைக் கிளப்பச் சொல்ல... அதற்கான ஏற்பாட்டில் அவர்கள் ஈடுபட்டிருக்க...

தன் தங்கையின் அறைக்குள் நுழைய முனைந்தவன்... அங்கு பிரதீபனின் அன்னையும்.... அவன் தங்கையும் இருப்பதைப் பார்த்து உள்ளே போகப் பிடிக்காமல் காரிடத்தில் வந்து நின்றான்.

அதே நேரத்தில்.... பார்த்த மாத்திரத்திலேயே ப்ரதீபனின் தங்கைதான்.... தன் கார் மேல் மோதிய பெண் என்பதையும் அவள் அணிந்திருந்த ஆடை மூலமாக உணர்ந்த விஜய்... மீண்டும் அசோக்குக்குப் போன் செய்தான்.

"அசோக்! அந்த ஸ்கூட்டியை ஒன்னும் பண்ண வேண்டாம். பழைய இடத்திலே கொண்டு வந்து வச்சுடு!" என்று முடிக்கும்போது... ப்ரதீபனின் தங்கையாகிய தீக்ஷா... அவனுக்குச் சற்றுத் தள்ளி வந்து நின்றாள்.

அசோக் புலம்பியபடியே தீக்ஷாவின் ஸ்கூட்டியை மீண்டும் கொண்டு வந்து வைத்தான். ஆனால் அவள் நிறுத்திய இடத்தில் இல்லாமல் வேறொரு இடத்தில் நிறுத்திய படி,

"அப்பவே நினைத்தேன்... இது நாம ஒரு வாரமா ஃபாலோ பண்ணிட்டு இருக்கிற பொண்ணோட ஸ்கூட்டின்னு... நம்மள சொல்ல விட்டாதானே... அவருக்கு முன்னால யாரும் பேசுனாலே பிடிக்காது, நம்ம சாருக்கு!" என்று அவள் ஸ்கூட்டியை நிறுத்தியபடியே புலம்பலையும் நிறுத்தினான்.

யார் முன் எவரும் பேசினாலே ஆகாது என்று அசோக் புலம்பினானோ... அவன் முன் பிரதீபனின் தங்கை... நம் நாயகி... இல்லையில்லை தீக்ஷா... அவன் முன்னே அவன் பேர் சொல்லிப் பேசியதோடு மட்டுமில்லாமல்.... பட்டப் பேர் சொல்லிப் பேசிக் கொண்டிருந்தாள்...

அவள் வந்து நின்றவுடன்.... அவளை நேருக்கு நேராய்ப் பார்த்த விஜய்யால் தாங்கவே முடியவில்லை... அவளை மேலிருந்து கீழாக ஆராய்ந்தவனாய்... முகத்தைச் சுழித்தான்.

கிட்டத்தட்ட காலை 8 மணி. அதுவும் மருத்துவ மனைக்கு... தன் தங்கை உயிருக்கு ஆபத்து என்று கேள்விப்பட்டு வந்திருந்த அவளின் இலட்சணத்தைப் பார்த்தவனுக்கு... கோபத்தில் மூக்கு விடைத்தது....

விலை உயர்ந்த சுடிதாரில்... ஒப்பனையுடன்... திருமணத்திற்குப் போவது போல் வந்திருந்தாள்... பிரதீபனின் தங்கை.

அது காரை இடித்து விட்டு வந்தபோது யாரோ ஒரு பெண் என்று கோபப்பட்டான்... அதன் பிறகு... பிரதீபனின் தங்கை என்று தெரிந்து ஓரளவு கோபம் தணிந்தான்... சொல்லப் போனால்.... ப்ரதீபனின் தங்கை என்ற காரணத்தினாலே அவள் ஸ்கூட்டி மீண்டும் உயிர் பெற்று வந்திருந்தது...



தன் தங்கை காதலை ஏற்றுக் கொள்ளள முடிவு செய்த பின்.... ஓரளவு தீபன் மேலும் கோபம் போயிருக்க... தீக்ஷாவின் ஸ்கூட்டி தப்பித்திருந்தது. ஆனால் அவள் தன் முன்னால் வந்து நின்ற போதுதான் அவளை நன்றாகக் கவனித்தான், விஜய்... இந்தச் சூழ்நிலையில் கூட இவள் இவ்வளவு அலங்காரம் செய்து கொண்டு வந்து இருக்கிறாள்.... என்று நினைத்த விஜய்க்குக் கோபம் பன் மடங்கு வர...

தீக்ஷா... விஜய் மனதில் மட்டமான இடத்தை அடைந் தாள்.

தோழி நிச்சயத்திற்காகத்தான் அவளும் அலங்கா ரத்தில் வந்திருந்தாள்... ஜெயந்தியின் அவசரத்தில்... அப்படியே வந்து விட்டது... விஜய் உணரவில்லை.

விஜய் என்ன நினைக்கிறான் என்று உணராமல்... அவன் ராதாவின் அண்ணன் என்றெல்லாம் அறியாமல்.... தான் இடித்த காரின் உரிமையாளனோ.... இல்லை, ஓட்டுனரோ... என்ற நினைவில்... தீக்ஷாவும் அவனைப் பார்த்தபடியே போனில் பேச ஆரம்பிக்க...

"டேய்..." என்று ஆரம்பித்து... "நீயெல்லாம் ஒரு ஆளு... உன்னை நம்பி இன்னொரு ஆளாடா உனக்கு..." என்று அவள் அண்ணனைத் திட்டியபடி... அடுத்து ராதாவைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து, எதிர்முனையில் இருப்பவனைக் கிழிக்க ஆரம்பிக்க...

தானாகவே பின் வாங்கி நகர்ந்தான்... ஆனால் அவள் பேசப் பேச.... அவள் வார்த்தைகளில் தீக்ஷா அவன் மனதில் கேவலமான இடத்தை அடைந்தாள்.

தன் அண்ணனை இப்படியெல்லாம் ஒரு தங்கை பேசுவாளா...? நினைக்கும் போதே தன் தங்கை தனக்குக்

கொடுக்கும் மரியாதை அவன் முன் தோன்ற.... தன் தங்கையை நினைத்து அவனுக்குக் கண் கலங்கியது... தனக்கு முன் நின்று பேசவே அத்தனை யோசிப்பவள் அவன் தங்கை.... இவளோ? அண்ணனுக்கே இந்த மரியாதை என்றால்.... அவனுக்கு மனைவியாகப் போகும் தன் தங்கையின் மரியாதை... விஜய் குடும்பத்தில்.... மரியாதை என்பது மிகவும் முக்கியமான ஒன்று.... மனம் கலங்கினான்.

அற்பமாய்த் தீக்ஷாவை அவன் பார்த்தான்... அடுத்தடுத்து அவள் பேசிய பேச்சில் அவன் அதிர்ந்து யோசித்த போதே, அடுத்து அவள் பேசிய பேச்சில் தன் தங்கையின் தற்போதைய நிலையில் இருந்து... அது ஏன் என்ற காரணம் வரை அங்கு எந்தவொரு மீடியாவின் துணை இல்லாமலும் காற்றில் அந்த மருத்துவ மனை எங்கும்.... அலைபேசியில் பிரதீபனுக்கும் ஒலி பரப்பப்பட,

நாயகியின் நாவண்ணம்.... நாயகனின் நாதங்களில் அபஸ்வரமாய்ச் சென்றடைந்தது.

**மீ**ண்டும் அவள் உள்ளே போக... தங்கை தேர்ந்தெடுத்த மணவாழ்க்கைக்குச் சம்மதம் சொன்னதைக் குறித்து மீண்டும் யோசிக்க ஆரம்பித்தவன்... சகோதரர்கள் மற்றும் தந்தை அந்த நேரத்தில் வர... தன் மனக் குமுறலைக் கொட்ட ஆரம்பித்தான் விஜய்.

“அப்பா, சத்தியமாச் சொல்றேன்.... நம்ம ராதா இந்தக் குடும்பத்தில் நல்லாவே இருக்க மாட்டா... பொண்ணா வளர்த்திருக்காங்க... வாயைத் திறந்தாலே நாமெல்லாம் காதை மூட வேண்டியதுதான்... என்ன பேச்சுப் பேசறா.... என்ன சத்தம்.... அவ அண்ணன்.... அதான் அந்த பிரதீபனுக்கு அவ கொடுத்த மரியாதை.... கேட்கவே முடியல... நேற்று நைட்டில் இருந்து நாம என்ன பாடுபட்டோம்... ராதா உயிரை மீட்டெடுக்கிறதுக்குள்ள... அந்த அவஸ்தை எல்லாம்



அவ உணர்ந்த மாதிரியே இல்ல. ம்ஹூம். இது சரிப்படாது, அப்பா....நான் யோசிக்கணும்...” என்று விஜய் தீக்ஷாவின் பேச்சில் மீண்டும் ஆரம்பித்த இடத்திலே போய் நிற்க...

அவன் தந்தையும்... உடன் பிறந்த மற்ற இருவரும்... திகிலடைந்தனர்.

இருந்தும் ராகவேந்தர் கொஞ்சம் சமாளித்து, “நாம என்னப்பா விஜய் பண்றது...? அவ பிடிவாதம் பிடிக்கிறாளே!”

“அப்பா.... எனக்கு ஒண்ணும் பிடிச்சுக்கலை... அந்தக் குடும்பம் சரி இல்லையோன்னு தோணுது.... ராதா கண்ணு முழிக்கிறதுக்குள்ள... உயிர் போய் வந்துருச்சுப்பா. ஆனா அந்தப் பொண்ணு... ஃபுல் மேக்கப்போட வந்து நிற்கிறாப்பா.... இது ஒரு குடும்பம்.... ச்சே.... இந்தக் குடும்பத்துக்குத்தான் மருமகளாப் போய் ஆகணும்னு நம்ம ராதா விஷம் குடிச்சுருக்கா!” என்று சொன்னவனுக்குத் தீபன் குடும்பம் சரி இல்லாத குடும்பமோ என்று.... மனமெங்கும் வேதனை.

“பொண்ணையே இப்படி வளர்த்திருந்தா... பையன... கேட்கவே வேண்டாம்... நம்ம ராதாவுக்கு ஏன்பா இப்படி ஒரு நிலை... நம்ம ஸ்டேட்டஸுக்கும் அவங்களுக்கும் சுத்தமா பொருந்தாது... நம்ம குடும்பமுறைக்கும்...” என்று சொல்லும் போதே தீக்ஷா அவர்களைக் கடந்து செல்ல, அவளைப் பின்னால் இருந்தே வெறித்து முறைத்தபடி நின்றான், பேச்சினை நிறுத்தியபடி...

தான் சொன்னதைக் கேட்டிருப்பாள் என்பதை ஓரளவு அவளின் விரைத்த தோரணையே சொல்ல.... இவளுக் கெல்லாம் ரோசம் வேற வருதாக்கும்... என்று வேறு மனதில் நினைத்துக் கொண்டு அற்பமாய்ப் பார்த்தான் விஜய்...

அப்போது ராகவேந்தருக்கு... கலைச்செல்வி போன் செய்து ஜெயந்தி வந்த விசயத்தைச் சொல்ல... அவர் மற்ற இரு மகன்களுடன் ஜெயந்தியைச் சந்திக்கச் செல்ல...

சுரேந்தர் மட்டும் தன் சகோதரனின் ஆத்திரம் உணர்ந்து அவனை ஆறுதல் படுத்தும் விதத்தில் அவன் தோளைப் பற்றி அழுத்திச் சென்றான்... தன் நிலையும் அவன் நிலைதான் என்பது போல.

அவர்கள் மூவரும் அந்தப் பக்கம் செல்ல...

தங்கள் பெருமையை அவளுக்கு விளக்கி விட வேண்டும் என்று... அவளைச் சொடக்குப் போட்டு அழைத்தான், அவன் நின்ற இடத்தில் இருந்தே....

திரும்பாமல் கூட, தான் நின்ற இடத்திலேயே.... ஆணி அடித்தாற் போல் நின்ற தீக்ஷாவை மனமார அர்ச்சித்தபடி அவளின் முன்னே போகத் தீர்மானித்தான்.

காலம் தோறும் இவன்தான் அவளை நோக்கிப் போக வேண்டும் என்று இருக்க... அவள் வருவாளோ...?

அறியாத இளைஞனாய்த் தானாகவே அவளை நோக்கித் தன் முதலடியை எடுத்து வைத்தான் விஜய்....

அவள் முன்னே நின்று... ஆணின் திமிராய்... தன் செல்வத்தின் செருக்குடன் பேச ஆரம்பித்தான்...

“இந்த லொட லொட பேச்செல்லாம் உங்க வீட்டோட நிறுத்திக்க... இல்லை, அப்படிப் பேசுறதை நிறுத்த முடியாதுன்னா... இந்தப் பக்கம் அடிக்கடி வந்துடாத... எங்களுக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு.... பெரிய ஆளுங்கள்லாம் வருவாங்க... உன் சின்னப் பிள்ளைத்தனமான பேச்செல்லாம் கேட்கிற மாதிரி ஆகிடப் போகுது... ஏற்கெனவே உங்களோடல்லாம் சம்பந்தம் வச்சுக்கிறோம்னு கேவலமா இருக்கு... எல்லாம் நேரம்...” என்றவன் அதிகம் பேசாமல்,

“சொன்னது கேட்டுச்சா... இப்போ போகலாம்...” என்று திரும்பி மீண்டும் ராதாவின் அறை நோக்கிப் போக,

அவள் அடங்கிப் போவாள்... அல்லது அழுது வடிவாள் என்று நினைத்தவனின் காதுகளில் அவன் போட்ட



சொடக்கின் சத்தத்தை விட... கைதட்டலின் ஒலி வீரியமாய் வர... அதன் பின்னாலே அவன் பெயரும்.... ஏலமிடப்பட... ஏகத்துக்கும் பொறுமை இழந்தவனின்.... கண்களில் ஆவேசமும் நிரம்பி வழிய.... திரும்பிப் பார்த்தான் விஜய்...

தன் குடும்பப் பெருமையை அவளுக்குச் சொல்லி... அவள் யார்.... என்பதைப் புரிய வைத்து.... அவளைக் கேவலப்படுத்த நினைத்த விஜயேந்தரிடமே... அவன் தங்கை செய்த காரியத்தை வைத்தே... தன் பெருமையை அவனிடம் நிலை நாட்டி... அவனைக் கூனிக் குறுகவும் வைத்தாள்... அவனின் நாயகி!

## 19

**வீ**ட்டில் விஜயேந்தர் ஆட்டம் ஆடாத குறைதான்... தன் தங்கை அவளது அண்ணனைக் காதலித்து, விஷத்தைக் குடித்து விட்டாள் என்று அவளுக்கு என்ன ஒரு நக்கல்... தன் தங்கையின் செயலை வைத்தே தன்னைத் தலை குனிய வைத்துவிட்டாளே என்று வேதனை ஒரு புறம்... கைதட்டி அழைத்து.... அதுவும் என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு.... என்று கோபம் ஒரு புறம்...

ஆனால் எதுவும் கேட்க முடியாமல்.... அவர்கள் குடும்பத்துக்குத் தெரிந்த ஒருவர் வர.... அவளை ஒரு வார்த்தை கூடக் கேட்க முடியாமல் வந்தது வேறு அவனை வாட்டி வதைத்தது... யாரிடம் வெளிக்காட்டுவது என்று தெரியாமல்.... ஒவ்வொருவரின் மீதும் எரிந்து விழுந்தான்..

சுரேந்தரைக் கூட விட்டு வைக்கவில்லை...

தினமும் அவனைக் கொன்றன அவள் வார்த்தைகள்...

“என்ன திமிர் அவளுக்கு.... என் முன்னாலே எதிர்த்துப் பேசிட்டாளே... என் தங்கையையே அசிங்கப்படுத்தி விட்டாளே... எல்லாம் ராதாவினால்தானே... ச்சே! நான்லாம்

ஒரு பிடி பிடிச்சாலே தாங்க மாட்டா... என்ன பேச்சு... பேசறா...! இவளைப் போய்ப் பாவம்னு வேற நான் சொன்னேனே..." என்றவன், அதே கோபத்தில் தன் தந்தையின் முன் நின்றான், ஒரு முடிவோடு.

"அப்பா... எனக்கு இந்தத் திருமணத்தில் இஷ்டம் இல்லை.... அந்தப் பொண்ணு... அவ அண்ணனையே வாடா போடான்னு மரியாதை இல்லாம பேசறாப்பா... என் முன்னால பேசவே தயங்குற ராதா எங்கே... அவ எங்கே... மரியாதைன்னா அவளுக்கு என்னன்னே தெரியாது போலப்பா... அவ அண்ணனுக்கே அந்த மரியாதைனா... ராதாவுக்கு... நமக்கு..." என்றபோது,

ராகவேந்தர்.... மகளின் நிலை தாங்காமல்... அவள் பட்ட வேதனை தாங்க முடியாமல்...

"இல்ல விஜய்... அவ ஆசைப்பட்ட பையனையே அவ மேரேஜ் பண்ணிக்கட்டும்... விட்டுடலாம்... இதுக்கு மேல என் பொண்ணு உயிரோட என்னால விளையாட முடியாது!" என்று பிடிவாதமாக மறுத்து விட்டார்.

தந்தையிடம் அதற்கு மேல் எதுவும் பேசிப் பிரயோசனம் இல்லை என்று உணர்ந்தவன்...

"சரி...அப்போ என்னை விட்ருங்க... எந்த விசயத்திலயும் தலையிட மாட்டேன்..." என்றவனிடம்

"நீ முதலில் சொன்னப்ப நான் மறுத்தேனா, விஜய்...? நாங்க மட்டும் பிடித்தா பண்ணுகிறோம்.... உன் தங்கைதானே விஜய்... உன் பிடிவாதம்தான் அவளுக்கும்.... விட்டுக் கொடு, விஜய்..." என்று ராகவேந்தர் கெஞ்ச,

யுகி மட்டும் சுரேந்தரிடம், "இவங்க பஞ்சாயத்து எப்போ முடியும்ணா...? போன வாரத்தில் இருந்து ஓடுது.... தீக்ஷா பேசுறா... தீக்ஷா பேசுறானு சொல்லிட்டு... நம்ம அண்ணா ஒரு வாரமா வாயை மூடாமப் பேசிட்டு இருக்காரு...."



என்றபோது, சுரேந்தர் முறைத்த முறைப்பில் யுகேந்தர் தானாக வாயை மூடினான்...

"பேச விட மாட்டீங்களே!" என்று அலுத்தவனாய் மீண்டும் தந்தை.... சகோதரன் பேச்சில் கவனம் வைக்க ஆரம்பித்தான்.

"விஜய்.... இந்த வாரம் அவங்க வீட்ல போய்ப் பேசலாம்... நல்ல நாளில் நிச்சயம் பண்ணணும்... அதுக்கு ராதாவோட அண்ணனா நீ வரணும்... அதுக்கப்புறம் சுரேந்தர் பார்த்துக் கொள்ளட்டும்!" என்று விஜய்யின் தந்தை முடிக்க...

விஜய் அதிர்ந்தான்...... 'தீபன் இல்லாமல் அவர்கள் வீட்டுக்கா...!'

"அப்பா! என்னப்பா பேசறீங்க...? அந்தப் பையனே இங்க இல்லை... இப்போ எதுக்கு... அவர் இந்தியா வரட்டும். அதன் பிறகு அவங்க வீட்ல பேசிக்கலாம்...." என்றவனிடம்...

அவன் ஓரளவு தணிந்து விட்டான் என்பதை அவன் வார்த்தையிலே உணர்ந்த அவன் அம்மா...

"தீபன் இந்தியா வரும்போது மேரேஜ பண்ணிட லாம்ப்பா... இதுக்கு மேலயும் திருமணத்தைத் தள்ளி வைக்க வேண்டாம்... ராதா தன் வாழ்க்கையே தீபன்னு நினைக் கிறாப்பா!" என்று கண் கலங்க....

"என்னமோ பண்ணித் தொலைங்க..." என்றவன்.... "இப்போ அவங்க வீட்டுக்கு மட்டும் போகலாம்.. ஆனா நிச்சயதார்த்தம் எல்லாம் வேண்டாம்... தீபன் வந்துதான் பண்ண வேண்டும்...." என்று உறுதியாய் இருக்க...

விஜய் எப்படியோ சம்மதித்து விட்ட சந்தோசத்தில்....

"இந்த வார ஞாயிற்றுக் கிழமை போகலாமா...? அவங்க வீட்ல சொல்வோமா...?" என்று கலைச்செல்வி ஆவலாய்க் கேட்க,

விஜய் யோசித்தவன், "போகலாம். ஆனா நாம அங்க போறதை அவங்களுக்குச் சொல்ல வேண்டாம்... நமக்காக நடிக்காம... அவங்க இயல்பா இருக்கணும். அப்போதான் எனக்கும் ஒரு நம்பிக்கை வரும்...." என்றவனிடம்,

அவன் தாய்... "என்னப்பா இது... எதுவுமே சொல் லாமல் போய் நின்னா... என்ன பண்ணுவாங்க...?" என்ற போது,

"அவங்க மட்டும் அன்னைக்குச் சொல்லிட்டா வந்து பொண்ணு கேட்டாங்க... அதே மாதிரிதான் இதுவும்.... நான் வர வேண்டும் என்று நினைத்தால், யாரும் அவங்க வீட்டுக்கு வருவதாகச் சொல்லக் கூடாது... சண்டே போகலாம்!" என்றவனின் வார்த்தைகளை யாரும் மீறவில்லை.

ராதா அன்று இரவே தீபனிடம்... தன் அண்ணன் அவர்களின் திருமணத்திற்கு முழுமையாக ஒப்புதல் அளித்த விசயத்தைக் கூறுவதற்கு... அவனுக்குப் போன் செய்ய...

அவனோ, "ஹ்ம்ம்... சரி. உங்க வீட்டுத் தலைவர் சம்மதம் சொன்னதுக்குத் தேங்க்ஸுனு சொல்லிரு..." என்று விட்டேற்றியாகச் சொல்லி வைக்க... ராதாவுக்குக் கோபம் வந்து விட்டது.

"ஏன் தீபன் இப்படிப் பேசறீங்க?"

"பின்ன.... என்ன பண்ணச் சொல்ற... உன்னோட உயிரைப் பணயம் வச்சு நம்ம காதல் கைகூடி யிருக்கு.... இதுக்கெல்லாம் உன் அண்ணன் கோபம்தானே காரணம்... கொஞ்சம் மிஸ் ஆகி இருந்ததுன்னா... யோசிச்சுப் பாரு, ராதா..." என்று கலங்க,

ராதா சிரிப்புடன், "ஹையோ தீபன்... அவ்வளவு சீக்கிரம் நான் உங்களை விட்டுப் போயிடுவேனா...? ரொம்பல்லாம் எடுத்துக்கலை... ஜஸ்ட் அண்ணனை மிரட்டற துக்காகத்தான்... இதுக்கே எங்க அண்ணன் ஆடிப் போய்ட் டாரு... எப்படியோ... இப்போதான் நிம்மதியா இருக்கு..."



"இங்க எனக்கு உயிரே போயிருச்சுடி...." என்று அவன் சொல்லி அமைதியாக விட...

அவனைத் தேற்றியவள்... "நிச்சயதார்த்தம் அவன் வந்த பிறகுதான்!" என்று விஜய் சொன்னதைச் சொல்லி வைத்தாள் ராதா.

"உன் அண்ணன் ரொம்ப பண்றான் ராதா.... இன்னும் என் மேல நம்பிக்கை வரல, அவனுக்கு... என்னைக்காவது என்கிட்ட மாட்டுவான். அன்னைக்கு இருக்கு அவனுக்கு... எனக்கும் காலம் வரும்டி..." என்று சொல்லும்போதே, ராதாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"என் அண்ணனுக்கு உங்க மேல எவ்வளவு கோபம் இருந்தும்... ஒரு தடவைகூட என்கிட்ட மரியாதை இல்லாமல் பேசியது கிடையாது... நீங்க என்னடானா..." என்று எரிச்சல் பட்டபடி போனை வைத்தவள்... வரும் ஞாயிறு அன்று அவன் வீட்டுக்குத் தன் குடும்பத்தார் போவதைச் சொல்லாமல் மறந்து போனை வைத்துவிட்டாள்.

தீபனோ... "இவ அண்ணன் மட்டும் இன்னும் கொஞ்சம் பாசமா இருந்திருந்தா இவளை எல்லாம் பிடிக்க முடியாது. இதுக்கே இந்த சீன் போடறா...." என்று நினைத்த படி அவனும் போனை வைத்து விட்டான்.

அவன் அன்று சொன்னபடி... விஜய் அவன் முன் கெஞ்சும் காலமும் தீபன் மிஞ்சும் நிலையும்.... வந்ததுதான்.

**தீ**பன் வீடு இருந்த குவார்ட்டர்ஸினை... ராதா வீட்டினர் அடைந்தபோது... அவர்கள் யாருக்கும் வீட்டு நம்பர் மற்றும் அட்ரஸ் தெரியவில்லை... சுரேந்தர் வேகமாய் வைத்தீஸ்வரன் நம்பரை அழுத்த.... தடுத்த விஜய்... யுகேந்தரை அழைத்து... அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களிடம் விசாரிக்கச் சொல்ல... அவர்களுள் ஒரு சிறுவனை யுகி அழைக்க... அவன் இவர்களின் அருகில் வந்தான்.

"தம்பி.... இங்க வைத்தீஸ்வரன் சார் வீடு எது?" என்று சுரேந்தர் கேட்க,

"வைத்தீஸ்வரனா?" என்று அந்தப் பையன் முழிக்க,

இப்போது யுகேந்தர்... "தீபன் தெரியுமா?" என்ற போது...

"தெரியாதே..." என்று தலையாட்டியவன்.... "நாங்க இங்க வந்து ஒன் வீக்தான் ஆகுது... இருங்க... அதோ அந்தப் பையனைக் கூப்பிடுகிறேன்..." என்று அவன் இன்னொரு சிறுவனை அழைக்க... இப்போது மொத்தக் கூட்டமும் இவர்களை நோக்கி வர,

விஜய் தங்கள் முன் நின்ற பையனிடமே, "தீக்ஷா தெரியுமா?" என்ற போது,

"ஓ தீக்ஷா அக்கா வீடா... தெரியுமே!" என்று அவன் வேகமாய் இரண்டாவது மாடியைக் காட்ட....

விஜய், "பார்த்தீங்களா.... யார்கிட்ட யாரைக் கேட்கணுமோ... அவங்களைக் கேட்கணும்..." என்று அவன் சொன்ன வீட்டை நோக்கி அனைவரும் கிளம்ப...

இப்போது... அந்தச் சிறுவர், சிறுமியர் கூட்டம்... தீவிர ஆலோசனைக் கூட்டமாக மாறி இருந்தது....

"யாருடா இவங்களாம்... நம்ம தீக்ஷா அக்கா வீட்டுக்குப் போறாங்க? ஒரு வேளை அக்காவைப் பொண்ணு கேட்டு வந்துருப்பாங்களோ...?" என்றபோது,

"டேய் லூசு...பொண்ணு பார்க்க வர்றாங்கன்னா... அக்கா என்ன இப்படியா இருப்பாங்க... இன்னும் தூங்கிக் கூட எழுந்திரிக்கலை..." என்றவனிடம்....

"ஒருவேளை இந்த மாப்பிள்ளையைப் பிடிக்காம இருந் திருக்கலாம்...." என்றபோது காரை நிறுத்தி விட்டு வந்த விஜய் காதில் அவர்கள் பேசியது விழ ஆரம்பித்தது...



இன்னும் ஒரு பையன்... "மூணு பேர்ல யாரா இருக்கும்டா...?" என்று கேட்க...

"தீக்ஷா அக்கா பேரைச் சொல்லி ஒரு அங்கிள் கேட்டாங்கள்ள... அந்த அங்கிளாத்தான் இருக்கும்..." என்று சொல்லி ஒரு சிறுமிதான் கரெக்டாகச் சொல்லி விட்டோம் என்று தன் கூட்டத்தைக் கெத்தாய்ப் பார்க்க...

அப்போது விஜய்யும் மிக அருகில் வர....

"அய்யோ! அந்த அங்கிள்டா... நம்மை எல்லாம் முறைச்சுட்டே வருகிறார்..." என்று ஒரு நொடியில் கலைந்து காணாமல் போனது, அந்தச் சிறார் கூட்டம்...

விஜய்... அந்தச் சிறுவர்கள் பேசிய அனைத்தையும்... மூளைக்குள் ஏற்றாமல்... 'இன்னும் அவள் தூங்கிக் கொண் டிருக்கிறாளா...' என்று மட்டுமே நினைத்தான்.

'இன்னுமா தூங்குறா... நல்ல குடும்பம்... இவளுக்குப் பள்ளி எழுச்சி பாட என் தங்கையா...?' என்று மனதுள் நொந்தபடி அவள் வீட்டை அடைந்தான்.

**அ**தன்பின் தீபன் வீட்டுக் கதவின் அழைப்பு மணியை அமுத்த...

விஜய் தன் ஒரு கையை அந்தச் சுவரின் மேல் வைத்தபடி கதவின் அருகில் நின்றிருக்க... விஜய் கை வைத்திருந்த இடத்தில் தீக்ஷா என்று இருந்தது... முதலில் அவன் கவனிக்கவில்லை.

ஆனால் யுகேந்தர் பார்த்துச் சொன்னான்.

"அடுத்த வீட்டுக் கதவை யாரும் தட்டக் கூடாதுன்னு பேரைக் கூடப் பொறிச்சு வச்சுருக்காண்ணா..." என்று சொல்ல...

விஜய் அப்போதுதான் கவனித்தான்.... தன் கை அவள் பெயரின் மேல் இருப்பது தெரிய... சட்டென்று எடுத்தான்.

அதன் பின் கதவு திறக்கப்பட...

அதைத் திறந்தவளின் கோலத்தில்... சத்தியமாக... அப்படியே திரும்பி விடலாமா என்று கூட யோசித்து விட்டான்... தன் தாய் தந்தையைப் பார்த்து முறைக்கவும் செய்தான், அவளின் கோலத்தில்...

ஆனாலும்.... அன்று பார்த்த தீக்ஷாவுக்கும் இன்று பார்த்த தீக்ஷாவுக்கும் அத்தனை வேறுபாடுகள்... அந்த வித்தியாசம் உறுத்தாமல் இல்லை... ஒப்பனை இன்றி... நெற்றியின் மத்தியில் சிறியதாகப் பொட்டு என்று பென்சிலில் தீட்டிய சித்திரமாக இருந்த... அவளை அவனது விழிகள்... அளவெடுக்கத் தொடங்கிய போதே... பின் அவள் கையில் வைத்திருந்த பிரஷைப் பார்த்தவன்... தன் நிலைக்கு வந்து... அவளைக் கேலி செய்வது போல்... தன் கைக்கடிகாரத் தையும்... எதிரில் இருந்த சுவர்க் கடிகாரத்தையும் பார்த்து வைத்தான்.

அவளோ அதை எல்லாம் அறியாமல்... அன்று தனக்கும் அவனுக்கும் வந்த வாக்குவாதம் எல்லாம் மறந்தவளாய் அவனைப் பார்த்துப் புன்னகைக்க...

அவள் புன்னகைத்ததைக் கூடக் கண்டு கொள்ளாமல் உள்ளே நுழைந்தான்... அவளைப் பார்த்து ஒரு இகழ்ச்சி யான பார்வையில்... அவளை எதிர் கொண்டவன் ஒன்றும் பேசாமல் அவளைத் தாண்டி உள்ளே சென்றான்.

உள்ளே சென்றவன் அங்கு இருந்த சோபாவில் அமர.... தீக்ஷாவும் அவள் அறையில் நுழைய... அவள் அறை விஜய்யின் எதிர்ப்புறம் இருக்க... விஜய் சட்டென்று எழுந்து கலைச் செல்வியை அங்கு உட்காரச் சொல்லிவிட்டு... கலைச்செல்வி இருந்த இடத்தில் அமர்ந்து... நிமிர... தீக்ஷாவின் புகைப்படம் அவனைப் பார்த்துப் பெரிதாய்ப் புன்னகைத்து வைத்தது.



இனிமேல் எழுந்து அடுத்த இடத்திற்கா போக முடியும்... பார்வையை அந்தப் புகைப்படத்தில் இருந்து விலக்கி... டீப்பாயின் மேல் இருந்த புத்தகத்தை எடுக்க... அங்கும் தீக்ஷாவின் கை வண்ணம் இருக்க... அந்தப் புத்தகத்தின் முதல் பக்கம் முழுவதுமே தீக்ஷா... தீக்ஷா... என்று பேனாவால் கிறுக்கி இருக்க... அதைப் படித்தா இருப்பான்... அப்படியே அதையும் வைத்து விட்டான்.

அவளின் நிழலான புகைப்படங்களும்... அவளின் அச்சாரங்களும்தான் இன்னும் சில வருடங்களில் தன் மன வலிகளின் மருந்தாய் ஆகப் போவது புரியாமல், அவற்றை எல்லாம் அன்று தவிர்த்தவன்.... பெரியவர்களைக் கவனிக்க ஆரம்பித்தான்... ஆனால் வாய் திறந்து பேசவில்லை.

வீட்டில்... வைத்தீஸ்வரன், ஜெயந்தி கைகால் புரியாமல் தவிக்க...

கலைச்செல்வி அவர்களின் நிலையைப் புரிந்து கொண்டு பேச ஆரம்பிக்க, இரு வீட்டின் பெரியவர்களும்.... தீபன்... ராதா திருமணத்திற்காக அடுத்த கட்ட நடவடிக்கை களைப் பற்றிப் பேச... நிலைமை ஓரளவு சுமுகமாகப் போய்க் கொண்டிருந்தது.

அப்போது, தன் பின்னால் தீக்ஷா அறைக் கதவைத் திறந்த சத்தம் அவன் காதுகளில் விழுந்தது... இவன் திரும்ப வில்லைதான்...

தீக்ஷா திறந்த வேகத்தோடு... பெரியவர்கள் பேசிக் கொண் டிருக்கிறார்கள் என்று உணராமல், “அம்மா! பசிக்குது... தோசை போட்டு வச்சுருக்கீங்களா...?” என்றபடியே வெளியே வர...

விஜய்யின் மதிப்பீடு.... இப்போது இன்னும் கீழே இறங்க... அவளோ அவள் வீட்டை விட்டுக் கீழே இறங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் இறங்கிக் கொண்டிருக்கிறாள்... என்பது அவள் ஹீல்ஸ் அணிந்து டக் டக் என்று இறங்கும் சத்தம் அவன் காதுகளில் விழ...

'ஹப்பா... போய்ட்டா!' என்றிருந்தது விஜய்க்கு... அது ஏனென்றும் புரியவில்லை... விஜய் அப்போதுதான் தீபனின் பெற்றோரிடம் பேச ஆரம்பித்தான்.

"எங்க ராதா ஆசைப்பட்டு விட்டாள். அதனால்தான்..." என்று அவன் ஆரம்பித்தபோதே, மீண்டும் அவன் காதுகளில் டக் டக் என்ற ஓசை கேட்க... இப்போதானே கீழே இறங்கிப் போனாள் இவள்... என்ற யோசனையில் விஜய்யின் மனம் போக,

உள்ளே வந்தவள்... அவனின் அருகில் வந்து...

"எக்ஸ்கியூஸ் மீ. என்னோட துப்பட்டா அங்க இருக்கு... எழுந்துக்கிட்டீங்கனா... நான் எடுக்க வசதியா இருக்கும்... இல்ல, நீங்க எடுத்துத் தந்தாலும் ஓகே தான்... சாரி..." என்று கேட்க...

அப்போதுதான் விஜய் அவளுடைய துப்பட்டா மேல் தான் சாய்ந்து இருப்பதைப் பார்த்தான். பார்த்த நொடியே எழுந்தும் வழி விட...

அதை எடுத்துத் தராமல் எடுக்க வைத்து விட்டானே... என்ற கோபம் அவள் முகத்தில்.... அதைக் கவனித்தவனுக்கு....

'வந்து எடுக்க மாட்டாங்களோ... கோபமெல்லாம் வருது.... பெரிய மகாராணி... இவளுக்கு நாங்க எடுத்துக் கொடுக்கணுமோ....' என்று நினைத்தவனுக்கு.... அவள் கோபத்தில் மனம் லேசாய் உல்லாசம் ஆனதுதான் உண்மை.

ஆனால், துப்பட்டாவை எடுத்த தீக்ஷா... அடுத்த நொடியே அவள் கழுத்தில் சுற்றிப் போட்டபோது... அதன் நுனி... அவன் முகம் மேல் பட்டு விலக... அவள் அதை உணரவில்லை... ஆனால்.... விஜய்.. கொதித்து விட்டான்.



அவள் ஆடை தன்னைத் தீண்டியதை அவன் விரும்ப வில்லை.

அது மட்டும் இல்லாமல் பெண்ணாக இருந்து... தன் ஆடை அடுத்தவரின் மீது பட்டதைக் கூட உணராமல் இருக்கும் அவளை நினைத்து இன்னும் கோபம் ஆனான்.

அதில் அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே...

தீக்ஷாவோ அவன் புறம் திரும்பி... துப்பட்டாவை எடுத்துக் கொடுக்காமல் வழி விட்டதைச் சொல்லிக் காட்டி, அவனுக்கு நன்றி நவில... தீக்ஷா என்ற அந்த நங்கை நஞ்சாய்க் கசந்தாள்தான் விஜய்க்கு...

"இவ ட்ரெஸ்ஸை எல்லாம் தொட்டு எடுத்துக் கொடுக்க நான் என்ன இவ வீட்டு வேலைக்காரனா... நான் விஜயேந்தர்!' என்று செருக்கில் இறுமாந்துதான் இருந்தான்.

அதன் பிறகு...

விஜய்யிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் ராதா திருமண வேலைகளில் அவன் ஒதுங்கிக் கொண்டான்... ஒதுங்கினாலும்..... சுரேந்தர் மேல் கவனம் வைத்திருந்தான். அவன் எதையாவது மறந்து விட்டாலும்... அவனிடம் சொல்லி அவனைத் திருமண வேலைகளில் முழுமையாகச் செய்ய வைத்தான்...

விஜய் தன் அலுவலகத்தில் இருக்க... சுரேந்தர் சைட்டில் இருந்தான்... அப்போது... அசோக் விஜய்யிடம் வந்து...

"விஜய் சார்... இன்னிக்கு உங்களை மீட் பண்ண.... டை அப் பற்றிப் பேச... கண்ணன் வர்றாங்க... இஏ-ல மீட் பண்ணலாம்னு நீங்கதான் சொல்லிருந்தீங்க..."

"எத்தனை மணிக்கு?"

"ஐந்து மணிக்கு.... " என்ற அசோக்கிடம்,

"சரி!" என்று சொன்னவன், அடுத்த அரை மணி நேரத்தில் அசோக்கோடு அந்த நபரைச் சந்தித்தும் முடித்து இருந்தான்.

அசோக்கோடு பேசியபடி வெளியே வந்தவன்... யுகேந் தரை ஆர்த்தியோடு பார்க்க... அசோக்கை வேகமாய்ப் பின்னே இழுத்தவன்...

"அசோக்.... யுகி அந்தப் பொண்ணு ஆர்த்தியோட இருக்கான்... இப்போ நாம போனால் நமக்குத் தெரியும்னு அவனுக்கும் தெரியும்... அவங்க போன பின்னால் நாம போகலாம்..." என்றபோது,

"சார்... உங்களுக்குக் கோபம் வரலையா?" ஆச்சரிய மாய்க் கேட்டான் அசோக்.

"நானும் சுரேந்தரும்தான் பிசினஸ் பிசினஸுனு புலி வாலைப் பிடித்து விட்டோம்... அவனாவது லைஃபை என்ஜாய் பண்ணட்டும்... ஆர்த்தி நல்ல பொண்ணு அசோக்... என்ன... தீனாவோட தங்கையா போய்ட்டா... அதுதான் பிரச்சனை... ஆனாலும்... என் தம்பிக்குத் தர மாட்டேன்னு சொன்னா விட்டுருவோமா என்ன...?" என்றவனிடம் அவன் ஜாலி மூடில் இருப்பதை உணர்ந்த அசோக்,

"கடத்திட்டு வந்தாவது யுகி சார்க்கு மேரேஜ் பண்ணிட மாட்டீங்க!" என்று சொல்ல... இப்போது விஜய் முறைக்க.... அசோக் அமைதி ஆகிவிட்டான்...

பின் வேறு புறம் ஏறி மேலே வர...இப்போது அசோக் விஜய்யைப் பின்னால் இழுத்தான்.

"என்ன அசோக்!" என்றபோதே...

அவன் கை காட்ட... அசோக் கை காட்டிய திசையில் தீக்ஷா... சில பெண்களோடு... அமர்ந்திருந்தாள்... அவள் தோழிகள் போல என்று நினைத்துக் கொண்டான்.



"இவ வேறயா... இவ யுகியைப் பார்த்துத் தொலைக்கப் போறாளே... இவ வாய்ல எதுவும் இருக்காதே... ஓட்டை வாயாச்சே... டேய் யுகி, இவகிட்ட மாட்டப் போறியா..." என்று யோசித்தபடி இருக்க,

அசோக்... விஜய்யிடம், "சார்! வேற பக்கம் போக லாமா?"

"எதுக்கு அசோக்... இவளுக்கெல்லாம் பயந்து வேற பக்கம் போகணுமா?" என்றபடி சற்றுத் தள்ளி அவள் இருந்த இடத்தின் பின்னே அமர்ந்தனர் இருவரும்... எச்சரிக்கையாக முதுகுப் புறம் காட்டியபடியே.

ஆனாலும் விஜய்க்கும் கொஞ்சம் பயம்தான்... தன்னைப் பார்த்தால்... எங்கு இத்தனை பேர் முன்னிலையில் தன்னிடம் பேசி விடுவாளோ... தன்னை அவள் சொந்தம் என்று அவள் தோழிகளின் முன் அறிமுகப்படுத்தி விடுவாளோ என்று அவனுக்கு அவளிடம் பேசக் கூடப் பிடிக்கவில்லை... அவள் தன் சொந்தம் என்று சொல்லிக் கொள்ளவும் விருப்பம் இல்லை..

ஆனால் அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் தீக்ஷா குனிந்து மொபைலில் தீவிரமாக... ஏதோ செய்து கொண்டிருந்தாள். அதனால் இவர்கள் வந்ததைக் கவனிக்க வில்லை...

ஏன் அவள் தோழிகள்தான் பேசிக் கொண்டிருந் தனர்... தீக்ஷாவின் குரல் இதுவரை அவன் காதுகளை அடையவில்லை.

'என்ன பேசாம இருக்க... வீட்லதான் வாயா?' என்றெல்லாம் நினைத்தவன்...

"தீக்ஷா! மொபைலைக் கட்டிட்டு அழாம... பேசுடி!" என்று தீக்ஷாவோடு அவள் தோழிகள் பேச ஆரம்பிக்க... அவர்களின் பேச்சில் கவனம் வைத்தான் விஜய்.

"ப்ச்... இருங்கடி. இண்ட்ரெஸ்ட்டா விளையாண்டுட்டு இருக்கேன்... எங்க பக்கத்து வீட்டு வாண்டு என்னை விட அதிகப் பாயிண்ட்டுடி... இன்னைக்கு அவனை நான் பீட் பண்ணலை... என் பேர் தீக்ஷா இல்லை!" எனும்போது விஜய்க்கு லேசாய்ச் சிரிப்பு வர.... அசோக் இருந்ததால் அதை வாய்க்குள்ளேயே அடக்கினான்.

திருமணம் முடிவாகி இருக்கும் போல ஒரு பெண்ணுக்கு... அதற்காக ட்ரீட்டுக்காக வந்திருந்தார்கள் போல....

"தீக்ஷா மட்டும் சொல்லலைன்னா.... இவ மேரேஜ் ஃபிக்ஸ் பண்ணிய விசயத்தையே மறைச்சுருப்பாடி..."

திருமணம் முடிவாகி இருந்த பெண்ணோ தீக்ஷா விடம்...

"இவ மட்டும் சொல்லாம இருந்திருந்தால்.... ட்ரீட் வைக்காமலே இருந்திருக்கலாம்... ஓட்டை வாய்!" என்று ஆரம்பிக்க,

தீக்ஷா இப்போது வாய் திறந்தாள்.

"யார்டி ஓட்டை வாய்... எல்லோரும் கேட்டுக்கோங்க... இவ சிக்ஸ் இயர்ஸா லவ் பண்றாடி. அது எனக்கு மட்டும்தான் தெரியும். உங்க யார்கிட்டயாவது சொல்லி இருப்பேனா...? நானாடி ஓட்டை வாய்...? ச்சே! இந்த ட்ரீட்டும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்...." என்றபடியே எழ,

"அய்யோ தீக்ஷா... சும்மா சொன்னேன்டி... போகாதடி!" என்று அவள் தோழி பதற, இப்போது விஜய்யும் பார்த்தான்.

"இவ்ளோ ரோசமா இவளுக்கு...." என்று நினைக்கும் போதே,

"ஹூசு... அம்மா போன் பண்றாங்க... பேசிட்டு வருகிறேன்..." என்றபடி சென்றவள்....



"ஓட்டை வாய்னு சொன்னேல... பெரிய ட்ரீட் எனக்கு மட்டும் தனியாத் தரணும்.... இதுதான் உனக்கு நான் தருகிற பனிஷ்மெண்ட்!" என்று தன் தோழியைப் பார்த்துச் சொல்ல... தோழியர் சிரிக்க....

விஜய்க்கும் சிரிப்பு வர... இம்முறை அசோக்கிற்காக எல்லாம் மறைக்கவில்லை... சிரிப்பு உதடுகளைத் தாண்டி வராமல் பார்த்துக் கொண்டான்.

ஆனால் சற்று நேரத்தில்

தீக்ஷா அந்தப் பக்கம் போக...

அவளின் தோழி ஒருத்தி... "தீக்ஷா அண்ணியா வரப் போறவங்க பெரிய இடம் போலப்பா... அவங்க அண்ணிக்கு மூணு அண்ணன்களாம். இன்னும் யாருக்கும் மேரேஜ் ஆக வில்லையாம்!" என்று பேச ஆரம்பிக்க... விஜய் முகம் மாற ஆரம்பித்தான்....

"ஓஓஓ... தீக்ஷாவை ஓட்டுறதுக்கு சூப்பர் மேட்டர்டி... நம்மள எல்லாம் எப்டி ஓட்டுவா... மாட்டுனாடி... மூணு பேரில் தீக்ஷாவுக்கு செட் ஆகிற மாதிரி யாராவது இருக்கணுமே...." என்று இன்னொருத்தி சுவாரஸியமாக...

"ஆமாடி.... ஒருத்தன் பேர் விருமாண்டி... இன்னொருத் தனை என்னமோ பேர் சொல்லிச் சொன்னா... ஆனால் யுகேந்தர்னு மூணாவது பையனைப் பற்றிக் கொஞ்சம் சொன்னாள்... யுகேந்தர்னு சொல்லும் போதே தெரியல... மேடத்துக்குப் பிடிச்சா பட்டப் பேர் வைக்க மாட்டாங்கல்ல... சோ... அந்தப் பையன்தான்!" என்று அந்தப் பெண் பேசிக் கொண்டே செல்ல... விஜய் சற்று முன் இருந்த நிலை மாறி எழுந்து விட்டான்...

அசோக் வேறு... அவனை நக்கலாய்ப் பார்ப்பது போல் இருந்தது... 'விருமாண்டி'னு வேற பட்டப் பேரா... இந்தப் பொண்ணுங்க பேசறதை வைத்துப் பார்த்தால்... எனக்கு விஜய்னு ஒரு பேர் இருக்கிறதே தெரியாது போல... அதற்கு

மேல் அவன் அங்கு இருக்கப் பிடிக்காமல்.... யுகேந்தரும் இந்நேரம் கிளம்பியிருப்பான் என்று முடிவு செய்தவன் கீழே இறங்கிப் போனான்...

ஆனால் அவன் கண்ட காட்சி. அங்கு தீக்ஷாவோடு யுகேந்தர் பேசிக் கொண்டிருக்க... ஆர்த்தி இல்லை அவர்களோடு... அவர்களை நோக்கி நடந்தவனுக்கு,

யுகேந்தரோடு..... தீக்ஷா சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண் டிருப்பதைப் பார்த்தவன் மனம் எதையோ எதையோ சிந்தித்தது.

ஆர்த்தியோடு யுகி வந்ததைப் பார்த்திருப்பாளா... இல்லையா என்பது வேறு தோன்ற... பார்த்திருக்க மாட்டாள் என்றே அவன் மனம் உறுதி செய்தது.

யுகி யாரிடமும் இயல்பாகப் பழகுபவன்... ஒரு வேளை.... யுகி அவளுடன் பழகுவதைப் பார்த்து... தீக்ஷா தன் மனதில் ஆசையை வளர்த்துக் கொண்டால்... பிரச்சனை ஆகி விடும்.... யுகியைக் கொஞ்சம் இவளோடு பார்த்துப் பேசச் சொல்ல வேண்டும் என்று நினைத்தபடி அவர்கள் அருகில் போய் நிற்க...

"அடிப் பாவி. எங்க அண்ணாதான் உனக்கு விருமாண்டியா!" என்ற யுகேந்தர் பேசுவதை மட்டும் அவன் கேட்க நேர, தீக்ஷாவும் திரும்ப... அவனுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

அவள் முகம் பார்த்தவனுக்கு... அவள் யுகேந்தரைப் பார்த்துச் சிரிப்பை அடக்குவது தெரிய... இன்னும் கோபம் வேறு வந்து தொலைக்க... அவனையே கட்டுப்படுத்த முடியாமல் நிற்க... அடுத்து நல்லவேளை அவளாகவே கிளம்ப ஆரம்பித்தாள்.

அப்பாடா! கிளம்பப் போகிறாள்... என்ற நிம்மதியில் அவன் மூச்சு விட.....



அவள் நிம்மதியாய் இருக்க விடுவாளா என்ன...!

"யுகி பாய்.... என் ஃப்ரெண்ட்ஸ் தேடுவாங்க!" என்று சொல்ல....

"என்னது யுகியா... அந்த அளவு ரெண்டு பேரும் நெருக்கமா!" என்று திகைத்துத் தீக்ஷாவை அவன் பார்த்தான்.

அதற்கு மேலும் அவனவள் அவனை அதிர வைத்தாள்... அவனை, "அத்தான்!" என்று அழைத்து....

அன்று கசந்ததுதான் அந்த வார்த்தைகள்...

தீக்ஷாவின் புகைப்படத்தோடு ஒன்றி அவளின் 'இந்தராகிப்' போயிருந்த விஜய்க்கு... அவள் வாயிலிருந்து வந்த அத்தான் என்ற அழைப்பை... இன்று நினைத்துப் பார்த்த போது... நாடி நரம்பெங்கும் ஓடி.. உயிர் தீண்டி உற்சாக வீணை மீட்ட.. தன்னவளின் நினைவுகளில் இன்னும் ஆழமாக ஆரம்பித்தான்....

**தீ**க்ஷா கிளம்பியதும் யுகேந்தரைப் பார்த்த விஜய்.....

"என்னடா நடக்குது இங்க... என் பேரை ஏலம் விட்டுட்டுப் போறா... அவளுக்கு நான் அத்தானா... உன்னைச் சொல்லணும். வா, கிளம்பலாம்!" என்று அழைக்க...

"நீங்க முன்னால போங்க அண்ணா..." என்றவனிடம் ஒன்றும் சொல்லாமல் முறைத்தபடியே...

யுகேந்தரிடம் இருந்த கார் கீயை அசோக்கிடம் மாற்றியவன்... யுகியைத் தன் காரில் ஏற்றினான்...

காரை ஓட்டிச் சென்றபடி.... யுகேந்தரைப் பார்த்த விஜய்... அவனிடம்...

"அந்தப் பொண்ணு உன் பேரைச் சுருக்கிக் கூப்பிட்றா... ஏன் உனக்குப் பட்டப் பேர் வைக்கலையா...? அந்த அளவுக்கு நெருக்கமோ...!" என்றபடி நக்கலாகக் கேட்டவன்,

"உன் அண்ணனை விருமாண்டின்னு பட்டப் பேர் வச்சு சொல்றா... நீயும் கேட்டுட்டுப் பல்லை இளிக்கிற... அப்படியே நாலு அறை விட்டுருந்தா நீ என் தம்பி..." என்று பல்லைக் கடிக்க...

"இல்லண்ணா... அவ உங்களுக்கு விருமாண்டினு பட்டப் பேர் வச்சிருந்தது எனக்கு இப்போதான் தெரியும்...." என்றவனிடம்,

"முதலிலே தெரிஞ்சுருந்தா மட்டும் என்ன பண்ணி இருந்திருப்ப?" உடனடியாக விஜய் கேட்க,

யுகேந்தர் திருதிரு வென்று விழித்தான்...

அவனின் பார்வையைப் பார்த்த விஜய்,"சரி சரி.... விருமாண்டினு என் காதில் விழுந்தப்ப மட்டும்... நான் என்ன பண்ணிக் கிழிச்சேன்..." என்று அவனைக் கூலாக்கும் விதத்தில் பேசியவன்.... கொஞ்சம் சீரியஸாக ஆரம்பித்தான்.

"இங்க பாரு.... நீ ஈஸியா எல்லோரிடமும் பழகிருவ... அந்தப் பொண்ணு ஏதாவது மனசுல நினைத்து உன்கிட்டப் பழகிடப் போகுது... முடிஞ்ச அளவு தள்ளி நிற்கப் பாரு.. அது தான் உனக்கும் நல்லது... நம்ம குடும்பத்துக்கும் நல்லது... இவள்லாம் நம்ம குடும்பத்துக்கு ஒத்து வரமாட்டா... என்ன... புரிஞ்சதா?" என்றவனிடம் யுகேந்தர் தலை ஆட்ட,

"என்ன புரிஞ்சது?" என்று கேட்க,

"லவ் பண்ணக் கூடாது!" என்று யுகேந்தர் ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்ல...

விஜய்க்குச் சிரிப்பே வந்து விட்டது... சிரித்தும் விட்டான்...

"நாம எப்போ லவ் பண்ணக் கூடாதுன்னு சொன்னோம்... அடேங்கப்பா... இவரும் அப்டியே என் பேச்சை மதிச்சு... லவ் பண்ண மாட்டாராமே.... ஏற்கெனவே நீ பண்ணிட்டு இருக்கிறதுக்குப் பேர் என்னடா, யுகி... என் கிட்டயே.... நீ இந்த நடிப்பு நடிக்கிற...!" என்றபடி, "இவளை லவ் பண்ணக் கூடாதுன்னு சொன்னேன்...." என்று திருத்த....



யுகேந்தர் இப்போதும் தலை ஆட்ட...

"தலையைத் தலையை ஆட்டு... நீ உன் ஃப்ரெண்டோட ஏதோ அவுட்சோர்சிங் ப்ராஜெக்ட் பண்ணணும்னு இருந்தியே, என்னாச்சு?" என்று கேட்க,

"இல்லண்ணா... அவன் இன்னும் ஒரு ஆறு மாதம் ஆகும்னு சொன்னான்!" என்று சொல்ல....

"என்னமோ போ... எங்க கூட வா என்றால்... வர மாட்டேன் என்கிறாய்... அதுக்கு மேல் உன் இஷ்டம்..." என்றவன்... ஞாபகம் வந்தவனாய்... யுகேந்தரிடம் கேட் டான்...

"உன்னை அத்தான்னு நீ கூப்பிடச் சொன்னியா அவளை... இல்லை தீக்ஷாவா கூப்பிட்டாளா?" என்று கேட்க,

"நான்தான் கூப்பிடச் சொன்னேன், அண்ணா... என்னைத்தான் கூப்பிடச் சொன்னேன்... என்கிட்ட அது ஓல்ட் ஃபேஷன்னு சொல்லி... என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடறேன்னு சொல்லிட்டா... ஆனா உங்களைப் பார்த்ததும் ஏன் சொன்னானு தெரியல!" என்று அப்பாவியாய்ச் சொல்ல... உண்மையிலேயே அப்பாவியாகத்தான் சொன் னான் யுகேந்தர்.

"என்ன ஏன்னு தெரியல... மேடம் என்கிட்ட அவங்க வால் தனத்தைக் காண்பிக்கிறாங்களாம்...." என்றவனின் முகம் இப்போது கடுமையாகக் காட்ட...

"ரொம்பப் பேசிட்டு இருக்கா... என்னைக்கு என்கிட்ட மாட்டிட்டு வாங்கிக் கட்டிக்கப் போறாளோ..." என்று சொல்லிய படி... தன் தம்பிக்கு அவன் காதில் ரத்தம் வரும்வரை அட்வைஸ் மழையை வெகு நாட்களுக்குப் பிறகு வழங்க ஆரம்பித்திருந்தான் விஜய்.

# 20

அன்று அதிகாலை நான்கு மணி அளவில் உறக்கத்தில் இருந்த விஜய்க்கு... அடிக்கடி வரும் கனவு அன்றும் வர... உடல் வியர்த்து எழுந்தான். போன முறை இந்தக் கனவு வந்தபோது... ராதா விஷம் குடித்த நினைவு வர... வேகமாய்த் தன் தங்கையின் அறைக் கதவைத் தட்டப் போனவன்... அதன்பின் அதைச் செய்யாமல் அவளுக்குப் போன் செய்ய... அவளும் எடுத்துப் பேச... நிம்மதி ஆனபடி... ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிப் போனை வைத்தவன்...

'ச்சே... என்ன கனவு இது... நினைவுக்கும் வந்து தொலைய மாட்டேங்குது...' என்று எரிச்சலானவன்... அதன் பிறகு தூங்கவே இல்லை. அன்றுதான் ராதாவிற்குப் புடவை மற்றும் நகைகளை வீட்டிற்கு எடுத்து வரச் சொல்லி இருந்தான். இன்று போய் இந்தக் கனவு வருகிறதே... என்று ஒரு புறம் மனம் பதைபதைக்க நடை பயின்று கொண்டிருந்தான் விஜய். ஆறு மணிக்கு மேல்தான் உறக்கம் வரக் கண் அயர்ந்தான்.

தீபன் வீட்டினருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது என்பதால்... அவர்கள் தங்கள் வீட்டிற்கு வரும்போது தான் இருக்கக் கூடாது என்று முன் தினமே தீர்மானித்திருந்தான். ஆனால் அதற்கு மாறாக, அன்று தூங்காததாலோ என்னவோ தலைவலி வேறு வந்து உயிரை எடுக்க... விஜய் பேசாமல் வீட்டிலேயே இருந்து விட்டான்.

கிட்டத்தட்ட பத்து மணி அளவில் எழுந்தவனுக்கு... இன்னும் தலைவலி குறையாமல் இருக்க... சிகரெட்டைக் கையில் எடுத்தபடி பால்கனியில் வந்து நிற்கவும்... தீபன் வீட்டினர் அவன் வீட்டின் முன் வந்து இறங்கவும் சரியாக இருக்க... கடைசியாக இறங்கிய தீக்ஷாவைப் பார்த்துத் திகைத்தான் விஜய்.



இதற்கு முன் செய்த ஆராய்ச்சிப் பார்வை எல்லாம் போய்... ஆண்மகனாய்... அவளையே பார்த்தபடி நின்றிருந்தவன்.. பார்ப்பது தவறென்று தெரிந்தும் அவள் மேல் வைத்த விழிகளை அகற்றாமல் நின்றிருந்தான் விஜய்.

அவளைப் புடவையில் பார்ப்பது இதுவே முதல் முறை... சுடிதாரிலும் ஜீன்ஸிலும் பார்த்தபோது சின்னப் பெண் போலத் தோன்றியவள்... புடவையில் அம்சமாக அவன் கண்ணில் தெரிய... அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு... காரை விட்டு இறங்கிய தீக்ஷா... அவனது இல்லத்தை அளவெடுப்பது நன்றாகப் புரிய... தங்கள் வீட்டைப் பார்த்து... விரிந்த அவளின் விழிகளில்... அவளைச் சுவாரஸ்யமாய்ப் பார்த்த விஜய்யின் பார்வை... இப்போது அலட்சியமாக மாறி இருக்க... விஜய் அந்தப் பார்வையை மாற்றாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது தீக்ஷாவும் மேலே பார்க்க... அவன் பார்வையைக் கண்ட தீக்ஷா... தடுமாறி விழ, விஜய்க்குச் சிரிப்பும்... அதே நேரத்தில் முதல் முதலா நம்ம வீட்டுக்கு வரும்போதே, கீழே விழுந்து தொலைக்கிறாளே என்ற எண்ணமும் ஒருசேர வந்தது.

கூடவே அவன் கண்ட கனவின் ஞாபகமும் வர... எதுவும் தப்பா நடக்கப் போகிறதோ என்ற எண்ணம் அவனை அலைக்கழிக்க... அவளையே பார்த்துக் கொண்டிருந்தவனை... விழுந்த தீக்ஷா எழுந்தபடி மீண்டும் அவனைப் பார்த்து முறைக்க...

அவளின் முறைப்பைப் பெற்ற விஜய்க்கு... அவன் தலைவலி கூடுவதற்குப் பதில் காணாமல் போனதுதான் அன்றைய ஆச்சரியம்.

கீழே போக வேண்டாம் என்று விஜய் தனது அறையிலேயே இருந்து விட்டான்தான். கலைச்செல்வி வந்து

அவனை வற்புறுத்தி அழைக்க... வேறு வழியின்றி விஜய்யும் கீழே இறங்கி வந்தான். இறங்கும்போது தீக்ஷாதான் அவன் பார்வை வட்டத்தில் முதலில் விழுந்தாள்.

தீக்ஷாவின் மேல் விழுந்த பார்வையை உடனடியாக மாற்றி... ஹாலில் இருந்த அனைவரின் மேலும் சுழற்றி னான்.

ஒருபுறம் யுகேந்தரும் தீக்ஷாவும் ஏதோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். அந்தப் பக்கம் தீபன், ராதா கண்களால் கதை பேசிக் கொண்டிருக்க... சுரேந்தர் மட்டும் தனியே... விதியே என்று அமர்ந்திருந்தான். இளையவர்கள் நிலை இப்படி இருக்கப் பெரியவர்களை நோக்கினான் விஜய்.

விஜய்யின் தந்தை... தீபன் தந்தையோடு பேசிக் கொண்டிருக்க... பெண்மணிகள் இருவரும் புடவை மற்றும் நகையில் ஆர்வம் காட்டிக் கொண்டிருந்தனர்.

விஜய் மாடிப் படிகளில் இறங்கி வரும்போதே யுகேந்தரைப் பார்த்தபடியே வர... யுகேந்தரும் மேலே பார்க்க... கைகளால் சைகை செய்தான். தீக்ஷாவை விட்டுத் தள்ளி அமருமாறு... அதைப் புரிந்த யுகேந்தரும் தள்ளி அமர... விஜய்யும் கீழே வந்திருந்தான்.

ஆனால் தீக்ஷாவோ யுகேந்தரை விடவில்லை. யுகேந்தர் அருகில் வந்து மீண்டும் அமர... விட்ட தலைவலி விஜய்க்கு மீண்டும் வர ஆரம்பித்தது போல் இருந்தது.

அதிலும் அவள் யுகேந்தரோடு வாய் மூடாமல் பேசிக் கொண்டே இருக்க... அதற்கு யுகேந்தரும் ரகசியமாகப் பதில் சொல்லிக் கொண்டிருக்க...

அதற்கு மேல் அவனால் பொறுக்க முடியவில்லை.

யுகேந்தரிடம் அக்னிப் பார்வையை வீச... தானாக விஜய்யின் அருகில் வந்து அமர்ந்தான்.



விஜய் யுகேந்தரிடம், “உனக்கு ஒரு தடவை சொன்னாப் புரியாதா, யுகி... இத்தனை பேர் முன்னால் அவகிட்ட என்ன ரகசியம் பேசிட்டு இருக்க... ஏன்டா சொல்றதைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிற... எதுனாலும் ஏழரையை இழுத்து விட்டுடாதே...” என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

அண்ணா தன்னையும் தீக்ஷாவையும் தவறாக நினைத்து விட்டானோ என்று... அதை உணர்த்தும் விதத் தில்... விஜய் பேசி முடிக்கும் முன்னே யுகியும் அவனுக்குப் பதில் பேச ஆரம்பித்தான்.

“அண்ணா, தீக்ஷா என்கிட்ட தப்பான எண்ணத்தில் பழக மாட்டா... அவ எதையும் மனசுல வளர்த்துக்க மாட்டா... நீங்கதான் புரிஞ்சுக்க மாட்டேன்கிறீங்க...” என்று சொன் னான்.

தீக்ஷாவுக்கு ஆர்த்தியைத் தான் காதலிப்பது தெரியும் என்பதால் யுகி சொல்ல...

விஜய்க்கு அந்த விசயம் தெரியாமல் போனதால்... தீக்ஷாவின் மனதை நினைத்துப் பேச... அதற்கு மேல் தன் தம்பியும் புரிந்து கொள்ளாமல் பேசிக் கொண்டிருக்க... அதுவும் அவனுக்கே விளக்கம் சொல்லிக் கொண்டிருக்க... தலைவலி வேறு ஒருபுறம் திடீரென்று வந்து விட... அந்த இடத்தில் அவனால் இருக்கவே முடியவில்லை. சரி, எழுந்து போகலாமா என்று யோசிக்கும் போதே... தீக்ஷாவின், “விஜய் அத்தான்...” என்று குரல் கேட்க,

அவள் கேலியாக அழைத்த விதத்திலேயே... அது அவனை வம்புக்கு இழுப்பது போல் இருக்க... அவனோடு யாருமே இந்த மாதிரி எல்லாம் பேசியதில்லை. வந்த கோபத்தைத் தனக்குள் இழுத்துப் பிடித்துக் கொண்டு... காது கேட்காதது போல் இருந்தான் விஜய்.

யுகேந்தர் தன் அண்ணனை இப்போது பார்க்க... விஜய் முகமே கோபத்தை மறைக்க முயன்று கொண்டிருக் கிறான் என்பதைக் காட்ட... தீக்ஷா அவன் கோபம் புரியாமல் விளையாடிக் கொண்டிருக்கிறாள் என்பது புரிய... யுகேந்தர் பயந்து விட்டான். அவளிடம் பார்வையால் எச்சரிக்கை விட... தீக்ஷாவோ அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் அதை அலட்சியம் செய்தவள்... விஜய்யின் குணம் தெரியாமல் தன் குறும்பைக் காட்டிக் கொண்டிருந்தாள்.

மீண்டும் அவள், "விஜய் அத்தான்..." என்று அழைக்க, கொதிநிலையின் உச்சத்தை அடைந்தான் விஜய். அதன் விளைவு... தன் வேலையாளின் கன்னங்களில் அவன் கைத்தடம் பதிந்தது.

தீக்ஷா... ஒரு கணம் அதிர்ந்து, கொஞ்சம் நடுக்கத்துடன் அவனைப் பார்க்க... இப்போது அவன் தீக்ஷாவிடமே வந்தான். சுற்றும் முற்றும் பார்க்காமல், "ஏய், இந்த அத்தான் பொத்தான்லாம் இவனோட நிறுத்திக்க..." என்று யுகேந்தரைக் காட்டியவன்...

"என்னை அத்தான்லாம் கூப்பிட ஒரு தராதரம் வேண்டும். அது உனக்குலாம் இல்லை. என்ன... என் தங்கச்சியை வச்சு உள்ளே நுழையப் பார்க்கிறியா... அசிங்கமாயிடும்..." என்றபடி மாடிப் படி ஏற... தீக்ஷா கண்களில் கண்ணீரே வந்து விட்டது. அதை மறைக்க அவள் தலை குனிய... இப்போது தீபன் எழுந்து பேச வர...

தீக்ஷாவின் கண்ணீரையும், தீபன் கோப முகத்தோடு வருவதையும் விஜய் பார்த்தான்தான். ஆனால் எதையும் லட்சியம் செய்யாமல் சென்று கொண்டிருந்தான். அவன் அங்கு இருந்தால் இன்னும் என்னென்ன பேசுவானோ, அவனுக்கே தெரியவில்லை. அந்த அளவு கோபம்... கோபம் அவன் புத்தியை மறைத்தது என்று கூடச் சொல்லலாம்.



காலையில் அவளைத் தன்னை மீறிப் பார்த்து விட்டோம் என்ற எண்ணம் வேறு, அவன் கோபத்தை இரு மடங்காக்கியதோ என்பது அவனுக்கே தெரியவில்லை. தன்னைப் பார்க்க வைத்து விட்டாளே என்ற எண்ணமும் அவன் இந்த அளவு தரம் தாழ்ந்து பேச வைத்து விட்டது என்பதே உண்மை. தன் மேல் உள்ள கோபத்தை... யாரிடம் காட்ட வேண்டும் என்று தெரியாமல்... வேலையாளை அடித்தவன்... தீக்ஷாவிடமும் காண்பித்தான் விஜய்.

கலைச்செல்வி அவனைக் கோபத்தோடு அழைத்து நிறுத்தினார். தீக்ஷா அவன் குணம் தெரியாமல் விளை யாடினாலும்... அவளின் கள்ளம் கபடம் அற்ற குணம் கலைச் செல்விக்குப் பிடிக்க... அதில் தீக்ஷாவையும் மிகவும் பிடித்துப் போக... அவள் கண் கலங்கித் தலை குனிந்திருப்பது அவர் மனதை வருத்த... தானே நிலைமையைச் சரி செய்தார்.

தீக்ஷாவுக்கு ஆதரவாகப் பேசி... அதில் தீபன் உட்பட அவனது குடும்பம் சமாதானமாகி விட... ஆனால் விஜய் இன்னும் ஆத்திரமானான்.

அது ஏனென்றால் தன் அன்னை தீக்ஷாவுக்கு ஆதரவாகப் பேசியதால்... இன்னும் இங்கு இருந்தால் தன்னை விடச் சிறியவளிடம் சரிக்குச் சரி பேசி... அவளிடம் மல்லுக் கட்டுவது... தன் உயரத்தைக் குறைப்பது போல் தோன்ற... கோபத்தில் படி ஏற... தீக்ஷா அவனை, 'அத்தான், அத்தான்...' என்று அழைத்து, அதை ஏலம் விட... அவன் படிகளில் ஏறிக் கொண்டிருப்பது போல், அவளின் மீதான அவனது வெறுப்பும் ஏறிக் கொண்டிருந்தது.

பேசாமல் வந்து அறையில் படுத்து விட்டான். தன் தாய் மேல் கோபத்தோடு...

தீக்ஷா வீட்டினர் கிளம்பி விட... அவன் தாய் கலைச்செல்வி உள்ளே வந்தார்.

விஜய் அருகே வந்து அமர... விஜய்யும் அவரின் அரவம் உணர்ந்து விழித்தவன், எதுவும் பேசாமல், எங்கோ பார்த்தபடி இருக்க... அதிலேயே அவன் கோபம் புரிந்தது கலைச்செல்விக்கு.

29 வயது ஆகியும் இன்னும் சிறு பிள்ளை அடம் பிடிக்கும் விஜய்யைப் பார்த்துச் சிரிப்புதான் வந்தது, அவன் தாய்க்கு. இருந்தும் அவன் இருக்கும் கோபத்தில் தான் சிரித்தால் இன்னும் கோபமாவான் என்பதை உணர்ந்து...

"விஜய்... அவ சின்னப் பொண்ணுடா. அவளுக்குச் சரி சமமா நீ சண்டை போட்டா... உனக்குத்தான்பா மரியாதை இல்லை. அதனாலதான் உன்கிட்ட பேசினேன். அம்மா மேல கோபமாப்பா...? நீ பேசினதும் ரொம்பத் தப்புடா. ஆனா தீக்ஷாவும் அப்படி விளையாட்டாப் பேசி இருக்கக் கூடாதுதான்..." என்று சமாதானக் கொடி வீச...

"ப்ச்... விடுங்கம்மா. அவ பண்றதெல்லாம் தப்பு இல்ல. எல்லாம் நம்ம ராதாவைச் சொல்லணும். எனக்கு எதுவும் பிடிக்கலைம்மா... ஏதோ மனசே சரியில்லம்மா... அது ஏன்னும் சொல்லத் தெரியலை. அந்தப் பொண்ணு நல்லதுக்குத்தான்மா சொன்னேன்... யுகி மனசுல எதையும் வச்சுக்காம பேசுறான்... அவ ஏதாவது ஆசையை வளர்த்துக் கொள்வாளோனு... மற்றப்படி அவகிட்டல்லாம் சண்டை போடணும்னு ஆசையா எனக்கு... அது மட்டும் இல்லாம... எனக்கு இன்னைக்கு ஒரே தலைவலிம்மா... அது போன பின்னால் கீழே வந்தா... புண்ணியவதி பேசியே வர வச்சுட்டா..." என்றவனிடம்,

"ஏம்பா... திடீர்னு தலைவலி...? அம்மா மருந்து தேய்ச்சு விடவா...?" என்று ஆதுரமாகப் பேச... விஜய் தன் அன்னையின் வார்த்தைகளில், தன் கனவை அவரிடம் சொல்ல ஆரம்பித்தான்.



"அம்மா, ஒரே மாதிரியான கனவு அதுவும் மூணு முறைக்கு மேல் வந்தால்... என்ன ஆகும்? ஆனா, கனவு என்னன்னே ஞாபகத்துக்கே வர மாட்டேங்குது. ஆனா மனசு எல்லாம் வலி... உயிர் போற மாதிரி வலிம்மா..." என்று சொன்னவனின் கண்களில் அந்த வலி தெரிய...

செல்வியே பயந்து விட்டார்.

"என்னப்பா சொல்ற... இந்த அளவு ஃபீல் பண்ற?"

"தெரியலம்மா. நான் இதுவரை யார்கிட்டயும் சொல்லலை. இன்னைக்குச் சொல்லணும் போல இருந்துச்சு..." என்றவன், "நம்ம ராதாவுக்கு ஏதாவது தப்பா ஆகிருமாம்மா? அவளுக்கு எதுவும் ஆகாதுல்ல. போன தடவை இந்தக் கனவு வந்து... தப்பா ஆகப் போகுதுன்னு அவ ரூமுக்குப் போனா... அதே மாதிரி அவ விஷம் சாப்பிட்டு இருந்தா... நல்லவேளை, காப்பாத்திட்டோம். இல்லை... என்ன ஆகி இருந்திருக்கும்..." என்றவனிடம்,

மருந்தைத் தேய்த்து விட்டபடி... அவனையும் தேற்றும் விதத்தில், "ஒருவேளை இந்தக் கனவு வராமல் இருந்திருந்தால்... நீ ராதா ரூமுக்குப் போயிருந்திருக்க மாட்டாய்தானே... அப்போ, அது கூட நல்ல காரணத்துக் காகத்தான் வந்திருக்கு..." என்று சொல்ல...

சிரித்தவன், "அம்மா, நல்லாப் பேசக் கத்துக்கிட்டீங்க...!" என்று புன்னகைத்தவன், நீண்ட நாட்களுக்குப் பிறகு அவன் அன்னை மடியில் தலை வைத்துப் படுக்க... கலைச் செல்வியின் மற்றப் பிள்ளைகளும் அங்கு வந்தனர்.

அனைவரும் தன் அண்ணனின் முகச் சுணக்கம் தாங்காதவர்கள்... அத்தனை பேரின் முன் தங்கள் அன்னை தீக்ஷாவுக்காக சப்போர்ட் செய்ததால்... தன் அண்ணன் முகம் வாடியவுடன்... அதைத் தாங்க முடியாமல் அவன் அறைக்கே வர... தன் அன்னை மடியில் வைத்து, அவன்

படுத்தபடி சிரித்துக் கொண்டிருக்க... இப்போது அவன் நார்மலானது தெரிய... நிம்மதி அடைந்தனர்.

ஆனால் தன் அண்ணனின் நிம்மதி, சந்தோஷம்... கம்பீரம் எல்லாம் இதே தீக்ஷாவால் பறிக்கப்பட்டு... நடைபிணமாய்த் திரியப் போகும் அவனைப் பார்த்து... அந்தக் குடும்பமே அதன் சந்தோசத்தை இழக்கும் நாள் வெகு அருகில்தான் இருந்தது.

யுகேந்தர் மட்டும் விஜய்யோடு அவன் அன்னையின் மடிக்குச் சண்டை போட... இப்போது அங்கு சந்தோசம் மட்டுமே நிறைந்திருந்தது.

அப்போது விஜய் அடித்த வேலையாள் காபியுடன் உள்ளே வர... விஜய் அவன் முகத்தைப் பார்க்க... இவன் கைத்தடம் பதிந்திருந்தது. அவனிடம் மன்னிப்புக் கேட்க மனம் சொன்னாலும்... அவன் குணம், வளர்ந்த விதம் அதைத் தடுக்க... பேசாமல் இருந்து விட்டான். காபியைக் குடித்தவனுக்குத் தலைவலி குறைந்தது போல் இருக்க... கட்டிலில் தலை வைத்தபடி அமர்ந்தவன்... தன் தங்கையைப் பார்த்தான்.

ராதா சற்றுத் தள்ளி அமர்ந்திருக்க... அவளை அருகில் அழைத்தவன்...

"அங்கே போய்ச் சமாளிச்சு இருந்திருவியாடா...? அவங்களோட ஒத்துப் போயிருமா...? அவங்க வாழ்க்கை முறைக்கு உன்னால அடாப்ட் ஆகிற முடியுமா...? எங்க எல்லாருக்கும் நீதான்மா இளவரசி... ஏன்மா, உனக்கு இந்த நிலைமை... இங்க உன் குரலுக்கு ஓடோடி வந்து வேலை பார்க்க எத்தனையோ பேர்... அங்க போய்... அவங்களுக்கு நீ போய் வேலையைப் பார்க்கப் போகிறாயா?" என்றபோதே அவனுக்குக் கண் கலங்க...

எப்படி யெல்லாம் வளர்ந்தவள்...! மனம் தாங்கவே இல்லை.



ராதாவுக்கும் கண் கலங்க ஆரம்பிக்க...

யுகேந்தர் மட்டும் மனதுக்குள்... 'தீக்ஷா, நீ காதலுக்கு மரியாதை படத்தில் உள்ள கதாபாத்திரம் எல்லோருக்கும் வச்சது தப்பே இல்லை. நீ மட்டும் நல்லவேளை இங்கே இல்லை. உன் விருமாண்டியோட பாசமலர் படத்தை நாளைக்கே தியேட்டர் தியேட்டரா ரிலீஸ் பண்ணியிருப்ப...' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டிருந்தான்.

ராதா கண் கலங்குவதைப் பார்த்தவன்... தன் தங்கையின் திருமண விசயத்தில் இனித் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டாம் என்று முடிவு செய்து... அதன் பிறகு எல்லா வேலைகளிலும் ஆர்வம் காட்டியவன்... அவளுக்குத் திருமணப் பரிசாக... வீட்டையும் அளிக்க முடிவு செய்து, அதற்குரிய பணிகளிலும் ஈடுபட ஆரம்பித்தான்.

**தி**ருமண நாளும் வந்தது. சகோதரர்கள் மூவரும் ஒன்றாய் இணைந்து அத்தனை காரியங்களையும் செய்ய... ராகவேந்தர் - கலைச்செல்வி தம்பதியினர் கண் குளிரத் தன் மகளின் திருமணத்தை... மன நிம்மதியுடன் கண்டு களித்தனர்.

அது போலவே வைத்தீஸ்வரனும், ஜெயந்தியும் தன் மகனின் திருமணம் இந்த அளவு பிரமாண்டமாய் நடக்கும் என்று கனவில் கூட நினைத்துப் பார்க்காததால் அவர்களும் சந்தோசத்திற்குக் குறைவில்லாமல் இருக்க...

விஜயேந்தர்... சுரேந்தர்... யுகேந்தர் மூவரும் மணமகனுக்குக் குறைவில்லாமல்... பட்டு வேட்டி சட்டையில் வலம் வர... அங்கு மூவரின் மேலும்... அவர்கள் ஒற்றுமையாய்த் திரிவதும், அனைவரின் கண்களையும் கவர்ந்தது.

திருமணச் சடங்குகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க... விஜய்யின் எண்ணமெல்லாம் தன் தங்கையின் நினைவிலே இருந்தது. தான் பரிசாய்க் கொடுக்கப் போகும்

வீட்டினைத் தீபனை எப்படி ஏற்றுக் கொள்ள வைப்பது என்று குழப்பம் வேறு. இந்த எண்ணங்களோடு சுற்றிக் கொண்டிருந்தான் அவன்.

இளமாறனும் திருமணத்திற்கு வந்திருக்க... விஜய் கொஞ்சம் குற்ற உணர்ச்சியில் இளாவைப் பார்க்க...

இளமாறனோ அதற்கெல்லாம் வருத்தப்படாமல்... "ஏன் விஜய் வருத்தப்படற? நீதான் எங்க வீட்டு மாப்பிள்ளையா வரப் போறல்ல... அது போதும்..." என்றவன்,

"என் தங்கையை மட்டும் வேண்டாம்னு சொல்லி வேற பொண்ணைப் பார்த்த... அவ்ளோதான்!" என்று சிரிக்க.. அதில் உள் குத்தும் இருப்பது போல் விஜய்க்குப் பட... அந்த நேரத்தில் தீக்ஷா அங்கு வந்தாள்.

"அத்தான்... நீங்க ஏதோ அண்ணனுக்குச் சடங்கு செய்யணுமாம். வரச் சொன்னாங்க..." என்று சொன்னவள்... இளாவைப் பார்த்து விஜய்க்குத் தெரிந்தவர் என்று புன்னகைத்து வைக்க...

அவன் விஜய்யை விட ஒரு பங்கு மேலே இருந்தான். வேறு புறம் திரும்ப... விஜய்... தீக்ஷாவை அழைத்துக் கொண்டு முன்னால் போக... இளா இருவரையும் வெறித்தான்.

"அத்தான்... இவர் உங்க ஃப்ரெண்டா...?" என்று கேட்க...

"ஆமாம்..." என்றவன், அடிக்குரலில்...

"ஏய்... இப்போ எதுக்கு அத்தான் அத்தான்னு ஏலம் போடுற...?" என்று மிரட்ட,

"அத்தானை அத்தான்னுதான் சொல்ல முடியும். அண்ணான்னா சொல்ல முடியும்...?" என்று சிரித்தபடி, அவன் முகத்தைப் பார்த்துத் தீக்ஷா கண் சிமிட்ட...



அங்கிருந்த ஒரு கவரில் முட்டிக் கொள்ளலாம் போல் இருந்தது விஜய்க்கு... அது முடியாமல்...

"கடவுளே!" என்று தலையில் அடிக்க...

தீக்ஷா இப்போது, "அத்தான், அண்ணா ஆராய்ச்சியெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். நான் என்ன சொல்ல வந்தேன்னா... உங்க ஃப்ரெண்ட் உங்களை விட ஒரு படி மேலே இருக்கிறாரே..." என்றபோது அவன் முறைப்பு பதிலாய்க் கிடைக்க... பேசாமல் வாய் மூடி அவனோடு நடந்தாள் தீக்ஷா.

அவளோடு ஒன்றாய் நடந்து போனவன்... முதுகின் புறம் பார்வை குத்துவது போல் இருக்க... நின்று பின்னால் திரும்ப... சந்தேகப்பட்டது போல்... இளா முறைத்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் பார்வை விஜய்யின் மேல் இல்லை. விஜய்யைத் தாண்டித் தீக்ஷாவின் மேல் இருக்க...

தீக்ஷாவோடு போகாமல்... விஜய் அப்படியே நின்று விட்டான். தீக்ஷா முன்னால் சென்று விட... இப்போது சென்றான். ஆனாலும் அவனுக்குத் தீக்ஷாவின் மேல் விழுந்த இளாவின் வெறித்த பார்வை, கொஞ்சம் சஞ்சலத்தை உண்டு பண்ண... தீக்ஷாவைப் பார்த்தான் தன்னையறியாமல்...

அவள் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள், தன் அன்னையிடம். இவள் வாயை மூட மாட்டாளா... என்றிருந்தது.

அதன்பின் தான் செய்ய வேண்டிய சடங்கை முடித்து விட்டு... திருமணத்திற்கு வந்த முக்கிய உறவினர் ஒருவரின் அருகே போய் அமர்ந்தான். அவரை வரவேற்கும் பொருட்டு...

விஜய்யின் தூரத்து உறவினர்தான் அவர். அவனது உறவு முறையில் மிகவும் மரியாதை மிக்கவர்.

"தம்பி, அந்தப் பொண்ணு யாரு... துருதுருன்னு இந்தக் கல்யாண மண்டபத்தையே ஒரு கலக்கு கலக்குது...!" என்று கேட்க,

"அது மாப்பிள்ளைப் பையனோட தங்கச்சி தாத்தா!" என்று விஜய்யும் பணிவோடு சொல்ல... ராகவேந்தரும் அவர் அருகில்தான் உட்கார்ந்திருந்தார்.

விஜய் இருக்கிறான் என்றெல்லாம் பார்க்கவில்லை. அந்தப் பெரியவர் சட்டென்று...

"விஜய்க்கு அந்தப் பொண்ணையே முடிச்சுடு வேந்தா! நல்லா இருக்கு பொண்ணு... விஜய்க்கும் பொருத்தமா இருப்பா..."

"என்ன தம்பி... நான் சொல்றது கரெக்ட்தானே...?" என்று சிரிக்க...

விஜய் வெளியில் சிரித்து உள்ளுக்குள் எரிந்தான். இருந்தும் தன்னைச் சமாளித்தபடி...

"எனக்கும் அந்தப் பொண்ணுக்கும் வயது வித்தியாசம் அதிகம் தாத்தா... ஆறு, ஏழு வருசம் வித்தியாசம் இருக்கும்..." என்றவனிடம்,

"கரெக்ட்டாத்தான் இருக்கு. என்னமோ 15 வருச வித்தியாசம் இருக்கிற மாதிரிப் பேசுற. இந்த வயசு வித்தியாசம் தான் கரெக்ட். அவ கழுத்துல பேசாம நீ ஒரு மூணு முடிச்சுப் போட்ரு..." என்றவரிடம்,

இவனும், "இப்போ பொண்ணுங்கெல்லாம் இரண்டு வருசம்தான் மேக்சிமம் வித்தியாசம் பார்க்கிறாங்க, தாத்தா..." நழுவும் விதமாய்ச் சொல்ல...

"அப்போ உன்னை விட இரண்டு வயசு சின்னப் பொண்ணா பார்த்துட்டியா?" என்று எதிர்க் கேள்வி கேட்க... விழித்தான் விஜய்.

"அந்தப் பொண்ணுக்கும் உனக்கும் கரெக்ட்டா இருக்கும்னு நான் சொல்றேன். நீ என்ன இப்படிப் பேசுற?" என்றவர்...



"நீ என்ன சொல்ற..." என்று வேந்தனைப் பார்த்துப் பேச ஆரம்பிக்க... விஜய் தன் தந்தையை ஒரு முறை முறைத்து அங்கிருந்து எழுந்து போனான்.

ராகவேந்தர் மகனின் கோப முகத்தைப் பார்த்தவர்... அப்போது ஒன்றும் சொல்லாமல்... சிறிது நேரம் கழித்து அவனிடம் வந்தார்.

"விஜய்! ராதா கல்யாணம்ப்பா... யாராவது ஏதாவது சொல்றாங்கன்னு... ஏதாவது கோபப்பட்டுப் பேசி எதையாவது பண்ணி வச்சுடாதே!" என்று சொல்ல,

"அப்பா... பெரியவரா போயிட்டாரு... அதனால விட்டுட்டேன். இங்க என்ன ஜோடி சேர்க்கிற போட்டியா நடக்குது. இவரு சொல்றாராம்ல... கரெக்ட்டா இருக்குமாம்ல. ஒரு நாள் அவகிட்ட இவரை விட்டுப் பேசச் சொல்லணும். அப்போ சொல்வாரு..." என்று அன்று பொருமித் தீர்த்தவன் தான்... ஏழேழு ஜென்மமும் அவள் பந்தம் தனக்கு வேண்டும் என்று உருகி நின்றான்.

"அது மட்டும் இல்லப்பா... தாலி கட்டுனா கூட அவ முடிச்சுப் போடக் கூடாதுன்னு செயினா வாங்க வச்சேன். அவ கழுத்துல நான் முடிச்சுப் போடவா... நல்லா வந்தாரு..." என்று தன்னை அறியாமல் வாய் விட, "மொத்த மூடையுமே மாத்தி விட்டுட்டாரு..." என்று புலம்பியபடி சென்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தபடி நின்றிருந்தார் ராகவேந்தர்.

தீக்ஷா மேல் உள்ள கோபத்தில்தான் தாலிச் சங்கிலி வாங்க வைத்தானா... தீக்ஷா மேல் உள்ள கோபத்தை இதற்கு மேல் அவனிடம் வளர விடக்கூடாது என்று முடிவு செய்தவர்... அவனிடம் இதுபற்றிப் பேச வேண்டும் என்றும் தீர்மானித்தார்.

**ரா**தா - ப்ரதீபன் திருமணம் நடந்து கொண்டிருக்க... விஜய்யும் சுரேந்தரும் வாயிலில் நின்றிருக்க... அப்போது

விஜய் கண்ட காட்சியில் முகமும் கண்களும் கோவைப் பழமாய் மாறின.

தீக்ஷாவின் வாயைத் தன் கைகளால் பொத்தியபடி நின்று கொண்டிருந்தான் யுகேந்தர்.

அவள் தனியே... தான் தனியே என்று இருக்கும் போதே தன்னுடன் இணைத்துப் பேசி விட்டார் அந்தப் பெரியவர். இதை யாராவது பார்த்திருந்தால்... என்னென்ன பேசி இருந்திருப்பார்களோ... என்று நினைத்தவன், சுரேந்தரும் அந்தக் காட்சியைப் பார்த்திருப்பான் போல... அவனும் விஜய்யைப் பார்க்க...

“அவனை வரச் சொல்லு, சுரேந்தர்... மேடைனு கூடப் பார்க்காமல்... அவனுக்குக் கொஞ்சம் கூட அறிவே இல்லையா? இத்தனை பேர் முன்னால்... மேடையில அவனை...” என்று பல்லைக் கடிக்க...

சுரேந்தர் அவன் போனில் யுகேந்தரை அழைக்க... அடுத்த நிமிடம் அவன் விஜய் முன் நின்றான்.

“உன் விளையாட்டுத் தனத்தை எல்லாம் மூட்டை கட்டி வச்சுட்டு... வர்றவங்களைக் கவனி. அவ பின்னால வால் பிடிச்சுட்டு திரிஞ்ச... தொலைஞ்சிடுவேன். இத்தனை மணி நேரம் எதுனாலும் உருப்படியா நீங்க ரெண்டு பேரும் பேசியிருப்பீங்க... எல்லாம் வெட்டிப் பேச்சு. உன்னை மாதிரியே வெட்டியாப் பேச உனக்கு ஏத்த ஒரு ஆளை ராதா கண்ல காமிச்சுருக்காள்ல... அவளைச் சொல்லணும். போ. உன் ஃப்ரெண்ட்ஸ்லாம் வந்திருக்காங்க. அவங்களைக் கவனி...” என்று சொல்ல... அதன் பின் யுகேந்தர் தீக்ஷா அருகில் போகவில்லை.

யுகேந்தர் போன சிறிது நேரத்தில்... தீக்ஷா அவனைத் தேடி வர, விஜய்க்குக் கோபம் மண்டையில் ஏறியது. அவன் ஒதுங்கிப் போனால் கூட... இவ விட மாட்டாள் போல... என்ன பொண்ணோ என்று நினைக்கும்போதே,



அவள் வந்த வேலையைச் சொல்ல... அதைக் காதுகளால் மட்டுமே கேட்டான். ஆனால், இப்போது சுரேந்தர் அவள் பின்னால் போக...

‘இவ வேலை சொல்வதற்கு என் தம்பிதானா கிடைத்தான்?’ என்று யோசித்தவன்... தன் வீட்டு வேலை யாளை அழைத்து, அவள் கேட்ட பொருட்களை அவளுக்கு எடுத்துக் கொடுக்கச் சொன்னவன்... “அவ பக்கத்திலேயே இரு. அவளுக்குத் தேவையான உதவியைப் பண்ணு...” என்று சொல்லியும் வைத்தான்.

ராதாவின் கழுத்தில் ப்ரதீபன் மங்கல நாண் பூட்டும் நேரம் வர... விஜய்க்கு ஏனோ மனமெல்லாம் கனமாக இருந்தது. தன் தங்கையை எப்படியெல்லாம் வாழ வைக்க நினைக்க... இப்படி ஒரு வாழ்வைத் தேர்ந்தெடுத்து விட்டாளே என்று... எவ்வளவுதான் தேற்றிப் பார்த்தும்... அவள் தேர்ந்தெடுத்த மண வாழ்க்கையில் திருப்தி காண மறுத்தது.

கலைச்செல்வி திரும்பத் தன் மகனைப் பார்க்க... அதில் இருந்த சோகம்... அவள் மனதை ஏதோ செய்ய... விஜய்யின் அருகில் வந்தார்.

“என்ன விஜய்... ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? நீ முகம் வாடி நின்றால் ராதா கஷ்டப்படுவா, விஜய்...!” என்றவுடன் நார்மலானவன்...

“ப்ச்... ஏத்துக்கவே முடியலைம்மா என்னால... ஏன்ம்மா இப்படிப் பண்ணுனா ராதா?” என்றபோது,

கலைச்செல்வி, “விஜய், இப்போ அவ நம்ம வீட்டுப் பொண்ணு இல்லை. அவங்க வீட்டுப் பொண்ணு. இனி ராதா வீடுன்னு நினைத்துப் பாரு. தானாகவே மனசு சரியாகி விடும்...” என்று சொல்ல,

மனமின்றித் தலையசைத்தவன்... தன் தங்கையையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவன்

மனது... அவள் எப்போதும் சந்தோசமாக மட்டுமே இருக்க... அந்தக் கடவுளை வேண்டிக் கொண்டான்.

சற்று நேரத்தில் கலைச்செல்வி விஜய்யின் அருகில் வந்து...

"யுகி எங்கே? தீபனோட பாட்டி, தாத்தால்லாம் கீழே உட்கார்ந்திருக்காங்க. அவங்களை மேடைக்கு அழைக்கணும். நாமதான் கூப்பிடணும்பா. வேலையாட்களை வைத்தெல்லாம் வரச் சொல்லக் கூடாது..." என்று மகனின் குணம் தெரிந்ததால் முன்னெச்சரிக்கையுடன் பேச...

விஜய்யும், "சரி. நானே போகிறேன்..." என்று சொல்லியவன்,

தீக்ஷாவும் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணியும் பேசிக் கொண்டிருக்க...

அப்போது, "அவங்ககிட்ட கேட்காமலா... நீ சொல்லும்மா! உனக்குத்தான் என் பையனைப் பிடிக்கணும்..." என்று அந்தப் பெண்மணி தீக்ஷாவிடம் கேட்க...

அதற்குப் பதில் சொல்ல முடியாமல் தீக்ஷா பரிதாபமாக நின்ற நிலை இவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது. இவளை எல்லாம் மடக்க... இப்படி நாலு பேர் வந்தாத்தான் சரிப்படுவா. என்ன முழி முழிக்கிறா..." என்று அவளைப் பார்த்தவன்...

பதில் சொல்ல முடியாமல் தீக்ஷா திணறுவதை உணர்ந்து, அவள் தாத்தா பாட்டியைத் தான் போய் அழைக்காமல், தீக்ஷாவை விட்டுச் சொல்லச் சொல்லி... அவளை இங்கிருந்து போகச் சொல்லலாம் என்று நினைத்தபடி,

"தீக்ஷா, குரூப் போட்டோ எடுக்க வேண்டுமாம். உங்க தாத்தாவையும் பாட்டியையும் அழைத்து வா...!" என்று சொல்லி விட்டு அங்கிருந்து போனான்.



ஆனால், போனவன்... மீண்டும் திரும்பி வரும்போது, அந்தப் பெண்மணியிடம் தீக்ஷா பேசிக் கொண்டிருக்க...

"இவளை... அவங்ககிட்ட மாட்டிக்கிட்டு முழிக்கிறாள்னு தானே அவகிட்ட சொல்லிட்டுப் போனேன். பேச ஆரம்பித்தால் நிறுத்த மாட்டா...!" என்று அவளின் அருகே நிற்க,

"ஆன்ட்டி, என் அப்பா அம்மாவுக்கு ஓ.கே.ன்னா எனக்கும் ஓ.கே. தான்!" என்ற தீக்ஷாவின் பதிலில்...

'என்ன அடக்கம் அம்மணிக்கு... பாவம், அந்தப் பையன். பேசியே கொல்லப் போகிறாள்...' என்று நினைத்தபடி அந்தப் பெண்மணியைப் பார்த்துப் புன்னகைத்தவன்...

தீக்ஷாவிடமும் அதே புன்னகையுடன், "அங்கே எல்லாரும் வெயிட்டிங். ராணி வர மாட்டீங்களோ... வருங்கால மாமியார்கிட்ட இப்போதே வாயடிக்க ஆரம்பிச்சிட்டியா?" என்று கேட்க,

தீக்ஷா நெற்றிக் கண்ணைத் திறந்து அவனை முறைக்க... அவளின் முறைப்பைக் கண்டு கொள்ளாமல் போனான் விஜய்.

விடுவாளா தீக்ஷா! வேகமாய் அவனிடம் வந்து, "அவங்களை என் வருங்கால மாமியார் ஆக்க இந்த ராஜாவுக்கு என்ன அவசரம்?"

அவன் மனதில் நினைத்து என்ன சொன்னானோ... அதைச் சரியாக உள்வாங்கி அவனிடமே திருப்பிக் கொடுக்க...

அவள் புத்திசாலித்தனத்தை நினைத்து மனம் சற்று வியந்தாலும்... அவள் கண்டுபிடித்து விட்டாளே என்று அதற்கும் கோபம்தான் வந்தது விஜய்க்கு.

சடங்குகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க... விஜய் தனியே வந்து நின்றான். அவன் கொஞ்சம் தனிமை விரும்பி. பேசினாலும் அதற்குக் காரணம் வேண்டும் என்று நினைப்பவன்... ஒரு வார்த்தை கூடத் தேவையின்றி வெளியே

வரக்கூடாது என்று நினைப்பவன்... அதனாலே யுகேந்தர் அடிக்கடி அவனிடம் திட்டு வாங்குவான்.

விஜய் தனியாக நின்று கொண்டிருக்க... சுரேந்தர் அருகில் வந்தான்.

"அண்ணா... இளா போயிட்டாரா?" என்று கேட்க...

"ம்ம்ம்... போயிட்டான்..." என்றவன்,

"அவன் இன்னைக்குப் பேசுனது எனக்குப் பிடிக்கவே இல்லை சுரேந்தர்... அவன் தங்கையை மட்டும் திருமணம் செய்யலைன்னா அவ்வளவுதான்... என்ற தோரணையில் பேசிய மாதிரி இருந்தது. அது மட்டுமில்லை.

"தீக்ஷா என்கிட்ட வந்து பேசிட்டு போனப்ப... அவளை வேற முறைச்சுப் பார்க்கிறான். அவளை அவன் பார்த்த பார்வை இருக்கே... அலட்சியமாப் பார்த்திருந்தா கூடப் பரவாயில்லை. ஒரு மாதிரி அவளை... எனக்கே முதுகுத் தண்டு சில்லுன்னு ஆன மாதிரி இருந்துச்சு. கலகலப்பா திரிஞ்சுட்டு இருக்கிற பொண்ணுடா அவ. நம்ம வாழ்க்கை முறையில வந்து மாட்டிக்கப் போறா. கொஞ்சம் தள்ளியே வைக்கணும்டா அவளை..." என்றபோதே,

"எனக்கும் இளாவைப் பிடிக்கலைண்ணா... ஏதோ நீங்க சொல்கிறீர்கள் என்றுதான் சம்மதம் சொன்னேன். இளமதி விசயத்தில் கூட நீங்க யோசிங்கண்ணா!" என்றபோது,

"இவனும் நல்லவன்தான். பிரச்சனை இல்லாத வரைக்கும். ராதா பண்ணிய காரியத்துக்கே அவன் ஆடுவான்னு நினைத்தேன். பெருசாக் கண்டுக்கலை. பார்க்கலாம்..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே,

தீக்ஷா அருகில் வர... சட்டென்று முக பாவனையை மாற்றி வேறு புறம் திரும்ப...

அவளும் இவனைக் கண்டுகொள்ளாமல்... சுரேந்தரை அழைத்துக் கொண்டு கிளம்ப... விஜய் இப்போது திரும்ப...



அவளின் முந்தானை அவனின் பிரேஸ்லெட்டில் மாட்டிக் கொண்டிருந்தது. சரி, எடுத்து விடலாம் என்று நினைக்கும்போதே... தீக்ஷா அங்கிருந்தபடியே எடுத்து விடச் சொல்ல...

என்ன ஒரு அதிகாரம்... வந்து எடுக்கட்டும் என்று திரும்பி விட்டான், கையை மட்டும் சற்று விலக்கி.

அவள் எடுத்து முடிக்கும்வரை காத்திருந்தவன்... இப்போது கையைப் பார்க்க... அது வெறுமையாக இருக்க...

'கடவுளே... இவ என்கிட்ட போய் விளையாண்டுட்டு இருக்காளே... என் கோபம் தெரியாமல்... எல்லோரையும் ஒரே மாதிரிதான் நினைப்பாளா இவள்...!" என்று யோசித்த படி அவளிடம், தன் கைசெயினைக் கேட்க...

அவளோ, அதற்கெல்லாம் அடங்காமல் ஆடிக் கொண்டிருக்க... விஜய் பொறுமை இழந்தான். அதிலும் இத்தனை பேர் மத்தியில் அவள் அவனோடு குறும்புத் தனத்தில் பேசிக் கொண்டிருக்க... அவள் என்ன நினைக் கிறாள் என்றே தெரியவில்லை.

'மூன்று பேரோடும் சரி சமமாய்ப் பழகுகிறாள்... யுகிக்கு அவள் குணம் ஒத்து வரும். தனக்கு... யோசிக்கிறாளா இவள்!' என்று யோசிக்கும் போதே அவள் அவனின் கை செயினை எடுத்துக் கொண்டு கிளம்ப... விஜய் அவள் முன் நின்றான், பொறுமை அற்றவனாக.

"அதைக் குடு. இல்ல... நான் கொலவெறி ஆகிடுவேன். என்ன மூணு பேர்கிட்டயும் சிரிச்சுச் சிரிச்சுப் பேசி யார் மயங்குறாங்களோ... அவங்களை கரெக்ட் பண்ணி எங்க வீட்ல நுழையலாம்னு பார்க்கிறியா...?" என்று கேட்டு விட்டான்.

கேட்ட பின்தான் அவன் பேசிய வார்த்தைகளின் வீரியம் புரிய... விட்ட வார்த்தைகளை அள்ளவா முடியும்...?

"ஆமா. வேற வேலை இல்ல எங்களுக்கு..." - சாதாரணமாகச் சொல்லி பிரேஸ்லெட்டைக் கொடுக்க...

'இவளுக்குக் கோபம் வரலையா.. இவ்வளவு தூரம் பேசியும்...' என்று அவன் அவளைப் பற்றி, அவள் குணங்களைப் பற்றி யோசிக்க ஆரம்பித்திருந்தான் விஜய்.

பிரேஸ்லெட்டைக் கொடுக்கும்போது, "அத்தான், எனக்கு ஒரு சந்தேகம். உங்க வீட்டுக்குள்ள வருவதற்கு இதுதான் என்ட்ரன்ஸ் எக்ஸாமா...?" என்று அவள் சம்பந்தமே இல்லாமல் கேள்வி கேட்க...

'என்ன... என்ட்ரன்ஸ் எக்ஸாம்னுல்லாம் சொல்றா இவ... இவ பேசுற வார்த்தைக் கெல்லாம் தனியா அகராதிதான் வைக்கணும் போல...' என்று மனதிற்குள் நினைத்து அவளைப் பார்க்க...

அவளும் அவனைப் புரிந்தவளாய்... "இல்லை. உங்க மூணு பேர்ல யாரையாவது ஒருத்தரை மயக்குறது... அதைத்தான் சொன்னேன்...." என்று சிரித்தபடி சொல்ல...

"இவளுக்குத் தெனாவெட்டு ஜாஸ்திதான். பயமே இல்லை..." என்று நினைத்து அவளைப் பார்க்க...

அவன் கண்களைப் பார்த்து... "அப்படி ஒரு கேவலமான எக்ஸாம் நீங்க வைக்கலாம். ஆனால், அந்த எக்ஸாமை தீக்ஷா எழுத விரும்ப மாட்டா..." என்று அவள் குரலிலும்... வார்த்தைகளிலும் இருந்த தீவிரம்.. அவனுக்குப் புரிய... ஆனால் தன் முன் யாரும் எதிர்த்துப் பேசாத விஜய்க்கு அது கூட ஆத்திரமாக வர...

"சாரி, விஜய் அத்தான்... நான் உங்க யார்கிட்டயும் தப்பாப் பழகல, அத்தான். புரிஞ்சுக்கோங்க..." என்று தீக்ஷா, சற்று முன் பேசிய தீவிரமான பாவனையை மாற்றிச் சமாதானமாகப் பேச...

"நீ போகலாம். நீ பேசினாலே எரிச்சல் வருது. பதிலுக்குப் பதில் பேசிட்டு... அதை முதல்ல மாத்து..." என்று சொல்லும் போதே...



"அம்மா கூப்பிடலையாமே தீக்ஷா..." என்று சுரேந்தர் திரும்பி வர...

அதன் பின் அவள் வெட்டியாய்ப் பேசியதெல்லாம் அவனுக்கு ஞாபகத்தில் இல்லை. நல்லவேளை சுரேந்தர் அவளைக் காப்பாற்றி அனுப்பியவன்... அவளுக்கு அறிவுரை கூற ஆரம்பிக்க...

கலைச்செல்வியிடம் அவளின் உறவுக்காரப் பெண் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"யாரு அது சுரேந்தர் தம்பியோட பேசிட்டு இருக்கிறது... மாப்பிள்ளைப் பையனோட தங்கச்சிதானே!" என்று சொல்ல... அது கலைச்செல்வியின் கண்களிலும் பட...

"பொண்ணு நல்லா இருக்கா. மூணு பேர்ல யாராவது ஒருத்தருக்கு எடுக்க வேண்டியதுதானே. சுரேந்தர் பக்கத்தில் பாந்தமா இருக்கா பொண்ணு..." என்றபோது கலைச் செல்வியின் கண்களிலும் ஆவல் விரிந்தது.

தீக்ஷா - சுரேந்தர் பேசிக் கொண்டிருப்பதை விஜய்யும் கவனித்தான். ஆனால் யுகேந்தர் போல் சுரேந்தர் ஒன்றும் விளையாட்டுப் பிள்ளை இல்லை. அவன் பேசும் எல்லை உணர்ந்து பேசுவான். தீக்ஷா மனதில் ஆசை வரும்படி அவன் பேச மாட்டான். அது நிச்சயமான ஒன்று.

ஆனால், அவன் மனதில் ஏதாவது எண்ணம் தோன்றினால்... ஒன்றும் செய்ய இயலாது. இவனைப் போலவே பிடிவாதக்காரன்தான் அவனும். இவனைப் போல் எல்லாக் குணங்களும் கொண்டவன். தடுமாற மாட்டான். தடுமாறினால்... காரியத்தைச் சாதித்துக் கொள்வான். இந்தப் பிரதீபன் ஒரு பையனோடாவது பிறந்திருக்கலாம். ஒரு தங்கையோடு வேறு பிறந்து... என் உயிரை வாங்குகிறாள் என்று தோன்றியது அவனுக்கு.

அவனுக்காக, அவன் உயிரை அணு அணுவாக உறிஞ்சி எடுக்க... ஜென்மம் படைத்து வந்தவள்... அவனைத் தேடி வராமலா இருப்பாள்...

அதே போல் விஜய்... தீக்ஷாவின் குணம் பற்றியும் ஒரு தீர்மானத்திற்கு வந்திருந்தான். அவள் சிறு பெண் போல் குறும்புத்தனம் செய்தாலும்... அவன் அவளின் தன்மானத்தைச் சுடும்போதெல்லாம் தனக்குப் பதிலடி கொடுக்காமல் விட்டதில்லை என்பதையும் உணர்ந்து கொண்டவனுக்கு... கொஞ்சம் வாய் மட்டும் அதிகம் என்று நினைத்தவன், 'வாயாடி!' என்று செல்லமாய்ப் பெயர் வைத்துக் கொண்டான் தன் மனதில்.

விஜய், தன் தங்கையைப் பற்றி யோசித்தான். யுகேந்தரைப் பற்றி யோசித்தான். சுரேந்தர் மனம் பற்றி நினைத்தான். ஏன் தீக்ஷா பற்றிக் கூட யோசித்தான். இவர்களைப் பற்றி எல்லாம் யோசித்தவன்... தன் மனதைப் பற்றியும் யோசித்திருக்கலாம்.

ஆனால் அன்று அவன் நினைக்கவில்லை. நினைத்த போது... அவள் இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண்ணாக... அவன் மேல் கோபம் கொண்ட மங்கையாக... அவனை விட்டு வெகு தூரமாய்ப் போய் இருந்தாள்.

## 21

**பு**துமணத் தம்பதியினர் ஒரு காரில் சுரேந்தருடன் சென்று விட... விஜய் தன் காரில் குடும்பத்துடன் செல்ல முடிவெடுத்தான். கொஞ்சம் பதற்றமாகவும் இருந்தது அவனுக்கு. காரணம், இனிமேல்தான். தீபனிடம் ராதாவுக்காகத் தான் வாங்கியிருந்த பங்களாவின் சாவியை ஒப்படைக்க முடிவு செய்திருந்தான். அவன் தாய், தந்தையிடமே இன்று காலையில்தான் சொன்னான்.



கலைச்செல்விக்கு இதில் மிகுந்த சந்தோசம். தன் மகள் புறாக் கூண்டு போன்ற வீட்டில் இனி இருக்கப் போவதில்லை என்ற மகிழ்ச்சியில் திளைத்தார் அவர். ஆனால் விஜய்யோ, தீபன் என்ன சொல்வானோ என்று கொஞ்சம் சஞ்சலத்துடன் இருந்தான்.

இவனின் பதற்றத்தைப் பார்த்த அவனது தந்தை... "விஜய், எதுக்கு இவ்வளவு டென்சனா இருக்க... ரிலாக்ஸ்டா இருடா. மாப்பிள்ளை கண்டிப்பா ஒத்துக்குவாரு..." என்றபடி, விஜய்யிடம் தன் சந்தேகத்தைக் கேட்டார்.

"இன்னொரு விசயம்... தீபன் தங்கை தீக்ஷா மேல் உனக்கு ஏன் இவ்வளவு வெறுப்பு... அவ நாத்தனார் முடிச்சுப் போடக் கூடாது என்ற அளவிற்கு..." என்றபோது...

'டேய் விஜய்... வாய் விட்டேலே... உங்க அப்பா கேட்கிறாரு, சொல்லுடா. சொல்லு...' என்று மனச்சாட்சி அவனை நக்கலடிக்க... தன் மனதை அடக்கியவன், தன் தந்தையிடம்...

"இல்லப்பா... அப்படில்லாம் இல்லை..." என்று அவசரமாக மறுத்தவன்...

"நான் ஏன் அவகிட்ட வெறுப்பா இருக்கணும்... ராதா ஹாஸ்பிடல்ல இருந்தப்ப... அவ ராதாவைக் கொஞ்சம் தப்பாப் பேசிட்டா... அதனாலதான் எனக்கும் கொஞ்சம் பிடிக்கவில்லை. அதனாலதான்... ஆனா அப்பா... இப்போ அந்த அளவு கோபம் எல்லாம் இல்லை. என்ன, கொஞ்சம் வாயடிக்கிறா... அதுதான் பிடிக்கல..." என்று தன் தற்போதைய நிலையைச் சொல்லியபடி...

"ஆனால், இன்னும் என்னால தீபனையும் ஏத்துக்க முடியலை. அவர் குடும்பத்தையும் ஏத்துக்க முடியலைப்பா. அதுதான் உண்மை. எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்கப்பா... சரியாகி விடுவேன்..." என்றவாறு, வெளியேறியவன்... தன் காரில் சென்று அமர்ந்தான்.

அப்போது கலைச்செல்வி... தீக்ஷாவுடன் வர... இவ நம்மளோடா வரப் போகிறாள்... என்று யோசனையுடன் பார்த்தான்.

அவன் யோசனை சரி என்பது போல, தீக்ஷாவும் காரில் ஏறி அமர... சட்டென்று விஜய் இறங்கி விட்டான். அவனுக்குத் தன் குடும்ப உறுப்பினர்களைத் தவிர... வேறு யாருக்கும் கார் ஓட்டப் பிடிக்காது. என்னவோ அது அவன் பழக்கமாகி விட... இப்போதும் அந்தப் பழக்கத்தில் இறங்கி விட... தீக்ஷா அவன் முகத்தையே பார்க்க... இப்போது அவனும் பார்க்க... தீக்ஷா முகமே இவன் செயலில் செத்துப் போய் விட்டிருந்தது. அவள் முகத்தில் தெரிந்த அவமான உணர்ச்சி.... விஜய் மனதை ஏதோ செய்ய...

'தான் கொஞ்சம் ஓவராகப் பண்ணுகிறோமோ...' என்று மனம் எண்ண ஆரம்பித்த போதே... தீக்ஷா நொடியிலேயே தன்னை மாற்றி... யுகேந்தரோடு பேச ஆரம்பித்து விட...

அவளுக்காகக் கவலைப்பட ஆரம்பித்த விஜய்யின் மனம்...

'இப்போதெல்லாம் வேண்டாம். பிற்காலத்தில் அவளுக் காகத் தான் நிறையத் துடிக்க வேண்டி இருக்கிறது...' என்பதால்... அன்று தன் கவலையை நிறுத்திக் கொண்டது என்றே சொல்லலாம்.

அதன் பிறகு தீக்ஷாவோ, விஜய்யின் கவலை யெல்லாம் தவறு என்பது போல... இவனையும் வம்பிழுத்துக் கொண்டு... யுகேந்தரோடு சேர்ந்து சிரித்தபடி வர... விஜய்க்கு எரிச்சல்தான் மிச்சம் ஆகியது.

அன்று மாலை... பொதுவாகத் திருமணம் நடந்த வீட்டில்... மாலை வர வர மணமகன், மணமகளுக்குத்தான் ஒரு விதப் படபடப்பு வரும். இங்கு விஜய் பதற்றத்தில் இருந்தான்... தீபனிடம் பேச வேண்டுமே என்று.



ஆறு மணிக்கு மேல் தீக்ஷா வீட்டின் ஹாலில் விஜய் வீட்டினரும்... தீபன் வீட்டினரும் இருந்தனர். அந்த வீட்டின் இளவரசிகளைத் தவிர.

அந்த வீட்டில் பிறந்த இளவரசி... வெளியே பேச்சரசி யாய் மாறிப் போனில் யாருடனோ பேசியபடி இருக்க... அந்த வீட்டுக்குப் புதிதாய் வந்த அரசி... தீபன் அறையினுள் இருந்தாள்.

விஜய்தான் ஆரம்பித்தான்.

சாவியையும் வீட்டுப் பத்திரத்தையும் தீபன் முன் வைத் தவன்... "தீபன், இது... என் தங்கைக்காக நான் கொடுக்கும் பரிசு..." என்று சொல்லித் தீபனை அமைதியாக நோக்க...

தீபன் ரௌத்திரமானான். "என்ன விஜய், உங்க பணக்காரப் புத்தியைக் காட்டறீங்களா...? இதைக் கொடுத்து என்னை வாங்கப் பார்க்கிறீர்களா...? இல்லை, என் குடும் பத்தில் இருந்து பிரிக்கப் பார்க்கிறீர்களா...? உங்க வீட்ல கூட மூணு பேர்... ஆனா, நான் இந்தக் குடும்பத்தின் ஒரே வாரிசு..." என்றபடி, வீட்டுப் பத்திரத்தைத் தூக்கி எறிய... விஜய் கோபத்துடன் அவனைப் பார்க்க...

விஜய்யின் கோபத்தைப் பார்த்த ராகவேந்தர்... மகனுக்காகப் பேச முன் வர... கோபம் வந்தபோதும், தன்னை அடக்கிய விஜய்... தன் தந்தையை அமைதியாக இருக்கச் சொல்லி விட்டு... முடிந்தவரை அமைதியாகப் பேசித் தன் கருத்தைத் தீபனுக்குப் புரிய வைக்க முயன்றான்.

"தீபன், புரிஞ்சுக்குங்க. நான் யாரையும் பிரிக்க வில்லை. பிரிக்கவும் நினைக்கவில்லை. உங்களுக்குக் கொடுக்கும்போது... அதைப் பயன்படுத்தும் முழு உரிமையும் உங்களுக்கு மட்டுமே. நான் வீடு மட்டும்தான் தந்தேன். நீங்க மட்டும்தான் போக வேண்டுமென்றா சொன்னேன்...? ஏன் இப்படிப் பேசறீங்க...? என் தங்கையை இந்த வீட்டில் சத்தியமாய் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.

"சொல்லப் போனால்... அவளால முடியாது தீபன். அவளுக்கு எந்த வேலையுமே தெரியாது. இன்னைக்குக் காதல் மயக்கத்தில் அவளுக்கு எதுவும் பெரிதாகத் தெரியாது. ஆனால் போகப் போகப் பிரச்சனைகள்தான் வரும். அதை எல்லாம் தவிர்க்கத்தான் நான் சொல்கிறேன். அது மட்டும் இல்லை. வீடு விசயத்தைத் தவிர, உங்க குடும்பத்தில்... நான் வேறு எந்த விசயத்திலும் தலையிட மாட்டேன்..." என்றபோது,

வைத்தீஸ்ரன், "இல்ல தம்பி, அது சரிப்படாது. உங்க தங்கைக்கு அது நீங்க வாங்கிக் கொடுத்தது. நாங்க வந்து தங்கினால் சரியா இருக்காது... அதற்காகத் தீபன் - ராதா வருவார்களா என்றெல்லாம் கவலைப்பட வேண்டாம். தீபன் நீங்க கொடுத்த வீட்டில் என் மருமகளோடு வாழுவான்..." என்றபோது வைத்தீஸ்வரன் குரலே பிசிறடிக்க...

ஜெயந்தியின் நிலைமையைக் கேட்கவா வேண்டும்! சமையலறையில் நின்று அழுது கொண்டிருந்தார். இங்கு நடப்பது எதுவும் தெரியாமல்... தீக்ஷா வெளியில் அரட்டை அடித்துக் கொண்டிருக்க... மகள் மேலும் ஒரு புறம் ஆத்திரம் வந்தது.

"அப்பா, ப்ளீஸ்..." என்று அவரைத் தன்னோடு அணைத்த தீபன், விஜய்யிடம் திரும்பி, "இநதப் பேச்சை இதோடு விடலாம் விஜய்..." என்று தான் தூக்கி எறிந்த பத்திரத்தைத் தானே எடுத்து விஜய் கையில் கொடுத்தவன்...

"சாரி, கோபத்தில் தூக்கி எறிஞ்சுட்டேன்... என்றபோது, விஜய் தீபனின் தன்மானத்தில் மிகவும் பெருமை கொண்டான். தன் தங்கை சரியான ஒருவனைத்தான் தன் வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறாள்... என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன்...

"ப்ளீஸ் தீபன்... ராதாவுக்காகப் பாருங்க. அவளைப் புரிஞ்சுக்க ட்ரை பண்ணுங்க. அவ சந்தோசமா வாழணும் தீபன். அவ பிறந்ததிலிருந்து அவளை ராஜகுமாரி மாதிரி



வளர்த்துட்டோம். இப்போ இந்த இடத்தில் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன்..." என்றவனின் குரலில், உள்ளே அமர்ந்திருந்த ராதாவே கலங்கி விட்டாள்தான்.

தன் அண்ணன் தன் மேல் இவ்வளவு பாசம் வைத்திருப்பதை அவளே இன்றுதான் உணர... அறையிலிருந்து வெளியே ஓடி வந்தவள், வந்து தன் அண்ணனின் தோள் மேல் சாய்ந்து அழ ஆரம்பிக்க...

"ஏய், ராதா! எதுக்குடா அழற? கல்யாணப் பொண்ணு அழக் கூடாது..." என்று தன் மீது சாய்ந்த... தன் தங்கையை அணைத்தபடி... விஜய் அவள் கண்களைத் துடைக்க...

"அண்ணா, நீங்க என் மேல வைச்சிருக்கிற இந்தப் பாசம் மட்டும் போதும். வேற எதுவும் வேண்டாம். தீபனோட சந்தோசம்தான் என் சந்தோசம் அண்ணா..." என்றவளை,

"இல்லம்மா. நான் உன் புகுந்த வீட்ல இருக்கிறவங்க யாரையும் உன் தீபன் கிட்ட இருந்து பிரிக்கலை..." என்ற போது,

தீபன், "அந்தப் பத்திரம் யார் பேர்ல இருக்கு, விஜய்... சொல்லுங்க!" என்று ஆவேசமாகக் கேட்க,

விஜய்யும், "உங்க பேர்லயும்... ராதா பேர்லயும்..." என்று தன் பதிலைச் சொல்ல...

தீபன் கேலியாக, "இதுக்கென்ன அர்த்தம்... என்னை என் குடும்பத்தில இருந்து பிரிச்சுட்டீங்கன்னுதானே அர்த்தம்...' என்று சொல்ல,

விஜய் வேகமாக, "இதுதான் பிரச்சனையா...? உங்க அப்பா பேர்ல மாற்றிக் கொடுத்தா உங்களுக்கு ஓ.கே.வா?" என்று முகம் பிரகாசமாகக் கேட்க.... தீபன், விஜய் முகத்தையே பார்த்தான்.

'அதில் என் தங்கை. இந்த வீட்டில் இருக்கக் கூடாது. அவளால் அது முடியவும் முடியாது. தான் வாங்கிக் கொடுத்த பங்களாவிற்கு... அவள் தன் கணவனோடு குடும்பத்தோடு சென்று வாழ வேண்டும்...' என்ற ஆதங்கமே இருக்க...

தீபனும் அண்ணன் ஸ்தானத்தில் உள்ளவன்தானே. அவனுக்கும் விஜய் உணர்வுகள் புரிய... சங்கடமாய்த் தன் பெற்றோரைப் பார்க்க... அது அவர்களின் பதிலை எதிர் நோக்கி இருக்க... வைத்தீஸ்வரனோ ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய் விட்டார்.

விஜய், தீபனிடம் வந்து... "நல்ல முடிவா எடுங்க..." என்று சொல்லியபடி, அவர்களுக்கு யோசிக்க அவகாசம் கொடுத்து வெளியேறினான்.

அவன் கொஞ்சம் பதற்றம் ஆகிற சூழ்நிலை ஏற்பட்டால்... சிகரெட்டின் துணை நாடுவான். அதனால் கீழே போக எத்தனிக்க... அப்போது, உள்ளே நடந்த கலவரம் எதுவும் உணராமல் தீக்ஷா போனில் பேசிக் கொண்டிருந் தாள்.

'யாருக்கு என்ன ஆனால்... இவளுக்கென்ன! வாயடிக் கிறதுக்கு மட்டும் யாராவது வேண்டும்...' என்று மனதுக்குள் நினைத்தபடி... தன் காலணியை அணிய ஆரம்பித்தான்.

அவளோ, இவன் வந்ததைக் கூடக் கவனிக்காமல் பேச்சு சுவாரஸ்யத்தில் இருக்க... அவள் பேசியது இவன் காதுகளில் விழுந்தது.

"அண்ணா அண்ணிக்கு ஃபர்ஸ்ட் நைட்டாம். நான் பச்சப் புள்ளயாம். இங்க இருக்கக் கூடாதாம். இந்த வைஜெயந்தி தொல்லை இருக்கே... தாங்க முடியலை. இன்னும் நம்மள உலகம் அறியாப் புள்ளைனு நம்பிட்டு இருக்கு, ரமா... டூ பேட்!" அவள் பாட்டுக்குச் சுற்றும் முற்றும் பார்க்காமல் பேசிக் கொண்டிருக்க...



அவள் பேச்சில் திகைத்து ஒரு நிமிடம் நின்றவன்... பின் தானாகவே, "இந்தக் காலத்துப் பெண்களுக்கு... எதுவும் தெரியாமல் இருந்தால்தான் ஆச்சரியம்..." என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டவன்...

'அடிப் பாவி. உன்னை அறியாப் புள்ளைனு... இந்த உலகம் நம்பலாம். ஆனா நான் நம்ப மாட்டேன்டி...' என்று மனதில் சொல்லியபடி, 'இன்னும் இங்கே நின்னோம். உட்கார வைத்து... தனக்கே விளக்கம் கொடுக்க ஆரம்பித்து விடு வாள். செய்தாலும் செய்வாள். என்ன பேசுறோம்னு தெரிஞ்சே பேச மாட்டா... இவள்லாம்...' என்று நினைக்கும் போதே,

'டேய் விஜய், இவளைப் பற்றி எல்லாம் நீ எதுக்குடா யோசிக்கிற. விட்டுத் தள்ளு. நீ வந்த வேலையைப் பாரு...' மனம் சொல்ல... தலையைச் சிலுப்பியவன், அவளிடம், "வழி விடுறியா?" என்று மட்டும் சொல்ல,

தீக்ஷா அதிர்ச்சியான விழிகளுடன் அவனைப் பார்த்துப் போனைக் காதில் இருந்து இறக்கியபடி எழுந்தாள். அவளின் அதிர்ச்சியான விழிகளில்... 'இவன் என்ன கேட்டிருப்பானோ?' என்ற கலக்கம்... விஜய்க்கு நன்றாகப் புரிய...

"பேசுறதெல்லாம் பேசிட்டு... ஒண்ணுமே தெரியாத பாப்பா மாதிரி... எப்படி முழிக்கிறா. எல்லாத்தையும் கேட்டுட் டேன்டி..." என்ற உரிமையோடு மனதுக்குள் பேசியவனுக்கு... அந்த உரிமை மூளைக்கும் எட்டவில்லை. அவன் மனதுக்கும் எட்டவில்லை.

எதையும் உணராதபடி... மனதுக்குள் மட்டும் அவளுக்குக் கவுன்டர் விட்டுக் கொண்டிருந்தவன்... கொஞ்சம் நக்கலாக அவளிடம்... "வௌங்கிடும். உருப் பட்டுருவ..." என்று அவள் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படி... மெல்லிய குரலில் சொல்லி... தான் கேட்டு விட்டேன் என்பதை அவளுக்கு உணர்த்திச் சென்றவன்... நான்கு படி கடந்து மீண்டும் திரும்பிப் பார்க்க... அப்படியே நின்று கொண்டிருக்க...

அவள் 'ஙே' என்று நின்று கொண்டிருந்த நிலையைப் பார்த்துச் சிரித்தபடி துள்ளலாக இறங்கியவனுக்குச் சற்று முன் இருந்த தன் தங்கை கவலை கூட மறந்துவிட... அதனால் சிகரெட்டின் துணையும் தேவைப்படாமல் போய்விட... கீழே காரின் அருகே நின்றபடி... நேரத்தைக் கடத்த... வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம் கழித்து அவன் வரும்போது நிலைமை... அவன் விட்டுப் போன இடத்தில்தான் இருந்தது. "வைத்தீஸ்வரன் இன்னும் ஒத்துக் கொள்ள வில்லை..." என்று தீபன் சொல்ல,

விஜய்க்குத் தன் தங்கையை நினைத்து மீண்டும் கலக்கம் வர... தீபனிடம் மீண்டும் வற்புறுத்த...

அப்போதுதான் விஜய் தீக்ஷாவைப் பார்த்தான். அதிலும் அவள் தன் அண்ணன் மேல் கை போட்டபடி உட்கார்ந்து... தன்னை ஏளனமாகப் பார்த்துக் கொண் டிருப்பது நன்றாகத் தெரிய... இப்போது தீக்ஷாவின் நிலை விஜய்க்கு இன்னும் எரிச்சலைக் கிளப்பியது.

கடைசியில்... ஒரு வழியாய்த் தீபன் பெற்றோர் சம்மதிக்க... விஜய் பெருமூச்சு விட்டு நிமிர...

அப்போது தீக்ஷா, "அப்பா... என்னப்பா... நான் வரமாட்டேன். என்கிட்ட ஒரு வார்த்தை கேட்க மாட்டீங்களா...?" என்று கத்த,

சுரேந்தரும் யுகேந்தரும்... தீக்ஷாவைக் கிண்டல் செய்ய... விஜய்க்கும் சிரிப்பு வர, அவளிடம் முதன் முதலாகத் தன் புன்னகையை... அவள் முகத்தை நோக்கிச் சிந்த... அவள் அதை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

அவளின் பார்வையை எல்லாம் அவன் கண்டு கொள்ளவே இல்லை. அப்படியே கண்டு கொண்டிருந்தாலும் இவன் ஒன்றும் பாதிக்கப்படப் போவதில்லைதான்.



ஏனென்றால்... ராதா தன் தங்கை. இனி, இந்த வீட்டில் இருக்கப் போவதில்லை என்ற ஆனந்தமே இருக்க... அதற்கு ஒத்துக் கொண்ட தீபனையும், அவன் குடும்பத்தையும் அந்தக் கணத்தில் இருந்து, தன் மனதார ஏற்றுக் கொண்டான் விஜய்.

**தீ**பன் சம்மதித்து விட்ட ஒரே காரணத்தால்... தானே அவர்கள் குடும்பத்தின் வீடு மாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட விஜய்... அவன் தங்கை சந்தோசம் மட்டுமே அவனின் சந்தோசமாக இருக்க... அவள் காதலித்து மணந்த தெல்லாம் பின்னுக்குப் போக... அன்று அதிகாலையே தீக்ஷாவின் வீட்டிற்கு ஆட்களோடு போய்விட்டான், வீட்டைக் காலி பண்ண.

வீட்டில் இருந்த பொருட்களெல்லாம் காலி செய்யப் பட்டுக் கொண்டிருக்க... தீக்ஷா அறையில் உறங்கிக் கொண டிருக்க...

விஜய், ஜெயந்தியிடம், "நான் பார்த்துக் கொள்கிறேன். அவ ரூமைக் கடைசியில் காலி பண்ணிக் கொள்ளலாம். நீங்க போங்க. நான் பார்த்துக் கொள்கிறேன்..." என்று ஜெயந்தியிடம் கூற,

ஜெயந்தி தயங்க... அவரின் தயக்கம் புரிந்தவனாய்...

அவர் பார்த்துக் கொண்டிருந்த போதே, அவளின் அறையை வெளியில் தாழிட்டபடி...

"நானும் ஒரு பொண்ணுக்கு அண்ணன்தான் அத்தை..." என்றபடி அங்கிருந்து போக... அவனது செயலில்... சஞ்சலமின்றிக் கிளம்பினார் தீக்ஷாவின் தாய்.

கிட்டத்தட்ட ஏழு மணி அளவில் ஓரளவு பேக்கிங் எல்லாம் முடிக்க... வீடும் ஓரளவு காலியாகிக் கொண்டிருக்க... ஹாலில் உள்ள சோபாவில் அமர்ந்தபடி அவள் அறை யினையே பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்.

"மகாராணி எப்போ எழுந்து... எப்போ இங்கேயிருந்து கூட்டிக் கொண்டு போக... எழுப்பலாமா?" என்று கூட யோசித்தவன்...

'அந்த விஷப்பரிட்சையெல்லாம் வேணாம்டா. அவளே எழுந்து வருகிறவரை வெயிட் பண்ணு...' என்று தீர்மானித் தவனாய்...

ச்சே! ஒரு தங்கையோட பிறந்து... அவ நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக யாரோ ஒருத்தி... இந்த தீக்ஷா... அவள் எழுவதற்காகவெல்லாம் காத்திருக்க வேண்டிய தன் நிலையை எண்ணித் தலையில் அடித்துக் கொள்ளாத குறையாக உட்கார்ந்திருந்தான்.

அவள் பொறுமையை எல்லாம்... இன்னும் ஒரு அரை மணி நேரம் பறக்க விட்டவளாய்... தீக்ஷா தன் அறைக் கதவைத் தட்ட... விஜய் வேகமாக எழுந்து அறைக் கதவைத் திறக்க... திறந்தவன் கொஞ்சம் அதிர்ந்து, பின் தனக்குள் சமாளித்தான் தான். அவள் இரவு உடை கொஞ்சம் இறங்கி யிருக்க... பார்த்தும் விட்டான்தான். ஆனாலும் சட்டென்று பார்வையை மாற்றியும் விட்டான்தான்.

வாய் தானாகவே அவள் உடையை மாற்றி வரும்படி, அவளுக்கு உத்தரவிட... கைகள் அனிச்சையாகவே அவள் அறைக் கதவை மூடின.

அதன்பின் தான் பார்த்த தீக்ஷாவின் கோலம் பற்றிப் பெரியதாக எண்ண ஓட்டமெல்லாம் அவனுக்குள் இல்லை தான். இருந்தாலும்....?

பின் உடை மாற்றி வந்த தீக்ஷா... தன் வீட்டைப் பார்த்து, கொஞ்சம் கண் கலங்கி... பின் நிலைமை புரிந்து... தன் பெற்றோரைக் கேட்க...

"யாருமே இல்லை. எல்லோரும் அங்க போயிட்டாங்க."



"அப்போ டீ கூடக் கிடையாதா!" என்று தீக்ஷா தலையில் கை வைத்தபடி உட்கார்ந்து விட்டாள்.

அவளிடம் பதில் சொல்லாமல், சுரேந்தருக்குப் போன் செய்தான் விஜய்.

"டேய், இந்த மகாராணி எழுந்துட்டாங்க. மேடம் பசி தாங்க மாட்டாங்கனு அவங்க அம்மா கொடுத்து விட்ட டிபனைக் கொண்டு வந்து கொடுங்க..." என்று போனை வைத்துக் கடுப்புடன் பார்த்தான் விஜய்.

அடுத்த நிமிடம் சுரேந்தர், காலை டிபனை அவள் கையில் கொண்டு வந்து சேர்க்க... சுரேந்தரே அவளுக்கு வந்து கொடுத்ததைத் தாங்க முடியாத விஜய்... சுரேந்தரைத் தனியே அழைத்து வெளியே வந்தவன்...

"எடுத்துட்டு வான்னா... நீயே வரணுமாடா... வேற யார்கிட்டயாவது குடுத்து விட மாட்டியா?" என்று பல்லைக் கடிக்க...

"ஏண்ணா, தீக்ஷாவும் இனி நம்ம வீட்டுப் பொண்ணு தானே... விடுங்க..." என்று அவன் சாதாரணமாகச் சொல்லியபடி கீழே இறங்கிப் போய் விட்டான்.

விஜய் தீக்ஷாவைத் தான் நின்ற இடத்திலிருந்தே பார்த்தபடி இருந்தான். அவளோ அதை எல்லாம் உணராமல்... சாப்பாடே கருமமாகச் சாப்பிட்டுக் கொண் டிருக்க... அவள் சாப்பிட்ட விதத்தில் லேசாய்ப் புன்னகை விஜய் முகத்தில் படர... அந்தப் புன்னகையுடன் அவளின் முன் வந்து உட்கார்ந்தான் விஜய்.

'எனக்கு மட்டும் ஏன் இவளைப் பார்த்து எரிச்சல் வருகிறது. போயும் போயும் சின்னப் பொண்ணுகிட்ட... சின்னப்புள்ள மாதிரி நானும் சண்டை போட்டுட்டு இருக்கேன். என்னை நான் மாற்ற வேண்டும்...' என்று மனம் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அவளுக்கு விக்கல் வர...

'சாப்பாடை எடுத்து வந்து கொடுத்தவன்... தண்ணீர் எடுத்து வர மாட்டானா...?' என்று சுரேந்தரை மனதில் திட்டியவன்...

தன்னையே பார்த்தபடி, பரிதாபமாக விக்கிக் கொண்டிருந்த தீக்ஷாவைப் பார்த்து ஒரு யோசனை வந்தது. ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தா விக்கல் போகும்னு சொல் வாங்களே... கொஞ்சம் மிரட்டிப் பார்ப்போமா... என்ற எண்ணம் வர, அந்த எண்ணத்தை அதே வேகத்தில் கை விட்டவன்...

அவளிடம், "சாப்பிட மட்டும் அவசரம் காட்டக் கூடாது. தண்ணி இருக்கானு ஃபர்ஸ்ட் பார்க்க வேண்டும்..." என்று சொல்லியபடி எழுந்து கிச்சனுக்குள் போனான்.

அங்கு ஒரு பொருளுமில்லை. பின் எப்படித் தண்ணீர் மட்டும் இருக்கும்? அவனே மனம் வந்து அவளுக்குத் தண்ணீர் எடுத்துக் கொடுக்க வந்தான்தான். எல்லாம் அவன் நேரம்... அவனை அவளிடமிருந்து இன்னும் விலக்கியே வைத்தது விதி.

வேறு வழியின்றி யுகேந்தருக்கு கால் செய்தான். சுரேந்தர் தீக்ஷாவுக்கு வேலை செய்வதை அண்ணனாகப் பார்க்கப் பிடிக்கவில்லை. ஆனால் யுகேந்தர் இவளுடன் சரிசமமாகப் பழகுவதால்... அவனுக்கே போன் செய்தான்.

யுகேந்தரும் கொண்டு வந்து கொடுக்க...

'என் தம்பிங்க ரெண்டு பேரையும் என்னை வைத்தே வேலை வாங்குகிறாள்... இப்பவே இப்படின்னா...' என்று தோன்ற, 'இவ இருக்கிற பக்கமே தலை வைத்துப் படுக்கக் கூடாது, நாங்க மூணு பேரும்...' என்றெல்லாம் அவன் குண இயல்புக்கு மாறி, அவன் யோசித்துக் கொண்டிருப்பது கூடத் தெரியாமல்... அவன் இருந்தான் அப்போது.

கிட்டத்தட்ட எல்லாவற்றையும் காலி செய்து... தீக்ஷாவையும் வெளியே அனுப்பி விட்டு... வீட்டை ஒரு முறை



சுற்றிப் பார்த்தவன்... தீக்ஷாவின் அறையையும் பார்க்க நேரிட... அதன் சுவரெங்கிலும்... அவள் பேர் கிறுக்கப் பட்டிருக்க... அதைப் பார்த்தபடி,

"வீட்டையே அலங்கோலப்படுத்தி வச்சுருக்கா... பெரிய இந்தப் பேரு..." என்றபடி வெளியேறினான் விஜய்.

அவன் வெளியே வந்தபோது அந்த குவார்ட்டர்ஸின் குழந்தைகள் தீக்ஷாவைச் சுற்றி நின்று அழுதபடி இருக்க... இவள் கண்களும் கலங்கி நின்றிருந்த விதம், அவனுக்குச் சிரிப்பைத்தான் தந்தது.

பின் அவர்களிடம் விடை பெற்றபடி, தன் அருகில் வந்த தீக்ஷாவிடம், "அடேங்கப்பா... இந்த அக்கா போறாங்கன்னு... இத்தனை பேருக்கு வருத்தமா?" என்று கேலியாக அவளிடம் கேட்க...

"இந்த மாதிரி நிலை உங்களுக்கு வந்தா தெரியும்... நமக்குப் பிடிச்சவங்க நம்மை விட்டுப் போகும்போது வருகிற வலிதான் இந்த உலகத்திலேயே பெரிய வலி..." என்று சொல்லி அழுதபடியே அவனை முறைத்தவளைப் பார்த்து...

'இவகிட்ட கொஞ்சம் பேசினா நமக்கே சாபம் விடுற மாதிரிப் பேசுறா...!' என்று தன் முகத்தை மாற்றினான் விஜய்.

ஆனால் அன்று கேலியாகத் தீக்ஷா சொன்ன வார்த்தைகள்... ஒரு நாள் அவன் வாழ்வில் நிதர்சனம் ஆகி... அந்த வலியை அனுபவிக்கும் நிலைக்கும் ஆளானான் விஜய்.

"ஏன் அத்தான் இப்படிப் பண்ணுனீங்க...? ஒரே நாளில் வீட்டை மாற்றி..." என்றபோதே... அவள் பேச்சைக் காதிலே வாங்காதவன் போல் காரை எடுத்தான் விஜய்.

அவளும் தங்கள் வீட்டுப் பெண் என்ற எண்ணம் கொஞ்சம் வந்ததால்... அவளுக்குக் காரோட்டுவதில் இப்போது மனம் தயங்கவில்லை அவன், ஆனால் அவள்

பின்னால் போக... அது அவளுக்குக் காரோட்டும் ஓட்டுநர் போல் இருக்க... முன்னால் வரச் சொல்ல... அவன் அருகில் வந்து அமர்ந்த தீக்ஷா சும்மாவா இருந்திருப்பாள்... சற்று முன் இருந்த பிரிவுத் துயரம் எல்லாம் போய் விட... விஜய்யோடு பேச ஆரம்பித்தாள்.

அவனே ஏதோ போனால் போகிறது என்று அவளையும் அழைத்துக் கொண்டு போக வந்திருந்தான். ஆனால் அவன் மனம் புரியாமல், தீக்ஷா அவனோடு வம்பளந்து கொண்டிருந்தாள். அதுவும் சும்மா இருக்காமல் தீக்ஷா திடீரென்று அவனிடம், "ஏன் அத்தான் எனக்கு ஒரு டவுட்... உங்க வைஃப் வந்தா நம்ம ரெண்டு பேருக்கு நடுவிலயா உட்கார வைப்பீங்க..." என்றவளைப் புரியாமல் நோக்க...

வழக்கமாய்த் தன் உளறலோடு தீக்ஷா பேசத் தொடங்கினாள். இவனின் பார்வை புரிந்தவள் போல்...

"இல்ல... சும்மா கேட்டேன். ஏன்னா, என்னைப் பின்னாடி வச்சு ட்ரைவ் பண்ண மாட்டீங்க. நான் முன்னாலயும் வர முடியாது. ஒருவேளை அப்படி ஒரு சிச்சுவேஷன் வந்தா அப்போ என்ன பண்ணுவீங்க...?"

சத்தியமாய்க் கடுப்பாய் ஆகிவிட்டான் விஜய். இவளை நாம கூட்டிட்டு வராமலே இருந்திருக்கலாம். பெரிய சிச்சுவேசன். எங்க இருந்து யோசிப்பா இவ... அது உருப்படியா இருந்தால் கூடப் பரவாயில்லை. இவ என்னைக்குமே யூஸ்ஃபுல்லா பேச மாட்டாளா... என்று இவன் மனதில் நினைக்க... அவள் தன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து...

"அப்படி ஒரு சிச்சுவேஷன் வந்தாப் பார்த்துக்கலாம். இப்போ நீ பேசாம வருகிறாயா?" என்று அந்தப் பேச்சை முடித்து வைப்பவன் போல் அதட்டியவன்... பேசாமல் காரை ஓட்ட ஆரம்பித்தான்.



ஆனால், தீக்ஷா விடுவாளா...? விட்டால்தான் அவள் தீக்ஷா ஆவாளா...? விஜய் அவளிடம் ஓரளவு சகஜமாகப் பேச ஆரம்பித்ததாலோ என்னவோ... அம்மணி அவனையே நக்கலடிக்கும் அளவுக்கு வந்து விட்டாள்.

"ஆன்சர் தெரியலையா?" என்று அவனிடம் ஓட்ட...

விஜய்க்கு வந்த எரிச்சலுக்கு அவளிடம், "ஹ்ம்ம்... என் பொண்டாட்டிய மடியில் தூக்கி வச்சுப்பேன்டி..." என்று சொல்ல வேண்டும் போல் இருக்க... அதை அவளிடம் சொல்லவா முடியும்?

'யார்டா இவ... ஆன்சர் தெரியலையான்னு... வந்துட்டா கேள்வி கேட்க...' என்று மனதில் நினைத்தவன், "யார் சொன்னா ஆன்சர் தெரியாதுன்னு... நீ சின்னப் பொண்ணு. அதான் சொல்லலை..." என்று மட்டும் சொல்ல,

இப்போது அவன் எண்ணப் போக்கில் அவன் மனமே அவனைப் பார்த்துச் சிரித்து வைத்தது.

'டேய் விஜய்... உன் பொண்டாட்டியை நீ மடியில் வச்சுக்கிடுவியா... அவ்வளவு ரொமான்ஸ் மன்னனடா நீ...!' என்று நினைத்தபோது, அவன் முகம் அவனை அறியாமலே புன்முறுவல் பூச ஆரம்பிக்க...

தீக்ஷா, அதைக் கவனித்து விட்டாள் போல். அவள் முகத்தைப் பார்க்கும் போதே விஜய்க்கும் அது தெரிய...

'கடவுளே... இவ என்னத்த யோசிக்கிறாளோ... இவ யோசிக்கிற விதமே சரியிருக்காதே. என்னென்ன யோசிச்சாளோ...?' என்று மனம் திடுக்கிட முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன்,

"ரொம்ப யோசிக்காதே. உன் மூளை கண்டதை எல்லாம் யோசிக்குமே... டிரைவரை வரச் சொல்லி இருப்பேன். போதுமா...?" என்று விரிவாகச் சொல்லித் தன் பதிலை அவளுக்குப் புரிய வைக்க முயல...

ஆனாலும் அவள் அதை நம்பாமல், அவன் முகத்தைக் கேலியாகப் பார்த்தபடி இருக்க... அவளை நம்ப வைக்கும் முயற்சியாக... அவன் இன்னும் பேச ஆரம்பித்தான்.

"இல்லன்னா உன்னை விட்டுட்டுப் போயிருப்பேன். எனக்கு என் வைஃப்தான் முக்கியம். நீயா முக்கியம்?" என்று சொல்லி அவளைப் பார்க்க...

அவள் இன்னும் கேலியாகப் பார்த்தாள்.

"போடி... இதை விட நீ என்ன எதிர்பார்க்கிற... போனாப் போகுதுன்னு உனக்கு... உன் லூசுத் தனமான கேள்விக்கெல்லாம் பதில் சொன்னா... உனக்கு அதுல திருப்தி இல்லையோ...? எனக்குத் தேவைதான். தூங்கிட்டு இருக்காளேனு பாவம் பார்த்து... எழுப்பாமக் கூட்டிட்டு வர்றேன்னு அவ அம்மாகிட்ட பெரிய இவனாட்டம் சொன்னேன்ல... அனுபவிக்கத்தான் வேண்டும்..." என்று தன்னையே நொந்தபடி சாலையின் புறம், தன் மொத்தக் கவனத்தையும் திருப்ப...

தீக்ஷாவோ, "இதைச் சொல்லத்தான் நான் சின்னப் புள்ளன்னு சொல்லலையா...? இதுதான் யோசிச்சீங்களா...? வேற என்னவோ இருக்கு!" என்று அடம் பிடிக்க,

வேறு வழியின்றி... முகத்தைக் கடுமை ஆக்கியவன், "தயவு செஞ்சு என்னையும் உன்னை மாதிரியே லூசு மாதிரிப் பேச வச்சுடாதே!" என்றவன், அதற்குப் பிறகு அவளிடம் பேச்சைக் குறைத்தவன்... வீடு வரும்வரை வாயையே திறக்கவில்லை. ஏதாவது பேசினால் ஏடாகூடமா எதையாவது சொல்லி விடுவோமோ என்று கூட நினைத்தவன்... நல்ல பிள்ளையாக மாறித் தான் வாங்கிக் கொடுத்த புதிய வீட்டின் முன் காரை நிறுத்தினான்.

அவள் இறங்கும்போது... "தீக்ஷா!" என்று அழைக்க, அவளும் குனிந்து கீழே பார்க்க...



"உன் பேர் எங்க எல்லாருக்கும் தெரியும். இங்கேயும் உன் பேரை எழுதிச் சுவரையெல்லாம் அசிங்கப்படுத்திடாதே. இது நீ இருந்த கவர்ன்மெண்ட் குவார்ட்டர்ஸ் இல்லை...!" என்று சொல்ல, அவள் விரைத்தாள்.

அதே நேரம் அவனிடம், "கண்டிப்பா, விஜய் அத்தான். எனக்குப் பிடிச்ச இடத்தை மட்டும்தான் என் பெயர் அலங்கரிக்கும். சோ, இந்த வீட்டுக்கு அந்த அலங்காரம் கிடைக்காதுதான். சாரி சாரி... உங்க பாஷையில அசிங்கப்படுத்த மாட்டேன், உங்க தங்கை வீட்டை..." என்றபடி, அவள் கிளம்ப... அவளின் வேக நடையே அவளின் கோபம் சொல்ல...

"சுவரில் கிறுக்கக் கூடாதுன்னு நல்ல பழக்கத்தைத் தானே சொன்னேன். இவளுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருது... நல்ல பழக்கம் எல்லாம் சொன்னா... இவளுக் கெல்லாம் பிடிக்குமா... பிடிக்காதுதான்!" என்ற மட்டில்தான் விஜய் அன்று நினைத்தான்.

சுவரில் கிறுக்கக் கூடாது என்ற நல்ல பழக்கத்தைத் தான் அவளிடம் சொன்னான். கூடவே, தன் பேச்சில் அவளின் பழைய வீட்டையும் இழுத்ததைத்தான் அவன் உணரவில்லை.

## 22

தான் நினைத்தது போல் தங்கை வாழ்க்கை பயப்படும்படி இல்லை. அவள் தன் திருமண வாழ்க்கையில் பரிபூரண சந்தோசத்தில் இருக்கிறாள் என்பதை உணர்ந்த விஜய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதேபோல் தீக்ஷாவின் மேலும் அவனுக்குக் கோபம் எல்லாம் இல்லை. ராதாவோடு சேர்ந்து வீட்டிற்கு வருவாள். யுகேந்தரோடு அரட்டை அடிப்பாள். கலைச்செல்வியோடு செல்லம் கொஞ்சு வாள்... என தீக்ஷா, தன் குடும்பத்தோடு ஐக்கியமானதை

எல்லாம் அவள் அறியாமல் கவனித்துக் கொண்டுதான் இருந்தான் விஜய். சில சமயம் ரசித்துக் கொண்டும்தான் இருந்தான்.

கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகியிருக்க, விஜய் அன்று தன் தங்கையின் வீட்டிற்கு வந்தான்.

ராதாவிடம் கீழே ஹாலில் பேசிக் கொண்டிருக்க... மேலே ஜெயந்தி தீக்ஷாவிடம் கத்திக் கொண்டிருப்பது கேட்டது.

"என்ன பிரச்சனை... உங்க வீட்டு வாலு அவங்க அம்மாவை டென்சன் பண்ணிட்டிருக்கா போல..." என்று எதிரே இருந்த அவள் புகைப்படத்தைப் பார்த்தபடி... தங்கையிடம் சொல்லியவன்...

"போட்டோவுல அப்படியே ஒண்ணும் தெரியாத சின்னப் பாப்பா மாதிரி போஸ்... ஆனா பண்றது எல்லாம் அராத்து வேலை..." என்று சிரிக்க...

"தீக்ஷா பார்க்கத்தான் சின்னப் பொண்ணு... குறும்புத் தனம். ஆனால் ரொம்ப சீரியஸான பொண்ணு அண்ணா...!" என்றவள்,

"இன்னைக்கு மேடம் ஹேர் கட் பண்ணிட்டு வந்திருக்கா. அதுதான் அத்தைகிட்ட திட்டு வாங்கிட்டு இருக்கா..."

"இதுக்கெல்லாம் திட்டு விழுமா என்ன?" என்று கேட்கும்போதே,

"உனக்குச் சூடு வாங்காம சரிப்பட்டு வரலைல்ல... இப்படி முக்கால் வாசி வரை வெட்டிட்டு வந்துருக்கியே... அடிப்பாவி! இரு... உனக்கு இன்னைக்குச் சூடுதான்டி..." என்று ஜெயந்தியின் கத்தல் கேட்க,

விஜய்யே அதிர்ந்து விட்டான்.

"என்னது, சூடா...!" என்று அதிர்ந்தவன், ராதாவைப் பார்க்க...



அவனின் திகைத்த பார்வையில் ராதா சிரித்தபடி, "அத்தை சும்மா மிரட்டுவாங்கண்ணா...!" என்றபடி புன்னகையுடன் இருக்க...

இந்த வீட்டில் இந்த விளையாட்டு மிரட்டல் எல்லாம் அடிக்கடி நடக்கும் நிகழ்வு போல... என்று சமாதானமானான் விஜய்.

"அது மட்டுமில்லண்ணா... ஏன் தீக்ஷா, இவ்வளவு தூரம் கட் பண்ணிட்டு வந்தேனு நான் கேட்டேன். அதுக்கு அவ சொன்ன ரீசன் இருக்கே... போங்க..." என்றவனிடம்,

"என்ன சொன்னா?"

"அத்தை இப்போ அவளைக் கண்டுக்கிறது இல்லையாம். அதுதான் மேடம் இந்த வேலை பார்த்திருக்காங்க. அத்தை இருக்கிற காண்டுக்குக் கண்டிப்பா தோசைக் கரண்டி சூடுதான் போல..." என்றபோது, அவனையும் மீறி, அடக்க முடியாமல் சிரித்தான் விஜய்.

"அப்போ இன்னைக்கு ஒரு சூப்பர் சீன் இருக்கும் போல, ராதா.... நாம வேடிக்கை பார்க்க...!" என்று ராதாவிடம் சிரிக்க,

ராதாவோ சலிப்போடு, "அத்தைகிட்ட திட்டு வாங்கிறதுக்காக இப்படியெல்லாம் பண்ணுவாங்களா?" என்று கூற,

"எல்லாமே அவளுக்கு விளையாட்டுத்தாண்ணா...!" என்றபோது, அவனின் பார்வை மீண்டும் அவள் புகைப் படத்தில் பட்டு மீண்டது.

அப்போது தீக்ஷாவைத் திட்டியபடி இறங்கி வந்த ஜெயந்தி... விஜய்யைப் பார்த்துத் தன் நிலை மீண்டவராய்...

"வாங்க தம்பி..." என்று போனவர்... அதற்கு மேல் தீக்ஷாவை மறந்து, விஜய்யைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார்.

ஜெயந்தி தீக்ஷாவை மறந்து... இவனைக் கவனிக்க ஆரம்பித்ததை உணர்ந்த விஜய், தன் தங்கையிடம்,

"உன் செல்ல நாத்தனார் கிட்ட சொல்லி வை. இன்னைக்கு அவளைத் தோசைக் கரண்டி சூடுல இருந்து காப்பாத்தினது... விருமாண்டிதான்னு..." என்று சொல்லிச் சிரித்தவன்... அடுத்த சில மணித் துளிகளில் கிளம்பியும் போனான்.

விஜய் அன்று அலுவலகத்தில் இருக்க... இளமாறன் அவனைச் சந்திக்க வந்தான்.

இளமாறனோடு சேர்ந்து சில ப்ராஜெக்ட்ஸையும் சேர்ந்து எடுத்து வேலை பார்க்க ஆரம்பித்திருந்தான். அதைத் தற்போது சுரேந்தர் பெயருக்கு மாற்றி இருக்க... அது விசயமாக விஜய்யைப் பார்க்க வந்திருந்தான் இளமாறன்.

"என்ன விஜய்... என்னோட சேர்ந்து பார்க்கிற ப்ராஜெக்ட்ஸ் ரெண்டையும் சுரேந்தர் பேருக்கு மாற்றி விட்டு விட்டாய்... என்ன காரணம்?" என்று கேட்க,

"இல்லை இளா... நான் சொல்லி இருக்கேன்ல... அந்தத் துபாய் கொலாப்ரேசன்ல நம்ம சென்னையில பில்டிங் கட்டப் போற ப்ராஜெக்ட்... அது என்னோட ட்ரீம் ப்ராஜெக்ட். அவங்க டெக்னாலஜிஸ் இங்க நாமதான் இன்ட்ரடியூஸ் பண்ண வாய்ப்புக் கிடைக்கும். அதுக்கான ஸ்டெப்ஸ்ல இருக்கேன் நான்... அதனாலதான் சுரேந்தரை மாற்றினேன். அது மட்டுமில்லை. தீனாவும் போட்டி போடுகிறான். இதில் தோல்வி அடையக் கூடாது என்று கொஞ்சம் தீவிரமாக இருக்கேன்..." என்றவனிடம்,

சில நிமிடங்கள் மௌனமாக இருந்த இளமாறன்... பின், "ஹ்ம்ம்... இது மாதிரி வேறு எதையும் மாத்திடாதே!" என்று சொல்ல...

அவனின் வார்த்தைகளில் விஜய் புருவத்தை நெரித்த படி, அவனையே பார்த்தபடி இருக்க...



"கூல் மேன்... சும்மா... தென் எனக்கு மேரேஜ் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க. இளமதி அதுக்காக இங்க வருகிறாள். அப்போ நீ அவளை மீட் பண்ணலாம். உன் போட்டோவைக் காட்டினேன்... சோ இம்ப்ரெஸ்ட்..." என்றபோது, விஜய் அளவாய்ச் சிரிக்க...

"என்னடா... மதியோட இப்போதைய போட்டோவை உன்கிட்ட கொடுத்தேனே... பார்த்தியா நீ... நீ எதுவும் சொல்லலை..." என்றபோது,

"கொஞ்சம் பிஸி... அதைப் பார்க்கிறதுக்கு நேரம் இல்லடா...!" என்றவனிடம்,

"அது சரி. உங்க வீட்டு ஹாலில் சார் உட்காருகிற இடத்துக்கு நேரா மதி போட்டோவை மாட்டி இருந்திருக்கலாம். நீ உட்காருகிற போதெல்லாம் உன் கண்ணில் பட்டிருக்கும். உனக்கும் நேரம் இல்லை என்ற பிரச்சனை இல்லாமல் போயிருக்கும்..." என்று சிரிக்க...

அவனின் நக்கலான பேச்சில்... விஜய்க்கு ஏனோ, தன் தங்கை வீட்டில் மாட்டப்பட்ட தீக்ஷா போட்டோ ஞாபகம் வர... இன்னும் அதிகமாய்ச் சிரிக்க...

"டேய் இளா... இவ்ளோ காமெடி அடிக்கிற ஆளா நீ...!" என்று அவனோடு சிரிக்க...

இளமாறனோ, அவனின் சிரிப்பைக் கண்டு கொள்ளா மல்...

"ஒரு போட்டோவைப் பார்க்க உனக்கு டைம் இல்லேன்னு சொன்னா... அதை நம்புற அளவுக்குக் கேனையன் இல்லடா நான்.. ஏன் பார்க்கலைன்னு உண்மை யான ரீசனைச் சொல்லு..." என்று சற்று முன் இருந்த சிரிப் பெல்லாம் மாறிக் கேட்க....

விஜய்யும் சொன்னான். "இளா, நீ புத்திசாலிதான். சரி... உண்மையான காரணத்தைச் சொல்கிறேன். நான்

இப்போதைக்கு என் மனசையும், மூளையையும் வேற எதிலும் திசை திருப்ப விரும்பவில்லை. எனக்கு என் லட்சியம் தான் முக்கியம். அதை மாற்றும் எந்த விசயத்தையும் என் வாழ்க்கைக்குள் இடம் கொண்டு வர விருப்பமில்லை.

"திருமணம், மனைவி... இந்த மாதிரியான உணர்வு களுக்குள் என் லட்சியம் முடியும்வரை மாட்டிக் கொள்ளும் எண்ணம் இல்லை. அதனால்தான் இளமதி போட்டோவைப் பார்க்கவில்லை..." என்றபோது,

"அப்போ என் தங்கையைப் பார்த்தால் ஃப்ளாட் ஆகிருவேனு பயத்தில்தான் பார்க்கலையாடா...?" என்று இளா சிரிக்க...

விஜய்க்கு இப்போது சிரிப்பு வரவில்லை. ஆனாலும் சிரித்து வைத்தான்.

ஆக மொத்தம், விஜய் தன் லட்சியத்தை நோக்கிய திசையில் இருக்க... அவனைக் காதல் பாதையில் திசை திருப்புவது எப்படி என்று காதல் தேவன் குழப்பத்தில் இருக்க... விதியோ, விஜய் காதலில் விழுந்தால்தான் தன் கைவரிசையைக் காட்ட முடியும்... இவனோ இப்படி இருக்கிறானே என்ற கவலையில் இருந்தது.

விஜய் அவனின் வேலையில் பிஸி ஆகிவிட... வீட்டிலே இருப்பதில்லை. இளா மேரேஜில் கூட அவனால் கலந்து கொள்ள முடியவில்லை. இளமதியையும் பார்க்கச் சந்தர்ப்பம் நேராமல் போய் விட்டது. சந்தித்தால் மட்டும் ஏதாவது ஆகப் போகிறதா? ஏற்கெனவே தீக்ஷா என்ற ஒருத்தியிடம்... தன் மனம் விழுந்ததைக் கூட அறியாமல் திரிந்து கொண்டி ருப்பவன்தானே அவன்...

அன்று கூட அவன் டெல்லியில்தான் இருந்தான்.

ஹோட்டல் அறையில் தூங்கிக் கொண்டிருந்த அவனைத் தொலைபேசி அழைப்பு எழுப்ப... எடுத்துப் பார்த்தால், அது அவனது தாயின் அழைப்பு.



"என்னம்மா... இத்தனை சீக்கிரம்... என்னன்னு சொல்லுங்க!" என்று படபடப்பாகக் கூறியவனிடம்,

"விஜய்... ஏன் டென்சன் ஆகுற...? சந்தோசமான விசயம்தான். ராதா போன் பண்ணினாள்... நீ மாமா ஆகப் போறேடா...!" என்று சொல்ல,

விஜய் அடைந்த சந்தோசத்திற்கு அளவே இல்லை எனலாம்.

"அம்மா, ராதாவை இப்போதே பார்க்க வேண்டும் போல இருக்கு. தீபன் வேறு போன வாரம்தான் வெளிநாடு போனாரு. ப்ச்.. இந்த நேரத்தில் அவ கூட... அவர் இல்லை..." என்றவன் கவலையோடு,

"அம்மா, ஆனால் இந்த வாரம் இங்கே இருந்து என்னால நகரக் கூட முடியாது. நெக்ஸ்ட் வீக்தான் வர முடியும். அவகிட்ட நான் நேராவே பேசிக்கிறேன். நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துடுவீங்கள்ல..."

கலைச்செல்வி சிரித்தே விட்டார். "இப்போவா...? வளைகாப்பு முடிந்துதான் அவளைக் கூட்டி வர வேண்டும், விஜய்... உன் பாசம் இருக்கே..." என்றபோது,

"தீபன் வீட்ல மட்டும் ராதாவைக் கவனிச்சுக்குவாங் களாம்மா...?" என்ற அக்கறையில், தாய் நெகிழ்ந்துதான் போனார்.

விஜய் மட்டுமல்ல... அவனுக்கடுத்த இருவரும் அதே சந்தோசத்தில் இருந்தனர். மாமா ஆகப் போகிற சந்தோசத்தில்! அவர்கள் குடும்பத்தின் அடுத்த தலைமுறை ராதா வயிற்றில் இருந்து வரப் போவதை அறிந்து... அது தீபன் வீட்டின் வாரிசுதான். இருந்தும், இரு வீட்டிலும் சந்தோசம் பொங்கியது.

சொன்னபடி விஜய்... அதற்கடுத்த வாரமே வந்தவன், வீட்டில் நுழைந்த அடுத்த சில நிமிடங்களிலேயே தன்

தங்கையைக் காண அவள் புகுந்த வீட்டிற்குப் போக... அங்கு அவன் கண்ட காட்சி... அவனுக்குக் கண்களே கலங்கி விட்டன.

அங்கு தீக்ஷா... ராணி போல் சேரில் அமர்ந்து கொண்டு... சாப்பிட்டபடியே டி.வியில் கவனம் வைத்திருக்க... ராதா அயர்ச்சியுடன் வாஷ்பேசினில் நின்று கொண்டிருந்தாள்.

இருவருமே இவனைக் கவனிக்கவில்லை.

அப்போது தீக்ஷா, "அண்ணி... அந்த ஜூஸை எடுத்துட்டு வாங்க..." என்று சொல்ல... அது அவனுக்கு அதிகார மாய்ப் பட...

ராதாவைப் பார்க்க... அவள் ஏற்கெனவே களைப் பாய்த் தெரிய... இருந்தும், திரும்பி அந்த ஜூஸையும் எடுத்துக் கொண்டு வர.... விஜய்யால் தாங்கவே முடியவில்லை. கண்ணில் ஈரமே வந்து விட்டது.

அவன் வீட்டில் ராதா கூப்பிட்ட குரலுக்கு எத்தனையோ பேர்... அப்படிப்பட்ட தன் தங்கைக்கு வேலை இவள் ஏவிக் கொண்டிருக்கிறாளே... இந்த வாழ்க்கைக்குத்தான் விஷம் குடித்து... போராடி வாழ வந்தாளா...? மனம் துடித்தது. அமைதியாக இருவரையும் கவனிக்க ஆரம்பித்தான்.

இருவருமே இவன் நிற்பது தெரியாமல் பேசிக் கொண்டிருக்க... தீக்ஷா திரைப்படத்தைப் பார்த்தபடியே சக்தி, தீக்ஷா என்றெல்லாம் ஏதேதோ பினாத்திக் கொண்டிருக்க... அதில் எல்லாம் அவன் கவனம் போகவே இல்லை. தன் தங்கை இவளுக்குச் சேவகம் செய்கிறாள் என்ற எண்ணமே அவனை முழுதாக ஆக்கிரமித்து இருக்க... தீக்ஷாவின் மேல் கோபம் கொண்டான்.

முதல் சந்திப்பில் இருவருக்கும் ஒத்து வராமல் சண்டையில் முடிந்ததுதான்... ஆனால் அதன் பிறகு இருவருக்கும் இடையே முறைப்புகள் பரிமாறப்பட்டாலும்... விஜய்க்கும், தீக்ஷாவுக்கும் பெரியதாகப் பிரச்சனை எழ



வில்லை. ஆனால் இன்று விஜய் தன் கோபத்தைத் தீக்ஷா விடம் காட்டாமல்... தனக்குள்ளே கனன்று கொண்டிருந்தான். அதில் தீக்ஷாவின் மீதான வெறுப்போ, கோபமோ அவனுக்குள் மீண்டும் அமர்ந்து கொண்டது என்றே சொல்ல வேண்டும்.

ஒரு கட்டத்தில்... இருவரும் இவனைக் கவனிக்கவே போகப் போவதில்லை என்று முடிவுக்கு வந்தவனாக... செரும... திரும்பிப் பார்த்தனர் இருவரும்.

"வாங்கண்ணா...!" என்று ராதா எழ...

"நீ உட்காரும்மா..." என்றவன், தீக்ஷாவை முறைக்க... அவனின் முறைப்பை எல்லாம் தீக்ஷா கவனிக்கவில்லை. அவன் வந்த வுடனே தீக்ஷா இறங்கிப் போய் விட்டாள்.

அவள் போனவுடன், ராதாவிடம், "சாரி. இன்னைக்குத் தான் டெல்லியில இருந்து வந்தேன்..." என்றபடி, அவன் பேச ஆரம்பிக்க...

இப்போது மேலே வந்த தீக்ஷா... பெரிய அக்கறை இருப்பவள் போல் அவனிடம் ஜூஸை நீட்ட... விஜய்க்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை. வழக்கம் போல் அவன் அவளைத் தவறாகவே நினைத்ததால்... அவள் கொண்டு வந்த ஜூஸை மறுக்க...

அவன் கோபத்தால் ஜூஸை மறுக்கிறான் என்பது தெரியாமல்... இப்போது விளையாட்டாய் ஹால்ஸை நீட்ட...

தீக்ஷாக்கு அவள் ஏன் அதைத் தனக்குக் கொடுக் கிறாள் என்ற எண்ணம் வர... அவளைப் புரியாமல் நோக்கி னான்.

"இது எதுக்கு... நான் கேட்டேனா?" - விஜய் கேட்க,

"வரும்போது செருமிக்கிட்டே வந்தீங்களே... அது தான்... தொண்டையில ஏதாவது கிச் கிச் ப்ராப்ளமோன்னு நினைத்தேன்..." என்று சொல்ல,

அவள் கொடுத்த பதிலில்... அவளின் விளையாட்டுத் தனமான நடவடிக்கையில் விஜய் இன்னும் கொஞ்சம் சூடேறினான்தான். ஏனோ அன்று அவள் விளையாட்டு அவனை ரசிக்க வைக்கவில்லை. பதிலுக்குக் கோபம்தான் இன்னும் அதிகரித்தது.

"என்ன... நான் இருக்கட்டுமா? இல்லை போகட்டுமா...? அறுக்காத. எதுனாலும் யூஸ்ஃபுல்லா பேசுறியா...? பேசுறது எல்லாம் வேஸ்ட். என் தங்கச்சிகிட்ட பேசணும். கொஞ்சம் வெளியில போறியா?" - எரிச்சலாய்ச் சொன்னவன் ரிமோட்டை எடுத்து டி.வி.யை அணைக்கப் போக... அதையும் பிடுங்கிக் கொண்டு ஆட்டம் காட்டியவள்... அவள் விருப்பம் போல் படம் முழுவதையும் பார்த்து முடித்த பின்தான் வெளியேறினாள்.

அவள் போன பின்... "எப்படி, இவளை வச்சு சமாளிக் கிறீங்க...?" என்று தலையைக் குலுக்கியவன்... அதற்கு மேல் தன் தங்கையின் நலனில்... அவனது பேச்சு திரும்பியது.

தங்கையிடம் பேசி விட்டு வந்தவன்... வீட்டில் கொந்தளித்து ஆடிக் கொண்டிருந்தான்.

"அம்மா, ராதாவை நாளைக்கே நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துடலாம்... அங்க இருக்காள்ல ஒருத்தி... அவ நம்ம ராதாவையே வேலை வாங்குறாம்மா.. அவளுக்கு எவ்ளோ தைரியம்...!" என்று சொல்ல...

அவன் ஏதோ தவறாகப் புரிந்து கொண்டு வந்து ஆடுகிறான் என்று புரிந்ததுதான் அனைவருக்கும்.

அனைவரும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்... தான் பிடித்த முயலுக்கு மூணு கால் என்ற கணக்கில் விஜய் நிற்க... வேறு வழியின்றி... அவன் பெற்றோர் ராதாவை அழைத்து வரச் செல்ல... அங்கு ராதாவை அனுப்ப மாட் டோம் என்று தீக்ஷா, விஜய்யை விட பிடிவாதம் பிடித்துப் பண்ணிய ரகளையில் வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.



வந்தவர்கள்... தீக்ஷா பிடிவாதமாகப் பேசியதால்... ராதாவும் வர மறுத்து விட்டாள் என்று விஜய்யிடம் கூற,

"என்னது... அவ நம்ம ராதாவை அனுப்ப மறுத்துச் சண்டை போட்டாளா? என்ன திமிரா அவளுக்கு...! அவளைப் பேச விட்டுட்டு அவங்க அப்பா, அம்மா என்ன வேடிக்கை பார்த்தாங்களா?" என்றவன், "ஏன்ம்மா, அப்பா கிட்ட கூடத் திமிராப் பேசினாளா...?" என்றபோது, கலைச்செல்வி அவனின் கோபம் புரியாமல்,

"ஆமாம்..." என்று அவரையும் அறியாமல் தலை யாட்டி விட...

கோபத்தின் எல்லை தாண்டியவன்... "அவளை..." என்றபடி வேகமாய் வெளியேற,

விட்டிருந்தால் விஜய் தீக்ஷாவின் அறையின் முன்தான் நின்றிருப்பான். அந்த அளவில் அவன் கோப மாய் இருக்க... கலைச்செல்வி தன் தவறு புரிந்தவராய்... அவனைத் தடுத்து நிறுத்தியபடி, தவறான சூழ்நிலையில்... தவறான விசயத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அவன் கோபத்தை நிறுத்த வேண்டும் என்ற நோக்கில்.

"விஜய், இருப்பா... பிரச்சனை வேண்டாம். அது மட்டுமில்லை. தீக்ஷா கூட சண்டையெல்லாம் வேண்டாம். நாளைக்கு உன் தம்பி மனைவியா வரப் போறவ கிட்ட சண்டை போடுறது நல்லாவா இருக்கும்...?" என்று கூற...

அதிர்ச்சியில் நோக்கினான் விஜய்.

"என்னது... தம்பி மனைவியா...?" என்று யோசித்த வனுக்கு, யுகேந்தர் மேல் சந்தேகம் வந்தாலும், அவன் ஆர்த்தியை விரும்புவது தெரிந்ததால், அவனை விட்டு விட்டான்.

"அப்படி என்றால் சுரேந்தரா...!" என்று அதிர்ந்தவன், கோபக் குரலில்,

"அவனை... இது எத்தனை நாளா நடக்குது...? உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கும்போதே, அந்த அறையே அவன் சத்தத்தில் ஆட்டம் கண்டது.

"இல்லப்பா... இது சுரேந்தருக்குத் தெரியாது. என் னோட ஆசைதான். நம்ம ராதா கல்யாணத்துல அவங்க ரெண்டு பேரையும் ஒண்ணாப் பார்க்கும்போதே..." என்று சொல்லியவர், அவனின் முகத்தில் இருந்த கடுங் கோபத்தில் தானாகவே பேச்சை நிறுத்தி, அவனின் முகத்தைப் பார்க்க,

"ஒண்ணாப் பார்க்கும்போதே... சொல்லுங்க, ஏன் நிறுத்திட்டீங்க...?" என்று தன் அன்னையை மேலே பேசச் சொல்ல, கலைச்செல்வி தயங்கியவராய்,

"இல்ல... சுரேந்தருக்கு நம்ம தீக்ஷாவை எடுக்க லாம்னு..." என்று முடிக்கவில்லை.

"நம்ம தீக்ஷாவா...? எப்போதில் இருந்து இந்தக் கூத்து...? ராதா ஏதோ ஆசைப்பட்டா, பண்ணிக் கொடுத்தோம். அதோட அந்த வீட்டுச் சம்பந்தம் முடிந்தது. மீறி ஏதாவது நடந்தது... உங்க மூத்த பையன் ஒருத்தன் இருந்தான்னு மறந்துருங்க. சுரேந்தருக்கு இதைப் பற்றி ஏதாவது சொல்லித் தொலைச்சு வெச்சிருக்கீங்களா...?" என்றபோதே,

அவனின் வார்த்தைகளிலும், முகத்திலும் ரௌத்திரம் நர்த்தனம் ஆடியது.

"இல்ல... இது என்னோட விருப்பம் மட்டும்தான்..." என்றபோது சற்று அமைதி அடைந்தவனாய்த் திரும்பி மாடிக்கு ஏறியவாறே,

"இந்த விஷயம் இன்னொரு தடவை என் காதுக்கு வந்தது... பார்த்துக்கங்க..." என்று எச்சரிக்கை விடுத்துத் தன் தாயின் முகத்தைப் பார்க்க, அவருக்கே, இப்போதைக்கு அவனின் கோபத்தை அடக்கி மேலே அனுப்பி விட்டோம் என்ற நிம்மதிதான் இருந்தது.



அதே நேரம், அவனது கோபத்தில் கலைச் செல்விக்கு... தீக்ஷாவைச் சுரேந்தருக்கு எடுக்கும் ஆசை இன்னுமா இருந்திருக்கும்...? போயே போய் விட்டது.

தங்கையை வீட்டுக்கு வர விடாமல் பண்ணியதிலேயே தீக்ஷா மேல் கோபமாக இருந்தவன், இப்போது தன் தாய் சொன்ன விஷயத்தில் இன்னும் அவள் மேல் கோபமாக, அதன் பிறகு மீண்டும் விலகி நிற்க ஆரம்பித்தான். ஏன், அவளும் அவனிடம் வலிய வந்து முன் போல் பேசவில்லை என்பதை உணர்ந்தான்தான். விட்டது தொல்லை என்ற எண்ணம்தான் அவனுக்கு அப்போது இருந்தது.

ராதாவுக்கு வளைகாப்பு நிகழ்ந்த போது கூட, தீக்ஷா கொஞ்சம் ஒதுங்கி இருக்க, இவனுக்கும் அவளை முறைக்கும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. ஆனால், யுகேந்தரும் அவளும் வளைகாப்பு விழாவில் ஒரே ஆட்டம்தான். யுகேந்தர், தன் அண்ணனைப் பார்க்கவே இல்லை. பார்த்தால்தானே அட்வைஸ் மழை வாங்க வேண்டும் என்று விஜய்யைத் தவிர்த்துத் தீக்ஷாவுடன் சுற்றிக் கொண்டிருக்க,

விஜய், சுரேந்தரிடம், "என்ன ஆட்டம் போடுதுங்க ரெண்டும்..." எனச் சொல்ல,

"தீக்ஷா அவனுக்கு நல்ல கம்பெனி, அண்ணா...!" என்றவனிடம்,

"என்ன கம்பெனியோ போ. அவ கிட்டே பத்து நிமிஷம் பேசினாலே என் காதுல இருந்து ரத்தம் வந்துருதுடா...!" சொல்லியபடியே தன் தங்கையைப் பார்த்தவன்,

அவளின் மேடிட்ட வயிறும், அவள் முகப் பூரிப்பும் பார்த்துத் தன் தங்கையை ரசித்தவன்,

"இன்னும் கொஞ்ச நாளில் நாம மாமா ஆகப் போகிறோம்டா..." என்றவன், "இளாவை மேரேஜ் பண்ணி யிருந்தால் கூட இவ்ளோ சந்தோஷமாக இருந்திருக்க மாட்டாளில்ல..." என்று நெகிழ்ச்சியுடன் சொல்ல,

"நிச்சயமா அண்ணா... தீபன் அத்தான் கிரேட். அவங்க வீட்ல எல்லோருமே ராதாவைத் தாங்குறாங்க. தீக்ஷா, பிறக்கப் போற குழந்தைக்கு என்னெல்லாம் வாங்கி வெச்சிருக்கா, தெரியுமா? இப்பவே செல்லப் பேர் வெச்சுத்தான் கொஞ்சுறா...!" என்றபோது,

சுரேந்தர், தீக்ஷாவைப் பற்றிப் பேச ஆரம்பித்ததால், விஜய் பேச்சை மாற்ற, அப்போது தீக்ஷா, சுரேந்தரிடம் வந்தவள்,

"சுரேந்தர் அத்தான்... அங்கே வாங்க. யுகி, அண்ணியை ஓட்டிட்டு இருக்கான். நான் யுகி சைடுன்றது னால அவங்களுக்குச் சப்போர்ட் பண்ண முடியலை. பாவம், எங்க அண்ணி. அதனால நீங்க அவங்க சப்போர்ட்டுக்கு வாங்க..." என்றவள்,

அவனின் பதிலை எதிர்பார்க்காமல், அவனை இழுத்துக் கொண்டு போக, சுரேந்தர், விஜய்யின் அனுமதியைக் கண்களால் கேட்க, விஜய்யும் போய்த் தொலை என்ற ரீதியில் சம்மதம் கொடுக்க, சுரேந்தர் கிளம்பினான்.

விஜய் மட்டும் தனியே அமர்ந்திருந்தவன், அவர் களைப் பார்த்தபடி இருக்க, அங்கு நால்வரும் சந்தோஷமாய் ஏதோ பேசியபடி இருக்க, அவனுக்கும் அவர்களோடு கலந்து கொள்ள ஆசைதான். ஆனாலும் போக அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. பொறாமையோடு சுரேந்தரையும் யுகேந் தரையும் பார்த்தவன்,

'என் கிட்டே மட்டும் பேச மாட்டாங்களாக்கும் மேடம்...' என்று தீக்ஷாவை முறைக்க, அவளோ இவன் புறம் திரும்பி னால்தானே... இவனைக் கண்டு கொள்ளவே இல்லை.

வளைகாப்பும் ஒரு வழியாய் முடிந்து, ராதா தன் பிறந்தகத்திற்குச் சென்றாள்.

**ஆ**னால், அடுத்த மாதமே ராதாவுக்கு வலி ஏற்பட, மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டாள்.



முதலில் சாதாரணச் சூட்டு வலி என்று சாதாரணமாய் விட, ஆனால், ராதாவுக்கு மூச்சுத் திணறலும் ஏற்பட, அவசர சிகிச்சையில் சேர்க்கப் பட்டாள்.

விஜய்க்குத் தன் தங்கை தவிப்பதைக் காண முடியவில்லை. இரண்டு நாட்களாய் இரு குடும்பங்களும் தவித்து நிற்க, விஜய்யை அந்த மருத்துவர் அழைத்து, 'ராதாவின் நிலை மட்டும் அல்ல... குழந்தையின் நிலையும் சரி இல்லை...' என்பதைச் சொல்ல, விஜய், சுரேந்தரை அழைத்தான்.

"சுரேந்தர்... டாக்டர் என்னமோ சொல்றாங்கடா... தீபன் வேற இல்லை... உடனே வரச் சொல்லணும்டா..." என்று அவன் கண்கள் கலங்கச் சொல்லும்போதே தீக்ஷாவும் அங்கு வந்தாள்.

இருவரும் அவள் வந்ததைக் கவனிக்காமல் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்ன சொல்றீங்க, அண்ணா...?"

"ஆமாடா... ராதா வயிற்றில் குழந்தை நிலை சரி இல்லையாம். ராதாவை மட்டும்தான் காப்பாற்ற முடியும்னு சொல்றாங்க... தீபன் எப்படியாவது இந்தியா திரும்ப ஏற்பாடு பண்ணுடா..." என்று சொல்ல, சுரேந்தர் தாங்க முடியாமல், அந்த இடத்தை விட்டு நகர,

திகிலடைந்த முகத்துடன் தீக்ஷா விஜய்யின் அருகில் வந்தவள், அழுதபடி,

"அத்தான்... அண்ணிக்கு ஒண்ணும் ஆகாதுல்ல... சுனோ பாப்பா எங்க வீட்டுக்கு வர மா...ட்டா...ளா...?" எனும்போதே தடுமாற, விஜய் அவளைத் தாங்கிப் பிடித்தவன்,

"ஏய் தீக்ஷா... என்ன... என்ன ஆச்சு...?" என்று அருகில் அமர வைக்க, அவளோ மயக்கமானாள்.

சுரேந்தரை மீண்டும் அழைத்தான் விஜய்.

"டேய்... இங்கே வாடா... தீக்ஷா மயங்கிட்டாடா, நாம பேசினதைக் கேட்டு... இருக்கிற நிலைமையில் இவ வேறடா... இம்சையைக் கூட்டுறா...!" என்று அவளை ஒரு அறையில் சேர்க்க,

தீக்ஷா அன்று முழுவதும் மயக்கத்தில் இருந்தாள். தீக்ஷாவைப் பரிசோதித்த மருத்துவர், விஜய்யை அழைத்தார்.

"ஏன் மயக்கமா விழுந்தாங்க...?" என்று கேட்க,

"என் தங்கை ராதாவுக்குக் கொஞ்சம் சீரியஸா இருக்கு... அது மட்டுமில்லை... குழந்தைக்கும் சீரியஸ்னு கொஞ்சம் எமோசனல் ஆகிட்டா..." என்றபோது,

"ஹ்ம்ம்..." என்றவர், "இதுக்கு முன்னால் எப்போதாவது..." என்று கேட்கம்போதே, "எனக்கு எதுவும் தெரியாது..." என்று ஜெயந்தியை வரச் சொல்ல,

ஜெயந்தி வரும் போதே தீக்ஷா கண் விழிக்க, "உங்க பொண்ணுக்கு இந்த மாதிரி இதற்கு முன்னால் ஏற்பட்டதுண்டா...?" என்று கேட்க,

"இல்லை..." என்று ஜெயந்தி தலை ஆட்ட,

"சரி..." என்றவர், "இனி இதுபோல் ஆனால் கொஞ்சம் கவனித்துப் பாருங்க..." என்று மட்டும் சொல்லி விட்டுச் சென்றார்.

அப்போதிருந்த சூழ்நிலையில், ஜெயந்தியும் பெரிதாக எடுக்கவில்லை. விஜய்யும் அவள் நிலைமையில் பெரிதாய்ப் பாதிக்கப்படவில்லை. அவனை, அவன் தங்கையின் நிலைமைதான் மொத்தமாய் ஆட்கொண்டிருந்தது.

இரண்டு நாட்களில் தீபனும் வந்து விட, ராதாவுக்குத் தன் கணவனைப் பார்த்த மகிழ்ச்சியிலோ என்னவோ குழந்தையும் பிறக்க, ஆனால், குழந்தை குறைமாதக் குழந்தையாகப் போய் விட்டதால், குழந்தைக்கெனச் சிறப்பு மருத்துவர்களை எல்லாம் விசாரித்து... அங்கு வரச் செய்த விஜய், சுனந்தாவைக் காப்பாற்றினான். கொஞ்சம் கஷ்டமாக ஆன போதும், தாயையும் சேயையும் பத்திரமாய் வீடு கொண்டு வந்து சேர்த்து விட்டான் விஜய். ஆனால், அவனுக்கு உயிர் போய் உ யிர் வந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.



தன் தங்கை குழந்தையைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்த விஜய்... தன் குழந்தையை அதன் கருவறையிலேயே இழந்த பரிதாப நிலைக்குப் போனதுதான் விதியின் கொடூரம். அதைக்கூட தாங்கி விட்டான்தான் விஜய். ஆனால் தன் மனைவி தீக்ஷாவின் நிலையைத்தான் இன்றுவரை தாங்க முடியாமல் தவிக்கிறான்.

குழந்தை பிறந்து ஒரு மாதம் முடிய... மீண்டும் சந்தோசம் திரும்ப... குழந்தைக்குப் பேர் வைக்கும் வைபோகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விஜய் 'சுலேகா' என்ற பெயரைச் சொல்ல... தீக்ஷா 'சுனந்தா' என்ற பெயரைச் சொல்ல...

அங்கும் தீக்ஷா அவனோடு மோத ஆரம்பிக்க... விஜய்க்கு இப்போது கோபம் வரவில்லை. எரிச்சல்தான் வந்தது. ஆனாலும் அவள் அன்று... சுனந்தாவின் நிலை கேட்டு, ஹாஸ்பிடலில் மயங்கி விழுந்தது ஞாபகம் வர... இருந்தும் விட்டுக் கொடுக்க மனம் வரவில்லை.

இவனும் விட்டுக் கொடுத்திருக்கலாம். ஆனால் ஏதோ தடுத்தது. அவளோடு போட்டி போட... குலுக்கலில் வந்து நின்றது. சுரேந்தர் சீட்டில் பெயர் எழுதிக் கொண்டிருந்தான்.

இது நடந்து கொண்டிருந்தபோதே அவன் தீக்ஷாவைப் பார்க்க... அவள் சுனந்தாவிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்.

"டேய், ஸ்னோ பாப்பா... அத்தை வச்ச பேர்தான் உனக்கு வரணும். இல்ல... உங்க மாமாவை ஒரு வழி பண்ணிடுவேன். ஒரு பேர் வைக்கக் கூட இந்த வீட்ல உரிமை இல்லாமப் போச்சுடா. நாங்கள்ளாம் உங்க மாமாவுக்கு அடிமையாடா?" என்று சொன்னவளின் குரல் விஜய்க்கு ஏதோ செய்ய...

விஜய், சுரேந்தரை மொபைலில் அழைத்து...

"டேய், ரெண்டு சீட்லயும் சுனந்தான்னே போடு. இல்ல... அவ அழப் போறாடா. நல்லா வந்து வாச்சாடா...!" என்று சொல்லி வைக்க, சுரேந்தரும் அவன் சொன்னவாறே இரு சீட்டிலும் சுனந்தா என்ற பேரே எழுதிப் போட்டான். ஆக மொத்தம் தன் தன்மானம் குறையாமல் தீக்ஷாவின் ஆசையை நிறைவேற்றினான் விஜய்.

தீக்ஷா வைத்த பெயரே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, குழந்தை சுனந்தாவாகிப் போக... விஜய், தீக்ஷாவை ஆர்வமாகப் பார்த்தான், அவள் சந்தோஷப்படுவாள் என்று. ஆனால், அவள் அதிலும் திருப்தி அடையாமல், தான் சொன்ன வுடனே வைக்காமல் சீட்டுக் குலுக்கலில் பெயர் வந்து வைத்ததால், முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அன்று முழுவதும் திரிய,

அது மட்டும் இல்லாமல், தன்னை முறைத்தபடியே இருக்க... விஜய் பொறுமை இழந்து கொண்டிருந்தான். 'நாம இவ்ளோ விட்டுக் கொடுத்தும் இவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லையே!' என்று கோபம் வர, அதில் எரிச்சலான விஜய், அவள் முன் நின்றான். அதே நேரம் அவன் கோபத்திற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

ராதா வளைகாப்பு முடிந்த பின், ஒரு மழை நாளில் தீக்ஷாவை சுரேந்தரோடு பார்த்ததில் கொஞ்சம் கோப மாகப் பேச, அதன் பிறகு தீக்ஷா சுரேந்தரோடும், யுகேந்த ரோடும் பேசாமல் ஒதுங்கியே இருந்தாள். அது விஜய்க்குப்



புரிந்ததுதான். ஆனால், சுனந்தா பிறந்த வுடன் அதை எல்லாம் மறந்து விட்டு யுகி, சுரேந்தரோடு சகஜமாய் மீண்டும் பேச ஆரம்பிக்க, தன்னுடனும் அதே போல் பேச ஆரம்பித்து விடுவாள் என்று விஜய் எதிர்பார்க்க... தீக்ஷாவோ விஜய் யோடு நேரிடையாகப் பேசுவதையே தவிர்த்து விட,

'என் கிட்ட மட்டும்தான் ரோசம் எல்லாம் போல...' என்ற கடுப்பில் வேறு இருந்தான்.

எல்லாம் சேர்ந்து அவனை உசுப்பேற்ற, அவளைச் சும்மா மிரட்டும் நோக்கில்தான் எச்சரிக்க நினைத்தான். ஆனால், தீக்ஷாவின் - அவளின் திமிரான பார்வையில், அருகில் வந்த போது ஏனோ எதிரிக்குச் சவால் விடும் போக்கில் வார்த்தைகள் திசை மாறிப் போக... அதுவும் தன்னை அவள் பேர் சொல்லி அழைக்க, அவன் கை அவள் கன்னத்தில் பதியும் அளவில் கொண்டு போய் விட, அந்தச் சமயம் ராதா வர, தன்னை அடக்கி, அந்த இடத்தை விட்டு அகன்றான் விஜய்.

அதன் பிறகு யோசித்தும் பார்த்தான்தான்.

'ஏன் தனக்கு அவள் மேல் இவ்வளவு கோபம் வருகிறது...?' என்று பலமுறை நினைத்துப் பார்த்திருக்கிறான். அதற்குரிய விடைதான் அவனுக்குத் தெரியவில்லை. அவன் மனதுக்கும் தெரியவில்லை.

## 23

நாட்கள் கடந்தன.

ராதா, அவள் புகுந்த வீட்டிற்குச் செல்ல... கலைச்செல்வி, விஜய்யிடம் திருமணத்திற்கு வற்புறுத்த... அவன், தன் லட்சியமான துபாய் கொலாப்ரேஷன் பார்ட்னர்ஷிப் கிடைத்த பின்னர்தான் திருமணம் என்று உறுதியாய்ச் சொல்லி விட... கலைச் செல்விதான் புலம்பியபடி இருந்தார்.

இதற்கிடையில் தீக்ஷாவிற்கும் வேறு இடத்தில் திருமணம் முடிவு செய்யப்பட, விஜய் தன் அன்னையிடம் வந்தான்.

"அம்மா... பையனைப் பற்றி நல்லா விசாரிச்சாங்களா...? இவ கொஞ்சம் வாய் ஜாஸ்தி... இவளை அட்ஜஸ்ட் பண்ணிப் போயிருவானா...?" என்று கேட்க,

"அதனால உனக்கென்ன கவலை...? நல்ல பொண்ணு, எடுக்க விடலை... இப்போ என்ன விசாரிக்க வந்துட்ட...?" என்று தீக்ஷாவை எடுக்க முடியாத வருத்தத்தில் சொல்ல,

"ஜஸ்ட், ஒரு அக்கறையில... பையனைப் பற்றி விசாரிச்சாங்களான்னு கேட்டேன். ப்ச்ச்... எனக்கென்ன வந்தது...? யார் எப்படி இருந்தா எனக்கென்ன...?" என்று அவரிடம் அலட்சியமாகத் தோளைக் குலுக்கியபடி வந்தவன் மனம், ஏனோ தனிமையை நாட...

தனியே வந்து பால்கனியின் சுவரில் கைகளை ஊன்றியபடி நின்றவனுக்கு... தீக்ஷா முதன் முதலில் பட்டுப் புடவை கட்டி இந்த வீட்டுக்கு வந்த காட்சி கண்ணில் வர, 'ஏன் எனக்கும் அவளுக்கும் மட்டும் எதுவுமே ஒத்துப் போகவில்லை...?' என்று மனம் அவள் ஞாபகங்களை வரிசைப்படுத்த, இவன்தான் எல்லாமே ஓவராகச் செய்தது போல் பட, 'இனி தீக்ஷாவைத் திட்டக் கூடாது. அவள் திருமணம் முடியும் வரை ஓரளவு அவளோடு சுமுகமாகப் போக வேண்டும்,' என்று முடிவு செய்தான் விஜய்.

ஒரு புறம் தீனா வேறு அவனுக்கு மிரட்டல்களும் தொல்லைகளும் கொடுத்துக் கொண்டிருந்தான்.

ராதாவையே அவன் குறி வைக்க, யுகி காதல் விஷயம் தெரிந்ததால், தீனாவின் தங்கையை வைத்து மிரட்ட முடியாமல் இருந்தான்.



அது ஒருபுறம் இருக்க... இளமாறன் வேறு ஒருபுறம். விஜய்க்கு இளமாறன் செய்வதெல்லாம் பிடிக்கவே இல்லை தான். தன் தங்கையை அவனுக்குத் திருமணம் செய்து தருவதாகச் சொல்லி, பின் ஏமாற்றியதால் மட்டுமே அவன் பொறுத்துப் போய்க் கொண்டிருக்கிறான். திருமண விஷயத்தில் தன்னைக் கட்டாயப்படுத்துவது போல் தோன்றியது.

இறுதியில் அவனின் தொல்லை தாங்க முடியாமல், 'இன்னம் நாலு மாதம் கழித்துத் திருமணம் வைத்துக் கொள்ளலாம்...' என்று சொல்ல, உடனே இளமாறன், அவனைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லி வைத்தான். அலுவலக வேலைகள் அவனை அசையக் கூட விடவில்லை தான். இருந்தும் வேறு வழியின்றி அவனைச் சந்திக்கச் சென்றான் விஜய்.

அங்கோ... இளமாறன் தன் தங்கையை அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

இளமதியைச் சிறு வயதில் விஜய் பார்த்திருக்கிறான் தான். அதன் பிறகு இப்போதுதான் பார்க்கிறான். விஜய்யைப் பார்த்த வுடன் இளமதியின் முகம் பிரகாசமானதை விஜய்யும் கவனிக்கத் தவறவில்லை. அவளைப் பார்த்தும் பார்க்காதவன் போல் வந்து அமர்ந்தான் விஜய்.

இளமாறன் அவர்கள் இருவரின் ஜோடிப் பொருத்தத்தைக் கண்களால் நிரப்பியபடி, "என் மேரேஜுக்கும் உன்னால் வர முடியலை... ரொம்ப டென்ஷன் ஆகிட்டாடா... உன்னைப் பார்க்காமல் போறேன்னு அழுதுட்டே போனா...!" என்று சிரித்தபடி சொல்ல,

"அண்ணா...!" என்று இளமதி சிணுங்கினாள்.

விஜய்க்கு, எப்போதடா இங்கிருந்து போவோம் என்றுதான் இருந்தது. பேசிக் கொண்டிருக்கும்போதே இளமாறன் திருமண் விஷயத்துக்கு வந்தான்.

"என்னடா... ஏன் இன்னும் நாலு மாதம்னு சொல்ற...?" என்றபோதே அவன் குரலில், அண்ணனாய் வருத்தம் விஜய்க்குப் புரிய,

"ரீஸன் அல்ரெடி சொல்லிட்டேனேடா... ஜஸ்ட் நாலு மாதம்தானே...!" என்றவனிடம்,

"என்ன ப்ராஜெக்டோ, என்ன லட்சியமோ...!" என்று சொன்னவன்,

"சரி, நான் கிளம்புகிறேன். இளமதி உன் கூடப் பேசணுமாம்... மேடம்தான் உன்னைப் பார்க்கணும்னு சொன்னாங்க..." என்று அவர்கள் இருவருக்கும் தனிமை வழங்கியபடி எழுந்து போக,

விஜய் எரிச்சல் எல்லாம் படாமல், இளமதியுடன் பேச ஆரம்பித்தான். வழக்கமான விசாரிப்புகளுடன் அவளைப் பற்றி அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது... அவனையும் அறியாமல் ஏதோ ஓர் உணர்வின் உந்துதலில் பின்னால் திரும்ப, யுகேந்தர் தீக்ஷாவோடு வந்து கொண்டிருந்தான். தீக்ஷாவைப் பார்க்க... அவள் முகத்திலோ எப்போதும் துள்ளும் குறும்பெல் லாம் போய், ஏனோ அமைதியாக வந்து கொண்டிருந்தாள். அந்த அமைதியிலும் பல எண்ண ஓட்டங்கள் ஓடிக் கொண் டிருப்பது போல் இருந்தது விஜய்க்கு. அவளின் அமைதி, அவனுக்குள் பல சிந்தனைகளைக் கொண்டு வந்தது.

'ஏன் இப்படி இருக்கா? துள்ளலாத் தெரிவா... இன்னம் ஒன் மந்த்ல மேரேஜ் வேற... மேரேஜ் ஆகப் போற பொண்ணு மாதிரியா இருக்கா...? ராகேஷ் கூடப் பிரச்சினையா இருக்குமோ? அவனோடேயும் விளையாட்டுத்தனமாப் பேசி, எதையும் ஏடாகூடமா இழுத்து விட்டுக்கிட்டாளோ! ராகேஷ் பற்றி விசாரிக்கச் சொல்லலாமா? நமக்கு ஏன் இந்த வம்பு? அவங்க தாத்தா ரிலேஷன்தானே...! ஆனாலும் அவன் இங்கே இல்லாமல் மேரேஜ் ஏற்பாடு பண்றாங்களே - தீக்ஷா



நேர்ல கூடப் பேசாமல்...' என்றெல்லாம் ஏதேதோ நினைத்த படி... ஏதோ இளமதியுடன் பேசிக் கொண்டிருந்தான்.

மனமெங்கும் தீக்ஷா - ராகேஷ் நினைவுகளே அவனைச் சுற்றிக் கொண்டிருக்க... முடிவில் ராகேஷைப் பற்றி விசாரிப்போம் என்று முடிவுக்கு வந்தான்.

இளமதி, அவளைப் பற்றி, அவனிடம் சொல்லிக் கொண்டிருக்க, எல்லாம் கேட்பது போல் புன்னகை முகமூடி போட்டுக் கொண்டிருந்தவனை இளமதியும் கவனித்தாள். சொல்லப் போனால், விஜய்க்கு அவள் சொன்னது எதுவுமே அவனை எட்டவில்லை.

"நான் உங்களை எப்படிக் கூப்பிட்டா உங்களுக்குப் பிடிக்கும்?" என்ற போதுதான் விஜய் தன் உணர்வுக்கு வந்தான்.

"என்ன... என்ன சொன்ன இளமதி...?" என்று உள்ளுக்குள் தடுமாறினாலும், வார்த்தைகள் தடுமாற்ற மில்லாமல்தான் வெளியில் விழுந்தன.

"நான் உங்களை எப்படிக் கூப்பிடுவதுன்னு கேட்டேன்..." என்று அவன் முகம் பார்க்க,

அவளுக்கு விடை என்ன சொல்லுவது என்று நினைத்தபடி, "விஜய்னே கூப்பிடு..." என்று முடித்து விட்டான் விஜய்.

அத்தான் என்று அழைக்கச் சொல்ல, அவனுக்கு ஏனோ விருப்பம் இல்லை. அது ஏனென்றும் தெரியவில்லை.

"என்னது... விஜய்யா...?" என்ற போதே இளமதியின் விழிகள் பெரியதாய் விரிந்தன. விஜய் தன்னைப் பேர் சொல்லி அழைக்கும்படி கூறியதே, அவனின் மனம் தன் பக்கம் சாய்ந்து விட்டது என்ற சந்தோஷத்தில் மனம் துள்ள ஆரம்பித்தாள் இளமதி.

விஜய்யைப் போட்டோவில் பார்த்தபோதே, இவன்தான் தன் கணவன் என்று முடிவெடுத்தவள், இன்று நேரில் அவனோடு பேசப் பேச, அவனுடைய ஆளுமையான பேச்சில், கம்பீரத்தில், முற்றிலுமாக அவனுக்குள் தொலைந்து கொண்டிருந்தாள் இளமதி. இப்போது விஜய்யும் அவன் பேரைச் சொல்லி அழைக்கச் சொல்ல, இளமதியின் மனதில் அவன் ஆட்சி செய்ய ஆரம்பித்தான்.

தான் ஒரு பெண்ணின் மனதில் ஆசையை வளர்த்து விட்டு விட்டோம் என்று தெரியாமல், விஜய் அவளோடு சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அவள் தனக்கு வருங்கால மனைவியாகப் போகிறாள் என்ற எண்ணமெல்லாம் அவனுக்கு இல்லை. இளாவின் தங்கை என்ற உணர்வில் இவனும் சகஜமாகப் பேசிக் கொண்டிருக்க,

அப்போது... எதிரில், அவனின் நாயகி வந்து அமர்ந்தாள் - புன்னகையோடு - சற்று முன் அமைதியாக வந்தவளா எனும் அளவிற்கு.

தீக்ஷா இப்போது சிரித்தபடி இருக்க, விஜய்க்கும் அவளது சிரித்த முகத்தைப் பார்த்தவுடன் மனம் லேசானது போல் இருந்தது. அவனையும் அறியாமல் அவன் முகம் மலர்ந்து விட, இளமதி அவனையே பார்த்துக் கொண்டிருந்த தால், அவனின் முக மாற்றம் நன்றாகத் தெரிந்தது.

சற்று முன் வரை பேசிக் கொண்டிருந்தவனின் முகத்தில் இப்போது இன்னும் அதிக மலர்ச்சி. இதை உணர்ந்த இளமதி, அருகில் அமர்ந்த தீக்ஷாவை, இவள் யாராய் இருக்கும் என்று சந்தேகத்தோடு பார்க்க ஆரம்பித்தாள். அவள் யாரென்று தெரியாததால், முதலில் புன்னகையைச் சிந்தியும் விட்டாள்.

அதன்பின் விஜய் அறிமுகப்படுத்த... ராதாவின் காதல் விஷயம் அவளும் கேள்விப் பட்டிருக்கிறாள்... அதனால்,



'இவள் ராதாவின் சிஸ்டர்-இன்-லா வா...?' என்று கடுத்தவளுக்கு, தீக்ஷா குடும்ப விஷயம் தெரியும் என்பதால், தீக்ஷாவோடு சரி சமமாய் உட்கார்ந்து பேசப் பிடிக்கவில்லை.

ஆனாலும் சட்டென்று எழாமல், பத்து நிமிடம் கழித்து அவர்கள் அறியாதபடி, அவர்களிடமிருந்து தன்னைக் கட் செய்தபடி வெளியேறினாள். அவள் வந்து அமர்ந்த வுடன் விஜய்யின் முகம் மாறிய விதம் அவளுக்கு உறுத்தலாக இருந்த போது, தீக்ஷாவின் திருமண விபரம் அவளுக்கு ஆறுதலாக இருக்க... அன்று இளமதி மனதில் பெரியதாக தீக்ஷா பற்றிய சிந்தனை எல்லாம் இல்லை.

பாம்பின் கால் பாம்பறியும் என்பது போல், விஜய், இளமதியை உணர்ந்தான். தீக்ஷாவோடு சரிசமமாக அமர்ந்து அவள் பேச நினைக்கவில்லை என்பதை உணர, தீக்ஷாவோடு பழகினால் இளமதி அவளைப் புரிந்து கொள்வாள் என்று நினைத்தவன், இளமதியைத் தடுத்து நிறுத்தவும் இல்லை... அவள் போவதற்கு வருத்தமும் படவில்லை.

இளமதி கிளம்பும்போது அவனிடமும், யுகியிடமும் மட்டும் சொல்லிக் கொண்டு கிளம்ப, தீக்ஷா தானாகவே இளமதிக்குப் பை சொல்ல, விஜய் மனதில் சிரித்துக் கொண்டான்.

'உன்னாலே தான்டி அவ எழுந்து போறா... அது தெரியலை உனக்கு! மனுஷங்களை எடை போடத் தெரியவில்லையே... ஆனா வாய் மட்டும் பேசு...' என்று நினைத்துத் தீக்ஷாவை நோக்கி அப்பாவிப் பார்வை ஒன்றைப் பார்த்து வைத்தான் விஜய்.

அவளுக்காவது அடுத்தவர்களைத்தான் எடை போடத் தெரியவில்லை. இவனுக்கோ, இவன் மனதையே இனம் காண முடியவில்லையே! இவனை எங்கு வைப்பது என்று தான் தெரியவில்லை. அது அவனுக்கு என்று புரியும் என்றும் தெரியவில்லை.

இளமதி கிளம்பிய சற்று நேரத்தில், யுகியும் போன் வந்து எழுந்து போக, இருவரும் தனிமையில் இருந்தனர்.

விஜய், அவள் எதாவது பேசுவாள் என்று எதிர்பார்க்க, தீக்ஷா அமைதியாகவே இருக்க, விஜய்க்கு அவள் அமைதி என்னவோ செய்ய... தானே இருவருக்குமான மௌனத்தை உடைத்து,

"தீக்ஷா..." என்று அழைத்தான்.

"என்ன...?" என்று மட்டும் கேட்டாள் தீக்ஷா.

அவள், 'அத்தான்' என்ற வார்த்தையைத் தவிர்ப்பதை உணர்ந்தான் விஜய். 'மேடம் கோபமா இருக்காங்க போலே, நம்ம மேலே...' என்று மட்டும் நினைத்தபடி, "ராகேஷ் போன்லாம் பண்றாரா...?" என்று கேட்க,

"ஹ்ம்ம்..."

"குட்... இனி யுகியோட சுத்திட்டு இருக்காதே. முதலில் கூட அது தப்பில்லை, இப்போ இன்னொரு வீட்டுக்குப் போற பொண்ணு... பார்த்து நடந்துக்க. எங்க வீட்டுப் பொண்ணு நீ... யாரும் தப்பாப் பேசிடக் கூடாது," எனும் போதே,

"சரி..."

"யு.எஸ். போற பிளான்லாம் எப்போ...?"

"தெரியல..."

"அதெல்லாம் பேசுறது இல்லையா? ராகேஷ் கிட்டேயும் வெட்டிப் பேச்சுத்தானா...?" என்று விஜய் சிரித்தபடி சொன்ன போதே யுகி மீண்டும் வந்தான்.

தன் அருகே அமர்ந்த யுகேந்தரிடம், "என்னடா... பதில் எல்லாம் ஓரெழுத்து, ஒரு வார்த்தையில வருது... நம்ம வீட்டுப் பேரரசிக்கு..." என்று விஜய் சிரித்தபடியே சொல்லும் போதே,



"யுகி... நான் வருகிறேன்..." என்று எழப் போனவளை,

"இரு தீக்ஷா..." என்று விஜய் அமரச் சொல்ல, அவனுக்கு, அவள் கோபமாய் இருக்கிறாள் என்று நன்றாகவே தெரிந்தது. அவளின் கோபம்கூட ஏனோ அவனுக்குப் பிடிக்கத்தான் செய்தது. அதைக் கூட ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தான் என்றே சொல்ல வேண்டும்.

"நான் இன்னொரு வீட்டுக்குப் போற பொண்ணு... இப்படி ரெண்டு பசங்களோட பேசிட்டு இருந்தா என்ன ஆகும்...? நான் வருகிறேன்..." என்று வெடுக்கென்று, அவன் வார்த்தைகளையே விஜய்க்குத் திருப்பிக் கொடுக்க,

அதுவரை சிரித்துக் கொண்டிருந்த விஜய்யின் முகம், இந்தப் பதிலில் சின்னதாகியது. தான் பேசியதை மனதில் வைத்துப் பட்டென்று சொன்னது போல் இருக்க, ஒரு மாதிரி ஆகி விட்டது அவனுக்கு.

"சரி, போ...!" என்று விஜய் சொல்ல, அவளும் கிளம்பி விட்டாள்.

அவள் கடைசி வரை தன்னை 'அத்தான்' என்று அழைக்கவே இல்லையே என்று நினைத்தவனுக்கு, அவள் தன்னை அழைக்கும் முறைக்காக ஏங்க ஆரம்பிக்க... யுகி இருக்கிறான் என்றெல்லாம் நினைக்கவில்லை... தன் தலையைத் திருப்பி, அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்.

சற்று தூரம் சென்ற தீக்ஷா... என்ன நினைத்தாளோ தெரியவில்லை... இல்லை, இவனின் மனம் அவளைத் திரும்ப வைத்ததோ... விஜய்யைத் திரும்பிப் பார்க்க,

திரும்பும்போது அவள் முகத்தில் வழக்கமான குறும்புத்தனம் மீண்டும் வந்திருக்க, அவனையுமறியாமல் விஜய் தன் தலையை ஆட்டி, "என்ன...?" என்று கேட்க,

அருகில் வந்தவள், "பை... விஜய் அத்தான்..." என்று குறும்பாகச் சொல்ல, அவளிடம் உற்சாகத்தை மீண்டும் கண்ட விஜய் மனம் அமைதி ஆகியது. அவளின் அத்தான் என்ற அழைப்பு, சந்தோஷத்தைக் கொடுத்தது அவனுக்கு.

அதில் உற்சாகமாகி, "யுகி... அடங்க மாட்டாளாடா இவ...!" என்று விஜய் சிரிக்க,

இவர்கள் இருவரையும் பார்த்துப் புரியாமல் யுகேந்தர் விழிக்க,

அவன் விழிப்பதைப் பார்த்த விஜய், அவனிடம் பேச ஆரம்பித்தான்.

"டேய்... வரும்போது அமைதியா இருந்தாளே... என்ன விஷயம்...?" என்று கேட்க,

"அதெல்லாம் ஒண்ணும் இல்லண்ணா..." என்றவனிடம்,

"என்னமோ சரி இல்லையே... சொல்லு! ராகேஷோட ஏதும் பிரச்சினையா...?" என்று கேட்க,

"இல்லண்ணா... அப்படியெல்லாம் இல்லண்ணா...!" என்று வேகமாகச் சொன்ன யுகேந்தர், விஜய்யின் ஆராய்ச்சிப் பார்வையில், "அதெல்லாம் என்கிட்டச் சொல்வாளா?" என்று சொல்ல, அவனின் வார்த்தைகளை நம்பாமல் விஜய் பார்க்க,

தலை குனிந்த யுகேந்தரைப் பார்த்தவன், 'ஏதோ இருக்கோ...!' என்று நினைத்தவன், தீக்ஷா மீண்டும் தன்னிடம் பேச ஆரம்பித்ததில் மற்றதை எல்லாம் மறந்தும் விட்டான்.

**சா**னந்தாவின் பிறந்த நாள் அருகில் நெருங்கும்போதே அவனுக்குத் தொழில் ரீதியாகத் தீனா பெரும் பிரச்சினைகள் செய்ய... விஜய்யால் சமாளிக்கவே முடியவில்லை. ஒரு புறம் தீனா... மறு புறம் இளமாறன்... என அவன் கழுத்தை இறுக்க ஆரம்பிக்க,



தீனாவினால் தொழில் போட்டி மட்டுமே. ஆனால், இளமாறன் திருமண விஷயத்தில் அவனை நெருக்க ஆரம்பித்திருந்தான்.

தீனா, ராதாவை டார்கெட் செய்வது போல், ஏனோ அவனுக்கு ஆர்த்தியைக் கடத்த மனம் வரவில்லை. ஆனால், அவன் ராதாவைக் குழந்தையுடன் கடத்தத் திட்டமிட்ட பின், அவனுக்கு மனம் சண்டித்தனம் பண்ண ஆரம்பித்தது. தீனாவுக்குத் தன் பலம் என்ன என்பதைக் காட்ட அடம் பிடித்தது. அதற்கு நேரமும் வாய்த்தது.

சுரேந்தருக்குத் தனியாக ஒரு ப்ராஜெக்ட் வர, அது மிகவும் சிறியது... தீனா மற்றும் விஜய்க்கு அந்த ப்ராஜெக்ட் பெரிய விஷயமே இல்லை. ஆனால், அதிலும் மூக்கை நுழைத்தான் தீனா. விஜய், தீனா அந்த ப்ராஜெக்டில் கவனம் வைக்க மாட்டான் என்று நினைக்க, அவனோ சுரேந்தரோடும் போட்டி போட்டான். சுரேந்தரோடும் போட்டி போட்ட தீனாவைச் சந்திக்கச் சென்றான் விஜய்.

விஜய்யைப் பார்த்த தீனா கொஞ்சம் அதிர்ந்தாலும், காட்டிக் கொள்ளாமல் அவனோடு பேச ஆரம்பித்தான்.

"என்ன விஜய்... என்னை எல்லாம் பார்க்க வந்திருக்கிறாய்...!" என்று கேட்டவனின் வார்த்தைகளில் எகத்தாளம் இருக்க,

அவனைப் பார்த்த விஜய்யின் பார்வையில் கோபம் எல்லாம் இல்லை. அவனைச் சாதாரணமாகப் பார்த்தபடி,

"தீனா... உனக்கும் எனக்கும் போட்டி. சுரேந்தரோடு எதற்குப் போட்டி போடுகிறாய்? நீயும் நானும் வளர்ந்து விட்டோம். அவன் இப்போதுதான் வளர ஆரம்பிக்கிறான் - அதுவும் தனியே! இந்த ப்ராஜெக்ட்ல எதுக்கு மோது கிறாய்? உனக்குப் போட்டி என்னோடு மட்டுமே... அவனை எதற்கு இழுக்கிறாய்? அவனுடைய தொழிலில் இது முதல் ப்ராஜெக்ட்..." என்று சொல்ல, தீனாவோ அலட்சியமாக,

"நானும் உன்னோட தனியாளா மோதும் போது, நியாய தர்மம் எல்லாம் பார்க்கத்தான் செஞ்சேன்... என்னைக்கு நீ சுரேந்தர்... இப்போ அந்த இளமாறன்னு கூட்டம் சேர்ந்து என்னைக் கட்டம் கட்ட ஆரம்பிச்சியோ... அப்போதே தொழில் தர்மம் எல்லாம் விட்டுட்டேன். உன்னைச் சுற்றி இத்தனை பேர் இருப்பதால்தானே நீ இந்த ஆட்டம் ஆடுகிறாய்... நல்லா ஆடு. உன்னை எங்கே அடிச்சா நீ விழுவேன்னு எனக்கு நல்லாத் தெரியும்டா. உன் தம்பி தனியா எந்த ப்ராஜெக்டும் ஆரம்பிக்கவே முடியாதுடா... உன் கீழேயே எப்போதும் வெச்சுக்கோ..." என்றபோதே,

"ப்ச்ச்... தீனா... நீ தலைவர் தேர்தல்ல நின்றபோது நான் போட்டி போட்டேனா...? புரிஞ்சுக்கோ தீனா. சுரேந்தர் விஷயத்தில் தலையிடாதே!" என்று சொல்ல, தீனா, விஜய் பேச்சைக் கேட்காமல், சுரேந்தருக்குக் கிடைக்கவிருந்த அந்தச் சின்ன ப்ராஜெக்ட் டெண்டரிலும் கலந்து கொள்ள ஆயத்தமாக, அவ்வளவு சொல்லியும் தீனா கேட்கவில்லை என்று விஜய் கடுங்கோபம் ஆனான். சுரேந்தர்தான் விஜய்யை ஆறுதல் படுத்த வேண்டிய நிலைக்கு வந்தான்.

"இல்லை சுரேந்தர்... தீனா போனான் என்றால், அவனுக்குத்தான் அந்த ப்ராஜெக்ட் கிடைக்கும். உனக்குக் கிடைக்காது," என்று சொல்ல,

"விடுங்கண்ணா... வேறு ப்ராஜெக்ட்ல பார்த்துக் கொள்வோம்..." என்றபோது, அவன் குரலிலும் சிறிதளவு வருத்தம்தான் இருந்தது.

"சாரிடா... என்னாலதான் அவன் உன்னைப் பழி வாங்குகிறான். உன்னைத் தனியா வளர விட மாட்டானாம்...!" என்று சொல்ல,

"சரி, விடுங்க. எப்போ கிடைக்குதோ அப்பொழுது பார்த்துக் கொள்வோம்..." என்று சொல்லிச் சுரேந்தர் அமைதியாகச் சென்று விட்டான்தான். அந்த டெண்டரையும் விட்டு விட, அந்த டெண்டர் தினமும் வந்தது... அதுவும் சுனந்தா பிறந்த தினம் அன்று.



முந்தைய இரவு... சுரேந்தர், விஜய்யிடம், "நல்ல வேளை அண்ணா... அந்த டெண்டர்க்கு ரிக்வெஸ்ட் போடலை... இல்ல, சுனந்தா பிறந்த நாள் விழாவை மிஸ் பண்ணி இருப்பேன்..." என்று சொல்ல,

விஜய் வெளியே சிரித்தான்தான்.

"உனக்குக் கஷ்டமா இருக்காடா...? சின்ன ப்ராஜெக்ட் தான்... ஆனா உன் முதல் ப்ராஜெக்ட்னு ரொம்ப ஆசையா இருந்தேல்ல..." என்று தன் தம்பியைப் பார்த்தவனுக்கு... சுரேந்தர் மௌனமே, விஜய் சொன்னது உண்மை என்று சொல்ல, விஜய்க்குத் தாங்க முடியவில்லை. தன் தம்பியையே கவலைப்பட வைத்து விட்டானே என்று தீனா மேல் ஆத்திரம் கொண்டான் விஜய்.

தீனாவுக்கு இந்த ப்ராஜெக்ட் கிடைக்க விடக் கூடாது என்று முடிவு செய்து... அவனுக்கும் இந்த ப்ராஜெக்ட் ஒண்ணும் பெரிய கனமில்லை... சுரேந்தருக்குக் கிடைக்கக் கூடாது என்று போட்டி போடுகிறான். அவனை நாளை சைன் போடாமல் நிறுத்த அவனுக்கு ஒரே வழிதான் இருந்தது. அவன் தங்கையைக் கடத்துவது... அதை வைத்து மிரட்டுவது என்று.

ஆனால், அது தீனாவுக்கு மட்டும் வேதனை அல்ல... யுகேந்தருக்கும் வேதனை. மனமெங்கும் குழப்பமாய் இருக்க, 'ஆர்த்தி நம்ம வீட்டிற்கு வரும் பெண்தானே... சும்மா மிரட்டுவதற்குத்தானே...' என்று அசோக்கை அழைத்து, அவளைக் கடத்தவும் சொல்லி விட்டான் விஜய். சுரேந்தரிடம் விஷயத்தைச் சொல்ல, அவனும் முதலில் அதிர்ந்து, பின், "தாங்கள்தானே... ஆர்த்திதானே..." என்று சுரேந்தரும் சமாதானம் ஆனான்.

விஜய், சுரேந்தரிடம், "யுகியை நாளைக்கு உன் கூடவே வெச்சுக்கோடா... ஆர்த்தி கூடப் பையன் பேச முடியாம அழுதுடப் போறான்..." என்று சிரிக்க,

அந்த இரவுதான் விஜய் என்ற இளைஞனின் இதயம், அவன் கட்டுக்குள் இருந்தது. அடுத்த நாள் இரவு அவன் இதயம் அவனையும் மீறி, தீக்ஷா என்ற பெண்ணின் காதல் வேண்டி, அவள் பார்வைத் தவத்திற்காகத்தான் காத்திருக்கப் போவது தெரியவில்லை. அது மட்டும் இல்லாமல், அவனுக்குத் தீக்ஷாவின் மேல் வந்த காதல், அவன் வாழ்க்கையில் பல விஷயங்களைக் காட்ட ஆரம்பிக்கக் காத்திருந்தது.

சுரேந்தர் தொழில் தொடங்க முடியாமல் தீனா குறுக்கிட, அதற்குத் தீனாவின் தங்கையும் தன் தம்பியின் காதலியுமான ஆர்த்தியைக் கடத்த, அவன் தங்கை மூலம் அவன் வாழ்க்கைக்குள் நுழைந்த தீக்ஷாவின் காதல் வலையில் விழுந்தான், விஜய் என்கிற விஜயேந்திரன்.

விஜய்யாக இருந்தவனை இந்தராக மாற்றியவள், அவனின் அடையாளங்களை எல்லாம் அவளைச் சார்ந்தும் மாற்றினாள். நடக்கப் போகும் விஷயங்கள் எதுவும் அறியாமல் அஷோக்கின் மேற்பார்வையில் அடுத்த நாள் ஆர்த்தியைக் கடத்த, கொஞ்சம் மனதில் கலவரமும் கொண்டான்தான் விஜய். யுகேந்தர் முகம் வேறு அவனைக் கொல்லாமல் கொன்றது.

சுரேந்தர், யுகியைத் தனியே விடாமல், தன்னோடே வைத்துக் கொண்டான். தீனா, ஆர்த்தி கடத்தப்பட்டது தெரிந்தும், அந்த டெண்டரில் கலந்து கொள்ளச் செல்ல, விஜய் சற்று யோசித்தான் - அவனுக்குத் தங்கை என்றால் உயிர் ஆயிற்றே என்று.

இப்படி ஒரு நிலவரம் ஓடிக் கொண்டிருக்க, பிறந்த நாள் விழாவும் தோட்டத்தில் ஆரம்பமாக, விஜய் மனம் எதிலும் நாட்டம் இல்லாமல் படபடப்பாகவே இருந்தது. அவன் முகத்தில் அது அப்பட்டமாகவே தெரிய ஆரம்பித்தது. தவறு செய்கிறோம் என்று புரிந்ததுதான். தவிர்க்க முடியவில்லை. இரவு வரை எல்லாம் ஆர்த்தியை வைத்திருக்க விருப்பம் இல்லை. அசோக்கிடம் ஏற்கெனவே 7 மணி போல் அவளை வீட்டில் பத்திரமாக விட்டு விடச் சொல்லி இருந்தான் விஜய்.



இத்தனை கலவரத்தில் அவன் இருக்க, அவன் தேவதையும் அவனுக்குக் காட்சி தந்தாள். அவள் வந்தபோது போன்தான் பேசிக் கொண்டிருந்தான். அவளின் பிரசன்னம் அவனுக்குக் கிடைத்தபோது, அவளைப் பார்த்து அவன் வாய் புன்னகைக்க, அவளைப் பார்த்த கண்ணோ, அவளை விட்டு வேறு திசையில் போக மறுத்தது. அது ஏன் என்றெல்லாம் தெரியவில்லை. அதுவும் அவள் கட்டியிருந்த புடவை வேறு அவனையும் அறியாமல் அவள் புறம் இழுக்க, விஜய் மனம் திடுக்கிட்டவனாய்,

'டேய்... அவ இன்னொருத்தனுக்கு நிச்சயம் பண்ணிய பொண்ணுடா... இப்படிப் பார்க்கிறாய்!' என்று நினைத்த போதே... அன்றொரு நாள் அவளை இரவு உடையில் பார்த்த போது அவன் பார்த்த, அவள் கழுத்துக்குக் கீழே இருந்த அவளின் மச்சம், நேரம் காலம் தெரியாமல் இன்று ஞாபகம் வர, விஜய் தன்னைச் சரிப்படுத்திக் கொண்டு, திடீரென்று தோன்றிய தன் உணர்வுகளுக்குத் தானே கடிவாளமிட்டான்.

'ச்சே... இது என்ன கேவலமான எண்ணம்...!' என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டவன், அதற்கு மேல் அவளைக் கவனிக்கவில்லை.

அந்த டெண்டரில் கலந்து கொள்ள, இன்னொரு தொழில் நண்பனும் போயிருந்தான். அவன் விஜய்க்குப் போன் செய்து, "என்னடா... தீனா வர மாட்டான்னு சொன்னே... வந்து நிற்கிறானே!" என்று விஜய்யைப் போட்டு நச்சரிக்க... அவனுக்கும் ஆர்த்தியைக் கடத்திய விஷயம்

தெரியும்... அவன் போனில் நச்சரித்துக் கொண்டே இருக்க, விஜய் அங்கு நிற்காமல் வீட்டினுள் சென்று மாடி ஏறினான். ஏறியவன், மாடி அறையின் கதவை அடைக்காமல் அப்படியே சென்று விட்டான்.

"அவன் இன்னைக்கு அந்த டெண்டர்ல மட்டும் சைன் போட்டான்னு வெச்சுக்க... அவன் தங்கச்சி இப்போ என் கஸ்டடியில் இருக்காள்னு சொல்லியும் வந்து நிற்கிறானா...?" என்று கேட்கும்போதே படிகளில் யாரோ வரும் அரவம் உணர்ந்தவன், சட்டென்று போனைக் கட் செய்து திரும்ப, தீக்ஷா கோபம் முகத்தில் தாண்டவம் ஆட அவனைப் பார்த்துக் கொண்டிருக்க, விஜய் நொந்தே போனான்.

'போயும் போயும் இவ கிட்டேயா மாட்டினோம்... கடவுளே! இவளுக்கு எந்த நேரத்தில் எப்படி நடக்க வேண்டுமென்றே தெரியாதே... கீழே கூட்டம் இருக்கு என்றெல்லாம் பார்க்க மாட்டாளே... அத்தனை பேருக்கும் முன்னால் போய்ச் சொல்லி வைப்பாளே...' என்று விஜய் யோசித்து, அவளிடம் தடுமாறினான்தான் முதலில்.

அவளைப் பற்றிய அவனின் எண்ணம் தவறே இல்லை என்பது போல், "ஆர்த்திதானே அது...! இருங்க, இப்பவே போய்க் கீழே சொல்றேன்..." என்று இறங்க எத்தனிக்க,

தன் தடுமாற்றம் மறைந்து சுதாரிக்க ஆரம்பித்தான் விஜய். உடனே மூளை வேலை செய்ய, அவளைப் போக விடாமல் தடுத்து நிறுத்தச் சட்டென்று எட்டி அவள் கைகளைப் பற்றிய விஜய், தன் நிலைமையை அவளுக்கு எடுத்துச் சொல்வோம் என்று பொறுமையாகப் பேசத்தான் நினைத் தான்.

ஆனால், அவளோ அவனின் வார்த்தைகளைக் காதில் வாங்காமல் கீழே போவதிலேயே இருக்க, விஜய்யும் வேறு வழியின்றி, கொஞ்சம் லேசாகப் பிடித்திருந்த அவள் கையை இறுகப் பற்றி மேலே இழுக்க, அவனின் பலத்தின்



முன் தீக்ஷா போட்டி போட முடியுமா என்ன? அவன் புறம் வந்தவள், விஜய்யின் மார்பில் முகம் புதைக்க, அவள் இதழ் அவனின் நெஞ்சத்தில் தன் அச்சாரத்தினை அவளையும் அறியாமல் வைக்க, அதன் விளைவு... அவள் போட்டிருந்த லிப்ஸ்டிக், அதன் அடையாளத்தை அவனது சட்டையில் காட்டியது. இருவருமே அவரவர் சூழ்நிலையில் இதைக் கவனிக்கவில்லை.

## 24

**வி**ஜய் பிடித்து இழுத்த வேகத்தில் அவன் மீது மோதி, அவன் மார்பில் தன் முகத்தைப் பதித்துத் தடுமாறிய தீக்ஷாவை விழாமல் பற்றி, அவளை விலக்கித் தன் முன் நிறுத்தியவன், அவள் கைகளை விடாமல் பிடித்தபடியே பேச ஆரம்பித் தான் - அவளுக்கு எப்படியாவது தன்னைப் புரிய வைக்கும் முயற்சியில்.

"தீக்ஷா... ஒண்ணும் பிர்ச்சினை இல்லைம்மா... சின்ன பிசினஸ்... அது கைவிட்டுப் போகாமல் இருக்க..." அவன் மெல்லிய குரலில், கிட்டத்தட்ட கெஞ்சலாகத்தான் சொன்னான். தீக்ஷாவோ அதைப் புரிந்து கொள்ளாமல் கொஞ்சம் குரலை உயர்த்தியவள், தன் கைகளை அவனிடமிருந்து உருவ முயற்சி செய்தபடியே,

"அதுக்குப் பொண்ணைக் கடத்துவீங்களா? என்னை விடுங்க... நான் கீழே போகணும். கையை விடுங்க... வலிக்குது," என்று சொல்ல, அவள் முகத்தைப் பார்க்க,

அதில் கோபமும், இவன் கையைப் பிடித்திருந்ததால், அது பிடிக்காத முகச் சுழிப்பும் அப்பட்டமாக அவள் முகத்தில் தெரிய,

விஜய் எரிச்சலுடன், 'இவளுக்கு எப்படிப் புரிய வைப்பது...?' என்ற யோசனையுடன்,

"உன்னை யார் போக வேண்டாம்னு சொன்னது? நீ போகலாம்... ஆனால், கீழே எதுவும் சொல்லி உளறாதே... போ..." என்று அவன் அவள் கைகளை விடப் போக,

தீக்ஷாவோ, அவனிடம் இன்னும் வாயாட ஆரம்பிக்க, அதிலும் வாடா போடாவென்று மரியாதை எல்லாம் காற்றில் பறக்க அவள் பேச, விஜய்யால் அதற்கு மேல் தன் கோபத்தை இழுத்துப் பிடிக்க முடியாமல் போய் விட்டது.

அவனுக்கு எந்த அளவு கோபம் வந்ததோ, அந்த அளவுக்குத் தீக்ஷாவின் கைகளை இறுகப் பிடிக்க, தீக்ஷா முகம் கன்றினாள். வலியால் அதிர்ந்த அவளின் முகம் கண்களுக்குப் பட்டாலும், அவள் கீழே இறங்கி ஏதாவது பேசி விபரீதம் ஆகி விடுமோ... நன்றாகப் போய்க் கொண்டிருக்கும் விழாவில் பிரச்சினை வந்தாலும் வரலாம்... இவளுக்குப் புரிய வைக்க முடியாதே... என்பதை யோசித்துக் கொண்டிருக்கும் போதே, அவள் ஏதோ சொல்ல மீண்டும் வாயைத் திறக்க,

'இவ வாய் இருக்கே... இங்கே நின்னு கத்தியே ஊரைக் கூட்டிருவாளே...!' என்று மனதினுள் நினைத்தபடி வேகமாய் அவள் வாயைத் தன் கரங்களால் அடைத்தபடி, மாடியில் இருந்த ரூமிற்குள் தள்ளினான். தள்ளியவன் கொஞ்சம் வேகமாய் உள்ளே தள்ளிவிட்டுக் கதவை அடைத் தான்... அவள் அங்கிருந்த கட்டிலின் காலின் நுனியில் மோதியதை அவன் பார்க்கவில்லை.

வெளியில் வந்து அசோக்கிற்கு கால் செய்து... ஆர்த்தியை அவள் வீட்டில் கொண்டு போய் விடச் சொன்னவன்... இப்படித் தீக்ஷாவிடம் மாட்டுவோம் என்று நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

"ச்சேய்..." என்று கண்மூடித் தன் இடது கையைத் தன் முன் நெற்றிக் கேசத்தில் விட்டு அளைந்தவன்... சில வினாடிகளிலே மீண்டும் கண் திறந்த போது... தாறுமாறாகக் கீழே விழுந்து கிடந்த தீக்ஷாவின் மொபைல்தான் அவன் கண்களில் பட்டது.



இருவருக்குமான வாக்குவாதத்தில்... தீக்ஷாவின் மொபைல் கீழே விழுந்ததில், அதன் பாகங்கள் தனித்தனியே கிடக்க... வேகமாகக் கீழே குனிந்து... எல்லாவற்றையும் தேடி எடுத்துப் பொருத்தினான்.

அப்போது அவளின் மொபைலின் கவர் வெள்ளை என்பதால்... லேசாய் ஏதோ கறை தீற்றல் இருக்க... அதைத் துடைத்தபடி மீண்டும் பொருத்த ஆரம்பிக்க, மீண்டும் அதே கறை வர...

புருவ முடிச்சுடன்... தன் உள்ளங் கைகளை வேக மாய்ப் பார்க்க... அதில், அவன் தீக்ஷாவின் வாயைப் பொத்தி இருந்ததால் அவன் வலது கையின் உள்ளங்கை முழுக்க லிப்ஸ்டிக் கறை விரவி இருக்க... தன் கைகளை வேகமாய்த் துடைத்தவனின் உள்ளுணர்வு... இப்போது இவள் தன் மார்பின் மேல் மோதியதை எடுத்துக் கொடுக்க... அனிச்சை யாகத் தன் சட்டையைக் குனிந்து பார்த்தவன் அதிர்ச்சியில் திகைத்து நின்றான்.

அவன் சட்டையில் பிங்க் வண்ண லிப்ஸ்டிக்கில் தீக்ஷாவின் இதழ் ஒற்றல் லேசாய் இருக்க... அவன் மனமும் உடலும் அதிர்வலைகளை அவன் உடலுக்குள் பரவ விட... அதிர்ந்து நின்றான். அது எந்த மாதிரியான உணர்வு என்றே தெரியவில்லை. அதில் ஆராய்ச்சி செய்யப் போனவனின் மனதைத் தீக்ஷாவின் குரல் மீட்டெடுக்க... சட்டென்று அவளைப் பூட்டி வைத்த அறையின் அருகே போனவனுக்கு...

'கடவுளே! இதை வேற இந்த லூசு பார்த்தால் உட்கார்ந்து ஒப்பாரி வைப்பாளே... இன்னொருத்தனுக்கு மனைவியாகப் போகப் போறவ அவ... தன் மேல் எதார்த்தமாகப் பட்ட இதழ் ஒற்றல் தீக்ஷாவுக்குத் தெரிந்தால்,

அவள் மனம் குற்ற உணர்வில் தவிக்குமே...' என்று அவள் முன்னே போகத் தயங்கி வெளியே நின்றுவிட்டான்.

தீக்ஷா மனம் எல்லாம் யோசித்த அவனின் மனம்... அவள் தன்னவள் என்ற விஷயத்தை அப்போது சொல்ல வில்லை அவனுக்கு.

மீண்டும் அணிந்திருந்த சட்டையைப் பார்த்தான் விஜய். உற்றுப் பார்த்தால் மட்டுமே தெரியும்... அவள் இருக்கும் நிலையில் இதையெல்லாம் பார்க்கமாட்டாள் தான். ஆனால், பார்த்து விட்டால்... குழம்பி விட்டான் விஜய்.

'இப்படியே போவதா... இல்லை, கீழே போய் வேறு சட்டை அணிந்து வந்து அவள் முன் நிற்போமா...?' என்று திணறியவனாய் நின்றவன்... பின் முடிவுக்கு வந்தவனாய்... கீழே இறங்கிப் போக, அப்போது தீக்ஷா பலமாய்க் கதவைத் தட்ட ஆரம்பிக்க...

"அடங்காப் பிடாரி... எப்படிக் கதவை உடைக்கிறா...! உன்னை..." என்றவன், வேறு எதுவும் யோசிக்காமல்... தன் பட்டன்களை விடுவித்தவனாய்ச் சட்டையைக் கழட்ட ஆரம் பித்தான்.

அவள் மனம் குற்ற உணர்வில் தவிக்கக்கூடாது என்று நினைத்தவன்... அணிந்திருந்த சட்டையை எதையும் நினைக் காமல் கழட்டி விட்டான். ஆனால், அவன் இன்னொன்றை மறந்தான்.

தன்னுடன் தனிமையில் இருக்கும் ஒரு பெண்ணின் முன்... அணிந்திருக்கும் சட்டையைக் கழற்றி அவள் முன் நின்றால் - அவள் என்ன நினைப்பாள் என்றே எண்ண வில்லை விஜய்.

கழட்டிய சட்டையைத் தோளில் போட்டபடி கதவைத் திறந்த விஜய்க்கு தீக்ஷா மேல் கோபமே இல்லை. சொல்லப் போனால் சற்று முன் இருந்த இறுக்கமெல்லாம் அவன்



மனதை விட்டுப் போனது போல் இருக்க... உற்சாகமாகத் தான் உள்ளே நுழைந்தான்.

அவள்"விஜய்... திறடா!" என்று சொல்லும்போது கூட ஏனோ கோபம் வரவில்லை. அந்த மன நிலையிலே விஜய் கதவைத் திறக்க... தீக்ஷாவோ அவனைப் பார்த்துத் தடுமாறிப் பின்னால் போக... விஜய்க்கு முதலில் ஒன்றும் புரியவில்லை.

"கதவைத் திறங்க... என்னை விடுங்க... நான் போகணும்..." என்று தீக்ஷா பேசியபோது... வித்தியாசமாக இருந்தது அவனுக்கு.

எப்போதும் அவன் முன் பேசும்போது... அவள் வார்த்தைகளில் நடுக்கம் இருக்காது. இன்று அந்தத் திணறல் அவனுக்குள் ஏதேதோ செய்ய... அவனுக்கு அவளின் அந்தத் தடுமாற்றம் ஏனோ ஒரு பரவசத்தை ஏற்படுத்த... அதை ரசித்தபடியே...

'இவ ஏன் இந்தத் தடுமாறு தடுமாறுறா... பேசவே முடியாமல் கூட... படபடன்னு பேசுவா... சற்று முன்னால் கூட அப்படித் திமிராப் பேசுனா... இப்போ என்னாச்சு?' என்று நினைக்கும்போதே அவள் பார்வை தன்னில் பதிந்த விதம்... அவளின் தடுமாற்றத்திற்கான காரணத்தை அவனுக்குப் புரிய வைக்க...

'அது சரி... சட்டையைக் கழட்டுனாலே... இவளுங் களுக்குப் புத்தி இப்படித்தான் போகுமா?' என்ற யோசனை யோடு...

"என்ன... தடுமாறுற...?" என்று நக்கலாகக் கேட்ட வனுக்கு, அவளின் மிரண்ட விழிகள், அவனுக்குப் புன்னகை யைத் தந்தன.

அவள் எந்த மனநிலையில் இருக்கிறாள் என்றே அவன் உணரவில்லை. தன் மனதில் எந்தத் தவறான உள்நோக்கமும் இல்லை என்பதால், அவனுக்குப் பெரிதாய்ப்

படவில்லை. சாவகாசமாக... தன் சட்டையைக் கட்டிலில் போட்டு விட்டு தீக்ஷாவைப் பார்க்க... அவள், அவனையும் அந்தக் கழட்டிப் போட்ட சட்டையையும் மாறி மாறிப் பார்த்த படி,

"எ... எதுக்கு சட்டையைக் கழட்டுனீங்க...? நான் போக ணும்... நீங்க தப்பு மேலே தப்பு பண்றீங்க..." என்று அழ ஆரம்பிக்க...

அவள் வேறு மாதிரித் தன்னை நினைத்துவிட்டாள் என்பதை முற்றிலும் உணர்ந்தவன்,

"அடிப் பாவி... கீழே அத்தனை பேரை வெச்சுட்டுத் தான்... உன் கிட்டே தப்பா நடந்துக்கப் போறேனா...? லூசு தான்டி நீ. உன்னையெல்லாம் வெச்சு கட்டி சமாளிக்கப் போறவன் நிலை பாவம்தான்..." என்று நினைக்கும் போதே... ஏதோ மனம் சற்றுக் கனமானது போல் இருக்க...

'இவளை, இவள் விளையாட்டுத்தனத்தை எல்லாம் அந்த ராகேஷ் புரிஞ்சுக்குவானா...?' என்றெல்லாம் எண்ணம் தோன்ற... அப்போது தீக்ஷாவின் அழுகை அதிகமாக... அதில் தன் எண்ணம் கலைந்து மீண்டவன், அவளைச் சமாதானப்படுத்தும் விதமாகவும்... அதேநேரத்தில் தன்னைப் பற்றி அவள் எதுவும் சொல்லிவிடவும் கூடாது என்ற கவனமான உணர்விலும்...

"ஸ்ஸ்... எதுக்கு இப்போ அழ ஆரம்பிக்கிறே...? நான் ஒண்ணும் பண்ணமாட்டேன்... ஆனா நீ இங்கே இருந்து போய் எதுவும் சொல்ல மாட்டேன்னு சொல்லு... இப்பவே போகலாம்," என்று கூற,

இவன் கொஞ்சம் இறங்கியதில், அவள் ஆட ஆரம் பித்தாள். "சொல்வேன்... என்ன செய்வே நீ...?"

பார்வையில் இளக்காரமாகவும்... வார்த்தைகள் தடித்தும் அவளிடமிருந்து பதில் வெளிவர... அவள்



ஒருமையில் விளிக்க... விஜய்க்கு இப்போது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

சற்று முன் இருந்த மனநிலை எல்லாம் அடங்கி... தன்னைப் புரிந்துகொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கும் அவளின் பிடிவாதத்தை எண்ணி எரிச்சல் ஆனவனுக்குக் கோபம் வர... அதைக் காட்டும் வழி தெரியாமலும்... தன்னை அடக்கும் வழி தெரியாமலும்... என்ன செய்வதென்று புரியாமல் சிகரெட்டை எடுக்க... அப்போது அருகில் கிடந்த சட்டையைப் பார்த்தவன்...

'இப்போ தம் அடிச்சேன்... இவ நம்மளைப் பொறுக்கின்னே முடிவு கட்டிடுவா...!' என்று முடிவெடுத்தவன்... எடுத்த சிகரெட்டைக் கீழே போட்டு விட்டு... அவளிடம் திரும்பி,

"அவளை விடச் சொல்லிட்டேன்டி... நீ என்னை டார்ச்சர் பண்ணாதே... இந்த விஷயத்தை இத்தோட விட்ரு... எல்லோருக்கும் தெரிஞ்சுரும்... எனக்கு அசிங்கம் தீக்ஷா...!"

அவன் வார்த்தைகளில் மிரட்டல் என்பதையும் மீறி கெஞ்சல் அதிகம் தெரிய...

அவன் கெஞ்சலில் அவளே மிஞ்ச ஆரம்பிக்க... விஜய்யின் கோபத்தினைத் தூண்டி விபரீதமாக முடிந்தது.

தீக்ஷா அவன் மனநிலையைப் புரிந்து கொள்ள முயற்சிக்கவே இல்லை. அவன் தவறு செய்கிறான்... தட்டிக் கேட்பேன் என்று நீதி தேவதையின் அடுத்த வாரிசாக ஆடிக் கொண்டிருந்தாள். அதில் அவள் வார்த்தைகளின் வீரியமும் அதிகம் ஆகியது.

"அசிங்கம் தெரியுதுல்லடா... தெரிஞ்சே செய்றே... அதுவும் பொட்டைப் புள்ளையைக் கடத்தி வெச்சுட்டு... என்னையும் இப்படி அடைச்சி வெச்சுட்டு மிரட்டுறே... நீயெல்லாம் ஆம்பளைன்னு சொல்லிடாதே வெளியிலே...!" என்று வார்த்தைகளை விட...

விஜய் அதற்கு மேல் அவளைப் பேச விடவில்லை. சொன்ன வேகத்திலேயே தீக்ஷாவின் கன்னத்தில் தன் கைகளைப் பதிக்க... அவள் கண்கள் அருவியைப் பொழிய... வார்த்தைகள் தேம்பலாக வெளிவர... இப்போது தீக்ஷாவின் கண்ணீரோ... அவளின் நிலையோ... எதுவும் அவன் மனதில் பதியவில்லை. வீறுகொண்ட சிங்கமாக அவன் நின்றான்.

"என்னடி... இஷ்டத்துக்குப் பேசுறே... கொன்னுடு வேன்...!" என்று விரல் காட்டி எச்சரித்தான்.

"அப்படித்தான் பேசுவேன்டா... உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா...?" என்றபோதே விஜய் அடுத்த அறை அறைய... அவன் காதுகளில் கேக் வெட்டும் அறிவிப்பு விழுந்தது.

'ச்சேய்... அத்தனை மூடையும் ஸ்பாயில் பண்ணிட்டா...! இப்போ இவளைக் கீழேயும் கூட்டிட்டுப் போக முடியாது... எப்படியும் இன்னைக்கு எனக்குப் பஞ்சாயத்து தான் வீட்ல... இவ இங்கேயே இருக்கட்டும்...' என்று யோசித்தவனுக்கு...

'தீக்ஷாவுக்கு ஸ்னோ என்றால் உயிர் என்று தெரியும்... கேக் கட் செய்யும் போது இவள் இருக்க முடி யாதே...' என்ற எண்ணம் வேறு தோன்ற...

'படுத்தி எடுக்கிறாளே... சொல்லமாட்டேன்னு சொல் றாளா ராட்சசி...' என்று அவள் மேல் இரக்கம் தோன்றி னாலும்... அவள் மேல் இரக்கம் கொண்டு கீழே கூட்டிப் போனால் தன் நிலைமை கேவலம் ஆகி விடும் என்று உணர்ந்தவன்,

"உனக்குப் பட்டாத்தான்டி அறிவு வரும்...!" என்று அவளைக் கட்டிப் போடச் சுற்று முற்றும் தேட... அவன் நேரம், கட்டும் அளவுக்கு எதுவும் சிக்காமல் போக... அவன் சட்டைதான் அங்கு இருக்க, அதை எட்டி எடுத்தவன், அவளின் கைகளைப் பின்னால் திருப்பிக் கட்ட ஆரம்பித்தான்.



ஆனால், தீக்ஷா அவனுக்கு ஒத்துழைப்பு கொடுக் காமல் திமிற... அவன் என்ன முற்றும் துறந்த முனிவனா... தீக்ஷாவின் மேனி அவனைத் தீண்ட...

பெண்ணின் உடல் தீண்டல்... வேதியியல் மாற்றங்களை அவனுக்குள் கொண்டு வந்து, லேசாய்த் தன் வேலையைக் காட்ட... விஜய் அதிர்ந்தான்.

தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்து... அதில் ஓரளவு வெற்றி கொண்டவன், அவளிடமோ,

"ஆடாதேடி... ஏடாகூடமா எங்கனாச்சும் பட்டுறப் போகுது... அதுக்கும் சேர்த்து நீதான் மூலைல உட்கார்ந்து அழணும்..." என்று தன் நிலையை மறைத்துக் கெத்தாகச் சொல்ல...

"ச்சீ... என் கிட்டே... அதுவும் கொஞ்ச நாளில் ஒருத்தனை மேரேஜ் பண்ணப் போற பொண்ணுகிட்டே இப்படிப் பேச அசிங்கமா இல்லை..." என்று கண்ணீர் வழியச் சொன்னவளிடம்,

"எனக்கு மட்டும் ஆசை பாரு...!" என்று அவள் கைகளைக் கட்டி முடித்தபடி எழுந்தவன் மனதில் லேசாய் ஒரு படபடப்பும் வந்திருந்தது என்பதுதான் உண்மை.

அவள் கீழே போய் அவனைப் பற்றிச் சொல்லுவேன் என்று சொன்னபோது, படபடக்கத்தான் செய்தான். ஆனால், அதில் கோபம் மட்டுமே இருந்தது. இப்போது இருந்த படபடப்பு, வித்தியாசமாக இருந்தது அவனுக்கு. இதன் உணர்வு வேறு மாதிரி இருந்தது. இன்னும் வேண்டும் என்று தோன்றியது போல் இருந்தது.

இவன் உணர்வுகளை எல்லாம் உணராமல்... இவனை முற்றிலும் அயோக்கியனாகவே தனக்குள் கற்பனை செய்த வளாய்ப் பேசிக் கொண்டிருக்க...

"கஷ்டம்டா...!" என்று வேறு சொல்லியபடி பெருமூச்சை விட்டவனைப் பார்த்து...

"என்னடா கஷ்டம்...?" என்றவளைப் பார்த்துச் சிரிப்பே வந்து விட்டது. அதை அடக்காமல் சிரித்தும் விட்டான் விஜய்.

'பதிலுக்குப் பதில் பேசிட்டு... என்ன சொன்னாலும் எதிர்த்துக் கேள்வி கேட்டுக்கிட்டு... வாயை மூடாமல் இருக்கவே முடியாதா இவளுக்கு... ஒரு ஃப்ளோல வந்து தொலச்சுருச்சுடி...' என்று மனதில் புலம்பியபடி...

"இப்போ கூட வாயை மூட மாட்டியா...? ஏன்னு உன்னைக் கட்டிக்கப் போறவன் சொல்வான்," என்று அவன் இன்னும் அதிகமாய்ச் சிரித்தபடி சொல்ல... அவளுக்கோ அது உடலெங்கும் தீயைப் பற்றி எரிய வைக்க...

"சிரிக்கிறியாடா... இருக்குடா உனக்கு... அழிவு காலம் ஆரம்பம் ஆகிருச்சு உனக்கு...!" என்று அவள் கூற, அவளின் சாபத்தையெல்லாம் ஒதுக்கியவன், அவளோடு பேசியபடியே...

'இவ கையை மட்டும் கட்டக் கூடாது, வாயை முதலில் கட்டியிருக்கணும்... முடியுலைடா...!' என்றெல்லாம் எண்ண ஓட்டத்திலேயே...

"வாயைக் கட்ட..." என்று சொல்வதற்குப் பதில், "வாயை மூட..." என்று சொல்லிவிட... தீக்ஷா அதிர்ந்து அவனைப் பயத்துடன் நோக்க...

'ப்ச்... போச்சுடா. இப்போ என்ன நினைத்தாளோ... டேய் விஜய்... அவ சொன்ன மாதிரி உனக்கு ராங் டைம் தான் போல... எல்லாமே வேற மாதிரி நடக்குதுடா... கிட்டத்தட்ட உன்னை வில்லன் ரேஞ்சுக்கு நினைத்து வந்திருப்பா...!" என நினைக்க, அவள் முந்தானை மட்டுமே அவள் வாயைக் கட்டுவதற்கு ஏதுவாய் இருக்க...

அதைப் பார்த்தவனுக்கு... 'எப்போதும் பறக்க விட்டுட்டுத் திரிவா... இன்னைக்குன்னு பார்த்து செருகி வெச்சுருக்காளே...



இதை வேறு அவ இடுப்பில் இருந்து எடுக்கணுமே... பேசாமல் ரூமைப் பூட்டி மட்டும் வெச்சுட்டுப் போகலாமா... இவ வாயை மூடாமல் இங்கே விட்டுப் போறதும் ஒண்ணுதான்... கீழே கூட்டிட்டுப் போறதும் ஒண்ணுதான்... வேற வழியே இல்லை...' என்று முடிவு செய்தான்.

தீக்ஷா இடுப்பில் செருகி இருந்த அவள் முந்தானையை அவன் இழுக்க... புள்ளி மான் போல் அவனிடமிருந்து விலகியவளின் உணர்வு, அவனுக்கும் புரிய... கொஞ்சம் சங்கடமாய் அவளைப் பார்க்க...

அடுத்த சோதனை, அவன் ஆண்மையையே சோதிக்க ஆரம்பித்தது. காரணம்... அவள் புடவைத் தலைப்பு சுத்தமாய் விலகியிருக்க... விஜய் கவனித்து விட்டான்தான். பார்வையை விலக்கியும் விட்டான்தான்...

ஆனாலும் அவனுக்குப் பயம் வந்து விட்டது. இன்னும் கொஞ்ச நேரம் தான் இங்கு இருந்தால், தவறு ஏதும் நடந்து விடுமோ என்று கூடப் பயந்து விட்டான். 'உடனடியாக இங் கிருந்து போக வேண்டுமே... ஆனால், பிடிவாதம் பிடிக் கிறாளே...' என்று நினைத்தவன்...

"பின்னால திரும்பு..." என்று முடிந்த அளவு நல்ல பையனாக மாறிச் சொல்ல, ஆனால், தீக்ஷாவோ தன்னைக் கவனிக்காமல் அப்படியே நிற்க...

'கேட்டுத் தொலைய மாட்டேன்றாளே... இன்னைக்கு என்னை ஒரு வழி பண்ணாம விடமாட்டா போல... ஆனா என்னமோ இவளை நான் இம்சைப் படுத்துற மாதிரி சீன் போடறாளே...' என்று மனம் அதன் போக்கில் சிந்திக்க...

"திரும்புடி..." என்று மீண்டும் விஜய் அதட்டலாகச் சொல்ல... அவளோ அதற்கு மேலே,

"நீ சொன்னாத் திரும்பணுமா... மாட்டேன்டா... நீ சொல்றதெல்லாம் செய்ய... கீழே ஒருத்தி காத்துட்டு

இருக்கா... போ... அவ கிட்டே போய்ச் சொல்லுடா...!" என்று அவனைப் பார்த்து எகத்தாளமும் கோபமும் கலந்து பேச...

விஜய்க்கு இளமதி ஞாபகமே வரவில்லை. மாறாக...

"நீ காத்துட்டு இருந்தால் கூட சந்தோசம் தான்..." என்ற பதில்தான் மனதில் தோன்றியது. ஆனால், சொல்லவில்லை.

விஜய் முதன் முதலில் அவனை மீறிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அதன் ஆழம்வரை யோசிக்க அவனுக்கு அப்போதையச் சூழல் இடம் கொடுக்கவில்லை. அதன் பின் நேரத்தைக் கடத்தாமல்... அவளைத் தொட்டுத் திருப்பியவன்...

"ஆடாம இரு, தயவு செய்து..." என்ற போது, இது அவன் குரலா என்று அவனுக்கே தோன்ற... அந்த அளவு மென்மையாக மாறி இருந்தது.

அவளின் பின்னால் இருந்தே அவளது இடையிலிருந்த தலைப்பை எடுக்க முயற்சிக்க... அது எடுக்கவே வரவில்லை. வேறு வழி இன்றி... கொஞ்சம் அழுத்தமாகப் பற்றி அவன் எடுக்க... தீக்ஷாவிடம் தன்னை இழந்து கொண்டிருப்பது புரிந்தும் புரியாமல், ஒரு மாதிரியான மோன நிலையில் அவன் மனமும் உடலும் அவனை மீறிச் செயல்பட்டுக் கொண்டிருக்க... அந்த நிலை தன்னை மீறி ஆள்வதற்குள்... அவளைப் பார்க்காமலே... கதவைப் பூட்டியபடி வெளியேறி யவன், மாடிப்படியின் கதவையும் அடைத்துத்தான் வந்தான்.

விழா நடக்கும் தன் வீட்டின் முன் தோட்டத்திற்கு வந்தவன்... இப்போது வேறு சட்டையை மாற்றி இருந்தான். யாரும் அதைக் கவனிக்கவில்லை.

அங்கு கூட்டத்தோடு கலந்த விஜய் மனம் முழுக்க தீக்ஷா... தீக்ஷா என அவள் நினைவுகளே... ஒரு மாதிரி படபடப்பாய் இருந்தது. இதுவரை அவனறியா உணர்வுகள் அவனை ஆட்டிப் படைக்க ஆரம்பிக்க... அது காதல் என்று அவனால் உணர முடியவில்லை. அதற்கு நேரமும் வரவில்லை. யாராவது அவனோடு பேசிக்கொண்டே இருக்க... உணர்வுகளின் ஆழம் சென்று யோசிக்க முடியாமல், 'தீக்ஷா மேலே இருக்கிறாளே...' என்ற எண்ணமே அவனை ஆட்சி செய்ய... அவனுக்குக் கீழே இருக்கவே முடியவில்லை.



தன்னை அவள் இங்கு என்ன சொன்னாலும் பரவா யில்லை... எவ்வளவு கேவலப்படுத்தினாலும் பரவாயில்லை... அவளைப் போய்க் கூட்டி வந்து விடுவோமா... என்று கூட எண்ணினான்.

ஆனால், இதுவரை அவன் வளர்ந்த விதம்... அதற்கு ஒத்துழைக்க மறுக்க, விஜய், இருதலைக் கொள்ளியாகத் தவித்தான். அப்போது ஜெயந்தி... 'தீக்ஷா எங்கே...?' என்று தேடிக் கொண்டிருக்க... அது எல்லோருக்கும் பரவ... விஜய், தீபனிடம்...

"தீபன், நீங்க கேக் வெட்ட ஆரம்பிங்க..., தீக்ஷா இங்கேதான் இருப்பா... எல்லோரும் வெயிட் பண்ணிட்டு இருக்காங்கல்ல..." என்று சொல்ல, தீபனுக்கும் அவன் குடும்பத்துக்கும் தீக்ஷா இல்லாமல் சுனந்தா கேக் வெட்ட மனம் வரவேயில்லை. இருந்தும் ஒருவழியாய்க் கேக் வெட்டி முடிக்க... விஜய்யிடம் சென்ற தீபன்,

"விஜய்... தீக்ஷா போன் கூட ஸ்விட்ச் ஆஃப்ல இருக்கு... என்னமோ பயமா இருக்கு..." என்று சொல்ல...

"இங்கேதான் இருப்பா... ஒண்ணும் பிரச்சினை இருக்காது..." என்ற பதிலைத் தீபனுக்குச் சொன்ன போது... விஜய் முகமெங்கும் வியர்வை முத்துக்கள்.

"வீட்டுக்குள்ளே இருக்காளா...? சுனந்தா கேக் வெட்டும் போது கூட அவ வரலைன்னா எங்கே போயிருப்பா...? போனும் எடுக்க மாட்டேங்கிறா...?" என்றபடியே சுரேந்தர் வர... யுகேந்தரும் அவனோடு இருக்க...

"இங்கேதான் இருப்பா... எங்க போகப் போறா...?" என்றபடி ஆளாளுக்கு ஒருபுறம் தேடப் போக...

விஜய், அவர்களிடம்... "வந்திருக்கிற கெஸ்ட்டுக்குத் தெரியாமத் தேடிப் பாருங்க..." என்று யோக்கியனாய் வேறு பேசினான்.

அப்போது, தீபன் வீட்டின் உள்ளே செல்ல முனைய...

'அய்யோ! தீபன் உள்ளே போனா, உன் கதை கந்தல் தான்... விஜய், தடுத்து நிறுத்துடா!' என்று அவனின் மனச்சாட்சி அபாயக் கொடி காட்ட... வேகமாய் ஓடித் தீபனின் முன்னால் நின்று...

"தீபன்... உள்ளே இருக்காளான்னு நான் பார்க் கிறேன்... நீங்க ராதாவோட நில்லுங்க... நாங்க 3 பேரும் தீக்ஷா எங்கே இருக்கான்னு பார்க்கிறோம்," என்று கூறியபடி அவனைத் தடுத்து நிறுத்தி, மீண்டும் மேலே ஏறினான்.

உள்ளே நுழையும்போதே அவனுக்குள் பல எண்ணங்கள்... அவன் குழப்பத்தில் இருந்தான் என்றுதான் சொல்ல வேண்டும். தீக்ஷாவைப் பற்றி நினைக்கும் போதே... அவளுக்கு இன்னொருவனோடு திருமணம் என்பதும் நினைவு வர, அவன் எண்ண ஓட்டங்கள் அவனை ஒரு தெளிவான முடிவை எடுக்க விடவே இல்லை.

மேலே ஏறி வந்தவன், தீக்ஷாவைப் பூட்டி வைத்த அறைக்குள் நுழைய... அவள் உட்கார்ந்திருந்த நிலையே... அவளும் சேலை விலகி இருந்ததைக் கவனித்து விட்டாள். அதனால்தான் இப்படி உட்கார்ந்திருக்கிறாள்... என உணர்ந் தான்.

இவன் உள்ளே நுழைவதைப் பார்த்த தீக்ஷா, குலுங்கி அழ... விஜய்க்கும் மனம் துடித்தது.

"நான் என்ன பண்ணிட்டேனு இப்படி அழறா...? ச்சேய்... இந்த ஆர்த்தியைக் கடத்தாமே இருந்திருக்கலாம்...!" என்ற எண்ணம்தான் வந்தது, அப்போது அவனுக்கு.



அவள் அழுவதைத் தாங்காமல், அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்தான் விஜய்.

"எதுக்கு இப்போ அழற...? உன்னை நான் என்ன பண்ணினேன்...?" என்றபடி, அவள் நிமிரக் காத்திருக்க...

தீக்ஷாவோ... அழுகையும்... கோபமும்... வெறியும்... அச்சமும்... விரோதமும்... எனத் தன் அனைத்து உணர்வு களையும் அவனிடம் கொட்டியவள்... மீண்டும் குனிய...

அவனுக்குத் தீக்ஷா தன் முன் நின்ற கோலத்தின் வித்தியாசம் உணரவில்லை. அதற்காகத்தான் அழுகிறாள் என்றும் புரியவில்லை. பெண்ணாய், தன் மானம் அவனிடம் போய்விட்டது என்று அவள் உள்ளுக்குள் குமுறி வெடித்துக் கொண்டிருந்தாள் என்றெல்லாம் அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

இவள் இப்போது நிமிரமாட்டாள் என்று உணர்ந்த விஜய்... அமைதியாகவே அவள் கையை அவிழ்த்து விட்டு... அவள் புடவையைச் சரி செய்ய அவகாசம் கொடுத்து... சிகரெட்டை எடுத்தபடி வெளியேறினான்.

வெளியே போய் என்ன சொல்வாளோ என்றெல்லாம் கொஞ்சம் பயம் வர... என்ன சொன்னால் இவள் வாயை மூடலாம் என்று யோசித்தவன்...

அவள் திருமண விஷயம் ஞாபகம் வர, அதை வைத்தே மிரட்டுவோம்... அப்போதாவது அடங்குவாள் என்றே தோன்ற... மற்ற எண்ணமெல்லாம் பின்னால் போய் விட்டது.. சிகரெட் முடிய, இன்னும் என்ன பண்ணுகிறாள் என்று உள்ளே போக...

அவளோ வாயில் கட்டியிருந்த முந்தானை அப்படியே இருக்க... உள்ளுக்குள்ளே சிரித்தவன்...

'ராணி மங்கம்மா... இந்தக் கட்டையே அவிழ்க்க முடியவில்லை... பேச்சு மட்டும் வாய் கிழியும்...!' என்று

நினைத்தபடி... தானே அவளைப் பிடித்து இழுத்து அவள் கட்டை அவிழ்க்க...

தீக்ஷா எதுவும் பேசாமல் அமைதியாகவே இருந்தாள். ஆடவில்லை... அசையவில்லை... அப்படியே நின்றாள். அவள் வழக்கமான வாய்த் துடுக்கை ஏனோ மனம் எதிர் பார்க்க... அவளோ வழக்கம் மாறி அமைதியாய் இருந்தாள்.

"தீக்ஷா... கீழே உன்னைத் தேடிட்டு இருக்காங்க... நான் எதுவும் சொல்லலை... நீயும் சொல்ல மாட்டேனுதான் நினைக்கிறேன்... இல்லை...?" என்று மென்மையாகச் சொல்ல, அவள் அதற்கும் இப்போது குலுங்கி அழ... விஜய்க்கு அவள் அழுகை இப்போது எரிச்சல் தந்தது.

"இத்தனை நாள் இவ பேசுனாத்தான் எரிச்சல் வரும்... இப்போ அழுதாலே வருது..." என்று, குனிந்திருந்த அவளைத் தன்னை நோக்கி நிமிர்த்தியவன்...

"நீ கொஞ்சம் புத்தி உள்ள பொண்ணா இருந்தா... என் கிட்டே மல்லுக்கட்டாம வெளியே போய் என்னைப் போட்டுக் குடுத்துருக்கலாம்... அந்தப் புத்தியெல்லாம் இல்லை உன் கிட்டே... டு பேட்... பொண்ணுங்க கிட்டே இந்த அவசரப் புத்தி இருக்கக் கூடாது.

"சமயோஜித புத்தி வேண்டும்.. நானா இருக்க... உன்னை விட்டுட்டேன். ஆழம் பார்த்துக் காலை விடணும்னு பழமொழி உங்களுக்குத்தான்டி சொல்லி வெச்சுருக்காங்க... அதை ஞாபகம் வெச்சுக்கோ..." என்ற போதே அவள் பேசாமல் அங்கிருந்து விருட்டென்று நகர...

தன் பேச்சைக் கேட்காமல், தான் சொல்வதைக் கேட்காமல் போகிறாளே... ஆக அவள் தன்னைப் பற்றிச் சொல்லத்தான் போகிறாள் என்பதை உணர்ந்தவனுக்கு...

பொறுமை போய், அவள் திருமணம் நின்று விடும் என்று சொன்னால்... பயந்து சொல்லாமல் இருப்பாள் என்று நினைத்து, அதை வைத்தே மிரட்ட ஆரம்பித்தான்.



"என்ன... இப்போ இங்க நடந்ததை எல்லாம் சொல்லப் போறியா...? ஒண்ணுமே நடக்கலைதான்...! எனக்கு ஒண்ணும் இல்லை... ஆனா நீ... உனக்கு இன்னும் 2 வாரத்தில நிச்சயம்... யோசித்து நட... சொன்னால்... உனக்குத்தான் மேரேஜ் நின்னாலும் நிற்கும்...

"இப்போ போய்ச் சொல்லுடி, எல்லோரும் இருக்காங்க. நான் கடத்துனதை நீ சொன்னா... இந்த ரூம்ல தனியா என் கூட இருந்ததையும் சொல்லணும்... சோ, நான் அசிங்கப் பட்டா... நீயும் அசிங்கப்படணும்..." என்று சொன்னவனின் மேல் சிகரெட் வாடையும் அடிக்க... குமட்டிக்கொண்டு வர... அவன் முகத்தையே பார்க்காமல், மீண்டும் குனிந்தபடியே நின்றாள்.

"இதுக்கு மேலயும் நீ சொல்லி... இதுக்காக நான் உன்னை மேரேஜ் பண்ணணும்னு ஏதாவது... எவனாவது என் கிட்டே வந்து நின்னானுங்க... உன் வாழ்க்கைல... அதுக்கப்புறம்தான் நீ அனுபவிப்படி..." எனச் சொல்ல... அவன் வார்த்தைகளில் தன்னுணர்வு வந்த தீக்ஷா...

அவனிடம், "ச்சீ... போயும் போயும் உன்னை... அதைவிட... அதுக்கு நான் உயிரை விட்டுறலாம்..."

"இந்த வாய்தான்டி... உன்னை இந்த நிலையில கொண்டு வந்து நிறுத்தியிருக்கு... இங்கே பாரு தீக்ஷா, இப்பவும் சொல்றேன்... இந்தப் பிரச்சினையை விட்ரு... உன்னை அடிச்சதுக்காகக் கூட மன்னிப்புக் கேட்கத் தயாரா இருக்கிறேன்...

"நீ சொல்லி ராதா-தீபனுக்குத்தான் பிரச்சினை வரும்..." என்று சொல்லியபடி சற்று யோசித்தவனுக்கு, ஆர்த்தி ஞாபகம் வர... ஒருவேளை யுகேந்தர் லவ் இவளுக்குத் தெரியும் போல... என்று அவளிடம் கேட்க... அவன் கையை உதறியபடி கீழே இறங்கி ஓடோடிப் போனாள் தீக்ஷா.

அவள் கரம் பற்றி இருந்த தன் கையைப் பார்த்த படியே சில நிமிடங்கள் இருந்தவன், பின் இறங்கினான்.

ஹாலில் நின்று கொண்டிருந்த தீக்ஷாவிடம்... தன் கையில் இருந்த அவள் மொபைலை அவளிடம் கொடுத்து விட்டு வெளியேறினான். அதன் பிறகு இளமதி... இளமாறன்... வந்திருந்த விருந்தினர் என... விஜய் சுற்றி வளைக்கப்பட... தீக்ஷாவும் வெளியே வராமல் இருக்க... விஜய் கொஞ்சம் நிம்மதி அடைந்தான்.

## 25

ஆனால், அடுத்த ஒரு மணி நேரத்தில் விஜய்யின் நிம்மதி எல்லாம் பறிபோய் இருந்தது. தீபன், தீக்ஷாவின் அண்ணனாய் மாறி... ருத்ர அவதாரம் எடுத்து ஆட... அதில் அவன் ராதாவை அடிக்க... தீபன், ராதாவை அடித்த தால்... விஜய் தன் பக்கத் தவறெல்லாம் மறந்து... இதற் கெல்லாம் காரணமான தீக்ஷாவைக் கீழே அழைக்க... தீக்ஷா வாய் மீற... விஜய், ராதாவின் அண்ணனாய் மட்டுமே அப்போது மாறி இருக்க... எல்லாமே நடந்து முடிந்து விட்டது.

தீக்ஷாவும் அடங்காமல், விஜய்யைப் 'பொறுக்கி' என்று அத்தனை பேரின் முன்னிலையில் சொல்ல... அவனால் அந்த வார்த்தையைத் தாங்கவே முடியவில்லை.

அடங்காத கோபத்தில், தீக்ஷாவை அவன் கையாலே வெளியே தள்ளி... அதற்கும் மேலே தீபனைப் பேசி... கிட்டத் தட்ட இரு குடும்பத்துக்கும் உள்ள ஒட்டு உறவே போய்விட்டாற் போல் தோன்றியது.

விஜய் ஹாலிலேயே அமர்ந்து விட்டான். இப்போது பொறுமையாக நினைத்துப் பார்த்தால்... நடந்த விஷயங்கள் அனைத்திற்கும் முழு முதல் காரணம் தன் கோபமும், தீக்ஷாவின் வாய்த்துடுக்கும் என்று உணர, விஜய் உள்ளம் அமைதி இழந்தது.



அதே நேரம், 'அவள் சின்னப் பெண்... தானாவது பொறுமையாகப் போயிருந்திருக்கலாமோ... இப்போ தன் தங்கை வாழ்க்கைதானே கேள்விக்குறி ஆகிவிட்டது...' என்று கலங்க ஆரம்பித்தான்.

தன் தங்கைதான் அவன் மனக்கண்ணில் நின்றாள். தீபனிடம் பேசியபோது இருந்த எந்த உணர்வும் அவனுக்கு இப்போது இல்லை. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற நிலையில் அவன் இருந்தான்.

தீக்ஷா குடும்பம் போன பின்னால், ராதா அழுதபடி தனது அறைக்குச் சென்றுவிட... யுகேந்தர் அவள் பின்னால் போக... மற்ற அனைவரும் கீழே இருந்தனர்.

ஆக மொத்தம், விஜய் குடும்பம் நிம்மதியின்றித் தவிக்க...

விஜய்க்கு இன்னும் கோபம்தான் தீபன் மேல்.

'எவ்வளவு தைரியம் அவனுக்கு... என் தங்கை என்ன பண்ணினாள்... என்னைப் பழிவாங்க அவள் மேல் கை வைக்கிறான்...'

தீபனுக்குத் தன் மனைவி மேல் காதல் இல்லையா...? இந்தத் தீபனுக்காகத் தன் வாழ்க்கையையே பணயம் வைத்தவள் என் தங்கை... அவள் காதலுக்குக் கிடைத்த பரிசு இதுதானா...?

என்ன கோபம் இருந்தாலும்... அவன் தங்கையை நான் அடித்தால்... என்னை அடித்திருக்க வேண்டியது தானே...! எதற்காக என் தங்கையை அடித்தான்... என்றபோதே, தான் தீக்ஷாவை அறைந்ததும் ஞாபகம் வர...

"அவ என் விஷயத்தில் தேவையில்லாமல் தலை யிட்டாள்... அதற்காக அடித்தேன். சும்மா ஒரு பெண் மேலே கையை வைக்கிற அளவுக்குத் தரம் தாழ்ந்தவனா நான்...

ஆனால், அவ பேசின பேச்சுக்கு அறைஞ்சதோட விட்டேன்னு சந்தோசப்பட்டிருக்கணும் அவன்..."

"பொண்ணா எங்கே, எப்படி நடந்துகிறதுன்னு தெரியாம வளர்த்து விட்டுட்டு..." என்ற போதே தீக்ஷாவின் கலங்கிய கண்களும்... நெற்றியில் இருந்த காயமும் மனதில் ஓட...

"தள்ளி விட்டதுல எங்கேயாவது முட்டிக்கிட்டாளா...? ஏன் தான் எனக்கு இப்படி ஒரு கோபம் வருதோ...?" என்று தன்னையே திட்டிக் கொண்டவனுக்கு,

அவள் எப்போதும் தன்னைத் திரும்பிப் பார்க்கும் பார்வையும்... இன்று அவள் தன்னைப் பார்க்காமலே போனதும் ஞாபகம் வர... அவள் பார்வைக்குத் தவிக்க ஆரம்பித்தவனின் மனம்... கலைச்செல்வியின் 'விஜய்...' என்ற அதட்டலில் திடுக்கிட்டுத் திசைமாற... தன் அன்னையைப் பார்த்தான் விஜய்.

அங்கு சுரேந்தர் மற்றும் அவன் பெற்றோர் மட்டுமே இருந்தனர்.

"என்ன விஜய்... நீ என்ன மனசுல நினைச்சுட்டு இருக்கே...? எதுக்குத் தீக்ஷாவை அடிச்சே...? இப்படி யாரோ ஒரு பொண்ணு மாதிரி அவளை வெளியில் தள்ளி விட்டு... இதுதான் நான் உன்னை வளர்த்த பெருமையா...?" என்று கடுமையான குரலில் தன் மகனைத் திட்ட ஆரம்பிக்க...

ராகவேந்தர் அதட்டினார் தன் மனைவியை.

"ஏய்... என் பையனை எதுக்குத் திட்டுறே...? அவன் என்ன பண்ணினான்...? அந்தப் பொண்ணு கொஞ்சம் வாய் ஜாஸ்திதான்... இத்தனை ஆம்பிளைங்க மத்தியில் எப்படித் திமிராப் பேசுறா... அவளை முதலில் பார்த்தபோதே சொன்னான்...



"நான்தான் ராதாவுக்காக விட்டுட்டேன்.. இப்போ என் பையனையே பொறுக்கின்றா... என்ன தைரியம்...! இவள்ளாம்..." என்ற போது, அடுத்து அவர் என்ன சொல்ல வந்தாரோ தெரியவில்லை...

விஜய், அவரை அடுத்துப் பேசவிடாமல்... வேகமாய்...

"இல்லப்பா... நான்தான் கொஞ்சம் ஓவரா நடந்துக் கிட்டேன்...!" என்று தந்தை அவளைக் கொஞ்சம் இறக்கிப் பேசியது பிடிக்காமல், தன் தவறை ஒத்துக் கொண்டான்.

விஜய்யால் ஏனோ தாங்க முடியவில்லை. அவன் அவளை எத்தனை முறையோ திட்டியிருக்கிறான். அப்போ தெல்லாம் அவளின் வலியை உணராத மனம்... இன்று தன் தந்தை திட்டும் போது உணர்ந்தது. தீக்ஷாவைத் திட்டியது தன்னைத் திட்டியது போல் வலித்தது.

இப்போது கலைச்செல்வி தன் மகனிடம்...

"தெரியுதுல்ல... அப்போ அவ கிட்டே மன்னிப்புக் கேட்பதில் உனக்கு என்ன பிரச்சினை...?" என்றபோது,

"அவ கிட்டே சாரி கேட்பது என் பிரச்சினை இல்லம்மா... தீபன் எதுக்கு ராதாவை அடிச்சார்...? என்னை அடிச்சிருந்தா கூட நான் தாங்கியிருப்பேன்மா...!" என்று மீண்டும் அண்ணனாய்ப் பேசியபோது...

"உனக்கு உன் தங்கை எப்படியா, அது போலத்தானே விஜய், தீபனுக்கும்... அவன் தங்கச்சி தீக்ஷா கண் கலங்குறதை அவரால தாங்க முடியுமா?" என்றபோது,

விஜய் மனதிற்குள் தன்னையுமறியாமல்...

"என்னாலேயும் தான்மா தாங்க முடியலை... நான் என்ன நினைக்கிறேன்... என்ன பண்றேன்னு எனக்கே புரியலை... பைத்தியமே பிடிக்கிற மாதிரி இருக்கு," என்று சொல்லிக் கொண்டான்.

"அம்மா... அவ கிட்டே சாரி தானே கேட்கணும்... இப்போதே போகலாம்..." என்று விஜய் சொல்லும் போதே, அதைக் கேட்டபடி... மேலிருந்து கீழே இறங்கி வந்து கொண் டிருந்தாள் ராதா.

வந்தவள், விஜய்யிடம்...

"நீங்க இப்போ மன்னிப்புக் கேட்கக் கூடாதுண்ணா...! நான் மன்னிப்புக் கேட்கவும் விடமாட்டேன்," என்றவளின் விழிகள் விரக்தியாய் இருக்க...

"என்னம்மா சொல்றே... உனக்கு முன் எனக்கு எதுவும் முக்கியமில்லை. அண்ணா ஒரு வேகத்துல ஏதேதோ பேசிட்டேன்... தீக்ஷாவுக்குப் பதிலடி கொடுக்கிறேன்னு சொல் லிட்டு... லூசு மாதிரி பேசிட்டேன்மா...!" என்ற போது,

"தீக்ஷாவுக்கோ... உங்களுக்கோ... காதல்னா என்னன்னு தெரியாது, அண்ணா... திருமணம்... அந்தப் பந்தத்தோட வலிமை தெரியாது. ஆனால், இத்தனை நாள் என்கூட வாழ்ந்த தீபனுக்கு ஏண்ணா அது தெரியலை...?

"என் காதலுக்கு என்ன அர்த்தம்...? என் தங்கைக்கு அவமானம் ஆகிருச்சு... நீ தேவை இல்லேன்னு போய்ட் டாரே... என்னை... எங்க குழந்தையை... என் மனசை... எதையும் அவர் பார்க்கலைண்ணா...

"நீங்க தீக்ஷாவை அறைந்தது தப்புத்தான்... அதைவிட வீட்டை விட்டு வெளியே தள்ளியது மிகப்பெரிய தப்புத்தான்... ஆனா அதுக்கு மன்னிப்புக் கேட்டுத்தான் எனக்கு என் வாழ்க்கையைத் திரும்பித் தர முடியும் என்றால், அந்த வாழ்க்கையே எனக்கு வேண்டாம்..." என்ற போது, விஜய் உள்ளம் பதறியபடி...

"ச்சே... இது என்ன வார்த்தைடா... அவருக்கு உன் மேலே பிரியம்தான்டா... எல்லாம் என்னாலே வந்தது..." என்று கூறும்போதே...



"என் மேலேயும் என் பொண்ணு மேலயும் உண்மை யான பாசம் இருந்தால்... நான் இந்த வீட்டை விட்டுப் போகிற வரை நீங்க மன்னிப்புக் கேட்கக்கூடாது... மீறி... நீங்க மன்னிப்புக் கேட்டுப் பிறகு தீபன் என்னைக் கூட்டிச் சென்றால்... அது எங்க காதலுக்குச் சமரதி கட்டுகிற மாதிரி தான் இருக்கும்.

"அவரா என்னைக் கூட்டிட்டுப் போவார்... இல்ல, நானா அந்த வீட்டுக்குப் போவேன்... அதே போல உங்களைத் தீக்ஷா கிட்டேயும் மன்னிப்புக் கேட்க வைப்பேன்..." என்றவள், கலங்கியவளாய்...

"ஏண்ணா தீக்ஷாவை அடிச்சீங்க...? உங்களை மாதிரியேதான் அவளும். என்கிட்ட ஒருநாள் கேட்டா... உன் ஸ்டேட்டஸுக்கு ஏத்த பையனை மேரேஜ் பண்ணியிருந்தா உனக்கும் கஷ்டம் இல்லை... எங்களுக்கும் கஷ்டம் இல்லைனு...

"ரொம்ப நல்ல பொண்ணுண்ணா... அவளுக்கு இந்த மேரேஜ்ல பெரிய இஷ்டம்லாம் இல்லை... பையனைப் பற்றிப் பெருசா விசாரிக்கலை... ஆனால், அவ ஒரே வார்த்தைதான் கேட்டா... அவங்க நம்ம ஸ்டேட்டஸ் தானேன்னு... உங்களோட பிஹேவியர் அந்த அளவுக்கு அவளைப் பாதிச்சுருக் குண்ணா..." என்று சொல்ல... விஜய் உள்ளம் துடிக்க நிமிர்ந்தான்.

கலைச்செல்வியும் தீக்ஷாவைப் பற்றிப் பேச ஆரம்பிக்க... அவனுக்கு அங்கிருக்கப் பிடிக்காமல், தனிமை நாடித் தன் அறைக்கு வந்தவனுக்கு, ஆயிரம் குழப்பங்கள். ஒருபுறம் தன் மேல் கோபம் வர... மறுபுறம் தீக்ஷா மேலும் கோபம் வந்தது.

'எல்லாம் உன்னாலேதான்டி... நிம்மதியே போச்சு... பேசியே நீ கொன்னே... இப்போ இவங்களும்...' என்று

தனியாகப் புலம்ப ஆரம்பித்தவனுக்கு... தம் அடிக்க வேண்டும் போல் இருக்க... மாடி ஏறினான்.

ஏறும் போதே தீக்ஷாவின் கரம் பற்றி அவன் இழுத்த விதம் ஞாபகம் வர... அதன் பின் அவள் தன் மீது விழுந் ததும் ஞாபகம் வர... தன்னையும் அறியாமல் அவன் கை... அவன் இதயத்தை வருட...

'பண்றதையெல்லாம் நீ பண்ணிட்டு... நான் உன்னை ரேப் பண்ணின மாதிரி சீன் போட்டு... எல்லார் கிட்டேயும் என்னைத் திட்டு வாங்க வெச்சுட்டேல்ல...' என்றபோது அவன் மனம் சிலிர்த்தது.

'நீ தானேடி எனக்கு முத்தம் கொடுத்தே...!" என்று அவளிடம் பேசுவது போல் பேசிப் பார்த்தவன்,

'டேய்! அவ தெரிஞ்சா கொடுத்தா... இது ஓவரா இல்லை. இது மட்டும் அவளுக்குத் தெரிஞ்சது... அவ்ளோ தான்...' என்று தனக்குள் பேசியபடி அறையினுள் நுழைந்து சிகரெட் பாக்கெட்டினைத் தேடியபோது... அவன் கழட்டிப் போட்ட சட்டை கண்ணில் பட... அதை எடுத்தான்.

அதில் இருந்த... தீக்ஷா அறியாமலே தன் மேல் பதித்த இதழ் ஒற்றலைப் பார்த்தவன்... நிமிடங்கள் கடந்தும் அதைப் பார்த்தபடியே இருந்தான்.

தன்னையுமறியாமல் தன் விரல்களால் அதைத் தடவிப் பார்த்தவனுக்கு... அவள் இதழ்களை வருடுவதைப் போலச் சுகம் தோன்ற... வேறு எதுவும் தோன்றாமல், அந்தச் சட்டையைத் தன் மேலே போட்டபடி படுத்தவனுக்கு, அவள் இன்னொருவனுக்கு மனைவியாகப் போகிறாள் என்ற எண்ணமே தோன்றவில்லை.

அவளின் இதழ் ஒற்றலின் அந்த நிமிடங்களை யோசித்தபடியே கிடந்தான். தன் ஞாபகத்துக்குக் கொண்டு வர முயன்றான். அது அவன் ஞாபகத்துக்கே வரவில்லை.



'அறிவு கெட்ட மடையா... அவ முத்தம் கொடுத்ததே தெரியாமக் கொடுத்துட்டுப் போயிட்டா... நீ அவ கொடுத்தது கூடத் தெரியாம அவ கூட மல்லுக் கட்டிட்டு இருந்துருக்கே... இப்போ நினைத்துப் பார்த்தா மட்டும் ஞாபகம் வருமாடா...? அதைப் போய் யோசிச்சுட்டு இருக்கே...!' என்று மனச்சாட்சி கேட்க...

'அதுக்காக... இன்னொரு தடவையா கேட்க முடியும்...?" என்று விஜய் தன் மனச்சாட்சிக்குப் பதிலடி கொடுத்த போது...

தீக்ஷா இதழ் முத்தத்திற்கு அவனின் உடலின் ஒவ்வொரு அணுவும் உண்மையிலேயே ஏங்க ஆரம்பிக்க... விஜய்க்குத் தன் எண்ணம் சொன்ன செய்தி... மூளைக்கு முதன் முறை சென்றது. அடுத்த நொடியே படுத்திருந்தவன் படாரென்று எழுந்தான்.

'கடவுளே! இது என்ன எண்ணம் எனக்கு...? தீக்ஷா வையா... நானா... சற்று முன் அவளை எப்படி யெல்லாமோ அவமானப்படுத்தி அனுப்பி வீட்டை விட்டுக் கழுத்தைப் பிடித்து வெளியேற்றி... இப்போது அவளுக்காக ஏங்குகிறேனா...?' விஜய்க்கு இப்போதுதான் மொத்த உடலும் தூக்கிப் போட்டது... நடுங்கியது.

'ஒரு முத்தம் எனக்குள் இவ்வளவு மாற்றம் ஏற்படுத் துமா?' என்று தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டவனுக்கு,

'டேய்... இது ஒரு காரணம்தான்டா... அவளை நீ விரும்பறேன்றது இப்போ கூடத் தெரியலையா...? அவளை முதன் முதலில் பார்த்த போது வேண்டுமென்றால் நீ அவள் வசம் சாயாமல் இருந்திருக்கலாம்... ஆனால், முதன் முதலில் புடவையில் அவளைப் பார்த்தபோதே... அவ கீழே விழ லைடா... நீதான் மொத்தமா விழுந்துட்டே...!' என்று சொன்ன போது, அவன் முகத்தில் மெல்லிய புன்னகை வர...

'இதுதான் காதலா?' என்று யோசித்தவன்,

'டேய், விஜய்... பிடிக்காது பிடிக்காதுன்னு சொல்லி... இப்படித் தலை குப்புற விழுந்துட்டியேடா... அந்த வாயாடி கிட்டே...!" என்று மனச்சாட்சி அவனைக் கிண்டல் பண்ணத் தொடங்க... அதைச் செல்லமாய் அதட்டி அடக்கியவன்...

'அவளை... என்னை விட்டா வேறே யாராலும் சமாளிக்க முடியாதுனு கடவுளுக்கே தெரிஞ்சுருச்சு போல... ஏய், வாயாடி... நீ என்னைச் சமாளிச்சுருவியாடி...?' என்றபடி அவன் சட்டையில் பதிந்திருந்த இதழ் அச்சாரத்தின் மேல் தன் இதழை வைக்கச் சட்டையை அருகில் கொண்டு சென்றவன் மனதில்... அப்போதுதான் தீக்ஷா-ராகேஷ் திருமண விபரம் நினைவுக்கு வர,

இதயம் நிதர்சனத்தைச் சொல்ல... கல்லுக்குள்ளும் ஈரம் வரும் என்பது போல், தீக்ஷா இன்னொருவனுக்கு மனைவியாகப் போகிறவள் என்ற எண்ணத்தில், அவன் கண்கள் கலங்க ஆரம்பித்தன.

இத்தனை நாள் தன் கண் முன் நடமாடியபோது எதையும் உணராதவனுக்கு... அவளை இன்னொருவன் திருமணம் செய்யப் போகிறான் என்றபோது கூடத் தடுமாறாத வனுக்கு... இருவரும் ஒரே அறையில் இருக்கும் போது கூடக் காதல் என்ற எண்ணம் வராதவனுக்கு... இப்போது காதல்... காலம் கடந்த காதல்தான்... ஆனால், வந்துவிட்டதே...!

தன் மேல் பதிந்த அவள் இதழ் தடம் கூட அவள் அறியாதபடி மறைத்து... அவள் மண வாழ்க்கையில் பிரச்சினை ஏற்படக்கூடாது என்று யோசித்தேனே தவிர... அதற்கு மேல் எந்த எண்ணமும் எனக்குத் தோன்ற வில்லையே...!

'இப்போது என்ன காதல் அவள் மேல்... உண்மை யான காதல் இருந்தால், அவளை இந்த அளவுக்கு அவமானப்படுத்தி அனுப்பி இருப்பேனா...?' என்று தன் காதலின் ஆழத்தையும் ஆராய்ச்சி செய்தவன்...



'நான் தான் என்னோட காதலையே உணராமல் திரிஞ்ச முட்டாள் ஆச்சே... முட்டாள் மாதிரி என் தேவதையை என் கையாலே தள்ளிவிட்டு... ச்சேய்...' என்று கட்டிலின் முனை மேல் கையைக் குத்தியவனுக்கு... அது கூட வலிக்க வில்லைதான். ஆனால், தீக்ஷா தன்னைப் பற்றி என்ன நினைத்து வைத்திருப்பாள் என்று யோசித்த போதுதான் வலி உயிர் போனது.

'ஆம்... அவள் மனதில் என்னைப் பற்றி மிகவும் கேவலமாக... நினைத்து வைத்திருப்பாள்தான்... பணக்காரத் திமிர் பிடித்தவன்... கோபக்காரன்... அவளை அலட்சியப் படுத்துபவன்... இன்று அதற்கும் மேல்...

'தான் நடந்து கொண்ட கேவலமான நடத்தை... என்னை அவளுக்குப் பிடிக்குமா...? சத்தியமாக என்னை அவளுக்குப் பிடிக்கவே பிடிக்காதுதான். அதுவும் நான் தொட்டபோது அவள் துடித்த துடிப்பு... அவள் சிந்திய கண்ணீர்...

'நான் தொட்ட போது கூட அருவருப்பாகப் பார்த் தாளே...! அப்படி என்றால், என்னை ஒரு துளி கூடப் பிடிக்கவில்லை என்றுதானே அர்த்தம்?' என்று, அவன் மனம் அரற்றத் தொடங்கியது. அவனால் அந்த வேத னையைத் தாங்கவே முடியவில்லை.

'என்னை உனக்குப் பிடிக்காதாடி... ஆனால், எனக்கு உன்னை மட்டும் பிடிக்குதேடி... உனக்கு அந்த ராகேஷைப் பிடிச்சிருக்கா தீக்ஷா...?' என்றவனின் உள்ளம், கரையில் விழுந்த மீனாகத் துடிக்கத் தொடங்க... அந்த வலியை அவனால் தாங்க முடியவில்லை. அவனுக்கு நிதானமாகக் கூட யோசிக்க முடியவில்லை.

'எனக்கு எதுக்குடி உன் மேலே இப்போ காதல் வந்துச்சு...? உன்னை விட்டு என்னால இருக்க முடியுமா...?' என்று பலவாறு சிந்தித்தவன், இப்போது கொஞ்சம் ஓரளவு நிதானத்துக்கு வந்தான்.

'இப்போ என்ன... நிச்சயம் கூட முடியவில்லை... ஏன்... நான் போய் அவளை எனக்குத் தாங்கன்னு கேட்டா... என் தீக்ஷாவைத் தர மாட்டாங்களா என்ன...? எனக்குத்தான் முதல் உரிமை... அதுக்கப்புறம்தான் அந்த ராகேஷ் எல்லாம்...' என்று ஒரு முடிவெடுத்தான்.

சற்று நிம்மதிப் பெருமூச்சு விட... அடுத்த கனமே,

'உன் தீக்ஷால்லாம் சரிதான்... அவ உன்னைத் திருமணம் செய்வாளா...? உன்னைத் திருமணம் செய்வதற்குப் பதிலாகச் செத்துப் போயிருவேன்னு சொன்னவடா...!' என்று அவள் சற்று முன் கோபத்தில் விட்ட வார்த்தைகளை மனம் எடுத்துக் கொடுக்க...

தீக்ஷா தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிக்க மாட்டாள் என்பதை உணர்ந்த அவன் மனம், இன்னும் தெளிவாகச் சிந்திக்க ஆரம்பித்தது. ஒரு முடிவெடுத் தான் விஜய்.

'தீக்ஷா தன்னோடான திருமணத்துக்கு ஒருபோதும் சம்மதம் சொல்லமாட்டாள். ஆனால், அவள் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும்... தன் காதல் அவளுக்கு என்றுமே தெரியக்கூடாது...

'என் காதலைச் சொல்லி அவள் எனக்குக் கிடைத்தால் கூடப் பரவாயில்லை... அது நடக்கப் போவதில்லை. சொல்லப் போனால்... என் காதல் அவளுக்கு இன்னும் கஷ்டம்தான் கொடுக்கும். இன்னும் மன வேதனைதான் அவளுக்கு...

'அவளுக்கு இனித் தன்னால் என்றுமே கஷ்டம் வேண்டாம். அவள் எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டும்...' என்று நினைத்தவன், தன் காதல் எண்ணங் களை அடி மனதில் புதைக்க ஆரம்பித்தான்.

முடிவெடுத்தாலும்... அவனால் தீக்ஷாவை நினைக் காமல் இருக்க முடியவில்லை. அவளை முதன் முதலில் பார்த்த நாளில் ஆரம்பித்து, இன்று வரையிலான சிந்தனை யிலேயே அவன் இருக்க... அந்த இரவு அவனுக்கு விடியா இரவாக அமைந்தது.



அடுத்த நாளே அவனுக்குத் தீக்ஷா மயங்கி விழுந்த விஷயமும் கிடைக்க... அது கூட யுகேந்தர்தான் சொன்னான். அவளைப் பார்க்க வேண்டுமென்று விஜய் உள்ளம் துடித்தது. ராகவேந்தர் கூட இப்போது விஜய்யிடம்...

"அந்தப் பொண்ணு சென்சிட்டிவா இருப்பா போல, விஜய்..." என்று அனுதாபப்பட ஆரம்பித்தார்.

தன் அலுவலகத்திற்கு வந்தவனுக்கு... மனமெங்கும் தீக்ஷாவைப் பார்க்க வேண்டுமென்ற நினைவுதான். அவனால் முடியவில்லை. தனக்கு வந்த காதல் உணர்வுகளை அடக்கும் வழி தெரியாமல் தவித்தவன்...

நேராய்ச் சென்று நின்றது தீபனின் அலுவலகத்தில் தான்... தன் தங்கை சொன்ன விஷயங்கள் கூட அவனைத் தடுத்து நிறுத்தவில்லை.

தீபன், அவனைச் சந்திக்க விருப்பமே இல்லை என்று சொல்லி விட... கெஞ்சினான் விஜய். விஜய்க்கே தான் விஜயேந்தர்தானா என்ற சந்தேகம் கூட வந்துவிட்டது.

"ப்ளீஸ் தீபன்... நான் சொல்வதைக் கேளுங்க...! ஒருமுறை நான் சொல்வதைக் கேளுங்க... ப்ளீஸ்...!" என்று தன் நிலையில் இருந்தெல்லாம் இறங்கிப் பேச... ஒரு கட்டத்தில்... தீபனும் வந்தான்.

விஜய்யை அலட்சியமாகப் பார்த்த தீபன்...

"ஏன், உன் தங்கச்சி மறுபடியும் மருந்தைக் குடிச்சுட்டாளா...? இங்கே வந்து கெஞ்சுறே..." என்று இரக்கமே இல்லாமல் கேட்க...

விஜய், அவனின் வார்த்தைகளின் வீரியம் தாங்க முடியாமல், துடித்துப் போனான். கோபம் கூட வந்ததுதான்... ஆனால், காட்ட முடியாத நிலையில் இருந்தான்.

கோபம், காதல், வருத்தம்... எனத் தன் அத்தனை உணர்வுகளையும் அடக்கியபடி...

"தீபன்... ஏன் இப்படிப் பேசுறீங்க...? அவ உங்க மனைவி... என் தங்கை என்பதெல்லாம் 2 வருஷத்துக்கு முன்னால்..." என்றபோது...

"ஓ... உங்களுக்கு அது இப்போதான் தெரியுதா...? என் தங்கையை எப்படி வாழ வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்னு சவால் விட்டது யாரு?" என எதிர்க் கேள்வி கேட்க,

"சாரி, தீபன்..." என்றபோது, விஜய் என்கின்ற விஜயேந்தர் தலை குனிந்து இருந்தான்.

தீபன், விஜய்யைப் பார்த்தபடியே,

"இங்கே பாருங்க மிஸ்டர் விஜய்... என் மனைவியை விட்டு என்னாலேயும் இருக்க முடியாது... அவளை நானே வந்து கூட்டிட்டுப் போவேன்... உன் வறட்டுக் கவுரவத்துக் காகவெல்லாம் நான் என் வாழ்க்கையை இழக்க முடியாது...

"என் தங்கச்சி திருமணம் முடியட்டும்... ராதா என் மனைவியா மட்டுமே இருப்பா... அவளுக்குப் பிறந்த வீடுன்னு ஒண்ணை மறந்திட வேண்டியதுதான்..." என்றபடி,

"இதுக்குத்தானே வந்தீங்க... வேறென்ன விசயம்... எனக்கு வேலை இருக்கு," என்று விஜய்யைப் பார்க்க,

தன் நிலையை எண்ணிச் சிரிக்கத்தான் முடிந்தது, விஜய்க்கு.

"என் தங்கை சந்தோஷமாக இருப்பாள் என்றால், நான் அவளை விட்டுத் தள்ளி இருக்கச் சம்மதம் தீபன்," என்று சொல்ல...



"ரொம்ப சந்தோசம்!" என்று தீபன் வெடுக்கென்று சொல்ல...

'நான் ஆசைப்பட்ட உன் தங்கை சந்தோஷமா இருக்கணும்னு... அவளை விட்டே தள்ளி நிற்க முடிவெடுத்த எனக்கு... என் தங்கையை விட்டுத் தள்ளி நிற்க வருத்தம் வரலைடா...!' உள்ளுக்குள் தனக்குள் சமாதானத்தைத் தேடிக் கொண்டான் விஜய்.

தன் மன ஓட்டத்தை நிறுத்தியவன்... தீவிரமான பாவனையில்...

"தீபன்... அன்னைக்கு நடந்ததுக்கெல்லாம்... மனப் பூர்வமா... மனம் வருந்தி... நான் உங்க கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கிறேன்..." என்றவன், உள்ளே போன குரலில்,

"தீக்ஷாவிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும், தீபன்... அவள் கிட்டே நான் நடந்ததெல்லாம் அதிகம்தான்," என்றவனுக்கு...

இப்படியாவது அவன் மனம் கவர்ந்தவளைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்ற சந்தோசத்தில், உள்ளம் உற்சாகம் ஆக... தீபனோ, அவன் எண்ண ஓட்டம் புரிந்தவன் போல்...

"சாரி விஜய்... இனி அவ கிட்டே மன்னிப்புக் கேட்டு மட்டும் என்ன ஆகப் போகுது... நடந்தது எதுவும் மாறப் போவதில்லை... எதுவும் வேண்டாம்... அவளை இனிக் குழப்ப வேண்டாம்...

"அடுத்த வாரம் நிச்சயம்... அடுத்துத் திருமணம்... இதற்கு மேல் இந்த விஷயத்தை இன்னும் பெரிதுபடுத்த வேண்டாம். முடிந்தால் அவள் கண்ணில் படாமல் இருங்க... அது போதும் எங்களுக்கு.. நேத்து அவ கிடந்த கோலம்... சத்தியமா முடியலை விஜய்.. எங்களை விட்ருங்க...!" என்று விஜய்யிடம் சொல்ல... ஏமாற்றமாய்ப் பார்த்தான் விஜய்.

"ஏன் தீபன்... இன்னும் நம்பிக்கை வரலையா என் மேலே...? நான் தீக்ஷாவுக்கு இனி எந்தப் பிரச்சினையும்

பண்ண மாட்டேன்... அவ மேரேஜ் ஆகி சந்தோஷமா இருந்தா, எனக்கும் சந்தோஷம்தான்..." என்ற போதே அவனுக்கு உயிரெல்லாம் துடித்தது.

'பார்க்கக்கூட முடியாதா என் தேவதையை...?' என்று அவன் மனம் உள்ளுக்குள் கதறத் தொடங்க... தீபன் அவனையே பார்த்தபடி...

"உங்க மன்னிப்பெல்லாம் தேவையில்லை, விஜய். உங்க தங்கையை என் கூட வாழ விடுங்க. அது போதும்..." என்று தீபன் சொன்னபோது... விஜய், முற்றிலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியால் தவிக்கத்தான் செய்தான்.

அவன் துடிப்பதைக் கூட அறியாமல், தீபன் அவனைக் குதறிக் கொண்டிருந்தான்.

"நீங்க கொடுத்த வீட்டை, நீங்க திரும்பி வாங்கிக்கங்க... நான் வேறு வீடு பார்த்து விட்டேன்... இப்போதான் பேசி முடித்தேன். தீக்ஷா திருமணம் முடியும் வரை பொறுத்துக் கங்க... இப்போ மாறினேன் என்றால் நாலு பேர் இதைப் பற்றி விசாரித்து... அன்னைக்கு நடந்த பிரச்சினைதான் மீண்டும் கிளம்பும்..." என்றவன், எழுந்தபடி...

"ராதாவை என் அப்பா, அம்மா வந்து கூப்பிட வருவாங்க... வரும்போது... பிரச்சினை பண்ணாமல் அவளை அவங்க கூட அனுப்பி வைங்க..." என்று மட்டும் சொல்லி நகர, விஜய், அவனைப் போக விடாமல்... சட்டென்று தீபன் கையைப் பிடித்து நிறுத்தியபடி...

"தீக்ஷாவைப் பார்த்து ஒரு சாரி மட்டும் கேட்டுக்கிறேன் தீபன்... அவ கல்யாணமாகிப் போயிட்டா என்னால பேசக்கூட முடியுமோ?" என்றவனின் வார்த்தைகள் தடுமாறித்தான் விழுந்தன.

"வேண்டாம் விஜய். அவளுக்கு நல்லது பண்ணணும்னு நினைத்தால், அவ கண்லே படாதீங்க... அது போதும்...!" என்றவன், அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை.



விஜய் அப்படியே அமர்ந்துவிட்டான். தீக்ஷாவை இனி பார்க்கவே முடியாதோ...? அப்படிப் பார்த்தாலும் இனி இன்னொருவனின் மனைவியாக மட்டுமே பார்க்க முடியுமா...?

அவனுக்கு அவளைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அதுவும் தன் தீக்ஷாவாக அவளைப் பார்த்து, அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் இருக்க....

அடுத்த நாள் அவள் அலுவலகத்திற்குச் செல்ல... அவன் தேவதை, அவனுக்குக் காட்சி தந்தாள்தான்... உடலெங்கும் புது ரத்தம் பாய்ச்சியது போல்தான் இருந்தது விஜய்க்கு.

தீக்ஷா, அவள் நண்பர்கள் ஆறு, ஏழு பேருடன் சந்தோஷமாகச் சிரித்தபடி சென்று கொண்டிருந்தாள். இப்போதும் பேசியபடிதான் சென்றாள்.

அவள் குரல்தான் இவன் காதுகளை அடையவில்லை. தீக்ஷாவின் நண்பர்கள் ஏதோ சொல்ல... அவளும் அதைக் கேட்டுச் சற்று அதிகமாகச் சிரிக்க... அவளின் சிரித்த முகத்தில் விஜய்க்கும் மனம் நிம்மதி ஆனது.

மேகம் மறைத்த நிலவைப் போல... அவள் புன்னகை முகத்தைத் தன் மன வானில் பொக்கிஷமாய்ப் புதைத்து வைத்தவன், அவளையே பார்த்தபடி நிற்க... அப்போது தீக்ஷா திடீரென்று இவன் இருந்த பக்கம் திரும்ப... சட்டென்று தன்னை மறைத்துக் கொண்டான் விஜய்.

அவளுக்கு இந்தத் திருமண விஷயத்தில் பரிபூரண சம்மதம் என்பதை அவள் மலர்ச்சியான முகமே சொல்ல... விஜய், அவளை விட்டு முற்றிலும் விலகவே நினைத்தான். அவள் சந்தோசம் மட்டும் போதும் என்று அவள் உள்ளம் பற்றி மட்டுமே சிந்திக்க ஆரம்பித்தான் விஜய்.

அதன் பிறகு தீக்ஷாவைப் பார்க்க, அடுத்த நாளும் அலுவலகம் செல்ல... அவள் வேலையை விட்டே நின்ற

விஷயம் விஜய்க்குத் தெரிய வர... அவனால் தீக்ஷாவைப் பார்க்க வேண்டும் என்ற வெறி அதிகமானதே தவிர, அடங்க வில்லை. அவன் நிலை அவனுக்கு நன்றாகப் புரிந்தது.

அவனின் இன்றைய நிலை... தீக்ஷா இல்லாமல் அவனால் இருக்க முடியவில்லை. அவளின் அருகாமை அவனுக்கு வேண்டும்... அவள் குரல் அவன் காதில் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும்... அவளோடு ஏழேழு ஜென்மமும் தன் உறவு அமைய வேண்டும்.

இன்றைய அவனின் காதல் நோய்க்கு, தீக்ஷா மட்டுமே மருந்தாக இருக்க முடியும். ஆனால், காலம் கடந்த ஆசை. தன் விருப்பத்தால் இரு குடும்பத்துக்குமே மீண்டும் கசப்புதான். இதுவும் ஒருநாள் மாறும். இன்று வேதனை தான். காலம் இதையும் மாற்றும் என்று நம்பினான் அந்தக் காதலன்.

ஒருநாள் தன் தங்கைக்குச் சொன்ன விஷயம் தான்...

'இந்தக் காதலை நினைத்து ஒருநாள் சிரிப்பாய்... மறந்து விடு...' என்று அவளுக்குச் சொன்ன விஷயத்தை, அவன் மனச்சாட்சி அவனுக்கு இன்று சொல்ல... விஜய்யால் விட்டத்தை வெறிக்க மட்டும்தான் முடிந்தது.

அவன் மனச்சாட்சியின் ஆறுதல் வார்த்தைகள், அவனுக்கு இன்னும் வேதனையைத்தான் அளித்ததே தவிர, ஆறுதலைத் தரவில்லை. தன் தவிப்பிற்கெல்லாம் மருந்தாய்... அவள் இதழ் முத்தம் பதித்த அந்தச் சட்டையை எடுத்து வந்தவன்... அவளின் இதழ் அச்சாரத்தின் மேல் தன் இதழைப் பதிக்கும் உரிமை இல்லை என்பதால்... தன் மார்போடு மேலே போட்டபடி படுக்க... மனம் தீக்ஷா, தீக்ஷா என்று சுற்றி வந்தது.

அவன் நினைத்தால், அவளை எப்படியும் அடைந்து விடலாம். ஆனால், ஏனோ அதில் எல்லாம் அவனுக்கு



விருப்பமில்லை. தீக்ஷாவிடம் இன்னுமொரு வன்முறை யுத்தத்தில் இறங்க மனமும் இல்லை... தைரியமும் இல்லை.

அவளின் மன்னிப்பு மட்டும் கிடைத்தால் போதும் என்ற அளவில், அவன் தன்னைத் தயார்ப்படுத்த ஆரம்பிக்க... அதில் ஓரளவு வெற்றியும் அடைந்தான். வெற்றி அடைந்தான் என்று சொல்லிக்கொண்டான் என்றே சொல்ல வேண்டும்.

இதற்கிடையே விஜய்யின் பெற்றோர், தீபனின் வீட்டிற்குச் செல்ல... தீக்ஷாவின் பெற்றோரும் பெரிதாக அவர்களிடம் பேசவில்லை. அதே நேரத்தில் மரியாதைக் குறைவாகவும் நடத்தவில்லை. ராதாவை அந்த வாரத்தில் ஒரு நாளில் அவர்களே கூட்டி வந்து விட்டுச் செல்வதாய்ச் சொல்ல... அவர்களின் மௌனமே சம்மதமாய் அமைய, ராதாவும் தீபன் வீட்டிற்கு வந்தாள்.

ஆனால், அவளும் தீபனுடன் பேசவில்லை. தீபனுக்கு அவளோடு பேச ஆசை இருந்தும், பேசவில்லை. அவனுக்குத் தற்போது தீக்ஷாவின் திருமணம் மட்டும் ஒரே குறியாக இருந்தது. அதுமட்டும் இல்லாமல்... விஜய் அன்று வந்து பேசியதில், அவனுக்கு விஜய் மேல் சந்தேகம் கூட வந்து விட்டது.

அவன் பேசிய விதமே சரியாக இல்லை. அவன் பார்வை சொன்ன விசயம்... தீக்ஷா மேல் ஏதோ ஒரு அக்கறை இருப்பது போல் தெரிய... அதை உறுதிப்படுத்த மனம் தடுமாறினாலும்... அவன் ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தான். இனி விஜய், தீக்ஷாவைச் சந்திக்கக் கூடாது என்பதுதான் அது.

அங்கு விஜய்யும் ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தான். தீக்ஷாவிடம் அவள் திருமணம் முடியும் முன் மன்னிப்புக் கேட்பது என்ற விஷயத்தில்.

'அவள் விஜய் அத்தானுக்கு, அவள் மன்னிப்புக் கொடுக்காமல் இருப்பாளா...?' என்று நினைத்தவனுக்கு...

தான் எத்தனை முறை அவமானப்படுத்தினாலும்... தன் முன் வந்து நின்று, 'விஜய் அத்தான்...' என்று தீக்ஷா அழைக்கும் விதம் அவனுக்குக் கண் முன் தோன்ற... விஜய்க்கு அழுகையே வரும் போல் இருந்தது.

ஆண் மகன் என்பதால்... அழுகையை அடக்கும் வித்தை தெரிந்ததால்... தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

எதிலும் ஒட்டாமல் இருந்தான் விஜய். யாரிடமும் அவனுக்குப் பேசப் பிடிக்கவில்லை. தற்போதைய அவனின் வேதனைக்கு மதுவின் துணையை நாடிக் கொண்டான். அதனால் இரவு தாமதமாக வீடு வருவதை வழக்கமாக்கிக் கொண்டான்.

கலைச்செல்வி ஒரு நாள் அவனை அழைத்து... 'இளமாறன் வீட்டில் பேசலாம்...' என்று கேட்க... அவனால் அன்னைக்குப் பதில் சொல்லக்கூட முடியவில்லை.

ஆனால், 'இளமாறனிடம் இது பற்றிப் பேச வேண்டும். அவன் தங்கைக்கு வேறொரு இடத்தில் திருமணம் செய்து வைக்கச் சொல்லி விட வேண்டும்...' என்று நினைத்து அவனைப் பார்க்கப் போக... இளமாறனோ திடீர் வெளி நாட்டுப் பயணம் சென்றிருக்க... அதுவும் முடியாமல் போய் விட்டது.

தீக்ஷாவின் நிச்சயதார்த்த விழாவிற்கு விஜய் வீட்டினரை அழைக்க, தீக்ஷாவின் பெற்றோர் வந்திருந்தனர். வந்தவர்கள், விஜய்யிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல்... மற்ற அனைவரையும் அழைத்துச் செல்ல... விஜய்யும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லைதான்...

அன்று தீக்ஷாவின் நிச்சயதார்த்தம்... முதல் நாள் இரவு தூங்கவே இல்லை விஜய். வீட்டிற்கே மதுப் பாட்டில்களை எடுத்து வந்தும்... தன்னவளின் நினைவுகளை மறக்கடிக்க முடியவில்லை.



நாளை தீக்ஷா வேறொருவனுக்குச் சொந்தம் என்று உறுதிப்படுத்தும் தினம் என்பதை நினைக்க நினைக்க... முள் படுக்கையில் படுத்திருந்தவன் போல் புரண்டு கொண்டிருந் தான் விஜய். எப்போதடா விடியும் என்று இருந்தவன், அனை வருக்கும் முன்னால் தீக்ஷா வீட்டுக்குச் செல்லக் காத் திருந்தான்.

மற்ற அனைவரும் கிளம்பி வெளியில் வர... விஜய்யும் கிளம்ப... சுரேந்தர்தான் கேட்டான்...

"அண்ணா, நீங்களும் வர்றீங்களா?"

"ஏன்... நீ மட்டும்தான் ராதா அண்ணனா...?" என்று முறைப்பாய்ச் சொல்ல...

சுரேந்தர் அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை. வாயை மூடிக் கொண்டான்.

கலைச்செல்விக்கு அவன் வர ஒத்துக் கொண்டது பெரும் சந்தோஷமாகி விட்டது. விஜய் வந்தால் பிரச்சினை செய்வான் என்றெல்லாம் நினைக்கவில்லை.

மாறாக... இரு வீட்டுப் பிரச்சினைகளும் இனி சரியாகி விடும் என்று மனச்சாந்தி கொண்டு, பெருமூச்சு விட்டவர்... தன் குடும்பத்தோடு தீக்ஷா வீட்டில் இறங்கினார்.

மற்ற அனைவரையும் பார்த்து ஏதோ ஒப்புக்குச் சிரித்து வரவேற்ற தீபன்... விஜய்யின் வரவைப் பிடிக்காத காரணத்தால், அவனை வரவேற்கவில்லை.

விஜய்யை வரக் கூடாத விருந்தாளி போல் பார்த்து முறைத்தவன், அதே முறைப்போடு... ராதாவிடம் வந்து நின்றான்.

"என்னடி, உன் அண்ணன் இன்னும் ஏதாவது பாக்கி வெச்சுருக்கானா, என் தங்கையை அவமானப்படுத்த...?" என்று கேட்டுக்கொண்டிருக்கும் போதே, விஜய் பின்னால் நின்று செரும...

ராதா தன்னால் எதுவும் செய்ய முடியாத கையாலாகாத தனத்தை எண்ணித் தலைகுனிந்து நின்றாள். அன்று தன் அண்ணன், தன் கணவனைத் திட்டும்போதும் அவள் பேச வில்லை. இன்று தன் கணவன், தன் அண்ணனைத் திட்டும் போதும் அவள் பேசவில்லை.

"வாங்கண்ணா...!" என்று மட்டும் சொல்ல... வெளியேறிய தீபன்... விஜய்யைக் கடந்து போகும் போது,

"என் தங்கச்சி கிட்டே எதுனாலும் பிரச்சினை பண்ணின... நான் மனுஷனா இருக்க மாட்டேன்... ஜாக்கிரதை...!" என்று மிரட்டியபடி செல்ல...

விஜய், அவனைக் கண்டுகொள்ளாமல்... அவன் போகும்வரை காத்திருந்தவன்...

"தீக்ஷா எங்கே இருக்கா...?" என்று ராதாவிடம் கேட்க...

மிரண்டு விழித்தாள் அவன் தங்கை ராதா.

"அவ ரூம்ல இருக்காண்ணா... எதுக்குண்ணா...? அவளை ஏன் கேட்கிறீங்க...?" என்று பயத்தோடு கேட்டாள் ராதா.

"ப்ச்... சும்மா கேட்டேன்மா...!" என்று சுவரை வெறித் தவன்...

"பையன் வீட்ல எத்தனை மணிக்கு வருகிறார்கள்...? ராகேஷ் நேற்றே வந்திருப்பார்ல... தீக்ஷா கிட்டே பேசினாரா...?" என்று கேட்க...

"வந்துட்டாராம் அண்ணா... ஆனா தீக்ஷா கிட்டே பேசினாரான்னெல்லாம் தெரியாது..." என்று சொல்ல,

அப்போது சுனந்தா "மாமா..." என்று அவனிடம் ஓடி வர...

"ஹேய், ஸ்னோ பாப்பா...!" என்று அவளைத் தூக்கியவன்,



அவள் கன்னங்களில் இருந்த இதழ்த் தடங்களைப் பார்த்து, அதைப் பார்த்தபடி இருக்க...

"லிப்ஸ்டிக்... அத்தை..." என்று அப்போதுதான் வார்த்தைகளைக் கற்க ஆரம்பித்திருந்த சுனந்தா... தன் மழலை மொழியில் சொல்லித் தன் கன்னத்தை அவனிடம் குதூகலத்துடன் காட்டினாள்.

பாவம்... அந்தக் குழந்தைக்குத் தெரியுமா என்ன... எரிகின்ற நெருப்பில் தான் எண்ணெய் விடுகிறோம் என்று...

சுனந்தாவை விஜய்யிடம் இருந்து வாங்கிய ராதா சிரித்தபடி...

"உன் அத்தை இருக்காளே..." என்று கீழே இறங்கிப் போக... அந்த வீட்டில்... தன் கண் முன் காட்சி தராமல் இருக்கும் தீக்ஷாவை, அப்போதே பார்க்க வேண்டும் என்று விஜய் மனம் துடிக்க ஆரம்பித்தது.

அதற்கான திட்டங்களைச் செயல்படுத்த நினைத் தவன்... அதற்கான செயல் முறையில் இறங்க ஆரம்பித் தான். தீக்ஷாவைக் காணவும் செய்தான்.

அதுவரைதான் விஜய்-தீக்ஷா இருவரின் எண்ணங் களும்... நினைவுகளும் தனித் தனிப் பாதைகளில் பயணம் செய்தன. அதன் பிறகு... அதாவது விஜய், தீக்ஷாவைச் சந்தித்த அந்தப் புள்ளியில் இருந்து... இருவரின் எண்ணங்களும்... அவர்களின் நினைவுகளும் ஒன்றாய்ப் பயணம் செய்ய ஆரம்பித்து இருந்தன.

இதுவரை தீக்ஷாவின் எண்ணங்கள் தனியாகவும்... விஜய்யின் எண்ணங்கள் தனியாகவும் சென்ற திசை மாறி... விஜய்-தீக்ஷா காதல் வாழ்க்கையின் எண்ண ஓட்டங்களாகச் சேர்ந்து மாற ஆரம்பித்து இருந்தன.

மனங்கள் ஒன்றுபடும் போது, அவர்களின் நினைவு களும் அங்கு சேர ஆரம்பித்து இருக்க... கடந்த காலத்தில்

தன் நினைவுகளை மட்டும் இதுவரை நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த விஜய்... இப்போது மனமெங்கும் சந்தோசத் துடன்... தீக்ஷா தன்னில் பாதியாக மாறிய இனிய நினைவு களைத் தனக்குள் அசை போடத் துவங்கினான்.

## 26

விஜய்யால் நேரிடையாகத் தீக்ஷாவின் அறைக்குள் போக முடியவில்லை. யாராவது ஒருவர் தீக்ஷாவின் அறையில் இருந்து கொண்டிருந்தனர். தீபன் வேறு விஜய்யையே கண் கொத்திப் பாம்பாகப் பார்த்துக் கொண்டிருக்க...

விஜய், திக்ஷாவைப் பார்க்க முடியாமல், தவித்துக் கொண்டிருந்தான். என்ன செய்யலாம்... தீக்ஷாவை எப்படிப் பார்க்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே, மாடியில் இருந்து கீழே இறங்கி வந்த ராதாவிடம்... ஜெயந்தி...

"என்னம்மா... தீக்ஷா ரெடி ஆகிட்டாளா...?" என்று கேட்க...

"ஹ்ம்ம்... ரெடி ஆகிட்டா அத்தை... சேலை கட்டிட்டு இருக்கா... அதுதான் நான் கீழ வந்தேன்..." என்று சொல்ல... தீக்ஷா மட்டும் தனியாக இருப்பதை யூகித்த விஜய்... ஹாலை விட்டு வெளியேறி வெளியே வந்தான்.

அப்போது... காரின் அருகே சுரேந்தர், எங்கோ வெறித்த பார்வையில் நின்று கொண்டிருக்க... அதைப் பார்த்த விஜய்க்கு ஒரு நிமிடம் தூக்கி வாரிப் போட்டு விட்டது.

'இவன் ஏன் உள்ளே நிற்காமல் இங்கே இருக்கான்...? அதிலும் இப்படி முகத்தை வெச்சுக்கிட்டு... ஒருவேளை இவனும் தீக்ஷாவை... கடவுளே...! அப்படியெல்லாம் இருக்கக் கூடாது.'

ஏதேதோ கற்பனைகள் செய்தவனாய்ச் சுரேந்தர் அருகில் போய் நின்றான்.



"டேய், இங்கே என்ன பண்றே...? உள்ளே போ...!" என்று அதட்ட...

"ப்ச்ச்... அண்ணா... எனக்கு இங்கே இருக்கவே பிடிக் கலை... தீபன், ராதாவோட புருசனாப் போய்ட்டாரு... இல்லை..." என்று கண்கள் இடுங்கக் கூற... கோபம் முகத்தில் கொப்புளித்தது... தொடர்ந்தான் சுரேந்தர்.

"என்னமோ ரொம்பப் பிகு பண்றாரு... உங்களை ஏதோ விரோதி போலப் பார்க்கிறார்... உங்களுக்கு மரியாதை இல்லாத இடத்தில் எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை, அண்ணா...!" என்று தம்பியாய்ப் பேச ஆரம்பிக்க...

விஜய்க்கு இப்போதுதான் நிம்மதி ஆகியது. நிம்மதியில் பெருமூச்சு கூட வந்து விட... சுரேந்தரைப் பார்த்து,

"இதுதான் உன் கோபத்துக்குக் காரணமா...? முதலில் உள்ளே போ..." என்று சொல்ல...

"அண்ணா...!" என்று சுரேந்தர் தயங்க...

"உள்ளே போன்னா போ!" என்று அவன் சொன்ன விதத்திலே சுரேந்தரும் உள்ளே போக எத்தனிக்க... விஜய், அவனிடம் கேட்டான்.

"உன் அண்ணனை அவமானப்படுத்துறாங்கன்னு இன்றைக்கு இவ்வளவு கோபம் வருது உனக்கு... ஏன்டா... அன்னைக்கு எதுவும் பேசலை... உன் அண்ணன் நான் தப்பு செஞ்சப்போ... ஏன் தட்டிக் கேட்கலை... அன்னைக்கு நீ என்னைத் தடுத்து நிறுத்தி இருந்தா, இந்த அளவுக்குப் பிரச்சினை வந்திருக்காதே சுரேந்தர்...!" என்ற போது அருகில் வந்த சுரேந்தர்...

"அண்ணா... நடந்த எல்லாத்துக்கும் நீங்க காரணம் இல்லை... நான் மட்டுமே காரணம்... என்னாலதான் எல்லாமே... எனக்காகத்தான் நீங்க ஆர்த்தியைக் கடத்தச் சொன்னீங்க... அதனாலதான் தீக்ஷா உங்களைத் தப்பா

புரிஞ்சுக்கிட்டா... இப்போ தீபனுக்கும் நமக்கும் மனஸ்தாபம்," எனும்போதே...

'இல்லைன்னாலும் அவ என்னைச் சரியா புரிஞ்சிருப்பா... இவன் வேற... மனுஷன் நிலைமை தெரியாம பேசிட்டு இருக்கான்...' என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான் விஜய்.

சுரேந்தர் தொடர்ந்தான்...

"தீக்ஷா, உங்களைப் பொறுக்கின்னு சொன்னது எனக்கே தாங்க முடியலைண்ணா... அதுமட்டும் இல்லை... நீங்க தப்பே பண்ணினாலும் நான் உங்களைக் கேட்க மாட்டேன்... உங்க பக்கத்தில்தான் இருப்பேன்... அதேபோல நீங்க என்ன சொன்னாலும் அதற்குக் கட்டுப்படுவேன் அண்ணா!" என்ற போது அவனை இழுத்துத் தன்னோடு கட்டிக் கொண்டான் விஜய்.

"உன்னை மாதிரி எனக்கு ஒரு தம்பி கிடைத்ததுக்கு நான் ரொம்பக் கொடுத்து வெச்சுருக்கணும், சுரேந்தர்...!" என்று நெகிழ்ந்தவன், அவனை அனுப்பி வைக்க... சுரேந்தரும் உள்ளே போனான், விஜய் சொன்னான் என்பதற்காகவே.

அவன் அந்தப் பக்கம் நகர்ந்தவுடன், விஜய், தீக்ஷாவின் பால்கனியைப் பார்த்தபடி...

'இது வழியா அவ ரூமுக்குப் போகலாம்... ஆனால், யாராவது பார்த்து விட்டால் என்ன செய்வது...?' என்று யோசித்தவனுக்கு... தீக்ஷா அறையின் பின்புறம் உள்ள ஜன்னல் ஞாபகம் வர... வேகமாய் அந்தப் பங்களாவின் பின்புறமாய்ப் போனான் விஜய்.

தீக்ஷா, தன் அறையில் அனைவரையும் வெளியே அனுப்பி விட்டுப் புடவை மாற்றத் தொடங்கி இருக்க... அவளுக்குள் பல சிந்தனைகள்... அதில் பாதி ராகேஷைப் பற்றித்தான்.



அவனைப் பற்றி அவளால் கணிக்கவே முடியவில்லை. ஒரே குழப்பமாக இருக்க...

'ராகேஷ் நேற்றே வந்துட்டார்னு அண்ணா சொன்னானே... ஏன் என் கிட்டே பேசவே மாட்டேன்கிறார்... இன்னைக்காவது பேசுவாரா...?" என்று புடவையைக் கட்டியபடியே தன்னைக் கண்ணாடியில் பார்த்தபடி தன் முந்தானையைச் சரி செய்ய... அவளையுமறியாமல் விஜய் முகம் ஞாபகம் வர...

அன்று அவன் முன்னால் தான் நின்ற நிலை நினைவில் வர... நெற்றிப் பொட்டில் இன்னும் அதிகமாய் வலித்தது. அன்று கட்டிலில் மோதிய காயத்தின் வலிதான் அது. இன்னும் வலித்துக் கொண்டிருந்தது.

'கடவுளே...! என்னால் அந்த நாளை மறக்கவே முடியவில்லையே...!' கண்களை மூடியவள்...

'ப்ளீஸ்... முடிந்தால் அந்த நாளே எனது ஞாபகத்தில் இருந்து போகும்படி அழித்துவிடேன்!' என்று கடவுளுக்கு வேண்டுதல் வைத்தபடி... தன் நிலைமையை நொந்தபடி இருக்கும் போதே...

அவள் அறையின் பின்புறம் இருக்கும் ஜன்னல் கதவு தட்டப்படும் ஓசை கேட்க... பயந்தவள், தன் புடவையை வேகமாய்க் கட்டி முடித்து... ஜன்னல் அருகே வந்து... யாராய் இருக்கும் என்று குழப்பமும்... திகிலும் வர... மெதுவாய்த் திறந்தவள்... விஜய்யைப் பார்த்து உறைந்து போய்... அவளையுமறியாமல் "விஜய் அத்தான்..." என்று சொல்லி விட...

அவளின் "அத்தான்..." என்ற சொல்லில் ஒருகணம் தன்னை மறந்து, அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் விஜய்.

இப்போது தன்னை நடப்புக்கு மீட்ட தீக்ஷா... அவனைக் கவனிக்காமல் வேகமாய்ச் சுற்றிலும் பார்வையை

ஓடவிட்டவள்... தன் அறையின் கதவு மூடி இருக்கிறதா என்று மீண்டும் ஒரு முறை கவனித்து நிம்மதிப் பெருமூச்சு விட்ட வள்... மீண்டும் விஜய்யின் புறம் திரும்ப... விஜய்யும் ஓரளவு தன் பார்வையை மாற்றியவனாய்,

"பின் பக்கக் கதவைத் திற, தீக்ஷா..." எனச் சொல்ல...

தீக்ஷா அதிர்ந்தாள். 'இவன் மறுபடியும் பிரச்சினை பண்ணப் போகிறானா...?' என்று யோசித்தவள்... திகைத்த விழிகளில் அவனை நோக்க...

அவன் கஷ்டப்பட்டு நின்ற நிலைமை புரிய... அதிலும்... ஏதோ மரக் கிளை கீறி இருக்கும் போல... அவன் நெற்றியில் கீறல்கள் வேறு இருக்க... சட்டென்று பின் பக்கக் கதவைத் திறந்து விட்டவள்... விஜய் உள்ளே வர வழிவிட்டு விலகி நின்றாள்.

அவன் உள்ளே வந்ததும், கதவை மூடிய தீக்ஷா... மீண்டும் ஜன்னல் அருகே வந்தவள்... அவனைப் பார்க் காமல்... வெளியே வெறித்தபடி பேச ஆரம்பித்தாள்.

"இப்போ கதவைத் திறந்து விட்டேனே... இப்போ கூட நீங்க என்னை லூசுன்னு நெனச்சுருப்பீங்கதானே...!" என்று வார்த்தைகளை அவனை நோக்கி வீசினாள் தீக்ஷா.

அந்த வார்த்தைகளில் ஆர்ப்பாட்டம் இல்லை... அழுத்தமும்... அடக்கப்பட்ட வேதனையும் மட்டும் இருக்க... இன்னும் தொடர்ந்தாள்...

"ஆனா நான் உங்களைத் தவிர வேறு யார் வந்திருந்தாலும் திறந்திருக்க மாட்டேன்... அது ஏன்னு தெரியுமா...? விஜய் அத்தான் யார், எப்படிப்பட்டவர், என்று எனக்குத் தெரியும்... அந்த நம்பிக்கைதான்...

"ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது... நானா இருக்கப் போய் உன்னை விட்டேன்னு சொன்னீங்கல்ல..." என்றவள், அவனைப் பார்த்து...



"ஆழம் தெரியாமல் காலை விடலை, அத்தான்...! அன்னைக்கு அந்த இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும் நான் அவ்வளவு தூரம் பேசி இருக்க மாட்டேன்... அந்தச் சண்டை போட்டிருந்திருக்க மாட்டேன்...

"அண்ணியோட அண்ணன்னு ஒரு உரிமை... அது மட்டும் இல்லை... நீங்க தப்பு செய்தது எனக்குப் பிடிக்கலை... அதுதான் என்னை அறியாமல் சண்டை போட்டேன்... யாரோ எவனோன்னு போக முடியலை என்னாலே..." என்றவள்...

"அதேபோல், அத்தனை பேர் மத்தியிலும், சத்தியமா உங்க மானம் போறது மாதிரி நடந்திருக்க மாட்டேன், அத்தான்... யாரோ தெரியாதவங்க மத்தியில் இந்த தீக்ஷா உங்களை அசிங்கப்படுத்திருவான்னு நினைச்சீங்கல்ல... நீங்கதான் என்னைப் புரிஞ்சுக்கலை..." என்ற போதே அவள் குரல் கம்ம ஆரம்பிக்க... தன்னைச் சரிப்படுத்திக் கொண்டவள்...

"ப்ச்... இனிப் பேசி ஒண்ணும் ஆகப் போறதில்லை... கடைசி வரை நீங்க என்னைப் புரிஞ்சுக்கலை... புரிஞ்சுக்கவும் ட்ரை பண்ணலை... சாரி...!" என்று சொல்ல...

'நாம மன்னிப்புக் கேட்க வந்தா, இவ மன்னிப்புக் கேட்கிறா... எதுக்கு இந்த சாரி...' என்று விஜய் யோசிக்கும் போதே...

"பேசும் போது என்னையு மறியாமல் அத்தான்னு சொல்லிட்டேன். உங்களுக்கு நான் அத்தான்னு கூப்பிட்டா பிடிக்காதுன்னு தெரியும்... இன்னும் 2 வீக்ஸ்தான்... பொறுத்துக்கங்க... என் தொல்லையிலிருந்து விடுதலை...

"அதன் பிறகு உங்க தங்கச்சி வீட்டுக்கு நிம்மதியா வரலாம்... போகலாம். இந்த தீக்ஷா தொல்லை இனி உங்க ளுக்கு இருக்கவே இருக்காது..." என்று விரக்தியாய்ச் சிரித்த வளுக்கு...

விஜய் அமைதியாக நின்று கொண்டிருக்கும் நிலை புரிய... விஜய்யைத் திரும்பிப் பார்க்க... அவன் அவளைப் பார்க்கவில்லை. வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

எப்போதும் விஜய், அவளைப் பார்த்துத்தான் பேசுவான். அந்தப் பார்வையில், ஒன்று கோபம் இருக்கும்... இல்லை... 'நீயெல்லாம் எனக்கு ஒரு ஆளா?' என்ற அலட்சியம் இருக்கும்.

சில நேரங்களில் இவள் செய்யும் குறும்புத் தனங்களுக்குப் பதிலடி கொடுக்க முடியாத ஆற்றாமை இருக்கும். விஜய்யின் கண்கள் உயிரோட்டமான கண்கள். அவன் என்ன நினைக்கிறான் என்பதை அவனின் பார்வையே சொல்லும்.

அவன் பார்வை மாற்றங்களைப் பார்ப்பதே தீக்ஷாவுக்கு சுவாரஸ்யமாக இருக்கும். அதனாலே அவள் ஏதாவது சீண்டலாய்ச் செய்துவிட்டு... அவனைத் திரும்பிப் பார்ப்பது அவளுக்கு வழக்கம்.

இன்றும் அவன் கண்களைப் பார்க்க... அது அவளுக்குத் தரிசனம் தராமல், வேறெங்கோ பார்த்துக் கொண்டிருக்க... அவன் இங்கு இருப்பதை யாராவது பார்த்து விட்டால் தன் நிலை அவ்வளவுதான் என்பதால்...

'எதற்கு வந்தான் இவன்...? இவனுக்கு என்னைப் புரிய வைக்கணும்னு என்கிற வேகத்தில்... நானும் கதவைத் திறந்து விட்டுட்டேன்...!' என்று தனக்குள் சொன்னவளாய்... விஜய்யிடம் மீண்டும் வேகமாகப் பேச ஆரம்பித்தாள்.

"இந்த வழியில் வந்து ஏன் என்னைப் பார்க்க வந்தீங்க...? என் ரூமுக்கு வருகிற வழி இது இல்லை விஜய் சார்... நீங்க வாங்கிக் கொடுத்த வீட்டுக்கு உங்களுக்கே வழி மறந்து போச்சா...? எதுக்கு வந்தீங்க...? அதைச் சொல் லுங்க..." என்று கூறித் தன் ட்ரெஸ்ஸிங் டேபிள் முன் போய் உட்காரப் போக... அவள் வார்த்தைகளில் விஜய் முறைத் தான்.



அவள் வார்த்தைப் பிரவாகத்தில் நக்கலும் கோபமும் படபடப்பும் சரி விகிதத்தில் இருக்க...

'கொல்றாளே... சும்மாவே பேசிப் பேசிக் கொல்வா...! இப்போ கேட்கவா வேணும்...?' என்றபடி, தன்னை விட்டு நகரப் போனவளை... சட்டென்று அவள் கையைப் பிடித்து நிறுத்த... தீக்ஷா தீப்பார்வை பார்த்தாள் அவனை.

"கையை எடுங்க..." என்றவளின் வார்த்தை தந்த உக்கிரம் விஜய்க்கும் புரிய, கையைத் தானாக விட்டவன்... அவளிடம்,

"தீக்ஷா... நான் உன் கிட்டே வம்பு பண்ண வரலை... என்னை நீ மன்னிச்சுட்டேன்னு சொல்லு... அது போதும் எனக்கு... ப்ளீஸ்... நான் உன்னைப் புரிஞ்சுக்கலைதான்... அன்னைக்கு நடந்தது எல்லாம் என் கோபத்தால்... என் கோபத்தாலே மட்டுமே வந்தது..." என்று வேகமாய்ச் சொல்ல...

புருவங்களைச் சுருக்கினாள் தீக்ஷா. விஜய்யிடமிருந்து இந்த மன்னிப்பை அவள் எதிர்பார்க்கவே இல்லை. அதே நேரம் அவளால் அவன் கேட்ட மன்னிப்பையும் கொடுக்க முடியவில்லை. அதனால்,

"சாரின்னு நீங்க கேட்டவுடனே மன்னிப்பு நான் கொடுத்திடணுமா...? என்னால இப்போதைக்கு முடியாது. ஆனா நீங்க பண்ணியது எல்லாம் ஒருநாள் கண்டிப்பா மறந் துடுவேன்... அப்போ நானே உங்க கிட்டே வந்து பேசுவேன்...

"அந்தப் பிரச்சினையை இன்னும் இழுக்காதீங்க... ப்ளீஸ் வெளியே போங்க... யாராவது பார்த்தா ஏதாவது ஆகப் போகுது... உங்களுக்கும் எனக்கும் எதுவுமே செட் ஆக மாட்டேங்குது..." என்றவள், திரும்பி அவனைப்

பார்க்காமலே அவள் ட்ரெஸ்ஸிங் டேபிளின் முன் அமர்ந்த படி, அலங்காரம் செய்ய ஆரம்பிக்க...

"உன் மன்னிப்புக் கிடைக்கிற வரைக்கும் நான் இங்கே இருந்து போக மாட்டேன்... ஏன் தீக்ஷா பிடிவாதம் பிடிக்கிறே...? நான் வேறெதுவும் உன் கிட்டே கேட்கலையே... உன் மன்னிப்பு மட்டும் கொடு... அது போதும்...!" என்றவனுக்கு...

அவள் மணமகளாய் உட்கார்ந்திருந்த கோலம் வேறு உயிரைக் கொன்றது. யாரோ ஒருவனுக்காக அவள் அலங்காரம் செய்து கொண்டிருந்த காட்சி... அவன் உடல் எங்கும் கொதி நீரை ஊற்றியது போல் இருந்தது விஜய்க்கு.

விஜய்யைத் திரும்பிப் பார்த்தவள், நிதானமாக...

"என்னது... இங்கே இருந்து போகமாட்டீங்களா...? எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை... ஆனா உங்க தலையில என்னைக் கட்டி வெச்சுருவாங்க... பரவா யில்லையா...? அப்படி மட்டும் நடந்துச்சு... அதுக்கப்புறம் இந்த தீக்ஷாவோட இன்னொரு முகத்தை நீங்க பார்க் கணும், விஜய்...

"ஆனா நீங்க அப்படி நடக்க விடமாட்டீங்க... என்னை யெல்லாம் மேரேஜ் பண்ணிக்கிட்டா உங்க ஸ்டேட்டஸ் என்னாகும்...?" என்று எள்ளலாகச் சொன்னாள்.

"இதுக்கு மேலே போறதும் போகாததும் உங்க விருப்பம்... என்னை அசிங்கப்படுத்தறதுதான் உங்க நோக்கம்னா..." என்று அவன் புறம் திரும்பாமல், முன்னால் இருந்த கண்ணாடியில் அவனைப் பார்த்தபடி பேச...

அதில் விஜய், அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான். அப்போது அவன் கண்கள் அவளைப் பார்த்தபடியே இருக்க... அந்தப் பார்வையில் தீக்ஷா ஒரு கணம் அதிர்ந்து, பின் ஸ்தம்பித்தாள்.

விஜய்யை அவள் எத்தனையோ முறை பார்த்துப் பேசி இருக்கிறாள்... அதில் கோபம், அலட்சியம், ஆணவம், திமிர், எப்போதாவது அக்கறை, இப்படித்தான் அவள் உணர்ந் திருக்கிறாள்.



இன்று, அதில்... அந்தப் பார்வையில்...? சட்டென்று திரும்பி விஜய்யைப் பார்க்க... விஜய், அவள் திரும்புவதை உணர்ந்து சாதாரணமாய்ப் பார்க்க... தீக்ஷா சில நொடிகள் அவனையே பார்த்தபடி இருந்து விட்டு... மீண்டும் திரும்பியவள்... அவனைக் கண்ணாடியில் பார்த்தபடி பேச ஆரம்பித்தாள்.

விஜய்க்கு, அவள் தன்னைக் கவனித்துக் கொண்டி ருப்பது எல்லாம் புரியவில்லை. ஆனால், அவன் எண்ணம் எல்லாம் அவள் வார்த்தைகளில்தான் இருந்தது.

'பேசாமல் இந்த அறையிலேயே இருந்து விடுவோமா...? அதைப் பார்த்து எனக்கே இவளைத் திருமணம் செய்து கொடுத்து விடுவார்களா...?' என்று யோசித்துக் கொண் டிருந்தான்.

அடுத்த கணமே... 'தன்னையும் அசிங்கப்படுத்தி... அவளையும் அசிங்கப்படுத்தி... ச்சே! என்ன ஒரு கேவலமான எண்ணம்... தன் தேவதை தன்னால் இனி ஒரு போதும் அசிங்கப்படக் கூடாது...' என்று முடிவெடுத்தவன்... அதற்கு மேல் அந்த அறையில் இருக்க விரும்பவில்லை.

அவள் மன்னிப்பையும் வேண்டவில்லை. மனதைக் கல்லாக்கிக் கொண்டு, இன்னும் சற்று நேரத்தில் யாரோ ஒருவனுக்குச் சொந்தமாகி விட நிச்சயிக்கப்படப் போகும் அவளை, அந்தத் தோற்றத்தில் தன் விழிகளால் பருக ஆரம்பித்தான். அது தவறு என்று தெரிந்த போதும்... அதைத் தடுக்க முடியவில்லை. அவனுக்கு அதைத் தவிர வேறு வழியும் தெரியவில்லை.

அந்தக் கல் நெஞ்சம் படைத்தவனுக்குள் வந்த காதல்... அவளிடம் தன் மனதைச் சொல்லக்கூட முடியாத கோழை யாக அவனை மாற்றி இருக்க...

அவன் தேவதைக்கோ... அவன் வாய் மொழி தேவைப்படவில்லை. அவன் பார்வை மாற்றங்களே அவ ளுக்குள் மாற்றங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

விஜய், தீக்ஷா மேல் இருந்த தன் பார்வையை விலக்கி... வெளியே செல்ல ஆரம்பிக்க...

தீக்ஷாவுக்கு அவன் பார்வை... அதில் சிந்திய காதல்... அதில் இருந்த ஏக்கம் எல்லாம்... அவள் கண்களில் தவறாமல் விழ... தீக்ஷாவின் இதயம் அவன் பார்வைக்கு... அவளையுமறியாமல் ஏங்க ஆரம்பிக்க... அவன் புறம் திரும்பாமலே பேச்சைத் தொடர்ந்தாள்... எங்கே திரும்பினால் அவன் தன்னைப் பார்க்க மாட்டானோ என்று...

அவளால் எதையுமே யோசிக்க முடியவில்லை. அவன் தன்னை அசிங்கப் படுத்தியவன்... கேவலமாகப் பேசி இருக் கிறான் என்ற எந்த எண்ணமுமே அவளுக்குள் அப்போது வரவில்லை.

அந்த நிமிடம்... அந்த நொடி... அவனின் பார்வை மட்டுமே அவள் இதயத்தை ஆட்கொள்ள... கண்ணாடியில் அவனைப் பார்த்தபடியே, "விஜய் அத்தான்..." என்று வேக மாய்ச் சொல்லி... கிளம்பிய அவனை நிறுத்தினாள் தீக்ஷா.

விஜய் நின்று அவளைப் பார்த்தான். இப்போதும் அவன் பார்வையில் காதல் சிந்த...

தீக்ஷா அதை உள்வாங்கியபடி... அதை ரசித்தபடி,

"மன்னிப்பு கடைசி வரை தரலைன்னா என்ன பண்ணு வீங்க?" என்று கேட்க, இப்போது அவள் குரலில் வழக்கமான துள்ளல் வெளிப்பட...

அவனோ...

"அதை எப்படி வாங்குவது என்று எனக்குத் தெரியும்... ஆனால், உன் திருமணம் முடியறதுக்குள்ள வாங்கிடுவேன்..."



என்ற போதுதான் அவன் சொன்ன வார்த்தைகளில் தீக்ஷா வுக்கும் தன் தற்போதைய நிலை புரிய... வேகமாய்த் திரும்ப... விஜய் தான் வந்த வழியே கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

வேகமாய் தீக்ஷா... ஜன்னல் வழியே எட்டிப் பார்க்க... விஜய் அதற்குள் கீழே இறங்கிப் போயே விட்டான். அவன் மனதில் வந்த காதலை அவளுக்குள் இறக்கிப் போனவன்... அதை அறியாமலே, உணராமலே போய் விட, காதல் வந்தவளோ என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது ராதாவும் வந்து கதவைத் தட்ட... திறந்தாள் தீக்ஷா.

"கீழே எல்லாரும் வந்துட்டாங்க தீக்ஷா. புடவையை இன்னும் ஒழுங்கா கட்டாம என்ன பண்ணிட்டு இருக்க...?" என்று கேட்க...

"இல்லை, அண்ணி... ஒரு 15 மினிட்ஸ்..." என்று அவளைப் பார்க்க...

"சரி, கட்டு..." என்று ராதா அவள் அருகில் வர...

"அண்ணி... நீங்க போங்க..." என்று மீண்டும் அவளை வெளியே அனுப்பிக் கதவைச் சாத்தியவள்... அப்படியே அமர்ந்துவிட்டாள்.

'டேய்... என்னடா திடீர்னு இப்படி ஒரு பார்வை பார்த்து வைக்கிறே... எனக்கு உன் பார்வை மட்டும் தான்டா மனசுல நிக்குது... இது என்ன பார்வை... இத்தனை நாள் எங்க வச்சுருந்தே... நான் திரும்பிப் பார்த்த வுடனே மாத்திட்டீங் களே...!

'ஏன் விஜயத்தான்... என் கிட்டே சாரி மட்டும்தான் நீங்க கேக்க வந்தீங்களா...? ஆனா உங்க பார்வையில் அது

மட்டும் இல்லையே...! இப்படிப் பொலம்ப வெச்சுட்டீங்களே அத்தான்...!' என்று தனக்குள் பேசியபடி இருக்க...

ராதா மீண்டும் அறைக் கதவைத் தட்ட... வேகமாய்த் தான் கட்டி இருந்த புடவையைக் கழற்றியவள்... அவன் கைப்பட்ட தனது பிங்க் நிறப் புடவையை எடுத்தாள்.

அதைப் பார்த்தபடியே...

'இது தானே நீங்க தொட்ட புடவை... இந்தப் புடவையைக் கட்டிட்டு கீழே வருவேன். நீங்க மட்டும் என்னைப் பார்க்காம இருங்க... அதுக்கப்புறம் இருக்கு உங்களுக்கு...' என்றபடி வேகமாய் அணிந்தவள் மனதில் ராகேஷெல்லாம் வேறொரு கிரகவாசியாகி இருந்தான்.

வேகவேகமாய் அந்தப் புடவையைக் கட்டியவளுக்கு... அன்று அவன் தன்னைத் தொட்ட நிமிடங்களும் நினைவுக்கு வர... மெய் சிலிர்த்தாள்.

அவள் தேடிய காதலுக்கு... காதல் தனக்கு வராதா என்று யுகியிடம் கேட்ட கேள்விக்கெல்லாம் இன்று பதில் கிடைத்தாற் போல் இருக்க...

ராகேஷ் வந்தானா... இல்லையா... என்றெல்லாம் யோசிக்கவில்லை. விஜய் கீழே இருப்பான்... அவனைப் பார்க்கலாம்... அவனின் காதல் வழிந்த ஏக்கப் பார்வை மீண்டும் கிடைக்க, அவள் இதயம் ஏங்க ஆரம்பிக்க... அவனைப் பார்த்தபடியே இறங்க... அவள் நாயகனோ... அவளை நிமிர்ந்தே பார்க்கவில்லை.

'கடன்காரன்... என்னைப் பார்க்கவே மாட்டேன்கி றானே...!' என்று இவள் துடித்தபடி இறங்க...

விஜய்யோ அவளுக்கும் மேல் துடித்துக் கொண்டிருந் தான். தன் மனம் கவர்ந்த தன் நாயகி, யாருக்கோ மாலை யிட சந்தோஷமாக இறங்கி வந்துவிட்டாளே என்று... எழுந்து



போய்விட மனம் துடிக்கத்தான் செய்தது. அவனால் அது கூட முடியவில்லை.

அனைவருக்கும் நமஸ்காரம் செய்த தீக்ஷா... விஜய்யை மட்டுமே அவ்வப்போது பார்த்துக் கொண்டிருந் தாளே தவிர... தனக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை என்று ஒருவன் இருக்கிறான் என்ற எண்ணமே வரவில்லை.

அவன் வந்திருக்கிறானா என்று கூட மனம் அலைய வில்லை. அந்த அளவுக்கு அவள் விஜய்யின் பார்வைக்கு ஏங்கித் தவிக்க... அது கிடைக்கவே இல்லை.

அங்கு ஜெயந்தியோ கடுங் கோபத்தில் இருந்தார். தீக்ஷா அணிந்திருந்த புடவைதான் அவர் கோபத்துக்குக் காரணம்.

மாப்பிள்ளை வந்து கொண்டிருக்கிறார் என்று பையன் வீட்டார் சொல்லிக் கொண்டிருக்க... எதுவும் தப்பாகி விடக்கூடாது என்று... தீபன் அங்கு பதட்டத்தில் இருந்தான்.

இந்த நேரத்தில் இந்தச் சேலையைக் கட்டிட்டு வந்திருக் காளே... என்று ஜெயந்திக்குத் தீக்ஷாவின் மேல் அவ்வளவு ஆத்திரமும் கோபமும் வர... ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் இருந்தார் ஜெயந்தி.

ஜெயந்தி, ராதா, வைத்தீஸ்வரன் என தீபனின் பதட்டம் மெல்ல மெல்லப் பரவ ஆரம்பிக்க... ராகேஷின் பெற்றவர் களோ... எந்த விதப் பதட்டமும் இல்லாமல் சபையில் தீக்ஷாவுக்கும்... ராகேஷுக்கும் நிச்சயப் பத்திரிகை வாசிக்க ஆரம்பிக்கப் போக... விஜய், தீபனின் அருகில் வந்தான்.

"தீபன், ராகேஷ் எங்கே...?" என்று கேட்க, தீபன் பதிலே சொல்லவில்லை.

விஜய் அதற்கு மேல் பொறுமையாக இருக்கவில்லை.

ராகேசின் பெற்றவர்களைப் பார்த்து,

"பையன் வந்த பின்னால் நிச்சயப் பத்திரிகை வாசிக்கலாமே..." என்று சொல்ல, ராகேசின் பெற்றவர்களும் அவன் கேள்வியில் கொஞ்சம் திணற... விஜய் அவர்களின் திணறலைக் கண்களில் உள்வாங்கிக் கொண்டே...

"எப்போ வருவார் உங்க பையன்...? அவருக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இருக்கா... இல்லையா...? இப்படி பொறுப்பில்லாமல் இருக்காரு...!" என்று விஜய்யும் கேட்க...

தீக்ஷா அவனை முறைத்தாள். 'அங்க ரொமான்ஸ் லுக்கை விட்டுட்டு வந்து, இங்கே எனக்கு ஜோடி சேர்க்கிறியா?' என்று அவனையே பார்த்தபடி இருக்க...

"வந்துட்டு இருக்கான் தம்பி... இந்தப் புடவைகூட அவன் தீக்ஷாவுக்காகத்தான் எடுத்துட்டு வந்தான்... விருப்பம் இல்லாமலா இந்தப் புடவையைத் தீக்ஷா கிட்டே கொடுத்துக் கட்டச் சொல்லுங்கன்னு எங்க கிட்டே சொல்லிக் கொடுத்திருப் பான்...?" என்று சொல்ல...

விஜய் அந்தப் புடவையையே வெறுப்பாய்ப் பார்க்க... தீக்ஷா அவனின் பார்வையைப் பார்த்து விட்டாள்.

"உனக்கு என்னடா பிரச்சினை... உன் மனசுல என்னதான் இருக்கு?" என்று அவனைப் பார்க்க...

அங்கிருந்த ஒரு பெரியவர்...

"அந்தத் தம்பி கேட்பதிலும் நியாயம் இருக்கு... அவர் சொல்ற மாதிரி பையன் வரட்டும். அதன் பிறகு லக்கினப் பத்திரிகை வாசிக்கலாம்..." என்று சொல்ல...

ராகேஷ் வீட்டினர் தயங்க...

தீபன், விஜய்யை முறைத்தபடியே... சபையில் இருந்தவர்களிடம்,

"வேண்டுமென்றால் அந்தப் புடவையை மட்டும் தீக்ஷாவைக் கட்டச் சொல்லலாம்... மாப்பிள்ளை வந்த



பின்னால் மற்றக் காரியங்களைப் பார்க்கலாம்...!" என்று சொல்ல, விஜய், தீபனை முறைத்தான்.

'இவன் என்ன லூசா... அந்த ராகேஷ் நிச்சயத்திற்கே வராமல் இருக்கிறான் என்றால் இவன் யோசிக்க மாட்டானா...? என் மேல இருக்கிற கோபத்துல என்ன செய்கிறோம் என்றே தெரியவில்லையே தீபனுக்கு...' என்று யோசித்தவன், தீபனிடம் மெதுவாய்,

"தீபன்... ராகேஷ் வரட்டுமே...!" என்று மீண்டும் வலி யுறுத்திச் சொல்ல... அவனோ,

"என்னை நம்பாமல்... நான் வந்த பின்னாடிதான் நிச்சயதார்த்தம் வைக்கணும்னு சொன்ன ஆளு நீங்க... ஆனால், நான்... என் தங்கைக்குப் பார்த்த மாப்பிள்ளையை நம்பறேன்... போதுமா...? இதுக்கு மேல் இந்த விஷயத்தில் தலையிடாதீங்க...!" என்று திருப்பிக் கொடுத்தான்.

விஜய்யை எங்கு அடிக்க வேண்டுமோ அங்கு அடித்தான் தீபன்.

அதற்கு மேல் விஜய் பேசவில்லை. பேசப் பிடிக்க வில்லை. ஆனால், அவனுக்கு ராகேஷ் வராமல் இருப்பது எங்கோ இடித்தது. அதுமட்டும் இல்லாமல், ராகேஷ் ஏதாவது குழப்பம் செய்தால், தீக்ஷா தாங்குவாளா என்று தவிக்க ஆரம்பிக்க...

தீபன் சொன்னவாறு தீக்ஷாவிடம் புடவை கொடுக்கப் பட்டு அவளைக் கட்டி வரச் சொல்லப்பட்டது.

தீக்ஷாவும் அந்தப் புடவையை விஜய்யைப் பார்த்த படியே வாங்கிக் கொள்ள, அதற்கு மேல் விஜய்க்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. வெளியேற... அவனைப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்தவளாய் மேலே ஏறினாள் தீக்ஷா.

வெளியில் வந்த விஜய்... தன் காரின் அருகே சோகமே உருவாக நிற்க... தீக்ஷாவும் ஜன்னலை விலக்கி

அவனைப் பார்த்தாள். பின் கட்டிலில் வந்து அமர்ந்த வளுக்கு... விஜய் தன்னைக் காதலிக்கிறான் என்பது அவளுக்குத் திண்ணமாக விளங்கியது.

ஆனால், அவன் தன் ஸ்டேட்டஸ் காரணமாகவே அவளிடம் சொல்ல மறுக்கிறான் என்று தவறாய் நினைத்துக் கொண்டாள். அதில் தீக்ஷாவின் மனம் கொஞ்சம் கஷ்டமாக... தானும் அவன் நிலைக்குச் சமமாகப் பிறந்திருக்கலாமோ என்று முதன்முதலாய் வருத்தப்பட்டாள் தீக்ஷா... எல்லாம் காதல் படுத்தும் பாடுதான்... தீக்ஷா மட்டும் விதிவிலக்கா என்ன?

பின் அவளாகவே ஒரு முடிவுக்கு வந்தாள்.

'நீ என்னமோ பண்ணு... எனக்கு உன்னைப் பிடிச்சுருக்கு... உன் கிட்டே மட்டும்தான் காதல்னா என்னவென்று உணர்ந்தேன்... நானே உன்னைச் சொல்ல வைக்கிறேன்டா... நீயும் உன் ஸ்டேட்டஸும் மண்ணாங் கட்டியும்...

'தீக்ஷா யாருன்னு காட்டுறேன்டா... உன் வாயினாலே என்னைக் காதலிக்கிறேன்னு சொல்ல வைக்கிறேன்டா...!" என்று தனக்குள் சபதம் போல் கூறியவள்...

'உன்னைச் சம்மதிக்க வைக்கிறதுக்கு முன்னால, இந்த ராகேஷை என்ன பண்றது...? கீழே போய்ச் சொல்லிடலாமா... எனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லைன்னு. அதோ அங்கே ஒருத்தன் வெளியிலே நின்னு மூஞ்சியைத் தூக்கி வெச்சுக்கிட்டு இருக்கானே... அவனைத்தான் பிடிச்சிருக்குன்னு...' என்றெல்லாம் நினைத்தவளுக்கு... தன்னை நினைத்து ஒரு புறம் சிரிப்பாய் வந்தது.

'இது என்ன காதல்... நொடியில்... அதுவும் விஜய்யைப் பார்த்து...' என்றவாறு...

'நீதான் என் ஹீரோவாடா... 2 வருசமா என் முன்னால பெரிய சிங்கம் போல சீன் போட்டுட்டு...



இன்னைக்கு இப்படிப் பம்மி நிக்கிறே..." என்றவளுக்கு இளமதி ஞாபகம் வர...

'எவ வந்தாலும் என் விஜய் அத்தான் எனக்கு மட்டும் தான்... அவனே என்னை வேணாம் என்றாலும்... நான் அவனை விடமாட்டேன்... விஜய் அத்தான், உங்களை இந்த தீக்ஷா புயல் தாக்க வந்துட்டே இருக்கா... என்னை நீங்க சமாளிச்சுருவீங்களா...?' என்று மனம் விட்டுச் சிரித்தவள்... அப்படியே அவனின் ஞாபகங்களில் தன்னை மறந்து அமர்ந்திருக்க... தீபன் மேலே வந்து,

"தீக்ஷா, புடவையைக் கட்டிட்டுச் சீக்கிரம் வா... ராகேஷ் வந்துட்டு இருக்காராம்... நேரம் போய்ட்டு இருக்கு...!" என்று அவசரப்படுத்த...

அவன் வெளியே சென்றவுடன்...

ராகேஷ் எடுத்துக் கொடுத்ததாய்ச் சொன்ன அந்தப் புடவையைப் பார்த்து வெறித்தவள்...

'ராகேஷும் தன்னை விரும்பியிருப்பானோ...? நாம் ராகேஷுக்குத் துரோகம் செய்கிறோமோ...?' என்ற குற்ற உணர்வில் மனம் குன்ற... அதே நேரம்... விஜய்யை மனதில் நினைத்துக்கொண்டு, அவனைத் திருமணம் செய்தால், அதுதான் ராகேஷுக்குத் தான் செய்யும் மிகப் பெரிய துரோகம்...' என்று முடிவுக்கு வந்தவள்...

'என் அத்தான் எனக்கு எடுத்துக் கொடுப்பார்டா ஆயிரம் சேலை... நீயும் உன் சேலையும்...!" என்று தூக்கி எறிய... அதில் இருந்து ஒரு பேப்பர் கீழே விழ... தீக்ஷா புருவம் சுருக்கியபடி குனிந்து எடுத்தவள், படிக்க ஆரம்பித்தாள்.

"ஹாய் தீக்ஷா... முதல்ல நீ என்னை மன்னிக்க வேண்டும்... உன் மன்னிப்பை வேண்டியே இந்தக் கடிதம்... எனக்கு உன்னைத் திருமணம் செய்து கொள்ள விருப்பம்

இல்லை... எனக்கு ஏற்கெனவே ஒரு பெண்ணோடு திருமணம் முடிந்துவிட்டது... அதுவும் 4 வருடம் ஆகிவிட்டது...

"என் மனைவி வீட்டிலும் தெரியாது... இப்போதுதான் அவர்கள் வீட்டுச் சம்மதம் கிடைத்தது... என பெற்றோரிடம் சொல்லப் பயம் எனக்கு... இதுவரை சொல்லவில்லை... ஆனால், உன்னை ஏமாற்றவும் விருப்பம் இல்லை... ஆனால் நான் உன்னை ஏமாற்றி விட்டேன்தான்...

"இந்தத் திருமணம் நடக்கவே நடக்காது... என் பெற்றோரிடம் கூட என் திருமண விபரம் இன்னும் சொல்லவில்லை... நீ இந்தக் கடிதத்தைப் படிக்கும் போது, என் மனைவியின் வீட்டில் இருப்பேன்... விரைவில் அவளோடு நான் வெளிநாடு சென்று விடுவேன்... எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன்... மீண்டும் என்னை மன்னித்து விடு...." என்று தொடர,

அதற்கு மேல் அவளுக்கும் படிக்க இஷ்டம் இல்லை. கிட்டத்தட்ட தீக்ஷா மகிழ்ச்சியின் உச்சகட்டத்தில் இருந்தாள். ராகேஷின் இந்தக் கடிதம் அவளுக்குள் ஓரளவு இருந்த குற்ற உணர்ச்சியையும் போக்க... விஜய்யோடான தன் காதலில் முற்றிலும் மூழ்கினாள் தீக்ஷா. அந்தக் கடிதம் அவளுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது என்றே சொல்லலாம். தன் காதலுக்கு இருந்த அத்தனை தடையும் விலகி... இப்போதே விஜய்யுடன் சேர்ந்துவிட்ட உச்ச கட்ட சந்தோஷத்தைக் கொடுக்க... தன் காதலுக்கு ராகேஷாகவே வழி விட்டு விலகியதை நினைத்தபோது... தீக்ஷா தன் மகிழ்ச்சியை அடக்கும் வழி தெரியாமல்... சந்தோஷத்தில் துள்ளினாள்.

'அப்பா... விட்டது ஒரு தொல்லை...!' என்றவளுக்கு....

'விஜய் காதல் கிடைத்ததால், இது இன்று இவளுக்கு மிகப் பெரிய சந்தோசம்... இல்லையென்றால்...' என்று யோசிக்க...



'சரி, விடு தீக்ஷா... இதுதான் உனக்கு நடக்கணும்னு இருக்கும் போது யாரால் மாற்ற முடியும்...? ஓ.கே... சோ, நிச்சயதார்த்தம் கேன்சல்... நாமளே நிறுத்தலாம்னு நினைத்தோம்... அதுவே நின்று விடும்... இனி தீக்ஷா பாடு கொண்டாட்டம்தான்....' என்று தனக்குள் பேசிக் கொண்டவள்,

'சரி... விருமா... ச்சேய்... இனி அப்படிச் சொல்லக் கூடாது...' என்று தனக்குள் திட்டிக் கொண்டவள்,

"என் ஆளு என்ன பண்றான்னு பார்ப்போம்..." என்று சொற்களைத் திருத்தி... வெளியே பார்க்க, அவன் கார் மட்டுமே இருக்க... அவன் இல்லை.

கீழே விஜய் தவிர அத்தனை பேரும் அதிர்ச்சியில் இருந்தனர். காரணம், சற்று முன் ராகேஷ் போன் செய்து, தான் மீண்டும் வெளிநாட்டிற்கே செல்லப் போவதாகக் கூறி இருக்க... அவன் வீட்டினர் தவிக்க... அங்கு ஒரு ரணகளமே நடந்து முடிந்து... ராகேஷ் வீட்டினர் வெளியேறியும் இருக்க... இரு குடும்பமும் தீக்ஷாவிடம் எப்படி இதைச் சொல்வது என்று குழப்பத்தில் தவித்துக் கொண்டிருந்தனர்.

"இந்தப் படுபாவி இப்படிப் பண்ணிட்டானே.... என் பொண்ணு கிட்டே பேசி... அவ மனசை என்ன பண்ணி வெச்சுருக்கானோ...?" என்று ஜெயந்தி அழ ஆரம்பிக்க... விஜய்க்குப் பதட்டமாக வந்தது.

"ராதா... அவ தனியா இருக்கா... நீ அவ கூடப் போய் இரு..." என்று அனுப்பிய விஜய்.... "அவகிட்ட எதுவும் உடனே சொல்லாதே..." என்று கூறியும் அனுப்பி வைக்க... ராதா மேலே போய் தீக்ஷா அறைக் கதவைத் தட்டினாள்..

தீக்ஷாவோ... 'ப்ச்ச்... நான் கதவைத் திறந்து வந்தா மட்டும் நிச்சயம் நடக்கப் போகுதா என்ன...!' என்று அசால்ட் டாய் இருக்க... ராதா வேகமாய்க் கீழே இறங்கி வந்து, தீக்ஷா கதவைத் திறக்கவில்லை என்று சொல்ல....

'தீக்ஷாவுக்கு எப்படியோ விஷயம் தெரிந்துவிட்டதோ...? அவமானத்தில்... ஏதாவது செய்து கொள்ளப் போகிறாளோ...?' என்று அனைவரும் அவள் கதவைத் தட்ட ஆரம்பிக்க...

உள்ளே தீக்ஷாவோ, அவளுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள்.

'என்ன சொல்வது... எப்படிச் சொல்வது... ராகேஷைப் பற்றி இன்னும் சிறிது நேரத்தில் தெரிந்து விடும்... அதுக்கப் புறம்... என்ன சொல்லி விஜய்யத்தான் மனசில் இடம் பிடிப்பது... அவனை... அவன் ஸ்டேட்டஸ் வெறியை எப்படி மாற்றுவது...?' என்று தனக்குள் திட்டம் தீட்டிக் கொண்டி ருந்தாள்.

அனைவரும் அவள் கதவைத் தட்டிக் கொண்டிருக்க... விஜய்யோ... வேகமாய் முன்னால் சென்று, இப்போது அவள் பால்கனி வழியே மேலே ஏறி... அவள் அறைக்குச் செல்ல... அவள் நாயகியோ... ஏதோ ஒரு யோசனையில் உட்கார்ந் திருக்க... நிம்மதி ஆனான் விஜய்.

பால்கனி வழியாய் உள்ளே வந்தவனைப் பார்த்துச் சிரித்து விட்டாள் தீக்ஷா.

"அத்தான்... இப்போ இந்த வழியா...? அதை விட இது ஈசியா இருக்கா என்ன...?" என்று கண் சிமிட்டியபடி கிண்டலாய்க் கேட்க,

அவளை ஒரு முறை முறைத்தவன்... இல்லையில்லை வழக்கம்போல் முறைத்தவன்... அவளிடம் வேறு ஒன்றும் பேசாமல்... வேகமாய் முன்னே சென்று, கதவைத் திறந்து விட... இப்போது அனைவரும் உள்ளே வர... தீக்ஷாவைப் பார்த்து... ஜெயந்தி இன்னும் வேகமாய் அழ ஆரம்பிக்க... தீக்ஷா அவள் தாயின் அழுகையில் எரிச்சலாகி,

"எதுக்கும்மா இப்படி அழறீங்க...? இங்கே என்ன எழவா விழுந்திருக்கு...?" என்று முடிக்கவில்லை... அவள் அன்னையின் கை, அவள் கன்னத்தில் விழுந்தது.



"தரித்திரம் பிடிச்ச மாதிரிப் பேசித்தான்டி... இப்படி நிக்கிறே...! இந்தப் புடவையைக் கட்டாதேன்னு சொன்னா கேட்டுத் தொலையிறியாடி...! இப்போ என்ன ஆச்சுன்னு பார்த்தியா?" என்று புலம்ப ஆரம்பிக்க...

ஜெயந்தி, தீக்ஷாவுக்கு விட்ட அறையில் விஜய்க்குக் கோபம் எல்லாம் வரவில்லை., அறைந்தது சரிதான் என்றே தோன்ற... அப்போதுதான் அவள் அணிந்திருந்த ஆடையில் கவனம் வைத்தான்... 'எதுக்கு இந்தப் புடவையைக் கட்டி இருக்கா...?' என்று யோசிக்கும் போதே,

"அம்மா... சும்மா ராசி இல்லாத புடவைன்னு சொல்லாதீங்கம்மா... இது எனக்கு ராசியான புடவை...!" என்று சொல்லியவள், விஜய்யைப் பார்க்க...

விஜய் இப்போது புரியாமல் பார்த்தபடி நிற்க... தீக்ஷாவுக்கு ராகேஷ் விஷயம் சொல்லப்பட... அவள் ராகேஷ் கடிதத்தைப் பற்றி அங்கு யாருக்கும் சொல்லவில்லை. ஏனோ சொல்ல மனம் வரவில்லை. அப்படியே மறைத்தவள்...

"அவன் வரலைன்னா நான் செத்துப் போயிடுவேன்னு எல்லோரும் நெனச்சுட்டீங்களாக்கும்...! இவரு என்னைக் காப்பாத்த பால்கனி ஏறி வந்தாராக்கும்...!" என்று விஜய்யை முறைக்க,

விஜய், அவளிடம்,

"அப்போ கதவை உடனே திறந்திருக்க வேண்டியது தானே!" என்று எகிற...

'உன்னை நினைச்சுட்டுதான்டா உட்கார்ந்திருந்தேன்...' என்று மனதில் சொல்லிக் கொண்டவள்... அதைச் சொல்ல முடியாமல்... வேறு ஏதோ பேச வாய் திறக்கப் போக...

தீபன் இடையில் வந்து,

"தீக்ஷா... பதிலுக்குப் பதில் பேசாதே, போ...!" என்று சொல்ல...

அவள் அமைதியாக உட்கார்ந்து விட... அனைவரும் ஹாலில் வந்து அமர்ந்தனர்.

தீக்ஷாவுக்கும் விஜய்க்கும் மட்டும்தான் இது பெரும் மகிழ்ச்சியாக இருக்க... மற்ற அனைவருக்கும் தீரா வேதனை யாக இருந்தது.

தீபன் முகமே செத்துப் போனது போல் இருக்க... ஜெயந்தி அழுது கொண்டிருக்க... வைத்தீஸ்வரனோ இடிந்து போய் அமர்ந்து விட்டார். இவர்கள் சூழ்நிலையைப் பார்த்த கலைச் செல்விக்கு மனதில் ஒரு யோசனை தோன்றியது. ஆனால், விஜய் என்ன சொல்வானோ என்று மனம் முதலில் கலங்கினாலும்.... அவர் முடிவெடுத்து விட்டார், தீக்ஷாவைத் தன் வீட்டு மருமகளாக்க. அதை ராகவேந்தரிடம் சொல்ல, அவரும் சம்மதம் சொல்ல... தான் எடுத்த முடிவைச் சொல்லக் கலைச் செல்வி தன் மகனைத் தனியே அழைத்தார்.

தனியே வந்த விஜய்யிடம்,

இருவரும்... தீக்ஷாவை அவர்கள் வீட்டு மருமகளாக எடுக்கும் எண்ணத்தைச் சொல்ல... விஜய் மனதில் ஒரே சந்தோஷம்.

தன் காதலைச் சொல்லாமலே... தன் காதல் கைகூடும் என்று நினைத்தே பார்க்கவில்லை. தன் பெற்றோரின் விருப்பம் போலவே இந்தத் திருமணத்தை நடத்திவிடுவோம் என்று முடிவெடுத்தவன்... அப்போது கூட கொஞ்சம் ஈகோ பார்த்தான்தானோ என்றுதான் நினைக்க வேண்டும்.

"சரி..." என்று தன் சம்மதத்தைச் சொல்ல...

"அப்போ சுரேந்தர் கிட்டே தீக்ஷாவை மேரேஜ் பண்ணிக்கிடச் சம்மதமான்னு கேட்கவா, விஜய்...?" என்றபடி,

"உனக்கும் இளமாறன் வீட்டில் பேசி... தீக்ஷாவுக்குப் பேசிய நாளிலே திருமணம் செய்யக் கேட்கலாமா...? ஒரே மண்டபத்தில்... ஒரே நாளில் என் ரெண்டு பசங்களுக்கும்



திருமணம்..." என்று சந்தோஷமாய்ப் பேசியபடி தொடர... விஜய் என்கிற விஜயேந்தர், தன் வாழ்க்கையில் அவன் ஈகோவால் முதல் முறை அடி வாங்கினான்.

## 27

**வி**ஜய் இதற்கு மேலும் தன் கெத்தை... தன் ஈகோயிசத்தை எல்லாம் காட்ட விரும்ப வில்லை.

ஏனோ பெற்றோர் சொன்னவுடன், தன் மனதில் இருப்பது யாருக்கும் தெரியாமலே தீக்ஷாவைத் திருமணம் செய்துவிடலாம் என்று அவனுக்குள் இருந்த விஜயேந்தர் என்ற ஆணவம் பிடித்தவன்... கொஞ்சம் தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தான்தான். ஆனால், கலைச்செல்வி... சுரேந்தர் என்று சொல்ல... தன்னையே நொந்தவன், தன் தாயிடம்,

"அம்மா... சுரேந்தர் கிட்டே ஏன்மா கேட்கணும்...? இளமாறன் வீட்ல ஏன்மா பேசணும்...?" என்று பரிதாப மாய்த் திருப்பிக் கேட்க,

கலைச்செல்வி சிரித்தபடி, "சுரேந்தர் கிட்டே கேட்கணும்ப்பா. அவன் சம்மதமும் முக்கியம் இல்லையா...? நம்ம தீக்ஷாவைச் சுரேந்தர் வேண்டாம்னு சொல்ல மாட்டான் தான்... இருந்தாலும் ஒரு வார்த்தை தம்பி கிட்டே கேட் கணும்பா...!" என்றவர்,

"தீக்ஷாவுக்குக் குறிச்ச நாள்லேயே திருமணம் நடக்கணும்னா... உனக்கும் இளமதிக்கும் மேரேஜ் நடந்த பின்னால்தான் உன் தம்பிக்குப் பண்ணணும்... அதுதான் 2 கல்யாணத்தையும் ஒரே மேடையில் பண்ணிடலாம்னு இளமாறன் வீட்ல பேசணும்னு சொன்னேன்..." என்றவர்,

"ராதா புகுந்த வீட்ல நொந்து போயிருக்காங்கடா... அதுக்கு தீக்ஷா திருமணம்தான் ஒரு நல்ல முடிவு," என்று மகனைப் பார்க்க,

"சுரேந்தர் கிட்டேயும் சம்மதம் கேட்க வேண்டாம்...! இளமாறன் வீட்லேயும் பேச வேண்டாம்...!" என்ற போதே,

"அப்போ தீக்ஷா மேரேஜ்...?" என்று இடையில் குறுக்கிட்ட தாயை.. கை மறித்து நிறுத்தியவன், தன் பெற்றோர் இருவரிடமும் தீர்க்கமான பார்வையை வீசியபடி...

"ஏன்ம்மா, எனக்குத் தீக்ஷாவைத் திருமணம் செய்து தர மாட்டாங்களா...? இல்லை, தீக்ஷா வீட்ல அவளை எனக்குத் தர மாட்டாங்களா...?" என்று கேட்க,

கலைச்செல்விக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. தன் காதில் வந்து விழுந்தது தன் மகன் சொன்னதுதானா...? அவருக்கே சந்தேகம் வந்து விட...

'சுரேந்தருக்கே வேண்டாம் என்று சொன்னவன்... இப்போது.. இப்படிச் சொல்கிறானே...!' என்று நம்ப முடியாமல் அவனைப் பார்க்க...

தாயின் பார்வையில் குனிந்தவன்,

தன் தந்தையிடம் வேகமாக,

"அப்பா... நீங்க சொல்லுங்கப்பா... எனக்கும் தீக்ஷா வுக்கும் நல்ல பொருத்தம்னு அன்னைக்கு அந்தத் தாத்தா சொன்னார்லப்பா...!" என்று சின்னப் பிள்ளை போல் சப்போர்ட்டுக்கு ஆள் சேர்க்க ஆரம்பிக்க,

"உனக்குத்தான் அவளைப் பிடிக்காதே... சுரேந் தருக்குச் சொன்னபோதே திட்டினாய் என்று அம்மா சொன் னாளேடா...!" என்று ராகவேந்தரும் அவன் நிலை புரியாமல் பேச...

சுர்ரென்று உச்சிக்கு ஏறியது விஜய்க்கு.

'இவ்வளவு தூரம் சொல்றேன்... என் நிலை புரிய மாட்டேங்குதே... இவங்களுக்கு...!' என்று தனக்குள் சொன்னவனிடம், அவனது மனச்சாட்சி...



'நீ இதுவரை நேரிடையா உனக்குத் தீக்ஷாவைப் பிடிக்குதுன்னே சொல்லலடா மடையா...! நீ இப்படிச் சுத்திச் சுத்திப் பேசுனா... இப்படித்தான் ஆகும்... டைரக்டா மேட்டருக்கு வா...!' என்று கட்டளை போல் கூற....

'தன் மனச்சாட்சி கூட இப்போதெல்லாம் தனக்கு ஆணையிட ஆரம்பித்து விட்டது... எல்லாம் நேரம்...' என்று தனக்குள் கூறிக்கொண்டவன்... கோபம் குறையாமலேயே,

"எனக்கு இப்போ பிடிக்குது... எனக்குத் தீக்ஷாவைப் பிடிக்குது... எனக்கு அவளை மட்டும்தான் பிடிக்குது... போதுமா...? இல்லை, இன்னும் வேற மாதிரி சொல்லணும்னு நினைக்கிறீங்களா...?" என்று உச்சஸ்தாயியில் கத்த...

அவனின் கோபத்தில்... கத்தலில்... அவன் சொன்ன வார்த்தைகளில்... கலைச்செல்வி, ராகவேந்தர் இருவருமே உறைந்தனர். இருந்தாலும் கலைச்செல்வி சுதாரித்துத் தன் மகனிடம்...

"இந்தக் கோபம் தான்டா எனக்குப் பயமா இருக்கு.... உனக்கும் அவளுக்கும் ஒத்து வருமான்னு...!"

என்று சொல்ல... அது கூட விஜய்யை.. அவன் குணத்தை அவனுக்குப் புரிய வைக்கும் விதத்தில் நிதான மாய்ச் சொல்ல,

அவனோ அதை எல்லாம் கண்டு கொள்ளாமல்,

"ஒத்து வருதா இல்லையான்னு நாங்க பார்த்துக் கிறோம்... நீங்க போய்ப் பேசுங்கம்மா...!" என்றவன், அடுத்த நொடியே,

"அம்மா... தீக்ஷாவுக்கு என்னைப் பிடிக்குமாம்மா...? அவ பிடிக்கலைன்னு சொன்னான்னா... ஏதாவது சொல்லிச் சம்மதம் சொல்ல வெச்சுருங்கம்மா... ப்ளீஸ்..." என்று கெஞ்சிய தன் மகனை அசாதாரணமாகப் பார்த்த கலைச்

செல்விக்குத் தன் மகனின் வாழ்க்கை குறித்துக் கொஞ்சம் பயம் கூட வந்தது என்றுதான் சொல்ல வேண்டும்.

"தீக்ஷா சரின்னு சொன்னாத்தானே விஜய், நாம் மேற்கொண்டே பேச முடியும்...? அவ சம்மதம் சொல் வாளான்னு கொஞ்சம் சந்தேகம்தான்..." என்று சொல்ல....,

"அவ சம்மதம் சொல்லலைன்னாலும்.. பரவா யில்லை.. கட்டி வைங்க... நான் பார்த்துக்கிறேன்..." என்று மீண்டும் அதிரடியாகப் பேச ஆரம்பிக்க...

கலைச் செல்வி கலவரம் ஆனதுதான் உண்மை. அப்போது திடீரென்று... ராகேஷ் வராமல் போனது ஞாபகம் வர... அதுவும் கடைசி நேரத்தில் வராமல் போனது வேறு உறுத்த... விஜய், ராகேஷிடம் பேசிக் குழப்பம் செய்து அவனை வரவிடாமல் செய்து விட்டானோ... என்றெல்லாம் தன் மகனையே சந்தேகப்பட்டவர்...

"விஜய்... ராகேஷ் திடீர்னு வராமல் போனதுக்கும்... உனக்கும் சம்பந்தம் இல்லையே...!" என்று தன் சந்தேகத்தை விஜய்யிடமே கேட்டுவிட்டார்.

விஜய்க்கு வந்த கோபத்திற்கு அளவே இல்லை எனலாம். இருந்தும் தன் கோபத்தைக் காட்டும் நேரம் இது இல்லை என்பதை உணர்ந்தவனாய்... தன் தாயை முறைத்தபடி,

"அப்படியே இதை உங்க மருமக கிட்டேயும் சொல்லி வைங்க... ஏற்கெனவே வில்லன் ரேஞ்சுக்கு என்னைப் பார்த்துட்டு இருக்கா.... ஏம்மா நீங்க வேற...!" என்றவன்,

"சத்தியமா அந்த ராகேஷ் வராமல் போனதுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. நம்புங்கம்மா!" என்று சொல்ல... கலைச்செல்வி அப்போது கூட அவனை முழுதாய் நம்பவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.



கலைச்செல்விக்கு இப்போதுதான் தலை சுற்றுவது போல் இருந்தது.

விஜய் "மருமகள்..." என்று தன்னிடம் சொல்லியது வேறு அவன் தீவிரத்தை உணர்த்த... கலைச்செல்வி, தீக்ஷாவை விஜய்க்குப் பேச வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். அந்தச் சூழ்நிலைக்கு அவர் விஜய்யால் தள்ளப்பட்டார் என்பதே மறுக்க முடியாத உண்மை.

தீக்ஷாவைச் சுரேந்தருக்குக் கேட்க நினைத்தபோது, இந்த அளவுக்குச் சஞ்சலம் ஆகவில்லை. சொல்லப் போனால், சந்தோஷம்தான் நிரம்பியிருந்தது. ஆனால், விஜய்க்கு தீக்ஷாவைக் கேட்பதில் பல சிக்கல்கள் இருந்தன. தீக்ஷா முதற்கொண்டு.... தீபன்... அவன் பெற்றோர் வரை, யாருக்கும் விஜய் மீது அந்த அளவுக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. என்ன சொல்வார்களோ... ஏது சொல்வார்களோ என்று பயந்தபடியே விஜய்க்குத் தீக்ஷாவைப் பெண் கேட்க அவர் பயந்தது போல், ஜெயந்தியும் பேச ஆரம்பித்தார்.

விஜய்க்குத்தான் எத்தனை சோதனை...!

"இல்ல சம்பந்தி அம்மா.. இது ஒத்து வராது... விஜய் தம்பிக்கும் தீக்ஷாவுக்கும் எதுவும் ஒத்து வராது. இன்னைக்கு அவசரத்தில் முடிவெடுத்து விட்டு... அதுக்கப்புறம்.... கண்ணீர் வடிக்கிறதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. நீங்க இந்த அளவுக்கு எங்க குடும்பத்து மேலே... தீக்ஷா மேலே... அக்கறை வச்சுருக்கறதே போதும்... ஊர் உலகத்தில் எத்தனையோ கல்யாணம் நின்னுருக்கு... அதனால அந்தப் பொண்ணுங்களுக்கெல்லாம் கல்யாணமே ஆகாமல் போச்சா என்ன...? தீக்ஷாவுக்கு ஒருத்தன் பிறந்திருப்பான்... நேரம் வந்தால் வருவான்...!" என்று முடித்தபோது, அவர் குரலில் வேதனையும் கவலையும்தான் மிச்சம் இருந்தது.

தன் தாய் பேசும் வரை எதுவும் பேசாமல் விஜய்யையே பார்த்துக் கொண்டிருந்த தீபன், ஜெயந்தியிடம்,

"அம்மா..... அத்தை இவ்வளவு தூரம் கேட்கிறாங் கல்ல... அவங்களுக்கு என்ன மரியாதை...? நாம தீக்ஷாவைக் கேட்போம்... அவளுக்குப் பிடிச்சிருந்தா... மேலே பேசலாம்... இல்லையென்றால் விட்டுடலாம்..." என்று தீபன் சொன்னபோது, விஜய்க்குச் சுத்தமாய் நம்பிக்கை போய்விட்டது. ஆனாலும் ஒரு முடிவுடன்தான் இருந்தான்.

'தீக்ஷா, இன்று சம்மதம் சொல்லவில்லை என்றால் கூடப் பராவாயில்லை.. எப்படியாவது தன் காதலை அவளிடம் நிரூபித்து அவளைக் கைப்பிடித்து விட வேண்டும்...' என்று.

இதற்கிடையே தீபன் தனியாக... தீக்ஷாவிடம் பேசப் போக...

"இவன் தனியாப் போனா... குட்டையைக் குழப்பிடு வானே...!" என்று விஜய் வேகமாக,

"தீபன்! தனியா வேண்டாமே... இங்கே எல்லோர் முன்னாலேயும் வைத்தே கேளுங்க...." என்று கூற... தீபன் நின்றவன், ராதாவை விட்டுத் தீக்ஷாவை அழைத்து வரச் சொன்னான்.

தீபனுக்கு விஜய் மனது புரிந்தாலும்... தீக்ஷா சம்மதம் சொல்ல மாட்டாள் என்றுதான் நினைத்தான். அதனால் தனியே போய் அவளுக்கு எடுத்துச் சொல்லிச் சம்மதம் சொல்லி வைக்கலாம் என்றுதான் தனியே போகப் போனான். ஆனால், விஜய் அவன் போவதைத் தடுக்க... அதற்கு மேல் தீபனும் முயற்சிக்கவில்லை. நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விட்டான்.

கீழே இறங்கி வந்தவள்... விஜய்யைப் பார்க்க... அப்போதுதான் விஜய் ஒரு புத்தகத்தை எடுத்து மிகத் தீவிரமாக அதற்குள் தன்னைப் புதைத்துக் கொண்டான்.

விஜய்யை ஒரு பார்வை பார்த்தவள்... அவன் இப்போது தன்னைப் பார்க்க மாட்டான் என்று புரிய... அவனை விட்டு விட்டு... அத்தனை பேரையும் பார்க்க...



புத்தகத்தில் தன் கவனத்தை வைத்திருப்பது போன்ற பாவனையில் இருந்த விஜய்க்கோ இதயத் துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது.

இறங்கி வந்த தன் தங்கையிடம், தீபன்,

"தீக்ஷா... உனக்கு ஃபிக்ஸ் பண்ணிய முகூர்த் தத்திலே... திருமணம் செய்தால்தான்மா எங்க எல்லோருக் கும் மன நிம்மதி. அதனால்..." என்று நிறுத்த,

"அதனால.... ஏன் நிறுத்திட்டே... மேலே சொல்லு..." என்று அவள் கேட்ட தோரணையே, அங்கு அனைவருக்கும் வயிற்றில் புளியைக் கரைக்க...

"ராதா வீட்டில்.... அத்தை உன்னை மூத்த மருமகளாய் எடுக்கக் கேட்கிறாங்க..." என்று விஜய் பெயரைச் சொல்லா மல் தீபன் சொல்ல,

தீக்ஷா அமைதியாக அமர்ந்திருந்தாள்.

'இது அத்தை எடுத்த முடிவு போல... இவனும் உடனே இதுதான் வாய்ப்பு என்று தலையை ஆட்டி இருப்பான் போல...' என்று விஜய்யைப் பார்க்க... அவனும் இப்போது இவளைப் பார்க்க... ஒரு முறைப்பான பார்வையை அவனை நோக்கி வீச... தன்னவள் தனக்குச் சம்மதம் சொல்லப் போவதில்லை என்று விஜய் முடிவே செய்து விட்டான்.

பின் சிறிது யோசித்த தீக்ஷா...

"எங்க அப்பா அம்மா கேட்டிருந்தால்கூட யோசிச்சு இருப்பேன்... ஆனால், அத்தையே கேட்டிருக்காங்க... அவங்க வார்த்தைக்கு மறுப்புச் சொன்னா அது மரியாதை இல்லை... அதனால எனக்குச் சம்மதம்..." என்று என்னவோ கலைச்செல்வி வந்து கேட்டதால்தான் சம்மதிக்கிறேன் என்பது போலச் சொல்லி விட...

ஜெயந்தி, வைத்தீஸ்வரன் இருவரும் - கவலை யெல்லாம் போய் - மீண்டும் சந்தோஷப்பட ஆரம்பிக்க...

அங்கு மீண்டும் கலகலப்பு வந்து சேர... யுகிக்குத்தான் இதில் மிகுந்த சந்தோஷமாய்ப் போய் விட்டது.

"ஹேய் தீக்ஷா...." என்று கத்த ஆரம்பிக்க... சுரேந்தர் தான் அவனை அடக்கி வைத்தான்.

தீபன், அவளிடம்... "தீக்ஷா..... நல்லா யோசிச்சுதான் சொல்றியா...? நாளைக்கு ஏதாவது..." என்று ஆரம்பிக்கும் போதே,

"எனக்கு யோசிக்கத் தெரியாதுன்னா... அப்போ என் சம்மதத்தை எதுக்குக் கேட்டே.....?" என்று கோபமாய்ப் பேச... தீபன் அமைதி ஆனான். தன் கோபத்தை உடனே மாற்றிய தீக்ஷா... கலைச் செல்வியிடம்,

"அத்தை... உங்களுக்குத்தான் என்னை மூத்த மருமகளா எடுக்கச் சம்மதமா..... உங்க பையனுக்கு ஓ.கே. இல்லையா...?" என்று கேட்டவள்... சிரித்தபடி,

"அவருக்கு ஓ.கே. இல்லைன்னா கூடப் பரவா யில்லை... உங்க வீட்டு மூத்த மருமகளா வருதவற்கு எனக்கு ரொம்ப இஷ்டம்..." என்று சொல்ல.... உடனே விஜய் நிமிர்ந்து அவளை யோசனையுடன் பார்க்க... தீக்ஷா அவனைப் பார்த்துக் கண் சிமிட்ட... விஜய் வேகமாய் வேறு திசையில் பார்க்க ஆரம்பித்தான்.

விஜய்க்கு மனம் எங்கும் ஒரே பய ரேகைகள்... அவள் உடனே சம்மதம் சொன்னதில் சந்தோஷம் வருவதற்குப் பதில், பயம் தான் வந்தது. காலையில் பார்த்தபோது கூட அவள் தன்னிடம் விட்டேற்றியாகப் பேசியது ஞாபகம் வர... 'இவ உடனே ஓ.கே. சொல்கிறாளே... எதுவும் ப்ளான் பண்றாளோ என்னைப் பழி வாங்க... எதுவா இருந்தாலும் என்னைக் கல்யாணம் பண்ணிட்டுக் கொடுடி...' என்றெல்லாம் யோசித்தபடி அவன் இருக்க... தீபனும் விஜய்யின் எண்ணத் தில்தான் கிட்டத்தட்ட இருந்தான் என்று கூடச் சொல்லலாம்.



தன் அண்ணன் மற்றும் தன் வருங்காலக் கணவன் இருவரையும் தன் சம்மதத்தால் சிந்தனையில் தள்ளிவிட்ட நம் நாயகியோ... வழக்கம் போல் தன் அம்மாவோடு வாதாடிக் கொண்டிருந்தாள்.

"அம்மா... என்னமோ இந்தப் புடவை ராசி இல்லேன்னு சொன்னீங்க... இப்போ என்ன சொல்றீங்க...?" என்றவள்,

"உங்களுக்கு எப்படியோ... எனக்கு இது ராசியான புடவைதான்ப்பா...." என்றபடி தன் முந்தானையை இடுப்பில் செருக... விஜய்க்கு மட்டும் அவள் செய்ததின் அர்த்தம் விளங்க... அவள் சந்தோஷமாகச் சொல்கிறாளா, இல்லை வேறு எண்ணத்தில் சொல்கிறாளா என்று பிரித்தறிய முடியாமல் விஜய் முகமெங்கும் குப்பென்று வியர்த்துப் போய் உட்கார்ந்திருந்தான்.

ஒரு புறம்... யுகேந்தரோ, ராதாவிடம்,

"ராதா! நாங்கள்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க தானே... ஒரு மரியாதை கூட... அதை விடு... அட்லீஸ்ட் பொண்ணு கையால ஒரு காபி கூட கிடைக்க மாட் டேங்குதுப்பா இங்கே..." என்று சலிக்க...

"ஆமாம் யுகி... அதிலேயும் பொண்ணு கொஞ்சம் வாய் ஜாஸ்தி... நம்ம அண்ணாவுக்கு செட் ஆக மாட்டான்னுதான் தோணுது..." என்று சுரேந்தர் கிண்டலாய்ச் சொல்ல,

'அடப் பாவிங்களா...! எனக்கு செட் ஆக மாட்டான்னு நான் சொல்லணும்டா...!' என்று யோசித்த விஜய்க்கு... சுரேந்தருக்குக் கூட அவள் பொருந்த மாட்டாள் என்று இந்த வாய்தானே சொன்னது என்று தன்னையே வேறு கடிந்து கொண்டவன்... தீக்ஷாவைப் பார்க்க,

அவளோ, "சுரேந்தர் அத்தான்... விடுங்க... உங்க அண்ணா தலை எழுத்து அவ்ளோதான்... அதை எல்லாம் இனி மாத்த முடியாது..." என்று சொல்லி, யுகிக்கு ஹாய்

ஃபை கொடுக்க... விஜய், யுகியை முறைக்க... யுகி, அவன் முறைப்புக்குப் பயந்து தானாகக் கைகளைப் பின்னே இழுத் தான்.

அதைப் பார்த்த தீபன், யுகியிடம்...

"யுகி, இனி நீ பயப்பட வேண்டியது உங்க அண்ணா வுக்கு இல்லை... என் தங்கைக்கு..." என்று சொல்ல...

தீபனின் பேச்சில் விஜய்க்குக் கொஞ்சம் தெளிவு வந்து... தீபன் தன் கோபமெல்லாம் மறந்து விட்டான் என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுத் தீபனைப் பார்க்க... தீபனும் அவனைப் பார்த்துச் சிரிக்க...

ராதா இரண்டு வாரங்களாக மனதில் சுமந்திருந்த பாரம் விலகி நிம்மதி ஆனாள். ஆனாலும் கணவனுக்குக் கொடுக்க வேண்டிய தண்டனைக் கணக்கெல்லாம் இன்னும் தீர்க்காமல் மனதோடு வைத்திருந்தாள்.

அதன் பிறகு இரு குடும்பத்தாரும்... மற்றும் வந்திருந்த உறவினர்கள் சிலரோடு பேசி ஒரு முடிவுக்கு வந்து, ராகேஷோடு தீக்ஷாவுக்குக் குறித்த நாளிலே விஜய்க்கும் - தீக்ஷாவுக்கும் பேசி முடிவு செய்ய... விஜய்.... அவர்களோடு பேச்சில் கலந்து கொண்டானே தவிர, மறந்தும் தீக்ஷா புறம் திரும்பவில்லை. தீக்ஷாவோ அவனைப் பார்த்தபடிதான் சுற்றிக் கொண்டே இருந்தாள்.

காலையில் அவனிடமிருந்து கிடைத்த அவன் பார்வை தனக்குக் கிடைக்காதா என்று அவளது இருதயமும், பார்வையும் அவளை விட்டுப் பிரிந்து... ஏக்கமாய்ச் சுற்றி வர... அவனோ.... மனம் எங்கும் குழப்பத்துடனே இருந் தான், அவனவளின் எண்ணம் அறியாமல்... இதற்கிடையே இளமாறனிடம் வேறு தன் திருமண விபரம் சொல்ல வேண்டும் என்ற குழப்பம் வேறு.

மாலை 6 மணி ஆக, விஜய் வீட்டினர் கிளம்ப ஆயத்தயமாக... தீக்ஷா அவர்களிடம்,



"யுகி... பொண்ணு கையால ஒரு கப் காபி கூட சாப்பிடாமல் போகலாமா...?" என்றபடி, அனைவருக்கும் தன் கையாலே காபி கலந்து எடுத்து அனைவருக்கும் வழங்க... விஜய்க்கும் கொடுத்தவள்...

அவன் வேறு ஒரு கப்பைக் கையில் எடுக்க...

"விஜய் அத்தான்... அது உங்களுக்கு இல்லை... இதை எடுங்க..." என்று சத்தமாகச் சொன்னபடி,

"தீக்ஷா ஸ்பெஷல் ப்ரிபரேஷன் ஃபார் ஹெர் விருமாண்டி அத்தான்..." என்று அவனுக்கு மட்டும் கேட்குமாறு சொல்லி, வேறு ஒரு கப்பைக் கொடுக்க,

விஜய், அவளை அவஸ்தையாகப் பார்த்தான்.

'இந்தப் பார்வையெல்லாம் எனக்கு வேண்டாம்ப்பா.. காலையில நீ பார்த்த பார்வை... அதுதான் எனக்கு வேண்டும்... அதுக்காக நான் ஏங்கித் தவிக்கிறேன்டா... உனக்குப் புரியலையா...?' என்று மனம் எங்கும் ஏக்கமாய் அதைக் கண்களிலும் கொண்டு வர....

விஜய்க்கோ அவளின் பார்வையும் புரியவில்லை... காதலும் புரியவில்லை... ஏக்கமும் புரியவில்லை... குழப்பம் மட்டுமே அவன் மனதில் இருந்தது.

அவளைப் பார்த்தபடியே அவள் தந்த காபியைக் குடிக்க... முகம் அஷ்ட கோணலாய் மாறியவன், வேகமாய்க் கப்பைக் கீழே வைக்கப் போக...

அதைப் பார்த்துச் சிரித்தபடி, யுகி அருகில் அமர்ந்த தீக்ஷா, "யுகி... உங்க அண்ணாவுக்கு நான் முதன் முதலில் கொடுக்கும் காபி... மிச்சம் வைக்காமல் குடிக்கச் சொல்லு..." என்று அதிகாரமாய்ச் சொல்ல...

வைக்கப் போன கப்பை - மீண்டும் தன் அருகே கொண்டு வந்து... முகம் மாறாமல்... அதில் இருந்த கசப்போடு குடித்தவன்...

‘நீ என் வாழ்க்கையில இதே போல் கஷ்டம் தருவேன்னு சிம்பாலிக்கா சொல்ல வருகிறாயாடி...! நீ என்னோட இருந்து என்னை என்ன பாடு படுத்தினாலும் சந்தோஷமா அனுபவிப்பேன் தீக்ஷா...!’ என்று அவன் மனம் நினைக்கத் தொடங்க... காபி கப்பை வைத்தவன்,

“சரி, நான் கிளம்புகிறேன்... முக்கியமான வேலை இருக்கு...” என்று எல்லோரிடமும் சொல்லி விட்டு, விஜய் மட்டும் முதலில் கிளம்பினான்.

அவன் காபியைக் குடிக்க மாட்டான் என்றே நினைத்தாள் தீக்ஷா. அவன் முழுவதுமாய்க் குடித்த விதத்தைப் பார்த்தவளுக்கு... அவன் காதலின் ஆழம் உணர... அவன் வெளியேறிய அடுத்த நிமிடம்... வேகமாய்த் தன் அறைக்குப் போனவள்... பால்கனியில் போய் அமர்ந்தாள்.

அவளைப் பார்த்த விஜய்யும், காரை எடுக்காமல் அவளைப் பார்த்தபடியே நின்று விட்டான்.

அந்த அந்தி மாலையில் தன்னவளின் தரிசனம் தந்த மயக்கத்தில்... அதைத் தாங்க முடியாமலும்... அவளை விட்டுப் போக முடியாமலும்... காரில் சாய்ந்தபடி கண்களை மூடி... தீக்ஷா அவனின் பாவத்தில் மொத்தமாய் அவனோடு கரைந்தாள்.

‘இவ்ளோ காதலாடா என் மேலே உனக்கு... என் கிட்டே பேசக்கூடப் பயப்படுறியா நீ...!’ என்று அவனையே பார்த்தவளுக்கு... கைகளைக் கட்டியபடி காரின் மேல் சாய்ந்திருந்த அவன் கைகளை விலக்கி, ஓடிப்போய் அவன் கைகளுக்குள் அடங்க வேண்டுமென்று எண்ணம் வர.... தன்னை அடக்க முடியாமல் திணறியவள்... காதல் என்னும் இன்ப வேதனையில் துடிக்க ஆரம்பித்திருந்தாள்.

அவனோடு இந்த நிமிடமே... இந்த நொடியே... செல்ல வேண்டும் போல் இருக்க... அவனைப் பார்த்தபடியே இருந்த



தீக்ஷாவின் கண்களில்... விஜயேந்தர் என்ற ஆண் சிங்கத்தை... அதன் ஆரவாரத்தை... தன் காதலால் அடக்கிய கர்வம் சற்று வர... அந்தக் கர்வமும் சிறிது நேரத்தில் கண்ணீராய் மாறிக் கசிய ஆரம்பித்தது. சற்று நேரம் அப்படியே தன்னவனைப் பார்த்தபடி அவனோடு லயித்திருந்தவள்... அவன் இன்னும் விழி மூடியே இருப்பதை உணர்ந்தவள்... அவனைத் தன்னை விழி திறந்து பார்க்க வைப்பதற்காக...

தன் மொபைலை எடுத்து அவனுக்கு கால் செய்யப் போனவளுக்கு... தனக்குப் பிடித்த ஒரு பாடல் ஞாபகம் வர... அவனுக்குப் பாடல் பிடிக்காது என்று தெரிந்தும்... பாட்டை ஓட விட்டாள்.

பாடலைப் போட்டவள்... அவனைப் பார்த்தபடி இருக்க,

விஜய்யும் அவள் பாடல் போட்டதை உணர்ந்தும், தன் கண்களைத் திறக்காமலே இன்னும் தன் காதலின் ஆழத்திற்குள் மூழ்கினான்... அந்தப் பாடலில்.

பாடல் வரி இருவரையும் வேறு உலகத்திற்கு அழைத்துச் செல்ல... இருவரின் உணர்வுகளின் பிரதிபலிப்புப் போல்... அங்கு பாடல் வரிகளே ஆட்சி செய்ய ஆரம்பித்தன.

“மலையோரம் மாங்குருவி மாவிலையில் பாட்டெழுதிப் பாடுதடி
மகராணி உன் வரவை ராப்பகலா எம்மனசு தேடுதடி
மணமேளம் காதில் கேட்குதா...
மனசோடு தேனை வார்க்குதா...
மலையோரம் மாங்குருவி மாவிலையில் பாட்டெழுதிப் பாடுதடி
மகராசன் உன் வரவை ராப்பகலா என் மனசு தேடுதய்யா
பூங்காத்து வீசுது... அனலைப் பூசுது!
பொன் மானே பக்கத்திலே கொஞ்சம் வாம்மா!
தாங்காத ஆசையில் தவிக்கும் வேளையில்
தாலாட்டுப் பாடிக் கொஞ்சம் கொஞ்சலாமா!

சேலை கட்டும் நந்தவனம் நீயா...
செம்பருத்திப் பூவுக்கு நீ தாயா?
கண்ணுக்குள்ளே காதலெனும் தீயா...
சின்ன இடை தேய்வதென்ன நோயா?
கட்டியணைச்சா முத்தம் பதிச்சா...
நோய் முழுக்கத் தீர்ந்துவிடும் வாம்மா... ஹோ....
மலையோரம் மாங்குருவி மாவிலையில் பாட்டெழுதிப் பாடுதய்யா
மகராசன் உன் வரவை ராப்பகலா என் மனசு தேடுதய்யா
மணமேளம் காதில் கேட்குதா...
மனசோடு தேனை வார்க்குதா
மலையோரம் மாங்குருவி மாவிலையில் பாட்டெழுதிப் பாடுதடி
மகராணி உன் வரவை ராப்பகலா எம்மனசு தேடுதடி
கல்யாண மாப்பிள்ளை... எனை நீ பார்க்கலை...
கண் மூடி நாணத்திலே நிக்கலாமா...?

என்ற இடத்தில் விஜய் சட்டென்று நிமிர்ந்து முறைக்க.. தீக்ஷாவும் அதைப் பார்க்க...

'ஓ.கே. நம்மாளை டென்சன் ஏத்திட்டோம் போல..... தீக்ஷா எஸ்கேப்...' என்றபடி மொபைலை ஆஃப் செய்தவள், வேகமாய் இறங்க ஆரம்பிக்க...

அவள் அங்கு இறங்கும் அவசரம் பார்த்த விஜய்க்குப் பயமே வந்து விட்டது.

'எப்போ பார்த்தாலும் இப்படி உட்கார்ந்து இருக்காளே... முதலில் இதுக்குத் தடை உத்தரவு போடணும்... அவ உட்கார்ந்திருப்பது எனக்கு இங்கே பயமாயிருக்கு...' என்றபடி காரை எடுக்கப் போக... உள்ளே போன தீக்ஷா மீண்டும் திரும்பி வந்து, "விஜய் அத்தான், பை..." என்று சொல்ல... விஜய்யும்... திரும்பி அவளுக்குப் பை சொல்லக் கைகளை உயர்த்தப் போக... அப்போது உள்ளே இருந்து அனைவரும் வர... பை சொல்ல உயர்த்திய கைகளைக் கீழே இழுத்துக் கொண்டான்.

"அண்ணா... நீங்க வந்து 15 மினிட்ஸ் ஆச்சு... இன்னும் போகலையா...?" என்று யுகி, விஜய்யைப் பார்த்துக் கேட்க....

'டேய்... நீ மணிக்கணக்காப் பேசி போன் பில் வருதே... அதெல்லாம் கேட்கிறேனாடா நான்.. வந்துட்டான் கேள்வி கேட்க...' என்று யுகியை மனதுக்குள் திட்டியவன்,

'என்னை மாட்டி விடுறதுக்கே ப்ளான் பண்றா ராட்சசி... பாட்டைப் போட்டு என்னை ஆஃப் பண்ணிட்டு.... இருக்குடி உனக்கு... கல்யாணம் முடியற வரை ஆடு.... எனக்கே வெட்கமான்னு பாட்டுப் போட்டு கேக்குற... தைரியம்தான்டி... உன் வெட்கமெல்லாம் எந்த அளவுன்னு நானும் பார்க்கத் தானே போகிறேன்...' என்றபடி காரில் ஏறி அமர்ந்து போனவன் மனதில், வந்த போது இருந்த பாரமெல்லாம் போய் இப்போது தீக்ஷா பற்றிய ஞாபகத்திலும் குழப்பத்திலும் போக... அவன் பின்னாலே அவன் குடும்பமும் மற்றொரு காரில் வந்தனர்.

விஜய் மனதில் கொஞ்சம் குழப்பம் இருந்தாலும்... இருந்தும் அவள் போட்ட பாடலின் வரிகளில்,

'அடிப்பாவி, நேத்து வரை என்னை நெனசச்சுக் கூட பார்த்திருக்க மாட்டே... என் வரவை ராப்பகலாத் தேடுறியா நீ... ஓவர் கொழுப்புதான்டி உனக்கு... வா, வா... நானும் உன் வரவை எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறேன்...' என்று தனக்குள் பேசியபடி போனவனின் மொபைலில் மெசேஜ் வர... அது தீக்ஷா என்று காண்பிக்க... அதை வாசித்தவன்... தன்னையே மறந்து... அவன் வீட்டையும் கடந்து செல்ல...

அவன் பின்னே சென்ற சுரேந்தர் இதைப் பார்த்து... யுகியிடம் சொல்லி விஜய்க்குக் கால் செய்யச் சொல்ல...

யுகியின் போன் அழைப்பில் தன் உணர்வுக்கு வந்த விஜய், காரைத் திருப்ப...

அதே நேரம்... தீக்ஷாவின் நிழலோடு ஒன்றி... அவள் நினைவுகளோடு கலந்திருந்தவனின் அறைக் கதவும் தட்டப்பட... தன் நினைவுகளான கடந்த காலத்தை விட்டு நிஜமான நிகழ் காலத்திற்கு வந்தான் விஜய்.

அவன் அறைக் கதவு தட்டப்படும் விதமே வந்திருப்பது யார் என்று உணர்த்த...

திரும்பி... தீக்ஷாவின் நிழல் முகத்தில் அழுத்தமாய்த் தன் இதழைப் பதித்தவன், "வாயாடி... உன்னால என்னை விட்டு எங்கேயும் போக முடியாதுன்னு எனக்குத் தெரியும்டி...!" என்றபடி, நொடியில் தன் முகத்தை மாற்றி... தன் தலை முடியைக் கோதியபடி...

"என்னைச் சோதிக்க அடுத்த ரவுண்டாடி... எதையும் உன் இந்தர் சமாளிப்பான்டி...!" என்றபடி கதவைத் திறக்கப் போனான் விஜயேந்தர் என்கின்ற இந்தர்.

## 28

தீக்ஷா, இந்தர் என்று சொன்னதை வைத்தே பார்வதிக்கும்... சாரகேஷுக்கும், தீக்ஷா - விஜய் உறவினை வேறு யாரும் வந்து சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. என்ன நடந்தது என்பதுதான் அவர்களுக்குத் தெரிய வில்லையே தவிர... அவர்களின் உறவு முறை குழப்பம் இன்றித் தெளிவாக விளங்க... இப்போது விஜய்க்கு போன் செய்யத் தயக்கம் வரவில்லை பார்வதிக்கு. உடனே விஜய்க்குப் போன் செய்யப் போக... அப்போது யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்க... காலை கட் செய்தபடி கதவைத் திறந்தாள் பார்வதி..

அங்கு ஒரு இளைஞன் நின்றிருந்தான். அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவன் யார் என்று பார்வதிக்குத் தெளிவாய் விளங்கியது. கிட்டத்தட்ட விஜய்யின் சாயலில் அவன் இருக்க... அவன் யுகேந்தர் என்று அவளும் உணர... அவன் உணர்ந்த நொடியிலேயே பார்வதியின் முகம் மலர்ந்தது. அதே புன்னகையோடு,. யுகேந்தரைப் பார்த்தாள்.



யுகேந்தரோ அந்தப் புன்னகையை எல்லாம் கண்டு கொள்ளாமல்...

"சாரகேஷ் இருக்காங்களா...? அவங்களைப் பார்க்க வேண்டும்...!" என்று பார்வதியைப் பார்த்துக் கேட்க...

அவனின் களைத்த தோற்றமே அவன் பயணக் களைப்பில் இருந்து வெளிவரவில்லை என்பதை உணர்ந்த பார்வதி,

"உள்ளே வாங்க யுகி..." என்று அழைத்தாள்.

தான் யார் என்று அறிமுகப்படுத்தாமலே... அவள் சட்டென்று தன்னை அடையாளம் கண்டுபிடித்த வியப்பில் ஒரு நிமிடம் திகைத்த யுகேந்தர்... பின்,

"எங்க அண்ணா ஆஃபீஸ்ல வொர்க் பண்ற சாருமதி..." என்று கொஞ்சம் சந்தேகமாய் இழுத்தபடி கேட்க...

பார்வதிக்கு முகம் மாறியது.

"அவன், தீக்ஷா ஃப்ரெண்ட் பார்வதி என்று கேட்காமல்... சாருமதி எனச் சொன்னதில் இருந்தே அவன் விஜய்யின் தம்பியாக வந்திருக்கிறானே தவிர, தீக்ஷாவின் நண்பனாக வரவில்லை என்று பார்வதிக்கு நன்றாகப் புரிந்தது. அதனால் பார்வதி சற்று அமைதியாக மாற... யுகேந்தரும் அவளின் முக மாற்றத்தைக் குறித்துக் கொண்டவனாய்...

"சாரகேஷ் இருந்தார்னா... வரச் சொல்லுங்க... அவரைப் பார்த்துச் சில விஷயங்கள் பேச வேண்டும்..." என்று சொல்ல,

அப்போது, "பார்வதி... விஜய்க்குப் போன் பண்ணி னாயா...?" என்று கேட்டபடி சாரகேஷும் வெளியில் வந்தான்.

சாரகேஷ், யுகேந்தரை யோசனையுடன் பார்த்தவன், "யார் நீங்க...?" என்று கேட்க...

யுகேந்தர் அவனைப் பார்த்து... கொஞ்சம் தயங்கி "சாரகேஷ்..." என்று விளிக்க... இப்போது... ஆண்கள் இருவரும் பரஸ்பரம் அறிமுகம் செய்து கொள்ள... சாரகேஷ், யுகேந்தரை உள்ளே அழைத்தான்.

"இல்லை சாரகேஷ்... இப்போதுதான் லேண்ட் ஆனேன்... நேற்று சுரேந்தர் அண்ணா... எனக்குப் போன் செய்து, உங்க ரெண்டு பேருக்கும் பிரச்சினைன்னு... அதிலும் தீக்ஷாவினை மையப்படுத்தி..."

என்று கவலையாய் நெற்றியைச் சுருக்கியவன்,

"சுரேந்தர் அண்ணா... பெரும்பாலும் ரொம்ப டென்சன் ஆக மாட்டாரு... அவர் நேற்றுப் பேசினதில் இருந்து... எனக்கு அங்கு இருக்கவே பிடிக்கவில்லை. அதனால்தான் உடனே கிளம்பி வந்துட்டேன். சுரேந்தர் அண்ணாவுக்கு உங்களைப் பற்றி எதுவும் தெரியாது. இல்லைன்னா.... உடனே தீக்ஷா பற்றிச் சொல்லி இருப்பார்..." என்றபடி,

"தீக்ஷாவை நீங்க விரும்பினது பற்றி எனக்கு மட்டும் தான் தீக்ஷா சொல்லி இருக்கா... அதுவும் பார்வதி பற்றி அவள் சொல்லும் போது, உங்களைப் பற்றிச் சொல்லி இருக்கிறாள்.. அஃப்கோர்ஸ், விஜய் அண்ணாவுக்கும் உங்களைப் பற்றித் தெரியும். ஆனால், அவர் ஏன் சொல்லலைன்னு தெரியலை..." என்று வெளியில் நின்றபடியே அவசர அவசரமாகப் பேச ஆரம்பிக்க...

"உங்க அண்ணா.... அவரோட மனைவி தீக்ஷா இவங்களைப் பற்றி வாசலிலே பேச வேண்டுமா யுகி...?" என்று சாரகேஷ் கேட்க...



தீக்ஷா பற்றி சாரகேஷுக்கு விஷயம் தெரிந்து விட்டது... இனி பிரச்சினையில்லை என்பது போல் யுகியின் முகம் தெளிவாக மாற... அதன் பின்தான் யுகேந்தர் உள்ளே வந்தான்.

ஹாலில் வந்து அமர்ந்த யுகி, ஓரளவு நிம்மதியுடன் இருவரையும் பார்க்க... பார்வதி, அவனின் களைப்பை உணர்ந்து,

"டைம் 3 ஆகப் போகுது... சாப்பிட்டீங்களா யுகி...?" என்று அக்கறையாகக் கேட்க...

சிரித்த யுகி, "இல்லைங்க... ப்ளைட்டை விட்டு இறங்கி நேரா இங்கேதான் வந்திருக்கேன். தீக்ஷா விஷயத்தில் ஏதாவது தப்பா ஆகி விடுமோ என்று..." அவன் முடிக்க வில்லை...

"நீங்க லேட்டா வந்துட்டீங்க, யுகி..." என்ற பார்வதி, பட்டென்று சொன்னாள்... கொஞ்சம் வருத்தத்துடனே.

அவள் சொல்லும் போதே யுகேந்தர் முகம் மாறி விட்டது.

"என்...என்ன சொல்றீங்க... எனக்குப் புரியலை... என்னாச்சு...?" என்று முடிக்காமல் திணற...

சாரகேஷ் அனைத்தையும் சொல்லி முடிக்க... யுகேந்தர்... முகம் இறுகி அப்படியே வெறித்து அமர்ந்து விட்டான்... இருவரிடமும் எதுவுமே பேசவில்லை... ஏன்... தீக்ஷா, பார்வதி வீட்டில் தான் இருக்கிறாள் என்று தெரிந்தும்... அவளை என்ன ஏதென்று கூட விசாரிக்க வில்லை அவன். அவன் கவலை எல்லாம் அவன் அண்ண னிடமே இருந்தது.

"எங்க அண்ணா ஒண்ணுமே சொல்லலையா, சாரகேஷ்...?" என்ற போதே அவன் குரல் தாளம் தப்பிய ராகமாய்த்தான் வெளியே வந்தது.

"பாவி... பழி வாங்கிட்டா... என் அண்ணாவை அவ காதல்னாலேயே பழி வாங்கிட்டா... இன்னைக்கு அவமானப் படுத்தியும் விட்டாள்.... இனியாவது என் அண்ணனை விடு வாளா...? இல்லை, இன்னும் ஏதாவது பாக்கி இருக்கா அவளுக்கு...?" என்று உதடு துடிக்க அவன் எங்கோ பார்த்தபடி சொல்ல...

அவனின் வார்த்தைகளில் பார்வதிக்கு உள்ளம் கொதித்தது.

"என்ன யுகி இப்படிப் பேசுறீங்க...! அவ உங்க அண்ணி... அது மட்டும் இல்லாமல்... உங்களைப் பற்றித் தான் பேசிட்டே இருப்பா... வார்த்தைகளை யோசிச்சுப் பேசுங்க... அவளும் தெரிஞ்சு பண்ணலை... விஜய் மேலே அவளுக்கும் அதீத பிரியம்தான்... இன்னைக்கு அவ இந்த நிலைமையில இருக்கான்னா, அதுக்கு ஒரே காரணம்... அவ உங்க அண்ணா மேலே வெச்சுருக்கிற காதல்தான்...!" என்று பார்வதியும் கோபத்தோடு பேசினாள்.

தன் தோழியை இப்படிப் பேசுகிறானே என்ற ஆத்திரம் அவளுக்கு... அதில் அவளும் வார்த்தைகளைச் சூடாகவே யுகியிடம் விட... அவளை அலட்சியமாகப் பார்த்த யுகி,

"உங்க ஃப்ரெண்டைச் சொன்னவுடனே உங்களுக்குக் கோபம் வருதோ...? நானும் இல்லைன்னு சொல்லலையே...! வேறே எந்த வழியிலேயும் என் அண்ணனைப் பழி வாங்கி இருக்க முடியாதுன்னு... அளவுக்கதிகமாக அவரை நேசிச்சே கொன்னுட்டா... கொன்னுட்டு இருக்கா...!" என்றவன்...

"உண்மையான காதல் ஒருத்தரை வாழ வைக்கும்னு தான் இதுநாள் வரை நினைத்திருந்தேன்... ஆனால், அணு அணுவா பழி வாங்கும்னு தீக்ஷா விஷயத்தில்தான் உணர்ந்திருக்கேன். அவ சாபம்லாம் என் அண்ணனுக்குக் கிடைக்க... அவ காதலே காரணமாகி விட்டது. எப்படி இருந்தவர் தெரியுமா, என் அண்ணன்...? இன்னைக்கு



எப்படி இருக்கார்னு தெரியுமா...? தீக்ஷா காதல்னால என் அண்ணா வாழ்ந்திருந்தார்னா... நான் சந்தோஷப் பட்டிருப் பேன், பார்வதி. ஆனா என் அண்ணனைப் பைத்தியக்காரனா சுத்த விட்டுட்டாளே... என் பழைய விஜய் அண்ணனை என்னால பார்க்கவே முடியாதான்னு ஒவ்வொரு நாளும் ஏங்கிட்டு இருக்கேன்... அவரோட இந்த நிலைமையைப் பார்க்க முடியாமல்தான் நான் வெளிநாடு போனதே.... உன் ஃப்ரெண்ட் ஒரு நாள் சொன்னாள்... உன் அண்ணா ஒரு நாள் அனுபவிப்பார்... நான் பார்ப்பேனோ இல்லையோ... நீ பார்ப்பாய்னு... நடத்திக் காட்டிட்டா...!" என்ற போதே அவன் கண்கள் கலங்க ஆரம்பிக்க... சாரகேசிடம் திரும்பியவன்,

"சார்... நாளைக்கு என்ன நாள்னு தெரியுமா...? என் அண்ணாவோட திருமண நாள்...!" என்றவன், இப்போது அவன் அதிகமாய்க் கலங்க ஆரம்பிக்க... பார்வதி, சாரகேஷ் இருவருமே அதிர்ந்தனர்.

"அதுக்குப் புடவை வாங்க வந்தப்பதான்.... நீங்க தீக்ஷாவுக்கு எடுத்துக் கொடுத்த புடவையைப் பார்த்து சுரேந்தர் அண்ணா கோபம் ஆனார்..." என்றபடி, தான் கொண்டு வந்த விஜய்யின் பாஸ்போர்ட் காப்பியைக் காண பித்தவன்... நடந்த விஷயங்களை ஓரளவு அவர்களிடம் விவரித்தவன்...

"இதெல்லாம் நீங்க நம்புறதுக்காக ஒரு ஆதாரமா எடுத்து வந்தேன். சரி, நான் வருகிறேன்... எது நடக்கக் கூடாதுன்னு நினைத்தேனோ அதைவிட அதிகமாகவே நடந்துருச்சு.... எப்படியோ அவளோட நிலைமையும் உங்க ளுக்குத் தெரிஞ்சுருச்சு... உங்க ஃப்ரெண்ட் எழுந்தவுடனே வீட்டுக்குப் போகணும்னு அடம் பிடிப்பா... கூட்டிட்டு வந்து விட்ருங்க... இப்போதைக்கு அவ கிட்டே வேறு எதுவும் சொல்ல வேண்டாம்..." என்று சொன்னவன், உடனே கிளம்பவும் ஆரம்பிக்க,

அதே நேரம் அறையில் படுத்திருந்த தீக்ஷா, மயக்கத்தில் இருந்து விழித்தாள்.

அருகில் யாரும் இல்லாததால்... பார்வதியைத் தேடிச் சற்றுத் தடுமாறியபடி வெளியே வர... அங்கு யுகி இருக்க... அவனை எதிர்பார்க்காத தீக்ஷா... முதலில் திகைத்தவள்...

'தன்னைப் பார்க்க.... தன்னை அழைத்துப் போகத் தான் வந்திருக்கிறான்...' என்று சந்தோஷமாய் அவனை அழைக்கப் போக...

அப்போது பார்வதி பேச ஆரம்பிக்க... இடையில் குறுக்கிடாமல் தீக்ஷா நின்று விட்டாள்.

பார்வதி, யுகியிடம்... "யுகி... தீக்ஷாவைப் பார்க்காமல் போறீங்க.... உங்களைப் பார்த்தால் உங்களோடு பேசினால்... சந்தோசப்படுவா...!"

"இல்லை, பார்வதி... எனக்கு அவளைப் பார்க்கவே இஷ்டம் இல்லை...!" என்று எங்கோ பார்த்து வெறித்தவன்...

"என் விஜய் அண்ணா என்னைக்கு என் அண்ணனா திரும்பக் கிடைக்கிறாரோ அன்னைக்குத்தான் அவ கிட்டே பேசுவேன்...!" என்றபோது, அவனின் வார்த்தைகளில் தீக்ஷா அதிர்ச்சியாய் அவனைப் பார்த்து அப்படியே நிற்க...

இப்போது பார்வதி கோபமுடன்,

"அவ மயக்கமா இருக்கிறா, யுகி... இந்த நிலைமையில் கூடப் பார்க்க விரும்பவில்லையா, யுகி...?"

"இல்லை... இல்லை... பார்க்க விரும்பவில்லை...!" என்றபடி கத்தியவன், வெளியேறப் போக...

சாரகேஷ் அவனைப் பிடித்து நிறுத்தி

"அவ ஒரு இதய நோயாளி யுகி... அந்தப் பரிதாபம் கூட இல்லையா தீக்ஷா மேல...!" என்று கூரிய பார்வையுடன் கேட்க...



யுகியோ... நெற்றியில் விரலை வைத்து யோசிப்பது போலப் பாவனை காட்டியவன்,

"ஓ... டாக்டர்தானே நீங்க...?" என்றவன்,

"தீக்ஷா கிட்டே இந்த விஷயத்தைச் சொல்லணும்னு... எங்க அண்ணா ரொம்ப நாளா துடிச்சுட்டு இருக்கார்... அவ அம்மா முட்டாள்தனமா... எங்க அண்ணா மேலே இருக்கிற கோபத்தில்... தீக்ஷா கிட்டே சொல்லி வெச்சுட்டாங்க... அவகிட்ட சொல்லிருங்க... உனக்கு ஒரு நோயும் இல்லைனு... அவளால என் அண்ணாதான் செத்துட்டு இருக்காருன்னு..." என்றவன், அதற்கு மேல் நிற்காமல்.... வேகமாய் வெளியேறியும் விட்டான்.

தன் பிள்ளைகள் மேல் இருந்த கோபத்தில்.... இருவரிடமும் எதுவும் பேசாமல்... தன் அறையில் இருந்த தேவகி கூட யுகியின் சத்தத்தில் ஹாலுக்கு வந்து விட்டிருந்தார்.

பார்வதிக்கு யுகியின் மேல் வந்த கோபத்திற்கு அளவே இல்லை எனலாம்... மூத்தவனுங்க ரெண்டு பேரும் கூடப் பரவாயில்லையோ... என்று நினைத்தவள், சாரகேஷைப் பார்க்க...

அவனோ... "என்ன பாரு... இவன் இப்படிப் பேசிட்டுப் போகிறான்...!" என்றவன்,

"சரி... நீ விஜய்க்கு..." என்று திரும்பியவன்... அங்கு தீக்ஷா நிற்க, அதிர்ந்தான்.

அங்கு தீக்ஷாவோ அப்படியே சுவரோடு சுவராகச் சாய்ந்திருந்தாள்.

யுகேந்தர் பேசப் பேச... தன் மேல் அவனுக்குப் பாசம் இல்லையா என்ற கோபம்தான் முதலில் வந்தது தீக்ஷாவிற்கு... அடுத்தடுத்து அவர்களின் உரையாடலில் அவள்

அதிர்ச்சியின் உச்சத்திற்குச் சென்றாள். அவர்கள் பேசியதில் அவள் தெரிந்து கொண்டது... தனக்கு ஒரு நோயும் இல்லை... அதுதான்... அது மட்டும்தான் அவள் காதுகளில் முதலில் ரீங்காரமிட்டது. ஏன் சொன்னார்கள்...? எதற்குச் சொன்னார்கள்..? என்றெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபட வில்லை. ஈடுபட முடியவில்லை. மனமெங்கும் ஒரு மாதிரி யான சந்தோஷப் படபடப்பு... அதைத்தான் அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

தனக்கு ஒரு பிரச்சினையும் இல்லையா...? அப்படியென்றால்... தானும் மற்றப் பெண்களைப் போல... எல்லாவித வாழ்க்கையும் வாழத் தகுதியானவளா...? மனம் முழுவதும் நிச்சயிக்கப்பட்ட மரண பயம் அகன்றது போல் இருக்க... முகத்தில் தானாகச் சந்தோஷம் வந்தது தீக்ஷாவிற்கு.

சந்தோஷத்தில் அவள் கை கால்கள் எல்லாம் ஆடத் தொடங்கி இருந்தன. என்றோ போகும் உயிர்தான்... ஆனால், அது வெகு அருகில் என்று நம்பியிருந்தபோது வந்த விரக்தி... வேதனை.... இது எல்லாம் காணாமல் போய் இருக்க... மற்றதெல்லாம் மறந்த நிலையில்... அப்படியே மடங்கி உட்கார்ந்தாள். அவளால் பேசவே முடியவில்லை. சந்தோஷத்தில் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

பார்வதியும்.... சாரகேஷும் தீக்ஷாவைப் பார்த்துப் பதறி அவள் அருகில் ஓடினர்.

தன் அருகில் வந்த பார்வதியை சந்தோஷத்தில் கட்டிக் கொண்டாள் தீக்ஷா. கட்டிக் கொண்டவள்... அவள் மடியில் விழுந்து அழ ஆரம்பித்தாள். அவள் அழும்வரை இருவரும் ஒன்றுமே சொல்லவில்லை. அவளை அழ விட்டனர். பின் தீக்ஷாவே கண்களைத் துடைத்தபடி...

"பாரு... எனக்கு ஒண்ணும் இல்லாயாடி...? இந்த நிமிஷத்தை... இந்த நொடியை என்னால நம்ப முடியலை...



அப்படியே ஓன்னு கத்தணும் போல இருக்கு... இந்த நாலு மாதமா இன்னைக்கோ நாளைக்கோன்னு ஒரு விதப் பயத்தோடே காலையில எழுவேன், பாரு... நைட் தூங்கப் போவேன், பாரு.... சராசரிப் பொண்ணா அவ்வப்போது எனக்குள் வரும் உணர்வுகளை எல்லாம் எனக்குள்ளே அடக்கிக்கிட்டு.... என் நாட்களை எண்ணிக் கொண்டு... அந்த வேதனையெல்லாம் உனக்குப் புரியாது, பாரு.... ஆனால், இப்போ எனக்கு எப்படி இருக்கு தெரியுமா...?" என்று தீக்ஷா சொல்லும்போது பார்வதிக்கும் அழுகை வந்துவிட... அவளைத் தன்னோடு சேர்த்துக் கொள்ள...

தீக்ஷா... சாரகேஷிடம்,

"நீங்க கூட மறைச்சுட்டீங்களே, பாரு அண்ணா...!" என்றவளைப் பரிதாபமாய்ப் பார்த்தான்... அவளை... அவள் நிலையை நினைத்து.

"இல்லை தீக்ஷா.... ஓரளவு தெரிஞ்சது... உன்னை கம்ப்ளீட்டா டெஸ்ட் எடுத்து அதன் பின்னால் சொல்ல லாம்னு..." என்ற போதே.... தீக்ஷாவும் நார்மல் ஆக... யுகியைப் பற்றிப் பேச ஆரம்பித்தாள் தீக்ஷா.

"யுகி, என்னைப் பார்க்காமலே போய்ட்டான்ல, பாரு... அப்படி என்னடி கோபம் என் மேல் அவனுக்கு...?" என்று கவலையாய்க் கூறிய தோழியைப் பார்த்தாள், பார்வதி.

கடந்த காலத்தை மறந்து... அதன் நினைவுகள் அவ்வப்போது வரும் தன் தோழியின் அவல நிலையை நினைத்து... பார்வதியின் கண்களிலும் கண்ணீர் வர... அதைக் கவனித்த தீக்ஷா... அவள் கண்ணீரைத் துடைத்த படி...

"நீ எதுக்குடி என்னைப் பார்த்து அழற...? எனக்கு ஒண்ணும் இல்லைன்னு சந்தோஷம்தானே படணும் நீ...!" என்று மகிழ்ச்சியோடு சொன்னவள்... இப்போது முற்றிலும்

சகஜ நிலைமைக்கு வர, கேள்விகளும் ஆரம்பமாயின தீக்ஷாவுக்குள்.

"ஒரு தாயே தன் பெண்ணிடம் நோய் இருக்குன்னு சொல்வாங்களா...? விஜய் அத்தான் மேலே அம்மாவுக்கு என்ன கோபமோ... எனக்கு நோய் இருக்குன்னு.... அதுனால அவர் செத்துட்டு இருக்காருன்னு..." என்று அவளுக்குள் கேள்விகள் சுற்ற ஆரம்பிக்க,

"எனக்கு ஒண்ணுமே புரியலைடி.... என்னைச் சுத்தி நடக்கிறது என்னன்னு தெரியாம... அய்யோ... எல்லாம் இந்தக் கருமம் பிடிச்ச கோமாவினால்தானே வந்தது...!" என்று மீண்டும் அழ ஆரம்பித்தவள்... உடனே அழுகையை நிறுத்தவும் செய்தாள்.

"பாரு.... என் அம்மா கிட்டே நான் போகணும்டி.... ஏன் அப்படிச் சொன்னாங்கன்னு கேட்கணும்... நாலு வார்த்தை நறுக்குன்னு கேட்கணும்..." என்று தனக்குள் பேச ஆரம் பித்தவள்... வேகமாய் எழ... பார்வதி அவளைப் பிடித்து நிறுத்தினாள்.

"தீக்ஷா, எங்கே போறே...?"

"விடுடி... எப்படிப் பேசுனாங்க... உங்க அண்ணா கேட்டதுக்கு... என்னடி ரீசன் சொன்னாங்க... எனக்கு உடம்பு சரியில்லைன்னு... கூசாம சொல்றாங்கடி..... அப்படி என்னடி காரணம்... பொல்லாத காரணம்... ஏன் இப்படிப் பண்ணி னாங்க...?" என்றவள்,

"இப்போ எனக்கு எவ்ளோ ஆத்திரமா இருக்கு, தெரியுமா பார்வதி...? ஆனா எப்படிக் காட்டுறதுன்னு தெரி யலை... என் அம்மா ஏன்டி அப்படிச் சொன்னாங்க...?" என்று மீண்டும் அழ ஆரம்பிக்க... இப்போது தீக்ஷா அழுகையை அடக்க நினைத்தும் முடியாமல் போக...

அவளின் அழுகையை நிறுத்தும் வழி புரியாமல் பார்வதியும் சாரகேஷும் தடுமாற ஆரம்பித்தனர்.



'என்ன சொல்வது... எதைச் சொல்வது... விஜய்யுடன் இவளுக்குத் திருமணம் ஆகி விட்டது என்று சொல்லி விடலாம்தான்... ஆனால் 2 குடும்பங்களுமே மறைக்கும் ஒரு விசயத்தை... எப்படிச் சொல்வது... கண்டிப்பாக ஏதோ காரணம் இருக்கும்... அதனால்தான் மறைக்கிறார்கள்...' என்ற யோசனையில் அண்ணன் - தங்கை இருவரும் தடுமாற...

சாரகேஷின் அன்னை தேவகி... தீக்ஷாவின் அருகில் வந்தார். யுகேந்தர் பேசியதை முழுவதும் தேவகி கேட்கவில்லை. அவரும் தீக்ஷாவைப் போலக் கடைசி உரையாடலில்தான் வந்து கேட்டார்.

இப்போது தீக்ஷா அழுவதைப் பார்க்கப் பார்க்க... அவரும் ஒரு தாய்தானே... தாங்க முடியவில்லை. 'எந்தத் தாயாவது இவள் தாய் போல் இருப்பார்களா...?' என்று தீக்ஷாவை நினைத்துத் துக்கம் தான் வந்தது... தீக்ஷாவின் தாய் ஜெயந்தியை நினைத்துக் கோபம்தான் வந்தது.

தீக்ஷாவின் அருகே அமர்ந்தவர்... அவள் கண்களைத் துடைத்தபடி...

"எதுக்கு இப்போ அழுகிறாய்ம்மா...? உங்க வீட்டில் போய்க் கேட்கலாம்... ஒவ்வொருத்தர் கிட்டேயும் விரல் நீட்டிக் கேட்கலாம்," என்று தீக்ஷாவை ஆறுதலாய்த் தன் மீது சாய்க்க... தீக்ஷாவும் தேவகியின் தோள்களில் சாய்ந்தாள்.

சாரகேஷைத் தன் அருகே அழைத்த தேவகி....

"சாரகேஷ்.... தீக்ஷா இந்த வீட்டுக்குள் நுழையும்வரை கூட எனக்குப் பெரியதாய் எந்த எண்ணமும் இல்லை. ஏன் வருத்தம்தான் இருந்தது. இப்போ சொல்றேன்டா... என் மருமகளை ஏன் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நிறுத்தி வச்சாங்கன்னு.... தீக்ஷா வீட்ல போய்... அவ மாமியாராய் நான் தட்டிக் கேட்கணும்டா..." என்றபோது, தீக்ஷா இன்னும் கொஞ்சம் அதிகமாய் அழ ஆரம்பித்தாளே தவிர, பெரியதாக

அதிர்ச்சி இல்லை அவளுக்கு. ஆனால், அதிர்ந்தவர்கள்... தேவகியின் பிள்ளைகள்தான்.

சாரகேஷ், 'அம்ம்ம்மா...' என்று அலறியே விட்டான்.

பார்வதி நிலைமையோ அதை விட மோசமாய் இருந்தது. தேவகியிடம் நிதானமாய் எடுத்துச் சொல்லலாம் என்று நினைத்திருந்தாள் பார்வதி.

ஆனால், இப்படிப் பண்ணி விட்டார்களே தன் அம்மா என்று தன் அண்ணனைப் பார்க்க...

சாரகேஷ், தன் தங்கையோடு கண்களாலே பேச ஆரம்பித்தான். "ஏதாவது செய்..." என்பது போல்...

சாரகேஷால் தீக்ஷா முன் பேசவே முடியவில்லை... முடியாது என்று மறுத்தால்... காலையில் தனக்காகத் தன் வீட்டினரின் முன் வந்து பேசி விட்டு, இப்போது மறுக்கிறான் என்று கண்டிப்பாக நினைப்பாள்... 'கடவுளே...!' என்று நொந்தவன்,

"டேய் விஜய்... ஏன்டா, நீ அவ புருசன்னு சொல்ல மறுக்கிறாய்... அடுத்தவங்களையும் சொல்ல விட மாட் டேங்கிற.... ஏற்கெனவே எதுவும் புரியாமல் பெண் கேட்டு வந்து... நிலைமையைச் சிக்கலாக்கி விட்டு விட்டோம்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன்...

இப்போது தீக்ஷா விஜய்யின் மனைவி என்று சொல்லி இன்னும் ஏதாவது பெரிய பிரச்சனை ஆகி விட்டால்... என்ன செய்வது என்று தெரியாமல் மரம் போல் நிற்க...

பார்வதி கொஞ்சம் சுதாரித்து, "அம்மா... கொஞ்சம் இங்க வாங்க. உங்ககிட்ட தனியாப் பேசணும்..." என்று தன் அன்னையை அழைக்க...

தேவகியோ... "நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்... எனக்குத் தீக்ஷாவை மருமகளா எடுக்க மனப்பூர்வமா சம்மத மான்னு கேட்கத்தானே தனியாக் கூப்பிடுகிறாய்... எனக்கு



மனப்பூர்வமா சம்மதம்...!" என்று தீக்ஷாவை இன்னும் அழுத்தமாய்... உரிமையுடன் அணைத்துக் கொள்ள...

பார்வதியும், சாரகேஷும் தன் அன்னையின் செய லால், வார்த்தைகளால்... செயலற்று, வார்த்தையற்று... நின்றனர்.

தீக்ஷா பார்வதியையும் சாரகேஷையும் சந்தேகத்துடன் பார்த்தாள். காலையில் தனக்காக வந்து பேசிய சாரகேஷ்...

தன் அண்ணனைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வாதாடிய தோழி... இருவருமே இப்போது வார்த்தைகளின்றி மௌனமாக இருப்பதை உணர்ந்தவள்... தன்னைப் பற்றி ஏதோ தெரிந்திருக்கிறது... என்று விளங்க...

மெதுவாய்த் தன்னைத் தேவகியிடமிருந்து விடுவித் தவள்...

"பாரு, என்னைப் பற்றி உனக்கும் உன் அண்ணா வுக்கும் ஏதோ ஒரு உண்மை தெரிஞ்சுருக்கு.... அதுனால தான் உங்க ரெண்டு பேருக்கும் இவ்வளவு தயக்கம்... எதுவும் பேச மாட்டேங்கிறீங்க. என்ன விசயம், சொல்லுடி... என்கிட்ட மறைக்காதீங்க... ப்ளீஸ் சொல்லுங்க!" என்று கைகூப்பிக் கெஞ்ச...

சாரகேஷின் முகம் வியர்க்க ஆரம்பித்து விட்டது. ஆனாலும் எதுவும் சொல்லாமல் அமைதியாக இருக்க....

தீக்ஷா... பார்வதியைப் பார்க்க, அவளும் அமைதியாக இருக்க...

"பாரு, இப்போ சொல்லப் போறியா இல்லையாடி...?" என்று ஆவேசமாய்க் கத்த ஆரம்பித்தாள் தீக்ஷா.

அவளின் குரல் அந்த அறை முழுவதும் எதிரொலிக்க... பார்வதி திகைத்து.... அவளைச் சமாதானப்படுத்தும் விதமாய் அவளை அணைக்கப் போக... அவளிடமிருந்து தீக்ஷா இன்னும் ஆவேசத்தோடு திமிற ஆரம்பித்தாள்.

அவளின் அதிகப்படியான ஆவேசத்தைப் பார்த்த சாரகேஷ்.... மருத்துவனாய்ப் பயப்பட ஆரம்பிக்க...

"தீக்ஷா, ப்ளீஸ் கண்ட்ரோல்மா... நீ உணர்ச்சி வசப் படாத... சொல்றோம்!" என்று சாரகேஷ் சொன்னபோது,

தேவகியும்... சாரகேஷிடம், "என்னடா... என்ன நடக்குது?" என்று நடப்பது எதுவும் புரியாமல் கேட்க...

"அம்மா.... தீக்ஷாவை அவங்க வீட்டில் விட்டுட்டு வந்துடறேன்... அதுக்கப்புறம் நாம பேசலாம்."

"தீக்ஷா, கிளம்பு.... நீ கேட்க வேண்டிய கேள்வியை எல்லாம் விஜய்கிட்டயும் உங்க அம்மாகிட்டயும் கேளு..." என்றபடி.... தாங்கள் இழுத்து விட்ட பிரச்சனையை இன்னும் பெரிதாக்காமல் முடிக்கப் பார்க்க....

இப்போது தீக்ஷா... "சோ, உங்களுக்கு என்கிட்ட சொல்ல விருப்பம் இல்லை. அப்படித்தானே...?" என்றவள்,

"ப்ச்! விடுங்க.... என் அம்மாவே எனக்கு உண்மையா இல்லை... நீங்க எல்லாம் இருப்பீங்கன்னு எதிர்பார்க்க லாமா... சரி நான் வருகிறேன்..." என்று கிளம்பிச் செல்ல...

"இரு, தீக்ஷா... எங்கே போற?" என்று பார்வதி அவளின் கையைப் பிடித்து நிறுத்த.... அவள் கையைப் பட்டென உதறிய தீக்ஷா,

"எங்கேயோ போறேன்... இன்னும் பைத்தியமா மாறலடி, நான்... ஆனால் கூடிய சீக்கிரம் ஆகிடுவேன். என் கிட்ட ஏன் உண்மையைச் சொல்லாம மறைக்கிறீங்க... நான் அம்னீசியா வந்து எல்லாத்தையும் மறந்து நின்னதுக்குப் பதிலா ஒரேயடியாப் போய்ச் சேர்ந்திருக்கலாம்டி....." என்றவள் அதற்கு மேல் எதுவும் பேசாமல் வீட்டை விட்டு வெளியேற ஆரம்பிக்க...

தீக்ஷாவின் கோபம் உணர்ந்த சாரகேஷ் தனக்குள் முடிவெடுத்தபடி... அவளின் முன் வந்து நின்றான்.



அமைதியாகத் தீக்ஷாவைப் பார்த்து... "இனியும் உன் கிட்ட மறைக்கிறது சரியா இருக்காது தீக்ஷா. எங்க மூலமாகத் தான் உனக்குத் தெரியணும்னு விதி போல...." என்று சொல்ல...

இப்போது தீக்ஷா நின்றாள்...

"முதலில் உள்ளே போ... அதன் பிறகு சொல்கிறேன்," என்றவன்... இப்போது முற்றிலும் ஒரு மருத்துவனாகவும் மாறியிருக்க.... அவனின் தீவிரமான முக பாவனையைப் பார்த்த பார்வதி....

"அண்ணா... விஜய் சார்கிட்ட ஒரு வார்த்தை..." என்று முடிக்கவில்லை.

தீக்ஷா கத்த ஆரம்பித்து விட்டாள்.

"இந்த வார்த்தையை எங்க வீட்ல இருக்கிற ஒவ்வொ ருத்தரும் சொல்றாங்கனு கொதிச்சுப் போயிருக்கேன்... நீயும் ஏன்டி, அதையே சொல்ற... அவன்கிட்ட எதுக்குடி கேட்கணும்? ஒரு வாரத்திலேயே உன்னைக் கூட மாத்திட்டானாடி?" என்ற போது, பாதி வார்த்தைகளிலேயே அவளால் பேச முடிய வில்லை. தடுமாறி அமர்ந்து விட்டாள்.

சாரகேஷ்... பார்வதியிடம் சொல்லித் தீக்ஷாவை அறைக்குள் கூட்டிப் போகச் சொன்னவன்... அங்கு அவள் முன் அருகில் இருந்த நாற்காலியைப் போட்டு அமர்ந்தான். பார்வதி... தீக்ஷா அருகில் அமர்ந்திருந்தாள். தேவகியும் எதுவும் புரியாமல்... விதியே என்று நின்று கொண்டிருக்க...

சாரகேஷ் தீக்ஷாவிடம், "உனக்கு என்ன நடந்ததுன்னு தெரியணும். அவ்வளவுதானே. ஓ.கே... அப்போ நான் உன் கிட்ட கேட்கிற கேள்விக்கெல்லாம்... யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். சரியா?" என்று கேட்க,

தீக்ஷாவும் தன்னைச் சமன்படுத்த முயற்சி செய்ய ஆரம்பிக்க... தன் நிலையை நினைக்க நினைக்க இன்னும் அதிகமாய் அழுகைதான் வந்தது.

"அழுகையை நிறுத்து, தீக்ஷா!" என்று சாரகேஷ் கோப மாய்த் தீக்ஷாவைக் கடிய...

இப்போதும் அழுதபடியே, "சரி..." என்றவள்... பார்வ தியைப் பார்க்க... அவள் கண்களிலும் நீர் வர... இன்னும் தீக்ஷாவுக்கு அழுகை வர...

சாரகேஷ் பார்வதியைத் திரும்பிப் பார்த்து முறைத்தபடி...

"நீ எதுக்கு அழற...? அழறதா இருந்தா வெளில போ!" என்று பாருவையும் அதட்டியவன்...

"அழாதே, தீக்ஷா...! உனக்கு என்ன ஆச்சு இப்போ...? நீ அழுகையை நிறுத்துனாத்தான் நான் உன்னோடு பேச முடியும்...!" என்று இப்போது அமைதியாகச் சொல்ல...

அழுகையை நிறுத்தியவள் அவனோடு பேசத் தயா ரானாள்.

"உனக்கு ஹார்ட் ப்ராப்ளம் இல்லைதான்... ஆனா உனக்குச் சைக்கலாஜிக்கலா பிராப்ளம் இருக்கு, தீக்ஷா... சில சமயங்களில் உனக்கு இதயம் அதன் சராசரித் துடிப்பை விட அதிகம் துடித்து அதே நேரத்தில் சுத்தமாய் இறங்கி விடு கிறது... அதனாலதான் உன் மூக்கில் ரத்தம்... மயக்கம்..." என்றபோது... புரியாமல் பார்த்தாள்.

"புரியலையா? உனக்குச் சில சமயங்களில் இதயத் துடிப்பு உன் கண்ட்ரோலில் இல்லை, தீக்ஷா... அப்படியே விட்டால் சட்டென்று நின்றுகூட விடும். நீ போடும் மாத்திரை எல்லாமே... உன்னைக் கட்டுக்குள் கொண்டு வர... உன் இதய ஓட்டத்தைச் சமன்படுத்தும் மாத்திரைகள்..." என்ற போது,

"அப்போ எனக்கு இன்னும் பிரச்சனைதான் இருக்கா? என் அம்மா உண்மையைத்தான் சொன்னாங்களா?" என்று தீக்ஷா விழிகளில் நிராசையோடு கேட்க,

"ஹ்ம்ம்... இருக்குன்னுதான் சொல்லணும். ஆனா, உங்க அம்மா சொன்ன அளவு சீரியஸ்லாம் இல்லை.



ட்ரீட்மெண்ட்ல சரி ஆக்கிடலாம்..." என்றபடி... "உனக்கு அம்னீசியா வந்தப்ப நீ எப்படி அதில் இருந்து ரெக்கவர் ஆன...? சொல்லு."

"எனக்கு முதலில் சுனந்தா பாப்பாவை அடையாளம் தெரியலை. அவ எப்படிப் பிறந்தாள்... அன்னைக்கு நான் என்ன பண்ணினேன் என்று தெரியவில்லை. எனக்குச் சுத்தமாய் ஞாபகம் இல்லை. ஏன் இன்றுவரை கூட ஞாபகம் இல்லை. அண்ணிதான் சுனந்தா பிறந்த அன்று என்ன நடந்தது என்று சொன்னார்கள். அதன் பிறகு சில எல்லாம் எனக்குச் சுத்தமாய்த் தெரியாது.

"வீட்ல அண்ணா... அம்மா... அப்பா போட்டோஸ்லாம் காட்டிக் கேட்பாங்க. எனக்குத் தெரியாதுனு சொன்னா ஞாபகப்படுத்துவாங்க. எனக்குக் கோமா ஸ்டேஜ் போனது னால சில விசயங்கள் மறந்தும் போச்சு... ஆனால் இப்போ நான் ஓகேதான் சாரகேஷ்... உங்களை... பார்வதியைப் பார்த்து நானா அடையாளம் கண்டுபிடிச்சுட்டேன்!" என்று சொன்னவள்...

"ஏன்... அதனால ப்ராளமா?" என்று கேட்க,

"அதுதான் உன் ப்ராப்ளம்..... உன் நிச்சயதார்த்தம் அன்று... அன்னைக்கு என்ன நடந்தது, சொல்லு..." என்ற போது,

'மீண்டும் மீண்டும் ஏன்...' என்று கேட்க நினைத்த தீக்ஷா... சாரகேசின் முகம் பார்க்க...

"சாரி, தீக்ஷா.... உனக்குச் சொல்லப் பிடிக்கலைன்னா விட்டு விடு... சரி, அதை விடு... விஜய் பற்றி உன் அபிப்ராயம் என்ன... சொல்லு!" என்று சாரகேஷ் கேட்க...

தீக்ஷா சிரித்தபடி, "இதுக்கு முன்னே கேட்ட கேள்வியே பெட்டர், பாரு அண்ணா!" என்றவள்... அவன் கேள்விக்கும் பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

"அதுதான் ஏற்கெனவே சொல்லிட்டேனே... எனக்கும் அவருக்கும் ஒத்து வரலைன்னு...." என்றவள், "ஏன் மறுபடியும் மறுபடியும் விஜய் அத்தான் கிட்டயே வந்து நிற்கிறீங்க... எல்லோரும்...?" என்று கேட்டபோதே, இப்போது அவளுக்குள்ளேயே ஏதேதோ எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

தன்னையே சுற்றி வரும் விஜய்... தன் மேல் கோபம் எல்லாம் படாமல் அக்கறையாகக் கவனிக்கும் விஜய்... என்று எண்ணம் சுழல ஆரம்பிக்க... அதற்கு மேல் யோசிக்கப் பிடிக்காமல்.... தன் சிந்தனையை நிறுத்தியவள்... சாரகேசைப் பார்த்தபடியே இருக்க...

"சரி, உங்க விஜய் அத்தானுக்கு மேரேஜ் ஆகி விட்டது... அது தெரியுமா?" என்று அதிரடியாய் அவளிடம் பேச ஆரம்பித்தான் சாரகேஷ்...

இப்போது தீக்ஷா, "அன்னைக்குப் பார்வதி சொன்னா. இன்னைக்கு நீங்களா...!" என்று கேலியாகக் கேட்க,

"தீக்ஷா... நீ மூணு மாதம் கோமா ஸ்டேஜ்ல இருந்திருக்க... அதை ஞாபகம் வச்சுக்கோ. உனக்குத் தெரியாத பல விசயங்கள் நடந்திருக்கும்னு உனக்கு ஏன் புரியலை, தீக்ஷா?" என்ற சாரகேஷ் அவளுக்குப் புரிய வைக்கும் விதத்தில் சொல்லும்போதே...

தீக்ஷாவும் உடனே... "ஆனால் அப்படி நடந்திருந்தா இதுவரை எனக்குத் தெரியாமல் இருக்குமா, சொல்லுங்க!" என்று பதிலுக்குப் பேச...

பார்வதி ஒரு வேகத்தில் தன்னை அறியாமல் பேச ஆரம்பித்தாள்.

"அவர் மனைவிக்கு அவரையே தெரியாத நிலைக்குப் போய்ட்டாளாம். அதனால அவங்க பிறந்த வீட்ல கொண்டு போய் விட்டுட்டாராம்... அதுனால உனக்குத் தெரிஞ்சிருக்காது!" என்று நக்கலாய்ச் சொன்னாள்.



அதை நக்கல் என்று சொல்வதை விட... அந்த நக்கலில் கோபமும் வருத்தமும்.... ஆற்றாமையும்... கலந்திருந்தன.

தன் தோழி அவள் கணவனைக் கூடத் தெரியாமல்... அவள் வாழ்க்கையில் நடந்த எதுவும் தெரியாமல் இப்படி இருக்கிறாளே என்ற ஆதங்கத்தில்... வார்த்தைகளை விட,

சாரகேஷ் வேகமாய், "பார்வதி, என்ன இது... இப்படிப் பேசுற!" என்று அதட்ட...

பார்வதி, "ப்ச்! போண்ணா.... வேற எப்படிப் பேசச் சொல்ற...?" என்று இன்னும் அதிகப்படியான வருத்தத்தோடு சொன்னவள்... அதன்பின் வேறு எதுவும் பேசாமல் அமைதியாக இருக்க...

தீக்ஷாவோ பார்வதியிடம் தொடர்ந்தாள்.

"ஏன் மறந்துட்டா... அவளுக்கு என்ன பிரச்சனை... ஏன் என்கிட்ட எங்க வீட்ல சொல்லலை..." என்றபோதே, பார்வதியின் வார்த்தைகள் புரிய... அவள் சொன்ன நிலையில் இருப்பது தான்தானே.... தான் என்ன விஜய்யின் மனைவியா... என்று நிறுத்தியவளுக்கு, அதற்கு மேல் எதுவும் நினைக்கப் பிடிக்கவில்லை.

'விஜய்யின் மனைவி!' என்ற வார்த்தைகளே அவளுக்குப் பிடிக்கவில்லை... 'ச்சே! இது என்ன கற்பனை... அப்படில்லாம் நடந்திருக்காது...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவள்...

"ஏய், என்னடி சொல்ற...? விளையாடாத...!" என்று பல்லைக் கடிக்க... மனதுக்குள் கொஞ்சம் படபடப்பாய்த்தான் ஆனாள் தீக்ஷா... ஏனோ விஜய்யின் மனைவி என்று நினைக்கக் கூடப் பிடிக்கவில்லை அவளுக்கு.

"யார் விளையாடுறது...? இதைப் பார்த்தால் நம்புவியா...?" என்று யுகி கொண்டு வந்த பாஸ்போர்ட் நகலைப் பார்வதி காண்பிக்க... அதில் விஜய்யின் திருமண விபரப் பகுதியில் 'மேரீட்' என்று இருக்க... வேகமாய் அதில் பார்வையை ஓட்ட... அவன் மனைவி பெயர் தீக்ஷா விஜயேந்தர்

என்று இருக்க.... அதிர்ச்சியில் இன்னும் முகம் வெளிற ஆரம்பிக்க... தீக்ஷா அதிர்ச்சியாகப் பார்வதியைப் பார்க்க... சாரகேஷ் ஓரளவு அவளின் மனநிலையைக் கணித்தபடி,

யுகேந்தர் தங்களுக்குச் சொன்ன விசயங்களை எல்லாம்... தீக்ஷாவிடம் சொல்ல ஆரம்பித்தான்.

அவன் சொல்லச் சொல்ல... கை கால் மட்டுமின்றி உடல் எங்கும் நடுங்க ஆரம்பிக்க... கையில் இருந்த பாஸ்போர்ட் நகலில் உள்ள விஜயேந்தர் முகம் அவளைப் பார்த்துச் சிரித்தது.

அப்போதுதான் தீக்ஷாவும் உணர்ந்தாள்.

ராகேசுடன் திருமண ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாளும்... விஜய் - தீக்ஷா திருமண நாளும் ஒரே நாளாய் இருக்க...ஒன்றும் அவளுக்கு ஓடவில்லை.

அவளின் நிலையை உணர்ந்த சாரகேஷ்... "ரிலாக்ஸ், தீக்ஷா!" என்றபோதே...

"ம்ம்ம்..." என்று மட்டும் சொன்னாள் தீக்ஷா. ஆனால் அவர்கள் சொன்ன விசயத்தையும்... தான் பார்த்த விசயத் தையும் அவளால் ஜீரணிக்க முடியவில்லை... நம்ப முடிய வில்லை. இருந்தும்... தன்னைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்றாள் தீக்ஷா.

இப்போது அவள் மனம் படபடப்பாக எல்லாம் இல்லை.

'அவன் எப்படி என்னை... விஜய் அத்தானா... என்னையவா... எங்க ரெண்டு பேருக்கும் திருமணம் ஆகி விட்டதா?' என்று யோசிக்க ஆரம்பித்து இருந்தாள்.

யோசித்தவளின் கைகள் தானாக அவள் கழுத்தில் உள்ள செயினில் பட... விஜய்யின் செயின் என்று அப்போது நினைக்கத் தோன்றவில்லை. ஆனால் தனக்குத் திருமணம் ஆகிவிட்டது என்றால் தன் மாங்கல்யம் எங்கே என்ற யோசனையில் மட்டுமே மனம் சென்றது.



மீண்டும் விஜய்யின் பாஸ்போர்ட்டைப் பார்க்க...

தீக்ஷா விஜயேந்தர் என்று இருக்க... உச்சரித்துப் பார்க்கும்போது... தீக்ஷா விஜய் என்று வாயில் வர...

பார்வதியிடம் திரும்பி... "எப்படி, பாரு... ஆனால் எனக்கு ஒண்ணுமே தோணமாட்டேங்குதே... எதுவும் ஞாபகம் வர மாட்டேங்குதே!" என்று தலையைப் பிடித்தாள் தீக்ஷா.

அன்றைய தீக்ஷா... விஜய்யின் ஒரே பார்வையில் அவனுக்குள் கலந்தாள் காதலில். இன்றைய தீக்ஷாவோ... விஜய் உன் கணவன் என்று சொன்ன பின்னால்கூட தன் காதலை உணர முடியாத நிலையில் இருந்தாள்.

உண்மையைச் சொன்ன பின்னால் தீக்ஷாவுக்கு அதிர்ச்சியில் ஏதாவது ஆகிவிடுமோ என்று நினைத்திருந்த சாரகேஷ்... இப்போது தீக்ஷாவின் நிலையைப் பார்க்க... அவளுக்கு அதிர்ச்சி மட்டுமே இருக்க... தீக்ஷா உடல் நிலை யில் கவலைப்படும்படி இல்லாமல் இருக்க... சாரகேஷும் இயல்பானான்.

பார்வதியும் அதை உணர... கொஞ்சம் நிம்மதி ஆனாள்.

ஒரு புறம் தேவகி, பாதி புரிந்தும் பாதி புரியாமலும் நின்றார். தீக்ஷா நிலையை எண்ணிப் பரிதாபமாய் அவளைப் பார்த்துக் கொண்டிருக்க...

சாரகேஷ் சிரித்தபடி... "ஏதாவது மேடமுக்கு ஞாபகம் வருதா...?" என்று கேட்க.... எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தாள் தீக்ஷா.

"விருமாண்டியைப் பிடிக்காது... பிடிக்காதுனு சொல்லி... அவனுக்காகத்தான் இப்படி இருக்கியாடி!" என்று பார்வதி அவளைச் சீண்ட...

"என்ன சொல்ற...? அவருக்காக நான் என்ன ஆனேன்!" என்று வேகமாய்த் தீக்ஷா தோழியிடம் கேட்க,

"பார்றா... மரியாதை எல்லாம் வருது..." என்று பார்வதி ஓட்ட... தோழியை முறைத்தவள்...

"விளையாடாதே பார்வதி... நான் கல்யாணம் ஆன பொண்ணுன்னா... தாலி, மெட்டியெல்லாம் எங்கே?" என்று தன் மிகப் பெரிய சந்தேகத்தைக் கேட்க... ஏனோ அவளால் இன்னும் நம்பவே முடியவில்லை.

"ஆமாம். அதுல்லாம் பெரிய கர்ணனோட கவச குண்டலம் பாரு... கழட்டவே முடியாது... வந்துட்டா கேள்வி கேட்க..." என்று நக்கலாய்ச் சொல்லிச் சிரிக்க.... தீக்ஷா சிரிக்கவில்லை.

தீக்ஷாவின் முகம் பார்த்த பார்வதி... "சாரி தீக்ஷா..... நீ இருக்கிற நிலைமையில் விளையாட்டாப் பேசிட்டு இருக்கேன்..." என்று மன்னிப்புக் கேட்க,

"ப்ச்... விடு..." என்றவள் மீண்டும் அமைதியாக மாற...

அவளின் மௌனத்தில்... பார்வதி அவளிடம்....

"தீக்ஷா! உனக்கு விஜய்யைப் பிடிக்கலையா...? ஏன் இவ்வளவு அமைதியா இருக்க...?" என்று தயங்கியபடி கேள்வி கேட்க...

"பிடிக்கலைன்னு சொல்லி இனி என்ன ஆகப் போகுது, பாரு...? அதுதான் எல்லாம் முடிஞ்சு போச்சே...!" என்று விரக்தியாய்ச் சொன்னவள்...

"எனக்குப் புரியலை, பாரு... நான் எப்படி அவரைப் போய் மேரேஜ் பண்ணினேன்... நான் எப்படிச் சம்மதம் சொன்னேன்.... என்னைக் கட்டாயப்படுத்தித் திருமணம் செய்ய வச்சாங்களா...? என்னை விடு. ஆனா அவருக்கு என்னைச் சுத்தமாப் பிடிக்காது, பார்வதி... நாங்க ரெண்டு பேரும் வாழ்ந்த வாழ்க்கை எந்த அளவு....

"அதிர்ச்சியா இருக்கு... சந்தோசப்படுறதா துக்கப் படுறதா... தெரியலை... எனக்கும் விஜய் அத்தானுக்கும்



எப்படித் திருமணம் வரை வந்தது... இப்போ கூட என்னால சிந்திக்க முடியலை... ஆனா... இனி அதை என்னால மாத்த முடியாதுல்ல... பிடிக்கவில்லை என்றால்கூட வாழ்ந்துதானே ஆக வேண்டும்..." என்று நிதானமாகவும் அழுத்தமாகவும் பேசிய தீக்ஷாவை... குறும்புடன் சுற்றும் பெண்ணாய் நினைக்கத் தோன்றவில்லை.

வாழ்க்கை தரும் அனுபவம்... ஒவ்வொருவரின் குண நலனைக் கூட மாற்றுமா...? அவளின் அமைதியான... நிதானமான வார்த்தைகளில்... அவள் ஏதோ முடிவும் எடுத்து விட்டாள் என்று சொல்லாமல் சொன்னது.

"அப்படிச் சொல்லாத, தீக்ஷா... உனக்கு அவரைப் பிடிக்காமலா... இப்படி உன்னையே மறந்த நிலைக்கு வந்து நிற்கிறாய்... அவர் ஃப்ளைட் ஆக்ஸிடெண்ட்ல இறந்து விட்டார் என்ற அதிர்ச்சியில்தான் நீ இப்படி ஆகி விட்டாயாம்.... அதே போல் உன்னை அவருக்குப் பிடிக்காமலா உன்னையே நிழலாகத் தொடருகிறார்...!" என்றபோது... தீக்ஷாவிற்குக் கண் கலங்க....

"நாங்க சந்தோசமா வாழ்ந்திருப்போமா, பாரு...? எனக்கு விஜய் அத்தானைப் பார்க்கணும் போல இருக்கு... ஆனால் அது காதல்னு சொல்ல முடியலை.... இவர்தான் உன் கணவர்னு சொன்ன பின்னால் ஏதோ ஒரு உணர்வு... அவ்வளவுதான். அதுக்கு மேல் எதுவுமே தோண மாட்டேங்குது, பார்வதி...." என்று சொன்னபோது துக்கத்தில் அவள் குரலே அவளுக்குக் கேட்கவில்லை.

கண்களில் தேங்கிய கண்ணீர் அவளின் பார்வை வட்டத்தை மறைக்க...

"நாளை எங்க திருமண நாள்... பாவம்ல, அவரு..." என்றவள்... அதே வேகத்தில், "நானும்தானே..." என்ற போது, அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் உதிர ஆரம்பிக்க... அதற்கு மேல் தாங்க முடியாமல்... பார்வதியின் மடியில்

முகம் புதைத்து அழ ஆரம்பித்து விட்டாள் தீக்ஷா. "அவர் உயிரோட இருக்கும்போதே... ஏன்டி தாலியைக் கழட்டி னாங்க...? நான் சொன்னாப் புரிஞ்சுக்க மாட்டேனா...? அந்த அளவு பிடிவாதம் பிடிப்பவளா நான்...?" என்றவள்,

"இன்னைக்கு நான் வீட்டை விட்டு வெளியில் வந்தப்ப அவர் எவ்ளோ துடிச்சார்... அது எதுவுமே எனக்குப் புரியாத லூசாத்தானே நான் இருந்திருக்கேன்... என்னை ஒரு அறை விட்டு, 'நீ என் பொண்டாட்டிடி...!'னு சொல்லி என்னை நிறுத்தி இருக்கலாமே, பார்வதி... சரி! அவர்தான் சொல்லல. எங்க வீட்ல மத்தவங்க யாராவது சொல்லி இருக்கலாமே, பாரு..." என்று இன்னும் அதிகமாய் வேதனையோடு பேசி யவள்... மீண்டும் பார்வதியிடம் ஏதோ பேச வாயெடுத் தவள்... சாரகேஷைப் பார்த்துத் தயங்கி நிறுத்த...

அதை உணர்ந்த சாரகேஷ்... அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்தவனாய்த் தன் தாயுடன் எழுந்து போக... பார்வதியிடம் பொங்க ஆரம்பித்தாள் தீக்ஷா.

"ஃப்ளைட் எப்போ ஆக்சிடெண்ட் ஆச்சுன்னு யுகி சொன்னான்...?" என்று கேட்க,

"உனக்கு மேரேஜ் ஆகி மூன்று மாதம் கழித்து..." என்று பார்வதி சொல்ல,

"மூணு மாதம் நாங்க கணவன் மனைவியா வாழ்ந் தோமா...?" பார்வதியைப் பார்த்துத் தயக்கமாய் ஆரம்பித்தாள்.

"ஆனால்... எனக்கு எந்த உணர்வுமே இல்லையே, பாரு... கணவனோடு வாழ்ந்த உணர்வு கூடவா ஒரு பொண் ணுக்குத் தெரியாது. எனக்கு ஏன் எல்லாம் மறந்து போச்சு, பாரு...?" என்று எங்கோ பதித்த பார்வையில் சொன்ன வளுக்கு விஜய்யோடு அவள் குடும்ப வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நினைத்துப் பார்க்கவும் பிடிக்கவில்லை. விஜய் தன் கணவன் என்ற உணர்வை மீண்டும் தன் நினைவில் இருத்தியவள்...



"என்ன வாழ்க்கைடி... நான் கன்னிப் பொண்ணா இருக்கிறேனா இல்லையானு கூடத் தெரியாம ஒரு வாழ்க்கை. இப்போ நான் யாருன்னே தெரியாம அவர் கூட வாழச் சொல்றியா...? ரெண்டு பேருக்கும் நரக வாழ்க்கைதான்... என் மனசுல அவர் இருந்தாரா, இல்லையா...? இல்லை, கடமையேனு வாழ ஆரம்பித்தோமா...? நினைத்தாலே எனக்குத் தலையே வலிக்கிறது, பாரு....

"நான் எதுக்குப் பார்வதி உயிரோட இருக்கிறேன்...? அவருக்கும் எனக்கும் எந்த விசயமுமே ஒத்து வந்திருக்காதே, பார்வதி.... என்னை எப்படி மேரேஜ் பண்ணச் சம்மதிச்சார்...? அவரை யாருமே கட்டாயப்படுத்தி இருக்க முடியாது, பாரு... ரொம்ப அழுத்தம் பிடித்தவர்... அவர் தம்பிக்குக் கூட என்னை எடுக்கக் கூடாதுன்னு நினைத்தவர்... அவர் எப்படி..." என்று புலம்பியபடியே.... பாஸ்போர்ட்டில் இருந்த அவன் முகத் தையே பார்த்தபடி இருக்க...

அவளின் புலம்பலில் பார்வதிக்கும் கவலை வர....

"இல்லை தீக்ஷா.... நீ கவலைப்படுவது போலெல்லாம் இல்லை... நீங்க ரெண்டு பேரும் சந்தோசமாகத்தான் வாழ்ந் திருக்கீங்க தீக்ஷா... நீ... அவரை 'இந்தர்'னு கூப்பிடுவாய்னு நினைக்கிறேன். நீ மயக்கத்தில் இருந்தப்ப அவர் பெயரைச் சொன்னடி..." என்று பார்வதி, கவலையோடு தோழியிடம் சொல்ல,

"இந்தரா...?" என்று நெற்றி சுருக்கியவள்... "ஓ விஜயேந்தர்ல பாதி இந்தர்னு வருதுல்ல..." என்று தோழியிடம் சொன்னவள்... மனதுக்குள்... 'பேர்லாம் சொல்ல விட்டானா என்னை...' என்று மீண்டும் புகைப்படத்தை அருகில் வைத்துப் பார்க்க... எதுவுமே உணர முடியவில்லை அவளால்.

ராகேஷ் போட்டோவைப் பார்த்து எதுவும் உணராதது போல்... இப்போது விஜயேந்தர் புகைப்படமும் அவளுக்குள் எந்த உணர்வையுமே ஏற்படுத்தவில்லை.

ராகேஷாவது, இவன்தான் உன் கணவனாக வரப் போகிறான் என்று சொல்லப்பட்டது... ஆனால் விஜயேந்தர் விசயத்தில் இவன்தான் உன் கணவன் என்று சொல்லப்பட்ட பின்னால் கூட, அவளுக்குள் எந்தக் காதல் உணர்வும் வர வில்லை.

மாறாக... இவன்தான் தன் கணவன் என்று.... தனக்குள் அவனைப் பதிய வைக்க ஆரம்பித்தாள்.

தீக்ஷா விஜய்யின் புகைப்படத்தையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்த பார்வதி, அவளிடம், "என்னடி... முத்திரையை வைக்கலயா...? நான் இருக்கிறேன் என்று வெட்கப்படுகிறாயா...?" என்றபோது... ஒரு வேகத்தில், தீக்ஷாவும் அந்தப் புகைப் படத்தைத் தன் அருகில் கொண்டு வந்து... விஜய்யின் நிழலில் தன் இதழைப் பதிய வைக்கப் போனவளுக்கு.... ஏனோ அது முடியவில்லை.

தன் கணவன் என்ற உரிமை உணர்வு... தைரியம் கொடுத்தாலும், அவன் புகைப்படத்தில் அச்சாரம் வைக்க அவளுக்குத் தயக்கம்தான் வந்தது. ஏனென்றால் தீக்ஷா வுக்குள் விஜயேந்தர் மேல்... காதல் என்ற உணர்வு இந்த நிமிடம்வரை வரவில்லை. அது கண்டிப்பாகத் தனக்குள் ஒரு நாள் வரும்... விஜய்யிடம் மட்டுமே வரும்... என்று மட்டும் தீக்ஷா உறுதியாக நம்பினாள்.

பார்வதிக்கு அவள் உணர்வுகள் புரிய, தோழியின் தோள்களை ஆறுதலாக அழுத்தியவளுக்கு... விஜய்யை நினைத்து ஏனோ பரிதாபம்தான் வந்தது.

தீக்ஷாவின் காதலை அனுபவித்த அவனின் இன்றைய நிலை... நினைக்கவே கஷ்டமாக இருந்தது, பார்வதிக்கு.

கணவன் என்று சொல்லியும் தீக்ஷாவுக்குத் தன் மேல் காதல் வரவில்லை என்று அவனும் தெரிந்து கொள்வான்... அது அவனுக்கு மிகப் பெரிய வலிதான்.



விஜய்யின் இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டவள்... தன் தோழியைப் பார்க்க.... அவள் கொஞ்சம் தெளிவாக இருக்க...

விஜய்யோடான வாழ்க்கைக்கு... தீக்ஷா ஓரளவு தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டாள் என்பது பார்வதிக்கும் புரிய... சந்தோசமாகப் பார்த்தாள் தன் தோழியை...!

தீக்ஷாவும் தீர்மானத்திற்கு வந்திருந்தாள்தான்.

'தன் கணவனை விட்டு இனி தள்ளி இருக்கப் போவ தில்லை. இனி ஒரு நிமிடமும் அவனை விட்டு விலகக் கூடாது!' என்று தீர்மானித்து, அவனிடமே... அவன் வீட்டிற்கே செல்ல முடிவெடுத்தாள்.

ஆனால் விஜயேந்தர் தன்னை ஏற்பானா... என்ற கோணத்தில் அவள் நினைத்துப் பார்க்காமலேயே... விஜய்யைக் காணச் சென்றாள் தீக்ஷா.

## 29

தீக்ஷா காரில் வரும்போதே, அவளுக்கு விஜய்யைப் பார்க்கப் போகிறோம் என்ற பதட்டமும்... பயமும்தான் வந்ததே தவிர.... அவளுக்கு அவன் மேல் காதல் என்ற உணர்வெல்லாம் தோன்றவில்லை. அவனின் கோபம் உணர்ந்தவள், இன்று தான் பண்ணிய காரியத் திற்கெல்லாம் கோபப்படுவானோ என்பதில்தான் அவள் சிந்தனை சுற்றி வந்தது.

இன்னும் அவளுக்கு விஜய்யுடன் தன் திருமணம் முடிந்து விட்டது என்பது நம்ப முடியாமல்தான் இருந்தது. நம்ப முடியவில்லை என்றாலும்... அவனின் இன்றைய தோற்றம்... அவனின் அக்கறை... ஆம்! அக்கறை என்றுதான் அவளால் சொல்ல முடியும். இந்த ஆறு மாதத்தில் அவனின் பார்வையிலோ இல்லை நடவடிக்கையிலோ அக்கறையை

மீறிய எதுவும் இதுவரை அவள் உணர்ந்ததில்லை. உண்மை யிலேயே தன்னோடு கணவனாக மனம் ஒத்து வாழ்ந் திருந்தால் அவன் இப்படி இருந்திருப்பானா... என்று மனதில் நெருடல் தோன்றிய போதும்... அவனை விட்டுப் பிரியக் கூடாது என்ற முடிவில் உறுதியாய் இருந்தாள் தீக்ஷா.

எதைப் பற்றியும் சிந்திக்காமல், பார்வதி சொன்ன தகவலை வைத்து... முடிவெடுத்தது சரியா என்று யோசித்த போது... அவனின் பாஸ்போர்ட்டில் மனைவியாகத் தன் பெயர் இருந்ததை வைத்து... அவன் தன் கணவன் என்று நம்பினாலும்.... தன் கழுத்தில் தமிழ்ப்பெண்ணிற்கு உரிய தாலி இல்லாமல் இருப்பதும் அவளின் உறுதியை லேசாய் அசைக்க... தன்னை அறியாமல் தன் கழுத்தில் கை வைத்துப் பார்த்தவளின் மனதில்... அவள் அணிந்திருந்த சங்கிலி முதன் முதலாக உறுத்தியது.

அதில் இருந்த VD என்று பெயர் பொறித்த டாலர், அவளுக்கு இன்று அதன் காரணத்தைச் சொல்ல... அதையே பார்த்தவளுக்கு... அது விஜய்யின் செயின் என்பது புரிந்தது. அவன் கழுத்தில் அவன் அணிந்திருந்த செயின் இப்போது ஞாபகம் வர... கண் கலங்கி விட்டது தீக்ஷாவுக்கு. அவன் கழுத்தில் ஒட்டினாற்போல் இருந்த செயின், இவள் கழுத்துக்குச் சற்றுப் பெரியதாக இருந்தது.

கண் கலங்கியவளாய்... அதையே பிடித்தபடி வந்த வள்... சாரகேஷிடமோ, பார்வதியிடமோ எதுவும் பேசவில்லை. விஜய்யின் ஞாபகங்களிலே வந்து கொண்டிருந்த அவளுக்கு, VD Promoters ஞாபகமும் அவளைத் தாக்க... தனக் காகவே ஆரம்பிக்கப்பட்டதா அந்த அலுவலகம் என்று உள்ளம் துடித்தாள் தீக்ஷா. விஜய்யை எப்போது பார்ப்போம்... என்று மனம் முழுவதும் ஏங்க ஆரம்பித்தவள், அவனுக்கும் தனக்குமான மண வாழ்க்கை நினைவுகளை மீண்டும் எண்ண ஆரம்பித்தவளுக்கு... அவர்கள் இருவரின் கடந்த கால மோதல்களே ஞாபகம் வர... கடந்த காலங்களில்



தங்கள் இருவருக்குமான கசப்பான நினைவுகளையும் மற்றும் தாங்கள் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்ததாய்ச் சொல்லப்படும் தன் மணவாழ்க்கையின் நினைவுகளையும் விட்டு விட்டு... தற்போதைய விஜய்யை மட்டும் நினைக்க ஆரம்பித்தாள்.

அவனின் ஒவ்வொரு செயலும் தனக்காக இருந்தது இப்போது புரிய... அன்று அவன் பார்வதியைப் பார்க்கிறான் என்று நினைத்துப் பொறாமைப்பட்டதை நினைத்துப் பார்க்க... அவளுக்கு அவள் இருந்த நிலைமையையும் மீறிப் புன்னகை வந்தது.

'என்னைத்தான் அத்தான் பார்த்தீங்களா...? நீங்க என்னைப் பார்க்கிறது கூடத் தெரியாம சுத்திக்கிட்டு இருந்திருக்கேனே... நான் லூசு தான்...' என்று மனதோடு நினைத்தவள்,

"இல்லை இல்லை... நான் லூசு இல்லை... அவர் எனக்குத் தெரியாமல் பார்த்தால் எனக்கு எப்படித் தெரியும்... விஜய் அத்தானுக்கு என்னை அவ்வளவு பிடிக்குமா... ஆனால், எப்படி இது நடந்தது... எனக்கு அவரைப் பிடித்த..." என்ற ஆச்சரியமும், கேள்வியும்தான் அவளுக்கு மிஞ்சியது.

தீக்ஷாவின் மௌனத்தை உணர்ந்த பார்வதி... அவளைப் பார்வையாலே சமாதானப்படுத்த, தீக்ஷா அவளிடம் வெற்றுப் புன்னகையினை மட்டும் பதிலாகத் தந்தாள். சாரகேஷும் மௌனமாகக் காரை ஓட்டி வர... அங்கு மௌனம் மட்டுமே ஆட்சி செய்ய... விஜய் வீட்டை அடைந்தனர் மூவரும்.

கார் விஜய்யின் வீட்டு வாசலில் நிற்க... தீக்ஷா இறங்கி விஜய் வீட்டைப் பார்க்க... இன்று அவளுக்குள் பலவித உணர்ச்சிகள் ஓடின. கிட்டத்தட்ட 1 வருடத்துக்குப் பிறகு இங்கு வருகிறோம் என்று தோன்ற... 'ச்சேய்... இடையிலேயே மேரேஜ் ஆகி வந்துவிட்டோம். ஞாபகம் தான் இல்லையே...!'

என்று தன்னைத்தானே நொந்தபடி உள்ளே வர... அங்கு தீக்ஷா வீட்டினரும் இருந்தனர். தீக்ஷாவைப் பார்த்த ஜெயந்தி... தன் மகளைக் கண்டு வேகமாய் வர... தீக்ஷா ஓடிப் போய்த் தன் அன்னையைக் கட்டிக் கொண்டாள். அங்கு யாருமே தீக்ஷாவின் வரவை எதிர்பார்க்கவில்லை போல்... சோகம் மட்டுமே நிறைந்திருந்த அனைவரின் முகத்திலும் இப்போது... தீக்ஷா மீண்டும்... அதுவும் விஜய் வீட்டுக்கே வந்த சோகம் விரவியிருந்தது.

சாரகேஷும், பார்வதியும் வாசலிலே நிற்க... சுரேந்தர், பார்வதியின் அருகில் வந்தான்.

பார்வதியும் அங்கு யாருக்கும் எதையும் தெரிவிக்காமல் தீக்ஷாவை வீட்டிற்குக் கூட்டி வந்ததால்... உண்மையிலேயே யாருக்கும் எதுவும் புரியவில்லை. ஏனென்றால், யுகேந்தர் வந்த விஷயம் யாருக்குமே அங்கு தெரியாது. யுகேந்தர் இன்னும் வீட்டிற்கே வரவில்லை என்பதால், அங்கு சந்தோஷத்திலும் குழப்பமே நிலவியது.

"என்ன நடந்தது?" என்று சாரகேஷிடம் சுரேந்தர் கேட்க... பார்வதியின் அருகில் வந்து நின்றாலும்... பார்வதியிடம் பேசாமல் சாரகேஷிடம் கேட்டான் அவன்.

நடந்த விசயங்களை சாரகேஷ் சுருக்கமாகச் சொல்ல... சுரேந்தருக்கு யுகி வந்த விஷயமே அப்போதுதான் தெரிய வர... 'இவனுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை...!' என்று மனதுக்குள் நினைத்தபடி...

"உள்ளே வாங்க சாரகேஷ்," என்று அழைக்க... தன் தங்கையோடு உள்ளே நுழைந்தான். பார்வதிக்கு சுரேந்தர், தன் மீது கோபமாய் இருக்கிறான் என்று புரிந்தாலும்... அவனைச் சமாதானப்படுத்தும் நேரம் இதுவல்ல என்பதை உணர்ந்து.... அமைதியாக இருந்தாள்.

உள்ளே தீக்ஷாவோ... தன் அன்னையிடம் குமுறிக் கொண்டிருந்தாள். வேறு யாரிடமும் அவள் பேசவில்லை.



அதுமட்டும் இல்லை... தனக்கு நோய் இருப்பதாகத் தன் அன்னை சொல்லியதை எல்லாம் விட்டு விட்டாள் தீக்ஷா. இப்போது அவளின் மன வேதனை எல்லாம், தான் மறந்த தன் வாழ்க்கை பற்றியே இருக்க,

"அம்மா, ஏன்மா என் கிட்டே மறைச்சீங்க...? என் கிட்டே உண்மையைச் சொல்லி இருக்கலாம்ல... இப்போ நம்ம குடும்பமே தலைகுனியற அளவுக்கு நான் வீட்டை விட்டு வெளியேறி... தப்புப் பண்ணிட்டேன்மா... அத்தான் என்னைச் சும்மாவே திட்டுவார்ம்மா... இப்போ இன்னும் திட்டுவார்ம்மா...!" என்று அழுதவளின் அருகில் வந்த ராதா,

"என் அண்ணாவோட உயிரே உன் கிட்டேதான் இருக்கு தீக்ஷா... உன்னைப் போய்த் திட்டுவாரா...?" என்று சொல்லும் போதே ராதா அழுதுவிட... கலைச்செல்வியும் அழ ஆரம்பித்து விட... தீக்ஷா தன்னைச் சமாளித்தபடி சுற்றிலும் பார்வையை ஓட்டினாள்.

அவள் தேடி வந்த அவளின் விஜய் அத்தான் மட்டும் அங்கு இல்லை. தன் அண்ணியிடம் மெதுவாய்,

"அண்ணி... விஜய் அத்தான் எங்கே...? நான் அவரைப் பார்க்க வேண்டும்.... அவர் கிட்டே பேசணும்..."

என்றபோதே அவளுக்குக் கண்ணீர் வழிய... அத்தனை பேருக்கும் அவளின் அழுகையில் மனம் சந்தோஷமாகியது. இனி விஜய் என்ன பிடிவாதம் பிடித்தாலும் தீக்ஷா பார்த்துக் கொள்வாள் என்று அனைவரின் மனமும் நிம்மதி அடைந்தது.

"அண்ணா மேலே இருக்காரு தீக்ஷா... போய்ப் பாரு. வீட்டுக்கு வந்து ரூம் கதவைப் பூட்டியவர்... இன்னும் திறக்கலை..." என்று ராதா சொல்ல...

சட்டென்று எழுந்தவள்... விஜய்யின் அறை நோக்கி வேகமாய்ப் படி ஏற... உள்ளம் மீண்டும் படபடப்பாகியது... விஜய் அறை அவளுக்குத் தெரியும். ஆனால், உள்ளே

போனதில்லை. அவனின் மனைவியாக அந்த அறையில் வாழ்ந்ததும் நினைவில் இல்லை. தன் நிலையை மீண்டும் மீண்டும் நொந்தபடி... விஜய்யின் அறைக் கதவை மெலிதாகத் தட்ட... அவன் திறக்கவே இல்லை.

இப்போது கொஞ்சம் வேகமாய்த் தட்டப் போனவள், தயங்கினாள். ஏனென்றால், விஜய்க்கு அவள் இப்படித் தட்டுவதெல்லாம் பிடிக்காது. அவளின் ஹீல் சத்தத்திற்கே ஒருமுறை திட்டு வாங்கியவள் அவள். அதனால் அவனுக்குக் கோபம் வரக்கூடாது என்பதற்காக... மீண்டும் மெதுவாய்த் தட்ட.. அவன் இன்னும் திறக்காமல் இருக்க... அவனுக்காகத் தயங்கியவள்... இப்போது தன் இயல்பின்படி வேகமாய்த் தட்ட... இப்போது விஜய் கதவைத் திறந்தான்.

அவன் திறந்த போதே...அவன், அவள் வருகையை எதிர்பார்த்து இருந்தது போல் ஒரு பார்வையை வைக்க... அவன் பார்த்த பார்வையில்... தீக்ஷாவுக்கு அதுவரை இருந்த தைரியம் எல்லாம் எங்கோ போய்... வாயில் வார்த்தைகள் கூட வரவில்லை. தன் கணவனாக அவனை உணர்ந்தாலும், அவனோடு உரிமையோடு ஒன்ற முடியவில்லை. எதுவோ அவளைத் தடுக்க... அவனையே மலங்க மலங்கப் பார்த்தபடி இருக்க...

அவள் கணவனோ அதற்கு மேல்... அவன் என்ன நினைக்கிறான் என்றே தீக்ஷாவால் அறிந்து கொள்ள முடியவில்லை.

விஜய், அவளைப் பார்த்தபடியே தன் அறையை விட்டு முற்றிலும் வெளியே வர... தீக்ஷாவோ அவன் வெளியே வந்ததை உணர்ந்து உள்ளே போக எத்தனிக்க... விஜய் சட்டென்று தன் அறைக் கதவை வெளியில் இருந்து பூட்டினான்.

அவனின் செய்கையில் தீக்ஷா அதிர்ந்து அவனை நோக்க...



அவன் எதுவுமே பேசாமல் அவளைப் பார்த்தபடி இருந்தான். அவன் முகம் இறுகியிருக்க... 'தான் அவனை அவமானப்படுத்தி விட்டோம் என்று கோபமாய்...' என்ற எண்ணம்தான் தீக்ஷாவுக்குத் தோன்றியது.

'தனக்குத்தான் எந்த நினைவுமில்லை... அவனுக்கு எல்லாமே தெரியும்தானே... என்னைப் பார்த்து எந்த உணர்ச்சியும் இல்லாமல், மரம் போல நிற்கிறான்... அதுவும் அறைக் கதவை வேறு பூட்டுகிறான்... இவன் என்ன நினைக்கிறான்... வீட்டை விட்டுப் போனது தவறுதான்... அதற்கு நாலு திட்டுத் திட்டி நாலு அறைவிட்டால் கூடப் பரவாயில்லை. ஆனால், இப்படி ஒன்றுமே பேசாமல் நிற்கிறானே...' என்று அவள் நினைக்கும் போதே கண்கள் அருவியைப் பொழிய... விஜய் அவளைப் பார்த்து,

"எதுக்கு அழற...?" என்று கேட்டதுதான் தாமதம்... அவனிடம் இருந்து வந்த உரிமையான அதட்டலில், தீக்ஷா தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் இன்னும் குலுங்கி அழ...

அதற்கு மேல் விஜய் எதுவுமே பேசவில்லை. அவளைச் சமாதானப்படுத்தவும் முயற்சிக்காமல் நிற்க....

தீக்ஷாதான், "விஜய் அத்தான்...!" என்று அழைத்தாள்.

அவன் கண்களை மூடி இருந்தான் இப்போது. அவனிடம் இமையோரம் நீர் கசிந்திருக்க... அவனைப் பார்த்தபடியே அவன் புறம் வந்தவளுக்கு... அவன் கண்ணீரே அவன் காதலைச் சொல்ல... அவள் நினைவில் மறந்திருந்த அவள் காதல் அவளுக்குத் தோன்றவில்லை. இப்போது அவனைக் காதலிக்க ஆரம்பித்து இருந்தாள். அவனையே பார்த்தபடி சில நிமிடங்கள் இருந்தவள்....

அவன் கண்களில் இருந்த கண்ணீரைத் துடைக்க மனம் துடித்தாலும்.... அவளால் அதைச் செய்ய முடியவில்லை. அவளின் அருகாமை உணர்ந்த விஜய், கண்களை மூடியபடியே பேச ஆரம்பித்தான்.

"என்னைப் பற்றி யார் சொன்னது உனக்கு...?" என்று கேட்க,

தீக்ஷா, அவனிடம்...

"எனக்கு ஞாபகம் வரக் கூடாதா அத்தான்...? அதனால்தான் வந்தேன்," என்று சொல்லிப் பார்க்க,

உதடுகளை வளைத்துச் சிரித்தான் அவன். அப்போதும் அவன் கண்களைத் திறக்கவில்லை.

"அப்படியா... என் ஞாபகம் உனக்கு வந்ததா...?" என்று வேதனையாய்ச் சிரித்தவன்,

"அது உனக்கு வரவில்லை என்று எனக்குத் தெரியும்... சொல்லு, நீ யார் சொல்லி வந்தே...?" என்றவனின் வார்த்தைகளில் இருந்த வலியை உணர்ந்த தீக்ஷாவுக்குள்ளும் அவன் வலி மனமெங்கும் விரவ... வாயிலிருந்து, "அத்தான்..." என்று மட்டுமே வார்த்தைகள் வந்தன. வார்த்தைகள்தான் அவளுக்கு வற்றிப் போயிருந்தன. கண்களிலோ, கண்ணீர், வற்றாத ஜீவ நதி போல் நிற்காமல் வந்து கொண்டே இருக்க...

தன்னை அவன் மனைவியாக உணரச் செய்வது எப்படி என்றும் அவளுக்குத் தெரியவில்லை. அவனைக் கணவனாக உணர்ந்து தான் என்ன செய்வதென்றும் புரியவில்லை... என்ன செய்வது... எதைச் செய்வது... என்று தெரியாமல் தன் கணவனைப் பார்த்தவள்...

'இப்படி வெளியே வைத்துப் பேசிக் கொல்கிறானே...!' என்று தோன்ற, "அத்தான்... ப்ளீஸ், உள்ளே போகலாம்..." என்று கெஞ்ச,

இப்போது கண்களைத் திறந்த விஜய்... அவளிடம் எதுவும் பேசாமல்... உள்ளே போவதற்குப் பதில், கீழே இறங்க... தீக்ஷா, அவன் கைகளைப் பிடித்துக் கெஞ்ச ஆரம்பித்தாள்.



"அத்தான்... நான் செஞ்சது எல்லாம் தப்புதான்... அதற்கு எவ்ளோ தண்டனை வேண்டுமென்றாலும் கொடுங்க... ஆனா, பேசாம ஏன் இப்படிக் கொல்றீங்க...? எனக்கு முடியலை. நாம வாழ்ந்த வாழ்க்கை எதுவும் எனக்குச் சுத்தமா ஞாபகம் வரவில்லைதான்... ஒத்துக் கொள்கிறேன்... ஆனால், எல்லாவற்றையும் எனக்குச் சொல் லுங்க, அத்தான்... நாம புதிதாய் வாழ்க்கையை ஆரம்பிப் போம்," என்றவளிடம்,

அவள் புறம் திரும்பாமல்... அவள் பற்றி யிருந்த கைகளை விலக்கியவன்,

"புதிய வாழ்க்கையா...? எனக்கு என் பழைய வாழ்க்கைதான் வேண்டும்... என் மனைவியா உனக்கே ஞாபகம் வரும்... வரும்போது என் கிட்டே வா... இப்போ இந்த அளவு தெரிஞ்சுருக்குல்ல... அது போதும் எனக்கு. நீ உங்க வீட்டுக்குப் போ..." என்றபடி அவளைப் பார்க்காமலே சொல்லியபடி இறங்க...

தீக்ஷா அதிர்ச்சியில் உறைந்தாள். தன்னை அவன் உதாசீனப்படுத்துகிறானா, இல்லை... தன் உடல் நிலையில் உள்ள அக்கறையிலா...? மனம் வலிக்க ஆரம்பித்து இருக்க... 'எது நடந்தாலும் சரி... இனி இந்த வீட்டை விட்டு.... அவனை விட்டு, ஒரு நொடி கூடப் பிரிந்து இருக்கக் கூடாது...' என்ற தீர்மானத்தோடு அவளும் அவன் பின்னே கீழே இறங்கினாள்.

இப்போது அவளின் தயக்கமெல்லாம் போய்... அவளிடம் தன் வாழ்க்கையின் மீதான பயத்தில்... அவளுக்குள் ஒரு தீவிரம் வர... அது அவளுக்குள் ஒரு பிடிவாதத்தைக் கொடுக்க... தீக்ஷா என்ற குறும்புத் தனம் உள்ள பெண்... தனக்கான வாழ்க்கைப் போராட்டத்தில்... அந்தப் போர்க்களத்தை வெல்லும் பெண்ணாக மாற... அவள் மனம் எல்லாவற்றையும் எல்லாப்புறமும் யோசிக்க ஆரம்பித்தது. விஜய்யும் தன்னை விரும்பி இருக்கிறான்...

விரும்புகிறான் என்பதை அவன் கண்ணீரே சொல்ல... அவன் என்ன சொன்னாலும்... என்ன செய்தாலும்... அவனை விட்டுப் பிரியக் கூடாது என்று முடிவுடன் அவனைத் தொடர்ந்தாள்.

இப்போது அவளுக்குக் கண்ணீர் எல்லாம் வரவில்லை. அன்றும் விஜய்யோடு போராடினாள், விளையாட்டுத் தனமாக... இன்றும் விஜய்யோடு போராடத் தொடங்கினாள்... அவர்களின் வாழ்க்கைக்காக.

கீழே இறங்கிய விஜய்... சாரகேஷிடம் திரும்பி, "நன்றி சாரகேஷ்..." அதற்கு மேல் அவனிடம் வேறு எதுவும் பேசத் தோன்றவில்லை. அமைதியாக அமர்ந்தவன்... தன்னைச் சுற்றி இருந்தவர்களைப் பெருமையாகப் பார்த்தவன், தீக்ஷாவின் தாயிடம்,

"சொன்னேன்ல அத்தை... உங்க பொண்ணு இன்னைக்கே வருவாள்னு... என்ன... உங்க வீட்டுக்கு வருவான்னு நினைத்தேன்... ஆனால், என்னைத் தேடியே வந்து விட்டாள். உங்க பொண்ணுக்கு எல்லாத்திலும் அவசரம் தான்," என்றவன்,

அங்கு யாருக்கும் என்ன பேசுவது என்றே தெரிய வில்லை. தீபன்தான் விஜய்யிடம் ஆரம்பித்தான்.

"விஜய்... இத்தனை நாள் தீக்ஷாவை எங்க பொறுப்பில் விட்டிருந்தீங்க... தீக்ஷாவுக்கும் விஷயம் தெரிந்து விட்டது. இனி அவ இங்கே... உங்க கூட இருப்பதுதான் நல்லது," என்று சொல்லி முடிக்கவில்லை... விஜய் உடனடியாக மறுத்தபடி,

"இல்லை தீபன்... அவ உங்க கூடவே இருக்கட்டும்... ரெண்டு பேரும் ஒண்ணா இருந்தா இருவருக்குமே மன வலிதான் மிச்சம்," என்று சொல்ல...

அனைவருமே மின்சாரம் தாக்கியதைப் போல் உணர... தீக்ஷாவோ... அமைதியாக நின்றாள். யாரிடமும் எதுவும் பேச வில்லை.



பார்வதியும் சாரகேஷும் இதை எதிர்பார்க்கவே இல்லை. அதிலும் பார்வதிக்கு விஜய்யின் இந்த முடிவு அதிர்ச்சியாகவே இருந்தது.

தீக்ஷாவுக்கு உண்மை தெரிந்து வந்ததில் விஜய் மிகவும் சந்தோசப்படுவான்... அவளோடு வாழ ஆரம்பிப் பான்... அவன் மனைவியை அவனிடம் கொண்டு வந்து ஒப்படைத்ததில் மிகவும் ஆனந்தப்படுவான் என்று நினைக்க... அவனோ எந்தவித உணர்ச்சியுமில்லாமல்... சரி உண்மை தெரிஞ்சுருச்சா... உன் வீட்டில் போய் இருன்னு சாதாரணமாச் சொல்றான். இதுதான் இவன் தன் தோழியின் மேல் கொண்ட காதலின் லட்சணமா... இல்லை, வேறு ஏதாவது காரணம் இருக்குமோ என்று நினைத்தவள்... தீக்ஷாவைப் பார்க்க, அவள் அமைதியாகச் சிலையாக நிற்க... அங்கு அவளின் குடும்பத்தினரும் விஜய்யின் குடும் பத்தினரும் பேசவே இல்லை. ஜெயந்தி மட்டும் அழுது கொண்டிருக்க... பார்வதிக்கு இப்போது உண்மையிலேயே ஆத்திரமும், கோபமும் வர... சுரேந்தரைப் பார்க்க... அவனும் அமைதியாக இருக்க... விஜய்யிடம் ஏதும் கோபப்படாமல் சுரேந்தரை நோக்கிப் பேச ஆரம்பித்தாள்.

"என்ன சுரேந்தர்... உங்க அண்ணா என்ன செய் தாலும் வாயை மூடிட்டுதான் இருப்பீங்களா...? தீக்ஷா, தன் நினைவுகளை மறந்து... தன் வாழ்க்கையைத் தொலைத்து... நினைவு வராத போதும்... இதுதான் தன் வாழ்க்கை என்று யாரிடமும் ஒரு வார்த்தை கூடக் கேட்காமல் உங்க அண்ணாவைத் தேடி வந்தால், அவளுக்கு இதுதான் பதிலா...? சொல்லுங்க..." என்று தன் தோழிக்காக ஆவேசப் பட்டவளைப் பார்த்த சுரேந்தர்,

"பார்வதி.... உன் ஃப்ரெண்ட் வாழ்க்கையில உனக்கு இருக்கிற அக்கறையைவிட அதிகமான அக்கறை எங்க எல்லோருக்கும் இங்கே இருக்குது... அதை ஞாபகம் வெச்சுப் பேசு," என்ற போது, அவன் குரலிலும் கடுமை இருக்க,

"ஆமா, பெரிய அக்கறை.... பார்த்தாலே தெரிகிறதே... என் ஃப்ரெண்டுக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்கிறவரை நானும் ஓய மாட்டேன்..." என்றவளைப் பார்த்த விஜய்...

"உன் ஃப்ரெண்ட் நல்லா இருக்கணும்னுதான்..." என்று விஜய் பேச ஆரம்பித்தபோதே பார்வதி,

"என்ன சார், என் ஃப்ரெண்ட்... உங்க மனைவின்னு சொல்லுங்க... உங்களுக்கு அவ உங்க மனைவின்னு தெரிந்தும்... உங்களால் உரிமையா மனைவின்னு சொல்ல முடியலை... ஆனா தீக்ஷா உங்களை... அவ கணவன்னு வாய் வார்த்தையில நாங்க சொன்னதை உணர்ந்து, இன்னைக்கு உங்க முன்னால் வந்து நிற்கிறாளே... அவ ளுக்கு... உங்க மனைவிக்கு... இதுதான் நீங்க கொடுக்கிற மரியாதையா...?" என்று விஜய்யையும் எதிர்த்துப் பேச ஆரம் பிக்க... பார்வதியின் பேச்சைப் பாதியிலேயே நிறுத்தினாள் தீக்ஷா.

"பாரு.... டென்சன் ஆகாதே... அது மட்டுமல்ல.... அவரை நீ எதிர்த்துப் பேசுவது எனக்குப் பிடிக்கலைடி... சாரி. பாரு.... என் வாழ்க்கைக்காக நீ போராட வேண்டாம்.... இது என் வாழ்க்கை. அவங்கவங்க வாழ்க்கைக்காக அவங் கவங்கதான் போராடணும், பாரு... ப்ளீஸ், புரிஞ்சுக்கோ... உனக்கு மட்டுமில்லை... என் குடும்பத்துக்கும் சேர்த்துதான்... இது எனக்கும் என் கணவனுக்கும் இடையில் உள்ள பிரச்சனை... நாங்க பார்த்துக்கிறோம்... வேறு யாரும் தலையிட வேண்டாம்," என்றவள், யாரிடமும் எதுவும் பேசாமல், விஜய்யின் அறையை நோக்கிப் போக... பார்வதி மலைத்து நின்றாள்.

தன் தோழியின் பேச்சில் அதிர்ந்தாலும்... அவளின் மன உறுதி பார்வதிக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுக்க... இனித் தன் தோழி அவள் வாழ்க்கையைப் பார்த்துக் கொள் வாள் என்ற மனத் தைரியம் வர... சாரகேஷை அழைத்துக்



கொண்டு வெளியேற... சுரேந்தர், சாரஷகேஷிடம் பேச வந்தான். ஆனால், பார்வதியோ... அவனைப் பேச விடாமல்...

"வாண்ணா... இங்கே யார் கிட்டயேும் பேசிப் பிரயோஜனமில்லை. நாம பண்ணிய தவறுக்கு... நம்மால் முடிந்தவரை பிராயச்சித்தம் பண்ணிட்டோம். இனி அவங் கவங்க கையில் எல்லாமே..." என்று தன் அண்ணனைப் பார்த்துச் சொல்லிவிட்டு, வேகமாகத் தன் அண்ணனைக் கூட்டிக் கொண்டும் வெளியேற... அதேநேரம் யுகேந்தரும் வீட்டினுள் வர... பார்வதி அவனையும் ஒரு முறை முறைத்து விட்டுத்தான் அந்த வீட்டை விட்டு வெளியேறினாள்.

யுகி வீட்டுக்குள் வந்த போது...

தீக்ஷா - விஜய்யின் அறைக்குச் செல்லப் படி ஏறிக் கொண்டிருக்க..... விஜய் வேகமாய் அவளுக்கு முன் படி ஏறிச் சென்று, அவளிடம் கெஞ்சிக் கொண்டிருக்க... அதைப் பார்த்த பார்வதி மனம் கனத்து நின்றாள்.

தீக்ஷாவைப் பார்க்காமலே வந்து விட்டதும்... அவளைப் பார்வதி என்ற முன் பின் தெரியாத ஒரு பெண்ணிடம்... அதிகப்படியாக விமர்சித்து விட்டு வந்ததும் அவன் மனதைக் கொல்ல... தன் நண்பனின் அறைக்குச் சென்றுவிட்டான். அங்கு தங்கி இருந்து விட்டுக் கிளம்பியவன்... இப்போதுதான் வந்து சேர்ந்தான். வந்தவனின் கண்களில்... அவன் அண்ணன், தீக்ஷாவிடம் கெஞ்சிக் கொண்டிருந்த காட்சி தான் பார்வையில் பட... விஜய்யைப் பார்த்தபடியே நின்று விட்டான் யுகி. விஜய்யோ யுகி வந்ததைக் கூட அறியாமல்...

"ப்ளீஸ்... நான் நம்ம நல்லதுக்குத்தான்மா சொல் றேன்..." என்று கெஞ்சிக் கொண்டிருக்க... தீக்ஷா, விஜய் யிடம் பேசாமல்,

கீழே இருப்பவர்களிடம் திரும்பிப் பேச ஆரம்பித்தாள்.

"இனி இந்த தீக்ஷா இந்த வீட்டை விட்டு வர மாட்டா... அப்படி என்னைக் கூட்டிட்டுப் போறதா இருந்தால்....

பொணமாத்தான் கூட்டிட்டுப் போக முடியும்...!" என்று சொல்லியவள், அப்படியே கீழே அமர... விஜய் உட்பட அத்தனை பேரும் அதிர்ந்து, அவளைப் பார்த்த வண்ணம் இருக்க...

விஜய்யின் பிடிவாதத்தை வேறு யாராலும் மாற்ற முடியாது. ஆனால், தீக்ஷாவால் மாற்ற முடியாததா...? அவன் குடும்பத்தவரும்... தீக்ஷா குடும்பத்தில் இருப்பவர் களும்... எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியும் கேட்காத விஜய்... தீக்ஷாவின் பிடிவாதத்தில் வேறு வழியின்றி...

விஜய், அவளையே பார்த்தபடி சற்று நேரம் இருந்த விஜய்... முடிவு செய்தவனாய் வேகமாய்த் தன் அறைக்குள் வந்தான். தாங்கள் இருவரும் இணைந்திருந்த புகைப் படத்தை வேகமாய்க் கழட்டியவன்... அதை வேறொரு அறை யில் மாற்றச் சொல்லி விட்டு... தீக்ஷாவின் பெற்றோரிடம் வந்தான்.

"மாமா... அவ இங்கேயே இருக்கட்டும்..." என்று சொல்ல, தீக்ஷா விழி நிறைந்த சந்தோஷத்தோடு தன் கணவனைப் பார்க்க... சந்தோஷத்தைக் கொடுத்த அடுத்த நிமிடமே... அவளைத் துன்பக் கடலில் தள்ளினான் அவன்.

"ஆனா... அவ கழுத்தில தாலின்னு ஒண்ணு மறுபடி ஏறணும்னா... எனக்கு என் மனைவியா திரும்பி வர வேண்டும்... இதற்குச் சரி என்றால், இங்கே இருக்கலாம்..." என்று கல்லாய் மாறிப் பேச, தீக்ஷா துடித்துப் போனாள்.

இப்படிச் சொன்னாலாவது அவள் தன்னை விட்டுப் போவாள் என்று நினைத்து விஜய் இப்படிச் சொல்லிப் பார்க்க... அதில் கூட தீக்ஷா மனம் மாறவில்லை.

இன்று மறந்த நிலையில் இருக்கும் தன்னை... அவன் மனைவியாக ஏற்றுக் கொள்ள அவன் மறுக்கிறான் என்பது அவன் வார்த்தைகளில் புரிய, தீக்ஷா பரிதவித்து நின்றாள். இருந்தும் அவள் மனம் தளரவில்லை. அவள் கணவனின் வார்த்தைகளை வைத்தே அங்கிருந்த அனைவரையும் நோக்கினாள்.



"அப்பா.... எனக்கு அவர் தரும் தாலி தேவை யில்லை... ஆனால், இந்த வீட்டை விட்டு நான் வர மாட்டேன்... அதேபோல்..." என்று நிறுத்தியவள், "எனக்கு ஞாபகம் வருகிறதோ இல்லையோ... அவரின் மனைவி நான் தானே... அதை அவருக்குப் புரிய வைக்காமலும் விட மாட் டேன். அவர் கையால் தாலி வாங்காமலும் விட மாட்டேன்..." என்று சொன்னவளின் குரலில் இருந்த தீவிரத்தில், அனை வரும் அவளை நிம்மதியுடன் பார்க்க... விஜய்யோ அவளைக் கலவரத்துடன் பார்த்தான்.

அதன் பிறகு, தீக்ஷா பிறந்த வீட்டினர் தங்கள் வீட்டிற்குச் சென்றனர். விஜய் கைகளால் மீண்டும் தீக்ஷா கழுத்தில் தாலி கண்டிப்பாக ஏறும் என்பது அவர்களுக்குத் தெரியும் என்றாலும்... பெண்ணைப் பெற்றவர்களாய்... அது அவர்களுக்குக் குறையே. இருந்தாலும் தன் மகள் வாழ்க் கையில் முழுவதுமாய் மீண்டும் வசந்தம் வீசும் என்று கடவுள் மேல் பாரத்தைப் போட்டபடி அங்கிருந்து சென்றனர்.

யுகி வந்த சந்தோஷம் ஒரு புறம்... தீக்ஷா மீண்டும் வந்த சந்தோஷம் என விஜய் வீட்டினர் சந்தோஷமாய் இருக்க... யுகியிடம் விஜய்,

"பார்வதி வீட்டில் என்னடா சொன்ன...?" என்று கேட்க,

"சத்தியமா... நான் தீக்ஷாவிடம் ஏதும் சொல்ல வில்லை. ஆனா அதுக்கு முன்னாடியே பார்வதிக்கு உங்க திருமண விஷயம் தெரிஞ்சுருக்கு..." என்று தன் நிலையை விளக்கப் போக...

"ஆனால், பார்வதியைக் கட்டாயப்படுத்தி தீக்ஷா சொல்ல வெச்சுட்டாளே யுகி... அதற்குக் காரணம் நீதானே...!" என்று கடிந்தவன், எவ்வளவோ முயன்றும்... தான் தீக்ஷா விடம் மறைக்க நினைத்த விசயம்... அவளுக்குத் தெரிந்து

விட்டதை உணர்ந்த விஜய், விதி வலியது என்பதை மீண்டும் தன் வாழ்க்கையில் உணர... யுகியிடம் பெரிதாக விசாரிக்க வில்லை. அவனை விட்டு விட்டான்.

தீக்ஷா, யாரிடமும் எதுவும் பேசாமல் தங்கள் அறைக்குள் - அதாவது விஜய்யின் அறைக்குள் வந்து விட்டாள். நுழையும்போதே அதிர்ந்தாள்... அந்த அறை முழுக்க அவளின் புகைப்படங்கள் வெவ்வேறு கோணங்களில் மாட்டப்பட்டிருக்க... அதை எல்லாம் விட... அவளை விட 2 மடங்கு பெரியதாக உள்ள புகைப்படம் அந்த அறையின் ஒரு சுவர் முழுக்க ஆக்கிரமித்து இருக்க... அதற்கு எதிரே இருந்த சுவர் வெற்றிடமாய் இருக்க, அதை வெறித்தாள் தீக்ஷா.

சற்று முன் அந்த வெற்றிடம்தான்.... தீக்ஷா - விஜய் மணக்கோலத்தில் இருந்த புகைப்படத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்தது என்று அவளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை தான். ஆனால், அந்த வெற்றிடத்தின் சிறுபகுதி... தீக்ஷா - விஜய் என்று எழுத்துக்களால் நிரப்பப்பட்டிருக்க... அதைப் பார்த்தபடி சிறிது நேரம் இருந்தவளுக்கு... அவளும் தன் கணவனை ஏற்றுக் கொண்டுதான் வாழ்ந்திருக்கிறாள் என்பதற்கு அது ஆதாரமாய் இருக்க... சற்று நிம்மதி ஆனாள். அது மட்டும் இல்லாமல், அந்தச் சுவரின் இன்னும் சில இடங்களில் கூட தீக்ஷா - விஜய் என்று தான் எழுதி யிருப்பதைப் பார்த்த தீக்ஷா, உணர்ச்சிகளின் பிடியில் தன்னை மறந்து நின்று கொண்டிருக்க...

அப்போது விஜய் உள்ளே வரும் சத்தமும், பின் கதவை அடைக்கும் சத்தமும் கேட்க... என்னதான் கணவன் என்ற உரிமையில், எதைப் பற்றியும் யோசிக்காமல்... அவன் வீட்டிற்குள் வந்து... இப்போது அவனது அறைக்குள் வந்து விட்டாலும்... அவளின் ஞாபகங்களில் அவனின் நினைவு பூஜ்ஜியமாக இருக்க... தனியே விஜய்யோடு என்று நினைக் கவே அவளுக்குக் கொஞ்சம் பயமாகவும் இருக்கத்தான் செய்தது. இருந்தும் அவனோடு பேசியாக வேண்டும்...



தங்கள் வாழ்க்கையைப் பற்றிப் பேசி முடிவெடுக்க வேண்டும் என்ற உந்துதல் வர, தனக்குள் தைரியத்தை வரவழைத் தவள், நிமிர்ந்து அவனைப் பார்க்க..., அவனோ,

அவளைப் பார்க்காமல் கடந்து செல்ல...

"விஜய் அத்தான்...!" என்று அழைத்தாள். அவனும் நின்றான், அவளின் அழைப்பில். ஆனால், அவள் புறம் திரும்பவில்லை.

"சொல்லு..." என்று மட்டும் சொன்னான் விஜய்.

அவன் சொல்லு என்ற விதமே தீக்ஷாவுக்குத் தொண்டை அடைத்தது. ஏனோ தெரியவில்லை... அவளின் விஜய் அத்தானாக இருந்த போதெல்லாம் அவனோடு பதிலுக்குப் பதில் வாயாடியவளுக்கு, இப்போது வார்த்தைகள் தந்தி அடித்தன.

"சா...சாரி அத்தான்...!" என்று மட்டும் சொல்ல,

"எதுக்கு...?"

"இன்னைக்கு நான் பண்ணின எல்லாக் காரியத் துக்கும்...அதுமட்டும் இல்லை.... நீங்க யாருன்னு தெரியாமல் பண்ணிய எல்லா விசயங்களுக்கும்..." என்று மூச்சை இழுத்துப் பிடித்து எப்படியோ சொல்லி முடித்து, இப்போது மூச்சை இழுத்து விட,

"ம்ஹ்ம்..... சரி....." என்றபடி சொல்ல,

தீக்ஷாவுக்கோ, 'அவ்வளவுதானா...?' என்றிருந்தது. அவன் ஏதாவது பேசமாட்டனா என்றிருக்க... இவளுக்கும் தயக்கமாய் இருக்க... இருந்தும் மீண்டும், "விஜய் அத்தான்..." என்று அழைக்க...

"தூங்கு, நாளைக்குப் பேசலாம்..." என்றபடி... அவளிடம் கட்டிலை நோக்கிக் கை காட்டியவன்... அருகில் இருந்த சோபாவில் படுக்கப் போக...

அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் தீக்ஷா தடுமாறினாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கட்டிலில் அமர்ந்தவாறே, 'அடப்பாவி... எனக்குத்தான் எல்லாம் மறந்து போச்சு... இவனுக்கு என்ன வந்துச்சு... இப்போ என்ன பண்றது... இவன் பிடிவாதக்காரன் ஆயிற்றே... எனக்கு ஏன் இந்த அம்னீசியா வந்துச்சு...? கடவுளே...'

என்றெல்லாம் புலம்ப ஆரம்பித்தவளுக்கு.... திடீரென்று, இன்னும் மாத்திரை போடாதது ஞாபகம் வர... ஆனால், அடுத்த நிமிடமே... 'நமக்குத்தான் ஒண்ணும் இல்லையே... தேவையில்லையோ அந்த மாத்திரைகள் எல் லாம்... சும்மா போட வெச்சானா...!' என்றெல்லாம் அவனைக் கொஞ்சம் திட்டியபடியே குழம்ப ஆரம்பித்தவள்... தன் வழக் கத்தில்,

"விஜய் அத்தான்..." என்று கத்தி அழைக்க நினைத்தவள், தனக்குள் அடக்கிக் கொண்டாள். 'சத்தமாப் பேசினால் திட்டிருவானோ...?" என்று பயம் வர, அமைதியாக அமர்ந்து விட்டாள்.

அவள் தீக்ஷாவாக இல்லாமல்... விஜய்யின் மனைவி யாகத் தன்னை... தன் குணங்களை மாற்றிக் கொள்ள நினைத்தாள்.

இவள் இப்படித் தனக்குள் யோசித்துக் கொண்டிருக்கும் போதே... அவள் முன் விஜய் வந்து நின்றான். தன் அருகில் வந்து நின்றவனை எதிர்பார்க்காத தீக்ஷா... அவனைப் பார்த்து வேகமாய் எழ... அதில் சற்றுத் தடுமாற... அவனோ அவளைப் பிடித்து நிறுத்த முயற்சிக்கவில்லை. அவளுக்குக் கொடுக்க வேண்டிய மாத்திரைகள் அடங்கிய பெட்டி எல்லாம் அவன் கையில் இருக்க... அதை அவளிடம் நீட்டியவன்... அங்கிருந்து நகர... தீக்ஷா மெலிதான குரலில்... தயங் கியபடி...



"ஆனால், இதில் இப்போ எதைப் போடுவதுன்னு எனக்குத் தெரியாதே... அம்மாதான் தருவாங்க..." என்று சொல்லும் போதே அவன் முறைக்க,

'இவனுக்கு முறைக்கிறதைத் தவிர வேறு எதுவும் தெரியாதா...? கடவுளே... இவன் கூட நான் எப்படிக் குப்பை கொட்டுவேன்...!' என்று மனதுக்குள் சொல்லியவள், வேக மாய்,

"இன்னைக்கு ஒருநாள் மட்டும் சொல்லுங்க... நாளை முதல்... அம்மா கிட்டே கேட்டு... எல்லா விபரமும் வாங்கிக் கிறேன்," என்று அவனது முறைப்பில் அவசரம் அவசரமாகச் சொல்ல... அதில் விஜய்க்குச் சிரிப்பு வந்து விட... அதில் அவன் முகமும் மாற... தீக்ஷா அவனையே பார்க்க...

"யாரு நீ.... நீயா போட்ருவே... பார்க்கலாம்," என்றவன், அவள் போட வேண்டிய மாத்திரைகளைத் தனியாகப் பிரித்துக் கொடுக்க...

இப்போது தீக்ஷாவுக்கு... இன்னொரு நினைவும் வந்தது. மாத்திரைக் கவரை எல்லாம் ஜெயந்திதான் பிரித்துக் கொடுப்பாள். 'இதை வேறு பிரிச்சுப் போடணுமா!' என்று நினைத்தவள்...

'கேட்கலாமா இவன் கிட்டே...' என்று தோன்ற,

'ஆனா பிரிச்சுக் கொடுக்க மாட்டானே இவன்... உனக்கெல்லாம் வேலை பார்க்க நான் ஆளான்னு கேட்டுத் தொலைவானே...!' என்று நினைக்க.... அவள் மனதில் நினைத்தது அவள் கணவனுக்கு எப்படிக் கேட்டதோ... சட்டென்று மீண்டும் வாங்கியவன், அவற்றை எல்லாம் பிரித்துக் கொடுத்தவன்... தண்ணீர் பாட்டிலையும் அவளிடம் நீட்ட... தீக்ஷாவுக்கு அழுகையே வரும் போல் இருக்க... அடுத்த நிமிடம் அவள் கண்களும் அவள் கணவனைப் போல் அவள் மனம் நினைத்ததைச் செயல்படுத்தின.

விஜய் அவள் கண்ணீரை உணர்ந்த போதும் எதுவும் சொல்லாமல் அந்த இடத்தினை விட்டு அவர்களின் அறையின் பால்கனிக்குச் செல்ல... அப்படியே படுத்தவளுக்கு, உறங்க விருப்பம் இல்லைதான். ஆனாலும் அடுத்த சில நிமிடத்தில் அவள் போட்ட மாத்திரைகளின் விளைவால்... உறங்கி விட்டாள். சற்று நேரம் கழித்து உள்ளே வந்த விஜய்... அவள் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவன்... அப்படியே சோபாவில் அமர்ந்தபடி... உறங்கிக் கொண்டிருந்த அவளின் முகத்தைத் தன் விழிகளால் ரசித்துப் பார்த்தபடி இருந்தவன்...

இனி என்ன ஆகுமோ என்ற அவர்கள் வாழ்க்கை பற்றிய சிந்தனை அவனுக்குள் சூறாவளியாய்ச் சுற்றிக் கொண்டிருந்த நிலையிலும்... தன் முன் இருந்தவளை ரசிக்க முடியவில்லை.

சுத்தமாய்த் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்க ஆரம்பிக்க... அவளைப் பார்க்காமல் தன் எதிரில் இருந்த புகைப்படத்தினைப் பார்க்க ஆரம்பித்தவன்,

"முடியலைடி... ஏன்டி இப்படிப் படுத்தி எடுக்கிறே... எப்போதான்டி உன் சாபம் எல்லாம் எனக்குத் தீரும்...?" என்றபடி பேச ஆரம்பித்தவனுக்கு, அன்றும் உறங்கா இரவே ஆனது.

அந்த அறைக்குள் படுக்க முடியாமல் வெளியே பால்கனிக்கு வந்தவன், அங்கேயே படுத்தவனுக்கு... உறக்கம் எப்போதும் போல்... அவனை மீறிப் பின்னிரவில் தான் வந்தது.

அடுத்த நாள் காலை அவன் உள்ளே வரும்போது தீக்ஷா உறக்கத்திலேயே இருக்க... அவள் படுத்திருந்த கோலம் அவனுக்கு அவளை நோக்கி இழுக்க... சட்டென்று தன்னைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன்... அவளின் மேல் போர்வையைப் போர்த்தி விட்டு... அதன் பின் குளியலறைக்குள் நுழைந்து, அடுத்த அரை மணிநேரத்தில் கீழேயும் இறங்கினான். அங்கு தீக்ஷா வீட்டில் இருந்து அனைவரும் வந்திருந்தனர்.



கிட்டத்தட்ட 8 மணி அளவில் எழுந்த தீக்ஷா, அவனைத் தேட.... ஆளே இல்லை... என்ன செய்வது... என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே ஜெயந்தி உள்ளே வர... தன் அம்மாவைப் பார்த்த சந்தோஷத்தில்... வேகமாய் அவரிடம் ஓடி வந்தவள்... அவரைக் கட்டிக் கொண்டாள்.

மகளை ஆராயும் நோக்கில் பார்த்த தாயைச் சங்கடமாய்ப் பார்த்தவள்...

'அம்மா... நான் அத்தானோட சந்தோஷமா வாழ்ந்தேனாம்மா...?' என்று கேட்க வேண்டும் போல் இருக்க... இருந்தும் அதைத் தாயிடம் கேட்க முடியாமல்...

"அவர் என் கிட்டே ஒழுங்காவே பேசலம்மா...!" என்று சொல்லும்போதே அவள் குரல் அடைக்க... அழக் கூடாது என்று நினைத்தாலும் அவளுக்கு அன்னையைப் பார்த்தவுடன் அழுகை வந்துவிட... இப்போது ஜெயந்தி அவளைப் பார்த்து அழ ஆரம்பிக்க,

தன் அன்னை அழுவதைப் பார்த்த தீக்ஷாவுக்கு... உள்ளம் பதறி விட்டது.

"அம்மா... அழாதீங்கம்மா... நான் அத்தான் மனசை மாத்திருவேன்மா... நான் உங்க பொண்ணும்மா...!" என்று அவளைச் சமாதானப்படுத்த... ஜெயந்தி, தீக்ஷாவின் திருமண நாளை அவளுக்கு நினைவு படுத்தி...

"இந்தாம்மா... விஜய் தம்பி வாங்கிட்டு வந்தது. என்கிட்ட கொடுத்து உன் கிட்டே கட்டச் சொன்னார்..." என்றபடி தன் கையில் இருந்த கவரை நீட்ட... தீக்ஷா, தன் குறும்பான வார்த்தைகளை வெகுநாளைக்குப் பிறகு அவள் தாயிடத்தில் வெளிப்படுத்தினாள்.

"ஏன் அவர் என் கிட்டே கொடுக்க மாட்டாராமா...? ரொம்ப பண்ணிட்டு இருக்கார் விரு... இல்லை, இல்லை... உங்க மருமகன்..." என்று சொல்லும்போதே விஜய்யும் உள்ளே வர... சட்டென்று நாக்கைக் கடித்தவள்,

"அடக்கி வாசிடி தீக்ஷா..." என்றபடி அந்தக் கவரைப் பேசாமல் வாங்கிக் கொள்ள... ஜெயந்தி அங்கிருந்து போக,

விஜய், தீக்ஷா மட்டும் உள்ளே இருக்க...

"சீக்கிரம் கிளம்பி வா... ஏற்கெனவே லேட்... " என்று விஜய் சொல்ல...

"சரி..." என்று தலையை மட்டும் நல்ல பிள்ளை போல் ஆட்டிய தீக்ஷா, ஓரளவு தன்னை... தனக்கும் தன் கணவனுக்கும் உள்ள உறவின் சிக்கலை உணர்ந்தாலும்... விஜய்யைப் பற்றி எதையும் அனுமானிக்க முடியாமல்... இன்னும் குழப்பம் தெளியாத நிலையில்... தன் நிலை புரிந்த அதிர்ச்சி விலகாமல்தான் இருந்தாள்.

## 30

அன்று விஜய் - தீக்ஷாவின் திருமண நாள் என்பதால் அனைவரும் கோயிலுக்குக் குடும்பத்தோடு கிளம்பினர். அனைவரும் சந்தோஷமாக இருந்தனர் என்று மட்டுமே சொல்ல வேண்டும். பரிபூரண சந்தோஷம் என்பது கேள்விக்குறியே...! விஜய்க்குக் கூடத் தெரியாமல்... இன்று தீக்ஷாவிடம் உண்மையை எல்லாம் சொல்லி விட வேண்டும் என்றுதான் கலைச்செல்வி, ராதா மற்றும் ஜெயந்தி முடிவு செய்திருந்தனர். ஆனால், இவர்கள் ஒன்று நினைக்க... விதி செய்த விளையாட்டில் இவர்கள் மூலமாகத் தெரியாமல்... பார்வதியின் மூலம் தீக்ஷாவுக்கு உண்மை தெரிந்து விட்டது. ஆனாலும் விஜய்யின் பிடிவாதம் போன பாடில்லை. ஆக மொத்தம் விஜய் - தீக்ஷா வாழ்க்கையிலும் பெரிதாக



மாற்றமில்லை என்பதை உணர... சுரேந்தர், யுகேந்தர் தவிர... மற்றவர்களுக்கு... விஜய்யின் பிடிவாதத்தால் கொஞ்சம் மன வலிதான்.

காரில், விஜய்யின் அருகில் அமர்ந்திருந்த தீக்ஷாவுக்கு, இதுநாள் வரை இல்லாத ஒரு உரிமை உணர்வு இன்று வந்திருந்தது என்றே சொல்ல வேண்டும். அவனைப் பார்த்தபடியேதான் வந்தாள். அவளுக்குள் ஆயிரம் சந்தேகங்கள். விஜய் தன் கணவன் என்ற பதிலைத் தவிர... வேறு ஒன்றுக்குக் கூட விடையில்லை. இன்று தன் திருமண நாள் என்று தெரியாத தன் நிலை... ம்ஹும்... திருமணம் ஆனதே தெரியாத தன் நிலை... அமைதியாகத் தீக்ஷா அவனையே பார்த்தபடி வர... விஜய்யோ அவள் புறம் திரும்பவே இல்லை. ஆனாலும் அவனும் உணர்ச்சிகளின் பிடியில்தான் இருக்கிறான்... இருந்தும் அவற்றைத் தனக்குள் அடக்கியபடி வருகிறான் என்பதை அவனின் முக இறுக்கமே சொல்ல... ஏன் இவனுக்கு இப்படி ஒரு பிடிவாதம் என்று தீக்ஷா அவளுக்குள் போராடியபடி வந்து கொண்டிருந்தாள்.

கோயிலில்... கலைச்செல்விதான் ஆரம்பித்தார்.

"விஜய்... எல்லாப் பிரச்சினையும் சால்வ் ஆகிருச்சேப்பா... இப்போதாவது அவ கழுத்தில் தாலி..." என்று ஆரம்பிக்க...

"எனக்குத் தெரியும்... இனி யாரும் என் விஷயத்தில் தலையிட வேண்டாம்..." என்றவன், கோபத்தில் முன்னே நடக்க... சுரேந்தர் தன் தாயிடம் எரிந்து விழுந்தான்.

"ஏன்மா... அண்ணனை டார்ச்சர் பண்றீங்க...? அவர் எது செஞ்சாலும் கண்டிப்பா அதில் காரணம் இருக்கும்... காலம் எல்லாத்தையும் மாற்றும்...!" என்றவனின் வார்த்தைகள் முன்னே நடந்து சென்ற விஜய்யின் காதிலும் விழ... சற்று நின்ற விஜய், சுரேந்தரைத் திரும்பிப் பார்த்து விட்டு மீண்டும் தன் வழியில் நடந்தான்.

கலைச்செல்வியும், ஜெயந்தியும் வருத்தத்தோடு இருக்க... அவர்களின் வாட்டத்தில்,

"என்னத்தை பிரச்சினை...? ஏன் அத்தான் கோபமா இருக்காரு...?" என்று தீக்ஷா கேட்க, தீக்ஷாவிடம் தன் கையில் இருந்த அவளின் மாங்கல்யத்தைக் காட்டினார், கலைச்செல்வி.

அதைப் பார்க்கும் போதே நெஞ்சை அடைத்தது போல் இருந்தது. இருந்தும் தன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தியவள், கையில் கூட வாங்காமல் அதையே பார்த்தபடி இருந்தாள்.

"நாங்க சொன்னாத்தான் அவன் கேட்க மாட்டான்... நீ சொன்னா அவன் கேட்பான்மா...!" என்று தன் மருமகளின் மூலம் தன் மகனின் பிடிவாதத்தினை மாற்ற நினைக்க... அவளோ அவனுக்கும் மேல் இருந்தாள்.

"நான் வைத்தீஸ்வரன் பொண்ணு தீக்ஷா இல்லத்தை இப்போ... விஜயேந்தர் மனைவி தீக்ஷா...! என் வாழ்க்கைக்காக இனி நான் கெஞ்ச மாட்டேன். ஆனால், அவரே ஒரு நாள் என் கழுத்தில் கட்டுவார் அத்தை... கட்ட வைப்பேன். இது கண்டிப்பா நடக்கும்...!" என்றவளின் வைராக்கியத்தில் கலைச்செல்வியும் ஜெயந்தியும் அதிர்ந்தாலும்... ஓரளவு சமாதானம் அடைந்தனர். அதன் பின் கோயிலில் அர்ச்சனை முடிய,

தீக்ஷாவின் அருகில் வந்த விஜய்...

"நாம ஒரு இடத்துக்குப் போகணும்... சீக்கிரம் கிளம்பலாமா...?" என்று கேட்க... அவனோடு நடந்தாள் தீக்ஷா. எங்கே என்றெல்லாம் தீக்ஷா கேட்கவில்லை.

அவன் நரகத்திற்கே கூட்டிச் சென்றாலும்... அவனோடு பின்னே செல்லத் தயாராகும் நிலையில் அவள் இருந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.



கிட்டத்தட்ட 11 மணி அளவில்...

பார்வதி தன் மெயில்களை எல்லாம் செக் செய்து கொண்டிருந்தாள். சாரகேஷ் மருத்துவ மனைக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். இருவருக்கும் இந்த ஒரு வார காலம் ஏனோ ஒரு யுகம் போல் தோன்றியது. அத்தனை மாற்றங்கள்... அத்தனை திருப்பங்கள்... அத்தனை குழப்பங்கள்... அதிலும் தீக்ஷா பற்றி இன்னும் சில விஷயங்கள் தெரியவே இல்லை.

இருந்தும் குழப்பங்கள் ஓரளவு முடிந்து விட்ட மகிழ்ச்சியில்... தன் தோழி இனியாவது நிம்மதியாக இருக்க வேண்டுமென்று நினைத்தபடி பார்வதி மெயிலைப் பார்த்துக் கொண்டிருக்க... அதில் விஜய்யிடமிருந்து மெயில் வந்திருந்தது.

வேகமாய்ப் படிக்க ஆரம்பிக்க... விஜய், பார்வதியின் ரிலீவிங் ஆர்டரை அனுப்பி இருந்தான். கோபத்தில் முகமே சிவந்து விட்டது பார்வதிக்கு. 'என்ன நான் பண்ணினேன்...? இவன் பொண்டாட்டியை இவன் கூடச் சேர்த்து வெச்சதுக்குத் தண்டனையா...?' என்றபடி அடுத்து எந்த மெயிலையும் செக் செய்யாமல்... வேகமாய்த் தன் அண்ணனின் அறைக்குப் போனாள்.

வந்தவள், அவனிடம் எதுவும் சொல்லாமல் சாரகேஷின் முகத்தையே பார்த்தபடி அமர... அவளை ஒரு 5 நிமிடம் பொறுமையாகப் பார்த்தவன்... பின் பேச ஆரம்பித்தான்.

"என்னாச்சு, பாரு...?"

"ப்ச்ச்... வேற வேலை தேடனும்ணா..." என்றவளுக்கு... சுரேந்தர் ஞாபகம் வர... 'இனி அவனைப் பார்க்க முடியாதா...' என்று நினைக்கும் போதே இதயத்தில் ஏதோ ஒரு வலி.

"ஏன்டா வேலையை ரிசைன் பண்றே...? விஜய் கிட்டே வேலை பார்க்கப் பிடிக்கவில்லையா?" என்று கேட்க...

"ப்ச்ச்..." என்று மீண்டும் எரிச்சலோடு சலித்தவள்...

"நான் எங்கே ரிசைன் பண்ணினேன்... அவங்களே அனுப்பிட்டாங்க... என்னதான் தீக்ஷா, விஜய்யோடு சேர்ந்து விட்டாலும்... நம்மை விஜய்க்குப் பிடிக்கலை போலண்ணா...! நேத்து நீ தட்டைத் தூக்கிட்டு அவன் பொண்டாட்டியைப் பொண்ணு கேட்கப் போனேல... அதனால உன் தங்கச்சியை வெளிய அனுப்பிட்டான்..." என்று புலம்பியவளிடம்,

சாரகேஷ் சீரியஸாக எல்லாம் பேசாமல்...

"பாரு... இதுக்கெல்லாம் ஃபீல் பண்ணினா எப்படிடா...! இல்ல, இது உனக்குப் புதுசா...? விடு... இது இல்லேன்னா... இன்னொரு ஆஃபீஸ்... அந்த ஆஃபீஸ்ல என்ன கதை இருக்கோ...!" என்று கிண்டலாகப் பேச... பார்வதி, அவனின் கிண்டலில் எல்லாம் மூழ்காமல், இன்னும் கவலையாகவே இருந்தாள்.

இப்போது சாரகேசும் அவளின் நிலைமையைப் புரிந்து ஆறுதல் சொன்னவன்... பார்வதியும் சமாதானமாக... அதன் பின்தான் சாரகேஷ் மருத்துவ மனைக்குக் கிளம்பினான்.

தன் அண்ணன் சமாதானப்படுத்தியும்... விஜய் மேல் இருந்த கோபம், பார்வதிக்கு இன்னும் போகவில்லை.

தன் தோழியின் கணவனாகிப் போய்விட்டான். இல்லை... என்று தன்னை நொந்தபடி இருந்தவளை... அவளின் மொபைல் அழைக்க... விஜய்தான் அழைத்திருந்தான்.

'பெரிய இவனாட்டம் வெளியில அனுப்பிட்டு, இப்ப எதுக்கு கால் பண்ணுகிறான்...?' என்று நினைத்தபடி போனை எடுத்தாள் பார்வதி.

"ஹலோ..." என்று விஜய் சொன்னவுடன்,

"சொல்லுங்க சார்... தீக்ஷா எப்படி இருக்கா...?" என்று தன் கோபத்தை அடக்கி... விட்டேற்றியாகப் பேச,



அவள் பேசியதில் இருந்தே விஜய்க்குத் தெரிந்து விட்டது... அவள் தான் அனுப்பிய ஒரு மெயிலை மட்டுமே பார்த்திருக்கிறாள் என்று.

'அவசரக் குடுக்கைங்க...' என்று மனதுக்குள் திட்டியவன்,

"பார்வதி.... நான் அனுப்பிய மெயிலைப் பார்த்தியா?"

"பார்த்தேன் சார்," என்று முடிக்கவில்லை பார்வதி...

விஜய், அவளிடம்,

"பார்த்துட்டியா... ஆனால், பார்த்திருந்தா இந்நேரம் விஜய் பில்டர்ஸ்ல இருந்திருப்பியே..." என்று சிரித்தவனின் குரலில் கிண்டல் கலந்திருந்ததை உணர்ந்தவள்...

"விஜய் பில்டர்ஸா... என்ன சார் சொல்றீங்க...?" என்று பேசியபடியே மடிக்கணினியில் மீண்டும் மெயிலை செக் செய்ய... இரண்டு மெயில் விஜய்யிடமிருந்து வந்திருக்க... வேகமாய் அதைப் பார்க்க.. அதில் விஜய் பில்டர்ஸில் ஜாயின் பண்ணுவதற்கான அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் இருந்தது.

சற்று நேரம் வார்த்தைகளே வராமல் இருந்தாள் பார்வதி. விஜய்யின் மேல் தேவை யில்லாமல் கோபம் கொண்ட தன் சிறுபிள்ளைத் தனமான செயலை நினைத்துத் தனக்குள் வெட்கிக் கொண்டவள்... விஜய் இன்னும் லைனில் இருக்கிறான் என்பதை உணர்ந்து...

"சார்..." என்றபோது,

"சாரா..." என்று சிரித்த விஜய்யின் குரலில் பார்வதிக்கே அவன் விஜய்தானா என்று தோன்றியது. இப்படி அவன் குரலை இதற்கு முன் கேட்டதே இல்லை. ஏன்... இந்த ஒரு வாரத்தில் அவன் சிரித்தே பார்க்கவில்லை என்று கூடச் சொல்லலாம். வியப்பில் யோசனையில் இருந்த பார்வதிக்கு இன்னும் அதிர்ச்சியைக் கொடுத்தான் விஜய்... சுரேந்தரின் அண்ணனாய்.

“விஜய் அத்தான்னு சொல்லு... பார்வதி...” என்று சிரிக்கும் போதே விஜய்க்குத் தீக்ஷா சொல்லும் ‘விஜய் அத்தான்...’ ஞாபகம் வர... அவனின் சிரிப்பு நின்றது. பின் தன் நினைவுகளை விடுத்து... பார்வதியின் மௌனம் உணர்ந்தவன்,

“பார்வதி...” என்று இரண்டு மூன்று முறை அழைக்க...

“சொ... சொல்... சொல்லுங்க சார்... ச்சேய்... சொல் லுங்க அத்தான்...” என்றாள் ஒரு விதமான படபடப்போடு.

சுரேந்தர் மட்டுமே அவளின் நினைவில் இப்போது இருந்தான்.

நடப்பதெல்லாம் கனவோ என்றிருக்க... விஜய் தொடர்ந்தான்...

“நீ வேலை பார்த்த VD ப்ரொமோட்டர்ஸ் MD மாதிரி இல்லம்மா உன்னோட புது MD. சீக்கிரம் போ.... கொஞ்சம் கோபக்காரன்...” என்றபோது, மனம் விட்டுச் சிரித்த பார்வதி,

“தேங்க்ஸ் அத்தான்...!” என்றபோது, பார்வதியின் குரல் நெகிழ்ந்திருந்தது.

“ஆல் த பெஸ்ட்...!” என்றவன், அடுத்து போனை வைக்கப் போக...

பார்வதி வேகமாய், “திருமண நாள் வாழ்த்துக்கள் அத்தான், தீக்ஷா எங்க....?” என்று கேட்க,

“மேலே இருக்கா....” என்றபடி பேச்சைத் தொடராமல்... போனை வைத்த விஜய்யின் குரலில் மீண்டும் இறுக்கம் வந்திருந்தது.

பார்வதியிடம் பேசி வைத்தவன்... சுரேந்தரிடம் சென்றான். முக்கியமான கேண்டிடேட் இன்று இண்டர் வியூவுக்கு வருவதாகச் சொல்லி... அவனையும் கிளம்ப வைத்தான் விஜய்.



‘இன்னைக்கு லீவ் நாளில் அப்படி என்ன முக்கியமான கேண்டிடேட்...?’ என்று தோன்றினாலும்... தன் அண்ணன் சொன்ன பின்னால் கேள்வி கேட்பானா...? கிளம்பினான் சுரேந்தர்.

இதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த யுகேந்தர், “அண்ணா... சுரேந்தர் அண்ணாவுக்கு இன்னைக்கு தர்ம அடிதான் காத்துட்டு இருக்கு போல...” என்று சிரிக்க,

“ஏன்டா அப்படிச் சொல்ற... பார்வதியை ஒரு தடவை தானே பார்த்தே... அதுக்கே இந்த எஃபெக்டா?”

“பார்வதி அண்ணி கொஞ்சம் ஸ்ட்ராங் பெர்சனாலிட்டி தான்...” என்ற போது விஜய் முறைக்க... அவனின் முறைப்புக் கான காரணம் புரிந்த யுகி,

“அய்யோ அண்ணா... தீக்ஷாதான் என்னை அண்ணின்னு கூப்பிட வேண்டாம்னு சொன்னா... அதை ஞாபகம் வெச்சுக்கோங்க...” என்றவன், விஜய்யின் அடுத்த கேள்விக்குப் பதில் சொல்ல அங்கு நிற்கவில்லை.

வழி எங்கும் பார்வதிக்குச் சுரேந்தரைப் பற்றிய சிந்தனைதான்... ‘எப்படி விஜய்க்குத் தெரிந்தது... சுரேந்தர் விஜய்யிடம் ஏதாவது சொல்லி இருப்பானோ... சுரேனுக்கும் என் மேல் ஒரு ஈர்ப்பு இருந்ததா...?’ என்று யோசிக்கும் போதே... அது உண்மைதான் என்று அவளுக்கும் புரிந்தது. சுரேந்தர், தன்னைப் பார்க்கும் பார்வையில் இருந்த தவிப்பு அவளுக்குத் தெரியாமல் இல்லை. அது மட்டும் இல்லாமல்... நேற்றுத் தன் அண்ணனிடமே தன்னைப் பெண் கேட்டு வருவதாய்ச் சொன்ன அவனின் அதிரடி வார்த்தைகளும் ஞாபகம் வர... புன்னகை வர... தன்னவனைப் பார்க்கப் போகிறோம் என்று உணர்ச்சி வேகத்தோடு, விஜய் பில்டர்ஸை யும் அடைந்தாள்.

பார்வதி விஜய் பில்டர்ஸை அடைந்த போது கொஞ்சம் படபடப்பாக இருந்தாள். இருந்தும் உள்ளே நுழைந்து

விட்டாள். சுரேந்தர் முன்னாலும் நின்று விட்டாள். சுரேந் தருக்குத்தான் முதலில் ஒன்றும் புரியவில்லை. 'பார்வதி எப்படி இங்கு...?' என்று யோசித்தபோதே, இது விஜய்யின் வேலை என்று புரிய... தன் முன் நின்ற பார்வதியை மேலிருந்து கீழ்வரை பார்த்தபடி... புன்னகையோடு... மேஜை யின் மேல் அமர்ந்தவன்,

"உட்காருங்க மேடம்..." என்று நக்கலாய்ச் சொல்ல,

பார்வதி, உட்காராமல், அவனை முறைத்தாள்.

"மேடம்... பெரிய சிபாரிசோட வந்துருக்கீங்க போல...!" என்று அவனும் சிரிக்காமல் சொல்ல...

பல்லைக் கடித்தாள் பார்வதி. 'இவனுக்கு இன்னும் கோபம் போகவில்லை போல...' என்று நினைத்தவள்,

"ஹ்ம்... பெரிய சிபாரிசோடதான் வந்தேன்... ஆனா இங்கே எதுவும் வேலைக்கு ஆகாது போல... சரி, நான் போகிறேன்..." என்று திரும்பி நடக்க ஆரம்பித்தாள் பார்வதி.

'அய்யோடா... மலை ஏறிட்டா நம்ம ஆளு...!' என்று வேகமாய் டேபிளை விட்டு இறங்கியவனாய்,

"ஏய் பார்வதி... பாரு... சாருமதி..." என்று கத்த, பார்வதி என்ற சாருமதி திரும்பாமலே போக... சுரேந்தர் வேகமாய்ப் பாட ஆரம்பித்தான்.

அடி வான்மதி.... என் பார்வதி...
காதலி... கண் பாரடி...
தேடி வந்த தேவதாசைக் காண ஓடி வா
அடி பார்வதி... பார்வதி என்...
பாரு பாரு என்றேன் பார்த்தால் ஆகாதா
பாடும் பாடல் அங்கே கேட்காதா?

இப்போது வேகமாய் அவன் பக்கம் திரும்பிய பார்வதி... இடுப்பில் கை வைத்து முறைத்தபடி... அவனின் அருகே மீண்டும் திரும்பி வந்தாள்.



"யாரு... நீங்க... நீங்க என்னைத் தேடி வந்தீங்களா...? நான்ல வந்து நிற்கிறேன்," என்றபோது சத்தமாய்ச் சிரித்த சுரேந்தர்...

"யார் வந்தா என்ன...?" என்றபடி தன் அருகே வந்து நின்ற அவளின் அருகே இன்னும் நெருங்கி... மெல்லிய குரலில்... "இப்போ வந்துட்டேன். போதுமா...?" என்றபோது, அவனின் மூச்சுக் காற்று அவள் மேல் பட... சுதாரித்துக் கொஞ்சம் விலகி நின்றாள் பார்வதி.

"அடேங்கப்பா... பெரிய இவரும் தேவதாஸ்தான்... விஜய் அத்தான் பெர்மிஷன் கொடுத்திருப்பாரு... ஓடோடி வந்துட்டீங்க..." என்றபடி முறைக்க,

"நீ ரொம்ப ஒழுங்கு... உன் அண்ணனுக்காக என்னை விட்டுட்டுப் போகணும்னு டிசைட் பண்ணவதானே..." என்ற போது, பார்வதியின் கண்களில் அவள், அவனை மறக்க நினைத்தது ஞாபகம் வர... கண்களில் ஈரம் துளிர்க்க... அதைப் பார்த்த சுரேந்தர், அவளைத் தன்னோடு அணைத்துக் கொண் டவன்...

"ஏய்... எதுக்கு இப்போ அழற...? லவ்வைச் சொல்ல வந்துட்டு கண்ணைக் கசக்குற... உன்னையெல்லாம் தைரியமான பொண்ணுன்னு எடுத்தேன் நான்... ஆனா என்னைத் தனியா பார்க்கிறப்பல்லாம் கண்ணைக் கசக் குறதே உன் வேலையாப் போச்சு...!" என்று சலித்தவன்...

"ஆனாலும் அன்னைக்கு என் மேலேயே கை வைக்க வந்தேல்ல... என் அண்ணனை மரியாதை இல்லாமத் திட்டு னேல்ல..." என்றவன்... "அதுக்கெல்லாம் உனக்கு இருக்குடி!" இப்போது அவனின் அணைப்பு உரிமையுடன் இறுக்கமாக...

"விடுங்க சுரேன்... யாராவது வந்துறப் போறாங்க..."

"விட்டா எப்படிடி பனிஷ்மென்ட் கொடுப்பது...?" என்றவன், அவள் முகம் நோக்கிக் குனிய... அவனிடமிருந்து

வேகமாய்த் தன்னைப் பிரித்தெடுத்தவள்... அவனைத் தள்ளிவிட்டு அகலப் போக...

வாராயோ பார்வதி
தாராயோ நிம்மதி
ஏதேதோ என்னாசை
கேட்டுப் போ நீ
காதல் தூது போ நீ
என் மனம் உன் வசம்

என மீண்டும் பாட ஆரம்பிக்க...

சட்டென்று அவன் வாயைப் பொத்தியபடி... "நீங்க பாட்டெல்லாம் பாடுவீங்களா...?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

பார்வதிக்கு அவன் காதலைச் சொன்னபோது கூட வராத ஆச்சரியம்... அவன் பாடுவதைக் கண்டு வந்திருந்தது. அந்த அளவிற்கு அவன் குரலில் இனிமை இருந்ததாலே அவளுக்கு இத்தனை தூரம் ஆச்சரியம்.

"நானும்... எங்க அண்ணனும்..." என்று ஆரம்பித் தவன்,

"அந்த ஆராய்ச்சி யெல்லாம் இப்போ ரொம்ப முக்கியம்..." என்றபடி அவளை மீண்டும் அணைக்க...

"ஆனா தீக்ஷா... உங்களுக்கெல்லாம் பாட்டு பிடிக்காதுன்னு..." என்று ஆரம்பிக்க...

"பார்வதி... தீக்ஷா பற்றி உனக்குச் சொல்றேன்ம்மா... ப்ளீஸ்... இப்போ எதுவும் கேட்காதே. நான் ரொம்ப சந்தோ ஷமா இருக்கேன்... என் அண்ணா வாழ்க்கையில மறுபடி யும் ஒரு அர்த்தம் வர ஆரம்பிச்சிருக்கு. நீ என்னோட காதலை ஏத்துக்கிட்டே...!" என்ற போதே அவன் குரலில் வருத்தம் உணர்ந்தவள்...



"என்னது... நான் உங்க காதலை ஏத்துக்கிட்டேனா...? எப்போ சொன்னேன்...?" என்றபடி, அவனோடு இன்னும் ஒன்ற...

"ஆமால்ல... இன்னும் சொல்லலை... டிசைட் பண்ணாததுக்கே இங்கே இருக்க... என்னை லவ் பண்ணி யிருந்தா... வேறு மாதிரி ரியாக்ஷன் இருந்திருக்குமோ...?" என்று விஷமமாய்க் கேட்டான் அவளின் காதலன்.

இப்போது பார்வதி அவனை முறைத்தபடி தள்ளிவிட முயற்சிக்க... சுரேந்தர் சிரித்தபடி அவளின் அணைப்பை இன்னும் இறுக்கினான்.

இருவருக்கும் ஏதோ ஒரு வார காலமாய்ப் பழகிய உணர்வு மாதிரி இல்லை... ஜென்ம ஜென்மமாய்ப் பழகிய உணர்வில் இருக்க... சுரேந்தர் அவனையுமறியாமல் பார்வதியின் நெற்றியில் இதழ் பதித்தான்.

பார்வதி, அவனோடான தன் காதலில் தன்னை மறந் திருக்க... அதை உணர்ந்த சுரேந்தரின் இதழ்கள் இப்போது தயக்கமில்லாமல் தன் பயணத்தினை ஆரம்பிக்கப் போக...

அப்போது... கதவு தட்டப்படும் ஓசை உணர்ந்து...

ஜோடிகள் தங்கள் மோன நிலையில் இருந்து விலகினர்.

சிந்தனையோடு சுரேந்தர் கதவைத் திறக்க.... அங்கு புன்னகையோடு யுகேந்தர் நின்றிருந்தான்.

"நீ எங்கேடா இங்கே...?" என்று சுரேந்தர் பாதி கடுப்பும்... பாதி கோபமுமாகக் கேட்க,

"அண்ணாதான் உங்களைப் போக விட்டு, அடுத்து ஒரு மணி நேரம் கழித்துப் போகச் சொன்னார். ஆனால், அவர் மாதிரி நீங்க ஸ்லோவா என்ன... அதுதான் முன்னாலே வந்துட்டேன்..." என்று கண் சிமிட்டியபடி உள்ளே வந்தான் யுகி.

சுரேந்தர் அசடு வழிந்து நிற்க... பார்வதியிடம் வந்த யுகி...

"அண்ணி... இண்டர்வியூல்லாம் எப்படிப் போச்சு...?" என்று இருவருக்கும் இடையில் ஒரு சேரில் அமர...

பார்வதி, கொஞ்சம் முகம் மாறி விட்டாள். அதைப் பார்த்த யுகி,

"அய்யோ அண்ணி... நான் சும்மா விளையாண்டேன். தப்பா எடுத்துக்காதீங்க," என்று பதறியவனாய்ப் பார்வதியின் முகத்தைப் பார்க்க,

"நீங்க பேசுனதுக்கெல்லாம் ஃபீல் பண்ணலை... அது என்ன அண்ணி... அதெல்லாம் வேண்டாம்... பார்வதின்னே கூப்பிடுங்க," என்றவளின் வார்த்தைகளில் இருந்த சினேகித பாவத்தை உணர்ந்தான் யுகி. இருந்தும்...

"அய்யோடா... எனக்கெதுக்குடா வம்பு.. ஏற்கெனவே ஒருத்தர் அவர் பொண்டாட்டிக்கு நான் மரியாதை குடுக் கலைன்னு முறைப்பாரு... இது வேறயா!" என்று போலியாய்ச் சலிக்க...

சுரேந்தர்... "அவளே சொல்லிட்டாள்லடா... உனக்கு எதுக்குடா இந்த வெட்டிப் பந்தா...?" என்றபடி, மூவரும் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தபோது... யுகேந்தரின் பேச்சு பாதியிலேயே நிற்க... திரும்பிப் பார்த்தனர் சுரேந்தரும் பார்வதியும்.

ஒரு இளம்பெண் வந்து கொண்டிருந்தாள். பார்வதிக்கு யார் என்று தெரியவில்லை. சுரேந்தர் அவளிடம், "அதுதான் ஆர்த்தி... யுகியோட..." என்றபோது,

"தெரியும்... தீக்ஷா சொல்லி இருக்கா..." என்றபடி ஆர்த்தியைப் பார்க்க... யுகியின் அருகில் ஆவேசமாய் நின் றாள் ஆர்த்தி. சுரேந்தர், பார்வதி இருக்கிறார்கள் என்றெல் லாம் பார்க்கவில்லை.



வந்தவள், யுகியிடம், "லூசு... ஒண்ணுமே சொல்லாம என்னை விட்டுட்டு கிளம்பி வந்துட்டே... பெரிய இவனாடா நீ...?" என்றபோது,

"இல்லடா... அண்ணா... தீக்ஷா... சுரேந்தர்..." என்று யுகி உளற ஆரம்பிக்க... சுரேந்தரும் பார்வதியும் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தனர். இவர்களின் சிரிப்பில் ஆர்த்தி இன்னும் ஆவேசமாக...

"இருடி... நான் சொல்றதைக் கேளு..." என்றபடி, கெஞ்ச ஆரம்பித்திருந்தான் யுகி.

"விஜய் அத்தானுக்காக உன்னை விடறேன். இல்ல... நீ செத்தடா...!" என்றபடி மீண்டும் வெளியேற... தங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்த மற்ற இருவரையும் முறைத்த யுகேந்தர்... வேகமாய் ஆர்த்தி பின்னால் சென்றான்.

அதன் பின் சுரேந்தர்... மற்றும் யுகேந்தர் இருந்தது அவர்கள் வீட்டில் தான். வீட்டினுள் வரும் போதே விஜய் ஹாலில் இருக்க... தன் தம்பிகளை அவரவர் துணையுடன் பார்த்த சந்தோசத்தில் விஜய், "அம்மா..." என்று தன் தாயைச் சத்தமாக அழைக்க...

அவனின் சத்தத்தில் கலைச்செல்வி என்னவோ ஏதோ என்று வேகமாய் வெளிவர... தீக்ஷாவும் மாடியில் இருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

முதலில் பார்வதி, சுரேந்தர்தான் அவள் கண்ணில் பட்டனர். ஏற்கெனவே கொஞ்சம் சந்தேகம் இருந்தது... இருந்தாலும் அவளால் உறுதியாய்ச் சொல்ல முடியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்போது அவர்கள் சேர்ந்த சந்தோஷம், தீக்ஷாவின் கண்களிலும் வந்தது. யுகியோடு வந்தது ஆர்த்திதான் என்று அவளுக்குச் சொல்லத் தேவை யிருக்கவில்லை. ஆனால், ஆர்த்தியைப் பார்த்த ஞாபகம் எல்லாம் இல்லை.

தீக்ஷா குடும்பத்தினரும் இங்குதான் இருந்தனர் என்பதால்...

ராதாவும், தீபனும் கீழே சத்தம் கேட்டு அவர்களும் வெளியே வர... தீக்ஷாவைப் பார்த்த ராதா, “வா தீக்ஷா... கீழே போகலாம்...” என்று அழைத்தாள்.

தீக்ஷாவும் கீழே இறங்கிப் போகத்தான் நினைத்தாள். ஆனால், காலையில் இருந்து விஜய் அவளோடு கண்ணா மூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறானே... இவள் மேலே வந்தால் அவன் கீழே போய் விடுகிறான்... கீழே போனால், இவன் வேறு எங்காவது போய் விடுகிறான். இவளை முற்றிலும் தவிர்க்க விரும்புகிறான் என்பதை அவன் செயல்களே சொன்னது என்றாலும்... அவள் மேல் அக்கறை யாகவும் இருக்கிறான் என்றும் புரிந்தது.

காலையில் மாத்திரை போட வைத்தது... அவனுக்குத் தெரிந்தவர்கள் என்று யார் வீட்டுக்கோ கூட்டிச் சென்று ஆசிர்வாதம் வாங்க வைத்தது என... அவனின் இன்னொரு புறமும் அவளைக் குழம்ப வைக்க... கோயிலுக்குப் போய் விட்டு வந்ததில் இருந்து மேலேயே இருந்து விட்டாள்.

“இல்லை... நீங்க போங்க அண்ணி...!” என்றபடி மேலேயே நிற்க, இருவரும் மேற்கொண்டு பேசாமல் ராதாவும் தீபனும் இறங்கினர்.

சுரேந்தர் சிரித்தபடி உள்ளே வர... யுகேந்தரோ முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உள்ளே வர... இருவரையும் பார்த்த விஜய்...

தன் அருகே அமர்ந்த யுகேந்தரிடம்,

“சுரேந்தர் தர்ம அடி வாங்கல போல...” என்று யுகிக்கு மட்டும் கேட்கும்படி அவன் காதுக்குள் சொல்ல....

“அண்ணா...” என்றவனிடம்,



“ஆர்த்தி கிட்டே நான் கொஞ்சம் எடுத்துச் சொன்னதால இந்த அளவு நீ தப்பிச்ச..... இல்லை...” என்று சிரிக்க...

“இது உங்க டைமா... நடத்துங்க... நடத்துங்க...” என்றவன், தீக்ஷா கீழிறங்கி வருவதைப் பார்த்துத் தன் அண்ணனிடம்...

“உங்க புயல் வருது...” என்று கண் காட்ட... விஜய்யும் திரும்பிப் பார்த்தான்.

தீக்ஷாதான் கீழே இறங்கி வந்து கொண்டிருந்தாள். அவனின் புயலாக இல்லாமல்... அமைதிப் புயலாய்.

விஜய் சற்று நகர்ந்து தன் அருகே தீக்ஷா உட்கார இடமளிக்க... தீக்ஷாவோ பார்வதியின் அருகில் அமர்ந்து தன் சந்தோசத்தை... வாழ்த்துக்களைத் தெரிவித்தவள்... தன் கணவனை ஏமாற்றாமல் அவனின் அருகே வந்து அமர்ந்து, விஜய்யின் முகத்தைப் பார்க்க... அது எதையும் பிரதிபலிக்க வில்லை.

அதன் பிறகு அனைவரும் ஒருவரை ஒருவர் ஓட்ட ஆரம்பிக்க.. அங்கு சந்தோஷம் மட்டுமே இருக்க... கலைச் செல்வி தன் மக்கட் செல்வங்களை அவரவர் துணையுடன் இருப்பதைக் கண்களால் நிரப்பியவருக்கு... நீண்ட நாட்க ளுக்குப் பிறகு ஆனந்தக் கண்ணீர் வர... அதைத் துடைக்கக் கூட மறந்து நின்றார்.

எல்லோரும் ஏதேதோ பேசியபடி இருக்க... தீக்ஷா மட்டும் எதுவுமே பேசவில்லை. மற்றவர்கள் பேசியதைக் கவனித்துக் கொண்டிருந்தாளே தவிர... வாய் திறக்கவே இல்லை அவள். அவள் அமைதியை உணர்ந்த பார்வதி,

“தீக்ஷா.... என்ன ஒரே சைலண்ட்.... விஜய் அத்தான் மனைவின்றதை நிரூபிக்கிறாயா...?” என்று சிரிக்க,

புன்னகைக்கிறேன் என்று... பெயருக்கு உதடுகளை மட்டும் வளைத்தாள் தீக்ஷா.

கிட்டத்தட்ட 7 மணி அளவில்... சுரேந்தர், பார்வதியையும்... யுகி, ஆர்த்தியையும் விடக் கிளம்ப ஆரம்பிக்க... விஜய் பார்வதியிடம்,

"பாரு... நீ உங்க வீட்ல இப்போ சொல்ல வேண்டாம்... அம்மா, அப்பாவைப் பேசச் சொல்றேன். அதன் பின் நாங்களே அடுத்த வாரம் ஒரு நல்ல நாள் பார்த்து வீட்டுக்கு வருகிறோம்..." என்று சொல்ல, பார்வதி சந்தோஷமாகத் தலையாட்டினாள்.

விஜய்யின் வார்த்தைகளில் மிகுந்த சந்தோசம் அடைந்த தீக்ஷா, அதுவரை இருந்த தன் அமைதியைக் கைவிட்டவள்... ஓடிப் போய்ப் பார்வதியைக் கட்டிக் கொள்ள... பார்வதியும் அணைத்துத் தன் சந்தோஷத்தை வெளிப்படுத்த,

யுகேந்தர்... "பார்வதி அண்ணி... சுரேந்தர் அண்ணா ரொம்ப ஃபீல் பண்றாரு... பாருங்க..." என்று கூற,

தீக்ஷா... "இதுதான் யுகி... நம்ம கேங்..." என்று பார்வதியிடம் சொன்னவள்,

"ஆர்த்தி... யுகி சொல்றது அவன் அண்ணாக்கு இல்லை... அவனுக்குத்தான். பையன் ரொம்ப ஃபீல் பண்றான்... நீ கவனிக்கிறதே இல்லை போல...!" என்று ஆர்த்தியிடம் போட்டுக் கொடுத்தபடி யுகியைப் பார்க்க... யுகி, அவளைக் கண்டுகொள்ளவே இல்லை.

பார்வதியிடம் மட்டுமே அவன் பேச்சு என்பது போல் இருக்க... சற்று முன் மலர்ந்து இருந்த தீக்ஷாவின் முகம் மீண்டும் சுருங்க... அவளின் முக வாட்டத்தைப் பார்த்த விஜய்... தாங்க முடியாமல்... யுகேந்தரைப் பார்த்து முறைத்தான்.

விஜய்யின் முறைப்பில், "சாரி..." என்று மட்டும் தீக்ஷாவிடம் யுகி சொல்ல...



"ப்ச்... எனக்கு சாரில்லாம் வேண்டாம்டா... என் பழைய ஃப்ரெண்ட் யுகியா வேண்டும்..." என்றபோது,

"ட்ரை பண்றேன்...." என்றவன், ஆர்த்தியோடு வெளியேற... சுரேந்தரும் பார்வதியோடு வெளியேறினான்.

தீக்ஷா ஒரு முடிவோடு இருந்தாள். இன்று விஜய்யிடம் எல்லாவற்றையும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று... தன் மனதையும் அவனிடம் வெளிப்படுத்தி விட வேண்டுமென்று முடிவு செய்தவளின் மனம், ஓரளவு நிம்மதி ஆனது.

ஆனால், அன்று இரவு அறைக்குள் வந்த விஜய்...

"எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கும்மா... நீ தூங்கு... ஆஃபீஸ் ரூம்லதான் இருப்பேன்..." என்றபடி வெளியேற...

"அத்தான்..." என்று தயக்கமாகக் கூப்பிட்டாள் தீக்ஷா.

"என்ன...?" என்றான் திரும்பியபடி.

"முக்கியமான வேலையா...?" என்று கேட்க...

"ஆமாம்..." என்று அவன் சொல்லி முடிக்கும் முன்னே...

"எனக்கும் முக்கியமா உங்க கிட்டே பேசணும்..." என்றாள் ஓரளவு தைரியமாக.

"ஹ்ம்... பேசலாமே..." என்று மீண்டும் உட்கார்ந்தான்.

"நீங்க ஏன் என் கிட்டே ஒழுங்காவே பேச மாட்டேங்கிறீங்க...? மனைவியா நான் பண்ணினதெல்லாம் மிகப் பெரிய தப்புதான்... என்னை மன்னிச்சிருங்க அத்தான். அது எல்லாமே என்னை அறியாமல் பண்ணிய தப்பு... எனக்கு எதுவுமே தெரியலை... என்னைத் தண்டிச்சுராதீங்கத்தான்... நான் எல்லா வகையிலும் உங்க மனைவியா வாழத் தயாரா இருக்கேன். என்னைப் புரிஞ்சுக்கங்க. பழைய

ஞாபகங்கள் வரும்போது வரட்டும் அத்தான்... ப்ளீஸ்..." என்று அவன் அருகே வந்து அமர,

"இன்னைக்கு நீ யுகி கிட்டே சொன்னேல்ல... பழைய யுகியா வேணும்னு... உனக்கு ஒரு நியாயம், எனக்கு ஒரு நியாயமா... சொல்லு...." என்று பேசியபடியே அவளறியாதபடி அவளை விட்டுத் தள்ளி அமர்ந்தான் விஜய்.

ஆனாலும் விஜய்யின் விலகலை உணர்ந்த தீக்ஷா வின் வேதனை அவள் முகத்திலும் வர...

"அப்போ நான் பழைய தீக்ஷாவா ஆகிறவரை தினம் வேதனைதானா... சொல்லுங்க..." என்றவளிடம்,

"புரியுதா... நான் ஏன் உன்னை உங்க வீட்ல இருக்கச் சொன்னேன்னு... இப்போ கூட பிரச்சினை இல்லை... நீ உங்க வீட்ல இரு..." என்று விஜய் சொல்ல,

"அய்யோ அத்தான்... என்னால முடியாது..." என்று வேகமாய்ச் சொன்னவள்... 'இனி பேசினால், தன் வார்த்தை களாலே தன்னைத் தன் பிறந்த வீட்டிற்கு அனுப்பி விடு வான்...' என்று முடிவு செய்தபடி...

"எவ்வளவு துன்பம்னாலும் பரவாயில்லை... நான் இங்கே தான் இருப்பேன். இந்த ரூம்ல இருக்கிற உயிரில்லா போட்டோக்களோட... உயிருள்ள ஜடமா இருந்துட்டுப் போறேன்..." என்று சொன்னவளின் வார்த்தைகளின் தாக் கத்தில்.... விஜய் அதிர்ந்து அவளை நோக்க...

அவளோ அதற்கு மேல் எதுவும் பேசாமல் கட்டிலில் உறங்கத் தயாரானாள்.

விஜய் தனக்குள்ளே சொன்னான்...

'போட்டாவும் நீயும் ஒண்ணா... புரிஞ்சுக்க மாட்டேன் றாளே...!' என்றபடி தன் அலுவலக அறைக்குள் நுழைந்தான் விஜய்.



பார்வதி, சுரேந்தரிடம் வெகு நேரம் வரையில் பேசிய தாலோ என்னவோ... அன்று தாமதமாக எழுந்தவள்... தன் அண்ணனிடம் வந்தாள்.

"குட்மார்னிங் அண்ணா... நேத்து நைட் ஏன் லேட்...?" என்று கேட்க, அதற்குப் பதில் சொல்லாத சாரகேஷ்,

"மணி என்ன ஆகுது... நீ ஏன் லேட்...?" என்று கண்டிப்புடன் கேட்க,

"அது... அது..." என்று முழித்தவளைப் பார்த்துச் சிரித்த சாரகேஷ்... "அம்மா சொன்னாங்க..." என்றவன்,

"உனக்குப் பிடிச்சிருக்கா சுரேந்தரை... சொல்லும்மா..." என்றபோது,

"ரொம்ப்ப அண்ணா..." என்று வேகமாய்ச் சொன்னவள், அதே வேகத்தில் தலை குனிய...

"அடேங்கப்பா... என் தங்கைக்கு வெட்கமெல்லாம் வருதா...!" என்றவன், "தென்... உங்க புது முதலாளி என்ன சொல்றாரு... எப்படி, அங்கேயும் ஒரு வாரம்தானே...!" என்று கண் சிமிட்ட,

"அண்ணா... உனக்கு இருக்கிற லொள்ளு இருக்கே... இந்த முதலாளிக்கு ஆயுள் முழுக்கப் பார்வதியோட இருக் கணும்ன்ற தலைவிதி இருக்கும்போது, என் ராசி ஒரு வாரக் கணக்கெல்லாம் ஒத்து வருமா...?" என்று சிரிக்க...

"சரி.... தீக்ஷா எப்படி இருக்கா...?" என்று வழக்கம் போல், தீக்ஷாவின் மேல் இருக்கும் அக்கறையுடன் கேட்டான் சாரகேஷ்.

"ஓ.கே.தான்... பட்... என்னவோ இன்னும் சரி ஆகலை போல... விஜய் அத்தானுக்கும் அவளுக்கும்..." என்று ஆரம் பிக்க,

அவள் விஜய்யை 'அத்தான்...' என்று சொன்னதால்... சாரகேஷ் புருவம் உயர்த்தி... ஆச்சரியப் பார்வை பார்க்க...

"அண்ணா... அப்படிப் பார்க்காதே...!" என்று சிரிக்க...

"இப்பவே என் தங்கைக்குக் கல்யாணக் களை வந்துருச்சுடா...!" என்று ஓட்ட ஆரம்பித்தவனிடம்... வெட்கப் பட்டுச் சிரித்தவள்,

"அண்ணா! சீரியஸா பேசிட்டு இருக்கும் போது டைவர்ட் பண்ணாதீங்க... தீக்ஷா பற்றிப் பேசிட்டு இருந்தோம்..." என்று சொன்னவளின் தீவிரமான முக பாவத்தில்... சாரகேஷும் அதே பாவத்திற்கு மாற... பார்வதி தொடர்ந்தாள்.

"ரொம்ப அமைதியா இருந்தா... ரொம்ப குழம்பிப் போயிருக்கா போல... நானும் அவ கிட்டே எதுவும் கேட் கலை... அவளும் என் கிட்டே எதுவும் பேச விரும்பலை... சுரேந்தர் கிட்டே அவளைப் பற்றி பேசணும்... நேற்று கூட கேட்டேன்... அது ஒரு பெரிய கதை... இப்போ வேண்டாம்... நிதானமாச் சொல்றேன்னு சொல்லிட்டாரு..." என்று சொல்ல,

"ம்ம்..." என்றவன்,

"மேடம்... என் மச்சான் கிட்டே... சும்மா தீக்ஷாவுக்கு என்ன நடந்துதுன்னு கேட்டுக் கேட்டு, மூட் அவுட் ஆக்காமல்... ஒழுங்காப் பேசு..." என்று கண்டிப்புடன் கூறியபடி கிளம்பிச் சென்றவனைப் பார்த்து...

"ஆங்..." என்று விழித்தபடி நின்றாள் பார்வதி.

சாரகேஷ், மருத்துவ மனைக்கு வந்தபோது... அகல்யா அவன் எதிரே வர... அவளைப் பார்த்துச் சிரித்தான். ஆனால், அவளோ அவனைப் பார்த்தும் பார்க்காதது போல் போக... சாரகேஷ் தானாகவே அவளிடம்,

"குட் மார்னிங் அகல்யா!" என்று சிரிக்க... அவளோ எதுவும் சொல்லாமல் போய்விட்டாள்.

அவள் போவதையே பார்த்தவன்... தன் அருகே நின்ற அகல்யாவின் தோழியிடம்,



"என்ன... இவ்ளோ கோபமாப் போறா... அதுவும் டீன் ரூம்ல இருந்து...!" என்று வினவ,

"அவ ஆர்ட்டிக்கிள் எழுதறேன்னு சொல்லி இருந் தால்ல... இப்போ எழுதலேன்னு மெயில் போட்ருக்கா போல... அதுதான் உள்ளே மேடத்துக்கு டோஸ்..." என்று தகவலைச் சொல்லி விட்டு அவள் சென்றாள்.

"ஏன்... என்னாச்சு இவளுக்கு...?" என்ற யோசனை யில் சற்று நேரம் நின்றவன்.... பின் தானாகவே அகல்யா அறைக்குச் சென்றான்.

அறைக் கதவைத் தட்டியபடி உள்ளே நுழைய... அங்கு அகல்யா மேசையின் மேல் தலை சாய்த்துப் படுத்திருந்தாள்.

இவன் வந்ததை நிமிர்ந்து பார்த்துவிட்டுப் பின் மீண்டும் தலை சாய... அவள் முன்னால் அமர்ந்தான் சாரகேஷ்.

ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்திருக்க... அவளோ நிமிரவே இல்லை.

"ம்க்கும்..." என்று செரும...

இப்போது மீண்டும் நிமிர்ந்தாள்.

"ஏன் ஆர்டிக்கிள் எழுத மாட்டேன்னு சொன்னே...?" அவன் குரலில் உரிமையும் கோபமும் சரிவிகிதத்தில் இருக்க,

"பிடிக்கலை... எழுதலை..." என்று சொல்லிவிட்டு கம்ப்யூட்டர் மானிட்டரில் பார்வையை ஓட்ட...

"ம்ஹூம்... ஏன் பிடிக்கலைன்னு நான் காரணம் கேட்க மாட்டேன்... ஏன்னா, நான் சொன்ன பதிலையே எனக்குச் சொல்லிருவே..." என்று சிரிக்க,

அகல்யா, அவனை வித்தியாசமாகப் பார்த்தாள்.

"ஹலோ... சீரியஸாப் பேசறீங்களா... இல்லை, காமெடி அடிக்கிறீங்களா... என்னைப் பார்த்தா லூசு மாதிரி தெரியுதா...?" என்று படபடவென்று பொரிய...

"அப்படியா... நீ லூசா...?" என்றவன், மீண்டும் சிரிக்க.. கடுப்பாகி விட்டாள் அகல்யா.

"ஓ.கே... ஓ.கே... ஜோக்ஸ் அபார்ட்.... நான்தானே காரணம்...." என்று தலை சாய்த்துப் பார்க்க, "என் மேலே இருக்கிற கோபத்தை ஏன் இப்படியெல்லாம் காட்றே...?" என்று கேட்டவனின் முகத்தில், இப்போது தீவிரம் வந்திருந்தது.

"ப்ளாக் மெயில் பண்றியா, அகல்யா...? நம்ம ஹாஸ்பிட்டல் பேர் என்னாகும்னு நினைத்துப் பார்த்தாயா...?"

"என் வாழ்க்கையே இங்கே டீல்ல நிற்குது... இந்த ஆர்ட்டிக்கிள், ஹாஸ்பிட்டல்லாம் முக்கியமா எனக்கு...?" என்று சொன்னபோது... அவள் முகமே மாறி இருக்க...

"சரி, விடு... இதுக்கும் மேலே உன் இஷ்டம்... என் தங்கைக்கு மேரேஜ் ஆகப் போகுது... அதைச் சொல்லத்தான் வந்தேன்," என்று சொல்ல...

"ஹேய்... பாருக்கு மேரேஜா...? என்ன, போன வாரம் கூட உங்களுக்கு மேரேஜ் முடிந்த பின்னால்தான்னு சொன்னீங்க..." என்று உற்சாகமாய்க் கேட்டவள்... முகம் மாறியவளாய்...

"உங்களுக்கும் பொண்ணு பார்த்தாச்சா...?" என்ற போது, பாதி வார்த்தை வெளியேவும்... உள்ளேயுமாக இருக்க...

"இல்லை... ஆனால், இப்போதான் காதல்னா என்னன்னே புரிய ஆரம்பிக்குது..." என்றவன்...

"நான் உன் கிட்டே சொல்லி இருக்கேன்ல... பார்வதி யோட ஃப்ரெண்ட்..."

"அதுக்கென்ன... அந்தப் பொண்ணே இப்போ திரும்ப வந்து உங்களுக்கு ஓ.கே. சொல்லிட்டாளா?" என்று கேட்ட வளுக்கு, உள்ளே பொறாமையும் அதே நேரத்தில் வேதனை யும் வர... இருந்தும் சாதாரணமாகவே கேட்டாள்.



சிரித்தான், சாரகேஷ்.

"இல்லை... காதல்னா என்னன்னு புரிய வெச்சுட்டா...!" என்றவன்...

"புரியலை..." என்று கேள்வியாய் நோக்க...

ஓரளவு விசயத்தைச் சொல்ல...

பொறுமையாகக் கேட்ட அகல்யா... "சோ...." என்று நிறுத்தி, அவன் முகத்தைப் பார்க்க...

"எனக்கு டைம் குடு, அகல்யா... ப்ளீஸ்... எனக்கு இன்னும் யோசிக்கணும்... தீக்ஷா விஷயத்தில் கூட அவசரப்பட்டு முடிவெடுத்து... பெரிய தப்பு பண்ணிட்டேன்... நம்ம வாழ்க்கையிலும் அவசரமா முடிவெடுக்க வேண்டாம்னு நினைக்கிறேன்..." என்றவனின் கரங்களை ஆறுதலாகப் பிடித்தவள்...

"இப்போதான் சாரகேஷ் எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு... அவ போய்ட்டா நீ ஓ.கே.ன்னு சொல்லி இருந்தால்தான் நான் கோபப்பட்டிருப்பேன். கண்டிப்பா நீங்க எனக்கு நல்ல முடிவைச் சொல்வீங்கன்னு நம்புறேன்... அது வரை காத்திருப்பேன் சாரகேஷ்..." என்று சொன்னவள் கண் களில் மீண்டும் உயிர் வந்திருக்க... அதைக் கவனிக்கத் தவறவில்லை சாரகேஷ்.

அதன் பின் சாரகேஷ் கேட்டுக் கொண்டபடி... ஆர்ட்டிக்கிள் எழுதச் சம்மதம் சொல்லி, மீண்டும் ஒரு மெயில் அனுப்பிய அகல்யா...

"இப்போ ஓ.கே.வா...?" என்று புன்னகையாய்க் கேட்க,

"டபுள் ஓ.கே..." என்றபடி எழுந்த சாரகேஷை,

"வெயிட்... வெயிட்... ஆர்ட்டிக்கிள்காக போட்டோஸ் லாம் கலெக்ட் பண்ணிட்டோம்... இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு..." என்று சொன்னவள்...

"நான் போட்டோஸ் காட்டுகிறேன்... அதில் இருந்து ஒரு 10 செலக்ட் பண்ணிக் கொடுங்க... அதன் பிறகுதான் டீடெயில்ஸ் கலெக்ட் பண்ணணும்..." என்றவாறு மானிட்டரை இருவரும் பார்க்கும்படி திருப்பினாள்.

சாதாரணமாகப் பார்த்தபடி வந்தான் சாரகேஷ்.

ஒவ்வொரு புகைப்படத்தையும் காட்டி... அதற்கான விளக்கமும் சொன்னவள்... "இது எல்லாம் நான் கலெக்ட் பண்ணியது... என்னோட பேஷண்ட்ஸ்... தென், நான் கேள்விப் பட்ட வித்தியாசமான சர்ஜரிகள்..." என்று முடித்தவள்...

"அப்புறம் இது என் ஃப்ரெண்டோட கலெக்ஷன்ஸ்..." என்றபடி இன்னும் சில போட்டோக்களைக் காண்பித்தாள்.

"இதில் உங்க டிபார்ட்மென்ட்டும் வந்திருக்கு தெரியுமா...?" என்றபோது...

"ஓ..." என்றபடி சாரகேஷ் பார்க்க ஆரம்பித்தான்.

"ஹார்ட் ட்ரான்ஸ்ப்ளாண்ட் பண்ணிய பொண்ணோட முகத்தையே இந்தப் பொண்ணுக்கு மாற்றி இருக்காங்க..." என்று ஒரு போட்டோவைக் காண்பித்தாள் அகல்யா.

"சக்தின்னு ஒரு பொண்ணு... லேப்ல ஆசிட் வெடிச்சு... முகமெல்லாம் சிதைஞ்சு போச்சு... அதுமட்டுமில்லாமல்... ஹார்ட்ல பிராப்ளமும் இருந்திருக்கு...."

சக்தி என்ற அந்தப் பெண்ணிற்கு இருந்த ப்ராப்ளமும்... தீக்ஷா தனக்கு இருப்பதாகச் சொன்ன ப்ராப்ளமும் ஒன்றாய் இருக்க... சாரகேஷுக்குத் தீக்ஷா ஞாபகம் வந்து விட... இன்னும் கொஞ்சம் ஆர்வமாய் அந்த போட்டோவை உற்று நோக்கினான்.

அகல்யா அவனின் ஆர்வத்தைப் பார்த்தபடியே,

"இவ்ளோ நேரம் ஏனோ தானோன்னு பார்த்தீங்க... இதை மட்டும் ஆர்வமாப் பார்க்கிறீங்க... நான் டீடெயில்ஸ் கலெக்ட் பண்ணும்போது உங்க சம்பந்தமாகவும் கலெக்ட் பண்றேன்..." என்றவள்...

"இந்தப் பொண்ணுதான் அந்தப் பொண்ணுக்குத் தன் ஹார்ட்டைக் கொடுத்ததோட... தன் முக அடையாளத்தையும் கொடுத்திருக்கா..." என்று அடுத்த புகைப்படத்தைக் காட்டினாள் அகல்யா.

அந்தப் புகைப்படத்தைப் பார்த்த சாரகேஷுக்கு உலகமே சுற்றியது போல் இருக்க... சேரிலிருந்து எழுந்து விட்டான். அவனால் நிற்கக் கூட முடியவில்லை. கை கால் எல்லாம் ஆட ஆரம்பித்து விட்டன.

"அகல்... அகல்யா... இதுதான் தீக்ஷா..." என்று சொன்னபோது, அவனால் பேசவே முடியவில்லை.

"தீக்ஷா... தீக்ஷா... நான் சொன்னேன்ல... பார்வதியோட ஃப்ரெண்ட், விஜய்யோட வைஃப்..." என்றவனுக்குக் குழறின வார்த்தைகள்.

"சாரகேஷ்... கன்ட்ரோல் யுவர்செல்ஃப்..." அவனின் தடுமாற்றத்தில் அகல்யா அவனின் அருகே வந்து விட்டாள்.

"அய்யோ விஜய்.. ரிப்போர்ட்ஸ்லாம் கொடுத்துப் பார்க்கச் சொன்னாரு... நான் பார்க்காமல் விட்டுட்டேன், அகல்யா... என்னால முடியல அகல்யா..." என்றவனைத் தேற்றும் வழி தெரியாமல் அகல்யா விழிக்க...

"இருங்க சாரகேஷ்... இது யார் அனுப்பி இருக்காங்கன்னு பார்ப்போம்..."என்றபடி மீண்டும் ஆராய... சுரேந்தர் என்று இருக்க...

"சுரேந்தர்ன்றவர் கிட்டே இருந்து வந்திருக்கு.. அவர் தானே பார்வதியோட..." என்றபோது,

சாரகேஷ் தலையில் கைவைத்து அப்படியே அமர்ந்து விட்டான். அவனால் எதையுமே யோசிக்க முடியவில்லை.

'இப்போது இருப்பது சக்தியா என்று மட்டும்தான் மனம் அரற்றியது... தீக்ஷா தங்களை எல்லாம் விட்டுப் போய் விட்டாளா...?' என்று துடித்துக் கொண்டிருந்தான்.

"அகல்யா... நான் விஜய்யைப் பார்க்கப் போறேன்... அதுக்கும் முன்னாலே... அவர் கொடுத்த ரிப்போர்ட்ஸ் வீட்ல இருக்கு... அதைப் பார்க்கணும்.. தப்பு பண்ணிட்டேனே... ஏற்கெனவே நொந்து போய் இருக்கிற மனுஷனை... என் பங்குக்கு இன்னும் கொன்னுட்டேன்..." என்று விஜய்யின் மேல் பரிதாபம் கொள்ள...

"சாரகேஷ்... வெயிட்... எனக்கு எதுவும் கன்ஃபார்மா தெரியலை... சம் டைம் ரெஃபெரன்ஸுக்கு வரும்... அது எல்லாம் கன்ஃபார்மா சர்ஜரி வரை போயிருந்திருக்காமல் கூட இருக்கலாம். விசாரிக்கலாம்..." என்று அவனைத் தேற்ற நினைக்க...

"இல்லை... தீக்ஷா இப்போ உயிரோட இல்லை.. எனக்கு அப்படித்தான் தோணுது அகல்யா...!" என்றவன், அதற்கு மேல் எதுவும் பேசாமல் வேகமாய் வெளியேறினான் தன் வீட்டிற்கு. அவனுக்கு அவசரம்... தீக்ஷா ரிப்போர்ட்ஸை எல்லாம் உடனே பார்க்க வேண்டுமென்று துடித்தவனாய், வேறு எதைப்பற்றியும் யோசிக்காமல்... பிரித்துப் பார்க்க முடியாமல்... உணர்ச்சி வசப்பட்டவனாய்... வெறித் தனமாகத் தன் காரை ஓட்டிச் சென்றான்.

அதே நேரத்தில்... தீக்ஷா முன்னே தங்கி இருந்த கவர்ன்மெண்ட் குவார்ட்டர்ஸின் விளையாட்டு மைதானத்தில்... விஜய் சிறுவர்களோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந் தான்.

அவன் அடித்த பந்து கரெக்டாக ஒரு சிறுவனால் பிடிக்கப்பட...

"ஹேய்... விஜய் அங்கிள் அவுட்..." என்று கூச்சலிட... விஜய் ஒத்துக்கொண்டு வெளியேறினான்.



சற்றுப் பெரியவன்... "விஜய் அண்ணா... நீங்க அவுட் ஆனா... ஒத்துக்கிட்டு விலகிறீங்க... ஆனா தீக்ஷா அக்கா... ஒத்துக்கவே மாட்டாங்க... எங்களை ஏமாத்திருவாங்க... தெரியுமா?" என்றவனிடம்,

"சிவா... உங்க அக்கா.. அப்படி யெல்லாம் பண்ண மாட்டா..." என்று ஆதரவாகப் பேசியவனிடம்,

"போங்க அண்ணா...! அவங்க... உங்களை ஏமாத் தாம இருக்கலாம்... எங்களை ஏமாத்தி ஏமாத்திதான் விளை யாடுவாங்க...!" என்றபோது,

"உங்க அக்கா.. என்னை ஏமாத்த மாட்டாதான்டா...!" என்று வெறுமையாய்ச் சிரித்த விஜய்யின் பார்வை, அவன் வந்த ஸ்கூட்டியில் இருக்க... அதில் இருந்த 'தீக்ஷா' என்ற பெயர் அவனைப் பார்த்து அழகாய்ச் சிரிக்க.. விஜய் மனம் தன்னவளின் நினைவுகளில் ஆழ்ந்தது.

தீக்ஷாவால் நம்பவே முடியவில்லை... விஜய் அத்தா னுக்கும்... தனக்கும் இன்னும் இரண்டு வாரத்தில் திருமணமா...? அவளுக்கு உலகமே தன் வசம் வந்தது போல் இருக்க... விஜய்யோடு அப்போதே போய்விடலாமா என்று கூட நினைக்க ஆரம்பித்து விட்டாள்.

சந்தோஷத்தில் அவளுக்குக் கை... கால்கள் கூடச் சிறகுகளாய் மாறி விட்டது போல் இருக்க... தன் சந்தோ ஷத்தை யாரிடமும் வெளிப்படுத்த முடியாமல்... அறைக் குள்ளேயே சுற்றியபடி இருந்தாள். அவளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் போல் இருக்க... வேகமாய்த் தன் மொபைலை எடுத்தபடி பால்கனி சுவரில் அமர்ந்தவள்... விஜய்க்கு மெசேஜ் அனுப்ப டைப் செய்ய ஆரம்பித்தாள்.

"விஜய் அத்தான்... நான் உங்களுக்காகப் படைக்கப் பட்ட புயல்... வேறொரு இடத்திற்குப் போகுமா...? உங்களை இந்தப் புயல் தாக்க வந்துட்டே இருக்கா...! என்னை நீங்க

சமாளிச்சுருவீங்களா...? இந்தப் புயலைத் தொட்டா உங்க ளுக்குச் சில பல சேதாரம் வரும்... தாங்கிருவீங்களா?"

என்ற குறுஞ்செய்தியை அனுப்பியவள்... பதில் வருமா, வராதா என்று மொபைலைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

இதுதான் விஜய் நம்பருக்கு அவள் அனுப்பும் முதல் எஸ். எம். எஸ்... அதை அனுப்பி விட்டு... காத்திருந்த வளுக்குப். பதில் வராமல் போக...

"ஹ்ம்ம்... நம்ம ஆளைத் தேத்துறதுக்குள்ளே போதும் போதும்னு ஆகிடும் போல..." என்று விஜய்யைத் திட்டியபடி பெருமூச்சு விட்டவள்... நிமிர... ராதா நின்றிருந்தாள், அவள் முன்னே...

"ஹைய்யோ அண்ணி..." என்று சந்தோஷமாகத் தன் அண்ணியைச் சுற்றியவள்... "நீங்க மட்டும் இல்லேன்னா... எனக்கும் விஜய் அத்தானுக்கும் எந்தச் சம்பந்தமுமே வந் திருக்காது. எனக்கு இதெல்லாம் கனவா நனவான்னு தெரியலை..." என்று ராதாவை விட்டுத் தள்ளி நின்றவள்...

"சாரி..." என்று சொல்லியபடி... ராதாவின் உள்ளங் கையைக் கிள்ளிப் பார்க்க... ராதாவும் அலற...

"நடக்கிறதெல்லாம் நிஜம்தான், அண்ணி...! நீங்க கத்துறீங்களே...!" என்று ஓடோடிப் போனாள் தீக்ஷா.

**- இரண்டாம் பாகத்தில் தொடரும் -**

பிரவீணாவின்

# அன்பே... நீ இன்றி...!

பாகம் - 1

